
மேற்கூறிய மொத்தபாவத்தையும் உள்பிரிவு பாவ பலன்களை யரிந்தபின் அதை யனுபவிக்குங் காலநிர்ணய கணிதங்களாவன.

மொத்தபாவ சீவசரீராதிபர்களுக் குறியதும் ஸ்தானம் ஸ்தானாதிபதி களுக்கும் உறிய கெணித யெண்களை ஒன்றுபடுத்திக்கொண்டு அவர்கள் இருக்கும் ஸ்தானந்தொட்டுக் கண்டரிந்த உள்பிரிவு பாவாதிபதியான சீவ சரீர சுபபெலத்துக்குறிய கிரகயெண்களையும் இராசி யெண்களையும பெருக்கி மேலேசொல்லிய மொத்தபாவ சீவசரீராதிபதி மூலமான யெண்களுடன் கூட்டி (கூ-ல்) கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை (ரு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் புக்தி காலங்களிலும் அவ்விதமான உள்பிரிவு பாவங் கஷ்டபாப பலனோ வல்லது சுபபலன் வருகிரதோ அவ்விதபலனை யனு பவிப்பனென்றும் மேற்கூறியபலனை இவ்விதமாக காலங்களுடன் கண்டு பிடித் துச் சொல்லவேண்டியது. இவ்விதமே ஒவ்வொரு உள்பிரிவு பலன்களையும் முன்கூறியது போலவே மொத்தபாவ சீவசரீராதிபதிகளிருக்கு மிடமுதலாக் கொண்டு (க) முதல் (கஉ) வரை சீவசரீராதிபதிகள் ஒன்றாகிச் சுபபெலத் துடனிருக்கில் அந்த பெலன் ஜாதகனுக்கு உண்டென்றும் அவர்கள் பெலன் கெட்டு பகைவராகினும் பாபக்ஷேத்திரம் பகைநிசாதி யல்லது பெலக்குறை வுடனிருக்கில் அந்த பாவகெணிதமும் உள்பிரிவுபலன்களும் பிரயோசன மடையப்பட மாட்டானென்றும் சுபபெலனுக்குரியது அல்லது பாபபெலனுக் குத்தக்கபடி அடையக்கடவனென்றும் யூகித்து உணரல் வேண்டும் மேற் கூறிய உள்பிரிவு பாவாதிபர்கள் சென்மலக்கினவசாத் அந்த பாவம் (அ, சு, கக, கஉ, ரு) இந்த வீடாகினும் இதற்குசமான பாபக்ஷேத்திரமாகினும் பாப பெலனானாலும் அந்த கணக்கிற்குரிய பாவமான பலனையடையப் படமாட்டா னென்றுங் கண்டு சொல்லவேண்டியது.

இந்தவிதமான மொத்தபாவ சீவசரீராதிபர்களின் கெணித யெண்களை யும் உள்பாவாதிபர்களான சீவசரீரர்களின் பெலயெண்களையும் தனித்தனி உள்பாவதி சரீரசீவாதிபர்களின் யெண்களில் கூட்டி உள்பாவம் பனிரெண் டுக்குள் பிரிவுசொல்லியவையின் (கஉ-ல்) கழித்த சேஷம் ஒவ்வொருகிரக உள்பிரிவாதிபர்களின் சீவசரீரமரிந்து மேற்கூறிய மொத்தசீவசரீர யெண் களுடன் கூட்டி (கஉ-ல்) கழித்த சேஷம் இப்படியே சூரியாதிகிரபாவக முதற்கொண்டு எத்தனாவது உள்பாவபலனை யெந்தந்த கிரகத்துரையான மிச்சத்தால் காண்பிக்கப் படுகிரதோ அந்த மிச்சம் பலனை யெத்தனை கிரக

யெண்களின் சேஷம் தொடப்படுகுர கிரகங்களுக்கு அந்தந்த பாவபலனுக்கு சிவசரீரமுள்ள கிரகம் அவர்கள் தானு வென்றறிந்து அவர்கள் சுபபெலனுடன் மித்துருவாகி அவர்கள் சிவசரீரமுடையவர்களாகில் ஜாதகன் அத்தகணக்கிற் கிசைந்த அத்சனுவது உள்பிரிவு பாவபலனே சாதகன் அனுபவிக்க கடவ னென்றும் சீவன் வேறுகிரகம் சரீரம் வேறுகிரமானுல் அதுசுபராகில் அந்த பலன் தன் முன்னேரால் குடும்பத்தில் விருத்தியாக இருப்பினும் சாதகன் அனுபவிக்கமாட்டானென்றும் அதனுல் பெயர்மாத்ரமிருக்கும் இருவரும் பாவ ராகினும் பகைவராகினும் சுபபெலமுடையோராகினும் அவ்விதபலனே சாத கன் அனுபவிக்கப்படமாட்டனென்றும் பகை பாபமானுல் அதனுல் விரோத விவாத துன்பவருத்த மடைவனென்றும் பலவகைசோகம் அந்த பலனுல் கொடுக்கப்படும் ஒருவர் சுபராகி ஒருவர் பாவர் ஆனுல் அதிலும் சரீரம் சுப பெலத்துடனுகில் அந்த கணக்கிட்ட உள்பாவம் இவனுக்கு இயன்றதல்ல பரனுடையதாக இவன் அனுபவஞ் செய்வன் சீவபெலன் சுபமானுல் இவனு டைய அந்தபலனே யனுபவிக்கமாட்டான் அதனுல் சுகமடையமாட்டான் பிரருக்கு அடையும் பிரயோசன மடைவனென்றும், சீவனுஞ் சரீரமும் பெலத் தில் இவனே தன் சொந்தமாக அடையக்கடவன் அவர் சுபரானுல் அதனு லதிக கூடுதலேயும் சுகமும் பிரபல சுகமேன்மை யுண்டாகும்.

பாபரானுல் அதனுல் கஷ்டத்தையும் ரோகாதிபாதைகளையும் விரோதத் தையும் தனக்குறிய சுகபெலன்களையும் கூடகொடுத்தும் பல துக்கவனுபவங் களை யனுபவிப்பனென்றும் சமபெலக்காராராகில் அதனுல் சுகமின்றி கஷ்டமு மின்றி மேற்கூறியவைகள் நிரந்தரமாக நடந்துவரப்படுமென்றுங் கண்டு சொல்ல வேண்டியது இவ்விதமே ஒவ்வொரு உள்பிரிவு பாவமேன்மைகளே யுங்கண்டு கூறவேண்டுவதவசியமாதலால் இதை நிதானித்துச் சொல்ல வேண்டியது இதன் காலநிர்ணயங்களே மேலேகூறிய காலநிர்ணய விதிப்பிர காரங் கணித்து அறிந்துக் கண்டசேஷம் உள்ள நிசாபுக்திகாலங்களில் மேற் கண்ட நம்பர் உள்ளபலன் சுபமோ அல்லது பாபத்துவ அசுபமோ வென்ற றிந்து அதற்குள்ள சுபபெலத்தின் பலனேயும பாபபெலத்தின் கஷ்ட நஷ்ட துன்பங்களேயும் சொல்ல வேண்டுவது அவசியம்.

துவாச லக்கினங்களிலும் பிறந்தவர்களுக்கு பாபசுப மாரகங்களாகிய கிரகங்களைக் கூறப்படுமென்றவாறு

மேஷலக்கினத்தில் பிறந்த சாதகனுக்கு சுக்கிரன் புதன் பாபியென்றும் சுக்கிரன் மாரகாதிபதியாகினுங் கொல்லானென்றும் குரு சனி யோககாரகர் களென்றும், சனிமுதலில் கேந்திரபின்பாகத்திலவன் திசையில் யோகமும், குருதிசை பின்பாகம் அவயோகமும் குசன் சூரிய சந்திரர்கள் சுபர்களென் றுங் கூறப்பட்டன. சனி இராகு சுக்கிரன் கொல்லாமற் கொல்வர்.

சுக்கிரன், சந்திரன், சனி இவர்களுடைய திசாபுக்திகளில் மாரகத்தைக் கொடுப்பார்களென்றுங் கூறப்படும்.

மேல்கூறிய மேஷலக்கினத்தில் ஜெனித்தவர்களுக்கு நான்காந்திசை சூரியனுகவும், மூன்றாந்திசை சந்திரனுகவும், இரண்டாந்திசை சனிகுருவாகவரில் இத்திசையில் அவரவர்களின் தனதுபுக்திசென்று குருசனி சுக்கிரன் சந்திர சூரியன் இவ்விதபுக்தி காலத்தில் அதியோக மென்றும் இராசயோக பிரபலத்தையும் மிகவும் கிரகவாக்ன பலிதங்களையும் கீர்த்திகளையும் களத்திர புத்திரலாபங்களையும் தேசாடனத்தால் பிரபல சுகங்களையும் கொடுப்பார்களாகும், இதில் இராகு புதன் கேது சுயபுக்திகளில் குடும்பகருமம் சத்துரு ரோகங்களையும் விவாதங்களையும் கொடுக்கப்படும் குசன் புத்திகாலத்தில்முன் சுகபலன்களையும் பின் மரணத்துக்கபலன்களையும் கடன் முதலாகிய உபத்திரவங்களையும் கொடுக்கப்படுமென்றும் குசன் இராகு கேது புதன் இந்தத் திசையிலுஞ் சுக்கிரன் இவ்வித திசையிலும் தனது சனி சூரியன் சந்திரன் குஜபுத்திகாலத்தில் இராசதெண்டனை விரோதம் இடப்பேற்றிசீவனக்குறைவு பித்தவாதனோய் தன்பம் பலகலை மாதாருபிதாரு க்ர்மம் சகோதர புத்திர களத்திர வரிஷ்டம் இவ்விததுக்க பலன்களையும் பூர்வார்ஜித நஷ்டம் ரோகம் சத்துருபாதை யுண்டாகும் குரு புதன் கேது இராகு இந்த புக்திகாலத்தில் மிகவும் தனவிர்த்தி கும்ப சுக சௌக்கியங்களையும் சுபசோபனம் கலியாணம் இஷ்டவெகுமானஞ் சீவனபலன் புத்திரகளத்திர பலன்களை யடையப்பட்ட போதிலும் மனதுக்கு திருப்தியின்றி நடக்கும்

ஜாதகதேகசுகம்.

குருதிசை சனி சந்திரன் இவ்வித புக்தியென்றும் சனிதிசை குருசூரியன் சுக்கிரன் புக்தியும் குசன் சந்திரன் திசையில் குரு சுக்கிரன் புதன் புக்தியாகும்.

புதன்திசை தனதுசுக்கிரன் சூரியபுக்தியிலும் கேதுதிசை குசதிசையில் தனது சனி புதன் புக்திபில் பித்தவாயு ரோகபத்திரவமும் இராசவிரோதமும் கொடுப்பார்கள் யோககுறைவு முண்டாகும்.

சனி புதன் சுக்கிரன் திசைகளில் சந்திரன் இராகு சனி புக்தி காலங்களில், மாதாருபீடை கொடுக்கும் சனி கேது இராகு திசையின் காலம் சுக்கிரன் ரவி குசன் இத்த புக்தியில் பிதாரரிஷ்டகாலமாகும்.

சுக்கிரன் சனி இராகுதிசையில் குரு சுக்கிரன் சனி இந்த புத்திகாலம் களத்திர கெண்டமாகும்.

குரு இராகு புதன் திசையில் குசன் சனி இராகு கேது இந்த புக்தி வருங்காலத்தில் புத்திரசகோதர வரிஷ்டங்களைக்கொடுக்கும்.

குரு சனி சுக்கிரன் இராகு இந்தத் திசையில் குரு குசன் சந்திரன் சூரியன் சுக்கிரன் இந்த புக்தி காலத்தில் இராசானுக்ரக தனலாபமும் மிகுந்தி

யானவாகனமுங் கன்றுசாலியும் உத்தியோகப்பல்லியங்களையும் மிகுதியான கீர்த்திமூர்த்தி புகழ்ச்சிகளையும் கியாதிகளையும் விவகார செயத்தையும் இராஜவிரோதங்களை நிவர்த்தித்து, மேலானவனுகூல உத்தம பலன்களையும் சுயகிரகம் பூமிகளையும் கொடுத்து, யோகபலனுகவே அடைந்துவருவ னென்றுங் கூறப்படும்.

லக்கினத்திற்கு குருவுடன் சனி அல்லது சந்திரன் இராகு சேர்ந்தால் மாத்திரம் அவர்கள் திசாபுக்தி அந்திரத்தில் விகேஷ யோகமுண்டு. தனித்தாவது வேறே குசன் குரு சேர்ந்திருக்கில் சமபலனையும் அல்லது சுக்கிரன் புதன் சேரிலும் சூரியன் சேர்ந்திருந்த போதிலும் தேக வியோகாதியோககுறைவு சத்துரு ராசபயம் நஷ்டம் மரணம் குடும்பவிரோதாதி கெடுதல் அன்யஸ்தல சஞ்சாரங்களைக் கொடுக்கப்படும்

அந்தந்த கிரகங்களுடனே பாபர்கள் கூடியிருக்கில் அசுபபலனையும் சுபர்கள் கூடியிருக்கில் மிகசுப பலன்களையுங் கொடுப்பார்களெனக் கண்டுசொல்ல வேண்டியது.

மேஷலக்கினத்தின் பாவகண்டிதங்களை கணிதப்ர காரமாய் கூறப்படுகின்றனவாம்

க-லக்கினமாகிய மேஷலக்கினபலன்

இராச பூச்சியன் திரபுத்தியுடையவன் ஆபரணஞ்சேர்ப்பான் அடிமையுள்ளவன் இளைத்த சரீரம் ரோகி தனமுடையவன் சாமார்த்தியன் தர்மசாஸ்திர விருப்பமுடையவன் நீண்டகழுத்தும் வரமுரைவாற்றையும் கோபி தீவ இம்சைசெய்வன் (இ) வயசு (இ)மாதம் தியினுற் பயம் எ-வது, க0-வது, சுரம், உ0-வது வயசு காலம் இஷ்டஸ்திரீலாபனுமும், உஉ-வது வயதில் காது நோய், உ0, ஈ0 வது வயசில் விஷபயம் (இ, உ0இ-ல்) செலகண்டம் உ0அ-வது, வயசில் பிளவை விரணனுமும் உண்டாகும், இந்த மேஷலக்கினத்தை குருமுதலிய சுபக்கோள் பார்க்கினு மிருக்கினும் ஷை கண்டங்களுண்டாகினிவர்த்தியாகுமென்றும் பின்மொத்த வாயுள் (ஈ) யென்றுங் கூறப்படும்

பாவகணித நிர்ணயமாவன

முதலாவது ஆயுர்பாவம் லக்கினாதிபதியாகிய குசன் கேந்திரத்திரிகோண இராசியில் நீசன் பகையில்லாதவிடத்து குரு சனி சந்திரனில் ஒருவருடன் கூடி சார்ந்தோர்களாகிய கிரகங்களும் பெலமுடன் உச்சத்தினிற்கிலும் அந்த வீடானது சரவிராசிகளாகியதுமாக விருக்கில் சாதகனுக்கு மற்றய பாபக்கிரகங்கள் (க, ல, ஈ, இ) இவைகளிருக்கில் அப்படிக்கொற்ற சாதகனுக்கு வாயுள் (ஈ-ம்) குரு வொன்றெலக்கினாதிபதியுடன் கூடி பெலத்துடன் இருக்கில்வாயுள் (எஇ) சனி ஷை கண்ட விதிப்படி இருக்கில் ஆயுள் (இ0-ம்) சந்திரனுடன் இருக்கில் ஆயுள் (உஇ-ம்,) கொண்டுரைக்கவேண்டியது.

(சு. அ. கஉ) மிடங்களிலும் (உ) மிடங்களிலும் லக்னஞ்நிபதி மேற் கூறிய நிரகத்துடன் இருந்தாலும் அல்லது தனித்திருந்தாலும் ரோகியாகி ஞூ (நிச) வரை வாழ்வனென்றும்.

(கக, நி,) சென்மலக்னத்திலாவது அல்லது !(உ, கஉ.)வது வீட்டில் புதன் இராகு சூரியன் முதலிய பாபிகள் சேர்ந்திருந்தாலும் பெலமற்ற இடங்களாகிய நீசம்பகை இவ்விதஸ்தானங்களில் லக்னநிபதி இருக்கில் குழவிப் பருவகாலமாகிய ஞூ (எ-க்குள்) பாலாரிஷ்ட சாதகனென்றும் சூரிய சந்திர சமாகம நிரகங்களுடன் குரு அஸ்தமனமாகி சுசன் பெலத்துடனிருக்கில் வரு ஷம் (கஉ-ம்) மரணமடைவனென்றும்.

சுசன் சனி குரு இவர்கள் தனித்தனியாகிய கேந்திர திரிகோண விடத்தில் இருக்கினுஞ் சுபர்களாகிய சந்திரன் சுக்கிரனைச் சேர்ந்திருக்கின் பூரணயுள் என்றும்.

ஸ்திரவிராசிகளில் மேற்கூரியநிரகங்கள் சுபருடனே கூடியிருக்கில் மத்திமத்தில் பூரணவயதும் உபயவிராசிகளில் மேற்கூரிய லக்னநிபதியும் அவருடன் குரு சனி சந்திரன் இருந்தாலும் அல்லது தனித்து சரவிராசிகளிலிருக்கினும் மத்திமத்தில் மத்திம வயதென்றும் சரவிராசியில் சுசனும் சனி குரு மதி இவர்கள் ஸ்திரவிராசியில் இருக்கில் மத்தி மத்தில்அல்பவயதென்றும்.

சரவிராசியில் சுசனும் மற்றய குரு சனி சந்திரன் சரவிராசிகளிலிருக்கில் தீர்க்கத்தில் பூரணவயதென்றும்.

சரவிராசியில் குரு முதலிய மேற்கூரிய கோளும் சுசன் மாத்திரம் ஸ்திர விராசியிலிருக்கில் பூரணத்தில் மத்திமவயதென்றும் உபயிராசிகளில் குருமுதலிய ;கோளுங் சுசன் ஸ்திர விராசியிலிருக்கில் பூரணத்தில் அல்பவயதென்றும் சுசன் உபயவிராசியிலும் மற்றய நிரகங்கள் ஸ்திரவிராசிலிருக்கில் அல்பத்தில் அல்பமென்றும் ஸ்திரவிராசிகளில் சுசனும் ஸ்திரவிராசியில் மற்றய குரு முதலிய நிரகங்களிலிருக்கில் அல்பத்தில் மத்திமமென்றும் ஸ்திர விராசியில் சுசனும் உபயச்சரவிராசியில் குருமதியும் ஸ்திர உபயராசியில் சனி முதலிய பாபநிரகங்களிருக்கில் அல்பத்தில் அல்பவயதுக்குள் ஆயுள் முடிவென்றும் அறிந்துகொள்ள வேண்டியது.

பூரணத்தில் பூரணவயதாவது வருஷம்	ஈ-யென்றும்.
பூரணத்தில் மத்திமம் வருஷம்	அசு-ம்
பூரணத்தில் அல்பமான வருஷம்	எஎ-ம்
மத்திமத்தில் பூரணம் வருஷம்	சுசு-ம்
மத்திமத்தில் மத்திமம் வருஷம்	நிச-ம்
மத்திமத்தில் அல்பம் வருஷம்	சச-ம்
அல்பத்தில் பூரணம் வருஷம்	ஙங-ம்

அல்பத்தில் மத்திமம் வருஷம் உஉ-ம்
அல்பத்தில் அல்பம் வருஷம் கக-ம்

யென்றறிய வேண்டியது.

ஆயுர்பாவகணிதம்

குசனையும் குசனுடன் கூடிய கிரகங்களையுங்கண்டு சனியுடன் கூடிய கிரகங்களையும் சனிக்கி யெட்டால் இராசியிலுள்ள கிரகங்களைக்கண்டும் விருச்சிகத்தில் இருக்கும் கிரகங்களையுங்கண்டு இந்த சம்மந்த கிரகங்களில்.

கிரக கெணித யெண்

சூரியனுகில்	நி-ம்
சந்திரனுகில்	உக-ம்
குசனுகில்	எ-ம்
புதனுகில்	க-ம்
குருவாகில்	ல-ம்
சுக்கிரனுகில்	ககசு-ம்
சனியாகில்	ச ம்
இராகுவாகில்	ச-ம்
கேதுவாகில்	ச-ம்

ஆனகணித்தத்தகை ஒன்றுசேர்த்து அவர்களின் ஐவகைப் பெலன்களை கண்டறிந்ததில் எவ்வளவு பெலனிருக்கிறதோ அந்தத் தகையுடன் பெருக்கின தகையை ஒரிடத்திலெழுதிக்கொண்டு சுக்கிரனுடனும் சனிக்கி (உ, எ-ம்) இடத்திலிருக்கிறவர்களல்லது அவ்வாதிபதியுடன் கூடியவர்களுடன் கூடியகிரகங்களின் பெலாபெலனுக் கிசைந்தபடி மேலேகூறிய கணிதப்படிக்கி கிரகங்களுக்கு கண்ட தகைகளை ஒன்று படுத்தி மேலேசொல்லிய ஐவகைப் பெலன்களில் வருந்தகையை ஒன்று சேர்த்து மேலேகூறிய கிரகணித்தத்தகைகளை யொன்றுபடுத்தி பெருக்கிக்கொண்டு இவ்விரண்டு தகைகளையும் பெருக்கி (ா-ல்) குடுத்துவந்த மிச்சம் ஆயுளென்றும் மேலே பெருக்கிய தகையை (கு-ல்) கழித்த மிச்சம் யெத்தனையோவத்தனுவது திசையில் சாதகனுக்கு ஆயுள் முடிவென்றும் இத்திசைக்கணக்கை சாதகன் சல்யமானுல் மிச்சமான தகை யெத்தனையோ அத்தனை திசையென்றும் அபசவ்யமானுல் மீந்த தகைபோக (கு-ல்) கழித்த சேஷம் எவ்வளவோ அத்தனையாவது திசையில் மாரகமென்றுங் கண்டறியவேண்டியது. மேலேகூறிய வருஷமும் இப்படியே அரிந்து வயசு ஞ காணவேண்டியது அவ்விதந்திசைகளையும் ஒட்டிக்கொண்டபின் ஈவுத்தகையை (சு-ல்) பெருக்கி (கஉ-ல்) கழித்த மிச்ச யெண்ணை மேஷமுதல் யெண்ணிக்கண்ட இராசியில் சனி இராகு அல்லது கேது வருங்காலம் மாரகமென்றும் மேலே வந்த ஈவை (ல-ல்) பெருக்கி (கஉ-ல்) கழித்தம் மிச்சம் இராசியில் குருவருங்காலமான வருஷத்திலும்

வந்த ஈவுத்துகையை (இ-ல்) பெருக்கி வந்ததை (சஉ ல்) கழித்து இராசியில் சூரியன் வருங்காலமாதமாகவும் ஈவுத்துகையை (உக-ல்) பெருக்கி (உஎ-ல்) கழித்தமிச்சம் நக்ஷத்திர மென்றும் ஈவுத்துகையை (உசு-ல்) பெருக்கி (சுஎ-ல்) கழித்த மிச்சம் கடிகையென்றும் மரணகால கணிதங்களே அரியவேண்டியது.

இவ்விதமே ஒவ்வொரு லக்னங்களுக்கு கூடிய கிரகங்களேவைத்து இவ் வித கணிதஞ்செய்து ஆயுள் மரணகால கணிதங்கள் செய்யவேண்டியது இதிலுலும் கிரகபெலா பெலன்களே மெத்த யூகித்தலின்பேரிலும் உணர்ந்து கணிதஞ் செய்யாவிடில் யாவும் பிரழ்ந்துவிடுமென்றும அரியவேண்டியது ஆகையால் அந்திபாரத்தை மிகஉணர்ந்து நிதானித்தல்வேண்டும் என்றறிய வேண்டியது.

உ-வது தன குடும்பங்களைப்பற்றிய விவரங்களாவன

சுக்கிரன் சரவிராசிகளில் இருந்தாலுமல்லது சந்திரனுடன்கூடி (உ, எ-ல்) இருந்தாலுங் குரு லக்ஷணியும் பெற்றும் பனிரெண்டாமிடத்துக் கதிப னுடன் கூடாமலும் குரு கேந்திரமல்லது உச்ச விராசிகளினின்றுஞ் சனி குரு சம்பந்தமாகினும் சந்திரகேந்திரமாகி இருக்கினும் பெண்வழியால் தன மும் பிதுர் பூர்வார்ச்சிதமும் மிகபிரபலத்தை சனனஸ்தானத்துக்கு அக்கினி நிக்கு வாயுதிக்குகளிலிருந்து விர்த்தியாகும் அவ்விதபெலனுட பாபர் திருஷ்டி சம்பந்தமின்றி இருக்கில் கோடியாந்திர ஆர்ச்சிதமுடையவன்.

இராகு முதலிய குசன் மேஷம் மகரத்திலிருந்தபோதிலும் கோடியாந் திர தனவானென்றறியவேண்டியது.

மேற்கூறிய சுக்கிரன் குரு இவர்கள் நட்பு ஆகிஸ்தானங்களில் கேந்திர திரிகோணத்திலிருந்து சந்திரனுங் கேந்திரத்தில் ராகு குரு வீட்டிலாவது இருக்கின் குசன் சனி முதலியோர் பார்த்தபோதிலுங் கூடி இருந்தபோதி லுஞ் சாதகன் லக்ஷாந்திரக் கணக்குள்ள தனத்தை அடைவனென்றும்.

மேற்கூறிய சுக்கிரன் குருவும் குருவுக்கு (உ) மிடத்துக்குடையவன் கேந்திரத்தினும் நட்பாக்ஷியில் சூரியன் புதனுடன் அல்லது பாபக்கிரகங்க ளுடன் கூடியிருக்கில் சகஸ்திராந்தரமுடைய பொருளுடையவனென்றும்.

குரு சுக்கிரன் மூன்று ஆரெட்டிலாவது அல்லது கேந்திரதிரிகோணங் களிலிருந்து நீசம் பகைப்பெற்று இராகு கேதுமுதலிய கிரகசம்பந்தம் பெற் றிருந்தாலுஞ் சதாந்திரமுடைய லப்பொருளே உடையவன் என்றும்.

(சு, அ, கஉ) மிடங்களில் பகையோர்கள் தூர்ப்பல பாபிகளாகிய புதன் இராகு கேது குசன் சனி இவர்களுடன் கூடி குருவுக்கு இரெண்டு பனி ரெண்டாமிடத்திலும் சென்மலக்கினத்துக்கு (உ, கஉ) மிடத்திலும் இருக்கில் சாதகன் தனமில்லாதவனுகி தரித்திரமடைவனென்று குரு சுக்கிரனுடன் புதன் சூரியன் சனியிருந்தாலும் செவ்வாய் சனியுடன் கூடி (உ) மிடம் (கஉ) மிடங்கலிலிருக்கினும் இவன்றனங்கள் கடன்களாலும் இராசாக்களா

லும்விரோத விவாதத்தாலும் அக்கினியாலும் சோரத்தாலும் அழிந்து தேச பிரஷ்டனாகி வாழ்ந்து வருமை நோயிற்றுன்பமடைவனென்றும்.

குரு சுக்கிரன் (கூ, க) மிடங்களில் குருவுடனே சூரியனும் சுக்கிரனுடனே சந்திரனுமிருக்கில் கெட்டுப்போன பின்னும் இராசாக்கள் வையத் தொழிலாளரைச்சேர்ந்து பின் இராசயோக முண்டாகுமென்றும் கூறப்படும்.

குருவுக்கு இரண்டாமிடத்திபனுடனும் சுக்கிரனுடன புதன் சந்திரன் இராகு கூடி இருக்கில் வைத்தியஞ் சோதிஷ விஷயத்தால் கெட்டுப்போன தன்தனத்தைதேடுவன் சுக்கிரன் தனித்தாலும் சனியுடனே புதன் சந்திரன் இருந்தாலும் அல்லது இரெண்டு மூன்றுமிடத்திலாவது குருவுக்கு (உ, ஈ) மிடங்களி லிருந்தாலும் வியாபாரத்துடன் பலவிததொழிலில் விவாதவழக்குகளாலும் பொருளைத்தேடுவன் இவ்வித கிரகங்கள் குருவை சேர்ந்தாலும் குரு (உ, கஉ-ல்) இருந்தாலும் (கூ) மிடத்திலிருந்தாலும் சாதகன் பலபேருக்கு ஞயகனுவாவது உபதேசகர்த்தாவாக இருந்தாவது தனத்தைத்தேடுவன் ஷெ குரு சந்திரன் சனி இவர்களுடன் புதன் சுக்கிரன் குசன் சேர்ந்திருக்கில் நடநாடகம் புரிந்து தனமடைவன் புதன் சுக்கிரனுடனே சனி இராகு கூடி மிதுனம் மகரம் விருச்சிகத்திலிருக்கில் மனையாளையல்லது கூடும்ப உடன் பிரந்தாரை கூட்டிக்கொடுத்து பொருளைத்தேடுவன்.

குசனுக்கு இரெண்டாம் வீட்டதிபனும் சுக்கிரனும் உச்சசொஷத்திரத்தில் குசனுடனகூடி குசன்வலுத்து குருவுந்தன்வீட்டில் இருக்கில் பூமிப்பொருள்கிடைத்து அதனால் தனவிர்த்தி செய்வனென்றும் குரு சுக்கிரன் மீனம் கன்னி மிதுனத்தில் னின்று சனிராகு பாபிகளின் சம்மந்தம் பெற்றிருக்கில் சாதகன் கெட்ட விஷயத்தாலும் பெண்போகத்தாலும் பொருள்களழிந்து விடும் இதில் சேதுகூடி விருச்சிகத்திலாவது மகரமீன மிவைகளிலிருக்கில் குடியினால் பொருளை இழப்பன்.

குரு கடகம் சிம்மம் விருஷபம் கும்பத்தில் சந்திரன் சூரியனுடனே கூடி இருந்து சுக்கிரன் துலாத்திலாவது மீனத்திலாவது குசன் சந்திர சம்பந்தம் பெற்றிருக்கில் கீர்த்திபெற்ற விவகாரம் சட்டதிட்ட மூலங்களால் பொருளை யாற்சிப்பன்.

மேற்கூறியவர்களுடன் புதன்கூடி விருஷபம் தனுசு மீனத்தில் சுக்கிரனிருந்தும் குரு தனுசு சிம்மத்தில் சூரியனுடன்கூடி இருக்கில் சுருதிவித்தை புராணத்தால் தனத்தைத் தேடியும் கீர்த்தியைப்பெறுவன் யென்றும்.

(உ, கஉ) மிடத்திலும் (கக) மிடத்திலும் ராகு குசன் சனி சுக்கிரன் இவர்களுடன் இருக்கில் திருட்டுபாபத்தொழில் குலைகள் மதுவிற்பனையால் தனத்தை யாற்சிப்பன் யென்றும்.

சனி சுக்கிரன் குருவுடன் புதன் சந்திரன் விருஷபமும் மகரம் மீனம் கடகம் உவைகளிலிருக்கில் கப்பல் வியாபாரத்தால் பொருள்கஇ முன்தேடி

டாது பின்தேவென் முன்னஷ்டமும் பின்லாபமும் பின்னஷ்டமும் முன்லாப மடைவனென்றுங் கூறப்படும்.

சுக்கிரன் புதன் கேந்திர திரிகோணத்தில் குருபார்வையுடன் அல்லது இரெண்டாமிடத்தை குரு சுபசந்திரனிவர்கள் பார்க்கில் மிகவு மேலாகிய குடும்பத்தோனுகி பிரபல குடும்ப வித்தியுடன் வைதீக குடும்பஸ்தனுகி அல்லது வித்தியா குடும்பஸ்தனென்றும் மேல்மேலான குடும்ப பிரபலமாகி வரு மென்றும் ஷ கிரகங்களுடனும் (உ, கஉ) மிடத்திலும் பாபிகள் இருந்தும் பாபிகள் பார்த்தும் நீசம் பகைபெற்றிருக்கின் குடும்பமூன் வித்தியாயிருந்து பின் வரவர குறைந்து சின்னுபின்னங்களாகி பல மரணதுக்கத்தையு மடைந்து வேறுபட்டு ஸ்தானங்களேவிட்டிழந்து பாபத்தொழில்களேயும் விபசாரங் களேயுஞ்செய்து குலகீனத்துவத்தை யடைவர்களென்றுங் கூறப்படும்.

(உ, ஙு) மிடத்தில் சுபர்கள் குரு சந்திரன் சுக்கிரன் இருக்கில் வாக்கு பலிதமும் குசன் சூரியன் இருக்கில் கடமைவாக்கும் குசன் கேது சனி இருக்கில் விஷவாக்குடையவன் கோபியென்றும் சுப பாபசம்பந்தமிருக்கில் மிருது வாக்கனுகியும்.

(உ, ஙு-க்) குடையவனும் புதனும் நீசம் அல்லது அஸ்தங்கதமாகி சனி இராகுவுடன் கூடினுலும் ஸ்திரவிராசியில் இருக்கினும் கேதுவுடன்கூடி மூவித பாபத்துவபெலனுடன் இருக்கில் சாதகன் ஊமை உளர்வாயனகனென் றும் வாயுனப்பட்டுப் போவனென்றும் சனி சுக்கிரன்கூடி சூரியசம்மந்தமிருக் கில் பொள்வாயன் வாய்நாற்றமுடையவனுகி அசூபியாகிவிடுவன் சனி புதன் கூடினுலும் மேற்கண்டபடியாகியும் பிசகு அசத்தியனுகியும் அப்பிராமணகுரு வாகியும் வாழ்வன் என்றியவேண்டியது. இவைகளுக்கு குரு முதலிய சுபக் கோள் கூடினுலும் பார்த்தாலும் இவ்வித கெட்டநடத்தை நீங்கி அல்பமான எண்ணமும் திக்குவாயனுகி அல்பபிசகனுகியும் வாழ்வனென் றரியவேண் டியது

சுக்கிரன் குசன் மதி இவர்கள் விருஷபம் தனுசு மகரம் மீனம் இந்த விடங்களில் சனியுடன்கூடி குரு ஜேக்கம்படவிருக்கில் பிரபல பூமி கட்டடத் தால் பொருளோத்தேடி அரசனுகி வாழ்வன் என்றியப்படும்.

சூரியனுடனும் சூரியனுக்கு இரண்டாமிடத்துக் குடையவனுடனும் சுக்கிரனுடனும் சனி ராகு கேது இருக்கினும் மூன்றுரெட்டில் பெலமற்ற இடத்திலும் சுக்கிரன் புதன் இரண்டில் சனி இராகு சம்மந்தமாகி பெலன் கெட்டிருக்கில் சாதகன் அந்தகனென்றும் குரு மதிஜேக்கவாவது இருக்க வாவது பெரின் அந்தகத்துவம்நீங்கி அல்பனே யிரிஷ்டிக்குமென்றும் அந்திய காலம் கேத்திரமறையும் என்றும், சூரியன் சுக்கிரன் ரெண்டிலிருந்து புதன் கூடியதில் சனி முதலியோர்நோக்கின் நீலக்கண்ணன் முழி குருடன புதன் ஒருவன்சோல் மாலேக்கண்ணன், மதி கேது குசன் சூரியனுடன் அல்லது சூரியனுக்கு (உ-ல்) லக்கினத்துக்கு (உ) இவைகளிலிருக்கில் மேகனீருபத்

திரவ நேத்திரத்தை உடையவனென்றும், குசன் கேதுமாத்திரமிருக்கில் நெத்தநேத்திரன் விழிபெருத்தவன் மத்தியகாலத்தில் நேத்திரபீடைகள் உண்டென்றும்.

இவையை குருமுதலாகிய சுபர்னேக்கில் அல்பமாகக்காண்பித்து உடனுக்குடன் நீங்கிவிடுமென்றும் இடபத்தையாவது, மீனத்தையாவது சூரியனுக்கு (உ, கூ) மிடத்தையாவது குசன், கேது பார்த்தாலும் பாபி யிருந்தாலும் உஷ்ணநேத்திர ரோகியாவான்யென்றும்.

அந்த ஸ்தானத்துடையோர் பெலமுடன் தனுசு, கடகம், கும்பத்தில் குரு முதலிய சுப சம்பந்தனேக்கமூரில் மிக விசேஷவியாதியின்றி நேத்திர னேய்கண்டு, உடனுக்குடன் நீங்கிவிடுமென்றும்.

சனி முதலிய ராகு குசன் சூரியனுடன் (உ, கூ) மிடத்தில் அஸ்தங்கத மாகி சூரியனுக்கு (உ, கூ) மிடத்தகிபதி இருக்கில் பிறவிக்குருடனென்றும் மற்றவை மத்தியில் னேய்த்துன்பங்களால் நேத்திரம் போகுமென்றும் யூகித் தரைத்தல்வேண்டும்

இதில் ஷை திசாபுத்திகாலத்தில் நேத்திரனே யுண்டாகுமென்றும் சுபம் பெற்றவர் திசாபுத்திகளில் மிகவும் ராசசமானவாக்கு பலிதம் குமெம்பவிர்த்தியு முண்டாமென் றரியவேண்டியது.

தனத்தினளவை
கணிதபாவங் கணிக்கின்ற விதியுணரவேண்டியது

சுக்கிரனுக்கு (ககூ-ம்) சனியின்பாகம் (அ-ம்) அத்துகை (உச) உடனே குருவிற்கிரண்டாம் வீட்டிலிருக்கும் கிரகம் சூரியனுகில் (இ-ம்) சந்திரனுகில் (உ.க-ம்) குசனுகில் (எ-ம்) புதனுகில் (கூ-ம்) குருவாகில் (ய-ம்) சுக்கிரனுகில் (ககூ-ம்) சனியாகில் (ச-ம்) இராகு கேதுவாகில் தனித்தனி (ச-ம்) எத்தனே கிரகஞ் சேர்ந்தாலும் அவ்வளவு துகைகளேயும் ஒன்று சேர்த்துக்கொண்ட துகையையாவது அல்லது குருவின்ற இராசிக்கு (உ-ம்) வீட்டில் கிரகமில் லாவிடில் இந்த வீட்டுக்குடைய னிர்க்குமிடத்திற் கூடியகிரகங்களின் துகையையும் லக்கினத்துக் கிரண்டில் இருந்த கிரகத்துகையையாவது கிரகமில்லாவிடில் இரண்டிற்குடைய கிரகத்துடன் சார்ந்த கிரகத்தின் துகைப்படியுள்ள மூன்கூறிய கிரகங்களின் யெண்படிசேர்த்து ஒன்றாக்கி பாப பெலனுகிய நீசம்பகை சனி இராகு கேது இவர்கள் சேர்ந்திருந்த துகையாகில் தன்னுபடிசெய்து மற்றவைகளே யொன்றுபடித்தி வைத்ததுகையையும்.

இராசிகணிதயெண்கள்
கிரகங்கள்கூடின விராசி

மேஷமாகில் எ-லும்
விருஷப சிம்மமாகில் ய-லும்

மிதுன விருச்சிகமாகில்	சு-லும்
கடகமாகில்	சு-லும்
கன்னி மகரமாகில்	நி-லும்
துலாமாகில்	எ-லும்
தனுசுவாகில்	கூ-லும்
கும்பமாகில்	கக-லும்
மீனமாகில்	கஉ-லும்

பெருக்கி வைத்துக்கொள்ளவும்.

சுக்கிரன் குரு உச்சமாகி உச்சகிரகங்கள் ஜாஸ்தியாகச் சேர்ந்திருக்கில் (சு) தரஞ் சமத்துகைப் போட்டுப் பெருக்கியும் ஆகுதியாகில் (கூ) தடவை சமத்துகையால் பெருக்கியும், நட்பு ஆகில் (உ) தடவை சமத்துகைபோட்டு பெருக்கியும் பகையாகில் (க) தடவையும், நீசமாகில் (க) தடவை பெருக்கிய துகையில் பாதியுஞ்சேர்த்து பார்த்து வைத்துக்கொண்டு.

அந்த கிரகங்களானது யாவுங் கேந்திரமேஇருக்கில் கால்பங்கு கூட்டியும் திரிகோணத்தில் இருக்கில் அதேதுகையென்றும்.

(உ, கூ, கக) மிடங்களிலிருக்கில் கால்பங்கு குறைத்தும் (சு) மிடத்தில் (கஉ) மிடத்திலிருக்கில் அறைப்பங்கு குறைத்தும் (அ) மிடத்திலிருக்கில் மூக்காற்பங்கு தள்ளி மீன்ற சேஷம் எவ்வளவோ அவ்வளவு பொன்றனஞ் சாதகனுக்கு உண்டென்றும் ஆயுளுக்குள் பட்டதுள் லாபமென்றும் பெயராகும்.

இதில் பகை நீசம்பெற்ற கோள்களும் (கூ, சு, அ, கஉ) மிடங்களில் மேலே கூறிய கிரகங்கள் மீன்று கணிக்கணக்கிற்கு இசைந்து பெருக்கிவந்த துகை கடனுளியாகில் பொருளையுமிழந்து பலவாராகிய கஷ்டத்தை யடைவனென்றுங் கூறப்படும்.

மூன்றும் பாவபலன்கள்

புதனுடனும் மூன்றுமிடத்திலும் குசனுக்கு, மூன்றுமிடம் மூன்றுதிபனுடனும் சனி ராகு கேது யிருக்கில் ஷ ஸ்தானங்களி லிருக்கின்ற மற்ற எவ்வித கிரகங்களும் பார்வையாவது அல்லது சேருமலிருக்கில் சகோதிரமில்லான்.

குசன் தனித்து மூன்றுமிடமான மிதுனத்தில் பெரும்பாபிகளுடன் கூடியிருக்கில் பாபர்பார்க்கிலுஞ் சகோதிரம் பின்னில்லான்.

குசன் மூன்றுமிடத்திருந்து அசுபர்பார்க்கில் பிறந்திருக்கும் சாதகனுக்கும் மூன்றுமிடத்திருக்கும் குசன் குரு முதலிய சூரியன் கூடினாலும் பார்த்தாலும் ஆண்சந்ததி அதிகமுள்ளன் சுக்கிரன் சந்திரன் புதன் கூடினாலும் பார்த்தாலும் பின்சகோதிரம் பெண்ஜாஸ்தி யுள்ளவன் சுக்கிரனிருக்கில் மூன்றில் குசனுக்கு மூன்றுமிடத்தில் இருக்குங்கிரகங்கள் சந்திரன் புதனு

கில் அடுத்த ஆண்டு (௰௨-க்) குள் பெண்ணே ஜெனித்துவரும் குசன் சனி கேது இவர்கள் கூடினாலும் பார்த்தாலும் அப்படிக்கொற்ற சகோதிரங்கள் மரணத்தையடையும்.

குரு சந்திரன் தீர்க்க பெலத்துடன் னோக்கமாவது இருக்கினும் அவ்விதம் நோக்குபவரை பாபிகள்பார்க்கினும் கூடினுப் சிலகாலஞ் சகோதிரமிருந்து மரணத்தடைவார்கள்.

புதன் சுக்கிரன் முதலிய கோள் குசனுடன் அல்லது மூன்றில் மிதுனத்திலிருக்கில் பாபிகள் நோக்கமல்லது சேர்ந்திருக்கில் சகோதிரர்கள் விவாகம் புத்திரறை அடைந்தபின் மரணமடைவார்கள்.

சனி சூரியன் கேது மேற்கூறிய இடங்களிலாவது அதிபர்களுடனாவதிருந்து அல்லது பார்த்து இருக்கிற சகோதிரர்கள் அங்கஈனகர்களாயாவது அல்லது மதிகெட்டவராய் சாதிருப்ஷ்டர்களாய் குடும்ப விர்த்தியின்றி மரணமடைவார்கள் என்றும் பரதேசவாசியாவார்கள் என்றும் அறியவும்.

குசன் சிம்மம் மிதுனதனுவில் குரு சூரியன் இராகு இவ்விதத்தோர்களுடன் கூடினாலும் பார்த்தாலும் பெலத்துடனிருக்கினும் குசனுக்கு மூன்றாமிடத்திலாவது இவ்விதமிருக்கில் பிறந்த சேயின்சகோதிரர் புருஷர்களாகி அதிக விர்த்தியுடன் சிலகாலம் வாழ்வார்கள்.

மேற்சொல்லிய கிரகங்கள் குசனுக்கு பகை நீசமின்றியும் மற்றைய கிரகங்களுக்கு பகை நீசமின்றிருமிருந்து நோக்கில் விசேஷ பிரபலர்களாகி சகோதிரர்கள் வாழ்வார்கள் குடும்பவிர்த்தியுமுண்டாகும்.

ஷை ஸ்தானங்களில் குரு உச்சமல்லது சுக்ஷேத்திரனாகி கேந்திர திரிகோணமாயாவது நட்பு வீட்டிலாவது இருந்து மூன்றாமிடங்களை னோக்கினும் பிறந்த சாதகன் சகோதிரன் இராசயோகனாகி மிகவும் மேலான பிரபலத்துடன் கீர்த்திகளைப்பெற்று அதிபதியாவன் சுக்கிரனாகில் நடநாடக சங்கீத சாஸ்திராதிபுராண வல்லவனாக கீர்த்தியுடன் வாழ்வன்.

புதனாகில் சித்ராதி சகலவித பணித்தொழில் கர்த்தாவாகியும் ஞானவானாகியும் கீர்த்திபெறுவன்.

சந்திரனாகில் கணிதபண்டிதனாக வாழ்வன்.

சூரியனாகில் அரசன் பூபதியாய் வாழ்வன்.

சனியாகில் நீசத்தொழிலாயும் மதபேதகர்த்தாவாகியும் பாபத்தொழில் திருட்டில் கீர்த்திபெருவன்.

ராகு கேதுவாகில் மிகவுந்துஷ்டனாகி பிரபலமான அவகீர்த்தியுடன் யாரும் பயங்கொள்ள பில்லி சூனிய மாந்திரீகத் தொழில்புரிவன்.

மிதுனத்திலாவது கன்னி விருச்சிகத்திலாவது புதன் குசன் இருந்தும் சந்திரன் சூரியன் சனிகூடி இருக்கினும் கும்பராசியில் நின்றாலும் பார்த்தா

லும் சகோதிரர் மிகவும் பகையாளிகளாய் முகரலோபனங்கூட இன்றிப் பலவாராகிய கஷ்ட நஷ்ட துன்பங்கோயடைந்து விவாதவழக்குடன் ராசாங் கத்திற்கு பொருள்களே அழிப்பர்களென்றும் பலவகை விரோதிகளாய் வாழ் வார்களென் றறியப்படும்.

சுபர்களில் குசனுக்கு மூன்றுமிடத்திலும் மிதுனஞ் சிம்மம் குப மிவ்வித இராசியில் குரு புதன் சனி இருந்தாலுமல்லது சந்திரனிருந்து மற்றைய பகையோரென்றும் பாவர்கள் சுபபலமின்றி நோக்காமலும் சேறுமலுமிருக் கினும் சாதகனும் சகோதிரரும் அந்தியோந்தியர்களாய் அனேக தலைமுறை வறையில் கூடிவாழ்ந்தும் வசியத்தோடும் வாழ்வார்கள் அதிக சுக்குத சகோதிரவனுகூலமடைவன் இவ்விதமிருக்கையில் குசன் புதன் சேர்ந்தாலும் ஷ ஸ்தானத்தை பார்த்தாலும் சனி நோக்கியிருந்தாலும் சகோதிரகர்மத்துக் கும் சொத்துக்கும் பாத்தியதையடைவன்.

இதில் சந்திரன் சுக்கிரனுடன் மேற்கூறிய ஸ்தானங்களில் கூடியாவது ஷ கிரகங்கள் பார்வையாவது இருக்கில் பிறந்தசேய்க்கி சகோதிரன் அனு கூலமின்றியும் சகோதிரன் எவ்வளவு குற்றமாயினும் சாதகன் அவனுக்கு அனுகூலஸ்தனுவன்.

சனி குரு ராகுவாகில் சாதகன் சகோதிரனுக்குத் தீங்கு செய்தாலும் சகோதிரன் சாதகன்மேல் பக்ஷமுடையவனுவன்.

குசனுக்கு ஏழாமிடத்திலாவது மூன்றுமிடத்திலாவது அல்லது மிதுனந் தனுவிலாவது சனி ராகுவும் அல்லது பாபபெலனுற்ற பாபசம்மந்த சுக்கிரன் சந்திரன்சேரில், சகோதிரவம்ச மனேயாளாவது சகோதிரிகளாவது விபசார தோஷத்தை யடைந்து வருபவர்களென்றுங் கூறப்படுமென் றவாறு.

மிதுனபுதனுடன் சுக்கிரன் அல்லது குரு கூடினுல் பிராம்மண உத்தம குல ஸ்ரேஷ்டமான ஸ்திரீயைப்புணர்வன் சுக்கிரன்றனித்து பாபிகள் னேக்க மாவது சேர்க்கையாவது இருந்தால் காமாதுரனுகி ஸ்திரீகளான விஷயத்தால் அவமானமுண்டாகும் குசனுவது கேதுவாவது பெலத்துடன் இருந்து குரு முதலிய சந்திரன் சுக்கிரன்பார்க்கில் பூபதியானவர்கள் அல்லது பிறபுவீட்டுப் பெண்களைப் புணர்வன் அவர்களால் சில தனலாபத்தையுமடைவன்.

குசன் கேது தனித்தனின்றலும் பார்த்தாலும் விதவையை புணருவன் சனி மேஷத்திலிருந்து இராகு முதலியோர் மூன்றிலிருக்கின் அனுசார மடைந்த நீசஸ்திரீ தாரஸ்திரீ சமபோகம் செய்வன் என்றும் அறியவேண் டியது.

புதன் சுக்கிரன் மிதுனசிம்ம தனுசுவில் இருந்து சந்திரன் குருனேக் கினுமிருக்கினும் சங்கீதவித்தையும் பல சாஸ்த்திர பரிசயனுகி வாழ்வன். இன்னுன்கு கிரகங்களும் பெலத்துடனிருக்கில் கீர்த்திபெற்ற கீதவித்வானுகி பல ஸ்திரீகள் வலுவிலபோகாதி சுகமீயவசனிக்கவும் சம்பாஷிக்கவும் சபா

ரஞ்சிதனுவான். இவர்களுடன் ஷை ஸ்தானங்களிலாவது சுக்கிரனுக்கு மூன்றும் இடத்தில்லாவது புதன் சனி முதலியோர்கூடி சூரியசம்மந்தம் புதனிருக்கில் சாதகன் கேவலங் கூத்தாடியாகி உலகத்திற்றிரிவன்.

சகோதிராதி பாவங்களை கணிதமூலமாய் கணிக்கும் வகைகளாவன

மிதுனத்திலும் புதனுடனும் குசனுடனும் குசனுக்கு மூன்றும் இடத்தினும் அதிபதியுடனுங்கூடிய பெலாபெலத்தால் கண்டறிந்த கிரகங்களின் யெண்ணுகிய முதற்பாவத்திற் கூறிய யெண்களைக்கூட்டி ஐவகைப் பெலன்களுக்குறியபடி குறைத்துங் கூட்டியுங் கொண்டுள்ள துகைகளையொன்றுபடுத்திவைத்து அந்த கிரகங்கள்னின்ற ராசிக்குள்ள யெண்களாகிய இரெண்டாம் பாவத்தில் தனத்தைக்குரித்த குணிதத்தில் கண்டிக்கும் யெண்கள் ராசி துகைப்படிக்கும் கிரகம் னின்றிருக்கிற ராசிப்படிக்குஞ் சேர்த்து முன்கண்டதுகையை ராசித்துகையில் கழிக்கனின்றமிச்சம் சகோதிர உற்பத்தியான துகைகளென்றும் அத்துகையைச் சனிபெற்றிருக்கிறபெலன் பேரிலும் அல்லது குரு பெற்றிருக்கிற பெலன் பேரிலும் கண்ட அவர்களின் யெண்களில் கொடுத்துக்கண்ட மிச்சம் அந்தியவற்றையுள்ள சகோதிரங்களென்றும் அத்துகையை முன்கூறிய கிரகங்கள் னின்றவிராசி பெண்ஜாஸ்தியானவிராசியா அல்லது புருஷகிரகஞ் சாஸ்தியானராசியா வென்று அறிந்து அந்த விராசிக்குள்ள துகையில் கழித்து அல்லது கழிக்க குறைந்தவையாயின் ராசி கிரகபெலத்தின்பேரில் பெண் ஆணென்றறிந்து கொண்டு அத்துகையுடன் சேர்த்து கிரகங்கள் னின்ற ராசியிலாவது அல்லது புருஷ ராசிக்குள்ள துகையிலாவது புருஷ ராசி யில்லாவிடில் புருஷக் கிரகங்களின் பெலத்துக் கேற்றபடியுள்ள துகைசேர்த்து அத்துகையில் கொடுத்துவந்த ஈவு புருஷர்ன்கயென்றும் மற்றவைபெண்களென்றும் அறிய வேண்டியது.

பாபிகளாலே கொடுத்த துகைகளாய் அல்லது பகை நீசர்களாலே கொடுத்த துகைகளாயாகவாவது இருந்தால் சகோதிர பூச்சியமென்றும் ஓர்சுபக் கிரகம் ஸ்தீரீகிரகமிருந்து நோக்கவாவமி சேர்ந்தாவது இருக்கில் பெண் சந்ததி அல்பமானயேகசந்ததியென்றும் புருஷகிரகங்கள் பார்க்கில் யேகமான ஒரேபுருஷ சந்ததியென்றுஞ் சொல்லவேண்டியது.

நான்காவது மாதுரு கிரகவாகன விந்தைகளைபற்றி கூறப்படும் பாவங்கள்

கடகத்திலும் சந்திரனுடனும் சந்திரனுக்கு நான்காம் அதிபதியுங் கொண்டு மாதுருபாவபலன்கள் சொல்ல வேண்டியது சந்திரன் நாலு யெட்டிலிருக்கினு மாதுருவிஷ்டமூண்டு விருச்சிகத்திற் சந்திரனிருக்கில் மாதுருவுடன் மரணத்தடைவன்.

வித்தை பலன்

மேற்கூறிய நான்கு ஸ்தானங்களில் அந்தந்த ஸ்தானங்களுக்கு அஷ்ட நாதிபதிகள் பாபிகளாகி பகைநீசம்பெற்ற தூற்பல ஸ்தானத்திலிருந்து மேற் படி ஸ்தானங்களே பார்த்தாலும் ஷை நான்குஸ்தானங்களில் தூற்பலராய் இருக் கினும் மாதுருவுடன் குழலிப்பருவத்தில் மாதா பின்னமடைவளென்றும் சந்திரனுடனுவது அந்த நான்கு ஸ்தானாதிபர்கள் மறைவிடங்களாகிய, (சு, அ, சஉ) மிடங்களில் நீசம் பகையுடனல்லது பலர்களாகி பகைவாகளுடன் கூடி இருக்கினும் நோக்கினும் மாதர் பாலியத்திலேயே மரணமாவள். சூரிய சந்திரனுடன் சந்திரனுடன் சனிமுதலிய பாவர்கூடினும் சந்திரனுக்கு நான் கிலாவது. கடகத்திலாவது கூடியிருந்து சுக்கிரன் குரு பார்வையற்று பாம்பு கூடி இருந்தாலும் தனுசு நீங்கிய கும்பம் மிதுனங்கன்னி விருச்சிகங்களில் ஜின்ற சேய்க்கு எவ்வனத்திலேயே மாதா மரணமாவாள்.

சுசன்ராகு முதலியபாபிகள் கடகம் விருச்சிகமல்லது சந்திரனுக்கு நாலு ஏழு இடங்களில் பகை நீசம் பெற்று அஷ்டமாதிபதியுடனிருக்கில் யெவ் வனத்திற் ருய்போரும் மிதுனம் கன்னி துலாம் மகரம் மீனம் இந்த விருசி களில் சனி குசன் சந்திரனுடன் பாபர்கள் கூடினுலும் நீசம்பகைபெற்று நான் கிலிருந்தாலும் நாலுக்குடையவன் பெலஹீனனுகி சத்துரு க்ஷேத்திரங்களில் பாபர்களால் நோக்குண்டு குரு சுபர்களின் வீக்ஷணிய மிருந்தாலும் கவுமார கால வயதில் மாதா மரணமடைவள் சந்திரனுக்கு நான்கு ஏழிலும் அஷ்ட மத்திலும் கடகம் துலாத்திலும் பிறந்தவர்களுக்கு குருமுதலிய சுபக்கோள் மிகு பெலத்துடன் இருக்கில் பிறந்தசேய்க்கு வார்த்தீகவயதில் மாதா மரண மென்றும் பத்தாமிடத்திலுஞ் சந்திரனுக்கு பத்தில் பாபர்களிருந்தும் சந்திர னுடனும் சந்திரனுக்கு (ச-லும்) கடகம் துலாத்திலும் பாபர்கள் பகைநீசம் பெற்று ஸ்தானுதிபதிகள் கெட்டுப்போயிருக்கில் பிறந்தசாதகன் மரணத்தின் பின் தாய் மரணமாவளென்ற விதிகளேயறியவேண்டியது.

தாய் பரபுருஷனுக்குப்பெற்ற சாதகன் யென்ற விதிகளே யுணர்த்து கின்றது. விவாகபுருஷனேத்தவிர மற்ற புருஷன்தான் பரபுருஷனென்று சொல்லப்படும்.

சந்திரன் நீசராகிநான்கில் சனி முருகுமுதலிய பாபிகள் இருந்து பகையல் லது பெலக்குறைவுடனிருந்தாலும் அல்லது புதன் நான்கிலாவது சந்திர னுக்கு நான்கிலாவது பாபிகளுடன் கூடி (உ) மிடத்ததிபதியும் பாபிகளாகி பாபசம்மந்தம்பெற்றிருக்கில் பிறந்தவன் அயலானுக்கு உதித்தவனென்றும் ஷை கூரியஸ்தானங்களிலாவது கிரகங்கள் ஸ்தானுதிபதிகளுடன் (ரு) பாபி களுடனுவது சூரியனிருக்கில் க்ஷத்திரியகுலமல்லது (அரசர்களுக்கு உதித்தவ னென்றும் சந்திரனுகில் வைசியனுக்கு அல்லது பெலக்குறைவால் வண்ண னுக்கு உதித்தவனென்றும் குசனுகில் சங்கிருமன் பெலக்குறைவால் வடுகர் தெலுங்கருக்கு உதித்தவனென்றும் புசனுகில் வாணியனுக்கு உதித்தவ

னென்றும் அல்லது வேளாளனுக் குதித்தவனென்றும் குருவாகில் உயர்பெ லத்தால் பிராமணனுக்கு உதித்தவனென்றும் சுக்கிரனுல் பிராமணரும் சுக்கி ரன் பெலக்குறைவுடன் இருக்கில் தட்டார் முதலிய கம்மாளர்கள் சொழிலா ளர்களுக்கு உதித்தவனென்றும் சனியாகில் சதுர்த்தசாதியாக புலால் புசிப் போர்வேடவர்களுக்கு உதித்தவனென்றும் ராகு கேதுவாகில் குடியர் முதலிய நீசசாதிப்புருடர்களுக்கு உதித்த சாதகனென்றுங் கண்டுசொல்லவேண்டும்.

லக்கினவாசத் நான்காம்வீடும் சந்திரனுக்கு நான்காவதுவீடும் சுபகிரகங்க ளாகி சுபர்கள் பெலத்துடன் கேந்திர முதலிய இடத்திலும் அல்லது ஷ ஸ்தானங்களேப் பார்த்திருக்கில் பிறந்தவன் விவாகபுருஷனுக்கே குருபுத்திர னுகச் சனித்தவனென்றுங் கூறப்படும் இதிலும் அவசியம் சந்திரனுக்கு நாலாமிடத்தைக்கோண்டு மேன்மையான ஸ்திரமாகக் கூறல்வேண்டும்.

வாகன பலன்கள்

சந்திரன் குருவுடன்கூடினலும் அல்லது சூரியனுடன் கூடினலும் கட்பு ஆகி உச்சகேந்திர திரிகோணத்திலிருக்கில் யெக்காலத்தும் பிரபல மான வாகனயோகனுவன் இதில் சனிமுதலியபாபர்கள் இருந்தாலும் பார்த் தாலும் சிலகாலஞ் சொயவாகன மற்றயகாலம் அன்யர்களுடைய வாகனங்களி லுஞ் சஞ்சரிப்பன் வாகனமென்னும் பிரபலமுண்டு சுக்கிரனுக்கு நாலாமிடத் தாதிபதி கேந்திர திரிகோணத்தில் சுக்கிரனுக்கு இஷ்டனுகி பாபரானபோ திலும் கேந்திரத்திலிருக்கில் அசுவவாகனமுள்ளவன் பாபிகளாகிப் பாபிகளு டன் கூடி இருக்கில் பழைய வாகனமும் சீர்கெட்டதும் அசுவவாகனங் கிடை க்கும் சனியாகி உச்ச சொக்ஷேத்திரத்தில் சுக்கிரனுக்கு நாவிலாவது அல்லது கடகத்திலாவது இருந்து சுபர்கள் நோக்கினும் அசுவவாகன பிரபலமுண்டு.

சுக்கிரன் பெலத்து சுக்கிரனுக்கு நாலாதிபனும் பெலத்து சிம்மம் கட கம் மகர விருஷபத்திலிருக்கில் பல்லக்கு யோகனுவன் இவ்வித ஸ்தானத் தோர் பெலத்து மீனம் மிதனந் துலாத்திருக்கினும் பல்லக்கு வாகனயோக வானுவான்.

இதில் பாபர்பார்க்கில் சிலகாலம் அயலோர்களின் பல்லக்கு யேருவன் ஸ்தானுதிபர்களாவது ஸ்தானத்திலிருப்போர்களாவது (சு. அ, கூ-ல்) மறை ந்து பகை நீசம்பெற்றலும் சத்துருவோருடனுற்றலும் சிலகாலம் வாகனமும் பின் வாகனமின்றித்திரிவன்.

குசன் கடகத்தில் சனி முதலியோர் பார்த்தாலும் இருந்தாலும் சுக்கிர னுக்கு நான்கிலுற்றலும் பகை நீசமாகிச் சுபர் பார்வையின்றி இருக்கில் மூன் னேர் வாகனத்தையும் விற்று புசிப்பன்.

சுபர்கள் லேக்கி பெலத்துடன் இருக்கில் மூன்னேர்கள் பாதசாரியாகி யும் சாதகன் வாகனசாரியாகவும் வாழ்வன் சுக்கிரனுடன் அல்லது சுக்கிர னுக்கு நான்கில் (உ) சுபர்கள் மேலாயிருந்து பெலத்துடன் கேந்திர திரி

கோணமாய் பாபர் வீக்ஷணியமின்றி இருக்கிற் பிறந்தவன் அனேக வாகனங் கள்படைத்து அரசனுகி வாழ்வன்.

சுக்கிரன் மதி நான்கிலுஞ் சனி நோக்கமிருக்கவாயினும் மற்ற பாபிகள் பார்வையின்றி இருக்கில் யானை ஒட்டகை முதலிய பிரபல வாகன யோக னுவன் சுக்கிரனுக்கு குரு கடகம் துலாம் மீனத்தில் சனி முதலியோர் கூடி னலுஞ் சந்திர கேந்திரத்திலிருக்கினும் பரம்பரையாய் குதிரை யானை பல் லக்கு முதலிய ஒட்டக முதலிய வாகனயோகனென்றுங் கூறப்படும் என்றவாறு.

அவ்வித ஸ்தானத்திலாவது ஸ்தானாதிபதியுடனாவது கூடிய கிரகம்

சூரியனுகில்	சிவப்பு பழையவாகனமும்
சந்திரனுகில்	வெண்மையிற் பழமையும்
குசனுகிற்	செங்கருமையும்
புதனுகில	பீலிநீரும்
குருவாகில்	மஞ்சள்கலந்த குங்குமனிர வாகனமும்
சுக்கிரனுகில்	வெண்மைநீர வாகனமும்
சனியாகில்	கருமைநீர வாகனமும்
இராகுவாகில்	கருமையிற் புள்ளியுள்ள நிரமும்
கேதுவாகில்	செம்புனீர வாகனமு மூன்டாகும்

இவ்வித கிரகங்களுடைய நிறத்திற்கும் ராசிகளின்நிறத்திற்கும் இசைந்த படி சொல்லவேண்டியது.

இராசிகளின் நிறம்

மேஷம்	சிவப்பு
விருஷபம்	வெள்ளை
மிதுனம்	பசுமையும்
கடகம்	பழமை வெள்ளை
சிம்மம்	புகைநிறம்
கன்னி	அழுக்கு வெள்ளை
துலாம்	பலநிறம்
விருச்சிகம்	கருப்பு
தனுசு	பொன்னிறம்
மகரம்	அழுக்கு வெள்ளை
கும்பம்	கருப்பு
மீனம்	அழுக்கடைந்த சிவப்பு

ஒவ்வொரு லக்கினங்களுக்குச் சொல்லிய ஒவ்வொரு பாவங்களிலும் கண்டுள்ளகணிதங்களின பெலன்களாவது (சு, அ) ஸ்தானமானுலும் அதிபதி களானுலும் கொடுத்தகணக்கில் (வ) பங்கும் (சு, சக) ஸ்தானம ஸ்தானுதிபதி

யானுல் (ஓ) பக்கும் (கூ, உ) ஆனுல் முக்கால்பங்கும் முற்றவைக்கு முழுப் பக்குமான பெலத்தையுங் கிரகங்களின் ஒருவற்கொருவரின் பெலத்தையும் அந்தந்த லக்கின துவாதசபாவஸ்தான மூலமான நட்பு ஆகி உச்சம் பகை நீச பெலன்களையுமரிந்து யெடுத்ததில் அந்தந்த பாவஸ்தானம்காரக பாவஸ்தான கிரகாதிபனுடையவும் அந்தந்த ஸ்தானத்திலிருப்பவர்களின் பெலனுக்கேற்றதில் குடுத்துக்கண்ட யெண்ணில் சகோதிராதி பாவமாகும் புதன் சுக்கிரன் குரு கேந்திராதிபதிகளானுல் (வ) பெலனுல் எடுக்கவும்.

கிரகபாவக் கட்டடங்களைப்பற்றிய பலன்கள்

சந்திரன் கேந்திரத்தில் சுக்ஷேத்திர நட்பு அல்லது உச்சத்திலிருந்தும் குரு சுக்கிரனிவர்கள் கிரகவாகன க்ஷேத்திரமாகிய கடகத்திற்கு கேந்திரத்திலிருக்கினும் சுக்கிரன் பெலத்துடன் இருக்கிற் பிறந்த சாதகனுக்கு பிரபல மாடமாளிகை கூடகோபுரமும் தோப்பு சமமந்த கட்டடங்களும் இராசனுக்கு ஒப்புற்று வாழ்வன் என்றும் இதில் குருவிருக்கில் தேவாலயமும் அமைத்து தர்ம சத்திரமும் உண்டாகும் கிராமாதி பிறதிஷ்டாமேன்மை செய்வனென்றும் சுக்கிரனிருக்குமாயின் பிறபல கட்டடங்களும் லீலா விநோத சாலைகளும் தோப்பு தோட்ட சம்பந்த கட்டடமும் நீராழி மண்டபங்களும் பிறபலமுண்டாகும் சந்திரன் அவ்வித பெலத்தோடு இருக்கில் சித்திரமேடையுடன் அநேக கட்டிடங்கள் பிறபலஞ் செய்வனென்றும் புதனிருக்கில் அவ்வித கட்டிடமும் பழையவஸ்து வீட்டை புதிதாய் செய்வனென்றும் குசனிருக்கிலும் சூரியன் இருக்கிலும் தீயினுலடைந்த கிரகத்தையும் வெகுநாளாக வாஸ்துவின்றி ஸ்மசான சம்மந்த கட்டடம் நேருமென்றும் இராகு கேதுவாகில் பழைய கற்களுள்ள கட்டடங்கள் அரைகுறை பழமையில்லுங் கிடைத்து வாழ்வன் கடகத்தில் குசன் ராகு கேது இருக்கினும் சனி முதலிய பாபிகள் நோக்கினும் கட்டடமின்றித்திரிவன் ராகுமுதலிய பாபிகள் சுபர்வீடாய் நான்கிலிருக்கில் தன்கிரகமிருக்கப் பிறர் கிருகவாசமாய் வாழ்வன் சுபர் நோக்கின பரவாசத்தினுல் பொருளுங்கூடும் பல கட்டடமும் வந்துநேரும் புதன் கடகத்தில் சனியோடு சனிமுதலிய பாபிகள் பார்க்கிலும் கிரகம்முதலிய இடங்கள் சத்துருக்களாலாவது கடனுலாவது கிரகத்தை யிழந்துவிடுவனென்றும் அரியப்படும் இவ்விதமே சுக்கிரனிருக்கிற இராசிக்கி நான்காமிடத்தையுங்கண்டு சொல்லவேண்டியது சனிமுதலிய பாபர்கள் சுக்கிரனுக்கு நான்கிலாவது கடகஇராசியிலாவது அல்லது அந்தகிரகங்களுடன் இருக்கிலும் சந்திரன் குசன நட்பு ஆகியாயிருக்கிலும் சாதகனுக்கு கூறை அல்லது சரக்கட்டடங்கள் பலிக்குமென்றும் கூறப்படும்.

வித்தியாபலன்கள்

சந்திரன் கடகம் விருஷபத்திலாவது கேந்திர திரிகோணத்திலாவது இருந்து சுபர்கள் சம்மந்தமாகி இருக்கின் சனிமுதலானோர் பாராதிருக்கினும்

புதனுக்கு நான்காதிபன் சுக்ஷேத்திர உச்ச நட்பாவது அல்லது கேந்திரத்திரி கோணத்தில் பெலக்குறைவில்லாமல் சுபசம்மந்தனுகி இருந்தால் மிகவும் வித்தையால் பிரபல கீர்த்திகளையுஞ் சீவன லாபத்தையும் அடைந்து யாரும்வெகு மானிக்கவும் அரசர்கள்முதல் வருந்தவும் மானியாகிவாழ்வன் மேற்படி ஸ்தானங்கிரகங்களிலையுடனே சூரியன் சந்திரன் குரு சனியெவர் ஜீற்கினும்பெல மான சுபபெலத்துடன் இருக்கில் இராசபாஷை யென்னும் வித்தையால் மிகவும் பிரபலயோகவானுகி வாழ்வன் இராசபூஜிதனுவான் இதில் குருமட்டும் மேல்பெலனுகவிருக்கில் வேதபாரங்கத சமஸ்கிருத வித்துவானுவான்.

புதனுகிக் கலந்தாலும் நோக்கினுலும் கணிதமானகணக்கும் தமிழ்வித்தையில் வல்லபனுவன்.

குசனுகில் தெலுங்கு வித்தையில் வல்லபனுவன் பண்டிதனுமாவன்.

சுக்கிரனுகில் காவ்யா நாடகாலங்காரமும் சோதிடாதி வித்தைகளையும் மாரூய்வன்.

சனியாகில் விவகாரவித்தையினுலும் மீமாம்சாதி வித்தையில் கீர்த்தியடைவன ராகுவாகில் பல சில்லரை மாந்திரீக வித்துவானுகியும் மதவேதமான வித்தை பாஷையையும் படிப்பன்.

கேதுவாகில் பலவிதவித்தைகளிலும் வல்லவனுகி விவாகம் புகன்றுவாழ்வன் மதபேத குலபேத வித்தையும் உண்டாகுமென்று அறியவேண்டியது.

கடகம் விருஷபத்தில் புதனுவது தசமத்திலாவது இருந்து சனி நோக்கினுலும் சனியைச்சாரினும் சந்திரனுக்கு நாலுக்குடையவன் புதன் சுக்கிரனுகித் துலாம் தனுசு மிதுனம் கடகத்திலிருந்தாலும் குருமுதலியோர் (கo, எ) இந்த வீட்டினின்றுலும் சாதகன் வியாபாரத்தினுல் மிகவும் கீர்த்திகளையும் சந்திரனதில் பெலத்துவாழில் இராசாங்க சம்மந்தம் கப்பல் சம்மந்தவியாபாரங்களைச்செய்து பிரபல கீர்த்திகளைச் சேர்ப்பன் என்றும் சனி ராகு புதன் முதலியர் மேலே கூறிய ஸ்தானங்களிலும் கிரகங்களுடனே கூடிஜீற்கிலும் நோக்கிலும் செய்தொழில் வியாபாரத்தில் சிலகாலந் தனலாபமானது கொடுத்துப்பின் நஷ்டமாகி விடுமென்றும் பாபிகளே பிலக்கில் வியாபாரஸ்தனுசாதியாகிலும் வியாபாரமுயற்சி கிடையாதென்றும் கூறப்படும் இதில் சூரியனுகில் கீழ்திசை வியாபாரத்தால் மிக லாபத்தையுஞ் சந்திரனுகில் வடமேற்றிசை வியாபாரத்தாலும் குசனுகில் தென்திக்கு வியாபாரத்தினுலும புதன் ஆகில் வடதிக்கின் வியாபாரத்தாலும் குருவாகில் வடகிழக்கு திக்கின் வியாபாரத்தாலும் சுக்கிரனுகில் தென்கிழக்கின் திக்கின் வியாபாரத்தாலும் ராகு கேதுவாகில் நீருதிக்கின் மூலிய லாபஸ்டங்களே கிரகங்களின் சுபாசுப பெலனுக்கு இசைந்தபடி அந்தந்த கிரகத்தின் பாவங்களைக் கூறப்படும்.

இவர்களுக்குறிய கிரவியாபாரத்தையும் முயற்சிகளையுங் கண்டறிந்து சொல்லவேண்டும்.

ஐந்தாவது புத்திர கெற்பபலன்

சூரியன் புதனுடன்கூடி (சு, அ) களிலிருக்கினும் சனி ராகு முதலியோர்கூடினும் சிம்மம் தனுசுகளில் இருந்தபோதிலும் சனி குசன் புதன் முதலியோர் கூடியும் குரு (சு, அ-ல்) பாபக்கிரக சம்பந்தனுகி புதன் சனியைகூடினாலும் பகைமுதலிய கேஷத்திரத்தில் பெலமற்று நீற்கினும் சுக்கிரனும் சனியும் மேற்கண்ட விதிப்படி மேஷம் கன்னி இவைகளில் புதசம்பந்த வீக்ஷண்யமாயினும் மூவறு சுபர்கள் பார்வையில்லாவிடில் புத்திரனுங்கிடையாது தெத்தெடுத்தாலும் மரணமாகி அந்தியகாலத்தில் புத்திரகருமமின்றி மிகுந்தபாதையையடைவன் சனி சூரியன் புதன்சேர்ந்து (டி, க) மிடங்களிலிருக்கில் பாபத்துவத்தோர் கூடினும் நோக்கினும் குருவுக்கு (டி) மிடத்தில் பாபிகளல்லது சனி புதன் வீடாகி பாபத்துவத்துடன் புதன் சனி இருக்கில் பிறந்தவனுக்கு புத்திரனே உற்பத்தி கிடையாதென்றும் இதில் குரு சுக்கிர சம்மந்தம் பார்வை சுபக்ஷேத்திரத்தில் பாபிகளிருக்கின் முதற்புத்திரத்திற்கு இன்றி மற்றயதுதிகை முதலாகிய தாரங்களுக்கு புத்திரபாவமுண்டாகுமென்றும் புதன் சனி அஸ்தங்கத் தோஷனுகி (டி, கூ, ல) விருக்கிறசாதகனுக்கு சுவீகார புத்திரனுண்டென்றும் அதில் குரு சந்திரனிருக்கினும் பார்க்கினும் சுவீகாரத்தின்பின் காலப்பிற்பாடாய் புத்திரன் மருதாரங்களுக்கு செனிப்பனென்றும் கேது முதலிய குசன்கூடியிருக்கில் தளஹித்ரனுவன் புத்திரனுகப் பலிப்பனென்றும் குரு அ-லும் சனி மேஷத்திலும் குசன் கடகத்திலாவது கும்பம் கன்னியிலாவது புதன் சூரியனைப் பாபிகளோக் கூடினிற்கின் பிறந்தசேய் புத்திரர்களுண்டாகி உண்டாகி அந்தியகாலத்திற்கு அபுத்திரனுகிப் பலிப்பனென்றும் குருவுக்கு (டி, க, ல) மிடங்களேயும் இவ்விதமே யனுசரித்துப் பார்க்கப் புத்திரவிர்த்தி அல்லது கூயங்களோக் கூறல்வேண்டும் சத்துரு கிரகங்களுடனுவது சத்துருவீடாயாவது புத்திரஸ்தானம் ஸ்தானுதிபதிவாழில் பிறந்தவன் புத்திரர்கள் குடும்பவிரோதிகளாய் மாதுரு பிதுருகளுக்கு அன்னமிடானுகி விரோதியாகிவாழ்வன் யென்றும் புதன் சனி முதலியோர்களும் குருவுக்கு மைந்தாமிடத்தாதிபதியும் சூரியனுமிருக்கிற இடத்தில் பகையோர்களும் ரோகஸ்தானுதிபதிகளுங்கூடி இருக்கினும் சந்திரன், சுக்கிரன் குசன் நோக்கினும் புத்திரர்கள் ரோகஸ்தர்களாகி வாழ்வார்களென்றும் கண்டு சொல்ல வேண்டியது

புத்திரபாப விஷயங்களே எண்மூலமான கணிதப்பிரகாரம் கணிக்கின்ற விதிகாண்க

புத்திரபாவம் உண்டில்லே யென்றவையறிந்தபின் சூரியனுடனேகூடிய கிரகயெண்களேயும் குருவுடனும் குரவுக்கு (டி)மிடத்தில் நின்றவர்கள் அல்லாவிடில் அந்த வீட்டிற்குடையவனுடன்கூடிய யெண்களே யொன்றுசேர்த்து ஐவகைப்பெலத்துக்குறியபடி யெண்களே வர்கித்து குருவுக்கும் சூரியனுக்கும் ஐந்தாமிடத்திற்பின கிரகயெண்களில் கொடுக்கவந்த மிச்சம் புத்திரசெனன

மும் அத்துலையை ராசியெண்ணிற் பெருக்கி அந்த இராக்காதிபதியின் பெலத் தக்கிசைந்த யெண்ணிற் கொடுக்கவந்த மிச்சம் தீர்க்கமான பிரசைகளென்றும் இதில் மூன்றும்பாவத்திற் கூறிய ஸ்திரீ புருஷயெண்களாகக் கொடுத்த மிச்சத்தை பெண் புருஷனென்றும் கண்டு உரைக்கவேண்டும்.

சிம்மத்தில் சந்திரன் முதலிய பொன்னேக்கமும் சூரியனுமிருக்கினும் குசனிருக்கினும் சுக்கிரன பாக்கிய கேந்திர திரிகோணத்திலிருக்கில் புத்திரர் கள் தனக்கதிகமான இராசயோகத்தை அடைவர்களென்றும் ஷை ஸ்தானங் களில் குரு புதனிருந்து சனி பார்க்கினும் இராகு கேது இருக்கினும் ஷை ஸ்தானுதிபதி கடகம் கும்பம் விருச்சிகமிவைகளி லிருந்தாலும் புத்திரன் மரணகாலத்தில் அன்யதிக்கில் வாழ்வனென்றும் பரதேச வாசனுவன் யென் றும் இதில் ஒருவருக்கொருவர் பகையாகி குருபெலன்கெட்டுமை சனி முதலி யோர் மகரம் கன்னி மேஷம் விருச்சிகம் இவ்வித ராசிகளில் லிற்கில் சாதகன் புத்திரன் மதபேதியாகிக் குடியனுகி அசத்காமஸ்தனுகித் தள்ளுண்டலாகி இராசாங்க முதலியதால் தெண்டனே விரோதம் சித்தபேதமாகி வாழ்வனென் றும் பலவகைக்குறைகளேயும் அடைவனென்றும் கூறப்படும் என்றவாறு.

கூ-ம் பாவம் சத்துருரோக பாவங்களும் இராசதெண்டனே ருணத்தைக்குரித்த பலன்கள்

புதனுடன் சூரியன் முதலிய சுக்கிரன் கூடிலுலுஞ் சனி ராகு முதலி யோர்கூடி கன்னி விருச்சிகங் கும்பத்திலிருக்கினும் கேது முதலியோர்கூடி குசன்மறைந்தும் கூஷீணசந்திரனுகி சந்திரனுக்கும் சூரியனுக்கும் (சு-ல்) குசன் குரு முதலியோரிருக்கினும் பெலன்கெட்டிருக்கில் சாதகன் ரோகியாகி யும் அல்லது கடனுளியாகியும் இராசதெண்டனேகளுக்கும் உள்படுவனென் றும்.

மேற்படி ஸ்தானம் நீக்கிய இடத்தில் புதன் சூரியன் குரு குசன் முதலி யோர்கள் விருஷபம் தனுசு கும்பத்திலிருக்கினும் கடனுளியாகிப் பகையோர் கூடைத்து தெண்டனுகி அபசெயமடைவனென்றும் அவமானங்கள் பெண் மூலியங்களால் னேருமென்றும் பலவகை துக்கசோகங்களேயும் கொடுக்கப் படுமென்றும் அப்படிக்கி ஒற்ற கன்னி கும்பத்தினுக்கதிபர் மேஷம் அல்லது சந்திரசூரியனுடன்கூடி பீடையல்லது விஷசமான ரோகசீரஸ்தனுகி இளைக் கப்படுமென்றும் ருணக்ரனுகியுஞ் சத்துரு விரோதஸ்தனுகியும் வாழ்வன.

சூரிய சந்திரர்களுக்கு (சு-க்) குடையவனுடனும் புதனுடனும் (சு, அ) களிலிருக்குங் கிரகங்களுடனும் அந்த வீட்டாதிபதிகளாகினும சென்மலக் கினம் அல்லது சந்திரனுடனே கூடியதில் சூரியனுகில் நயனரோகாதி மேக நீருபத்திரவமும் சந்திரனுகில் சுபஷயரோகமும் நீர் சம்மந்த வியாதியும் குச னுகில் ரெக்தவிரணமேக நீருபத்திரவத்தையும் புதனுகில் வாதனேயுபத்திரவ மும் குருவாகில் பாண்டுமுதலிய மேகசூல வியாதிகளாலும் சுக்ரனுகில் லிங்க

ரோகாதி போகவிஷயாதிகளாலுஞ் செலநோய்கள் உதரவாயுக்களாலும் சனியாகில் பித்தவாதனோய்களாலும் பலவகை மனோ வருத்தங்களாலும் ராகுவாகில் குட்டாதி பெருநோய்களாலும் பலவகை விரணகாசாதி ரெக்த உபத்திரவம் சதை சம்மந்த நோய்களாலும் கேதுவாகில் சித்தபிரமை வலிப்பு முதலிய உதரநோய்களாலும் வாதைப்படுவனென்றும் இவ்வித கிரங்களே குருனோக்கமிருக்கில் பலவகை நோய்களும் நிவர்த்தியாகி விடுமென்றும் கூறப்படும்.

சனி முதலிய ராகு முதலியோர் விருச்சிகம் கன்னிகளில் குரு புதன் சம்மந்த மிருப்பினும் நோக்கினும் இராசதெண்டனைகள் அடைவனென்றும் குருமுதலியோர் நோக்கில் மத்தியில் இராசதெண்டனையுண்டாகி உடன் நிவர்த்தியும் மேற்படி சுபக்கிரகம் பார்க்காமலும் கிரகங்கள் பெலமற்றுமிருக்கில் சாதகன் ஆயுள்வரை இராசதெண்டனை யடைவனென்றும் கேது குசன்கூடினாலும் பாபிகளாயிருந்து நோக்கினும் தெண்டனை கிடைக்குமுன் கூலியான மரணத்தடைவனென்றும் மானஸ்தானுகி வாழ்வனென்றும் கூறப்படும்.

கன்னி விருச்சிகத்தில் குருவாதல் சுக்கிரனுதல் சனியாதலிருந்தும் புதன் பாம்பு குசனிவர்கள் விருஷபம் தனுசு கும்பத்தில் மீனத்திலிருக்கின் பாபர் பார்க்கின் பிறந்த சாதகனுக்கு ரோணங்களா லவுமானத்தையும் இராசதெண்டனைகளையுமடைந்து பலவகை துக்க சோகங்களையுமடைந்து வரப்படுவனென்றும் பாபிகள் கூடவாவது பார்க்கவாவது நிற்கினும் பெலமற்ற விராசியிலிருக்கில் மத்திய காலத்திலேயே ரோணமுண்டாகி உடனுக்குடன் நீங்கி அந்தியகாலத்தில் ரோணமடையானென்று மறியவும் புதன் குசன் பெலனற்றும் அல்லது குருவுக்கு ஆரூமிடத்தாதிபதி பெலமற்றும் இருக்கில் ரோணமின்றி கடக்குமென்று மறியப்படும்.

ஏழாவது களத்திரபாவ விவாதபலன்களறியவும்

சுக்கிரன் மிதுன விருச்சிகம் கும்பம் மீனங்களிலிருந்து சூரியனைக்கூடினாலும் சனிமுதலிய பாபர் லாபத்திலாவது சுக்கிரனுக்கு யேழிலாவது குசன் புதனுடன்கூடி சுபர்கள் பார்வையின்றி இருக்கில் சாதகன் இரண்டு மனைவியை யடைவனென்றும் அந்த இடத்திலும் ஸ்தானுதியும் பகை நீசமல்லது விருஷபம் மீனம் விருச்சிகம் சிங்கத்திலிருக்கில் இரண்டிற்கதிகமான மனைவியை யடைவனென்றும் குருமுதலிய சுபகோள்கள் நோக்கின் ஓர் மனைவியிருக்க மற்றொரு மனைவியை விவாகஞ் செய்வனென்றும் விருச்சிகத்தில் சனி ராகுவும் தனுவில் குசன்முதலிய பாவர்களல்லது புதன் சுக்கிரனிருக்கிலும் சந்திரன் பாவருடன் கூடியதாவது க்ஷீண சந்திரனுலாவது விருச்சிகம் துலாம் கன்னியில் சுக்கிரனுக்கு கேந்திரத்திலாவது (5) லாவது (எ) லாவதிருக்கின் மனைவி வேறொரு புருஷனை யடைந்து மகவைப்பெற்று சுகத்துடன் வாழ்வனென்றும் இந்தயிடத்தில் குசன் கேது பாவக்ஷேத்திரமடைந்து சுக்கிரனுடனே அல்லது சுக்கிரனுக்கு யேழு மூன்றில் (அ-ல்) இருந்து பகைநீசக்ஷேத்

திரமான பாபபெலத்தைப் பெற்று வாழில் மனைவி பரபுருஷசங்கமத்தில் தன் கணவனை நீங்குவளல்லது கணவனைக் கொல்வளென்றும் சுக்கிர லக்கினத்தி னும் யேழாமிடத்திலிருக்கில் மனைவி ஒருவள் சற்குணியாகியும் புதன் முத லியோரிருக்கில் பரநாரியென்றும் சனிமுதலியோராகினும் சுபக்ஷேத்திரமடை ந்து சுபர்வீட்டினிற்கினும் சுபர்கள் நோக்கினும் மனைவி நற்குணியாகி இரு தாரத்துடன் வாழ்வனென்றும் சுக்கிரன் வீடாகிய விருஷபம் துலாத்திலாவது சுக்கிரனுக்கு யேழிலாவது சந்திரன் சனி யிருக்கிலும் குரு நோக்கிலும் இரண்டு தாரஸ்தனுகியும் சனி யொருவன் பாபியுடன் குசன் பார்க்க நிற்கில் பலமாதரும் தீர்க்கமடையாரென்றும் புதன் ராகு சூரியன் துலாம் விருஷ பம் கும்பத்தினிற்கினும் அவ்விடம் பெலக்குறையான வீடாயிருக்கில் விவாக மில்லாதவனென்றும் சந்திரன் குரு நோக்கினும் சூரியநோக்கினுங் கால தாமத மேல் விவாகமுண்டாகுமென்றுங் கூறப்படுமென்றவாறு.

சுக்கிரனுடன் கூடிய கிரகத்தின பெலனுக்கேற்றபடி கிரகயெண்களை யும் சுக்ரனுக்கு (எ-ம்) வீட்டிலிருந்த கிரகயெண்களையும் துலாத்திலின்றகிர கயெண்களையும் ஒன்றுசேர்த்து சுக்கிரன் நின்ற ராசியெலமறிந்து ராசி யெண் ணிற் கொடுத்துக்கண்ட எத்தனையோ வத்தனை மனையாளென்றும் அவ்விடத் துக் கொடுத்த ஈவு இல்லாவிடில் ஈவுத்துகையை (உ-ல்) வகுத்துவந்த மிச்சம் எவ்வளவோ வத்தனை மனையாளென்றுங் கூறப்படுமென்றவாறு.

இவ்விதங் கண்டறிந்தபின் சுக்கிரனுக்கு (எ) லும் துலாத்திலுமிருந்தபெ லத்துக்கிசைந்த கோள்களின் யெண்களை ஒன்றுபடுத்தி அவ்விராசி யெண் ணுலும் பின் துலாத்தின் யெண்ணுலும் பெருக்கிக் கண்டதுகையை (ச-ல்) கொடுக்க வந்த மிச்சத்தில் பாவியம எவ்வனம் கௌமாரம் வாற்தீகன்ற காலங் களாக அச்சாதகனுக்கு யேற்பட்ட வயதை ஐந்து பாகஞ் செய்துக்கொண்டும் ஒன்று மிச்சமானுல் பாலியத்திலும் (உ) மிச்சமானுல் எவ்வனத்திலும் (கூ) மிச்சமானுல் கௌமாரவயதிலும் (ச) மிச்சமானுல் வார்தீக வயதிலென்றுங் கண்டு கூறல்வேண்டும்.

இவ்விதமறிந்தபின் மேலேபெருக்கிய துகையை (கஉ) கழித்த மிச்சம் எத்தனையோ அத்தினுவது ராசியில் குருவரும் வருஷமென்றும் வந்தஈவை (கூ-ல்) பெருக்கி (கஉ-ல்) கழித்து வந்தமிச்சம் மாதமென்றும் வந்தஈவை (உசஉ-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த மிச்சம் தினமென்றும் (உஅ-ல்) கழித்த மிச்சம் அல்லது (எ-ல்) கழித்த மிச்சம் வாரமென்றும் இவ்விதியாக விவாக காலங்களை அறியவேண்டியது

சுக்கிரனுக்கு (உ, எ) மிடத்திலாவது ஸ்தானுதிபதியுடனுவது கூடி யிருக்குங் கிரகங்களின் யெண்களையும் விருஷபத்தினின்ற கிரகங்களின் யெண்களையும் சேர்த்து ஒன்றுக்கி (கூ-ல்) கழித்தசேஷம் எத்தனையோ அத்த னுவது திசைபுக்திகாலம் களத்திர மாரகமென்றும் இவைகளையெல்லாம் சவ்யாப சவ்யமூலமாக (க) லக்கம் (ச) ஆகியும் நாலானலக்கம் ஒன்றுகியும்

56 மேஷலக்னத்தின் 9-வது பிதுர்பாக்கியாதிபலன்கள்

ஒன்ரூன லக்கத்தை ஒன்பதின்பலனுகியும் ஒன்பதான லக்கத்தை ஒன்று முதலாயும் பார்த்தல்வேண்டும்.

இவ்விலக்கங்கள் முதலாகிய கணக்குகளையெல்லாம் பெலாபெலத்தின் மீது யூகித்து வாளின்மேல் நடப்பவர்கள்போல உஷாராக பார்த்துரைத்தல் வேண்டும்.

சுக்கிரன் கன்னி விருச்சிகத்திலும் குருமுதலாகிய சனியுடன்கூடி பாப சம்மந்தமும் குசன் முதலானேர் கன்னி கும்பத்தில் மீனத்திலிருக்க சாதகன் தோரூவழக்கு விவாதமும் செய்வதினுல் அபசெயமடைவானேன் ஒழிய செயமடையான் பல தேசாடனம் அலேச்சல் அகால போசனஸ்தரும் வியாதிக்காரனுகி வாழ்வன்

கடகம் சிம்மம் தனுசு மீனத்தில் குரு சுக்கிரன் மதி இவரில் எவர் ஜின்ரூலும் புதன் கன்னி மீனம் கும்பத்தினின்ரூலும் சனி மிதுனம் விருச்சிகம் கன்னியிலடையினும் யெந்தவழக்கு விவாதமும் செயஞ்செய்து உலகத்தில் கீர்த்தியுடன் விவாதசமர்த்தனென்றும் கல்ல விவகாரியென்றும் கண்டுரைத்தல் வேண்டும்.

பிதுர்பாக்கியத்தையும் உபதேசாதி ஞானவிசேஷ அஷ்டமாசித்திகளின் விதிகளையுணர்த்துகின்றன

குருவும் சூரியனும் பெலத்துடன் சிம்மம் தனுசு மீனம் கடகமிவைகளிலிருக்கினும் சுபக்கோள்கள் ஜிற்கினும் கோக்கினும் சந்திரனுக்குஞ் சூரியனுக்கு ஒன்பசாமிடத்தாதிபதி சுபக்ஷேத்திரம் அல்லது ஐவகைப்பெலன்களில் விசேஷபெலன்பெற்று கேந்திரத் திரிகோணத்திலிருக்கில் சாதகன் பிதுர்பாக்கிய மிகுந்த யேராளமும் பிரபல பிதாவென்றும் வம்சவிர்த்தியாகியும் இராசசமான பூஜிதர்களாகி இராசபிறபுக்களின் சேவனமுடையோராய்க் கீர்த்தி பெற்ரோராகி வாழ்வர்களென்றும் பிதுர் ஆயுள் தீர்க்கமும் மிகவும் மேன்மையான பிதராகியும் வாழப்படு மென்றும் பிதர்வம்ச விர்த்தியாகியு மிருந்து வரும் மேற்கூறிய குரு அல்லது சுக்கிரன் சூரியசந்திரர்களுக்கு கேந்திரத் திரிகோணத்தில் உச்சசொஷேத்திரத்தில் தனக்குரிய சுபசம்மந்தத்துடனே கூடி இருக்கில் சாதகன் பிதா பூபதியாகி வாழ்வனென்றும் அறியப்படும்.

கன்னி விருச்சிகம் மிதுன மிவைகளில் குருவும் சூரியனுக்கு ஒன்பதாமிடத்திலும் பாபிகள் பகைபெற்று சந்திரன் அல்லது புதன்கூடி இருக்கினும் சனி ராகு கேது முதலியபாபிகள் சேரவாவதல்லது சிம்மம் தனுசு மிதுனத்திலாவது சூரியனுடனே அல்லது சூரியனுக்கு (கூல்) இருக்கில் பிதாதுஷ்டனுகியும் அக்குருத்தியனுகியும் ரோகியாகியும் கடனுளியாகியும் பூர்வார்ச்சிதங்களைத் தோற்றுவிடுவனென்றும் பலவகைக் கஷ்டத்தை யடைவனென்றும் பிதுருவம்ச கூயமாகியும்விடும்.

இதில் சுக்கிரன் புதன் ராகு முதலியபாபிகள் சேரினும் நோக்கினும் பிறந்த சாதகன் பிதா (உ) முதலியபின்தாரஸ்த னென்றும் அவ்வித தாரங் களாலும் குடும்ப கூயத்தையும் பின் விர்த்தியை யடைவனென்றுங் கூறப் படும் (உ) முதலிய என்றது யென்னவபிப்பிராய மென்றால் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தாரமென்றகூட வருவித்துக்கொள்ளல் வேண்டும்.

மேற்கூறிய சிம்மம் தனுசு மிதுனத்தையும் இவ்வதிபர்களையும் சூரியன் சூரியனுக்கு (கூ) மிடத்தில் உற்றவர்கள் சூரியனுக்கு (கூ) மிடத்தாதிபதி இவர்களைகொண்டும் பிதர்பலன் பிதர்வம்சபலன்களைக் கூறல்வேண்டும்.

மேற்கூரிய ஸ்தானாதிபதியும் ஸ்தானத்திலும் பகை பெற்றவர்களாகியும் பெலமற்றும் சூரியன் தனுமீனத்திலிருக்கினும் அல்லது விருச்சிகத்தினின்றவ ருடனே சனிமுதலிய ராகு கேது புதனிவர்களும் குரு விருச்சிகம் கன்னியி லிருக்கினும் பிரபல பாபிகள் உடன் அல்லது நோக்கத்துடன் இருக்கிலும் (அ) மிடம் விருச்சிகம் மகரத்திலும் சூரியனுக்கு ரெண்டுபக்கங்களிலும் பாபர் சூழ்ந்து பகைபெற்றும் பலவகை அபெலமார்க்கத்துடன் இருக்கில் பிதா கெற் பாதிமுதல் பாலியத்திலேயே மரணமாவான் யென்றும்.

குசன் கேது முதலியோர் சூரியனுடன் சூரியனுக்கு (கூ-ல்) அல்லது தனுசு சிம்மம் கன்னி துலாமிவைகளில் ராகு சனியுடன் கூடியிருக்கில் புதன் சந்திரன் க்ஷீணனுக இருந்தாலும் பார்த்தாலும் பிதா யௌவனவயதில் மரண மாவனென்றும்.

புதன் சனி சந்திரன் இவர்கள்கூடி ஈட்புபெற்ற ராசியில் பகைமுதலிய அசுபபெலன் பெற்றிருக்கில் பிதா கௌமாரவயதில் மரணமாவனென்றும்.

சூரியன் கேது சனியுடன் மதிமுதலியோர்கூடி குரு வீக்ஷணசம்பந்தம் சுபசம்பந்தத்துடன் நீற்கஸ்தான சுபக்ஷேத்திரத்தில்வாழில் பிதா வார்த்தீக வயதில் மாரகமென்றும்.

டை கிரகங்கள் சிம்மம் மகரத்திலும் கன்னி விருச்சிகத்தில் சனி ராகு முதலியபாபியும் குருபெலன்கெட்டு விருச்சிகம் கும்பம் கன்னியிலிருக்கினும் பாபர்களின் சம்மந்தம் பகை நீசம் பெற்றிருக்கினும் சாதகன் இறந்தபின் பிதர் மரணதிசையை யடைவனென்றுங் கூறப்படும்

சூரியனுடனும் குருவுடனும் சூரியனுக்கு ஒன்பதாமிடம் தனுசு இவ்வதி பர்களுடன் கூடிய கிரகயெண்களைப் பெலாபெலத்தின்மேல் பங்குப்படி யெண்ணித்துகையைக்கூட்டி ஒன்றுபடுத்தி சூரியனுக்கு எட்டிலும் அவ்வதிப னுடனும் கடகம் சந்திரன் இவர்களுடனும் ஸ்தானத்திலு மிருக்கிரயெண்களை பெலவீதப்படி எடுத்து ஒன்றுபடுத்திப் பெருக்கிக்கொண்டு மேலே பெருக்கி வைத்த துகையையும் கீழே கண்டதுகையையும் பெருக்கி (கூ-ல்) கழித்த சேடம் எத்தனுவது கணக்கோ அதை சாதகம் சவ்யாப சவ்ய மறிந்து சவ்ய மானுல் வந்தமிச்சத்தை சாதகன் சென்னமான திசைமுதல் அத்தனுவது

திசை புக்தியில் பிதுரு கருமமென்றும் அபசவ்யமானுல் (க) திசையில் மேல் மிச்சம் வந்த கணக்குள்ள திசைபோக பாக்கி எத்தனையோ அந்தத் திசையின் புக்திகாலத்தில் பிதுருகர்ம திசையைக் கூறல்வேண்டும்.

மேற்கூறிய சூரியனுக்கு (க க) களிலும் கிம்மம் தனுசுவிலும் பாபபலத்துடன் நீசம் பெற்றோர் சனி ராகு கேது இவர்களிருக்கில் பிதா அங்கஹீன னல்லது குனஹீனனுகி வாழ்வனென்றும்.

அந்த ஸ்தானுதிபதிகள் பகை நீசம்பெற்று பாபகிரகத்தில் சனி இராகு குசசம்மந்தம் பெற்றிருக்கில் பிதா நீசகுலத்தனல்லது மசபேதியாகுவனென் றும் கூறப்படும்.

அஷ்டமாசித்தி முதலாகிய தத்துவ ஞானங்களையுங் கூறப்படுகிறது

குரு புதன் ஒன்பது ஐந்திலாவது சந்திரசமாகமம் பெற்றாலும் சுக்ஷேத் திர உச்சமாகி பாபர் சம்மந்தமின்றி சூரியனிருக்கினும் குருவுக்கு (க.ஙி, க ல்) சுபகிரகஸ்தானமாகி சுபர்கள் நின்றும் அந்தஸ்தானுதிபதி குருபுதன் ரவி யுடன் கூடி கேந்திரதிரிகோணத்தில் பகை நீசம் நீங்கியவிடமாயிருக்கில் சாத கன் தத்வஞானியாகி சுவாதிஷ்டான வனுபூதிமார்க்கமரிந்து நறை நிறை மூப்பின்றி ஈசதுல்யனுகி உலகத்தின்கண் யாவரும்படியவும் மேலோனுகி வாழப்படும்

இவ்வித மிருக்குங் கிரகத்துடன் குரு பெலவானுகி சந்திர பெலனுடனும் சுக்கிரனுங் கூடினாலும் பார்த்தாலும் அல்லது மகரம் மீனம் துலாத்திலும் அதற்கு (உ, ஙி, க) களில் சனி அல்லது குசன் பெலத்துடனிருக்கில் ராச சன்னியாசியாகி அனேகர்களுக்கு குருவாகி யோகபோக்கிய வனுபவத்துடன் யாவரும் புகழ வாழ்வன் இதில் சொல்லாதொழிந்த இடத்தில் சனி ராகு கீற்கில் அவ்விதகுலத்திற் பிறந்தும் இழிவனுகி அவமானங்களையும் பொருந்தி வாழ்வன் அதில் புதன் கேது கூடியிருக்கில் அல்பசன்னியாசியாகி விவகரித் தத்திரிவன் தனக்கு ஒன்றுமறியான் சந்திரன் கூஷீணனுகி சனி பாம்பு முத லிய பாவருடன்கூடி மேலேகண்ட ஸ்தானத்தில பகைமுதலிய வகைபெற் றிருக்கினும் நோக்கினும் மேலுக்கு வீரதத்துடையனுகி அந்தர்யாமி அகிர்த் தியவானுகி ஞானவானென்றபெயர் ஒன்றுமிழிய வேறில்லாதானுவன் கபடன் சூதனுவன்.

முதற்பாகத்திற் கூறியபடி ஸ்தானத்திலும் கிரகங்களுடனும் சூரியன் சனி புதன் இருந்தாலும் பார்த்தாலும் யோகாதி அப்பியாசம் ஞானமானது இகசென்மத்தில் முடிவுபெறுனுகி வாழ்வனென்றும். வேறு பாபசம்மந்தமின்றி சுபவீக்ஷணியத்துடன் இருக்கின் மகான்களின் தெரிசனைகண்டு சொர்ணஞ் செய்யும் சக்திகளையும் தேக நறை மூப்பு பிணி சாக்காட்டை செயித்து ஈக

வர துல்லியத்துவம் இந்த சென்மத்திலேயே கிடைக்கப்படுமென்று அறிய வேண்டியது. இவ்விதமிருந்து பாபிகள் நோக்கில் கிரியையொன்றுமின்றி சனைக்களின் வசியமும் தேவானுக்கிரகஸ்தனுகியும் வாழ்ந்து மடாலயக்களே வீர்த்திசெய்து மிகுந்த கீர்த்தியுடன் குடும்ப மில்லரத்தைதுறந்து வாழ்வ னென்றும்; இதில் குசன்மாத்திரம் கூடியிருக்கில் யாவரும் புகழத்தக்க சால தொழிலுடன் சன்னியாசியாகியும் சித்தனுகியும் உலகத்திற் றிரிவனென்றும் குசனுடன் மற்றொரு பாவரிருவர் நோக்கமாவது சேரவாவது இருக்கில் தற்மாலயமுடிவின்றிசெய்தும் சர்மமூலிய பொருளையும் கைக்கொண்டு ஞான வேஷிதனுகி டாம்பீசனுகி வாழ்வன் என்றும் கிரியாபதமிருப்பது யென்பது யாவும் பிசகனுகி வாழ்வன்.

மேற்கூறிய கிரகங்களிருந்தபடி பெலாபெலத்தின்மேல் யெண்களைக் கூட்டி ராசியெண்ணிற் பெருக்கி வந்ததுகையை ஒன்பதில்கழித்த மிச்சம் எத்தனையோ அதை முன்கூறிய சவ்யாபசவ்யம்போலரிந்து அந்தத் திசாபுக்தி யில் ஞானமுற்றுதலுண்டாகி லோகவாச்சார்ய லோகமித்தியா புருஷனுகி பிர பஞ்ச உண்மையறிந்து அடியானுகி நற்கதியடைவனென்றும் கூறப்படும்.

அவ்வித ஸ்தானங்களிற்சேர்ந்த கிரக தேவதைப்படிக்கி உபதேசம்பெற்று வாழ்வனென்றும் கூறப்படுமென் றறியவேண்டியது.

பத்தாவது கருமபலனும் ராச்சியபலனும் கூறுவோமாக

மகரத்தில் குசன் சந்திரனும் குசனுக்கு தசமத்திலும் ஆதிபதியும் உச்ச சொக்ஷேத்திரமாகிச் சனியுமுச்சமல்லது நட்பு ஆகி கேந்திரத்தில் கேந்தி ரத் திரிகோணத்திலும் சூரியன் வலுப்பெற்று மிருக்கில் மண்டலாதிபதியாகி வாழ்வனென்றும் இக்கிரகங்களில் மேற்கூறிய இடத்தோர் யாவரும் பெலத்து குசன் சந்திர சம்மந்தமிருக்கில் தேசாதிபன்என்றும்.

குரு சம்மந்தமாகிப் பெலனுடன் மேற்கண்டவர்களுடன் மேற்கண்ட இடத்திலிருக்கில் சிலகண்டங்களுக்கு வதிபனுகியும் சுக்கிரன் சந்திரன் சனி முதலியோர் ஷை கிரகமிடங்களிற் பெலத்துடனிருக்கில் கண்டத்துக்குள் சிற்றரசனுகி மற்றொருவரசனுக் குள்பட்டவனுகியும் இராகு புதன் முதலிய சனி கேந்திரகோணத்தில் நட்பு பெற்று மேலேகூறிய இடங்களிலிருக்கில் சிலபூமிக்கதிபனுகி சிலகிராமாதிபனுகியும் சூரியன் கேது சுக்கிரனுடன்கூடி கேந்திரகோண முன் இடத்ததிபருடன் இருக்கில் குடித்தனப் பாங்கில் மன்னரைப்போலொற்ற வாழ்வை யுடையவனுகி அல்பமான சில பூமியைப் படைத்து வாழ்வன் யென்றும் சுக்கம் மகரம் இவைகளில் நீசம் பகைபெற் றோரும் குசன் குருவுடன் சனி ராகு சூரியன் முதலியோர் (சு, அ) விருச்சி கம் கன்னி மேஷத்திலிருக்கில் இவன் பூமி முதலானசொத்துகள் கடனுக்கு கொடுத்தே கெடுவனென்றும் சனி குசன் கேதுகூடி ஸ்தானுகிபதி பெலமற் றிருக்கின் பூமியில்லாதவனுயும் தரித்திரனுகியும் வாழ்வனென்றும் அவ்விராசி

களில் பகை பெற்றோரும் சிலசுபரு மிருக்கில் பூமி முதலிய ஸ்திகியிருந்தும் கிடையாமல் சிலகாலம்வருந்தி இளைத்துத் திரிந்து விவாதத்தின்மேல் கிடைத்தலும் இவ்விதம் குசன்னின்ற ராசிக்கி (ச, ல) மிடத்தின் பெலனையும் அதிபதியின் பெலத்தையுங் கண்டு கூறல்வேண்டும்.

கருமபாவபலன்கள்

குருவுக்கு பத்தாமிடத்துக் குடையவனும் பத்திலும் மகரத்திலுஞ் சனியுடனும் சுபர்வீட்டில் சுபர்களுடன் கூடி லீற்கையில் குரு சுக்கிரன சூரியன் பூரணச்சந்திரன் கூடி இருந்தாலும் பார்த்தாலும் சத்கருமமே செய்வனென்று மிகுந்த பக்திகளும் ஞானங்களும் விசேஷ கீர்த்தியுமடைவன்.

அவர்கள் சுபர்களாயிருந்தும் பகை நீச இடங்களில் கன்னி விருச்சிக மிதுனத்தில் அசுபபாப பெலசம்மந்தராகி ராகு சனியைக்கூடி அசத்கருமனுகி கொடூரியாய் குலைகளவுகள் காமவானுகியு மிகவும் துராக்ரமஸ்தனுகியும் சண்டாளத்வங்களைப் புரிந்து மிகவும் கேடனுகித்திரிவனென்றும் குலஹீனனுவனென்றும் இதில் சனிநீசம் பகை பெற்றச் சூரியசந்திரர்களுக்கு பத்தில் எழிலிருக்கினுங்கூட இருக்கினும் மாதரு பிதுரு நகுநமங்கள் கூடசெய்ய இடமின்றி மிகவுங்கஷ்டங்களை யடைந்து கருமபாத்தியதைக்கு உதவானுகியும் இருந்து மில்லாதவனுகி பரதேச வாசனுகவாவது பவிப்பன் என்றறிய வேண்டியது.

பதினேராவது லாப பாவங் கூறப்படுகிறது

சனிகேந்திர திரிகோணத்தில் குருபெலத்துடன் இருந்தாலும் கும்பத்திலாவது துலாம் சிம்மம் தனுசுவிலாவது விருஷபத்திலாவது மேலேகூறிய கிரகங்கள் னின்றாலும் பெலன் பெற்றிருக்கினும் மீனத்தில் சனி முதலான பாபிகள் இருந்துவரில் லாபமதிகமுள்ளவன் யென்றும் மூத்த சகோதர விர்த்தியுமுண்டாகும்.

அதில் சூரியன் பாம்பு குசன் இவர்களிருக்கினும் புதன்கூடி இருக்கினும் முன் சகோதரமிலான் குரு இருந்தாலும் பார்த்தாலும் முன் புருஷ சந்ததியும் சந்திரன் சுக்கிரன் இவர்களிருக்கவாவது நோக்கமாவதிருக்கில் பெண்சந்ததி முன்னென்றும் இல்லாவிடில் அந்த இடம் பெண் அல்லது ஆண் ராசியறிந்து முன் ஆண் பெண் குறிக்கப்படுமென்றும் அறியவேண்டியது.

பனிரெண்டாவது விரயம் பரதேசம் உத்தியோக விஷயங்களைப்பற்றி கூறப்படும்

குரு சொக்ஷேத்திரத்தில் சுக்கிரன் கேந்திரத் திரிகோணமான துலாம் விருஷபம் மகர சுக்கிரனுகியும் சனி துலாம கடகம் விருஷபம் இவைகளிலிருக்கில் பரதேசத்தில் உத்தியோகத்துடன மிகவும் பிரபலமாகி ஜீவனுதி

உத்தியோகபலன்கள்

பத்தியமும் இராஜமூலிய வித்தையால் பிரபலவானுகியும் வாழ்வன் மேற் கூறிய சனிக்கி (அ) மிடத்தையும் (கூ) மிடத்தையும் இவ்விதமே கண்டு கூறல்வேண்டும். இந்தஸ்தானத்திலும் ஸ்தானுதிபர்கள் பகை நீசம் பெற்று பெலமற்ற இடத்திலிருக்கில் சீவனம் இராசாங்க உத்தியோகக் குறைவும் அதில் குருபெறக்கில் சிலநாளிருந்து தப்பித்தநினுல் தள்ளுண்டும் குரு சுக் கிரன் இருக்கில் சீவனவிஷய முயற்சியால் தண்டனைப்படுவன் சனி புதன் கூடி இருக்கில் விரோதவரசனுல் தானுகவே ஜீவனத்தை இழந்தும் கேது குசன் நிற்கில் சீவனத்தாலும் முயற்சியாலும் வரும் அவுமானத்தால் மரண மும் ராகு சூரியன் இருக்கில் பரதேசத்தொளிந்தும் இவ்விதமாய்ப் பலவா ரான கஷ்ட நஷ்டத்தை சீவனமூலியங் கொடுக்கப்படப் படுமென்றும் அவ் விதகிரகம் ஸ்தானமிவைகளுக்கு ஐந்தாமிடம் ஐந்தாமிடத்ததிபதியுடன் கூடிய கிரகங்களின் யெண்களே ஒன்றுசேர்த்து அந்த ராசி பெலயெண்ணிற் கொடுத்த பொன் முதல் சீவனலாபம் மாதமொன்றிற் கிடைக்கப்படுமென் றும் முன்கிரகம் ஸ்தானங்கள் பின்கூறிய ஐந்தாமிடம் கிரகம் இவைகளின் யெண்கள் யாவையுங்கூட்டி ராசிமொத்தம் பெலாபெலத்தை இரண்டுதபா சமத்துகையுடன் பெருக்கிக்கண்ட துகையில் கொடுத்துவந்த மிச்சமான பொன்கணக்குள்ள தொகை சீவனம் விடும்போது இருக்கும் யென்றுங் கண்டறியவேண்டியது,

பொன்னென்பது அவரவர்கள் சென்னித்தசேசத்துப்பணம் பத்துக்கொண் டது ஒரு பொன்னுனபடியால் இவ்விதங்கணக்குச்செய்து தற்கால வரசாகூதி க்கு இசைந்தபடி பார்த்துக்கொள்ள வேண்டியது.

விருஷப லக்னத்தின் பாவம்

விருஷப லக்னத்தில் பிறந்தவர்களுக்கு குருவும் சந்திரனும் பாவபலன் களையுங் கெடுதல்களையும் கொடுக்கப்படுவர் குசன்மாரக மென்றுங் கேது மாரகனுகவும் சுக்கிரன் சமபெலத்தைக் கொடுப்பவனென்றும் சனி புதன் சூரியன் ராகு யோக காரகர்கள்யென்றும் குசன் கொல்லான் யென்பது, கடகம் சிம்மம் கும்பம் மீனம் நீங்கிய விடத்தில் யென்றும் கடக சிம்ம கும் பம் மீனத்திலிருக்கில் மாரகங் கொடுப்ப மென்றும், குருவும் மிதுன தலா பம் மீனத்திலிருக்கில் மாரகங் கொடுப்ப மென்றும், சந்திரன் ராகு மாரகருகினும் மேஷ விருச்சித்திலிருக்கில் மாரக மென்றும் சந்திரன் ராகு விருக்கில்மாரகங் கொடுக்கப் தனுசு சிங்கம் மகரம் கன்னியில் சந்திரன் ராகு விருக்கில்மாரகங் கொடுக்கப் பட மாட்டார்களென்றும் மற்ற ராசியிலிருக்கில் மாரகத்தை புதனுங் கொடுப்ப மென்றும், இந்ததிசையில் புதன் குரு ராகு சந்திரன் இவ்வித புத்திகளில் மாரகமென்றும் கூறப்படும்.

சனி ராகு புதன் கேந்திர திரிகோணத்தில் நீசம் பகை இடம் நீங்கிய விடத்தில் இருக்கினும் சுக்கிரன் சூரியன் குசன் கேது இவர்களேவிட சனி ராகு அதியோகக் காரகர்கள் புதன் யோககாரனுகிலும் நிரந்தரசமயோக

மழிப்பான், குசன் கேது சுக்கிரன் சுபர்களென்றும் அறியப்படும் இத்திசா பாவங்களின் கணித திசாபுத்திகளைக் கீழே வறியவும்.

சாதகன் சுகாசுகம்

புதன் திசை சனி ராகு சுக்கிரன் சூரியன் இவ்வித புத்திகளிலும் சனி திசை சந்திரன் கேது ராகு சுக்கிரன் புதன் இவ்வித புத்திகளிலும் குசன் திசை சனி கேது சூரியனிலும் சுக்கிரதிசையில் சனி புதன் சூரியனிலும் கேதுதிசை சனி சூரியன் குசனிலும் சூரியதிசை குரு புதன் மதி குசன் ராகுவிலும் கிரக வாகன கேஷத்திரமும் பூமி லாபமும் இராசாங்க வனுகூல மும் சன்மான வெகுமானமும் வெள்ளி வெண்கலாதி லாபமும் சுபகல்யாண செயமும் சத்துரு ஜெயம் அனேகவித யோக பிறபல கீர்த்திகளையும், யெத் தன காரியசித்திகளையும் களத்திர புத்திரலாபமும் உண்டாகும்.

சாதகன் பீடை ரோகங் கெடுதல் திசாபுக்திகள்

சந்திரன் ராகு குரு இவ்வித திசையில், தனதுகுரு ராகு குசன் கேது சூரியன் இவ்வித புக்தி அந்திரங்களில் குடும்பதுக்கம் பொருள்சேதம் விவா தம் தனநஷ்டம் அவுமானம் ராசதெண்டனைகள் கடன் முயற்சிக்கிறைவுகளும் ஸ்தானபேதம் புத்திபேதம் கவலைகள் சீவனநஷ்டம் காரகிரக பெந்தனம பலவகையுள்ள சேதங்களையும் கொடுக்கப்படுமென் றறியவேண்டியது.

மாதுருவரிஷ்டம்

சந்திரன் திசை சனி சுக்கிரன் ராகுவிலும் சூரியதிசை சுக்கிரன் குரு ராகுவிலும் ராகு கேது திசை புதன் சுனி சுக்கிரன் மதியிலும் குசன் திசை தனது குரு சுக்கிரனிலும் மாதுரு துக்கத்தையும் மாதுரு அரிஷ்டத்தையும் மாதுரு வம்ச கூயத்தையும் மாதுரு தேகாறிஷ்டங்களை விரோதத்தைக் கொடு க்குமென்றும் அறியப்படும்.

பிதுருவரிஷ்டம்

சூரியதிசையில் சனி குரு புதனிலும் ராகுதிசை தனது சுக்கிரன் சனி யிலும் சனிதிசை குரு புதன் சுக்கிரனிலும் புதன்திசை சனி கதிர் குரு விலும் சந்திரன் திசை தனது ராகு சனிபுகரிலும் பிதுருவரிஷ்டமும் மரண துக்கங்களையும் பிதுருவம்ச மரணங்களையும் பிதுராற்சித நஷ்டத்தையும் விரோத விவாதபலன்களைக் கொடுக்கப்படு மென்றறியவேண்டும்.

சகோதிரவரிஷ்டம்

குசன் சந்திரன் திசையில் சுக்கிரன் சனி ராகு புக்திகளிலும் குரு திசை சனி ராகு புதனிலும் புதன் கேதுதிசையில் குசன் சனி புதன் இந்த புக்திகளிலும் அரிஷ்டமாகும்.

களத்திரலாபம்

சனி மதி சூரியன் புதன் சுக்கிரன் இவ்வித ராகுவின் நிசைகளிலும் சுக்கிரன் மதி குரு புதன் சனி புக்திகளிலும் விவாகம் சந்திரன் குரு கேது ராகு சுக்கிரன் நிசையிலும் சனி புகர் குசன் ராகு குரு புக்திகளிலும் களத் திரகெண்டம் தோஷங் கொடுக்கப்படும்.

புத்திரலாப வரிஷ்டங்களின் நிசைபுக்திகள்

புதன் குரு மதி குசன் இத்திசையிலும் கேது சூரியன் நிசைகளிலும் ராகு குரு புகர் குசன்கேது இந்த புக்திகாலங்களில் புத்திர தோஷமும் அரிஷ்டமும் உண்டு புத்திரபாகம் உண்டாகவு மாட்டாவாம் சூரியன்சுக்கிரன் சனி புதன்நிசை ராகுநிசையில் குருசந்திரன் சுக்கிரன் சனி புதன் புக்தி காலங்களில் புத்திரலாபமும் குடும்ப விர்த்தி சேஷமமு முண்டாகும்.

ரிஷபத்தில் செனித்தவன் செய்வபக்தி பூசையுள்ள சொற்ப போசனன் தூலசரீரம் அடிமையாள் சேவகர் உள்ளவன் புளிருஸிப்பிரியன் கணித நூலரி வன் வஸ்திரூபரணமுடையன் பிரர்பொருளை யாற்சிக்க வல்லவன் இருமலல் லது கபபீடை யுடையவன் அண்ரோகி வாக்குணையவானுவன்.

(நி-வது) வருஷமாதத்தில் நெறப்பு சமானகண்டம் (கசு-ல்) விரண ரோகன் (ககு) வருஷத்தில் மாசத்தில் இருமல் முதலிய கபநோய் (உ, உள-ல்) சுரம் (சம-லும்) சுராதி பாதைகளாலும் சுபக்கிரகங்கள் இலக்கினத் தைப் பார்க்கின் வயது (எஎ) தீர்க்கமானதென்றும் மார்சழிமாதம் பூரண வியாழக்கிழமை உரோகிணிநாள் இராத்திரி (சம) நாழிகையளவில் சாதக வாயுள் முடிவு தலைநோயால் மரணம்

முதலாவது ஆயுர்பாவபலன்

சுக்கிரன் குரு சனி யிவர்கள் ஒன்றுயினுமல்லது தனித்தனியாக கேந் திர திரிகோணமான விருஷப கும்பத்தில் கன்னி மகர மீனங்களிலிருந்து அவரவர்களுக்கு நீசம் பகை இல்லாதவிடங்களாகி சுபக்ஷேத்திரத்தில் சுப சம்பந்தர்களாகி விருக்கினும் பெலன்பெற்ற பூரணசந்திரன் கேந்திரத்திலிருக் கினுஞ் சாதகனுக்கு ஆயுர்பாவம் வருஷம் (எஎ) என்றும் மேற்காட்டியபடி மூவருமின்றி மிதுனம் சிம்மம் துலாத்தில் சுக்கிரன் சனி மகர கும்பங்களில் சந்திரனுடன குருவாதல் அவர் கேந்திரத்திலாதல் இருக்கினும் கடககுரு வாகினும் சுக்கிரன் புதன் கேந்திரத்தில் பாவருடனேகூடினுலும் சாதக னுக்கு வருஷம் (சுசு) தனுசு கடகம் மகரம் மீனங் இதில் சுக்கிரன் சந்திரன் புதனிருக்கில் சனி சுக்ஷேத்திரம் உச்சம் அல்லது நட்பாகி கேந்திரத்தி லிருக் கினும் பாவரைக்கூடினும் வருஷம் (சுஉ) என்றும்.

சந்திரன் சனினின்றவைக்கி லக்னநிபதி அஷ்டமாதிபதி திரிகோணத் தில் குரு வீக்ஷணியம்பெற்று மகரம் கும்பம் மிதுனம் விருச்சிகத்தில் குசன்

முதலிய பாபிகளுடனிருக்கினும் சுக்கிரன்பெலத்து யிருக்கில் வயது ஹ (திரு) என்றும்.

சனி குசன் முதலிய பாவருடன் சுகேஷத்திர விடத்தில் சந்திர லக்னாதி பனுகில்ஸ்திர இராசியில் குரு சனி முதலியோர் கேந்திரத்திலிருக்கில் ஹ (சுமுக) யென்றும் இதில் குரு மறைந்து சனி அபலனுகிப் பாவருடன் கூடி கதிர்முதலியோர் நீசமாகி சுக்கிரன் பெலக்குறைவாகி இருக்கில் வருஷம் (சஅ) யென்றும் சனி முதலிய பாவருடன் சுக்கிரனுங் குருவும் புத சூரியன் முதலியோர் கேந்திரத்திலிருக்கில் வருஷம் (சஉ-ம்) குரு பெலக்குறைவாகியும் சனிபாவருடன் விருச்சிகம் மீனம் மேஷம் கன்னி சிங்கத்தினின்று பகை வரைச் சேர்ந்து சுக்கிரன் கன்னிவிருச்சிகம் மேஷம் மிவைகளி லிருக்கில் வருஷம் (ஊஊ) யென்றும் குரு கேந்திரத்தில் வலுத்தும் பாபியுடன் கூடவல்லது கோக்கவும் சுக்கிரன் நீசம் பகையுடன் (ஊ, சு, அ, கஉ) லிருக்கினும் பாபிகள்கெருக்குண்டு மிதுன மேஷத்தினும் யிருக்கில் வருஷம் (உசு) யென்றும் சுக்கிரன் புதனுமேஷமாகி ராகு முதலிய குசனேக்கூடி சந்திரன் முதலியோர் கேந்திரத்தில் குருவிருந்து பகையைப் பெரில் வயசு (கஅ) யென்றும் மேற்படி சனிநீசம் பகைபெற்று அபலமாகிச் சேரில் வருஷம் (கஉ-க்) குள்ளென்றும் அறியவும்.

சந்திரன் லக்கினமிருக்குமிடஞ் சரமாகினும் குருசுக்கிரனிருக்குமிடஞ் சரமாகின் வருஷம் (ஊஉ) ஆகிய அல்பத்தில் பூரணமென்றும் குருசுக்கிரன் கன்னி கடகம் மகரத்திலும் சனி கும்பம் விருஷபம் தனுவில்பாபருடனும் சந்திரனுக்கு இரண்டு பக்கங்களிலும் யாவரும் கூஷீணசந்திரனுகில் அல்பத்தில் மத்திமமும் குசன் ராகு கூடி இருக்கில் அல்பத்தில் அல்பமும் குரு தன்வீட்டிலாவது கன்னிகடகம் துலாத்திலாவது இருந்து சனிகூடினாலும் பார்த்தாலும் சுக்கிரன் சனி கேந்திரத்திலாவது மதிகேந்திரத்திலாவது விருஷபம் கும்பம் மீனம் இவ்விடம் கடகத்திலிருக்கினும் மிதுனத்திற்சாரினும் சாதகனுக்கு மத்தி மத்தில் பூரணவென்றும் இத்துடன் புதன் ராகு பாவர்கள் குசனிவர்கள் கேந்திரத் திரிகோணத்திலிருக்கில் மத்தி மத்தில் மத்திமமும் சிம்மம் மகரம்தனுவில் மிதுனத்தில் சுக்கிரனு பாவருடன்கூடி பகைபெற்றிருக்கில் மத்திமத்தில் அல்பமுமாக வறியவும்.

மேஷ மிதுனத்தில் சனிராகு முதலிய பாவருடன் பெலக்குறைவுகளையுடையவனுகி சூரியன் முதலாகிய கோள்கள் பலவகை இடுக்கத்துடன் ஒன்று யெட்டிலிருக்கினும் சனிசுக்கிரன பெலக்குறைவாகி யிருக்கினும் சாதகன் பாலாரிஷ்டத்துடன் பாலியத்திலேயே மரணமாவான.

சுக்கிரன் கேந்திரகோண நட்பு கேஷத்திரத்தில் பெலத்துடன் குருமறைவாகியும் சனி துலாம் மகரத்திலிருக்கினும் குசன் மதி கடகம் சிம்மம் தனுசு மீனத்தில் பாவருடனிருக்கினும் பூரணத்தில பூரணவயதும் சுக்கிரன் சந்திர கேந்திரனுகி இருந்து நட்பு கேஷத்திரமாகியும் குருசம்மந்தம் சந்திர கேந்திரம்

லக்னமாகி சரத்தில் குரு புகரிருக்கில் பூரணத்தில் மத்திம வயதும் சனி புதன் கூடியாவது நோக்கமாவது மேற்படி கிரகங்களுக்குரில் மேற்படியில் அல்பாயு ளென்றும் அறிக

ஆயுள்கணித திசைகளும் ஆயுள்கணிதமும் கூறப்படும்

தனுவிலும் குருவுடனும் சந்திரனுடனும் சனியுடனும் சனிக்கி யெட்டா வது வீட்டிலிருக்கும் கிரகத்தினுடையவும் அதிபதியுடனுமுற்ற கிரகங்களின் பலாபலத்துக் கிசைந்தபடி முற்கூறிய கிரகயெண்களே யொன்று சேர்த்து அந்தந்த இராசிகளின் யெண்களேயு மொன்றுசேர்த்து பெருக்கி மிதுனத்தி லும் சுசனுடனும் விருச்சிகத்திலும் னின்ற கிரசயெண்களே பலாபலப்படி ஆருய்ந்தெடுத்து ஒன்றுபடுத்தி அந்த ராசியெண்களால் பெருக்கி இரண்டு பெருக்குத்துகையை யொன்றுபடுத்தி (கஉ-ல்) கழிக்க வந்தவை ஆயு ளென்று (டு-ல்) கழிக்க வந்த மிச்சம் பருவகாலமும் (கூ-ல்) கழித்த மிச்சம் திசையாகவு முன்கண்ட கணக்கைப் போலவே ஒற்று பார்க்குங் காலம் மாரக மெனக்கண்டு கூறல்வேண்டும்.

2-வது தனகுடும்ப பாவபலன்

புதன் சுக்ஷேத்திரஉச்சமாகி குருமுதலிய கோள்களேகூடாமல் சனி ரவி முதலிய கோள்களேக்கூடி கேந்திரத் திரிகோணத்தி லிருக்கில் பிரந்த சாதகன் மிகவும் பிற்பலமான தனுர்ச்சிதனுவன் இவ்விதக்கோளே குருமுதலிய சந்திரன் குசன்பார்க்கில் தனங்கள் வருதலும் அதற்குமேலாகிய பொருள் விரயத்தையும் அடைவன் கடனுனது அவனேப் பிடித்து இழுத்துவந்தபோதி லும் அந்திய காலங் கடன் னிற்காதென்றும் தனகாரகனுடன் ஒருவருமின்றி ஸ்திரத்திலிருந்தும் புதன் ரவியுடன் கூடிபாபரைச் சேர்ந்தும் (சூ, அ. கஉ-ல்) இருக்கினும் தனமில்லான் ரொணத்தால் மூழ்குவன் அப்படிக்கி இருக்குமிடம் சந்திர கேந்திரமாய் சராராசியிலிருந்து குரு னின்றவீட்டோன் கேந்திரம் ஸ்திர ராசியிலிருக்கினும் சனி தனது அல்லது கேந்திரத்தில் பெலன் பெற்றிருக்கினும் சிலனுள் ரொணத்தால் அழுந்தி பலவகை கஷ்டம் பிரர்பொருளார்ப்பின் விருத்திக்கி வருவனென்றும் இதில் குசன் கேது இவர்கள்கூடில் தன வரவுமுண்டு வரத்தக்குமிஞ்சிய சிலவை யடைந்து வரப்படுவனென்றும் சூரியன் கெட்டு பகை கேஷ்த்திரத்திலிருந்து நீசம் பெற் றாலும் புதன் முதலியோர் அத்துடன்கூடி கடகம் துலாம் மீனம் மகரம் மே ஷத்திலிருக்கில் தகப்பன் தனக்கிடையா தென்றும் மற்ற இடங்களி லிவ்வித மிருந்து குரு சனி முதலிய மதி இருந்தாலும் பார்த்தாலும் பிதுர் பொரு ளுண்டு பின்னஷ்டமாய் சுயாற்சிதமே பிற்பலவீர்த்தி யுண்டென்றுங் கண்டு கூறல்வேண்டும். புதன் குரு இவர்கள் சுக்ஷேத்திர உச்சமாகி கேந்திர கோ ணத்தில் இருந்தும் சனி முதலியோரைக் கூடினும், சாதகன கோடியாந்திர

வாஸ்தியும் அதில் குரு ஒன்றுவது புதனுவதின்றி மற்றவர் பெலக்கில் லக்ஷாதிகாறியென்றும் புதன் குருவின்றிச் சனி குசன் கூடி மிதுனம் கன்னி துலாம் கும்பத்திலிருக்கில் லக்ஷாதிகாரியாகியும் புதன் தனித்தாலும் சுபக் கோளுக் கூடி சுபக்ஷேத்திரத்திலும் இரெண்டிலும் சுபர்களேனின்று பகை முதலிய அபெலன்களின்றி இருக்கினும் தசசகஸ்திர மேலுள்ள தன வீர்த்தி புடைய பொன்னுள்ளவ னென்றும் மேற்கூறிய புதனுக்கு (உ-ல்) சுக்கிரன் அல்லது குரு முதலிய சுபர்கள் பாப சம்பந்தமின்றி புதன் சூரியன் பாபியுடன் கூடி இருக்கில் லக்ஷாதிபனுய் சுயாற்சிதனுகவும் பின்முழ்மையை யடைவ னென்றும் புதன் குரு அபெலஸ்தானங்களில் பகை நீசம் பெற்று பாபசம்பந்த மாய் நெருக்குண்டு இருந்தபோதிலும் கடகம் கன்னி மிதுனம் தனுசு கும்பத்தி லிருக்கில் அல்பமான பொன்னுடையவன் சதகணக்காகவுங் கூறப்படும்.

மிதனத்திலும் குரு அபெலனுகி குருவிற்கிரண்டிலும் பாபராகி பெலன் கெட்டும் புதன் மறைந்தும் பெலகிரகத்துடனிருக்கினும் தனமில்லாதவனுவன் தரித்திரமடைவன்.

மற்ற ஸ்தானத்திலிருக்கில் அல்பமான தனவந்தனுவன்.

தனத்தின் கணிதம்

குருவுடனும் தனுதிபதியுடனும் மிதுனத்திலும் குருவுக்கு இரெண்டா மிடத்திலாவது இல்லாவிடில் அதிபதியுடன் இருக்கும் கிரகயெண்களே யொன்றுபடுத்தி ராசியெண்ணுற் பெருக்கி வைத்த துகையை கிரகங்களுக்கு எடுத்த பெலனில் உச்சகிரகம் கேந்திரக்கிரகத்திலும் சுபக்கிரக மதிகமானுல் (ரு) தடவை சமத்துகை போட்டுப் பெருக்கியும் ஆகுயினுல் (உ) தடவை பெருக்கியும் நட்பு ஆனுல் ஒரேதடவை பெருக்கியும் வைத்ததுகை தனத்தின் யெண்ணுனபொன் அந்தசாதகன் அந்திய வரைக்குள் உண்டாகுமென்றறிய வேண்டியது.

பகை நீசபெலனுனல் வந்ததுகை கடனவளவு துகையென்றுங் கண்டு கூறவேண்டியது

குடும்ப பலன்

புதன் குரு கேந்திரகோணத்தில் சுபக்ஷேத்திர பெலத்துடனிருக்கினும் (உ, கூ) மிடங்களில் சுபரேகூடவாவது நோக்கமாவது உறில் அல்லது மேற்படி இடங்கள் சுற்றமாகி பாபரின்றி இருக்கில் குடும்ப மென்மேலும் வீர்த்தியுண்டாம் அப்படிகி இல்லாமல் பாபரிருக்கில் கெடும் பாபருஞ் சுபருங் கலந்து இருக்கவாவது நோக்கமாவது உறில் இருந்தழிந்து பின் உண்டாகும் பாபர்பெலன் சாஸ்தியாகில் குடும்பமிருந்து வரவரக்குறிகி பலவாராகச் சிதரும் என்றறியவேண்டியது.

மூன்றுவது சகோதரபலன்

குசனுக்கு மூன்றுமிடத்தையும் அதிபதியின் பெலத்தையும் சந்திரன் பெலாபெலன்களையும் யூகித்து உரைத்தல் வேண்டும்.

சந்திரனுடன் சுபர்களாகிய குருசுக்ர குசன் இவர்களிருக்கில் சகோதரம் புருஷசந்ததி யுண்டென்றும் கடகத்தில் குரு ஜீன்றாலும் மீனத்தில் பூரண சந்திரனிருக்கினும் மேலாகிய சகோதரர்கள் அதிகயோக பிற்பலராகி அரச துல்யராய் வாழ்வார்கள்.

சந்திரன் கடகம் சிம்மம் மீனத்தில் குரு சனி சம்மந்தத்துடன் இருக்கில் பிறபலமாயும் அதிகமான சகோதர விர்த்தியுண்டு இதில் சூரியன் முதலிய ராகுகேது மூவர்கூடி இருந்தாலும் ஒருவராதாகத் தனித்துக்கூடினு லுஞ் சகோதர புருஷ சந்ததி யுள்ளவனென்றும் சந்திரன் துலாம் தனுசு மகரம் விருஷபம் இதில் குருகுசன் சூரியனிவர்கள் சம்பந்தமிருக்கில் மிகவும் மேலான சகோதர மிகுந்த லாபமும் தூணைவர்களா லனுகூலமும் கீர்த்தியையடைவன் குசனுக்கு மூன்றுமிடத்தையும் இவ்விதமே பார்த்துரைத்தல் வேண்டும் மேற்கூறிய இடங்களில் பாபர்களே பலை பெற்றுவாழில் உண்டாகி மரணத்தடைவர்களென்றும் பாபருஞ் சுபருமாகவாழில் உடன் பிறந்தோர்கள் உண்டு. அல்ப சக்தியாகி சாதகனுக்கு முன் மரணத்தடைவர்களென்றும் கும்பம் விருச்சிகம் மேஷம் துலாம் இந்த ராசிகளிலும் மிதுனத்திலுஞ் சந்திரனிருக்கினும் விருச்சிகம் கும்பம் நீங்கிய விடத்தில் சுபசம்மந்தம் சுபஜாதக வீக்ஷணியத்துடனிருக்கில் சகோதரஞ் சமவிர்த்திகளும் கும்ப விருச்சிகமாகில் சகோதரமில்லாதென்றும் அவ்விடத்தில் சனி புதன் ராகு முதலிய பாம்புகளிருக்கினும் நோக்கினும் சகோதரம் இடையாதென்றும் மேற்கூறிய விடங்களில் அமரபக்ஷத்து சந்திரனுகில் பெண்ராசியில் சுக்கிரன் புதன் குசனுடன் கூடில் சகோதரப் பெண்ணேலிக்குமென்றும் குருசூரிய சம்மந்தம் உறில் புருஷசந்ததி அல்பமாக தீர்க்கிக்கு மென்றும் ராகு கேது சனி சம்பந்தம் பெறில் சகோதரமுண்டாகி அவன் அந்தியகாலத்திற்கு ஒருவருமிராரென்றும் குசன் முதலிய கேது ராகு கடகம் கன்னியிவையிலு மிருக்கின் சகோதரமில்லாதென்றும் மீனவிராசியில் பெலத்துடனும் அதிபதிபெலத்து சூரியன் சந்திரன் சுக்கிரனிருக்கில் பெண் ஆண் சமதியாயும் சுக்கிரன் சந்திரன் அதிக பெலவானுகியிருக்கில் பெண் ஜாஸ்தியென்றும் குரு சூரியன் குசன் ராகு பெலத்திருக்கில் ஆன்சந்ததி ஜாஸ்தியான விர்த்தியென்றும் கண்டு கூறவேண்டியது.

மேற்கூறிய ஸ்தானங்களிலும் ஸ்தானாதிபதிகளுஞ் சுபராயினும் பாபராயினும் உச்ச சொக்ஷேத்திர பெலத்துடன் பெற்றுவாழில் உடனுற்ற சகோதர மேலான விருத்திகளும் சகோதர அனுகூலத்தையும்பெற்று வாழ்வனென்றும் அசுபபெலனென்னும் ஐவகைப்பெலனில் குறைந்தபெலத்துடன்

விருஷப லக்னத்தின் சகோதராதிபாவ பலன்களாவன

இருக்கில் சகோதரவனுகூலமின்றியும் சகோதர விருத்தியின்றியும் அடைவ லென்றுங் கூறப்படும் சந்திரன் விருச்சிகம் கும்பம் மேஷம் இவைகளில் ஒன்றினின்று சனி முதலிய கோள்களைக் கூடினலும் குஜனுக்குமூன்றுதிபன் இவ்விதமிருந்தாலும் சேரானுகியும் அக்ருதனுகியும் அபிசிந்தாகியும் பாபத் தொழில் புரிந்தும், பிருஷ்டனுகி வாழ்வன் சூரியனைக்கூடில் மேலானுவன் சனி ராகு கேதுவைக்கூடில் கித்த பிரமையுடையனுகியும் ரோகியாயும் வாழ் வன் யென்றும் குடும்ப விரோதஸ்தனுவான் எனவும் இவ்விதமரிந்தபிள் சகோ தரகாரகனுக்கு மூன்றுமிடமல்லது அதிபனுடன் கூடியகிரக சுபங்களையும் சந்திரனுடனும் கடகத்திலும் னின்ற கிரகபெலாபெலன்களின் கூர்மைபடி யரிந்த கிரகயெண்களை ஒன்றுபடுத்தி இராசிகுளித மிச்சயெண்ணிற்பெருக்கி அந்த விராசிகளில் ஆகி உச்சம்பெற்ற கிரகத்துக்கிசைந்த யெண்ணில் கொடுத்துனின்ற மிச்சம் சகோதரமாகும் அத்துகையை யேழாம் ராசியெண் ணிற்பெருக்கி சீவிர்த்திக்குரிய கிரகயெண்ணிற்குடுக்க னின்றமிச்சமான தீர்க்கசகோதரமென்றும் இதில் பெண்கிரகத்தால் எவ்வளவு ஆண்கிரகத்தால் யெடுத்தயெண்ணெவ்வளவு யென்றறிந்து அவ்வெண்ணை பிரித்துக்கண்டவை ஆண் பெண்ணென்றும், இதில்சுபகிரகம் பெலமற்ற நல்லோர் யெண்சாஸ்தி யாகில் அவ்வித யெண்ணுள்ள சகோதரர்க்கு அதிகயோகமும மனுகூலத்தைப் பொருந்திவாழ்வார்க ளென்றும் அதில் கூறிய பாபர்களால் கொடுத்த யெண்ணரிந்தமிச்சம் சகோதரர்கள் விரோதம் அவத்தொழில் குலஹீன நஷ்டஞ்செய்பவர்களாய் பலிப்பவர்களென்றுங் கண்டறிய வேண்டியது.

போகாதி அடிமை சங்கீத பலன்கள்

குசன் பெலத்தும் சந்திரன் கடகம் கன்னி மீனம் இவைளிலாவது மிதுனத்திலாவது னின்ற குருவல்லது சுக்கிரனைக்கூடினலும் பார்த்தாலும். சங்கீதசாஸ்திரபரிசிய னென்றும் சனி புதன் முதலியோர் நோக்கினலுஞ் சேர்ந்தாலுஞ் சங்கீதமுதலாகியதும் தைரியவீரியங்கள் குறைந்து அரைக்குரை யாகி பிரியத்துடன்கூடி பல பெண்போகியென்றும் புதன்கேது கூடியிருக் கில் விதவை கிழஸ்திரீ போகனென்றும் குசன் சனியாகில் நீசஸ்திரீ போக னென்றும் இராகுவாகில் தள்ளுண்ட ஸ்திரீபோக னென்றும் குருவாகில் இராசஸ்திரீ போகனென்றும் சுக்கிரனுகில் விபசாராதி உயர்குலபெண்போக மாக வாச்சல்லிய தனலாப செயத்துடன் வருவனென்றும்குரு அல்லது மூன் னேருடன் சூரியன்குசன் சேர்ந்திருக்கினும் நோக்கினும் ஸ்திரீகளாலேயே பொருளையழித்துக் கடனுளியாவனென்றுஞ் சனிராகு பாவர்கூடினும் குடும் பக்கேடனுவன் என்றும் இவர்களுடன் மிதுனம் விருச்சிகம் தனுசு மீனம் கும்பத்தில் மேஷத்திலிருக்கில் பலஸ்திரீபோகமும் னிலையில்லாமல் காமா துரனுகித் திரிவனென்றும் சனி புதன் முதலிய கேதுவிருக்கில் தைரியவீரிய மில்லாதவனுகி பெலக்குறைவும் குறிரோகாதியால் போக இச்சை இன்றி

யும் காமலோபனுமி இன்றியுமடைவன் இவர்களே குரு சுக்கிரன் சூரியன் இவர்களில் ஒருவர் பார்த்தாலும் பலபோகத்துடன் மிகவும் போகியாயு ரோகியாயும் தயிரிய பூரியனுகியும் வாழ்வன் சங்கீதஞ்ஞனுவான்.

நான்காவது மாதுரு கிரகவாகன வியாபாரபலன்கள்

சூரியன் புதனுடன்கூடி கன்னி விருஷபம் சிம்மம் மிதுனம் கும்பம் இவைகளிருக்கில் மிகவும் பிரபல கீர்த்தியான கிரகவாகனமும் மாட மாளிகையுடன் வாழ்வன் சுக்கிரன் கேந்ரத்தில் வலுத்து குரு முதலியோர் கேந்திரத்தில் இருக்கினும் மாடமாளிகை வீடுபிரபலம் செய்வனென்றும் சுக்கிரன் சூரியன் வலுத்து கடகம் விருச்சிகம் மீனத்திலும் சுக்கிரனுக்கு நாலுக்குடையன் பெலத்து சுபர் வீட்டிலும் சிங்கம் இவைகளில் சுபர் பார்வையல்லது சுபரிருக்கினும் பிரபலகட்டெடங்களுடன்வாழ்வன் என்றும் சூரியன்பெலமற்ற நீசம் பகையுடனும் பாவருடனுமிருக்கினும் பாவர் பார்க்கினும் பூர்வார்ஜித வீட்டில் வாழானென்றும் சுபபெலஞ் சாஸ்தியாகில் சிலகாலம் பூர்வார்ஜிதம் விட்டுப் பின் மேன்மையான பூர்வார்ஜித வீட்டையடைந்து விருத்திசெய்வனென்றும் சந்திரன் குரு முதலியவர்கள் சிம்மம் கும்பம் விருஷபத்திலிருக்கில் பிரபலகட்டடவாகனுகிகளுடன் வாழப்படுவனென்றும் மிகவும் பிரபலவானுகி வாழ்வனென்றும் கூறப்படும் மற்றய சிம்மம் விருச்சிகம் கும்பத்தில் சுசன் முதலியசுபசம்பந்தமிருக்கில் பிரபலகட்டடவிருத்தி முன்னேராலும் பழயவீடு கிடைக்குமென்றும் அறியவும் அந்தந்த கிரகம் ராசிக்கிசைந்த பெலப்படிக்கு முகம்பார்த்த வீடுகள் என்றும் ஷெஸ்தான கிரகங்களுடன் ராகு கேது புதன் இவர்களிருக்கில் கெட்டியில்லாத வீடும் சுசன் சனிநோக்கினு மிருக்கினும் சித்ராதிவீடு இடைஞ்சலுடன் அறைகுறையாகிக் கிடைத்து வாழ்ந்துவருவனென்றும் அறியவும்.

சுசன் பாவருடன்கூடி சிம்மம் கடகம் மீனத்திலும் அல்லது சூரியனுடன் கேது முதலிய பகைப்பவர் பகை நீசவிடத்து ஸ்தானுகிபதி பெலன் பெராமல் கெட்டபெலத்திலிருக்கினும் நோக்கினும் வீடு முதலானவை விர்த்தியடையானென்றும் கூறப்படும்.

சுக்கிரனுக்கு நான்கோன் வலுத்தும் சொகேஷ்திர உச்சமாகியும் சிம்மத்தில் குரு மதி சூரியனிருக்கில் குதிரை முதலாகிய வாகனயோகன் பிரபலமுண்டாகும் பாபிகள்நோக்கில் நீலப்பில்லாத வாகனமுண்டு பாவரே ஷெஸ்தானங்களிலிருந்து அதிபதிகள் பெலக்குறைவாகிப் பாவருடன் கூடியிருக்கில் வாகனங்கிடையாதென்றும் தன்பாசு மேவாகனமாய்க் கொள்வனென்றும் அறியப்படும். அவ்வவகோட்களுக்கு உறிய சிரத்தை கூறப்படும் சனிமுதலிய கிரகம் பெலத்துடனிருக்கில் சகடவாகனமாகு பாற்பசு விர்த்தியுண்டாகும்.

வியாபாரபலன்

சூரியன் புதன் விருச்சிகம் சிம்மம் கன்னியிலாவது கும்பத்திலாவது துலாத்திலாவ திருக்கில் யெக்காலமும் வியாபாரப்பிரியனென்றும் எதேனும் வியாபார முயற்சியென்றும் பாவர்கள்சேர்ந்து புதனுக்கு நாலாமிடத்திலாவது யேழாமிடத்திலாவது சந்திரனிருக்கில் வியாபார பிரபலமுண்டு சராராசி யாகில் வியாபாரத்தில் நஷ்டமடைவனென்றும் மற்றய ராசியாகில் மிகவும் லாபத்தையடைந்து வாழப்படுவனென்றும் குரு நோக்குமாயின் பிரபலமான ராசாங்கசம்மந்தமுள்ள பெரு நகரங்களில் வியாபாரக்கீர்த்தியும் பாவம்சேர்ந் தாலும் பார்த்தாலும் வியாபாரமத்தியில் விட்டுவிடுவன் எதனுலென்றுல் நஷ் டத்தினுலென்றும் சுபபெலன் அதிகமாகில் மிகவும் அந்தியகாலவரை வியா பாரம் விடாமல் முயற்சியில் லாபமடைவனென்றும் அறியவேண்டும்.

மாதுருபாக பலன் கூறுகின்றது

சந்திரனுக்கு நான்காமிடத்தையு மதிபதியையும் சூரியன் சிம்மம் இவை களின் பெலா பெலன்களே கொண்டுரைக்கவேண்டும் சந்திரன் சிம்மம் விருச் சிகம் தனுசு மேடம் நீங்கிய இடத்திலும் பாபருடன் கூடாமலிருக்கில் மாதுரு வீர்த்தியென்றும் அவ்விடங்களிலிருக்கில் ஜனனத்துடன் மாதுரு மரண மென்றும் சூரியன் சுக்கிரன் புதன் பெலத்துடன்கூடில் மாதுருதோஷமென் றும் சூரியன் புதன்கூடி சிங்கம் கன்னி தனுசு கும்பத்திலிருக்கில் மாதுரு வீருத்தியென்றும் சுபர்பார்க்கில் மாதுருபெலனும் சந்திரனுக்கு நாலாவது இடத்துக்கு அதிபதியையும் அந்தவீட்டினிற்குங் கிரகபெலன்களைக் கண்டு கூறவேண்டும்.

சந்திரனுடன் பாம்பு முதலிய பாவராலுலும் யேழு மேஷம் தனுசு இவைகளில் குரு முதலிய சுபவீக்ஷணியமின்றி யிருக்கில் தாயுடன் மரண மானது சனனகாலத்திலே உண்டாகும் சுபர்நோக்கில் சிலகாலம்கின்று மரணமாவனென்றும், அறியப்படும்.

சந்திரனுக்கு நாலுக்குடையன் சூரியன் இவர்கள் பெலமாநோருடன் கூடினீர்க்கின் மாதா தீர்க்கவயதினமேல் மரணமென்றும் சூரியன் முதலிய பாவர் கூடவிருக்கின் அல்லது நோக்கின் நோகியாகிவாழ்வனென்றும் சந்திர னுக்கு மூன்றில் பாவரல்லது பாவர்நோக்கில் ஸ்தானதிபதி பாவருடனே நீசம் பகைவீட்டில் இருக்கில் மாதா கெட்டநடவடிக்கையென்றும் பரபுருஷனே கொஞ்சிக் குலாவி வாழ்வனென்றும் சூரிய சந்திரர்கள் ஒன்றுகூடிப் பாவ ருடன் (கூ, கூ. கத-ல்) இருக்கில் பரபுருஷனுடு குலாவி மகவைப்பெருவள் கரோியாகி விரோதியாகி வாழ்வள்யென்றறியப்படும். ஷை ஸ்தானங்களில் பாவரும் அதிபர்களும் பெலனற்று வாழில் தாய்வழி யாதொன்றுமின்றி நஷ் டத்தை யடைவர்களென்றும் அறியப்படும்.

சந்திரனுக்கு (டு-ல்) பாவரிருந்து ஸ்தானாதிபதி பெலமற்றுவிருக்கினும் மாதுரு வம்சஸ்தர்கள் குடும்பச்சேதமாய் நஷ்டத்தையடைவனென்றும், புதன் சுக்கிரன் இவர்களில் ஒருவர் லிற்கில் தாய் வழிப்பொருள் சாதகனுக்கு பாத்திபனுவன்யென்றும் பாபர்கள்கூடில் தாம் வழிப்பொருள்கள் விவாத நஷ்டத்தின்பேரில் பொருள்கிடைக்குமென்றும் குரு நோக்கினுஞ் சூரியன்கூடி நோக்கினும் ஷிவகைக் குடும்பத்தாய் சகோதிரவிர்த்தி உண்டென்றும் சந்திரன் சுக்கிரன் பெலன்பெற்றிருக்கில் பெண் சந்ததியே நிற்கமென்றும் குசன் முதலிய சூரியனுகில் ஆண் சந்ததி அதிகவிர்த்தியென்றும் ஐவகைப்பெலனுக் கிசைந்தபடி கூறல்வேண்டும்.

சூரியன் கன்னி தனுசு விருஷபம் பிதனம் இவைகளில் புதன்கூடி இருக்கில் குரு முதலிய சுபக்கோளின் கேந்திரமாவது அல்லது வீக்ஷணியத் துடனிருக்கினும் சந்திரன் பெலத்துடன் சந்திரனுக்கு நாலாமிடம் நாலாமாதிபதி இவ்விதமிருக்கில் தாய்வழியோரால் யோகமும் பிரபலமுமடைந்தும் தாய்வழியோர் அதிக யோகமுடையோராயும் ராசவல்லபராகியும் வாழ்வர் இவ்வித முன்னுரைத்த இடத்திலும் ஆதிபதிகளுடனும் பெலமற்றவர்கள் இருநாது பகைசேசமாகி துர்த்தானமாகிய (சு, அ-ல்) பாவருடனிருக்கில் மாதுரு பீடையும் மரணமும் அவ்வம்சம் தரித்திரர்களுமாகி குடும்ப சோகத்துடன் வாழ்வர்களென்றும் பலவகை நஷ்டத்தையும் அடைவர்களென்றும் பலவகை துக்கசோகக் குடும்பத்தையும் அடைவர்களென்றும் கூறப்படுமென்றும் அறியப்படும்

சிம்மம் விருச்சிகம் சந்திரனுக்கு நாலு யேழில் சுக்கிரன் ராகு சனி இவர்களிருக்கில் தாய்வழி கலத்தையும் துக்கத்தையும் அடைந்து விரோதத்துடன் வாழுமாதாவாகிய இருப்பாளென்றும் பலவகை வருத்தமும் உண்டாகும்.

மாதுருபாவ கணிதங்கள் கணிக்கப்படுகின்றனவாம்

சிம்மத்திலும் விருச்சிகத்திலும் சந்திரனுடனும் சந்திர லக்னாதிபதியுடனும் சந்திரனுக்கு நாலாமிடத்திலும் அதிபதியுடனுமுற்ற கிரகங்களின் யெண்களோப் பெலாபெலத்தின்மேற்கூட்டி ராசி யெண்ணுகையிற்பெருக்கி குருவுடனும் சந்திரனுக்கு அஷ்டமாதிபன் தசமாதிபனுடனும் கூடிய கிரகங்களின் யெண்ணைப் பெலாபெலத்தின்மேல்கூட்டி ராசியெண்ணிற் பெருக்கியு முன் பெருக்கிவைத்த எண்களையும் ஒன்றுசேர்த்து (கூ-ல்) கழித்த மிச்சம் சவ்யாபசவ்ய ரீதியாகி கண்ட யெண்ணுக்குடைய திசாபுக்திகளின் மாதுரு கருமமென்றும் அறியவேண்டும்.

மேற்கூறிய இடத்திலும் அதிபனுடனும் சுக்கிரன் சனியிருந்து பெலமற்றிருக்கில் அவன் தகப்பனுக்கு இரண்டு முதலிய களத்திரங்களையுடைய தகப்பனென்றும் புதன் சந்திரன் இவர்கள் (ம-ம்) வீட்டிலாவது (கூ) மிடத்தி

லாவது சனி முதலிய பாவருடன்கூடி இருக்கில் அவன் தாய்தகப்பனுக்கும் பின் மனைவியாளாகப் பலிப்பளென்றும் கண்டறியவேண்டும்.

ஐந்தாம்பாவ புத்திரபலன்

இந்த இடபலக்கினத்திற்கே புத்திராதிட்டமென் றுரைக்கப்படும்.

புதனும் குருவும் மகரம் கன்னி மிதுனம் மேஷ மிவைகளின் சனியாதல் பாம்பாதல் கூடினின்றாலும் பார்த்தாலும் கன்னி மகரத்தில் சுக்கிரனுடன் முதலிய பாபர்கூடவாவதுநோக்கமாவது இருக்க நீசருடனே அந்த ஸ்தானாதி பதி இருக்கினும் பெலமற்று பாவர்மத்தியில் இருக்கினும் குருவின் நோக்க மின்றிக் கெடினும் குருவுக்கு ஐந்தாமிடத்தோரும் இவ்விதமிருக்கினும் ஐந்தாமிடத்தை பாபர் பார்க்கினும் குரு பெலனற்று யிருக்கின் கர்மபுத்திரன் யில்லையென்றுபிறப்பதே அறிதென்றும் இன்னமும்துலாம் மீனம் விருச்சிகம் இவைகளிலும் புதனுடன் இரவிகூடி பெலன்கெட்டு பாவருடன் வழிலும் புத்திரனில்லாளென்றும் இவையில் (ரு) மிடம் ஒன்பதாமிடத்தை குரு நோக்கினும் யேழாமிடத்துக் குசனும் தனுசுக்குரிய சுப இஷ்டனுடன் அந்த ஸ்தானத்தோன் பெலத்துடன் இருந்து சுக்கிரனுங்குருவும் சமசத்தமமாய் சுபர்வீட்டில் குரு முதலியோரிருக்கினும் சந்திரன் வசாத் (ரு, கு-ல்) குரு னீற்கினும் நோக்கினும் பூர்வபக்ஷ பெலத்துடைய சந்திரனாகி இருக்கில் அநேக நாள் மகவின்றி வந்திருப் புன்றாமூலமாய் புத்திரர் கிடைக்குமென்று அக் குருபுத்திரஸ்தானத்த சனி குசன் முதலிய பாவர்கள் நோக்கினும் னீற்கினும் சுபர் பாபர்கலர்ந்து இருக்கினும் பார்க்கினும் சாதகனுக்கு தெத்துபுத்திரன் சிவீகாரனாகியும் வாழப்படுவனென்று மறிக.

சூரியன் புதன் அல்லது தனித்தாவது சனி ராகு முதலியோர் சேராம லும் நோக்கின்மை இன்றியும் கடகம் விருஷபம் தனுசு கும்பம் மேஷம் மிவை களிலிருந்தும் சுபர் நோக்கத்துடனும் கன்னி மகரம் இவையிலும் குருவுக்கு (ரு, சு) மிடங்களிலும் பாவரிருக்கினும் நோக்கினும் அனேகநாளாகவுண் டாகும் புத்திரபாவ மரணமடைந்து பலகலைகள் புத்திரமூலிய முண்டாகு மென்றும் பலதக்கமும் புத்திரசோகமும் உண்டென்றும் குருமுதலிய சுபக் கோள்கள் உடன்கூடினாலும் நோக்கினும் சுபக்ஷேத்திரங்களில் விசேஷ பெலத்துடனிருக்கில் சாதகனுக்கு புத்திரர் அல்பமான வித்தியையடையு மென்றும குடும்பவிர்த்திகளும் இவர்களுடன் பாபருஞ் சுபருமாகிக்கலர்ந்து னீற்கில் அகாலபுத்திரன் பின்மனையாளுண்டாகு மென்றறியப்படும் மேற்படி ஸ்தானங்களில் சுபர்கள் பெலத்துடன்கூடி இருக்கில் புத்திரர்கள் அதிக யோக பிரபலர்களாகி வாழ்வார்கள் அசுபர்களுடன் கூடினாலும் நோக்கி னாலும்.

புத்திரர்கள் குடும்பக் கேடுடன் உள்ள புத்திரராகியும், பலவகைகஷ்ட நஷ்டத்துடனும் மனோவருத்தமும், புத்திரர்களால் குடும்பஹீனம் பொருள் சேதாதி தரித்திரர்களாய் ஜனிப்பார்க ளென்றறியவும்.

புதன் மறைந்து பகை நீசருடன் கூடினாலும் பாபரைக் கூடினும் பொறாமையும் மனச் சஞ்சலனாகி வாழ்வன் யெப்பவுங் கவலையும் பலவகைகஷ்ட நஷ்டத்தையும் வியாபாரத்தால் முன்லாபம் பின்னஷ்டமும் உண்டாகும் ஞானாதிக்குறைவும் விவேகாதி விஷயங்களில் மனவருத்தமும் உண்டாகும்.

புதன் பெல மற்றவனாகி வாழினும் மதி முதலியகுசன் பாபிகள்வீட்டினிற்கினும் அவை சரவிராசி ஸ்திரவிராசியாகினும் புத்திசலத்துடனும் மனக் கவலையுடனும் வாழப்படும் என்றும் பலவகை தனநஷ்டாதி முயல்வுக்குறைவு முண்டாகுமென்றும் கூறப்படும், ஞானமின்றி வாழ்வன், இதில் குருமுதலிய சுபக்கோள்கள் வலுத்து நட்புக்ஷேத்திர பெலத்துடன் லக்கேந்திரத் திரிகோணத்திலிருக்கில் பிறந்தவன் தேவதாபக்தி சிருத்தையுத் அவையிலும்கூட அதிருப்திகளைப் பொருந்திவாழ்வன் கருமக்குறைவாகனேரும்.

புத்திரபாவ கணிதங்கணிக்கும் வகை கூறுகின்றனவாம்

புதனுடனும் கன்னியிலும் குருவுக்கைந்தா மிடத்திலும் அதிபனுடனும் கூடியபெலத்துடன் முன் கூறிய யெண்களை ஒன்றுசேர்த்து அவ்வெண்களை பெலன் பெற்ற குருனின்ற ராசியதிபன் பெலக்குறியயெண்களை ஒன்று சேர்த்து அவ்வெண்ணிற் கொடுத்துக் கண்டசேஷம் ஆண்கிரகம் பெண்கிரம் யெண்களைக் கூட்டி தீர்க்கஞ் சொல்லப்படவேண்டும் முன்பார்த்த மொத்த பாவமூலமாய் இல்லாவிடில் இக்கணக்கு யெடுத்து நோக்குவது சரித்தப்பாகும் ஆகையா லந்தபாவத்தை முன்னிதானித்தலின்மேல் இக்கணிதத்தை நிதானித்தல் வேண்டும். மேற்கண்ட எண்ணைப் பெருக்கிவைத்த துகையை (௰-ல்) பெருக்கி (௯-ல்) கழித்த சேஷமும் அந்த ஈவை (௫-ல்) பெருக்கி (௯-ல்) கழித்த சேஷமும் உள்ள திசாபுக்திகளில் மகவுதோன்று மென நிதானித்தறிதல் வேண்டும். ஆகையால் இக்கணித பாவங்களை நிதானித்துக் கணிக்குந்தன்மையின் மீது பாவ ஒற்றுமைக்குப் பிரழ்வின்றியாகும் இதில் சனி ராகு முதலியோர்களினால் கொடுத்த யெண்களாயினும் புதனால் கொடுத்த யெண்களாயினும் சாதகனுக்கு புத்திரனில்லை யென்றும் பரதார புத்திரன் பலர் சம்மந்த காந்திவருவ ஸ்திரீகளுக் குண்டானதாகவுரைத்தல் வேண்டும்.

6-வது சத்துரு ரோகபாவங்களைப் பற்றிய பலன்கள்

சுக்கிரன் சனிபெலத்துடன் விருஷபம் சிங்கம்விருச்சிகம் முதலாகிய கேந்திர திரிகோணமென்றும் ராசிகளிலும் பகைவருடனாகிய சூரியன் குரு இவர்கள் கூடிநிற்கினும் பாவருடன் னின்றாலும் பாவர்நோக்கினும் சத்துருக்களாலும் பித்தஊஷ்ண மேகம் சத்துருக்களால் செய்யும் சூனியாதி பாதைகளனுசரிக்கும் இதில் சந்திரனுடனுங் குருவும் கேது முதலிய குசன் சனி

விருஷபலக்னத்தின் 7-வது களத்திர பாவபலன்களாவன

சேரினும் நோக்கினும்மேற்கண்ட வியாதி பாலாரிஷ்டமும் சத்துருக்களால் யெப்பொழுதுந் துன்பத்தையடைவன் இதில்புதன் முதலிய கோள் சேரிர் சத்துருவானவன் சமனிடையாயி ருப்பன் சுபக்கோள்கள் துலாம் மீனம் இவையில் பெலத்துபகைவரைக் கூடினிற்கில் சத்துருசெயமில்லாமல் சாத கனே சத்துரு செயஞ்செய்வன் ஷ ஸ்தானங்களில் பாபிகள் நீசம் பகைபெற் றிருக்கில் சத்துருக்கள் அதா அதர்களாகி சத்துருக்களே செயித்து கீர்த்தி சம்பாதிப்பன் யெவ்வித மனுஷர்களேயும் வசீகரண்ணுமல் செயஞ்செய்து கீர்த்திபெருவன் துலாமீனம் இவைகளிலும் சந்திர சூரியனுடன் சனியிருக் கில் பிணிச்சரீரனுகி பித்த சோகயான வாத உபாதியால் வருந்துவன் சுக்கிரன் முதலிய கோள்புதனிவர்கள் கூடினிற்கில் அபெலத்துவ பாபரா யிருக்கில் ஜெலசிலேஷ்பண சம்மந்த வியாதியாவன் குரு ராகுவாகில் பித்தசம்மந்த அண்டநோயுண்டாகும் கேது குசனுகில் ரெக்தசம்பந்த வியாதியுடன் வாத சம்மந்தனேய்த் துன்பசம்பந்த சரீரனுகி வாழ்வன் யென்றும் அறியப்படும் மேற்கண்ட இடர்த்திச் சனி ராகு பகைவருடன் கூடி சுக்கிர நீசம் பகை பெற்றிருக்கினும் அஷ்டம மிராசியிலிருக்கினும் குசன் பகை முதலியதுடன் அவ்விராசியிலிருக்கில் பிறந்தவன் இராசதெண்டனேக்கு உள்படுவன் இதில் சனி புதன் ராகு ஸ்திரவிராசியாகியுங் குசன் சரவிராசியில் பகை நீசம் பெற்றிருக்கில் ஆயுள்வரை தண்ணீர்மே லேற்றப்படுவன் சூரியன் முதலா னேர் கூடினும் ஆரிர்ச்சுபர் டெலனற்று இருக்கினும் இராசதெண்டனே யடைவனென்றும் குருமுதலிய சுபர்நோக்கில் அல்பகுற்றத்துடன் நீங்குவ னென்றுங் கூறப்படும்.

இவ்வித மிருக்குங் கிரகத்துடன் சூரியன் குருவிருக்கில் சாதியோர் பகையும் பலவிதத்துக்கத்தையும் மனுபவிக்கப் படுவனென்றும் அவ்விதம் சாதிபகை விஷபயம் ஸ்திரீகலசங்களேயும் கண்டு உரைத்தல் வேண்டும் இவ் வித ஸ்தானத்தில் சுக்கிரன் சந்திரன் பகைபெற்று சனியாதல் பாம்பாதல் கூடி கடகம் விருச்சிகம் மீனம் இவையில் இருக்கினும் தனுவில் புதனுடன் யிருக்கினும் வேருசுபர் நோக்கமின்றி துலாத்தில் புதன் சூரியன் முதலியோ ருடன் புகரிருக்கினும் நோக்கினும் பகைவராலும் சோரராலும்பொருள் போவதுடன் தன்தேக அவயவக்குறைவு அவமானமும் பெண்போகங்களால் அவமானத்தையு மடைவன் யென்றும் பலவகை துக்கசோகங்களேயும் பிராண ஹானிக்குரிய வகைகளேயும் பொருந்தி வாழ்வனென்று மறியவும்.

7-வது களத்திர விவாத பலன்கள் கூறுகின்றது

சுக்கிரனுங் குசனுஞ்சேரமல் பாபியுடன்சாரமலும் தன்பகையாயி வர்களேச் சேரமலுங் கேந்திரத்திரிகோணத்தில் சந்திரனுடன் கூடினலும் குருநோக்கினும் விருச்சிகம்மீனமிவையில் சுக்கிரன் இன்றிகுசன் இருந்து குருமுதலிய சுபர்கள்நோக்கினும் ஒரேதாரமென்றும் சுக்கிரனுக்கு யேழா

மிடம் அதிபதியையும் இவ்விதம் பெலத்துடன் நோக்கில் சாதகனுக்கு ஒரே தாரமென்றும் குருமதிசுக்கிரனுக்கு யேழிலிருக்கில் விருச்சிகத்திலிருக்கிலும் இருதாரனென்றும் சனிமுதலியவர் தனித்து அஸ்தங்கதனுய் சுக்கிரனிருக்கிலும் குசனிருக்கிலுங்களத்திர விவாகமில்லையென்றுங் குசன் முதலியோர் கடகம் தனுவிலிருந்து சனிகேது புதனிருக்கிலும் பார்க்கினுமனைவி இல்லையென்றுங் குருமதிசுபர்நோக்கி மனைவியொருவள் பெலத்துடன் மலடியாய் வாழ்வளென்று இதில் குசன் பலரான கிரகத்துடன் சிங்கம் கன்னி தனுசு மீனத்தில் சனியுடன் கூடிலும்பாம்பைக்கூடிலும் சாதகனுக்கு இரண்டுக் கதிகமனைவியும் பரதாரியையும அனுசார மடந்தையையும் புணருவனென்றும் இதினுல் மிகவும் அபகீர்த்திகளாகயும் ஊனஸ்திரீயையும் புணருவன் யென்றும் கதிர் முதலியோர்பகை நீசமூற்றுப்பார்க்கில் குலஹீனம் புலஹினமுடைய மடந்தையென்றும் மகரம்கும்பம் இடபம் கடகம் மிதுனம்இதில் சுக்கிரனுடன் குஜனுடன் பகையோரும் பாவரும் பலரானகிரகஞ்சேரில் பல வகை ஸ்திரீபோகமும் இரண்டொரத்தை யுடையவனென்றும் குருமதிநோக்கினு மிகுக்கினும் ஒரேமனையாளென்றும் புதன் இரவி கேது சேரில் மனைவி பலறையும் புருஷனுகக்கொள்வளென்றும், சனி ராகுவிருக்கில் கொண்டபுருஷனை கொல்வளல்லது கொண்டவனை விட்டு உலகரிய பர புருஷனைசேர்ந்து சுகப்படுத்திப்பின்னவளே அன்னஞ் சொர்ணமாயிலவளென்றும் விருச்சிகம் விருஷபம சுக்கிரனுக்கு யேழில் சுபர்களாகியகுரு உச்ச சொகேஷத்திரம்பெற்று கேந்திரத் திரிகோணத்தில் வாழில் மனைவியால் பொருளு மதிகசெல்வமும் இராஜபோகமும் மனைவிமேலானவளாய் ரூபத்துடன் அதிமோம்யாகிவாழ்வள் இவர்களுடன் குசன் ரவி புதன் இருக்கினும் தனித்துக்கூடினும் மனைவி ரூபத்துடன் அதிமோகியாய் பகையாய் வாழ்வளென்றும் புதன்தனித்து சந்திரனிவர்கள்கூடில் அல்பபோகியாயும் அசக்தமும் ரோகியாகியும் வாழ்வள் ராகுமுதலிய பாவர்கூடினிற்றல் நீண்ட வியாதிஸ்திரீயாய் வாழ்வளென்றும் சனிபுதன் இவர்கூடினும் ராகு கேதுகூடி சுக்கிரனுக்கு யேழு ஐந்தில் பகை நீசம்பெற்று சூரியனுடன் கூடினலும் கன்னி விருச்சிகத்திலிருக்கினும் ஸ்திரீசேவதாபீடை கருமத்தொந்தத்தால் புத்திரரின்றி பேய்பிடித்துத்திரிவள் பில்லிசூனியம் பயித்தியம் இவ்விதமான குறைதேகக்குறை முதலிய வியாதிகளை யடைவளென்றுங் கூறப்படும். சுக்கிரனுடனும் எழிலும் பகையோரகியும் சூரியன் புதன் குசன் கூடி சனி ராகுகூடி இருக்கில் மனைவி விபசாரி பலமதறை விவாகஞ்செய்வன் புதன் சுக்கிரன் சனிமுதலியபாவர் கடகம் கன்னி தனுசு மீனத்திருக்கில் (உ-க்கு) மேற்கண்ட தாரத்துடையவன் யென்றும் குரு முதலியோர் அந்தத்தலத்திலேயே இருக்கில் தாரமொன்றென்றும் அத்துடன் சந்திரன் முதலிய பாவர் சேரில் மனைவி ரெண்டென்றுங் கூறப்படும் கேதுமுதலிய பாவர்கூடில் கடைசிமனைவியோர் எவ்வளவாலுலும் இருக்கமாட்டாளென்றுங் கண்டறிய வேண்டியது.

களத்திர பாவங்களைக் கணிதமூலமாய் கூறப்படும்

சுக்கிரனுடனும் சுக்கிரனுக்கு யேழாமிடத்திலிடனும் குசன் விருச்சிகம் இவைகளினுடனும் பெலத்துக்கிசைந்த கிரகங்களின் சுக்கிரன் குரு புதன் மதியாகில் தன்சுயமனைவியென்று சனி முதலிய ராகுகேது புத னுகில் பரஸ்திரீ மனைவிக்கிணையானவர்களுக்கு யெடுக்கவேண்டிய கணக் காகும் ஆகையால் சுபபெலம் பெற்றிருக்கும் கிரகங்களின் யெண்களை ஒன்று படுத்தி அந்த கிரகம் நின்ற விராசி சரமாகி லொன்றிலுள ஸ்திரமாகில் இரண் டிலும் வுபயமாகில் மூன்றினுலும் வகுத்துக்காணல்வேண்டும் அவ்வெண்களை அதிகமான வெகுகளத்திரக்கணக்காகில் அந்த ராசியெண்ணில் கொடுத்துக் கண்டமிச்சம் களத்திரமாகும் யென்றும் அறியவேண்டியது.

குசன் விருச்சிகம் இவையின் கிரகயெண்களும் சுக்கிரனின்ற இடம் யெண்களும் புகரின யெண்களையும் ஒன்றுசேர்த்து ராசித்தகையில் பெருக்கி (கூ-ல்) கழித்தமிச்சம் திசாபுக்தியில் களத்திரங்கள் லாபம் விவாகமென்றும் தனுசுவிலும் குருவுடனும் மேற்கண்ட கிரகங்களுடன் கூடியதகைகளையொ ன்றுபடுத்தி (கூ-ல்) கழித்தமிச்சம் திசாபுக்தியில் களத்திரமாரகமென்றும் கண்டறியவேண்டியது.

பிதுர்பாக்கிய பலன்கள்

சூரியனும் சனியும் கூடாமலும் ஒருவகுக்கொருவர் பார்க்காமலும் (கூ, ங) நீங்கிய இடத்திலும் விருச்சிகம் தனுசு துலா மேஷங்களில்லாதிருக்கிற் பிதாவுக்கு ஆயுள் விருத்தியென்றும் குடும்ப பிதுர் வம்ச விர்த்திகளும் உண் டென்றும் அதில் திருகோணமாகிய மகரம் நீங்கிய கேந்திரகோணத்தில் குருமுதலிய சுபக்கோள் நின்று சுபபெலத்துடனும் சந்திரனுக்கு கோணமான (க, ங-ல்) இருக்கில் பிதுர்விர்த்திகளும் சூரியன் புதன் மேஷம் கன்னிகளில் குருமுதலியோர் நோக்கமின்றி சனி அபெலனுகவிருக்கில் தகப்பனுக்கு பா லியத்திலேயே மரணமென்று சுபபெலத்துடன் சுபர் நோக்கில் பிதாஆயுர் தீர்க்கத்துடன் இருந்து பின் தகப்பன் கல்லகதியுள்ள மரணத் தடைவனென் றும் மேற்படி சூரியனுக்கு ஒன்பதாமிடத்தோனும் பாபருடன் கூடி நீச கேந்த் திரத்தோருடனும் பாவருடன் கூடி சனியும் அவ்விதமிருந்து குசனேக்கூடி னும் குசன் நோக்கினும் அவ்வகை பாம்பு கூடினின்றுலும் தகப்பன் பாலியத் திலேயே மரணமாவனென்றும் இவ்விதங்கூடி தனுசு துலாம் கும்பம் மிதுன மிவைகளிலிருக்கினும் பாவர் கூடினிற்கினும் பகை நீசக்கோள்கூடினும் விரோதியான வீட்டினிற்கினும் பிதா பாலியவயதிலேயேமரணம் யென்றும் புதன் குரு நோக்கிப்பெலத்துடன் கூடிஇருக்கினும் பெல சுபத்துவமாயிருக் கினும் பிரந்த சாதகன் பிதாயெவ்வனத்தில் மரணம் யென்றும் அமரகூத்து சந்திரன் கூடி நிற்கில் பாலியத்திலேயே மரணமென்றும் சுபாநிபர்கள் சுக்கி ரன் பெலத்து மேற்கூறிய ஸ்தானம் அதிபர்களுடனிருக்கில் பிதா கௌமார

வத்தில் மரணமென்றும் குருவுடன் கூடி பெலத்துட னிருக்கினும் மேற் கூறிய ஸ்தானம் அதிபர்களிவர்மளுடன் கூடிற் பிதாவார்தீகதிசையில் மரண மென்றும் சனி முதலாகிய பாவர்பெலத்து சுபக்ஷேத்திரத்தின் சுபபெலத் துடன் பாம்பாதல் கும்பம் மகரம் துலாம் இவைகளிலிருக்கில் தகப்பன் கரு மத்துக்கு சாதகன் பாத்தியதை யின்றி அடைவன் சாதகன் பிற்காலந்தந்தை மரணமென்றுங் குசன் கூடி இருக்கில் பிதாகுலேயான திடீறெனற் மரணமும் ராகு முதலிய பாவருடன் கடகம் விருச்சிகம் மீனத்திலிருக்கில் பிதா இராஜ தெண்டனேயில் மரணமும் சூரியன் முதலியோருடன் மகரம் மிதுனம் மேஷ மிவைகளில் இருந்து சனிமுதலிய பாவரைக்கூடி (எ, சு,) மிடத்தினிற்கில் தகப்பன் பரதேசத்தில் அல்லது மார்கத்தில் அல்லது மார்க்கத்தில் மரண பாவனென்றுங் கூறப்படும்

மேற்கூறிய ஸ்தானத்திலும் அதிபர்களும் சுபருடன்சுபக்ஷேத்திரத்தில் பெலன் பெற்று வாழில் பிதார்வகை பலவிதக்ஷேமத்தையும் யோகத்தையும் அடைவர்களென்று மிக்கயோக இராஜ பூசிதர்களாகி வாழ்வர்களென்றும் பாவர்களிருந்து நோக்கில் பிதவம்சக்ஷயமும் பலமாரு தரித்திரங்களும் மன துக்கு கஷ்ட கஷ்ட துன்பங்களையும் அடைவனென்றும் பின்மிகவுமேலாகிய ரெணத்தோருயும்சாதி ஈனராகியும் பவிப்பார்கள் இவ்வித பிதருபாகங் கூறல்வேண்டும்.

ஞானோபதேச தர்மபலன்கள்

சனி சுபக்ஷேத்திரமான கேந்திரகோணத்திலும் சுக்கிரன் அல்லது பூர்வ பக்ஷத்து சந்திரன் மகரத்திலிருக்கினும் புதன் ரவி சிம்மம் கன்னி இவை யிருக்கினும் குருமுதலியசுபர்கள்நோக்கின் மேலானதருமமும்ஞான உபதேசி யாயும் மிகுந்தகீர்த்திபெற்ற இராசசன்னியாச சத்காலக்ஷேமத்துடன் யோகப் பியாசாதி மேன்மையுடன் மிகுந்த மேலான தண்மையுடன் வாழ்வன்யென் றும் மிகவுமேலானதாகியும் வாழ்வர்கள்யென்றும் திருப்பணி முதலாகிய கீர்த்தியுடன் மேம்பாகெளும் மிகுந்த பிரபலத்துடன் கூறப்படுமென்றும் அதிக தர்மவானுகியும் வாழ்வன்யென்றும் அதிசத் சகவாசத்துடனும் வாழ்வ னென்றுங் கூறப்படும் அவ்வித ஸ்தானங்களில் பாவராகிய சனியல்லாதவ ரிருக்கினும் இராகு கேது முதலியோர் நோக்கினும் சாதகத்துக்கு அதரும் இச்சையும் எவ்விதத்தையும் நம்பாதவனுய் குரூரியாகிப் பல கவலையுடனும் வாழ்வனென்றும் அறியப்படும்.

அவர்கள் சுபர்களும் பாவர்களுமாகியிருக்கில் சாதகனுக்கு சமபக்தி யுடையவனுகி வாழ்வனென்றும் அறியப்படும்.

சுக்கிரன் சனி இவர்கள் பெலத்துடன் சூரியன் கேந்திரத் திரிகோண விராசியில் பெலமான சுபக்ஷேத்திரங்களிலிருக்கில் சாதகனுக்கு பிதுரார்ச்சித வீர்த்தி உண்டென்றும் இவர்கள் (சு, அ) மிடத்தில் பகையாய் பகையோ

ருடன் அபெலனுகி அசுபர்களின் வீடோரிகிற்கில் பிதுரார்சித மில்லாதவனென்றும் கூறப்படும். இவ்வித காரகனும் சனி முதலியபாவருடன்கூடி இருக்கில் பிதுரார்ச்சிதமின்றி பிதுர்ஸ்தானத்தைவிட்டு இழப்பனென்றும் பாபர்கள் நீசம்பெற்று மகரம் முதலிய கன்னியில் இருக்கினும் அவ்வதிபன் பகைவீட்டிலல்லது பாவருடன் துலாம் விருச்சிகம் கும்பம் மீனம் இவையில் புதனுங்கூடி இருக்கில் தகப்பன்பொருள் கடனுக்கு மிராசதெண்டனைக்குங் களவுக்குஞ் சரியாகித் தலம்விட்டு இழந்து தரித்திரனுவனென்றும் அந்த இடத்தோர் பெலத்துடன் குரு முதலாகிய சந்திரன் சுக்கிரனைப்பற்றி இருந்தாலும் பெலத்துடன் சுபர் பாவருடன் விருஷபம் மிதுனம் சிங்கம் மீனமிவைகளில் இருக்கில் தகப்பன் பொருளின்றி நஷ்டமுண்டாகி சுயாற்சித பிரபலத்தைச்செய்து அதிக கீர்த்தியுடன் வாழ்வனென்றும் மிகுந்த இராசவெகுமான சன்மானங்களை யுடையவனுவனென்றுங் கூறப்படுமென் றறியவேண்டியது.

கருமஇராச்சிய பலன்கள்

சனி உச்சனுகி அல்லது மகரம் கும்பம் கடகம் இவையில் குரு சுபக்ஷேத்திரயுதனுகி நோக்கமுற்று சுக்கிரன் சந்திரன் கேந்திரக்களிலிருக்கினும் சுக்கிரன் சிங்கம் மகரம் கும்பம் இவையிலும் குரு கும்பம் விருஷப கடகத்திலும் இருந்து சந்திரசம்மந்தமுற்றிருக்கில் சாதகன் இராச்சியாதிபனுகி நல்ல கிருத்தியங்களை தனகுடும்ப சத்கருமனுக வாழ்வன், சனி முதலாகிய பாவர்கள்பெலத்து சுபர்கள் பெலமற்றவிடத்தில் இருக்கில் சாதகன் இராச்சியம் கிருமம் பூமிமாத்திரம் உள்ளவனுகி அக்ருத்தியங்களையும் அவக்கியாதிகளையும் பெற்று அசத்கருமனுவன் குரு முதலியோர்மாத்திரஞ் சுபக்ஷேத்திர சம்மந்தயுதனுகி கருமம் அல்லது ஐந்திலிருந்து பாவர்சேர்ந்தாலும் பார்த்தாலும் சனி பொன்கெட்டாலும் நல்ல கருமகுலத்தில் செனித்துந் தரித்திரனுய் கருமகிருத்தையின்றி பாபத்தொழிலப்புரிவன், சனியல்லாத மற்றபாவர்களே பகை நீசம்பெற்று (கி) (o) இடங்களிலிருக்கில் பாபகுலத்தனுகி பாபத்தொழிலையேபுரிவன் அதைச் சுபர்கள் பெலவானுகினின்று நோக்கினும் இருக்கினும் ஹீனகுலத்தில் பிறந்தாலும நல்ல கருமஞானுகி மிகவும் மேலானுகி சொல்ப பூமியையடைந்து மானியாகி வாழ்வன் செவியாவன். கும்பம் சிங்கம் கன்னி மீனத்தில் குருவும் சுக்கிரனுங் கன்னிநீங்கிய இடத்தில் குடி பெலத்துடன் குசனேக் குடியும் குசனுக்கும் சுக்கிரனுக்குந் தசமாதிபதி தசமம் இந்தவிடத்தில் பெலத்தோர் சுபராய்வாழினும் கேந்திரகோணவிராசி, உச்சம்பெற்றிருக்கில் மண்டலாதிபதியென்றும். குரு மாத்திரும் சேர்க்கையில் வலுத்து ஸ்தானுதிபதி பெலத்து கோணத்தில் மாத்திருமிருக்கில், தேசாதிபனென்றும் சூரியனுடன்வலுத்து புதன் குடில் சிலகண்டங்களுக்கு அதிபனென்றும் சுக்கிரன் சுக்ஷேத்திராதி பெலத்துடன் வலுத்து சந்திரனும் பெலக்கில் சில கிருமாதிபதியென்றும் புதன் தனித்து குசனுங் குடி இருக்கில் சில பூமிகளும் அல்பகிருமத் தலைவனென்றும் சுக்கிர

னும் குசன் சனி வலுத்துநீற்கில் சாதாரணமாய் அல்பபூமியாதிபனுகியும் ராகு முதலிய பாபபலத்தோர் குடி இருக்கில் பூமி இன்றியும்.

கிரக கேந்திர மின்றியும் மூன் சொல்லாதொழிந்த இடத்தில் பாவ ரல்லது சுபரிருப்பினும் அல்பபூமியும் பாவரே பெலத்துடனிருக்கில் பூமி இல்லாதவனுகியும் பாபர் சுபர்கலந்து நீற்கில் கிரகமுதலாகிய அல்பமேன் மையு முண்டாகும் என்றறியவேண்டியது.

சீவன பலன்கள்

சூரியன் புதன் கும்பம் விருஷபம் இவையிலிருக்கினுங் கன்னிமிது னத்திலிருக்கில் சனி கூடியல்லது தனித்து இருக்கிலும் சாதகனுக்குவியா பார சீவனமும், குசன் கூடி இருக்கில் இராசாங்கசம்மந்த வியாபாரமும், சுக்கிரன் முதலியோர் இருக்கில் சாஸ்திரு தி வித்தையின் சங்கீதமுதலானவை களாலும் குரு முதலியோர் சூரியனுடன் சந்திரனிவர்களிருக்கில், சாதகனுக்கு மிகவுமேலான இராசவதிகாரு தி ஜீவனலாப மேன்பாடுகளும் மிகவுமேன்மை களும் மேலானசீவனமும் ராகு சனி இவர்களுக்குப் பகையுடன் கூடியோர் களும் மதியுங் கூடி இருக்கில்; அடிமைத்தொழில் சீவனம் சனி சுக்கிரனுடன் பாம்புகூடில் திருட்டு முதலியபொய்த்தொழிலு முண்டாகுமென்றும் மிகவும் மேன்பாடுகளுஞ் சீவனயோக பிறபலனுகி வாழ்வனென்றுங் கண்டறியவேண் டியது. சனியுடனும் சனிக்கி பத்தாமிடத்திலும் அதிபதிகளையும் இவ்வடை வே பார்த்துக் கூறல்வேண்டுமென்றறியவும்:

இதில் சனியுடனுங் குருவுடனும் சனிக்கி பத்து பதினெஞ்ரு மிடத் தோனுடனும் கூடியதும் கும்பத்தினின்ற கோள்களின் பெலபெலனுக்கு இசைந்தபடி யெண்களை யொன்றுபடுத்தி அந்த ராசி யெண்ணிற் கொடுக்க வந்த மிச்சத்தை மாதம் (கசுக்கு) முதலில் ஆரம்பலாபமடையும் பொன்கணக் கென்றும், அந்த ஸ்தானத்தோடு கன்னியுடனும் புதனுடனும் இருக்குங் கிரகயெண்களை பெலாபெலப்படிக்கி பொன்ருக்கி இருப்பின் யெண்ணிற் பெருக்கி அத்துகை சுபபெலத்தோர் ஜாஸ்தியாக கொடுத்திருக்கில் அத்துகை ஜீவனமுடிவில் பிறபோஷன் யென்றும், பகை பெற்ற அபலத்தோர் குடுத்த துகையாகில் அவ்வளவு துகையும் நஷ்டத்துடன் ஜீவனத்தில் லாபமின்றிப் போகுமென்று கண்டு உரைத்தல் வேண்டும்.

உச்ச கேந்திர கிரகசுபத்தோர் கொடுத்த துகையாகில் இரெட்டித்தும் ஆகூயாகி திரிகோணமாகில், (கவ) பங்கு சாஸ்திசெய்தும் நட்பாகில் அறை குறைத்தும் பகையாகில் முக்கால்பங்கு குறைத்தும் நீசமாகில் (அ-ல்) ஒரு பங்காகக் குறைத்துவிடல் வேண்டுமென்றும் அப்படிக்கி குரைத்த துகை பொன்தனக் கணக்கென்று கூறல்வேண்டும்.

விருஷபலக்னத்தின் லாபமும் விரய பலன்களுங் கூறுவன

லாப பலன்கள்

குரு சனிலாபத்துங் கன்னி துலாத்தும் தனித்திருக்கினும் விருஷப கடகத்திலிருக்கினும் லாபமதிகமு குன்சந்ததி வீர்த்தியுண்டென்றும் சனி மாத்திரமிருந்து பாவர்கூடவாவது பார்க்கவாவது இருக்கில் லாபமுண்டு முன் னோர் கிடையாதென்றும் சூரியன் புதனிருக்கினும் அவ்விதமே கூறவேண்டி யது.

சுக்கிர சந்திரன் முதலியவர்கள் மீனம் மகரம் விருஷப சிங்கத்திலிருக் கில் அதிக லாபத்தை யுடையவன் மற்ற ராசியிலாவது கூ ஸ்தானங்களில் பாவருடனிருக்கில் கடனுண்டாகுஞ் சிலவு சாஸ்திரலாம் பாவரினும் விரயஞ் சாஸ்தியென்றும் சுபர்னோக்கில் லாபம் கையில் மீருமென்றும், சனிமுதலி யோர் (ம, க) லும் குரு லக்னகேந்திராதிகளில் பெலத்துடனிருக்கில் மூத்த சந்ததி அதிக வீர்த்தியோடு யோகபரபலமும் மிகுதியான பொருளோயு மனு கூலத்தையும் பொருந்திவாழ்வன் யென்றும் அவ்வித குருவையல்லது ஸ்தா னத்தை சனி ராகுவுடன் உற்றபாவர்கள் ஸ்திர ராசியில் நின்று னோக்கில் மூத்தோர் சித்தமில்லாதவராய் புத்தியின்றி ரோகியாகி பித்தரோகிகளாய் வாழ்வார்கள் யென்றும் இதிலவர்கள் சனி சுபபெலத்துடன் ஸ்தானந் தோஷ மின்றி இவ்விதமிருக்கில் பெண்சாஸ்தியான சனனத்தையு மடைவார்கள் யென்றும் லாபவீர்த்தி செய்யும் மிகுந்த மேலோராய் வாழ்வார்கள் யென்றறிய வேண்டியது

விரயம் தேசாடன பலன்கள்

குசன் பெலத்து சிங்கம் மகரம் விருஷப விருச்சிகத்தில் குரு சுக்கிரர் முதலியவர்களுடன் சுபபெலத்துடைவனாகி வாழில் இராஜவனுகூல பெருங் கீர்த்தியுடன் அன்யதேச சஞ்சாரத்துடன் வாழ்வர்கள் கேதுபுதன் கூடி யிருக்கில் மத்தியில் அன்னியதேசத்தில் சீவனந்திடீரென்று கோல உடனே குறைந்து பலகலையடைவார்கள் இராச விரோதமுண்டாகும்.

சூரியனுடன் முன்னோர்கூடி ராகுகேது இருக்கில் கெங்காதீர்த்தயாத்தி ரையுண்டாகும் சந்திரன் முதலியோர் மேஷத்திலாவது மீனத்திலாவது பாவருடன் கூடினலுந்தனித்தாலு மிகவுந் தேசாடனம் குசன்சுக்ஷேத்திரனாகி சுபர் கிரகத்தில் சுப சம்மந்தத்துடனிருக்கில் தன்னிருப்பிடத்திலே இருந்து கெங்காஸ்னானதி தீர்த்தயாத்திரை தேவாலயதெரிசன பக்தி செய்வன் விச் சையான போக்கியவதிக சுகியாவன் பாவருடனேகூடினு மிருக்கினும் ஸ்தா னாதிபதி பாவருடன்கூடினும் பரதேசத்தில் கஷ்டத்துடன் நிர்வன் விரய மாகும் பூர்வார்ச்சிதம்கெடும் மற்ற இடத்திலிருந்து அசுபரல்லதுசு பர்சேரில் பரதேச யாத்திரையின் மேலே வெகு காலந்தாமதித்து சீவனமல்லது முயற் சியைசெய்து கீர்த்திபெறுவன் என்றவாறு.

குரு முதலிய குசன் புதன் சனி யிவர்களிலொருவர்கள் மேஷம் தனுசு கடகம் கன்னி துலாம் இவைகளிலிருந்து சுபர் கூடில் விரயமதிகன் பாபர் கூடில் விரயமிடான் புதன் முதலாகிய பாவர் சுபரிருவருங் கலர்ந்து கூடில் லாபத்திற்குச் சமவிறயமுண்டாகும்.

லாபவிரயங்களைக் கணிதமூலியபங்குளாகக் குறிப்பிடப்படும்

குசனுடனும் மேஷத்திலு மிருக்குஞ் சுபத்துவ பெலனுக்குரிய தூகையையொன்று படுத்தி அவ்விராசி யெண்ணில் கழித்த சேஷம் விரயப் பங்கு யென்றும் குருவுடனும் மீனத்திலுமிருந்த கிரக சுபபெலத்துக்குறிய யெண்களை யொன்றுபடுத்தி (கஉ) கழித்த சேஷம் லாபமென்றுங் கூறப் படும்.

இதில் லாபத்திற்கு விரயங் கம்மியாஞல் தனயோக லாபவானென்றும் விரயமதிகமாஞல் கடனுளியென்றும் அத்தூகையை ஒன்றுக்கொன்று பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷமும் அதில் வந்த ஈவை (டு-ல்)பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷமேதுவோ வந்த சேஷத்தூகை திசாபுக்தியாகக் கொண்டு அந்த திசாபுக்திவறை விரயலாபமதிகம் கம்மிரெணம் யென்ற பலன்களை ஆராய்ந்து உரைக்கவேண்டும்.

மிதுனலக்கினபாவ பலனும் முதலில் குணு ✓ குணமும் உணர்த்துகின்றனம்

மிதுனலக்கினத்தில் பிறந்தோன் புகழுடையவன் லெச்சையுள்ளவன் கபடி ஆசாரபரன் இருசொல்லன் நல்லவிரதம் பூணுவன் தன்காரியத்திற் பிரியன் பித்தரோகி சத்தியவாக்கன், (ரு) வருஷகாலம் அபமிருத்து (டு-ல்) அக்கினி சமான கெண்டம் (அ-ல்) ஆயுதபீடை (கo-ல்) சத்துருசிரியோரால் கெண்டம் (கஅ-ல்) வாதவாயுவு பாதை (உஅ-ல்) கண்ணேய் விரணநோய் சுபர்கள் வீக்ஷணியம் ஷெலக்கினத்திற் கிருக்கில் மிகவுமேலான வயது ஷூ (சுடு) வரை தீர்க்கமென்றுங் கூறப்படுமென்றும் அறியவேண்டியது.

சுக்கிரன் புதன் சுபர்களென்றும்
ராகு குரு சனி யோககாரகர்கள் யென்றும்
சூரியன் சந்திரன் குரு மாரகரென்றும்
கேது குசன் பாபியென்றும் பெயராகும்.

இதில் சூரியன் குசன் கேது குரு ராகு இத்திசைகளில் சுக்கிரன் சனி ராகு குசன் இவ்வித புக்திகால மாரகவதிகாறிகளாகியும் தேகாரிஷ்டாதி துக்கபலன்களைக் கொடுக்கப் படுவர்களென்றும்.

மிதுனலக்னத்தின் பாவதிசாபுக்தி காலநிர்ணய பலன்களாவன

சாதகவரிஷ்டம்

குசன் கேது திசையில் சந்திரன் ரவி குரு ராகுவிலும்
ராகு திசையில் சனி புதன் குசன் சுக்கிரன் இவ்விதபுக்திகளும்
குரு திசை தனது புதன் சூரியன் ராகு புக்திகளிலும்.

சனி திசை சுக்கிரன் ராகுவிலும் ஜாதகருக்கு தேகவரிஷ்டம் ராச விரோதம் அலைச்சல் கஷ்ட நஷ்டம் ரோகம் சத்துருபாதை குடும்பதுக்க மிவ்வித யோகபங்க பலன்களைக் கொடுக்கும்.

யோகதிசையாவன

சுக்கிரன் புதன்றிசையில் சந்திரன் புதன்சுக்கிரன் சனிஇருந்தபுக்தி களிலும் சனிதிசையில் ராகு புதன் சுக்கிரன் இவ்வித புக்திகளிலும் குரு திசையில் சந்திரன் ராகுவிலும், பிரபல இராசயோகஞ் சோபனம் குடும்ப விர்த்திகளையும் மிகவு மேலானயோகத்தையும் பூமி கிரகவாகன க்ஷேத்திர லாபங்களும் மேன்பாடாகிய சுகசௌக்கியங்களையும் சிவனலாபம் விவாத செயம் சத்துரு செயங்களையும் அடைந்து இராசயோகவானுக்கி கீர்த்தியுடன் பிறபலத்திற்கு உண்டாகுமென்று மிகுந்த மேனபாடுகளும் சுகசௌக்கிய உத்தமபலன்களாகியும் நடந்துவரும்

இம்மிதுனலக்கினத்திற்கு இத்திசைகளமாரம் யௌவனம் வார்திகத் துக்குள் வாராவிடில் யோகசாதகருக விருந்தபோதிலும் துக்க பலன்களே யே அநுபவிப்பனென்றியவேண்டியது.

மாதுரு அரிஷ்டம்

சந்திரன்றிசை சனி ராகு சுக்கிரனும்
புதன் திசையில் குரு சனியிலும்
சுக்கிரனில் சனி ராகு சந்திரனிலும்
ராகு திசையில் குரு கேது சுக்கிரனிலும்
குரு திசையில் தனது சனி சுக்கிரனிலும்

மாதுரு கருமகண்டம் மாதுரு பகைதுக்கம் பலகஷ்டமுண்டாகும்.

பிதுர் அரிஷ்டம்

சூரியன் கேது திசை சனி கேது குருவிலும்
ராகுதிசை சந்திரன் சூரியன் ராகு புதனிலும்.
சனிதிசை செவ்வாய் குரு சனியிலும்
புதன்றிசை சுக்கிரதிசை ராகு சுக்கிரன் சந்திரனிலும்

பிதுருகருமமும் பிதுருவுக்கு தேககண்டம் குடும்ப துக்கம் பிதுரு சகோ தரவழித் துக்கமுண்டாகும் யென்றறிய வேண்டியது.

சகோதர வரிஷ்டம்

குசன் கேது திசையில் சனி ராகு சுக்கிரன் புக்திகளிலும் குருபுதன் திசையில் சனி கேது புதனிலும் சகோதரவரிஷ்டம் தேசபிருஷ்ட்டம் துக்கம் பலவகை துக்கசோகமும் உண்டாகும்.

களத்திர வரிஷ்டம்

சூரியன் சுக்கிரன் திசையில் சனி சந்திரன் குருவிலும் ராகு சனி திசையில் சுக்கிரன் கதிர் புதன் ராகு புக்திகளிலும் குருதிசை தனது கேது புகர் மதி இந்தபுக்திகளிலும் தளத்திரதோஷம் நேருமென்றும் அறியவேண்டியது.

புத்திர வரிஷ்டம்

குரு ராகுதிசையில் சனி புகர் குசன் புக்திகளிலும் குசன்றிசையிலும் கேதுவிலும் புதன்குரு ராகுவிலும் சுச்கிரன்சூரிய திசையில் ராகு தனுசு சுக்கிரனிலும் கெண்டமும் புத்திரதோஷமும் துக்கங்களையும் கொடுக்கும்.

முதலாவது ஆயுர்பாவங்கள்

புதன்மிதுனகன்னிதனுசுவில் சூர்யனுடன் கூடியும் கேந்திரத்தில் குரு சுக்கிரன் பாபத்துவ சம்மந்தமன்னியிலும் சஷ்டனதிடமல்லது துலாத்திலிருக்கினும் சந்திரன் பூரணப்பலவானுகி கேந்திரகோணத்திலிருக்கிலும் சாதகனுக்கு ஆயுர்பாவம் வருஷம் (ஙக) வறையும் இதில்மேற்படி ஸ்தானங்களில் சுபர்கள் மூன்று பாபரைக்கூடி நீசம் பகைபெற்றிருக்கில் வருஷம் (எக) யென்றும் சந்திரகேந்திரமாகில் பலத்துடனிருக்கில் வருஷம் (அச) யென்றும் புதன்கூடி நீசம் பகைபெற்றிருக்கினும் குருகேந்திரத்திலும் இருக்கில் சாதகனுக்கு வருஷம் (எஉ-ம்) குரு சனி புதன் இம்மூவர்கள் தனுசு கடகதுலாம் மீனம் மேஷமிவையி லிருக்கினும் சிலபாவரைக்கூடினும் நோக்கினும் வருஷம் (சுசு) யென்றும் மற்றயகும்பம் மீனம் விருஷபம் சிங்கத்திலிருந்து சந்திர கேந்திரமாகிப்பெலத்துடன் புதனிருக்கில் வருஷம் (நிக) யென்றும் இதில் குரு அல்பனுகி சுக்கிரன் கேந்திரகோணத்திலிருக்கினும் புதன் பெலத்து முன் ராசிகளில் சூரியனைக்கூடி இருக்கில்வருஷம் (நிச-க்) குள் யென்றுப் சுக்கிரனும்பெலமற்று புதனுஞ் சனியும் பெலத்துடன் இருக்கில் வருஷம் (சஅ) யென்றும் சூரியனின்ற புதன் தனித்து மேற்படி ஸ்தானத்திலிருந்து சந்திரபெலன் குரு வீக்ஷணியலக்னமல்லது புதனுக்கு இருக்கில் வருஷம் (கூச) யென்றும் புதன்கெட்டு சனிமாத்திரம் பெலவானுகி குரு முதலிய சுபநோக்கமின்றி இருக்கில் வருஷம் (உக) யென்றும் பாவரே விருஷபங் கடகத்திலும் அல்லது மகரம் விருச்சிக மிவைகளிலும் புதன் பகை

நீசம் பெற்றிருக்கில் வயசு வருஷம் (கசு-க்) குள் மரணமென்றும் பாப பெலத்துடன் குரு தனுசு மகரம் விருச்சிகம் மேஷமிவைபிலும் பாவருடன் கூடியும் சனி பகையும் பெலமற்ற இடத்திலிருக்கினும் பாம்புமுதலியோர் கூடில் வயசு வருஷம் (கஉ-க்) குள்ளயே பாலாரிஷ்டத்துடன் உண்டாகு மென்றும் அறியவேண்டியது.

சந்திரனுடனும் (உ, கஉ-லுங்) கடகம் விருஷபமிவைகளில் சனி செவ் வாய் பாம்புகுரியன் இவர்கள்கூடி இருக்கினும் இவர்களில் மூன்றுக்குள் பட்ட கிரகங்கள் மேற்கூறிய இடத்திலும் புதன் பெலமற்றுங் குரு முதலி யோர் பார்க்காமலும் கூஷீணசந்திரனுகிவிருச்சிக மகரம் மிவைகளில் மேலே சொல்லிய பாவரைக் கூடியிற்கினும் (ம-க்) குள் (ம) மாதம் (ம) வருஷத்திர்க் குள்ளே தாயுடன் சிசுமரணமாகும் இதில் சந்திரனை குரு சுக்கிரன் பார்ப் பதும் விருஷபங்கடகம் மிதுனம் கன்னி கும்பத்தில் சந்திரனிருந்தும் குரு முதலியவர் தனுசு கும்பந்துலா மிதுனத்தில் இருக்கிலும் இவ்வித பாபர் சேரி னும் பாலாறிஷ்டங்கள் வயசு (எ. ச) வரைகண்டி உடனே சுகமாகிவிடும் ஆயுள் தீர்க்கமாகுஞ் சிங்கம் மீனம் மேஷம் இவையில் சுபரிருந்து பாபிகளைக் கூடி புதன் சூரியனுடனும் பெலத்துனிற்கில் குழந்தைக்கு மாத்திரம் பாலா றிஷ்டமும் சந்திரன் மாத்திரம் கூஷீணிவிருச்சிக மரத்திலிருக்கினு மல்லது பகை இடத்தில் சனி பாம்பு குசனேரவியைக்கூடி இருக்கில் தாய்மாத்திரம் மரணமாவாளென்றும் இவர்களை குரு சுக்கிரன் நோக்கினலும் கூடினலும் பாலாரிஷ்டங்கண்டி உடனுக்குடனே நிவர்த்தியாகி விடுமென்றுந் தாய்க்கும் பிணிகள் கண்டி நிவர்த்தியாகு மென்றும் அறியவேண்டியது

2-வது தனகுடும்ப வாக்குபலன்

சந்திரன் குரு கேந்திரத்திலும் கடகம் விருஷபத்தில் புதன் சுக்கிரன் யிருக்கினுங் குருசந்திரனிருந்தாலும் பார்த்தாலும் புதனுக்கு (உ, கஉ) மிடத் தில் இவ்விதசுபக்கிரகமே பெலத்துடனிருக்கில் வாக்குசத்தியவந்தனும் வாக் பலிதமுடையவனும் வாக்கைவிற்று மகாகீர்த்தியடைவ னென்றும் குடும்ப விருத்தியுந்தனத்தையும் அளவற்றபொருளை யடைவனென்றும் இதில் உச்ச கிரகம் அதிகமாகி விருஷபத்தில் கன்னி மீனம் தனுவில் சந்திரன் குரு விருந்தாலும் இவர் நீங்கிய சுக்கிரன் புதன் உச்சசொக்ஷேத்திரமாய் குருவுடன் சேராமல் குருதனித்து இருக்கில் கோடிப்பொருளதிகாரி யென்றும் கடகம் விருஷபத்திலும் குருவுக்கு (உ, கஉ)லும் சந்திரன் சுக்கிரன் பெலத்துட னிருக்கிலும் வேறுபாவர் நோக்காமலிருக்கில் லக்ஷாந்திரபொருளும் வாக்கு ஞாயமும் குடும்பபிரபல விருத்தியில் பெண்சந்ததி அதிகபிரபலமென்றும் மேற்கூறிய இடத்தில் சூரியன் இருக்கிலும் சுக்கிரன்சந்திரன் சேராமல் பார்க் கிலும் சந்திரன் கூடினலும் (ம) சூ. ம. பொன்னுள்ள தனவந்தனென்றும்

குரு சுக்கிரன் பார்வை இல்லாமல் சந்திரன் கேந்திரதிரிகோணத்தில் பாவ ருடன் கூடினலும் மேற்கூறியஇடத்தில், சுபரிருக்கிலும் சகஸ்திரக்கணக் குள்ளபொன் தனமுடையவனென்றும் சிலநாள் வாக்கு செல்லும் சமமான குடும்ப விர்த்தியையும் அடைவனென்றும் பாவருஞ் சுபரும் கலர்ந்து விருஷ பங் கடகத்திலும் சுக்கிரனுக்கு (உ, கஉ-ல்) பாவர் சுபருங்கலந்து கொஞ்சத் துக்கு கொஞ்சம் சுபபெலமிருக்கிலும் சந்திரன் கடகம் மிதுனம் கன்னி துலாம் தநுசு கும்பம் மீனம் இவைகளிலிருந்து சனி செவ்வாய் இல்லாத மற்றசூரியன் புதன் கூடினலுமல்லது குரு சுக்கிரனில் யார்கூடினலும் அல்ப மான சுபபொருளை விர்த்திசெய்து பிதுரார்சித தனமும் உண்டென்றும் மேற் கூரிய இடத்திலும் விருஷபங் கடகங்குருவுக்கு (உ, கஉ-ல்) பாபிகள் பகை நீசம்பெற்று சனிசெவ்வாய் சூரியன் புதனிருந்தாலும் தரித்திரனுய் தனமின்றி கடனுளியாகிகடனுல் பலவகை யடைவனென்றும் இவ்விதத்துடன் குருவா வது சுக்கிரன் புதனுவதுகூடி ஸ்தானத்திலாவது ஸ்தானாதிபதியாகி சந்திரன் குரு இவர்களுடன் இருக்கில் சாதகன் சிலநாள் முன்பொருளைத்தேடித்து கடனுளியாகி பின் காலம் யோராளமானபொருளை ஆர்ஜிதம் பண்ணுவனென் றும் பாவர்களேவலுத்து இருக்கில் அசத்தியனுகியும் கடநாளியாய் பலகவலே யடைந்து வாழ்வானென்றுங் கூறல்வேண்டும்.

கடகம் விருஷபம் இதில் சூரியன் சனி சுக்கிரனே கூடியாவது சுக்கிர னேப்பார்த்தாவது இருக்கில் நேத்திரங்கெடும் விருஷபத்தில் மாற்றிரு மவ் விதம் ரவியிருந்து சுக்கிரனேப் பாவர்கூடி மகரம் விருச்சிகம் சிங்கத்திலிருக் கில் மேகனீர் நேத்திரம் இடதுகண்ணேக்கெடுக்குமென்றும் கடகத்திலிருக்கில் வலதுகண்ணேக் கெடுக்குமென்றும் மேற்படி ஸ்தானத்திலும் அதிபதியும் விருச்சிகம் மகரம் கடகம் சிங்கம் இவையிலிருந்து குசன் சுக்கிரன் சனியை யல்லது கெட்ட பெலமற்ற இடத்தில் பாவரைக்கூடியிருக்கில் பிறவிக்குருட னென்றும் இரண்டுபாவரிருக்கில் மத்தியகாலகுருடும் ஒரேபாவரிருக்கில்குசன் கூடி வியாதியினுல் கண்ணுக்கு ஊனமும் இராகுவைக்கூடில் கண்மறைவும் புதனேக்கூடில் மாலேக்கண்ணும் சுக்கிரனேக்கூடில் வெள்ளேபடர்ந்தகண்ணும் கேதுவைக்கூடில் ரெத்தக்கண்ணும் சூரியன் பெலநற்றுப்போனுல் கடைக் காலத்தில் கண்ணே இராதெனறும் குரு முதலியோர் சுபர் இருந்தாலும் பார்த்தாலும் சந்திரன் மிதுனம் கடகம் கன்னி தனுசு மீனம் விருஷபத்தில் குரு வீக்ஷணியம்பட யெவர்கூடினின்றாலும் கண் தீர்க்கம் பாபர்கூடியிருந்தால் அல்ப உபாதிதோன்றி சுகமாகும் மற்ற இராசிகளிலிருந்து பாபிகளேக்கூடில் கண்பீடையெப்போதும் இருக்கும் சுபர்பார்க்கில் வந்து வந்து நீங்கும் சுபரே இருந்துபார்க்கில் தீற்கதேந்திர சுகவனுகலுகி வாழ்வன். குடும்பவிருத்தி யும் மிகவும் மேலான செல்வாக்கும் அல்பமானவனுய் பொருளில்லாதவனுகி னும் யாரும் அவனே சத்தியனென்று நம்பி மிகவும் யோகவானுவான் யென்ற வாறு.

தனபாவகணிதங் கணிக்கும்வகைகள்

சந்திரனுடனும் கடகத்திலும் மீனத்திலுங் குருவுடனுங் கூடியதும் குருவுக்கு (உ) மிடத்திலிருக்கும் கிரகமும் அதிபதிகளின் கூடஇருக்கும் கிரகபெலனுக்கு இசைந்தபடி கிரகயெண்களேயெடுத்து ஒன்றுபடுத்தி அந்த இராசியெண்ணில் பெருக்கிவைத்துக்கொண்டும் உச்சகிரகம் சுபர் அதிக மானால் சமத்துகைபோட்டு மூன்றுதடவை பெருக்கியும் ஆகுமானால் (உ) தபாவும் நட்பானால் (க) தபாப்பெருக்கியும் கண்டதுகையுள்ள பொன்பணத் தை யுடையவனென்றும் பகை நீசமானால் ரூணமென்றுக்கண்டும் துகையின் யெண்ணத்தைக் கூறப்படும் யென்றவாறு.

சனியுடனும் குசனுடனும் விருச்சிக மகரத்திலுமுள்ள கிரகயெண்களே சுபபெலனுக்கு இசைந்தபடி யெடுத்து இராசியெண்களால் ஒவ்வொன்றையும் பெருக்கி முன்போலவே உச்சம் நட்பு ஆகுப்படிக்கி பெருக்கிக்கொண்டு கண்டதுகை கடனென்றும் இவைகளில் கனமானாலும் ரூணமானாலும் பார்க்கவேண்டில் விருச்சிகம் மகரமாகில் கிரகம் இராசியெண்களில் பாதிபாதி யாயும் பகை வீட்டி கிரகமானாலும் விருஷபம சிங்கம் மேஷம் கடகம் இவ் விதங்களில் இருந்த கிரகம்ராசியாகில் அவ்வெண்களில் கால்பங்காக்கி யெடுத் துக்கொண்டு பார்க்கவும் மற்ற ராசியில் சுபக்ரகமாகில் சுபபெலன் பெற்றிருந் தாலும் அவரவர்கள் துகைகளேயும் பெலனுக்கிசைந்தபடி யெடுத்துக்கூறல் தனமும் ரூணமும் கண்டு சொல்லவேண்டியது.

3-வது சகோதிராதி பலன்கள்கூறப்படுகின்றனவாம்

சிம்மத்திலுஞ் சூரியனுடனும் குசன் கூடிலும் ராகு கேது முதலி யோர் நீற்கினும் சுபர் ஷை ஸ்தானங்களிலாவது அதிபனுடனாவது பார்க்க வல்லது இருக்காமலிருக்கின் சாதகத்துக்கு சகோதிர மடையானென்றும் சனியாதல் புதனுதல் கூடினிற்கின் செனித்திறக்கப்படுமென்றும், ஜாதக னுக்கு சகோதிரம் இருக்கப்படமாட்டாது என்றும் சனி இராகு முதலிய பாவர்கள் சிங்கம் மேஷத்திலிருக்கினும் குசனுடன் கூடி இருந்த ஸ்தானங் களினிற்கினும் குசனுக்கு மூன்றுமிடத்தினுற்கினும் சகோதிர விர்த்தி கிடை யாது நீசசம்மந்தமாகி இருந்தாலும் பாவர்கள் பகைபெற்று மேற்கண்ட ஸ்தானங்களிலும் ஷை கிரகம் நீற்கினும் உடன் பிறப்பு விருத்தியடையாது இவருடனும் பாவர்களுடனும் சுக்கிரன் கலந்து ஆண்ராசியில் நீற்கில் அல்பமான பெண்ணென்றும் புருஷனென்று உண்டெனறும் சந்திரன் இருக் கில்புருஷனைவிட ஸ்திரீசகோதிர வல்பமுண்டென்றும் அறியப்படும் சந்திரன் சுக்கிரன் இவர்கூடிநீற்கில் பெண்ணேவிருத்தி சகோதிர மென்றும் புத னிருக்கில் அவ்விதம் பெண்சந்ததியுடன் புருஷன் யேகவிர்த்தி யென்றும் குருசூரியன் மாத்திரமிருக்கி ல்பெண்யின்றி புருஷர்கள் பெரும்பாலும் உண் டாகி அல்பமாக நீலைக்குமென்றும் சுபர்கள் தனித்து நீற்கினும் சூரியனும்

சிங்கம் தனுசு கும்பம் மேஷத்திலிருக்கில் ஆண்சகோதர விருத்தியென்றும் புதன்கூடி சுபரே இருந்து நோக்கின் ஆண்சந்ததி சாஸ்திரியும் பெண்சகோதரம் அல்பமென்றும் சுபர்களில் குருனின்று நோக்கின் முன் பின் சந்ததி தீர்க்கமும் செவ்வாயிருந்து நோக்கினும் பாவர்பார்க்கினும் அடுத்த முன்பின் சந்ததி கெடுமென்றும சுக்கிரன் குருமுதலிய ராகு விருக்கில் சகோதர விரோதம் தனித்து குரு அல்லது சுக்கிரன் ரவி இருக்கில் சகோதர வனுகூலம் புதனிருக்கில் அதிகவல்லமை யோகனுகி வாழ்வன் யென்றும் பாவராகி சனி யல்லது ராகு முதலியோர் மூன்று (கக-ல்) இருக்கினும் நோக்கினும் அடுத்த முன்பின் சந்ததி பலவற்று நஷ்டமும் ஸ்தானுதிபதி சூரியன் புதனுடன் கேந்திரத்தில் மிதுன மீனத்திலிருக்கில் பெண் ஒன்று ஆணொன்று தீர்க்கமும் தனுசு கன்னியாகில் ஆண்குறைந்து பெண்சாஸ்தியாயும் மிருந்துவரும் இவ்விடந்தவரி னிற்கின் பிறந்த சகோதரம் பலவற்று நஷ்டமாகியும் இருவகை சந்ததி யுண்டென்றும் பாவராகிய சனி ராகு கேது குசன் கூடிலிற்கினும் நோக்கினும் செனித்தவை இறந்துவிடு மென்றும் குசன்பதி ஞென்றில் சனியுடனல்லது சுபரிருக்கில் யிரந்ததில் மூத்தவனே சாதகனுவான் யென்றும் பாவற் பார்க்கில் முன்னஷ்டப்படு மென்றும் அறிந்து கூறல் வேண்டியது

சனி செவ்வாய் மூன்று பதிஞென்றில் நின்று அதிபதியாகிய சூரியன் குசன் வலிது பெற்றிருக்கில் பிரசுத்துள்ள சகோதரங்களுக்கு மூர்ச்சை சுரம்பு சம்மந்த சிலவியாதி உடலோராக வாழப்படு மென்றும் பாவரல்லது சுபரிருக்கினும் பெலமுற்றவருகின் திடசரீரமென்மையுள்ள சகோதரர்க ளென்றுங் கண்டு கூறல் வேண்டும்.

மூன்று பதிஞென்றில் சூரியன் குருசந்திரன் புதனிவர்களிலெவர் நின்றாலும் சகோதரர்கள் மிகவும் இராசயோக பிரபலர்களாகி செயம்பெற்று வாழ்வர்கள் என்று மிகமேன்பாடும் தனதானியம் பிரபலயோக முடையவர்களாய் வாழ்வார்கள் குசனுக்கு மூன்றுபதிஞென்றையும் இவ்விதமே பார்க்க வேண்டியது பாவரிருக்கில் தரித்திரர்களாய் மிகவும் குலஹீன தரித்திரர்களாகி வாழ்வார்கள் யென்றும் கூறல்வேண்டியது (கூ-ல்) சனி முதலிய பாவரிருக்கில் பலஸ்திரீபோகன் சுக்கிர னிருக்கில் குடித்தன இராசஸ்திரீ மேலான குலப்பெண் போகம் குருவிருக்கில் உயர் குலப்பெண்போகம் குசனிருக்கில் பார்க்கில் வடுகு ஆந்திரப்பெண்போகம் புதன்முதலிய சூரியனிருக்குமாகில் மேண்மையான ஸ்திரீபோகன் ராகு கேதுயிருக்கில் தாழ் குலப்பெண் போகன் ஸ்தானுதிபதி சூரியன் முதலியோர் வலுத்தும் மிதுனம் கன்னி கும்பம் மீனத்திலிருக்கில் ரூபஸ்திரீபோகனென்றுங் கண்டு கூறல் வேண்டும். குசன் சனியுடன் கூடினலும் பார்த்தாலும் சூரியன் முதலியோரைக் கூடினலும் விதவபோகனென்றுங் கூறப்படும் குலத்தாழ்வாகும்.

சுக்கிரன் மதி சிங்கம் துலாம் மீனத்திலிருக்கில் புதன் கூடினலும் பார்த்தாலும் சங்கீதப்பிரியன் மேன்தொழில் செய்வன் பரதசாஸ்திரியாவன்

ஸ்தானாதிபதி சூரியன் புதனைக் கூடிநிற்கினும் சுக்கிரன் பார்க்கூட இருக்கினும் சுபக்கோள் மூன்று ஐந்தைபார்க்கினும் சுக்கிரனுக்கு மூன்றிலும் இவ்விதங்கிரகமிருக்கில் சங்கீதப்பிறியன் கோலாகலன் பாபிகளான சனி முதலியோர் நிற்கினும் நோக்கினும் அதிபதியுடனும் கூடில் பழயசாமானும் பழய வஸ்துக்களேயும் புதிப்பித்து சந்தோஷ சல்லாபனுய் சங்கீதப்பிறியனுய் வாக்சாதுர்யனுகியும் மானியாகியும் வாழ்வன் மற்றகிரகமாகிய சுக்கிரன் டகையோரைக் கூடினிற்கினும் நோக்கினும் ஷை பலன்கள் யெல்லாம் பிரயோசனமின்றி இருந்த வஸ்துக்களேயும் விற்று பலவாறு கஷ்டத்தடைவ னென்றறிய வேண்டியது.

சகோதிரபாவங்கள் கணிதவகையாய்க்கூறுகின்றனம்

சூரியனுடனும் சிங்கத்திலுங் குசனுச்கு (கூ, கக) இவ்வதிபனுடனும் மேஷத்தினின்ற கோள்கள் குசனுடன் னின்ற கோட்களில் பெலனுக்கிசைந்தபடி யெண்களேக்கூட்டி ராசியெண்ணில் கழித்தமிச்சம் சகோதிர லாபமென்றும் புதன் குரு இவர்களுடன் னின்ற ராசியிலும் இவர்களுடைய யெண்களேப் பெலத்துக்கிசைந்தபடி கூட்டி இவ்விராசியில் கொடித்துக் கண்டவை தீர்க்கம்:புருஷன் சந்ததியென்றும் பெண்சந்ததியென்றும்யூகித்து உரைக்க வேண்டியது.

நான்காவதுவீடு தாய்முதலிய வியாபாரபலன்களாவன

புதனும் சுக்கிரனுக்கு நாலாமிடத்ததிபனும் சுபனுகி மிதுனம் கன்னி தனுசு துலாம் கும்பம மீனமிவைகளில் பகைவருடன் கூடாமல் சூரியன் முதலிய தனக்கு இஷ்டருடன் சூரியன் புதன் கூடினுல் துலாந்தவிரமற்ற முன்சொல்லிய இடத்திலும் சுக்கிரன் ரவியுடன் கூடாமல் புதனுடன் கூடினுல் மீனம் கன்னி நீங்கியவிடத்திலும் கன்னியில் சுக்கிரனின்றியும் மீனத்தில் புதனின்றியு மற்ற இடத்தில் கூடினுலும் தனித்து குருமுதலிய சுபர்கள் நோக்கின் மாடமாளிகையுடன் கூடிய பிதுர்வீடுமுண்டு சுயமானகிரகம் அலங்காரத்துடன் சேற்வன் நூதனவாகனங்களும் கவருவங்களும் படைத்து வாழ்வன் புதன் தனித்துவாழில் அவ்வளவுவிசேஷ மின்றி அல்பவாகனமும் பரவாகனமும் சிறியகிரகமும அடைவன்.

குரு சுக்கிரன் நீசமின்றி நாலிலிருக்கினும் பார்க்கினும் மெத்தைவீடு உண்டாகும் யென்றும் குடும்பமேண்மையும் வியாபாரத்தொழிலே அதிகமாகச்செய்வன் குருதனித்தும் புதனுக்கு நாலாம்வீடு புதன்வீடாய்யிருக்கில் மேலான இராசாங்க சம்மந்தவியாபாரம் உண்டாகுமென்றும் மிகயும் மேன்பாடடைந்தும் இதில் சுபர்கள் னின்றும் பெலத்துடனிருக்கின் சாதகன் கிரகவாகன மேன்பாடு பிரபலமும் இராசபிரபு இஷ்டமும் பலவகைகிரகமுங் கட்டிடம் பலவற்றையும் அடைந்து மிகவுமேலாய் வாழ்வனென்றும் பலவரான கட்டிடங்கள் மேன்பாடுகளும் சன்மான வெகுமானமும் உன்டென்று

சுக்கிரனுக்கு நாலுக்குடையவன் குரு சந்திரனிவர்களுடன் வாழ்ந்து கேந்திர கோணத்திலிருக்கில் மிகவுமேலான பல கட்டிடங்களும் இராசாங்கத்தன்மையுடன் வாழ்வார்களெனறும் பிரபல சுகங்களும் புதன் பெலத்துட புதனுக்கு (ச, ல) மிடத்துக்கதிபனுடன் பெலத்து துலாம் மிதுனங் கன்னியிலிருக்கில் வியாபார வர்க்கத்தால் பிரபலவானுவனென்றும் இவ்வித ராசி கிரகங்களுடன் பாவராகி சனி ராகுமுதலிய பாவர்யிருக்கிலும் நோக்கினும் மிகவுமேலாகிய இராசசன்மானியாகி வியாபாரம் பூமிக் கட்டிடங்கள் பலவற்றை மேன்மையாய்ச் சேர்ப்பனென்றும் நாலுக்குடையவன் குசன்முதலிய பாவருடனிருக்கில் கன்னி மிதுனம் துலாம் தனுசு கும்பம் மீனம் இவையில் பாவருடன் கூடியிருக்கில் மிகவும்பூர்வார்சிதமிருந்து சாதகன்காலத்தில் நஷ்டமுண்டாகுமென்றும் இவ்விதஸ்தான மேன்மையில் பாவராகிய சனி பாம்பு குசனிருக்கில் பலவிதமான கஷ்டத்தையடைந்து கிரகமின்றியும் வாகனமின்றியுங் அடைவனென்றும் வியாபார முயற்சிகளால் நஷ்டமடைந்து பலவாறு துக்கப்படுவனென்றும் புதனுடனும் சுக்கிரனுக்கு நாலுக்குடையவனும் பகைகேஷத்திரம் நீசம்பெற்று சனி ராகு குசனிவரைக்கூடி (கூ, சு, அ-லும்) அல்லது கன்னி சுக்கிரனுக்கு நாலிலிருக்கில் கிரகவாகனமின்றி அலைவனென்றும் பலவகை துக்கசோகியாயும் வாழ்வனென்றுஞ் இந்தஸ்தானம் ஸ்தானாதிபதிகளுடன் பாபரும் சுபருங் கூடிஜீற்கில் பலவகை கிரகவாகனவியாபாரம் சிலகாலமிருந்து மத்தியகாலத்தில் நஷ்டமடைவனென்றும் கன்னி தனுசு சுக்கிரனுக்கு (ச) இந்த இடத்தில் சனி ராகு குசனிருக்கில் சிலசில வாகனங்கள் உண்டாகி உண்டாகி உடன் இழந்து விடுவனென்றும் பலகிரக பர இடவாசஞ் செய்வனென்றும் சுபர் வீடாய் அந்தஸ்தானாதிபதி புதனுஞ் சுக்கிரனுக்கு நாலுக்குடையவனும்வலுத்து சுபர்வீட்டில் சுபருடன்கூடி (க, ச, எ, ல, க, து-ல்) பகைநீசமில்லாதவிடத்தில் யாவருடன் கூடிஜீன்றாலும் சிலகாலந் தன் வீடிருந்தபோதிலும் தன்வாகனமிருந்தாலும் அனுபவிக்கஇடமின்றி தரித்திர வருத்தப்பட்டு பர மனுஷர் கிரகவாசமும் பரஸ்தல வாசமும் அன்னியருடைய வாகன பிரவேசமுண்டாகிப் பின் வாகனங் கிரகம் சுயமாய் நேருமென்றும் கண்டறிய வேண்டியது.

காலகணிதமாவன

மேற்கூறிய கன்னியிலும் புதனுடனுஞ் சுக்கிரனுடனுஞ் சுக்கிரனுக்கு நாலுக்குடையவனுடனுங் கூடிய கிரகபெலா பெலக்கு இசைந்தபடி ராசிகிரகயெண்களைக்கூட்டி இருக்கிர ராசியெண்ணிற் பெருக்கி (சு-ல்) கழித்தமிச்சம் வரும் கணக்குள்ள திசைபுக்திகாலத்தில் சொயகிரகவானம் வியாபார பலிதமுண்டாகுமென்றும் மேன்மையால் வாழ்வனென்றுங் கண்டறிய வேண்டியது.

மாதுருபாவபலன்கள்

சந்திரனுக்கு நாலாமிடத்தையும் அதிபனையும் கன்னியையும் புதனையுங் கொண்டு மாதுருபலன் கூறவேண்டியது.

புதன் சுக்ஷேத்திர உச்சம்பெற்று கேந்திரத்தில் சூரியனுடனுஞ் சந்திரனுக்கு நாலாமதிபன் அவ்விதமே இருக்கிலும் நான்கில் குருமுதலியோர் இருக்கினும் நோக்கிலும் மாதாவானவள் அதிக மேன்மையு மாதாவினால் குடும்பயோகமுங் அதிகாரியான மாதாவாவாள் இதில் சுபர்கள் கூடினும் நோக்கமிருந்தாலும் மாதாவுக்கு ஆயுள் விருத்தியாய் வாழ்வள் என்றும் தாய்வழிச் சந்ததி அல்ப மேன்மையான புருஷர்களின் சந்ததியல்பமும் பெண்சந்ததி விருத்தியாகவும் வாழும் புதன் பெலத்துடன் கதிரைக் கூடிவாழினும் சந்திரனுக்கு நான்காமிடங்களில் இவ்வித சுபர்கள் நின்றும் பார்த்துமிருக்கில் தாய் அல்ப மனோவிரோதத்தையடைந்து செல்வத்துடன் விருத்தாவஸ்தையில் மரணமாவள்.

புதனும் சூரியனுங் பாவருடன் கூடி கேந்திரகோணத்தில் பகை நீசம் பெற்ற இடத்திலிருக்கில் சுவுமாராவஸ்தையில் தாய் மரணமாவள்.

சந்திரன் பாவராகிய சிம்மம் விருச்சிகம் மகரம் கும்பம் மேஷமிவையிலும் கன்னியிலுமிருந்து பாவர் சுபர் கலந்து நின்று பார்த்தாலுங் எவ்வனத்தில் தாய்போகும்.

சந்திரன் புதன்யிவர் வீட்டில் மீனம் மகரம் விருச்சிகம் இவையில் பாவருடன் கூடி சனி செவ்வாய் பாம்பைக்கூடி இருக்கில் தாய்பால்யத்திலேயே மரணமாவள்.

விருச்சிகமகரத்தில் சனி செவ்வாய் பாம்பு முதலியோருடனுவது பகையோருடனும் நாலில் சனி செவ்வாய் பாம்பு இவர்களில் இரெண்டுபோ இருந்து குருமுதலிய சுபர்கள் பார்க்காவிடில் தாய் பிறந்தவுடன் மரணமாவாள் குரு பார்க்கில் தாய் சீக்குடையவளாய் தேகமிளைத்துப்பலவாராகிய கஷ்டத்தையும் வம்ச கூயமும் அடைவள் பகையாய் வாழ்வாள் பரபுருஷனைச் சேர்வள் குரு முதலிய சந்திரன் நாலுயேழிலுங் கேந்திரத்தில் புதனும் ஓர் பாபியுங்கூடி நிற்கில் தாய் யிருவராய் பலராயும் பவிப்பன் புதன்முதலியோர் சனியுடன் மேற்கண்ட கிரகத்தில் இருக்கில்சிவீகார தாயை யடைவன் சூரியன் முதலியோரைக் கூடினுலும் புதன் குருவீட்டில் சந்திரன் குரு இருந்தாலும் மிதுனம் மீனம் விருச்சிகம் விருஷபம் மிதில் புதன் ஆதல் சந்திரனுதல் மற்றொரு விரோதமில்லாத குசன் ரவி சனியை யிவரிலொருவரைக் கூடினுலும் தகப்பனுக்குப் பின் தாரமுண்டென்றும் அவளொரு தாயென்றும் இதில் குசன் பார்த்தாலும் புதனுக்கு மூனறில் சனி முதலிய பாம்பு நின்று சந்திரனுக்கு (கூ, நி) மிடமானுலும் தகப்பனுடைய மருதாரப் பெண்ணைப் புணருவன் மாதருபோகஞ் செய்வனென்றும் சண்டாளத்துவனென்றும் குரு முதலியோர் பெலத்து சுபரிருந்தாலும் பார்த்தாலும் கன்னி மிதுன தனுசு சந்திரனுடனல்லது புதனுடன் சந்திரனுக்கு நாலுக்குடையவனுடன் கூடினுலும் அவ்வித மாதரு கெமன யெண்ணம் முதலானவை அவை மூலமான அவக்கியாதி பொருந்துவனென்றும் போகஞ் செய்யானென்றுங்

கண்டுகூற வேண்டுவனவாம் அவர்களுடன் சனி ரவி கூடினுல் ஹ (ச-க்) குல் தாய் மரணமாவாள்.

சுந்திரனுடனும் புதனுடனும் கன்னியிலுஞ் சந்திரனுக்கு நாலுக்குடைய வனும் சந்திரனுக்கு யெட்டாதிபன் புதனுக்கு யெட்டாமிடத்திலும் மேஷத் திலுமுண்டாகிய கிரக பலாபலன்களுக்கு இசைந்த யெண்களோ ஒன்றுக் கூட்டி அந்தந்த ராசி பெலத்தின் யெண்ணிற்பெருக்கி (கூ-ல்) கழித்த மிச்ச மான திசையும் அந்த ஈவை (டி-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்தமிச்சத்தை புத்தி யாகவுங்கண்டு அந்த திசாபுக்தி சித்திரைகாலத்தில் தாய் மரணமென்றுங் கண்டு கொள்ளவேண்டியது. அந்ததிசை சாதகனுக்கு வராவிடில் தாய்கருமஞ்செய்த மாட்டானென்றுங் கூறல்வேண்டும்.

வித்தியா பலன்களாவன

புதன் மிதுன கன்னியிலும் சுபரைக்கூடியதில் குருவைக்கூடினிற்கின் விசேஷ இராசவித்தையுள்ளன் பாவர்கள்கூடின் மத்தியகாலத்தில் விருத் திக்கிவாராது புதன் தனுசு மேஷம் இவையில்லிற்கில் குசன் சூரியனைக் கூடினுலும் குரு கேந்திரத்தில் நின்று நோக்கிலும் இராசவித்தையும் பல வித்தையரிவன் ஸம்ஸ்கிருதத்திலும் வல்லபனுவன். (டு, கஉ, கூ, கக-ல்) புதனிருந்து அவ்வதிபன் சந்திர கேந்திரத்திலிருக்கினும் கணிதசோதிஷாதி ரசவித்தையுமுண்டாகும்.

மற்ற இடத்திலிருந்து சுபர்நோக்கினும் கூடினும் வித்தை யல்பமுடை யவன், (ச, எ-ல்) குரு சந்திரனிருக்கினும் புதன் (க, ச, எ, கூ, கக-ல்) இருக் கினும் இராஜவித்தை கணக்குமுதலிய யுக்தி புத்தியுடையனுவன் அதிக தேற்கியடையான் குருகேந்திரத்திலும் சுபர்வீடு அல்லது தனது வீட்டில் சந்திரன் புதனிருக்கில் மூன்றுவித பாஷையில் மேலான பதவியடைவன் இதில் சூரியன் சனி கூடினுல் வித்தை அறைகுறையாகும் மற்ற பாவர் கூடில் யெவ்வித வித்தையும் பிரயோசன மற்றுவிடும், குரு சுக்கிரனுல் தந்திர வித்தை கபட நாடக சூத்திரனுவன்.

யெவ்வித வித்தையையுங் கிரகிக்க வல்லபனுவன், குசன் வலுத்துகேது முதலியோர் பார்க்க யிருக்கின் மந்திராதிவித்தைபுரிவன் சுக்கிரனுகில் விவாத வித்தை புரிந்து மத்தியில் விடும்படி நேரும் புதன்கூட லிற்கினும் புதன் பெலக்கினும் காவ்ய நாடகாலங்கார ஸாஸ்திர பாஷிதனுகியும் சோதி ஷம்முதலிய வைத்திய நூலுடையவனுகியும் வாழ்வன் புதன்கெடில் இவ்வள வும் பிரயோசனமற்று வாழ்வன் புதனுக்கு நாலில் அதிபனுக்கெட்டு சனி பாம்பு முதலியோர் டி இடத்திலும் ஸ்தானுதிபதியுடன் கூடில் வித்தை யில்லான் அப்பரகாரி மூடனுவன் சுபக்கோள்அதில் கூடினுலும் பார்த்தாலும் தமிழ்ராசபாஷை தெலுங்கு சுயபாஷை பிறபலமுடையவன் பாபருஞ் சுபரு மாகக் கலர்ந்து வாழில் வித்தை மத்திமமாகி வாழ்வனென்றறியப்படும்.

காவில் சுபத்துவம் பெற்றகுரு புதன்கூடி குசனைநோக்கினும் பார்க்கினும் புதன் உச்சனுகி இவர்களைக் கூடினும் மேஷம் ரிஷபம் கன்னியிலிருக்கினும் இவனுக்கு லீகேஷபமாகிய பழம்பொருள் புதயல் இவைகள் கிடைக்கும் சனி முதலிய ராகு இவர்பகைபெற்று ஷை யோருடன் வாழில் வைத்த பொருளுங் காணமல் போகுமென்றறிய வேண்டியது.

ஐந்தாவது புத்திரபாவ பலன்கள்

சுக்கிரனையும் துலாத்தையும் குருவையும் குருவுக்கு ஐந்தாமிடத்தினை யுங் கொண்டு புத்திரபாவங்கூறவேண்டியது.

மிதுனலக்னத்திற்கு முன்பிறப்பது பெண்ணுகும் இதில் குரு குசன் பெலத்துடனிருந்து சுக்கிரன் கெட்டுப்போகிற பகூடத்தில் ஆண்சந்ததிமுத லிலுண்டாகும் குருவுக்கு டு-மிடம் பூரணசந்திரனுகி ராகு அல்லது குசன் பாவரிருக்கில் முதல் ஆண் புத்திரர் மரணம்.

துலாத்திலும் குருவுக்கைந்தாமிடத்திலும் சுபர்களாகிய குருசுக்கிர சந் திரன் சுக்கிரன் இவரிருக்கினும் குரு கேந்திரதிரிகோணத்தி லிருந்து செவ் வாய் ஐந்திலிருந்தாலும் பாபபெலமின்றிச் சுபபெலன் வலுத்திருந்தாலுஞ் சாதகனுக்கு புத்திரலிருத்தி யுண்டென்றும் சுக்கிரன் மிதுனம் தனுசு கும் பம் மேஷம் இவையில் சுபர் நொக்கத்துடன் பூர்வபகூத்து சந்திரன் பெலத் துடன் அவர்களைநோக்கினுங் கூடினும் சாதகனுக்கு புருஷசந்ததி அதிக லிருத்திகளும் குரு தனுசு கும்பம் துலாம் கன்னி இவையில் குசன் சுக்கிரன் பூரணசந்திர னிவரில் ஒருவரைக்கூடினலுஞ் சாதகனுக்கு புத்திர கருமமும் புத்திர கருமமும் புத்திர லிருத்திகளும் புத்திரர்கள் அதிகசெல்வத்துடன் வாழ்வார்கள்.

சுக்கிரன் கன்னி லிருச்சிகம் சிம்மம் மகரம் இவையில்பாவரைக்கூடி பாம்பு முதலாகியவரைக் கூடின பெண்சந்ததி தவிரப்புருஷசந்ததி மத்திம லிருத்தியில் ஒன்றிரண்டான புத்திரர்கள் உண்டென்றும் லிருஷபம் மிது னம் கடகம் மீனமிவையிலிருக்கில் சந்திரன் முதலிய பாவரைக் கூடில் பெண்ணே புத்திரபாவமென்று இதில் குரு கூடினலும் பார்த்தாலும் குசன் சூரியன் கூடினலும் பெண் சாஸ்தி புருஷன அல்பமென்றும் இதில் சுபர்கள் கெட்டு பாபிகள் வலுத்து துலாம் தனுசு கும்பம் இவையில் புதன் சனிகூடி யிருக்குமாகில் எவ்விதபுத்திரபாவமுங் கிடையாதென்றும் சூரிய னல்லது குசன் இவர்களைக்குடி புதன் வீட்டில் சனி வீட்டில் இருக்கில் சிவீகாரம் அபிமான புத்திரன் உண்டென்றும் இதில் சனி முதலிய பாம்பு கொரோராய் சுபர் பாருமலிருக்கில் ஒருவகையான புத்திரரும் பந்துவுமின்றி மரண மாவனென்றுங் கூறப்படும் குருவுக்கு எ லும் (டு) மிடத்தையு மிப்படியே பார்த்துப்பலன் கூறவேண்டியது.

துலாம் கும்பம் குருவுக்கு (டு, கூ) மிடத்தை சனி பாம்பு இவர் இருந்தாலும் பார்த்தாலும் பெண்பிறக்கில் விருத்தியும் ஆண் பிறக்கில் அவ்வித கெற்பமாதாவுக்குகூட தேக நோய்கண்ட துக்கத்தையும் பிரசைக்கி பாலாரிஷ்ட தோஷத்தையும் கொடுக்கும் ஆகையால் அதற்கு சாந்திகள்செய்யில் தோஷபரிகாரமாகிச் சுகமுண்டாகும்.

புத்திரபாவகணிதம்

குருவுடனும் குருவுக்கு (டு) மிடத்திலும் துலாத்திலுஞ் சுக்கிரனுடனும் கூடிய கிரகங்களின் யெண்களைப் பெலாபெலத்தின்பேரில் கொடுத்துக் கண்டு அந்த இராசியெண்களிற்பெருக்கி குருவிருக்கும் இராசியெண்ணிலும் குருவுக்கு ஐக்தாமிடத்தாதிபதி யெண்ணிலுங் கொடுக்கவும் இந்த இரண்டுவீடும் உற்ற கிரகங்களுக்கு நட்பாளுல்குருவிருந்த இராசியெண்ணிலும் ஆகி உச்சமாளுல் இரண்டையுஞ்சேர்த்த எண்ணிலும் கொடுத்தமிச்சம் புத்திரலாபம் இதில்வந்ததுகையை (டு-ல்) பெருக்கி அந்த இராசி யெண்ணிலேயே கொடுத்துக் கண்டமிச்சம் தீர்கமான பிரசைகளாகும்

இதில் யெண்கொடுத்த கிரகங்களின் இராசி கிரகம் இவைகள் பெண்ணுறைறிந்து பெண்ணித்தனை ஆணித்தனை தீற்கமென்று கண்டதும் மேலே முதலில் பெருக்கிய மொத்தத்துகையை (கூ-ல்) கழித்த மிச்சமும் அந்தஈவை (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த மிச்சம் எத்தனையோ அந்த திசாபுக்திகாலத்தில் புத்திரலாபங்களைக் கூறப்படுமென்று மறியவேண்டியது.

புத்திரபெலன் கண்டபின் துலாம் கும்பம் தனுசு இவையிலும் குருவுடனும் குருவுக்கு (டு, கூ-லும்) குசன் இராகு கேது சனி இருக்கில் புத்திரன் ரோகியாயும் அங்கஈனனுகி வாழ்வான் சுபரிருக்கில் சலகூணபுருடனுகியும் அரோகதிட சரீரனுகியும் இராசயோகனுகவும் வாழப்படுமென்று அறியவேண்டியது.

இதில் சுக்கிரன் தனுசு கும்பம் மிதுனம் சிம்மத்தில் சனி முதலிய புதனுடனிருக்கினும் தனுவிலிருக்கினும் குருவுடன் இவ்வித கிரகங்கள்கூடி னிற்கினும் குருவுக்கேழில் சூரியன் புதன் சனி கின்றலும் கேந்திரத்திலாவது மிதுனம் மீனம் மகரந் துலாத்தில் இருக்கினுஞ் சனனமானவனுக்கு பின் தாரவம்ச புத்திரனுமுடைய யோகனுவான் யென்றறிய வேண்டியது

ஆருவது சத்துருரோகரொணம் இராசதெண்டனை யான பலன்கள்

குசனையும் விருச்சிகத்தினையும் சனிக்கி (சு) லும் ஆருமாதிபனுகிய இன்னுல்வரைக்கொண்டு சொல்லவேண்டியது.

குசன் இராகு முதலிய பாவருடன்கூடி விருச்சிகம் சிங்கம் மேஷம் மகரமிவையிலிருக்கில் சாதகத்துக்கு சத்துருவிருக்கினும் மனுகூலஸ்தனுகியும்

மிதுனலக்னத்தின் இராஜதெண்டனை முதலிய பலன்களாவன

விருச்சிக மகர மிவையிலிருக்கில் தனக்கிசைவுள்ள பெரும் பிரபு சத்துரு வாயினும் அனுகூலத்தையும் மேற்கண்டபடிக்குள்ள வகையில் சூரியன் ராகு முதலிய பாவர்கிற்கில் இராசதெண்டனை உண்டாகுமென்றும் பலவகை கவலை ரெத்தமாங்கச சம்மந்தநோயும் சூரியன் முதலிய கேதுவாகில் யெலும்பு சம்மந்தநோயும் குரு சுக்கிரனுகில் தோலும் எலும்புயும் சம்மந்தநோயும் சந்திரனுகில் கூயாதி செலரோகபயமும் மனதுக்குக் கவலைகளும் பலவித மனோவருத்தமும் உண்டென்றும் அறியப்படும் என்றவாறு.

குசன் ஷை ஸ்தானங்களில் குரு சுக்கிரன்முதலிய சுபருடன் கூடி கிற்கு மாகில் அந்தந்தகிரகங்களுக்கு இசைந்தநோய்ச் சரீரனுவன் சுக்கிரன் கூடி கிற்கில் ஸ்திரீ மூலமான விரோதவாதமூலிய இராசபயமும் குருவாகில் புரு ஷத்துவ மேலோர்மூலிய இராசமூலிய விரோதமும் குசனுகில் சமனனுஷரால் வாதவிரோதமும் புதனுகில் சந்திரனுகில் வைசியமூலிய விரோதவாதமும் சனி ராகுமுதலியோராகில் நீசர்கள் தாழ்குலபிறப்பு மூலியவிவாத விரோத மும் அடைந்துவாழ்வார்கள்யென்றுங் கூறப்படும்.

குசன் புதன் குருவால் கிரகக்கட்டடம் பூமிமூலியவாதமும் சுக்கிரன் சந்திரனுகில் தோப்புமுதலிய ஆபரணவிவாதமும் சூரியன் சனி ராகு ராகில் ரொக்க தனமூலியவாதங்கள் விரோதங்களையும் அடையப்படுமென்றுங் கண்டு கூறவேண்டியது.

குசன் சுபருடன்கூடி மிதுனம் கடகம் கன்னி துலாம் தனுசு கும்பம் மீனம் மேஷமிவைகளில் இருக்குமாயின் கடனும் ரொணத்தாற் வாதமும் பகையும் சத்துருதண்பமும் குடும்ப ரோகத்தையும் இவ்விதக்கெடுதல் பலனை கொடுக்குமென்றும் இந்த ராசிகளில் சனிமுதலிய ராகு இவரைக்கூடிகிற்கில் பலவாரான கள்ளபயம் னீங்காத சத்துருவையும் பொருள்மூலிய விவாதத்தை யும் பலவகை துக்கசோகங்களையும் பிணிகளான சரீரனுகவும் ஸ்திரீமுதலிய நோயுடையவனுகியும் வாழ்வன் இராசதெண்டனைகள் அல்பமுண்டாகும் இதை குரு சந்திரன் முதலியோர்பார்க்கில் உடன்னிவர்த்தியாகி வெகுமானங் களை யடைவனென்றவாறு.

மகரம் விருச்சிகம் கடகமிவைகளில் குசன் சனி ராகுமுதலியோர் கூடி கிற்கினும் நோக்கினும் பாவர் பெலத்து கிற்கினும் சந்திரனுக்கு இவ்வித ஸ்தானங்களில் னின்ரால் விசேஷத்துக்கங்களால் தேசவிரணமும் பல வகை கஷ்ட நஷ்டத்தையும் இராசதெண்டனைகளும் உட்படுவான் சனி நீங்கி மற்றயகிரகங்களிலிருக்கில் இராசதெண்டனை தவிர மற்றய விஷபீதியையும் அரிஷ்டத்தையடைவன் குசன் சனி இருவருங்கூடி கடகத்திலிருக்கில் நாயார் கண்டமும் சந்திரன் யெட்டிலும் குசன் சனி இரண்டு ஆரிலிருக்கில் பெரு நோய்களால் நலிவன் குருமுதலியோர் நோக்கில் நேத்ராதி நோய்களும் இஷ்டபிரபு மேலானபகைகண்டு னிவர்த்தியாகும் அதாவது இவர்களின் நிசா

புத்தியிலென்றும் கண்டறியவேண்டியது விருச்சிகத்தில் இராகுவும் மகரத்தில் கேது அல்லது இராகு இருக்கினும் ஆயுள்வரை இராச தெண்டனைக்குள்படுவோன் குரு விருஷபம் கடகம் இவையிலிருக்கில் இராச தெண்டனை இன்றியும் தேகசுகத்துடனும் வாழ்வன் மற்றய இடத்தில் குருவீற்கில் தேகரோகபாதையாகும் சந்திரனுனவன் கேந்திரகோணமாகிய மிதுனம் கடகம் கன்னி துலாம் தனுசு கும்பம் மீனம் இவைகளிலாவது விருஷபத்திலாவது இருந்து குரு அல்லது சுக்கிரனைக்கூடி இருக்கில் தேக சுகமும் திடகாத்திரனுகியும் மேன்மையோடு அதியோகவல்லபனுயும் குசனுங் கூடி இருக்கில் ரணசூரனுய் ஓர் பிடியனுகி மிகவுங்கீர்த்தியும் எவ்வித சத்துரு வரசர்களையும் செயித்துவரப் படவெனென்றும் மேன்மையான பிரபலயோகத்துடன் யெவ்வித சத்துருக்களும் வசியமாய் வாழ்வார்கள் மேற்கூறிய இடங்களில் புதன் சனி பாம்பு இவர்கள்சேரின் மிகவும் பகையுடன் சூபியாய் பிணி சரீரனுகியும் பகையுடனும அரசதெண்டனைக்கும் உள்பட்டு வாழப்படுவ னென்றும் பாவருஞ்சுபருங் கூடி இருக்கில் மேலேகூறியபலன்கள் அல்பமா பிணிசத்துரு ராசதெண்டனை ஸ்திரீபாதைகளையும் ரோணங்களை மனுயு பவித்து உடனுக்குடன் னிவர்த்தியடைவனென்றும்.

சிங்கம் விருச்சிகம் மேடம் இவைகளில் சந்திரன் சுபருடன் னின்றலும் பாவருடன் னின்றலும் பிணியனுகி ராசதெண்டனைகளும் பகைகளையும் பலவாத நோய்களையு மனுபவிப்பனென்றும் குசன் மாத்திரம் மல்லது சூரிய னிருக்கில் மிகவும் கொடரதெண்டனை யல்லது பிணிகள் அதிகமின்றியும் உடனுக்குடன் னிவர்த்தியாகிவிடும் அதாவது கூடியவர்களின் திசாபுக்திக் கிசைந்தபடி கண்டரிய வேண்டியது இதில்மேலே கூறியபடி பலன்களை யறிந்து சொல்லவேண்டும் சனி சந்திரனின்ற இடந்தொட்டு மிவ்வி தியே கண்டரியவேண்டியது.

களத்திர பாவங்களைபற்றிய பலன்கள்

குரு சுபக்ஷேத்திரத்திலு மல்லது கன்னி தனுசு மீனமிதுனமிவையிலும் சுக்கிரனுக்கு ஏழு எட்டு ஆரிலின்றி இருக்கினும் சூரியனுடன் புதனுடன் கூடி மேற்படி ஸ்தானங்களிலிருந்தாலும் சுக்கிரனுக்கு யேழில் பூர்வபக்ஷத்து சந்திரன் பெலத்தவிடத்திலிருக்கினும் சுக்கிரனைக்கூடினும் பெலத்துடன் பகை நீங்கியவிடத்தில் இருக்கினு மிகுந்த சுசிருஷியுள்ள மேலான குடும்ப களத்திரலாபம் சுபவதியாயிருப்பள். ஒரே தாரமாகும் தனுசுவிலும் சுக்கிரனுக்கு ஏழாமிடத்ததிபன் ஏழிலும் இவ்விதமே பெலத்துடனிருக்குமாயின் ஒரேதாரமென்றும், சந்திரனல்லது குரு தனுவிலாவது சூரியன் புதன் தனுவிலாவது குரு சந்திரன் சுக்ரனுக்கு ஏழிலாவதிருக்கில் ஒரேதாரமென்றும் சுக்ரனுடன் பல கிரகங்கூடி துலாமிதானகும்பம் மீனத்திருக்கினும் விருடபத்திருக்கினும் குருகூடாமகோக்கில் ஒரேதாரமென்றும் சளிராகு கூடினும் ஒரேதாரத்துடன் மற்றொரு தாரமுண்டாகினும் அந்தியத்துக்கு இரண்டு

மிருக்காதென்றும் குசனேக்கூடில் ரோக களத்திரமென்றும் ரவியைக்கூடில் விரோதத்தினால் இரண்டுதாரமென்றும் சந்திரனேக்கூடில் ஒரேதாரமென்றும் புதனேக்கூடில் இருவிதத்தாரமென்றும் குரு முதலியருடன் செவ்வாய் சனி கூடில் பலதாரமாவது மூனறுக்குமேற்பட்ட தாரமென்றும் மேஷ விருச்சிகத்தில் குசனுடனுலவது சனி புதன் சூரியனுடனுலவது சனி புதன் சூரியன் சுக்கிரனுடனுலவது சுக்கிரனுக்கு யேழிலாவது தனுவிலாவது இருக்கில் குரு விருச்சிகம் மகரம் சிங்கம் இவையில் யிருந்து சனி முதலிய பாவரைக்கூடினும் தாமிரண்டுக்கு மேல்வரையுங் கூறப்படுமென்றும் கன்னி மேஷம் கடகமிவையில் குருவல்லது பாவருடன் குருகூடினும் அல்லது தனித்தால் சுக்கிரனுக்கு அஷ்டமாதிபதியாகி கன்னி தனுசு மேடமிவையில் குரு சந்திரனின்றாலும் சுக்கிரனுக்கு பத்திலும் நாலிலும் சனி யிருந்தாலும் தாரமிரண்டென்றுங் கூறப்படும் மற்றய ஸ்தானாதிபதியான குருவுடன் பாவரின்றியும் தனுசுவில் மதியும் பூர்வபக்ஷனுயிருக்கில் அதிரூபதாரம் சிகப்பு நிரமும் சுக்கிரனே பாவர் கூடினும் நோக்கிலும் ரோகசரீரமான தாரமென்றும் இதில் குசன் கேது பார்க்கக் கெற்பாதி ரணஉஷ்ண ரோகமும் சனி இராகுவாகில் வாதநீர் முதலிய கால் ரோகங்களேயும் ரவியாகில் சிரசு நேத்திர முதலிய ரோகமும் சந்திரனிலும் பகைபெற்று விருச்சிகம் மகரம்சிங்கத்திலிருந்து சுக்கிரனைக் கூடினுலும் பார்த்தாலும் கண்டநோய் செலநோயென்றும் குசனிருந்து கூடிலும்பார்க்கினும் பகைமுதலிய பகூவாதநோயும் புதனுகில் இருப்புநோயும் குரு அசுபனுப்பார்க்கில் மார்புநோயும் சுக்கிரனுகில் முழந்தாள் ரோகமும் சனியாகில் கால்நோயும் இராகு கேதுவாகில் பாதநோய்களேயும் களத்திரங்களுக்குண்டாகும் இதில் சுக்கிரன் பாபத்துவனுகிமறைந்து குருகண்டங்களிலிருக்கில் களத்திர மேற்கண்ட வியாதிகளால் மரணத்தடையுமென்றும் தாரமிரண்டினே யனுபவிப்பனென்று அறியவேண்டியது.

களத்திர கணிதம்

சுக்கிரனுடனும் சுக்கிரனுக்கு யேழு யெட்டுக் குடையவனுடனும் ஷ ஸ்தானங்களிலும் தனுசுவிலும் குருவுடனும் இருக்கும் கிரகயெண்களே ராசி யெண்களால் தனித்தனி பெருக்கிக்கொண்டு எந்த இராசியில் சுக்கிரன் குரு இருக்கிறுனு அவ்விதபெலனுக்கு இசைந்த யெண்ணில் கொடுத்து கண்ட சேடம் தாரமென்றும். அத்துகையை (கூ-லும்) மறுபடி (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்தமிச்சம் திசாபுக்திகாலத்தில் களத்திரலாபம் இரண்டுதாரமென்றறிந்து மேடத்திலும் குசனுடனுங்கூடிய யெண்கணக்கை யொன்றுபடித்தி மேலே பெருக்கிய துகையைச் சேர்த்து (கூ ல்) கழித்து மின்றமிச்சமும் அந்தாவை (டு-ல்) பெருக்கி (கூ ல்) கழித்தமிச்சம் திசாபுக்திகாலத்தில் (உ-வது) தாரலாபமும் மேலேகண்ட இரண்டுதுகையுங்கூட்டிய துகையுடன் சனியிலும் சுக்கிரனுக்கு யெட்டாமிடத்திபன யெட்டாமிடத்திலுமிருக்கும் மிரகத்துடன்கூடிய யெண்களே ஒன்றுபடித்தி இம்மூன்று துகையையும் ஒன்றுசேர்த்து (கூ-ல்) கழித்தமிச்சமும் ஈவுத்துகையை (டு-ல்) பெருக்கி

(கு-ல்) கழித்தசேஷமும் திசாபுக்திகாலங் களத்திர வியோகமான மரணமென் றுங் கண்டறிதல் வேண்டும்

களத்திரமூலிய லாபநவ்டம்

களத்திர காரகன் மிதுனம் கன்னி மீனத்திலிருந்து புதனல்லதுகுரு வைக்கூடினும் சந்திரன் சேர்ந்தாலும் பெண்வழியால் பொருள் தனம் பூமி கிரகவாகனம் உண்டாகும் தனுசு மிதுனம் கும்பம் சுக்கிரனுக்கு பத்தாமிடத் தில் சுபர்வீட்டில் புதன் அல்லது சந்திரன் குரு பகை நீசமின் றியிருக்கில் மிகவும் மனையாளாலேயே சீவனம் பண்ணுவனென்றும் குருவலுக்கில் சாதக னுல் மனையாள் வகைக்கும்கூட லாபயோக மேன்பாடும் சுக்கிரன் புதன் வலுக்கில் மனையாளால் சாதகனுக்கு யோகமும் தாய் வழியினலும் பொருள் கூடும் இதைச் சனிமுதலிய செவ்வாய் பார்க்கினு மிருக்கினும் பகையோரைக் கூடிய ஸ்தானத்தி லிருக்கினும் தாய் மனையாளிவர் வழியா அவ்வித மூற்ற பெலத்த கிரகத்துடன் குசன் சூரியனைக்கூடில் தகப்பன் சகோதர மிவ்வித வகைப்பொருளுங் கைக்குவந்தாலும் அதுகளையும் இழந்து பல கஷ்ட நஷ்ட மடைவ னென்றுங் கூறப்படும். சுப பெலத்துடன் சுபர் பார்க்கில் மிகவும் யோகத்துடனுஞ் செல்வத்துடனும் இராசயோகனுகி வாழ்வன் விவாத செய மூண்டாகும் சனி முதலிய பாவரைக்கூடி வலுத்திருக்கில் மனைவி பரனைச் சேர்வள் தனத்தைத் தேடியிவள் யென்றும் புதன் சந்திரன் குரு அசுப க்ஷேத்திரத்தில் அல்லது சுப க்ஷேத்திரத்திலிருந்து நோக்கில் பரபுருஷனைச் சேர்வள் பணந்தேடாள் இவ்வித பலனுக நடக்கும் என்றும் அவ்வித கிரகத் துக்குறிய திசாபுக்திகளி லிவ்வித பலனுண்டாகுமென்றறிய வேண்டியது.

பிதுர்பாக்கிய பலன்கள்

சனியானவனையும் கும்பத்தையும் சூரியனுக்கு ஒன்பதாமிடம் அதிபதி யில் வைத்தையும் கொண்டு பார்த்துரைக்கவேண்டும்.

சனியல்லது சூரியனுடன் பாவர்களிருக்கினும் சனிமுதலாகியவருடன் கதிர் சேரிலும் கும்பம் துலாமிவையில் சூரியனிருக்கினும் ஷ ஸ்தானங் களில் பாவருகிய குசன் ரவி ராகு இருக்கினும் பிதாவிற்கு அரிட்டமென் றும் பிதாமரணமானது பாலியத்திலேயும் சிசுகாலத்திலு மரணமடைவ னென்றும் சனி மேஷம் சிம்பம் மகரம் விருச்சிக மிவைகளில் சூரியன் முதலிய பாவருடன் இருக்கினும் கும்பம் மகரம் துலாமிவையிலும் சூரிய னுக்கு (கு) மிடத்திலும் குசன் கேதுமுதலிய சனி இவர்களிருக்கினும் நோக்கினும் சிசுவின் பால்யவயதிலேயே பிதுர் மரணமாய் விடுவனென்றும் ஷ ஸ்தானங்களில் பகைபெற்ற சுபரும் பாபருமாகக் கலர்ந்தும் ஷ பாபி களின் சேர்க்கை அதிகபெலமாகி இருக்கிலுஞ் சந்திரனுக்கு (உ, கூ-ல்) பாபரும் அல்லது சனி இருக்கில் தகப்பனுடைய பூர்வார்சிதங் கிடையா தென்றும் இவ்விதத்திலும் குருவுமில்லாதமரைந்து பகைபெற்றுப்பாவருட

னிருக்கில் பிதுரார்ஜிதம் ஏராளமாக விருந்து நஷ்டமாகி விடுமென்றும் இவ்விட இடங்களைக் குரு முதலியோ நிருக்கினும் நோக்கினும் தகப்பன் யெவ்வன வயதில் மரணமும் சனி குருவுடனுங் கூடினலுங் குருவுடைய தனுசு மீனத்தினின்றலும் புதன் மிதுனம் கன்னி துலாம் இவையிலெதில் னின்றிருக்கினும் புதனைக்கூடி சூரியனுக்கு ஒன்பதாமிடத்திதிபன் இவ்வித மிருக்கினும் தகப்பன் யெவ்வனத்திலேயே மரணமாவான் சூரியன் வலுமை யுடன் மேஷ சிம்ம தனுசுவிலும் சனி கூடினும் சுக்ஷேத்திரமான மகரகும்பத் தில் சனி னின்றலும் குரு முதலியோர்கும்பம் துலாத்திலாவது பார்க்கவாவது இருக்கிலும் சந்திரகேந்திரத்தில் குருனின்று இருக்கினும் பிதாவானவள் கௌமார வஸ்தையில் மரணமென்றும். கும்பத்துக்கு கேந்திரகோணத்தில் சனியும் அந்தவிடாதிபன் சுபகிரகத்துடன் சுபரிடத்தில்லக்கினுதியைக் கூடி னும் சந்திர கேந்திரத்திலிருந்தும் குருமுதலிய சுபக்கோள் நோக்கினும் பாவாகள் யாரேனும் துலாம் சிம்மம் கும்பம் கதிர் கூடவிருக்கினும் பிதா யெவ்வனத்திலேயே மரணமென்றும் இதில் குரு பெலவானுகி சந்திர கேந்தி ரத்திலும் லக்கினமுதலாகிய கேந்திரத்தில் சூரியனுடன் புதன் மாத்திர மிருக்கிலும் கவுமார அவஸ்தையில் மரணமென்றும், சனி துலாம் விருஷபம் கும்பத்திலிருக்கில் இந்த சாதகனுக்கு பிதா கவுமார வஸ்தையில் மரணமென் றும் சனி சூரியனிவர்கள் மிதுனம் கன்னி தனுசு மீனமிவையில் புதசம்பந்த னுகியும் குரு சுபபெலத்தைப் பெற்றும் மல்லது குரு பெலவானுகி சுபர் வீட்டிலிருந்து சூரியனே யல்லது சனியை நோக்கினுஞ் சனியுடன் சூரிய னுடன் கூடினலுஞ் சாதகன் பிதா விருத்தாவஸ்தையில் மரணமென்றும் குரு உச்சனுகியல்லது சனி வீட்டிலாவது சனி குருவீட்டிலாவது மாறி பாம்பு முதலிய பாவரைக்கூடினும் சந்திரனல்லது சுபர்கள் கும்பத்தையாவது அதி பதியையாவது நோக்கின் பிதா விருத்தாவஸ்தையில் மரணமென்றும் குரு முதலியோர் கேந்திரகோணத்தில் சனியல்லது ரவியைக்கூடி பெலன் பெற்று கடகம் மீனமிவையி னின்றலும் சாதகன் பிதா விருத்தாவஸ்தையில் மரணமென்றும் சூரியன் நீசமாயினும சனி நீசம் பகையாகி இருந்தபோதிலும் சாதகன் பிதா பால்யத்திலேயே மரணமாகி விடுவனென்றும் சந்திரன், பெலக்கில் பிதாதீர்க்கமும் பிதுர்சந்ததி விர்த்தியென்றும் சுபக்கோள்கள் ஒடி பிதுரிடமான துலாம் கும்பத்திலும் சூரியசனியுடன் கூடினலும் நோக்கினும் பிதா யெவ்வனவஸ்தைவரை தீர்க்கமும் பிதுர்வம்சமானது க்ஷயமென்று (கு, நு-ல்) பாவர் பகையல்லது நீசராயும் அல்லது அந்தஸ்தானுநிபதி கெட்டி ருந்து சனி முதலிய பாவரைக் கூடினும் பிதுரார்ஜிதமும் பிதுர் சந்ததி கிடையாதென்றும் அறியவும்.

சூரியனுக்கு ஒன்பதாமிடத்தையும் இவ்விதமே பார்க்கவேண்டியது. மேலே கண்ட ஸ்தானம் ஸ்தானுதி சுபர் வீட்டில் சுபருடன் இருக்கினும் அல்லது மேஷம் மீனம் மிதுனகன்னி தனுசுவிலிருக்கினும் பிதுர்சொத்து பிரபல குடைவு வர்த்தியும் வேராளமான பூஸ்திதி முதலிய கிரகவாகன

கடகம் க்ஷேத்திரமும் மிகுந்த பெலன்களென்றும் சனி முதலியோர்கள் சிங்கம் கடகம் மகரம் கும்பம் துலாத்திலிருக்கில் பிதுர்ஸ்திதி சிலகாலம் யேராளமான பிறபலத்துடனிருந்து மத்தியில் கெடுமென்றும் அதில் பல விவாதமும் நஷ்டமும் மனதுக்கு கவலைக்கொடுக்குமென்றும் பாபர்கூடின் கிடையாதென்றும் சுபர்கூடினலும் நோக்கி பெலத்துடன் இருக்கினும் பிதுர் பாக்கிய பிரபலமும் இராசயோகனுகியும் வாழ்வன்.

சனி மகரம் கும்பம் மிதுனத்தில் தனித்தாலும் புதனுடன் கூடினலும் சூரியன் முதலிய பாவரைக் கூடி கும்பத்தை சுபர் பாராமலிருக்கினும் பாபி கள் பார்க்க விருக்கினும் சாதகன் தகப்பன் கூடச்சகோதிரமே லிற்காதே அப்படி லின்றலுங் குடும்பமில்லாதவராய் அற்பாயுளாய் பலநஷ்ட துக்கத் துடன் அடைந்து பல வருத்த மடைவர்கள் பெண்ணுகிலும் பிதா பிதுர் சகோதிர மிவர்களுக்கும் தேகாரிஷ்டநோயும் பித்தாதிநோயும் பலவகை வருத்தங்களேயுங் கொடுக்குங் குருமுதலிய சுபர்கள் நோக்கினும் பிரபலமின்றி சமயோகர்களாய் பிதுர்வம்ச சகோதிரர்களுக்கு புத்திரவிர்த்தியை யடைவார் கள் யென்றும் கூறப்படும்.

சுபர்களே லிற்கினும் நோக்கினும் பிதுர்வசம் மிகவும் பிரபலயோக சகோ திரர்களாய் வாழ்வார்களென்றறியவும்.

இந்த லக்கினக்காரர்களுக்கு பிதுர்வம்சாவளி அதிக விர்த்தியடையா தென்றறிய வேண்டியது.

பிதுர்பலன் குணிதமூலமாய்க் குணிக்கும் வகைகள் அறியவேண்டியது

சூரியனுடனும் (கு) மிடமதிபதியுடனும் சனியுடனுங் கும்பத்திலும் சூரியனுக்கு மூன்றுமிடத்திபனுடனும் உறிய சுபபெலப்படிக் கிரகயெண் களே யெடுத்துக்கொண்டு அவ்விராசி பெலத்துக்கிசைந்தபடி யெண்ணில் பெருக்கி அவ்விராசிக்கதிபன் யெண்ணில் கொடுக்க வந்தசேஷம்பிதுர்சகோதர மாகும் சுபர்கொடுத் எண்களாயின் பிதுருசகோதிரர்கள் அதிகயோக வான்க ளாகியும் குடும்ப விர்த்தியையுடைய வர்களாகியும் வாழ்வார்களெஸ்றும் பாவராகின் பிதுர்வம்ச விருத்தியின்றி இன்றியும் குடும்பக்ஷயமும் தரித் திரர்களாய் வாழ்வார்களென்றும் கூறப்படும்

மேலே பெருக்கியதுகையுடன் குசன்றுகையும் சனி லின்ற இராசித் துகைமொன்றுசேர்த்து அவ்விராசியெண்ணில் பெருக்கிக்கண்ட மொத்தத் துகையை (கு-ல்) கழித்தனின்ற ழிச்சமும் திசையாயும் அதில் வந்தஈவை (டு-ல்) பெருக்கி (கு-ல்) கழித்தமிச்சம் புத்திகளில் பிதுர் கருமமென்றுங் கூறப்படும் என்றவாறு.

சூரியன் பெலத்து மேஷம் சிம்மம் தனுசுவில் புதனேக்கூடினலுங் குரு முதலியோர் வலுத்து கூடியல்லது நோக்கினும் பிதா பிரபல குடும்பமும்

பெரிதாகிய கீர்த்திபெற்ற வம்சஸ்தனென்றும் புதன் சந்திரனையுங் கூடிசனி பெலத்து துலாம் கடகம் தனுசு மகரங் கும்பம் இவையிலிருக்கிலும் குரு மாறிலிற்கினும் பிதாசுசிருஷிபக்தி வித்துவானுவன் யென்றும் சுக்கிரன் ஷி பாவருடன் வலுத்திலிற்கில் விவகாரஜ்ஞி பலவித்தையிலும் வல்லபனுகியும் பொருள்பிரபலத்துடையவ னென்றும் புதன் லிற்கில் பண்டிதன்கணிவ னுகியும் சனி இராகு முதலியோர் ஆகில் தாழ்குல ஹீனன்தரித்திரனுகினும் செல்வாக்கு செயமும் கேதுகுசனுகில் ரோணத்தனு மிகுந்த துன்பமுடை யோன் ரோகியாகிப் பலவிதகஷ்டமுடையவனென்றுங் கொள்ளல்வேண்டும்.

ஷி கும்பம் மீனம் துலாத்தில் குரு சந்திரன் புதன் இவர்களில் அதிக மானேர் கூடிலிற்கின் அதிஞானிவிரதஸ்தன் மிகவுமேலான பதவி வர்மிஷ் டன் அஷ்டமாம்த்தி முதலினையு முடையவனுகினும் பாவர்கள் நோக்கினு மிருக்கினு மிகவுமேலான பதஸ்தனுகினும் இகசென்மமுடிவிலா னென்றும் மேலோனுகி சர்வபிரானியாதாரபுருஷனாகியும் இராசத்துவ அம்சமும் உண் டாகும் மிகவுமேலோனுய் வாழ்வ பிதுர்வம்சவிர்த்தியாகினும் மத்தியிலும் அந்தி யகாலத்திலும் முடிவு இன்றிவிருத்தியற்றுக் குடும்பம் வாழுமென்றும் மத்திய காலத்தில் மிகவுமேலான பிரபலத்துடன் யோகவானுகியும் அதிக பிரபல த்துடன் யோகவனுகியும் அதிக பிரபல யோகவான்களாகியும் வாழ்வன் யென்றறியவேண்டியது பாவர்கள் இருக்கினும் நோக்கினும பக்தி இல்லான் வேஷக்காரன் அதாமன் தான்செய்வது அக்ருத்தியமாயினும் பிரரை ஏகைப் பன் தெருவியாவன்.

பத்தாவது கருமம் இராசியபலன்கள்

குரு கேந்திரங்களிலும் அல்லது திரிகோணத்திலுமிருக்க சந்திரன் அல்லது சூரியன் புதன் சுக்கிரனேக்கூடி லிற்கிற் பிறந்தவன் சத்கருமத்தையும் மிகவு மேலான கர்மம் யாகயெக்ஞ முதலிய பிறபல செய்கைகளையும் கியாதியுடண் கிருமம் பூமியாற்சிதமுஞ் செய்வன் இதில்சுக்கிரன் கூடிலிற்கின் குருவுஞ் சேர்ந்தாலும் பெலத்துலின்று மீனத்தில் சனி முதலிய பாவரிருக்கினும் டாம்பீகனுகி மிகவும் பக்திசத்கருமம்போல் காண்பிப்பன் அசத்கருமத்தையும் மிகவும் பூமிகிருமம் உடையவன் குருதனித்துப் பெலன்பெற்று பாபிகளுஞ் சுபர்களுமின்றி இருக்கில் அனேக கட்டிடம் பூமியும் மிகவும் கீர்த்தியான முயற்சிகளையுஞ் செய்வன் சுபரும் பாபியுமாகிக் கலந்துலிற்கில் அல்பபூமியும் கருமசிருத்தை யிருந்தாலும் அக்காலத்தில் செய்யனேரும் சுக்கிரன் சனி மீனத்திலாவது கும்பமிவைகளில் கேந்திரத்திலிருக்கில் இராசயோக சன்னி யாசியானவன் குரு சந்திரன் கூடினுலும் இராசசன்னியாசியாகி மிகவும் மேலானேனுகவும் சிறந்த பக்தியுடனும ஞானர்த்தம் முதலாகிய அந்த யோக னுகி வாழப்படுவனெகூறும் காணவேண்டியது.

பத்திலாவது குருவுக்கு பத்திலாவது சுபரே பெலத்துடனிருக்கினும் இராசயோகனுகிய சங்கியாசத்துக்குறிய ஆசரமஸ்தனுகியும் இராசயோகவனுகியும் சகல உபதேசசித்தி கருமானுஷ்டான சிருத்தையுடன் வாழ்வனென்றும் பாவர்களாயினும் சுபர்கள் நீசம் பகைபெற்ற இருக்கில் கருமச்சிருத்தையின்றியும் குடிகாரனுகியும் சாதிப்புருஷ்டனுகியும் பலவித அபசார யெண்ணஸ்தனுகியும் வாழ்வனென்றும் விபசாரஸ்தனுவான் உச்சசொகேஷத்திரம் பெற்ற குருவல்லது சுக்கிரன் தசமத்திலின்று சந்திரன் முதலிய சுபசம்மந்தமிருக்கில் மிகுந்த இராச்சியம் பூமி அதிகமான கிராமாதிபனுகியும் மண்டலாதிபனுகி வாழ்வன் அதாவது இம்மூன்று கிரகத்துடன் புதன் உச்சசொகேஷத்திரத்தில் பாவருடன் தன்னுடன்சேர்ந்தவர்களுக்குப் பகைவருடன் கூடினுல் மண்டலாதிபதியாம் நான்குபேரில் (ரு) மேல்பெலத்து மீனம் கன்னி தனுவில் குரு அல்லது மதி சுக்கிரன் இவரிருக்கில் தேசாதிபனுகியும் (உ) பேர்பெலத்து மூன்போலிருக்கில் சிலகண்டராதிபனுகியும் அரசருக்குள்ளடங்கியவனுயு புதன் முதலியோர் வலுத்து சனி முதலியபாவறைக் கூடினும் சுக்கிரன் குரு சந்திரன் கேந்திரத்தில் சொகேஷத்திர உச்சத்திலிருக்கில் சில கிராமாதிபனுகியும் வாழ்வனென்றும் இவர்களுடன் குசன் பாம்புகூடி கன்னிமீனத்திலிருக்கினும் மூன்பூமி இழந்தும் பின்னும் சிலநாளிருந்து உடன் நஷ்டமாகியிருக்குமென்றும் குருகெட்டு ஸ்தானத்தில் சுபரிருந்துவலுக்கில் பிரபல நூதன பூமி மூலானவைகளைச் சேற்பனென்றும் அதை சனிமுதலிய விரோதபாவர்கள் நோக்கினுமிருக்கினும் சம்பாதித்துடனே அழிந்து விடுமென்றுங் கண்டு கூறல்வேண்டும்.

இதில் புதன் சூரியன் சனியுடன் அல்லது ராகு முதலியோருடன் கூடியிற்கினும் யேழாமிடமான தனுசுவிலிருக்கினும் குருபாவருடன் கூடி மகரமுதலாகிய பாபிகள் வீட்டிலிருக்கினும் பிரந்தவனுக்கு சூரியன் கெடில் பிதுர்கரும பாத்தியஸ்தனுகா னென்றும் சந்திரன் இவ்விதம் கெட்டுப்பாவருடனிருக்கில் மாதுருகருமம் அடையானென்றுங் கண்டறிய வேண்டியது

இவ்விதமாகவின்ற கோள்களில் குசன் அல்லது பாவருடன் மீனம் கன்னியிலும் குருகெட்ட இடத்திலு மிருக்கின் பூமி முதலாகிய கிரகங்கிடையாதென்றும் இருந்தபோதிலு மிவனுக்கு அடையாதென்றுங் கூறப்படும் இதில் பாவர்களிருக்கினும் நோக்கினும் பூமிஇருந்து கடன் முதலிய வகையிலாழ்ந்து மிகவும் பலகஷ்ட நஷ்டத்தையடைவனென்றும் பலவிதபூமியும் தோற்று விடுவான் சூதமுதலிய அக்குருத்தியத் தொழில் செய்லன்.

சீவனபலன்

குருசூரியனுடன் பெலத்திருக்கில் மிகவும் பலஇராச ஜீவனமுண்டு புதன் கூடினும் வித்தையினுல் சீவனஞ்செய்வன் குசன்கூடில் பூமியார்ச்சிதத்தால் சீவனம்செய்வன் குசன் பாபியாய்க்கூறல் களவு சண்டையால் சீவனமுண்டு சந்திரனுடன் கூடியிற்கில் இராசசீவனமும் சத்காலக்ஷேபமும் உடை

யவன் சுக்கிரனைக்கூடில் தானே மன்னனாகி வாழ்வன் பொன்பொருளுண்டு சனியாகில் இராசயோகனாகி வாழ்வன்.

ராகுகேதுவாகில் அடிமையாய் அல்பனாகிவாழ்வனென்றறியவும் இரண்டு சுபர்கள் கூடினீற்கில் அவ்வீடு மிகவுமேன்மையான பெலமுள்ள இடமாயிருக்கில் உச்சவீடு உச்சவீட்டுக்கதிபனுடன் குருகூடில் மிகவும் இராசனாகி சிம்மாசனபதியாவன் பாவர்கள் பார்க்கில் சிம்மாசனபதிக்குள் சிம்மாசனாதிபனவன் மூன்று சுபர்கூடில் தேசாதிபனாகி வாழ்வன் ஷை மூன்று சுபருடன் சனியல்லது குசன் முதலியபாவர்களிருந்தாலும் பார்த்தாலும் சிலபூபதி ஆதிபனாய் அரிதனைப்போலொற்றவனாவான் பாவர்களே அவ்விடத்திலிருக்கில் அற்பபூமியதிபனாகிவாழ்ன்.

ஐந்து பாவக வாழில்தரித்திரனாகி வித்தியில்லானாய் தனக்குறைவுடன் அசேதனனாவன் அடிமைக்குள்ளடிமை செல்வன் அவருடன் சுபர்வாழில் ஒருவனுக்குள் பட்டவனாகியும் அவன்கீழ் சிலபெயரை அதிகாரஞ்செய்வன் னீடித்ததல்ல (சு-ல்) பாவருடன்னீற்கினும் குருசிங்கம் விருச்சிகம்மகரம் மேஷம் விருஷபத்திலிருக்கினும் ஒருவனுக்குள்ளிருந்து மனுஷனாவன் புதன் மூதலியவீட்டில் குருவிருக்கில் வியாபாரஸ்தனாகி சீவனஞ்செய்வன் பாபர் பார்க்கிலும் பிரயோசனமின்றி அடிமையாவன் பாபிகளாங்கூடி னீற்கில் தொழிலில் அல்பவிர்த்தியும் அனுசாரதொழிலு முயற்சியில் அல்பனாகியும் வாழுவன் என்றாய்.

(கூ) பாபிகள் இருக்கில் ஒருவனுக்குள்ளிருந்து சீவனமும் பூர்வார்சித மின்றிப் பலவகை துக்கமடைவன் சுபருங்கூடி பார்க்கினிற்கில் சிலபூர்வார்சித மிருக்குஞ் சீவனபிரயோசனமின்றி அடிமையும் பலரிடஞ் சீவனஞ்செய்து வருவன் ஞாயாவராகில் சுபத்தொழில் அல்லபமாகசெய்து கஷ்டப்படுவன் சுபர்கூடில் மிகவும் லாபத்துடன் பூமிபிரபலமுண்டாகும் ஒரு சுபருடன் பாபிகள் இருக்கினும் ஒரு அசுபருடன் பாபிகள் இருக்கினும் ஒரு அசுபருடன் சுபர்களிருக்கினும் பூமி கிரகவாகன மிகவுள்ளவன் இராசாங்கமூலிய சீவனமுடையவனாவன் குரு நோக்கில் சுயமுயற்சியுடன் தன்னிடஞ் சில அடிமை வைத்து வேலைசெய்வன்.

லாபபலன்களும் விரயபலன்களுங் கூறுகின்றனவாம்

குசன் பெலவானாகி மேஷம் மிதுனம்மகரம் இவையில் குருமுதலிய சுபருடன் நேத்திரத்திலிருக்கினும் சுபர்களாகிய சுக்கிரனீங்கியவர்கள் மேஷத்திலிருக்கினும் பாவர் பாற்காதிருக்கில் பொருல் மென்மேலுமலாபமுடையவனென்றும் பிரபலலாபமுண்டாகும் முன்சந்ததி விருத்தியென்றும் மேலாகியவிருத்திகளும் இதில்சுக்கிரன் சந்திரனிவரிருக்கில் மிக்கவுமேலான லாபமும் காரியசெயத்தையும் அடைவன்.

சுக்கிரன் மேஷத்திலிருக்கினும் அல்லது (க,டு,கூ) மிதுனகன்னிதனுசு மீனத்திலிருக்கினும் கும்பம் துலாத்திலிருக்கினும் பிதார்சொத்தின்பேரில் அதிகவிரயமான துஸ்தானசுகமூலமும் சத்விஷயமூல மாகவு மிகவுந்தனவிரய

முண்டாகும், (கூ-ல்) சனிமுதலியபாபிகளிருக்கில் கஷ்டமனதுஞ் சிலவு செய்யமனமில்லாதவனுகி லோபியாயும் வாழ்வன் இவன் தனம்கள்ளர்முதலிய அன்யதுஷ்டிருத்தியத்தில் சிலவாகும் பாற்கினு மவ்விதமேயாகும் சுக்கிரன் ரிஷபம் விருச்சிகம் மகரம் இவையிலிக்கில் ஸ்திரீடாம்பீசும் பிரயோசன மில்லாததாலும் விவாதத்தாலும் பொருளை விரயஞ்செய்து நஷ்டமடைவன் பாவர்களிவனுடன் கூடினும் பாவற்பார்கினும் மிவ்விதமேயாம்குரு ஷு இடத்தில் பகைவருடன் இருக்கில் பகைவராலும் லாபமுயற்சிக்கி செய்யும் விஷயத்தாலும் பொன் பொருள் பூமியையிழந்துபரதேசகதியாய் அடைவன் சனி சூரியன்புதனிவரிருக்குமாகில் பிதுரார்ஜிதமா தூலாற்சிதங்கள் தேடிவந் தும் ஓடிவிற்றுவிரயஞ்செய்து பரதேசனுகிப் பலவிவாதத்தக்குள்பட்டு துக்கத் தை யனுபவிப்பன் இதில் இவ்வீட்டதிபர்களின் விதிப்படிக்கி பாவரைக்கூடி னும்நோக்கினும் பகைநீசம் பாவர்வீட்டினின்றாலும் விவாதத்தக்கும் ரோணத் தக்கும், அக்ருத வியாபாரங்களைச் செய்துப் பொருளிழப்பன் கூடிஷிற்கில் நல்லவியாபாரவிவாதத்தினுல் பொருள்களைத் தோற்பன் இதில் குசன்கேந்திர த்திரி கோணத்தில் பெலத்து இவ்விதம் பாவரிருக்கினும் குருமுதலிய சுபக் கோள்கள் சுபபெல இராசியில் கூடினும் நோக்கினும் முன்பொருள்களை இழந்து அனேகஇடங்களையெல்லாம் பார்த்துபார்த்துவிட்டு விவாதம் முதலான யொருள் விரயமாகிய பின்னவன்றலை முறைக்கு மாரரால்பொருளை மீட்டுவன் பாபர் பெலத்துடன் கெடில்தரணமின்றிப் பொருள்களை இழந்து பரதேசவாச னுவன், சுபா பெலத்து விருஷபத்தி னின்றாலும் சுக்கிரன் பெலத்து சுப கேஷத்திரத்தில் குசன் றவிரமற்றவர் பார்த்தவல்லது கூடினும்சூரியன் கூடாம விருக்கில்பரதேசங்களில் ராசஉத்யோகனுய் அதிமேதா வியாவன் அவருடன் கூடிய குசன்சேதுவாகில் மிகவும் பகையுடன் விவாதத்துடன் பொளை இழந்து தவித்து மிகவும் வருந்தி பலதொல்லையிலகப்பட்டு சிலவேமிஞ்சிக் கடனுளி யாவான் பரதேசவாசதரித்திரனுவன் யென்றுரைக்கவேண்டும்.

லாபவிறய குணிதம்

குசனுடனும் மேஷத்திலும் சந்திரன் குருவுடனும்கூடிய கிரகயெண் களை யொன்றபடுத்தி அவ் ஒவ்வொரு யெண்களைப் பெலாபெலன்படிக்கி இராசியெண்ணிற் பெருக்கிக்கொண்டு மேஷத்தில் யார்சுபபெலவானே அல் லது குசனுடன் எவன்சுபபெலவானே அவ்வெண்ணில்கொடுக்கக் கண்ட மிச்சம் லாபமும், சுக்கிரனுடனும் விருஷபத்திலுமுள்ள கிரகயெண்களை சுபா சுப பெலன்படிக்கி அவ்விராசியில் பெருக்கிய தகையை அவ்விராசியான விரு ஷபத்தில் பெலமுற்றோரல்லது சுக்ரனுடன் பெலமுற்றோர்யெண்ணிற் கொடுக்கக் கண்டமிச்சம் விரயமாகும்.

ஆகையால் லாபமதிகயெண்ணுனல் லாபமதிகமும் விரயயெண்ணதிக மானுல் விரயமதிகமும் லாபத்திற்கும் விரயத்திற்கும் உறியது கைப்படிகணக் கும் லாபத்துக் கதிகவிரயகணக்காலுல் கடனென்றும் கூறல்வேண்டும்.

சீவன உத்தியோகத்தில்வருந் தனம் பொன்களைப்பற்றிய கணிதங்களாவன

குருவுடனும் சுக்கிரனுடனும் சனியுடனும் சந்திரனுடனும் மீனத்திலும் விருஷபத்திலும் கடகத்திலும் கும்பத்திலும் உறிய கிரகத்துகை யெண்குணி தங்களோ யொன்றுபடுத்தி அந்தந்த இராசிகுணிதத்தில் பெருக்கிவைத்த துகை கொண்டு மீனத்திலுறிய கிரகபலயெண்ணிற் கொடுத்தமிச்சம் ஜீவன ஆரம்பத் தில் வந்ததுகையுள்ள பொன் தனலாபம் மாதமொன்றிலென்றும், துலாத்தி லும் கும்பத்திலும் மேஷத்திலும் உறிய கிரக சுபாசுப பெலத்துக்குறிய யெண் துகைகளோ வொன்றுபடுத்தி அவ்விராசியெண்ணிற்பெருக்கி மொத்தமான கிரகம் உச்சமதிகமானால் நான்கிலுலும் ஆகுதி அதிகமானால் (உ) லுலும் நட்பாகில் அதேகையையும் கடைசியில் சீவனம்விடும்போது தனலாபமென் றும் மாதமொன்றில் கிடைக்கும் லாபமாக அரியவும் முன்கூறிய யெண்ணுடன் சீவன ஆரம்பத்துக்குக்குன்றிய பெருக்கியதுகையை ஒன்றுசேர்த்து பார்த்தல் வேண்டும்.

கடகலக்னத்தின் குணகுணம்

தேகஞ் சிகப்பு சாமர்த்தியவான் தைரியமான பிடிவாதமானது நடை யிலுஞ் சஞ்சாரத்திலும் மிகப்பிரியன் வேசிஸ்திரீ அதிகமெனபோகன் தானிக தனவிர்த்தியுள்ளவன் குருவுபதேச வாஞ்சையுள்ளவன் பிதாவிற்கிசை யான் காணதவிடத்தில் அடையாள மருவுள்ளவன் சிலநாள் கடன்முதலிய தரித்திரப்படுவன் (டு, கசு, உ0, உடு) இந்த வயசு மாதம் நாளில் அபமிருத்து பயம் சுபர் திருஷ்டி லக்கினத்தைப்பார்க்கில் சாதகனுக்கு ஆயுள் (கூ0) வயது என்றும் உத்தராயணம் மாசிமாதம் சுக்கிலபகஷ பஞ்சமி புதவாரம் மிருகசீரிஷ நக்ஷத்திரம் மத்தியானவேளையில் ஜீரியாணமென்றும் தெய்வீக பரமபதனுகக் கூறப்படுமென்றும் அறியவேண்டியது.

கடகலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு குசன் குரு யோகாதிபதிகள்யென் றும் இதில் குரு பாபக்ஷேத்திரம் (சு, அ-ல்) வாழில் மிகுந்த கொடியதான பாபியாகிப் பொருளோத் தோற்கடிப்பன் குசன் பிரபலயோகவானுகியும் சநரன் சனி அதிகச் சுபர்களென்றும் சனி யோர்பாக மாரகனென்றும் புதன் மாரகன் பாபியென்றும் சுக்கிரன் பாபியென்றும் இராகு கேது இயல்புக்குறிய யோக காரர்களென்றும் கூறப்பட்டிருக்கிறது.

மாரகதிசை

கூடினும் அந்த இராசிக்கதிபதிகள் பெலமற்று இருந்தாலும் மேடம் தலா மிவைகளில் சனி முதலிய பாவரிருக்கில் ஒருவருக்கு அடிமைவேலைசெய்து புசியான் இதில் மிகவும் இகழுவன் இதிற் கூடியகிலர் பெலனும் சுபராகிய குரு முதலிய சுபர்கள் கூடினலும் பெலத்து மேடம் தலா முதலிய அதிபதியுடனிருந்தாலும் ஜாதகன் ஒருவனுக்கு அடிமை சீவனஞ் செய்தாலும் மேன்மையுடன் பிறபல கீர்த்தியைப்பெற்று வாழ்வனென்றும் மேடத்தில் புதன் முதலிய சுக்கிரன் இவரும் குசன் விருடபம் தலாம் கன்னி மகரத்திலிருக்கில் பெண்மூலிய சீவனமும் இதில் சூரியன் முதலிய பாவருங்கூடி இருக்கில் சீவனத்தில் குறைவும் குசன் முதலியவர்கள் மிதுனம் மேடம் விருச்சிகம் தனுசு கும்பம் சிங்கமிவைகளினின்றும் சந்திரன் மேற்கண்டராசியில் இருக்கினும் மேடத்தில் சுபரிருக்கினும் அல்லது குரு முதலிய சுபக்கோள்கள் பார்க்கில் சாதகன் மூர்வார்சிதமுள்ள பூமி முதலிய சீவன யோகனுவான்.

குசன் குருவல்லது சுக்கிரனுடன்கூடியாவது மேடத்தில் குருவல்லது சுக்கிரனின்றலும் சனியுடன் ஷியோர் கூடினலும் சனி பெலமுற்றிருக்கினும் சில புராணபிரசங்காதி வேதவித்தை முதலிய சங்கீதவித்தைகளால் சீவனமுண்டு. புதன் அல்லது சந்திரன் இராகுகூடி யிருந்தாலும் பார்த்தாலும் கணிதம் முதலிய நூற்கலசல் சீவனமும் இதில் புதன் சுக்கிரனுடன் மற்றொரு சுபர்சேர்ந்து சனி நோக்கினலும் கூடினலும் சீவனம் வியாபார மூலியமென்றும் சுக்கிரனல்லது குருவாதல் இருக்கில் உபதேச கர்த்தாவாகி இருந்து சீவனஞ்செய்வனென்றும் சுபபெலத்தால் அதியோகமும் சீவனத்தினலுண்டாகுமென்றும் இதில் அசுபர்கள் பெலமற்ற நீசம் பகைபெற்று இருக்குமாகில் சீவனமானது அல்பத் தொழிலுண்டாகும்.

சீவனகணிதம் கூறப்படுகின்றது

சனியுடனும் குசனுடனும் சந்திரனும் பத்தாமிடத்ததிபனுடனும் மேடத்திலும் சனிக்கி பத்தாமிடத்திலும் அதிபதியுடனும் கூடிய கிரக பெலன் பெற்றுச் சேர்ந்த கிரகம் அதிகமாகி உச்சக்கிரகமானுல் (உ) தடவையும் ஆட்சியானுல் ஒரேதடவை பெருக்கியும் நடபானுகில் அந்தத்துகையையும் பகை நீசமானுல் தள்ளுபடி யெனறும் அவ்விதங்கண்ட கணக்கின் எண் கொண்டலாபம் அந்தியவரை மீ (க-க்கு) குசனுடனே கூடியதும் கூடாவிடில் அந்த ராசிக்கதிபனுடன் கூடிய கிரகயெண்ணில் முன்கூறிய யெண்கணக்கில்கொடுத்து கொண்டமிச்சம் சீவஜ முதலியவகையாய் முதலில் உண்டாகும் சீவனமென்றறியவேண்டியது. இவ்வித கிரகங்களுக்கு விரோதிகளின் திசாபுக்திவருமாகில் அக்காலம் சீவனவிரோதம் இராசபயம் பகை சீவனக்குறை யுண்டாகுமென் றறியவேண்டியது.

லாபவிரய பலன்கள்

சுக்கிரன் துலாம் கடகம் விருஷபம் மீனம் மகரமிவைகளில் குரு முதலிய சந்திரன் முதலிய சுபரைக்கூடினும் இந்த விருஷபத்தில் சுபரிருக்கினும் சாதகனுக்கு பிறபல லாபமுடையவன் இதில் அசுபராகிய சனி பாம்பு சூரியனிருக்கினும் குரு (உ, சு, அ, கஉ-ல்) இருக்கினும் சாதகனுக்கு விரயஞ் சாஸ்தியும் லாபக்குறைவும் உண்டாகும் புதன் சுக்ஷேத்திர உச்சனுகி ரவி சனி இவருடன் குருமுதலிய சந்திரர்களின் கேந்திரக்களிலாவது திரிகோணத்திலாவது இருக்கினும் பெலத்துடன் சுக்கிரன் தனதுவீட்டிலும் அதைப் பார்க்க புதன் மிதுன சம்மந்தமாகி சூரியன் சனி முதலிய குரு விருந்தாலும் வரும்படிக்கி சாஸ்தியான கிலவுநேருமென்றும் மிகவும் பிறபலயோகவானுகியும் வாழ்வனென்: றறியவேண்டியது.

மேற்கூறிய சந்திர கேந்திரத்தில் சூரியன் புதன் முதலிய சனி இருக்கினும் விருஷப மிதுனத்தில் குசன் அல்லது பாம்பு இருக்கில் பரஸ்தலம் தேவாலயம் வனகிரிசஞ்சார பிரியமும் பலதடவை மேலாகிய தீர்த்தயாத்திரையுடனும் மிகுந்த கீர்த்திகளுடன் வாழப்படுவ னென்றும் புதன் சுக்ஷேத்திர உச்சனுகி சூரியன் சனி குரு இவர்களி லெவரைக்கூடினும் சுக்கிரன் விருஷபம் பாவருடன் கூடினலும் விரயஞ் சாஸ்திலாப மற்பமுண்டாகும் சுக்கிரன் சுக்ஷேத்திர உச்சனுகி பெலத்துடன் பாவரே கூடினலும் லாபஞ்சாஸ்தியாகவிர்த்திப்படுவனென்றும் மிகவும் மேலோனுகிப்பலதேச வாசஸ்தனுவான் கீர்த்திபெற்று வாழ்வன்யென் றரியவேண்டியது.

சிம்மலக்ன பாவகுணகுணங்களின் மொத்தபலன்களாவன

போசன மதிகப்பிரியன் தேவதாபக்தியுடையவன் தரும சிந்தையுடையவன் அதிக பசியுடையவன் திடமான புத்தியுடையவன் சில பிணிகள் வந்து நிவர்த்தியாகும் உடன் மெழில்களிற் பிரிய மதிகமுள்ளவன் (டு, க0, உஎ) இந்த வயதில் சரமுதலிய செலகண்டம் சென்மலக்கினமான சிம்மத்தை குரு முதலிய சுபர்கள் பார்க்கில் வயது (அ0) வரையுண்டு பங்குனிமாதத்தில் அமரபட்ச பாட்டிமை அஸ்தகக்ஷத்திரம் சனிவாரம் புகலில் பரமன் பதமடைவனென்று மரியப்படும்.

சிம்மலக்ன திசாபாவாதி யோகாவயோக மாரகங்கள் கூறப்படும்

குசன் சுக்கிரன் யோககாராகளென்றும் குரு சனி சூரியன் சுபபலன்களைக் கொடுக்கப்படுவர்கள் என்றும் சனி புதன் ராகு கேது மாரகமென்றும் ஓர்காலம் சுக்கிரன் சந்திரனும் ஓர்காலம் குருவும் மாரகரூவார்கள் என்றும்.

புதன்றிசை சனி சுக்கிரன் குரு ராகு இந்த புக்தியிலும் கேதுதிசை சனி ராகுபுக்தியிலும் சுக்கிரன் றிசை தனது ராகு சனி புக்திகளிலும்.

சந்திரன் திசையில் புதன் குரு யுக்திகளிலும்
ராகுதிசை தனது புதன் கேது சுக்கிரனும்
குரு திசை சனி சுக்கிரனும்

சனி திசை குரு சுக்கிரனுமாரகர்கள் என்றுங் கண்டறியப்படுமென்றும் இதில் புதன் விசேஷ மாரகங் கொடான் யென்றுங் கண்டுகொள்ள வேண்டியது.

யோகாவயோக திசாபுக்தி நிர்ணயங்கள்

குசன் திசையில் குரு புதன் சுக்கிரன் இந்த புக்திகளும்
ராகு திசை குரு புதன் சனியும்
குரு திசை சனி சந்திரனும் சூரியனும்
சனி திசையில் சந்திரன் சனி சுக்கிரனும்
சூரியன் றிசையில் சனி புதனும்

சாதகனுக்கு பிரபல இராஜயோகமும் பூமி கிரகவாகன க்ஷேத்திரலாபமும் தனதானிய விர்த்தி புத்ரகளத்ரம் வாகனம் பூமி கன்று காலி லாபமும் இராஜ பிரபுக்களின் அதிகமான பூசிதம் இவ்வித விசேஷ சுகபலன் நடந்துவரும் என்று சொல்லவேண்டியது.

மேற்சொல்லிய திசைகளில் ராகு சூரியன் சனி கேது இந்த புக்திகளிலும் சந்திர புக்தியிலும் சாதகத்துக்கு தேகாரிஷ்டமேக தன்பமும் பொருள் சேதமும் பலவித கஷ்டநஷ்டமும் அன்யஸ்தல வீலச்சல்களும் இராஜ விரோத விவாதம் பொருள் சேதங்கள் குடும்பதுக்கம் பல மரணதுக்க பலன்களாக நடந்துவருமென் றறியவேண்டியது.

மாதுரு அரிஷ்ட்டம்

சந்திரன் திசையில் சுக்கிரன் புதன் சனி புக்தியிலும்
ராகு திசையில் சனி சுக்கிரனிலும்
குருதிசை சனி புதன் சந்திரனும்
சனி திசையில் சந்திரன் சுக்கிரன்
சுக்கிரதிசையில் ரவி சந்திரன ராகு புக்திகளிலும்

மாதாவிற்கு தேகாரிஷ்ட ரோகங்களும் பொருள்சேதம் மனதுக்கு வருத்தம் தாய்வழி மரணதுக்க முண்டாகுமென்றறிய வேண்டியது.

பிதுரு அரிஷ்டம்

கேதுதிசை சனி ரவி புக்தியிலும்
ரனிதிசை சூரியன் சனி சுக்கிரனிலும்

சுக்கிரதிசை சனி குசன் குரு புக்தியிலும்
ராகுதிசையில் குரு சனி சூரியனிலும்
குருதிசையில் சூரியன் சனி சுக்கிரனிலும்

பிதுருவுக்கு தோஷாரிஷ்டமும் பிதுரு கர்மத்தையும் பிதுர்வம்ச க்ஷயமும் குடும்ப துக்கத்தையும் கொடுக்கப்படுமென்றறிய வேண்டியது.

சகோதிரவரிஷ்டம்

குசதிசை ராகு சுக்கிர புக்தியிலும்
ராகு சனி குசனிலும்
சனி திசை புதன் ராகு புக்தியிலும்
கேதுதிசை குசன் சனிபுக்தியிலும்

சகோதிரவரிஷ்ட துக்கங்களையும் பல வருத்தங்களையுங் கொடுக்கப்படுமென்றறியவேண்டியது.

புத்திரலாபமும் அரிஷ்டமும்

குரு திசை சந்திரன் சுக்கிரன் குசனிலும்
சனி திசையில் குசன் குரு சந்திரன் புக்தியிலும்
புதன்திசை சுக்கிரன் குசன் குருவிலும்
சுக்கிரன்திசை தனது குருவிலும்

சந்திரன்றிசை குரு குசன் புதன் இந்த புக்திகளிலும் புத்திரலாபமும் காரிய சித்தியும் ஷ திசைகளிலும் குரு திசை சனிராகு இந்தத் திசைகளிலும் புத்திர அரிஷ்டமும் குடும்ப பீடையுங் கொடுக்குமென் றறியவேண்டியது.

களத்திரலாபமும் களத்திரவரிஷ்டமும் அரியுந் திசாபுக்திகள்

சுக்கிரன் திசை சந்திரன் புதனிலும்
சூரியன்றிசை குரு புதனிலும்
குருதிசையில் சந்தியன் புதனிலும்
சனிதிசையில் புதன் சுக்கிரன் குருவிலும்

புதன்றிசையில் சுக்கிரன்சந்திரன் குருவிலும் விவாகசுபசோபன கல்யாண மங்களமும் குடும்பசுகங்களையும் கொடுக்கப்படும்.

மேற்கண்டதிசையிலும் கேது இவ்விததிசைகளில் சனிராகு சுக்கிரன் இந்தபுக்திகளில் களத்திர நஷ்டமும் குடும்ப தோஷத்தையுங் கொடுக்கப்படுமென்றும் பலவகைத்துன்பங்களும் பொருள்சேதமு மனதுக்கு வருத்தமும் இவ்விதமத்திமபலன்களானது நடந்துவருமென் றறியவேண்டியது.

முதலாவது
ஆயுர்பாவ பலன்களாவன

குருவையும் சனியையுங் சனிக்கி அஷ்டமாதிபதியையும் மீனத்திலும் லக்ஞதிபதியையும் கொண்டு ஆயுர்பாவங் கூறப்படும்.

குரு குசன் சுக்கிரன் குரியன் சனி இவர்கள் மீனம் மேஷம் துலாம் கடகம் தனுசு இவ்வித இராசியில் கேந்திர திரிகோணமாக நீசம் பகையின்றி விருஷப இராசியில் சுக்கிரன் நிற்கினும் தனுசு துலாம் குருவாகில் மீனம் மகரம் கும்பங் இவையில் சனியாகினும் பெலத்து நிற்கினும் குரு சந்திரன் அவரவர்கள் கேந்திரமாகி குரியனுட் குருவும் சரமான இராசியில் பெலத்துடனும் இருக்கினும் சனிக்கி அஷ்டமாதிபதியும் குருவின்ற இராசிக்கி அஷ்டமாதிபதியுங் குருவின்றவிராசிக்கு அஷ்டமாதிபதி லிருந்தவர்களும் பெலமான கேந்திரத் திரிகோணத்திலுஞ் சூரியன்பெலத்த கேந்திரதிரிகோணத்திலும் சூரியன்வின்ற இராசிகுடையவனும் பெலத்துடன் கேந்திர கோணத்திலாவது சுக்ஷேத்திர உச்சமான இடத்திலிருக்கில் சாதகனுக்கு ஆயிர்பாவமான வருஷம் (ஈ) வறையென்றும் இதில் குரு தனுசுவிலும் சந்திரன் பூரணனாகி அவன் கேந்திரத்தில் குருவும்மேஷத்தில் சூரியனும் சுக்கிரன் புதன் விருஷபத்திலிருக்கினும் அல்லது சனி சுக்கிரனுடன் துலாத்திலிருக்கினும் சுக்கிரன் துலாத்திலும் சனி குடும்பத்தினின்றும் புதன் ரவி மேஷத்திருக்கினும் பாவரெருவருஞ் சேராமலிருக்கிலும் தனுசுமேஷ விருஷபத்தில் நீசரல்லது பகையோர் பாவர்களில்லாமலிருக்கில் சாதகனுக்கு சுக்கிரன் குசன் சேரினும் ரவி புதன் பெலத்துங் குரு சுக்ஷேத்திரமாகி இருக்கின் அதிஞானியாகியும் சனி கேந்திரத்தில் சுக்ஷேத்திரனாகி புதன் சுக்ஷேத்திர உச்சமும் கேந்திரகோணஞ் சந்திர வசாதிருக்கில் குரு சுபர் சென்மத்தையாவது சுக்கிரன் சனியையாவது பார்க்கில் கல்பாந்த ஆயுர்தாதவ சோதனு யோகாப்பியாசத்தினல் செயிக்கவல்லவன் இதில் குசன் பார்த்தாலுஞ் சேர்ந்தாலும் (ஈஉ) வருஷம் ஆயுளும் இராகு அல்லது பாம்பு சேரில் (ஈஏ) வுடம் யென்றும் இரண்டு பாபிகள் சேரில் ஆயுள்பாவங்கூறிய வருஷமென்று மூன்று பாவர் சேர்ந்திருக்குமாகில் யேற்பட்டசாதாரண வாயுளிலேயே ஷ (ஈ0) கம்மியாகியும் வாழ்வனென் றறியவேண்டியது.

சனி சுக்ஷேத்திர உச்சஇடத்திலும் சுக்கிரன் கேந்திர கோணத்தில் சுக்ஷேத்திர உச்சமான இடத்திலும் சந்திரன் கேந்திரத்தில் குருவும் யெவ்வித பாவர் கூடினும் ஷ (எஉ) வரையென்றும் இதில் சூரியனும் சூரியனின்ற இடத்தாதிபனும் கேந்திர கோணத்தில் பெலத்துடனிருகினும் சென்மலக்னத்தை சுபர்நோக்கி சூரியன் சனி குரு சரம் ஸ்திரமிவையிலிருக்கில் வருடம் (எடு) யென்றும் சுக்கிரன் பகை நீசம்பெற்ற அபெலனாகி குசன் கேந்திர திரிகோணத்தில் பெலத்துடன் சுபக்ஷேத்திரத்திலும் கன்னி கடகத்தில் சுபரும் சந்திரன் பெலத்தும் சூரியன் சனி உச்சசொக்ஷேத்திரமாக இருக்கி

னும் சாதகனுக்கு ஹ (சுசு) யென்றும் சூரியன் சிங்கம் மேஷம் விருச்சிகம் தனுவிலிருக்கினும் சனி கும்பம் விருஷபம் கன்னி துலாத்திலிருக்கினும் குரு தனுசு விருச்சிகம் மீனம் விருஷபம் சிங்கத்திலும் சந்திரகேந்திரமாகியும் சனி ரவி பெலத்தும் ரவிநின்ற ஸ்தானாதிபதி கேந்திரகோணத்தில் பெலத்து நிற்கில் சாதகனுக்கு ஹ (சுஉ) வறையென்றும் இவர்களுடன் பாம்பு அல்லது குசனிருக்கில் சாதகனுக்கு ஹ (சுச) யென்றும் இவர்கள் சர இராசி யல்லது உபயத்துநிற்கினும் ஆயுர்பாவ ஹ (சுச) யென்றும் மேற்கண்ட இராசிகளினின்ற கிரகத்துடன் புதன் சனி கூடியிருக்கில் ஹ (சுஉ) யென்றும் சந்திரன் குசன் முதலிய பாவரிருக்கில் ஹ (டுச) யென்றும் அத்துடன் புதன் சுக்கிரன் ரவியுடன்கூடி உபயம் சரவிராசியில் இருக்கில் ஹ (டுஉ) யென்றும் தனித்து சூரியன் கேந்திரகோணத்திலும் குரு சுக்கிரனுடன் பாவரும் சந்திரனுடன் பாவர்சேரினும் ஹ (டுச) யென்றும்.

சந்திரனும் சனியும் பெலமுற்றும் சூரியன் கேந்திர கோணத்தில் இறுக்கினும் குரு நோக்கினும் வேறு எவ்வித பாவர்கள் கூடினிற்கின் சாதகனுக்கு வருடம் (சஅ) யென்றும் இதில் குரு முதலிய சூரியன் சந்திரன் சனி ஸ்திர முபயத்திலிருக்கில் வயசு ஹ (சஅ) யென்றும் கூறப்படும்.

மீனத்தில் குரு சனி யிருக்கினும் அல்லது மிதுனம் துலாம் மகரம் இவையில் நின்றும் சூரியன் ஸ்திரவிராசியிலிருக்கினும் மேஷம் இவையில் புதன் கூடி சுக்கிரன் முதலிய (சு) கிரகஞ் சேர்ந்து இருக்கின் ஹ (சசு) யென்றும் குருகேந்திரத்திலும் சூரியன் துலாம் மகரம் மீனம் கடகமிவையில் சனி முதலியபாவரைக்கூடி இருக்கினும் லக்னத்தில் குசன் பாம்பு முதலியோர் கூடினாலும் சாதகனுக்கு ஹ (சுஉ) யென்றும் இதில் சுக்கிரன் சுகேஷத்திர உச்சத்தில் கூடி சந்திரகேந்திரமாகி குரு சூரியனிருக்கில் ஹ (சசு) யென்றும் சந்திர கேந்திரமின்றி சென்மலக்ன கேந்திரமானால் ஹ (சக-க்) குள்ளென்றும் சென்மலக்ன கேந்திரமின்றி குரு பார்த்தாலும் சந்திரன் பார்த்தாலும் க்ஷீணசந்திரனாகி சூரியனுடன் அனேக பாவரிருந்து பெலமற்று இருக்கில் ஹ (சுசு-க்) குள் ளென்றும் சூரியநின்ற ஸ்தானாதிபதி வலுத்தும் குரு நோக்கியும் மகரம் மீனம் கடகம் கன்னியில் ரவிமுதலிய பாவரிருக்கினும் சுக்கிரன் புதன் சந்திரன் குரு பெலமற்று நிற்கில் ஹ (உஅ-க்) குள்ளும் இரண்டு பக்கங்களிலும் பாவர்களும் சூரியன் துலாம் மீனம் மிதுனத்தில் சனி முதலிய புதனைக்கூடியும் சுபர்திருஷ்டி இல்லாமலிருக்கில் ஹ (சுஉ-க்) குள்ளென்றும் சுபர் திருஷ்டியுஞ் சந்திரகேந்திரமுமாக இருக்கில் ஹ (டுல) யென்றும் குருமுதலிய சுபர்கள் உபராசிகளிலும் சனி ஸ்திர விராசியிலும சூரியன் கலந்தும் (உ, கஉ-ல்) சனி முதலிய பாவரிருக்கில் ஹ (உச) வரையும் சந்திரக்ஷீணனாகி அபெலஸ்தானத்திலும் பாபிகள்கூட அல்லது பார்க்கினும் குருமுதலிய சுபர்கள் பெலமற்ற அசுபக்ஷேத்திரத்திலிருக்கில் ஹ (உஉ-க்) குள்ளென்றும்.

சனி குரு முதலியோர்கள் கன்னி மிதுனம் கடகம் மீனம் மகரத்திலும் சூரியன் முதலிய பாம்புகளைக்கூடி பகை நீசக்கோளுடன் கூடி இருக்கில் ஆயு பதினாருக்கும் ஆயுளென்றும் பகை நீசர்களாய் சுக்கிரன் முதலிய சந்திரனுடன் சனி பாம்பு முதலிய பாபர்களும் கன்னி கடகத்திலும் சந்திரனுக்கு இரண்டிடத்திலும் (கஉ-லும்) சனி முதலிய பாவரிருக்கில் ஆய (கஉ-க்) குள் ஆயுர்பாவம் பாலாரிஷ்ட சாதகனென்றும் மீனத்தில் சனி குசன் முதலிய அசுபருடன் சூரியன் கூடினும் அல்லது மகரத்திலும் குரு முதலிய சுபர்கள் பாரமலும் இருக்கில் ஆய (அ-க்) குள்ளென்றும் சனி சந்திரனல்லது சூரியனுடன் கூடி பாம்பு முதலிய குசனைக்கூடினும் கன்னி கடகத்தில் பாபர்களும் பகைநீசம் பெற்றகோளுடன் கூடி இருக்கில் பாலாரிஷ்டம் வருஷம் (ஙி-க்) குள் மாரகமென்றும் சூரியன் குரு முதலியோர்கள் துலாம் மகரம் மேஷ தனுசுவிலிருக்கினும் சனி குசனைக்கூடி இருக்கினும் மீனத்திலிருக்கினும் சந்திரன் பெலமற்று இருக்கின் சாதகனுக்கு அதி சிசுவிலேயே மரணத்தடைவனென்றும் இதுகளையும் சந்திரன் சிம்மம் மிவைகளைக்குரு நோக்கினும் இருக்கினும் பாலாரிஷ்டம் நீங்கி ஆயுவிர்த்திகளையும் அடைந்து சுகமாக வாழ்ந்துவரப் படுவனென்றும் மிகுந்த கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சிகளும் உண்டாகுமென்றும் அதிகசுக சௌக்கியமாகும்.

சிம்மத்திலாவது கன்னி கடகம் மீனத்திலாவது சூரியனுடன் சனி முதலிய பாவரும் குசன் பாம்பும் கூடினுல் பிறந்தவுடன் சிசுமரணமாகும் குரு முதலிய சுபர்பார்க்கில் அரிஷ்டம் நிவர்த்தியாகும்.

இந்தக் கோள்களுடன் கூடியகிரகாீதியாகியும் சூரியனுக்கு எட்டில் பாபிகளான சனி குசன் முதலிய பாம்புகூடி பகைநீசம் பெற்றேறுமிருக்கினும் சூரியனைக் கூடினுலும் பாலியத்திலேயே பிதுர் போகும்.

சந்திரனுக்கு (க, அ-ல்) இவ்விதமே பகைநீசக்கிரகம் சூரியன் சனி பாம்பு குசன் கூடி இருக்கில் மாதாவுக்கு அரிஷ்டமும் கூறப்படுமென்றறிய வேண்டியது.

சூரியனும் குருவும் சரத்திலேயே இருக்கினும் முன்பாகமான (எ) ராசிக்குள் சரத்திலிருக்கில் ஆயு அல்பமும் சந்திரனும் சனியும் பின்சாரமான (எ) வது ராசிமுதற்கொண்டு சிம்மத்திற்குள் பட்ட சரத்திலிருக்கினும் அல்பத்தில் அல்பமென்றும்.

மேற்கண்டவர்களே கேந்திரதிரிகோணஞ் சந்திரவசாதிருக்கினும் சனி வசாதிருக்கினும் அல்பத்தில் மத்திமவயதும் சூரியனின்ற ஸ்தானுதிபதி வசாத் உபயம் சரத்தில் கேந்திர கோணமாயிருக்கில் அல்பத்தில் பூரணவயது யென்றும்.

ஸ்திரவிராசி மூன் (உ-ல்) குரு சூரியனிருக்கில் மத்திமத்தில் அல்ப வயதென்றும்.

சந்திரன் சனிவசாத் கேந்திரகோணமாயிருக்கில் மத்திமத்தில் மத்திம வயது யென்றும்.

சந்திரன் சனி வசாத் உபயம் ஸ்திரவிராசியாய் கேந்திரகோணத்திலிருக்கில் மத்தி மத்தில் பூரணவயதென்றும்.

குரு சூரியன் உபயம் அல்லது சரவிராசிகளில் பின் (உ) ராசியில் சுபருடன் சனிசந்திர கேந்திர கோணத்திலேயே இருக்கில் தீர்க்கத்தில் அல்பவயதென்றும் முன் ராசி உபயம் கேந்திரகோணத்தில் உச்சசொகேந்திராதிபதி கேந்திரத்திரிகோணாதிபதி சேரில் தீர்க்கத்தில் மத்திமவயதென்றும் உபய உபயம் உபய ஸ்திரம் உபய சரவிராசியாய் கேந்திரகோணத்தில் சுபருடனிருக்கில் பூரணத்தில் பூரணவயசுயென்றும் உபயஸ்திரமாகிலும் பூரணத்தில் மத்திமவயதெனறும் உபய உபயமாகில் மத்திமத்தில் பூரணவயசுயென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

சேற்கையான கிரகங்களோடுங்கூட்டி பெலாபெலனுக் கிசைந்தபடி அறிய வேண்டியது.

ஆயுர்பாவகெணிதங் கணிக்கும் வகைகளையும் திசாபுக்தி மாரகமுங் கூறப்படுகிறது

சனியுடனும் சூரியனுடனும் குருவுடனும் சூரியனின்ற அதிபனுடனும் கூடிய கிரகங்களையும் மீனத்திலும் சிங்கத்திலும் சந்திரனிருக்கு மிடத்திலும் கூடிய கிரக யெண்களை அந்தந்த இராசியெண்ணிற் பெருக்கி உச்சமாகி பகைநீச மிடபுப்படி பெலன்களுக்குறிய எண்ணெடுத்துப் பெருக்கியும் கேந்திரம் சுபகேந்திரம் உச்சமானால் சமத்துகைபோட்டுப் பெருக்கியும் ஆகியானால் பாதிதள்ளியும் நட்பானால் முக்கால்பங்குள்ள துகைதள்ளியும் பகைநீசமானால் கிரகயெணணே கணக்கின்றியும் தள்ளுபடிசெய்து (ா-ல்) சழித்த சேஷம் ஆயுர்பாவமாகுமென்று மேற்கண்டயெண்களை (டு-ல்) பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் திசையாகியும்வந்தயீவை (டி ல்) பெருக்கி (க ல்) கழித்தசேடம் புத்தியாகியும் வந்தயீவை (டி-ல்) பெருக்கி (சு-ல்) கழித்த சேஷம் அந்திரமாகியும் கொண்டு ஆயுள்காலம் அத்திசைபுத்தி அந்திரத்தில் மாரகமென்று சொல்லவேண்டியது.

2-வது தனகுடும்ப நேத்திராதி பலன்கள்

புதன் முன் உபயத்தில் சூரியனுடன் மிகுனத்திலிருக்கினும் குரு முதலிய சுபர்கள் நோக்கினும் சந்திரகேந்திரமாகினும் தனவந்தனாகி மிகவும் இராசயோகனுவன் சிம்மத்திலிருக்கினும் (உ-ல்) சனி முதலிய பாபிகளின்றி இருகில் தரித்திரமின்றியுங் குடும்ப விருத்தியுடனும் இராசயோகனுவன்.

புதனுடனுவது கன்னியிலாவது புதன் சுக்கிரன்கூடி சந்திர கேந்திரமாகினும் புதன் குரு நின்ற இடத்துக்கு (உ) மிடத்திற சுகேந்திர உச்ச

கேந்திரத்தில் னின்ரூலும் சுபரைக் கூடினும் சுபக்ஷேத்திரத்தில் பெலத்து னிற்கின் சாதகன் பிரபல தனவந்தனுவான் கோடியாந்திர ஆஸ்தியுடையவ னென்றும் சூரியன் சுக்ஷேத்திர உச்சனுதனுகிய புதனுகியவருடன்கூடி குரு தனுசு கடகம் விருஷபம் மீனத்தினின்ரூலும் சுக்கிரன் சுக்ஷேத்திர கேந்தி ரத்தில் சுபகிரகத்திலிருக்கில் கோடியாந்திர ஸ்திதியுடையவனுகி வாழ்வ னென்றும் சனி முதலிய ஒரு பாபிகள் சேர்ந்தாலும் பார்த்தாலும் லெட்சாந் திரனுகியும் கோடியென்ற பிரபுபேரை மாத்திரம் வகிப்பனென்றும் மேலான பிரபுவாகியும் குரு புதனின்ற ஸ்தானத்துக்கு (உ-ம்) குடையவனிருக்கும் ஸ்தானுதிபதிபெலத்து உச்ச சொக்ஷேத்திர ஸ்தானத்தில் பெலாட்டியனுகி குரு புதன் கேந்திரத்திலாவது நட்பு ஆக்ஷி உச்சராசியில் குசன் அல்லது ஓர் பாபிகளேக்கூடியிருக்கினும் மீனம் மகரம் னீங்கியவிடத்திலிருக்கில் லட்சாந்திர பிரபுவாகியும் கன்னி துலாம் மிதுனம் விருடபம் தனுசு இவைகளில் சந்திர கேந்திர குருவாகி புதன் ரவி பெலத்துடனிருந்து குசன் முதலிய பாவரைக் கூடினும் தசசகஸ்திராந்தர ஆஸ்தியையுடையவனென்றும்,

புதன் பெலத்தும் தனஸ்தானுதிபதி கேந்திரத்திலும் இவனிருந்த ஸ்தானுதி குருவுடனல்லது குரு கேந்திரத்திலும் கன்னி கடகம் தனுசு விருஷபத்தில் க்ஷீணசந்திரனிருந்தாலும் தசசகஸ்திர திரவியமுடையவனென் றும் சண்டமாருத யோகவானென்றும,

புதன் ரவி முதலியோர் தனித்தனி பிரிந்தாலும் ஒன்ரூனுலும் மகரம் துலாம் மேஷம் கும்பம் மிதுனம் கடகத்திலிருக்கினும் தஸ்தானுதிபதி பெலத்து உச்ச சொக்ஷேத்திரத்திலும் கேந்திரகோணமல்லது சந்திர கேந் திரமானுலும் குரு சுக்ஷேத்திர உச்சம் நட்பில் பெலத்துடன் சுபக்ஷேத்திரத்தி லிருந்தாலும் புதன் தனித்தாலும் புதனுக்கு (உ-ம்) குடையவன் பெலத் துள்ள சுபக்ஷேத்ர வாசமானுலும் சகஸ்திராந்தர திரவியஸ்தன் என்றும் புதன் ரவி முதலியோர் மீனம் விருஷபம் விருச்சிகம் சிங்கம் இவையில் பாவ மிதுனத்தில் பாவரிருக்கினும் குரு பெலவானுகி நோக்கின் சாதாந்திர திரவிய விருத்தியுடையவனென்றும்

கன்னி கடகம் இதிலும் நீசம்பசையோரும் புதன் மகரம் மீனம் கடகத்தி லாவது பகைபெற்ற இடத்திலாவது இருந்து மிகவும் கடின விரோதிகளான பகைவரைக்கூடினும் குருபெலனற்று பாப க்ஷேத்திரத்திலும் பகையோர் கூடினும் அல்லது மகரம் துலாம் மேஷம் விருச்சிகத்தில் பாவருடன் நீசம் பகைவருடன் கூடினுலும் சந்திரனுக்கும் குரு புதனுக்கும் இரண்டாமிடத் ததிபதி இருந்த இடத்துக்குடையவன் பகை முதலிய நீசம் பெலமற்றுக்கெட் டுப்போனபோதிலுஞ் சாதகன் தரித்திரனுகி தனமில்லானுய் வருந்தியிளேப்ப னென்றும் ரோணஸ்தனுகியும் சனி கடகத்தினின்றும் புதன் குசன் பெல மற்று இருக்கின் பூர்வார்ச்சித தனமில்லானென்றும் அவ்விதி அசுபகிரகத் தில் பகைவருடன் சேர்ந்து பிறபல பகையோரிருக்கினும் தனமில்லாதவ

னென்று சந்திரன் குருவலுட்பெற்றுக் கேந்திரத்திரிகோணத்தில் மிபவும் பூர் வார்ஜிதமின்றி சுயார்ஜித தனஞ்செய்வனென்றும் புதன் பலகீன இடத்திலும் மகரம் மிதுனம் மீனத்திலிருந்து பாபர் பார்த்தும் கூடியிருந்தாலும் சுயார்ச் ஜிதமில்லாவனென்றும் கூறவேண்டும்.

தனகுணிதங்குணிக்கும் விபரமாவன

குருவுடனும் புதனுடனும் பதனுக்கு இரண்டாமதிபனுடனும் குருவுக்கு இரண்டாமதிபனுடனும் கன்னியிலும் மிதுனத்திலும் இருக்கும் கிரக யெண் களைப் பெலாபெலக்கிரசந்தபடி ராசி யெண்ணிற் பெருக்கிக்கொண்டு ஒன்று சேர்த்து உச்ச சுபக்கிரகமதிக யெண்கொடுத்தால் சமத்துகை (உ) தபா பெரு க்கியும் ஆகஷியில் சுபக்கிரக மதிகமாகில் சமத்துகைபோட்டு ஒரே தடவை பெருக்கியும் கட்பாகில் அதே துகையும் பகையாகி லறைபங்கு தள்ளியும் நீச மாகிலும் பாபக்கிரகமாகினும் மூக்கால்பங்கு தள்ளியுங் கண்ட துகை அவன் அந்தியவறை லீலைப்புள்ள ஸ்திதி வந்தனென்றறியப்படும் என்றும் அபெல பாபிகளாகி லவ்வளவு கடனுடைய துர்த்தராகர்த்தாரியோகவா னென்றும் தரித்திர யோகனென்றுங் கண்டு கூறப்படு மென்றவாறு.

நேத்திர குடும்பபலன் வாக்யபலன்

சுக்கிரன் சூரியன் கன்னியிலாவது கடகத்திலாவ திருக்கினும் சனி முத லிய பாவர்களைக் கூடினும் சூரியன் புதன் தலாம் மகரம் மீனம் இவைகளில் சுக்கிரனுட னிணரலும் கேந்திரவானியுண்டாகும் குசன் முதலில் இவ்வித மிருக்கும் கிரகத்தையாவது (உ, கஉ-ம்) இடங்களையாவது நோக்கினு மிருக் கினு மேல நீர் புகைச்சலெனனும் உபாதிகளால் நேத்திரமங்கும் சனி சூரியன் முதலிய குசன் சூரியன் சுக்கிரனுடன் (உ, கஉ-ல்) இருக்கில் அந்தகனுவன் சுக்கிரனுடன் கடகத்தில் இருக்கில் முழியிருக்க அந்தகனுவன் சூரியன் வலுத்து சுக்கிரன் மாத்திரம் சனியல்லது பாவர்பார்க்க கன்னியிலாவது கட கத்திலாவது இருக்கில் சில நாளுக்குப்பின் னேத்திர ரோகமுண்டாகும்

சனி குசன் முதலியர்கள் மீனம் தனுவிலிருந்தும் சுக்கிரன் ரவிபெல னற்றும் பாவரைக்கூடினலும் புதன் (உ-ல்) இருக்கினும் அந்தியகாலத்தில் நேத்திரம்போகும் சுக்கிரன் முதலியோர் இவருடன்கூடி (கஉ-ல்) இருக் கில் இடது னேத்திரம்போகும் கன்னி பிலிருக்கில் வலதுனேத்திர ரோக முண்டாகும் இரெண்டிலும் பாவரிருக்கினும் சுபர் பார்க்கினும் புதன் ரவி பெலத்தாலும் சுக்கிரன மறைய இடங்களிலிருந்தாலும் மாலைக்கண்ணு அல்ப மாக நேத்திர மறைவுகொடுக்கும் சனி பாம்பு கூடினலும் பார்த்தாலும் நேத்திரபீடையுண்டாகி சாந்தமாகும் இவ்வித பெலன் அற்று குருகேந்திரம் பூரணபக்ஷ சந்திர கேந்திரமாலும் வியாதிநேத்திர உபாதிசம்பவித்து செய்

வகையால் சுகமுண்டாகும் குரு முதலிய சுபர்கள் கன்னி கடகத்திலிருக்கினும் சுபர் பார்த்தாலும் புதன் ரவி சுக்ஷேத்திரம் உச்சம் சுபக்ஷேத்திரத்திலிருக்கினும் நேத்திரசுகத்துடனும் குடும்பவிருத்தியுடனும் அதிக வாக்சாலஞ்சியுமிகபுங் கீர்த்தி வீர்த்தியுடன் வாழ்வனெனறும் தனகுடும்ப மேன்மையுமுண்டாகும்.

இவர்களுடன் சனி குசன் முதலிய பாம்பு சேரில் சிலகாலஞ் செல்வாக்கும் பின் ஒன்றுமின்றியும் குடும்பமும் சிலகால விருத்தியும் பின் கூயமும் பாபரே இருக்கில் குடும்பமே இன்றியும் பலகவலேயும் தரித்திராதி பீடையும் அவரவர்க்கும் இவ்வித கெடுதல்களும் அதம பலனுகளே நடந்துவரப்படுமென்றும் குடுமபதுக்காதி கூயங்களும் புதன் மீனம் துலாம் இவையில் குசன் ரவிமுதலிய பாபரைக்கூடினும் இவ்விதமே குடும்பமின்றியும் சுபர்கள் நோக்கினும் கன்னி கடகத்தை குருமுதலிய சுபாகள் பார்த்தாலும் பின் கடைக்குடும்ப மின்றியும் முன் விருத்திபோலும் காண்பித்து பலவாராகிய நஷ்டத்தையும் அடைவனென்றும் அறியவேண்டியது.

மூன்றுவது சகோதிரபலன்கள்

சுக்கிரன் பெலத்துடன் கேந்திர கோண ராசியிலும் குசன் முதலிய பாவர்கள் கூடாமலும் துலாத்தில் குசன் முதலிய பாபர்கள் கூடாமலும் இருக்கினும் சந்திர கேந்திரமாக இருக்கில் அடுத்தவை பெண் சந்ததியுடன் சகோதிர விருத்தி யுண்டென்றும் புதன் சுக்கிரன் கூடினுலும் கேந்திர கோணத்தில் சந்திர கேந்திரமாகிக் குரு நின்றுலும் துலாம் தனுசு மேஷம் மிதுனத்தில் குருவுடன் சூரியன் குசன்கூடி சுக்கிரன்கூடினுலும் பார்த்தாலும் பிறந்தவனுக்கு பிரபல சகோதிரமும் விருத்தியும் ஆயுள்யோகமும் உண்டாகும் குசனுக்கு மூன்றுக்குடையவனும் சுக்கிரனுக்கு மூன்றுக்குடையவனின்ற ஸ்தானுதிபதி இவர்கள் சுபக்ஷேத்திரத்தில் துலாம் தனுசு விருஷபம் மிதுனம் இவ்வித ராசியில் பெலத்துடன் பூரண சந்திர கிரக கேந்திரவாசஸ்தனுசு இருக்கில் சகோதிர புருஷசந்ததிகளதிக விருத்தியுடன் வாழப்படுமென்றும் மிகுந்த கீர்த்தி மூர்த்திகளும் இராசசன்மான வெகுமானத்துடனும் அதிக பிரபலவாளுகி வாழ்வனென்றும் துலாந்தனுசு குசனுடனும் குசனுக்கு மூன்றிலும் அதிபங்களும் பெலத்து சிங்கம் துலாம் தனுசு மேஷம் விருஷபம் மிறனத்தில் சுபர் திருஷ்டியுடன் இருக்கினும் குரு முதலியோர் கூடினும் சாதகனுக்கு சகோதிரவதிக விருத்திகளும் சுசுகிரன் துலாம் விருஷபம் மீனம் விருஷபம் கடகம் இவையில் சுபராகிய வீக்ஷணியமும் அமரபட்ச சந்திர கேந்திரமல்லது துலாத்தில் சந்திரனிருக்குமாகினும் பாம்புமுதலிய கிரகங்கூடினுலும் புதன் இவர்களுக்கு திரிகோணத்திலிருந்தாலும் பிறந்தவனுக்கு சகோதிரியென்ற பெண் விருத்தியேயொழிய புருஷசந்ததி விருத்தியாகாதென்றும் இவையில் பூரண சந்திரனுவது குருரவியாவது குசனுவது பெலத்துக் கூடி

யிருக்கினும் இராசியிலிருந்தாலும் புருஷன் ஸ்திரீ இவ்வித சகோதிர யோக ஞகி வாழ்வன்.

துலாத்தில் குசன் முதலியபாவரும் மிதுனத்தில் சனிமுதலிய பாவரும் சுக்கிரன் பெலன் கெட்டு நிற்கினும் பரபரைக்கூடினும் பாபிகள் வீட்டினின் ரூலும் புதனுமிவ்விதியே இருக்கில் சகோதிரமின்றி மரணமடைவன் குரு முதலிய சுபக்கோள் கூடினும் நோக்கினும் சகோதிரங்கன் சிலகாலவரை இருந்து மரணத்தடையுமென்றும் கண்டறியவேண்டியது.

புதன் சுக்கிரன் ரவிமுதலியவர்கள் சூரியசந்திர கேந்திரமாகி துலாம் தனுசு விருஷபம் மிதுனம் இவையிலிருக்கில் சங்கீதாதி வித்துவானுவன் சூரியன் முதலிய சனி சேரில் கூத்தாடியாகித் திரிவன் விகடத்தொழி லடை வன் பாம்பு முதலியோர் கூடினும் இவ்விதியே விகடஞகி லோக சஞ்சாரி யாவன் புதன் பெலமற்ற இருக்கின் தாசிகெமனஞகி அவளுக்கு அடிமையாகி நாட்டியஞ் செய்வன் பாபர் முதலியபாபக்கோள் கூடி இருக்கில் பரஸ்திரீ கெமனஞகி அவமானமடைவன் குசன் கூடினுல் சிகை முதலிய அவயவக் குறைவு பெண்பரஸ்திரீ போகத்தால் அடி முதலிய அவுமானமடைவன் குரு முதலிய சுக்கிரன் கூடி நோக்கில் அவைகள் நீங்கி பரஸ்திரீ கெமனஞகி பரஸ் திரீயின் சொத்துக்கள் பரஸ்திரீயானவள் வலுவிற்றனத்தைத் தந்து போகிப் பள் என்னும் சனி ரவி மாத்திரம் புதனுடன் மேஷ துலாத்தில் இருக்கில் லேபனமில்லாமலும் அண்டரோகியமும் வாழ்வனென்றும் பலவகை கஷ்ட பலன்களையும் அனுபவிப்ப னென்றும் சுக்கிரன் றனித்தும் கும்பம் குரு முத லிய சுபரிருக்கின் மேதாவியாகி இராசஸ்திரீ முதலிய உயர்குலஸ்திரீகள் வலு விலே போகிப்பளென்றும் மிகவுதமலான பதவியுடன் வாழ்வனென்றும் புதன் இருக்கினும் விபசாரத்தொழில் செய்வன் யாவறையும் வசியஞ் செய்வனென் றுங் கண்டறிய வேண்டியது.

சகோதிர குணிதங்களாவன

சுக்கிரனுடனும் குசனுடனும் குசனுக்கு மூன்றுமிடத்திபனுடனும் மூன்றுமிராசிகளிலும் உள்ள கிரகயெண்களை சுபாசுப பெலன்படிக்கி அந் தந்த இராசி எண்ணிற்பெருக்கி சுக்கிரன் பெலத்தையும் சுக்கிரனுடன் கூடியகிரக பெலனுக்குறிய அவர்களின் யெண்ணிய தொகையிற் கொடுத் துக் கண்டமிச்சம் சகோதிர உற்பத்தி இதில் சுபகிரக எண்ணைபெருக்கி அந்த கிரக எண்ணிற்கொடுத்த சேஷம்தீர்க சகோதிரம் இதில் பெண்ராசி பெண்கிரக எண்ணைக்கண்டு புருஷசந்ததி பெண்சந்ததி என்ற வகையறிந்து கூறல்வேண்டியது.

இதிற்கண்ட கணக்குத்தான் தீர்க சகோதிரமாய்க் கொள்ளவேண்டியது இவைகள் அந்தியத்துக்காம்.

மாதுருபாவபலனுங் கிரகவாகனவியாபார வித்தியா பலன்களாவன

குசன் பெலவானுகி சுக்ஷேத்திர கேந்திர திரிகோண உச்சத்திலும் சந்திரன் நீசம் பகை நீக்கியவிடத்தில் கேந்திர கோணத்திலும் குரு நோக்கினும் விருச்சிகம் கும்பம் விருஷபம் இவையில் சந்திரனில்லாத சுக்கிரன் குருவாகிய சுபரிருக்கினும் பெலத்துடையோர் மேன்மைபெற்று வாழில் சாதகன் மாதாவம்சம் மேலான பிரபலமுடையவராகி குடும்ப விர்த்தியுடன் ராசயோகவானுவார்கள் சந்திரன் கடகம் கன்னி தனுசு விருஷபம் இவையிலும் குரு கேந்திரனுகி சுபர்வீட்டிலும் சுபருடனும் விருச்சிகத்தில் புதன் ரவியில் நின்றாலும் சுக்கிரனிருக்கினும் குசன் பெலத்தும் சந்திரனுக்கு நாலுக்குடையவன் பெலாட்டியனுகிவாழில் மாதாவகை விருத்தியும தாய் விருத்தாவஸ்தை வரையில் ஆயுள் தீர்க்கமும் அதிக யோகத்தோராய் வாழ்வார்கள்.

சந்திரன் சிங்கம் மிதுனம் மகரம் கும்பம் இவைகளிலுங் குசன் கூடினாலும் பாவரைக் கூடினாலும் குரு சுக்கிரன் முதலிய பாவர்கள் பெலத்து நீற்கில் சுவுமாராவஸ்தையில் சாதகன் மாதுருமரணம் தாய்வம்சம் சமவிருத்தியை யுடையவனென்றும்,

சந்திரன் குசன் துலாம் கன்னி விருச்சிகம் மீனம் இவையில்நிற்கினும் குரு முதலிய சுபர்கள் கூடினும் நோக்கினும் பெலத்துடன் இருக்கினும் சந்திரனுக்கு நாலாதிபன் சந்திரன் குசனுக்கு நாலாதிபன் பெலமுற்ற கேந்திரத் திரிகோண இராசிகளில் மேலான கிரக உத்தமபெலத்துடன் இருக்கினும் இராகு முதலிய கோள்கள் விருச்சிகம் முதலிய இடங்களில் கூடினாலும் யௌவனுவஸ்தையில் மாதுருகருமமும் சந்திரனுடனும் உபயபாரிசத்திலும் சனி குசன் முதலியபாவரும் தனுசு விருச்சிகம் துலாத்தில் சூரியன் முதலிய பாவரும் குசன் பெலமற்ற கடகம் கும்பம் கன்னியில் பாவருடன் கூடினும் சந்திரன் மீனத்தில் பாவருடனிருக்கினும் விருச்சிகத்தில் சந்திரன் பாவருடன் இருக்கினும் சாதகனுக்கு மாதுரு பாலியத்திலேயே மரணம் என்றும்.

சந்திரனுக்கு நாலுக்குடையவரும் நாலாமிடத்திலும் இவ்வித பகை நீசக்கோள் இருக்கில் குடும்பதுக்கமும் மாதா சௌனகாலத்திலேயே மரணமடைவனென்றும் குரு முதலிய சுபக்கோள் சந்திரன் குசனுடன் அல்லது விருச்சிகத்திலிருக்கினும் சுபர்கள்நோக்கினும் சிலகாலஞ்சென்று ஷு (ய க்) குள் மரணமென்றும்.

குசன் பகை நீசக்ஷேத்திரத்திலும் சந்திரன் முதலியோர் மீன மகரம் விருச்சிகத்திலும் சனிமுதலிய பாவரைக்கூடினும் சந்திரன் உபயபாரிசத்திலும் பாபிகளிருக்கினும் மாதா ஜெனனமான உடனே மரணமாவனென்றும்

சூரியனும் அவ்வித பகை பாபருடன் பெலமற்றசுபரும் பெலமற்ற இருக்கில் தாயுடனே சாதகனும் மரணமாவனென்றும் சந்திரனுடன் சுபரும் விருச்சிகம் துலாம்விருஷபம் கன்னி மகரமிவையிலும்சுக்கிரன் முதலியவர்களுடன் பாம்பு முதலிய குசனேக்கூடி சந்திரன் பாபனுடி இருக்கில் பாலியமான சிசுவிலேயே தாய் மரணமாகுமென்றும் சிசுவு மரணத்தடையும் என்றும் சந்திரன் குசன்முத லிய பாவர்கள் பகை நீசக்ஷேத்திரத்தில் பாவருடன் கேந்திரகோணத்தில் பாபக்ஷேத்திரத்தில் இருக்கினும் தாய் பாலிய மரணமும் இதில் குசன் கடகத் திலும் சனி முதலிய பாவர்கள் விருஷபத்தில் நின்று சூரியன் பெலமற்று இருக்கில் மாதுரு பிதருகரும பாத்தியமடையானென்றும் கூறப்படும். தாய் வழியாவு மரணமாகும்.

மாதுருகருமாதி திசாபாவகணிதங் கணிக்கின்றனம்

சந்திரனுடனும் குசனுடனும் சந்திரனுக்கு நாலாமிடம் அதிபதி இவை களுடனும் சுக்கிரனுடனும் புதனுடனும் மிதுனத்திலும் இருக்கும் கிரக யெண்களே பெலாபெலன்படிக்கி எடுத்துக்கொண்டு அத்துகையை ராசித் துகையாற்பெருக்கி மொத்தஞ்சேர்த்து (டு-ல்) பெருக்கி (கு-ல்) கழித்த சே ஷம் திசையாகவும் வந்தஈவை (டு ல்) பெருக்கி (கு-ல்) கழித்தமிச்சம் புக்தி யாயுங் கண்டுள்ள திசாபுக்தி காலங்கள் மாதுரு கண்டமென வரியப்படும் இவ்விதமே கிரகயெண்களே யறிந்து கணித்துக்கண்ட திசாபுக்தி காலங்கள் மாதுரு கர்மகாலங்களாகக்கொண்டு அறிந்து பலாபலன்களே யுரைக்கவேண் டும்.

வித்தியா பலன்

சுக்கிரன் முதலியோர் சொக்ஷேத்திர கேந்திரத்தில் புதன் கன்னியல்லது மிதுனம் தனுவில் சூரியனுடன் இருந்து சந்திர கேந்திரமாயிருக்கில் இராச வித்தையில் மிகவல்லபனென்றும் சுயபாஷையிலும் மேலானமேன்மையுங் கணிதமுதலிய பலவித்தைகள் கற்பன் வைத்தியனாலும் ஆரூய்வனென்றும் இக்கிரகங்கள் குருவீட்டில் குருவுடனுவது கடகத்திலாவது சிங்கமிவையி லிருக்கில் ராசபாஷையும் சுயபாஷையும் அறிவன் குசன் முதலியோர் பெலத் துக்கூடில் ஆந்திராதி ரொணவித்தைகளும் அறிவன் சூரியன் பெலத்து நீற்கில் மிகவும் வல்லபத்துடன் ஹஸ்திரசஸ்திரமான மாந்திரீகக்ஷுத்ரமும் யாகயெக்ஞாதி மேன்மைகளையும் அரிவன்.

சனி முதலிய பாவர்களாகில் மிகவு மேலாகிய வித்துவத்தெல்லாம் அழிந்து மூடனுய் வாழ்வன் இவ்விதத்தில் குருவலுத்து நீற்கில் பிரம்மஞான வித்தை யரிவதில் முடிவுபெறுன் சுக்கிரனுகில் கணக்கு முதலிய வியாகரண லங்கார சாஸ்திர வேதியனுவான்.

இவ்விதமிருக்குங் கிரகங்கள் புதனுடனுவது குசனுடன் மிதுனம் கன்னி விருச்சிகத்திலும் புதனுக்கு நாலாமிடம் அதிபதியுடனும் பெலமுற்ற

கேந்திரத் திரிகோணத்தில் நட்பாக்ஷி யுச்சமான இடத்தில் சுபக்ஷேத்திர பெலனும் தனக்குறிய சுபர்களையுங் கூடியிருக்கில் அவ்வித பூரணவித்தை யறிவன் ஒன்று பெலத்தும் ஒன்று இளைக்கில் வித்தை அறைகுறையாகும் பாபகிரகமே கூடியிருக்கில் பெலமற்ற வித்தையானது முகயோகமின்றி மலி நத்தையடைந்து துஷ்கிருத்தியஞ் செய்வன்.

கிரகவாகன பலன்கள்

குசன் விருச்சிகம் நீங்கிய இடத்தில் சுக்ஷேத்திர உச்சனாகியும் பெலத் துடனும் கேந்திர கோணத்திலிருக்கினும் சுக்கிரன் கேந்திரத்திலிருக்கினும் சுக்கிரனுக்கு நாலாமதிபன் பெலத்து விருச்சிகம் விருஷபத்திலிருக்கினும் சந்திரன் விருஷபமல்லது சிங்கத்திலும் விருச்சிகத்தில் குருவல்லது புதனும் ரவியுமாகில் மாடமாளிகை ப்ராசாத வீடுகளும் பிரபலயோகவானாவான் குசன் கன்னி துலாம் தனுசு மகரம் விருஷபம் மேஷம் இவையிலிருக்கினும் குரு முதலிய சுக்கிரன் சந்திரனைக்கூடினும் பழயகட்டிடம் பிரபலமாகியும் இவன் காலத்தில் அல்பமான கட்டிடத்தையும் ஆளுவனென்றும் சேத்திரம் பூமிவிருத்திகளும் இவைகளிலிருக்குங் குசன் சுக்கிரனுடன் பாவர்சேரில் கிரகவாகன மடையானென்றும் பலவகைத் துக்கசோகமும் சுபரும் பாபரு மாகக்கலந்து ஷை இடத்திலிருக்கில் சிலசில கட்டிடங்கள் செய்து விருத்தி யடையானென்றும் சுபபெலம் சாஸ்தியாகவிருக்கில் பழயகடடிடங்களை புது மைசெய்து பிறபலப்படுத்துவனென்றுங் குடும்ப யோகசேமாதிகளும் மிக்க வனுகூலமும் தனதானிய கிரக சம்பத்துகளுமிகுந்து இராசவெகுமானமும் அநேகவாகன பெலனையும் அடைவனென்றும் அப்படிக்கொற்ற சுபபெலனல் லாத கிரகம் வலுப்பெற்றிருக்கில் மேற்கண்ட விசேட உத்தமபலனும் பாபர் கள்பெலன் அதிகமாயிருக்கில் வாகன வல்லபமும் வியாபாற குறைவனாவான்.

இவ்விதஸ்தானங்களில் பெலத்துடைய கிரகத்தால் யோகாவயோகங் கூறல்வேண்டும்.

மிதுனம் கடகம் சிங்கம் விருங்சிகம் மீனம் கும்பமிவைகளில் குசன் சுக்கிரன்கூடினால் ;மிகவும் பிரபலவாகனமுண்டாகும் தனித்து விருச்சிகம் நீங்கிய இடத்தில் சுக்கிரனும் குசனுங்கூடினாலும் இவைகளில் எதிலானாலும் குசன் நின்றாலும் அசுபரின் சம்மந்தமாகிய சனி ரவி பாம்பு இவர்கள் கூடி னாலும் பகை நீசம்பெற்றாலும் சாதகனுக்கு வாகனம் அடையமாட்டான் சுக்கி ரன் வலுக்கில் சிலகாலம் வாகனமுண்டாகி உடன் நிலைப்பில்லாமல் போகும். இவ்வித இராசிகளில் குரு சந்திரன் வாழினும் சிலநாள் வாகனமுண்டு அது வும் நிச்சியமாய் தனக்கு கிடையாதென்றும் அறியவேண்டியது.

புதன் சுக்கிரன்பெலத்து விருச்சிகம் விருடப துலாமிவையிலிருக்கில் வியாபார லாபமுடைய யோகனென்றும் மிகவுந் தனபிரபலனாகி வாழ்வன் சந்திரன் இவ்வித கேந்திர பெலத்துடனிருக்கில் சாதகன் வியாபார வல்லப

ஞகி வாழ்வன் இந்த சந்திரன் புதன் சுக்கிரன் பெலமற்று இருக்கில் சாதகன் அதிக வியாபாரமின்றிக் குடித்தனவாழ்க்கை பொருந்துவனென்று மேலோனவன் இதில் குசன் முதலியோர் பெலத்து இருக்கில் பூமி முதலியவிருத்திகளையடைந்து வருவனென்றுங் கூறப்படுமென்றவாறு.

ஐந்தாவது புத்திரபாவம்

சிம்மலக்ன சாதகனுக்கே புத்திரவரிஷ்டமுண்டு அப்படிக்கொற்ற குரு தனுசு நீங்கிய கேந்திரகோணத்தினும் ரவி புதன் முதலிய குசன் தனுவிலும் சந்திர கேந்திரமாகியும் குருவுக்கு ஐந்தாமிடத்ததிபன் பெலத்துடன் சுப க்ஷேத்திரத்திலும் சனி புதன் முதலிய பாவரைக்கூடாமல் இருக்கில் சாதகனுக்கு புத்திரவிருத்தி யுண்டென்றும் தனுசு மேடம் இவைகளில் குசனிருக்கினும் பூரணசந்திரன் அல்லது ரவி யிருக்கினும் புருஷசந்ததி விருத்தியுடையவனென்றும் இவ்வித இராசிகளில் சந்திரன் அமரபக்ஷமாகியும் சுக்கிரன் இவர்களிருக்கில் பெண்சந்ததி விருத்திகளும் சுக்கிரன் சந்திரன் இவர்களுடன் பாம்பு முதலிய பாவர்சேரில் புத்திரன் பிறக்கில் யிறக்குமென்றும் பெண் தீர்க்கமுண்டென்றும் இவைகளில் சனி முதலிய கோள்களான பாபிகள்மாத்திரம் இருந்து குரு சுக்கிரன் முதலியோர் கேந்திரகோணத்தில் வாழில் புத்திரர் முன்னுண்டாவதெல்லாம் சேதப்பட்டுப் பின் புத்திரலாபம் யோகமே விருத்திக்கு வருமென்றும் இவ்வித ஸ்தான சனி புதன் முதலிய பாவர்வாழ்ந்து சுபர் நோக்கமின்றி இருக்கில் புத்திரர் கிடையாதென்றும் இதில் குருவும் பெலமற்றுவாழில் புத்திரதோஷம் உண்டாகுமென்றும் அறிய வேண்டியது.

குருவும் குருவுக்கு ஐந்தாமிடத்ததிபனும் பெலத்துடன கேந்திரகோணத்தில் சுபக்ஷேத்திர வாசர்களாயிருக்கில் புத்திரருண்டாகும் அதிவிருத்தியுடன் புத்திரர்கள் மிகுந்த பிரபலர்களாய் அனேக இராசாங்க வதிகாரத்துடன் வாழ்வார்களென்றும் இதில் பகை நீசம்பெற்ற கோள்கள் கூடினிற்கினும் நோக்கினும் சாதகன் புத்திரகருமமின்றிப் பலவகை துக்கசோகத்துடன் வாழ்வனென்றும் பலவகை சோகமுண்டாகுமென்றும்.

சூரியனுக்கு ரு, கு-லும்
சந்திரனுக்கு ரு, கு-லும்
குருவுக்கு ரு, கு-லும்

சனி யல்லது குசன் இராகு புதனிருக்கில் பிறந்த சாதகனுக்கு கெற்ப முண்டாவதே அரிதென்றும் அவ்விதம் உண்டாகில் உடனே மாதரு பிதரு மரணத்திலோர் மரணத்தையும் கூடவடைவனென்றும் இவ்விதம் தனுவிலும் மேடத்திலுமிருக்கில் புத்திரதோஷமென்றுங் கூறவேண்டியது. குரு (ரு, கு-ல்) இருக்கினும் புத்திரதோஷ சாதகனுவான் இதிவ் சனி முதலிய பாவர்கள் கூடினலும் பார்த்தாலும் பிறந்த சாதகனுக்கு புத்திரரின்றிப் பலவகை

கருமம் அன்யகரும பாத்தியஸ்தனுவான் யென்றும் குருகெடில் புத்திரதோஷமும் பலவகைக் கஷ்டங்களையும் அனுபவிப்பனென்றும் மேற்கூறிய கிரகங்களுடன் அசுபர்கள்கூடில் புத்திரதோஷமும சுபர்கள்கூடில் புத்திரலாபமும் அடைந்து சுகப்படுவனென்றுங் கண்டுகூறல் வேண்டியது

புத்திரபாவகணிதங் கூறுவாம்

குருவுடனும் தனுவிலும் மேடத்திலுங் குசனுடனும் குருவுக்கு ஐந்தாமிடத்திலும் அந்த கிரகாதிபனுடனும் கூடிய கிரகயெண்களைப் பெலாபெலன் படிக்கி யெடுத்துக்கொண்டு அத்தகையை அந்த ராசியெண்ணுல் பெருக்கி குருவின்யெண்ணில் கொடுத்த சேடம் புத்திரலாபமென்றும் அதில் சுபர்யெண்ணுகில் அத்தகையை (நி-ல்) பெருக்கி குருவின் யெண்ணிலாவது புத்திரஸ்தானத்தில் பெலமற்ற கிரகயெண்ணிற் கொடுத்தசேடம் புத்திர தீர்க்கமென்றும் இதில் சுக்கிரன் சந்திரனுலும் பெண்ராசியிலிருந்த பாம்பு சனி புதனுக்கு யெண்ணென்றும் குரு குசன் சூரியனுல் கொடுத்த யெண் ஆண்யென்றுங் கண்டு கூறல்வேண்டும் இவ்விதம் அறிந்தபின் மேலேகண்ட தசைகளை (நி-ல்) பெருக்கி (க-ல்) கழித்த சேடம் திசையிலும் வந்த ஈவை (நி-ல்) பெருக்கி (க-ல் கழித்த சேடம் புக்தியிலும் புத்ர லாபமும் காரிய சித்தியான சுபபலன் நடக்குமென்றுமு அறிய வேண்டியது

6-வது சத்துருரோகம் இராச தெண்டனையைப் பற்றிய பலன்கள்

சனி மீனம் மிதுனம் கடகம் முதலிய நீசம் பகை இடத்திலுமிருக்கினும் பகையோரைக் கூடினும் பகை இராஜவிரோதம் ஜெயில் கிடையாது இவைகளாகிய மீனத்திலாவது கடகத்திலாவது குசன்கேது இருக்கில் ராஜ தெண்டனை விரோதம் பயம் சத்துருபயம் முதலிய மனோவருத்தங்களையடைவனென்றும் மேலே கூறிவ ஸ்தானரூபமான ரவி முதலிய பாபக்கோள்கள் பகை நீச இடத்தில் இருக்கினும் பகையுண்டாக்கி செயமடைவ னென்றும் பலவகைக் கஷ்ட நஷ்ட ஜீவிருத்தியாகு மென்றும் மற்ற இடங்களில் சுபபெலத்துடன் சனி யிருக்கினும் சூரியன் முதலிய கோள்களைக் கூடினும் பகையும் விரோதமும் சாஸ்தியாகப் பீடித்தும் ரோகசரீரனுவான் இதில் சந்திரன் முதலியோர் கூடினலும் சனி சந்திரனுடன் இராகுமுதலிய பாபக்கோள்கள் இருக்கின் பலவித விவாதத்துடன் மரணசம்மந்தத்துடன் வாழ்ந்து வருவனென்றும் சனி முதலியாகோள் கேந்திரகோணத்தில் இருக்கில் சத்துருரோக பாதையானது சாஸ்தியாக அடிக்கடி அறிவிஷ்டித்தும் மரணத்தையுடையவனுவான் இதில் குருபெலவானுகில் புத்திரனுல் மரணவிவர்த்திகளையும் மேலானகீர்த்தியை யடைவன் அவன் இருக்குமட்டும் மரமுடையவனுவான்.

சனி ரவி கூடின் பகை இல்லை ரோகமுண்டு கூட புதன் முதலியோர் கூடின் தேக ரோகமுடையவனுகி வாழ்வனென்றும் சந்திரனுக்கும் சூரியனுக்கும் ஆருக்குடையவன் லக்கினத்துக்கு கேந்திரகோணத்தில் பெலமற்று இருக்கின் சாதகன் ரெணரோகியாயும் சத்துருவாற் றுன்பத்தையும் அடைவன் மேலே கூறிய கிரகமாகிய சனியும் ரவியும் கேந்திர திரிகோணத்திலிருக்கில் பகையான சத்துருரோகம் பில்லி சூனியட்சத்திரத்தாலும் மிகுந்த வருத்தமடைவனென்றும் அவ்வகை ஸ்தானங்களில் பாபரிருக்கில் அவ்விரோ தங்கணீங்கி சுகத்துடன் வாழ்வனென்றும் குரு சனி யொன்றுசேர்ந்து சுக்கிரன் சந்திரன் கேந்திரத்தில் மேஷம் மீனம் தனுசுவிலிருக்கில் பாம்பைக்கூடினுல் சாதகன் பெருஞ் செலத்தார் கண்டமனுபவிப்பன் இதில் குசன் மிகுந்த கரோகை பகை இடத்தி லிவ்வித கிரகத்தைக் கூடியிருக்கில் மூன்றுபாவரும் குருவும் சுக்கிரன் ரவியும மீனம் மகரம் இவ்வி ராசியிலிருக்கில் பலவகை வியாச்சியம் இராசாங்கப்பகையாய் ஜயில் முதலிய துன்பத்திலாழ்ந்து பல வகை வருத்தத்துடன் தெண்டனையடைவன்.

இதில் குரு நோக்குஞ் சந்திர திருஷ்டி இருக்கில் அல்பதெண்டனையடைவன் யென்றும் சுபகிரக பெலத்துடன் இருக்குமாகில் சாதகன் மிகவும் யோகவானுகி அரோக திருடகாத்ரனுகியும் சகலருக்கும் ரெணங்கொடுக்கும் திறமையுடையனுய் மிக பிரபலவானுய் வாழ்வனென்றும் இவ்விதம் மீனதிபன் மீனம் மகரம் மகராதிபன் பெலன்பெற்ற இடத்தில் சனி முதலிய சுக்கிரனேக்கூடின் பெண்மூலிய அவதாருகளும் அவைகளால் மானகுறைவுடன் மிகுந்த அவுமான மடைவன் யென்றும் இவ்வித ராசியில் பாபர் இருக்கில் சத்துரு துன்பமும் இராசாங்க தெண்டனைகளையும் அடைவனென்றும் பல வகை வருத்தத்துடன் மிக்க அவுமானத்தைப் பொருந்தி உலகெலாந் தெரியும்படி வாழ்வன் என்றறியவேண்டியது இவ்விதம் அவரவர்களின் நிசாபுக்தி காலங்களில் இவ்வித கஷ்டபலன் கொடுக்கும்.

சிம்மலக்னத்தின் களத்திரபாவம் அறியவும்

சனி சிங்கம் துலாம் தனுசு கும்பம் இவைகளில் தனக்குறிய சுபரோடல்லது தனித்திருந்தாலும் சுக்கிரன் பெலவானுகி கேந்திரகோணத்தில் சுப கேந்திரத்திலும் இருந்து தனக்கு விரோதமான பாவிகளுடன் கூடாமல் தனித்தாலும் சுபரனேகரைச் சேர்ந்தாலும் சுக்கிரனுக்கு யேழில் சுபராகிய பூரணசந்திர னல்லது குரு விருக்கினும் நோக்கினும் அந்த ஸ்தானுதிபன் பெலக்கினும் சாதகனுக்கு ஒரேஸ்திரீ அதிக உத்தமஸ்திரீ ரூபலாவண்யத்துடன் உயர் ஒழுக்க முள்ளவளாகி வருவளென்றும் மேலான யோகவதியாகியும் அடைவளென்றும் பாலிய விவாகசுகமும் உண்டாகுமென்றும் அசன சயனபோக போக்கியனுகி வாழ்வான்.

மேற்கூறிய சனியுடனும் சுக்கிரனுடனுவது சுக்கிரனுக்கு ஏழாமிடத்திலாவது பெலமற்ற பாவர்களிருக்கினும் நோக்கினும் களத்திரவரிஷ்டமும்

சூரியன் குசன் சேர்ந்தாலும் பெலத்துடன் மேற்படி கிரகங்களைக் கூடினாலும் களத்திர தோஷ மென்றும் அதை சுபர்கள் பார்க்கில் ஒரேதாரவிருத்தியை யுடையவனாகி அந்திய காலத்தில் தாரமில்லாதவனாவன் இவ்வித பாவர்க ளாவது சுக்கிரனுக்கு யேழில் பெலத்திருக்கில் தாரம் மிகவும் பகையிலும் தன நஷ்டமுறிய தரித்திர களத்திரமாகும் பாவர்களே பகை நீசர்களாகி யிருக்கில் களத்திரம் பலவற்றை விவாகஞ் செய்வனென்றும் இதில் பாபரும் சுபரும் கலர்ந்து லீற்கில் மனைவி அந்தியகாலத்தில் லீலைக்காளென்றும் சூரியன் சனி கேதுவைக்கூடின் விரோதியாகி பறபுருஷ கெமனத்தால் விரோதமாவள் என்றும் அறியப்படும் மேஷங் கடகம் மகரம் மீனம் இவைகளில் குரு முத லிய பாவருடன் பகை முதலிய நீசரைக்கூடினும் புதன் முதலிய பாவரிருக்கு மாகில் மனைவி இரண்டென்றும் இதில் குரு முதலிய சுபக்கோள் பெலத் துடன் நோக்கில் ஒரே தாரமென்றும் இவ்விச ராசியில் அசுபக்ரக சமேத ராகிப் பொருந்தி இருக்கில் களத்திரநாச னென்றும் தத்ஸ்தானாதிபதி சனி யாகினுந் தனக்குரிய சுபருடன் சுபக்ஷேத்திரத்தில் பெலத்துடனிருக்கில் தார மூலிய தனலாபயோகனாகியும் மிகவுங் கீர்த்தியையடைவனென்றும் இவ்வித இராசயோக வல்லபனாகியும் தார சுகனாகியும் ஒரேதாரனாகியும் வாழ்வனென் றும் அறியவேண்டியது இவ்வித இடங்களில் குரு சந்திரன் முதலிய சுபரும் சுக்கிரன் நீங்கியகாலமும் இருக்கில் மிகவும்யோகமேன்மையுந் தாரவழியாற் சித லாபனாகி மிகவுமேன்மையுடன் வாழ்வனென் றறியவேண்டியது. இதில் சூரியன் குசனிவர் சனியுடனல்லது குடும்பத்திலிருக்கில் ரோகம் விரோத மிவைகளையுடைய களத்திரமாகுமென்றும் களத்திர சுகசௌக்கியக் குறை வுண்டாக்கி நீங்கிவிடும் என்றும் அறியவேண்டியதென்பதாம்

மேற்கூறிய சனி விருஷபம் மிதுனங் கன்னி விருச்சிகம் இவைகளில் இருந்து சுக்கிரனிவரும் இவ்விராசிபிலிருக்க அவைகளுடன் குசன் ரவி முதலிய உயர்வுள்ள பாவர்களும் சுக்கிரனுக்கு யேழாமிராசியிலும் பாவர்க ளிருக்கில் அந்த இடஸ்தானாதிபதிகள் பகை நீசம்பெற்று இருக்கில் பிறந்த சாதகனுக்கு களத்திரதோஷமும் இரண்டு தாரத்தையுடையவன் தாரவகை தோஷத்தையும் இதிலிருக்குங் கிரகங்களைக் குருகூடின் சுக்கிரன் முதலிய புதன் கூடினாலும் தாரமிரண்டென்றும் பூரண சந்திரன் பெலமற்றுக் கூடி னால் தாரமிரண்டும் பேலாட்டியனான சந்திரனாகில் தாரமொன்றுஞ் சுகண சீலியாகவாழ்வள் யென்றறிய வேண்டியது சுக்கிரன் பெலத்து சுபர்வீட்டி லிருக்கில் களத்திரவதி சுகசௌக்கியங்களும் மேலேகண்ட அதிகலாபங் களையும் அடைவனெனறறியவேண்டியது.

களத்திரபாவ கணிதங் கணிக்கின்றனம்

சுக்கிரனுடனும் சுக்கிரனுக்கு யேழாமிராசியல்லது சேழாமதிபனுடன் லக்கினத்துக்கு சப்தமாதிபனுடனும் சப்தமத்திலும் இருக்கும் கிரகங்களையும் அவர்கள் பெலனுக்கிசைந்தபடி யெண்களை தனித்து இராசியெண்ணல் பெரு

க்கி சுபத்துவம் உயர்ந்த யெண்ணிற் கொடுத்தமிச்சம் யெவ்வளவோ அவ்வளவு களத்திரமென்றும் அவ்வித களத்திர விருத்திகளையுங் கொடுக்கப்படுமென்றும் மேலே பெருக்கிய மொத்தத்துகையை (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் நிசையாகவும் வந்த ஈவை (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் புக்தியென்றும் கண்ட நிசாபுக்திகாலத்தில் களத்திர லாப சுபமும் (கக) மிடத்திலும் அவ்வதிபன் துகையை அந்த ராசியெண்ணில் பெருக்கி மூன் துகையுடன் சேர்த்த (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேடம் நிசையிலும் வந்த ஈவை (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த மிச்சம் புக்தியிலும் பின் களத்திர லாபமென்றும் கண்டறிய வேண்டியது.

மேற்கண்ட துகையுடன் புதன் சனியுடனும் கன்னியிலும் உறியகிரக பெலாபெலனுக்குறிய துகையை அவ்வீராசி எண்ணற் பெருக்கி அந்த பெலத்துக்கிசைந்த எண்ணிற்பெருக்கி (டு-ல்) மறுபடியும் பெருக்கி (கூ-ல்) கழித்த சேடம் நிசையாகவும் வந்த ஈவை (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த மிச்சம் புக்தியாகியுங் கண்டநிசாபுக்தி களத்திர தோஷத்தையுங் கூறப்படுமென்றும் அறியவேண்டியது இவ்விதம் அறியும் நிசாபுக்தி காலங்களை ஜாதகக களத்திர சவ்யாப சவ்யமென்ற ராசியறிந்து சொல்லவேண்டியது இவ்விதமறியும் (கூ-ல்) அரண சேடம் சவ்யமாகில் சேஷந்நிசை கிரமமாகவும் அபசவ்யமாஞல் சேஷ போக மின்ற எண்ணைக்கொண்டு பார்க்கவும் இவ்விதமே ஒவ்வொரு லக்ன பாவங்களாகிய கணிதங்களுக்கு எண்ணிக்கையரிந்து கூறப்படும் அவ்விதம் பாராவிடில் யாவையும் பிரழ்ந்து மிகவும் பிசகராய் சாஸ்திரத்தையுந் தூஷிக்க நேறும். ஆகையால் அதிக ஜாக்கிரதையுடன் யேகோபித்துப் பார்க்குதல் வேண்டும்.

ஷட்பெலமாவது

உச்சத்துக்கு பெலன் (கவ)
கேந்திரஞ் சுபர்களுக்கு பெலன் (க)
கேந்திராதிபத்தியஞ் சுபர்களுக்கு பெலன் (வ)
பாபிகளுக்கு கேந்த்ராதி பத்தியம் ($\frac{3}{4}$)
பாபிகள் கேந்ரஸ்திதிக்கி (வ)
ஆகூக்கிப்பெலன் ($\frac{3}{4}$)
மித்துருத்துவத்துக்கு பெலன் (ஒ)
சத்துருத்துவத்துக்கு பெலன் (வ)
நீசத்துக்கு பெலன் அறிக்கால்

இவ்விதம் ஷட்வர்க பெலன்களென்றறிய வேண்டியது.

ஒவ்வொருலக்ன ஒவ்வொரு பாவங்களுக்கும் காரகத்துவ பாவங்களாகிய இடங்களுக்கு (கஉ-ல்) இருப்பவர்களின் பெலன்கள் யாவும் தள்ளுபடியாகும் (கக-ல்) இருக்கும் கிரகங்களுக்கு $\frac{1}{2}$-பெலனும் (ஒ க்கு) $\frac{3}{4}$ (சு-க்கு) $\frac{1}{4}$.

(எ-க்கு) $\frac{1}{2}$. (க-க்கு) $\frac{1}{2}$. (சு-க்கு) $\frac{1}{8}$. (அ க்கு) 1. (கூக்கு) $\frac{1}{4}$. (சு-க்கு) $\frac{1}{4}$. (உ-க்கு) $\frac{1}{2}$. (நி-க்கு) $\frac{3}{4}$.

இந்தப்பிரகாரம் ஸ்தானபெலன் படிக்கும் ஒவ்வொரு ராசியில் பிறந்தவர் களுக்கும் பாவகணிதம் கணிக்கும் வகைக்கு உபயோகிக்க வேண்டியது.

கிரகபெலன்

குசன் சூரியன் (ம-வது) கேந்திர இடத்திலிருந்தால் முழுப்பெலனும் (எ-ல்) இருக்கில் (கூ லும்) (சு-ல்) இருக்கில் (உ-யும்) (க) இருக்கில் (வ) லும் மற்ற ராசிக்கு முன் சொல்லிய ராசி பெலன்படிக்கி அறியவும்.

குரு குசன் (க-ல்) இருக்கில் முழுப்பெலனும் (சு-ல்) ($\frac{3}{4}$) பெலனும் (சு-ல்) $\frac{1}{2}$. (ம-ல்) (வ. பெலன்) மற்ற ராசிக்கு முன் கூறியபடி சனி (எ-ல்) முழுப்பெலனும் (ம-ல்) $\frac{1}{2}$ பெலனும் (க-ல்) $\frac{3}{4}$. பெலனும் (சு-ல்) $\frac{1}{4}$. பெலனு மாக அறியவும் மற்றராசிக்கு முன் கூறியபடி அறியவேண்டியது.

இவ்வித பலன்களாவன

சுக்கிரன் சந்திரனுக்கு (சு-ல்) முழுப்பெலனும் (எ-ல்) முக்கால்பெலனும் (ம-ல்) கால்பெலனும் (க-ல்) அரைபெலனுங்கொண்டு உரைத்தல்வேண்டும். மற்றய இராசியிலிருக்கில் முன் இடப்பெலன் கூறியதையேவைத்து பாற்றுக் கொள்ளல்வேண்டும் இவ்விதமே ஒவ்வொரு லக்னபாவங்களின் கணிதங்களே ஆராய்ந்தெடுத்துக் கூறவேண்டும் இவ்விடத்திலேயே சகல லக்ன கிரகங் களுக்கும் பெலாபெலன் கணிதவகை செப்பி முடிந்தமையால் இவ்விதம் ஒவ்வொரு லக்கினபாவங்களிலும் சொல்லாது சிலவற்றைக் கூறினம். ஆகை யால் சிலவிஷயங்கூறிய பெலன்களுடன இவையையு முக்கியமா எடுத்துக் கணித்துக் கண்டரிதல் மிக ஆவசிகமென்றும் கூறப்பட்டனவாம் என்றவாறு.

பிதுர்பாக்கிய பலன்களாவன

மேஷத்தையும் குசனேயும் சூரியன் சூரியனுக்கு (கூ-ம்) அவ்வதிபனேயுங் கொண்டு பிதுரார்ச்சிதாதி பலன்களேச் சொல்லல்வேண்டும் குசன் விருச்சிகம் மேஷம் மகரம் மிதுனம் சிங்கம் தனுசு இவ்விடங்களிலிருக்கில் பிதுரார்ச்சித விசேட பிரபலம் இராசயோகம் மேன்பாடாகவும் பிறபலனுவன் இதில் மேடம் விருச்சிகம் மகரமாகில் பூர்வார்ச்சிதம் பிதுரார்ச்சிதமும் மிக்க மேலான பரம்பர விருத்தியும் தனலாபமும் சிங்கம் தனுசுவாகில் சில சில தனங்கள் விருத்தி அல்பரொணம் பின் விருத்திகளேயும் மிதுனமாகில் பலயிடமும் ஸ்திரமற்றப் பொருள்கள் உண்டாகும் சமவிருத்தியுடன் வாழ்வன் இதில் குரு சூரியன் சந்திரன் இரெண்டாம் பக்ஷமாகி சுக்கிரன் சேரினும் பிதுரார்ச் சிதப்பொருள் ஏராளமாய்ச்சேரும் இதில் விருச்சிகம் தவிரமற்ற இடத்தி லிருக்கவேண்டும் விருச்சிகத்தில் சந்திரனிருப்பானுகில் பிதுரார்ச்சிதப்

பொருளேயழிப்பன் பலகவலே ராசதெண்டனுபயத்தைக் கொடுக்கும் மேற் கூறியக் கிரகமின்றி மற்றய புதன் சூரியனுடன் கூடி ஷை ஸ்தானங் கிரகத் துடனிருக்கில் விசேஷயோக பிரபலம் கன்னியிலிருக்கினும் விசேஷயோக பிரபலமாகும் பிதுரார்ச்சிதம் பிதுர்மூலம் உண்டென் றறியவேண்டியது.

மேற்கூறிய கிரகங்களுடன் கூடாமல் மற்றய சனிபாம்பு முதலியோர் கூடில் பிதுரார்ச்சித நஷ்டமாகி மிகுந்த அரிஷ்டத்தை யனுபவிப்பன் சுபரும் பாபருங்கவர்ந்து நிற்கில் பாட்டனுற்சிதத்தில் பிதா குறைந்துபோவன் பிது ரார்ச்சிதம் அல்பமுண்டு கடன் முதலியதில் பகையும் அனுபவிப்பனென் றறியவேண்டியது.

விருஷபம் கடகம் கன்னி துலாம் கும்பம் மீனம் இவைகளில் குசனிருக் கில் பிதுரார்ச்சித கூயத்துடனும் பலவகைரொணமும் பிதுர்வம்சமான கருமதுக்க பலனுக நடக்கும் இதில் கடகம் கன்னியில் சேர்ந்த குசனுடன் சுக்கிரனுகிற் பிதுர்பாக்கிய நஷ்டம் மற்றவையிலிருக்கில் அதிக ஜெயலாபம் பிதுர் தீர்க்கமாகும்.

இவ்வித பலன்களாவன

மீனந்தவிர புதனும் விருஷபந்தவிர குருவும் சந்திரனிவ்விதச் சுபர்கள் கூடியிருக்கில் யேராளமான பிதுரார்ச்சிதம் பிதுர்வகையோகமும் பிறபல குடும்பத்திதாரூய் வாழப்படும் அதிகயோக பலன்களாக வாழ்வனென்றும் மிகுந்த கீர்த்தி மூர்த்திகளும் சுபபலன்னடக்கும் துலாத்தில் சனி பாம்புக் கூடிற் பிதுரார்ச்சித வித்தியும் வம்ச கூயமுண்டாகும் மற்ற இடத்திலிருக் கில் பிதுரார்ச்சிதமின்றியும் வங்ச வித்தியுடன் வாழ்வான் பிதுர்தோஷமு முண்டு இதில் துலாம் ரவியுடன் வாழில் பிதுர் நஷ்டமாம் பாபருஞ் சுபருங் கலர்ந்து நிற்கில் பிதுர் குடும்ப வித்தியுடனும் பொருளின்றித் தரித்திரு தி குரைவுடனும் தோஷத்தையடைவனென் றறியவேண்டியது பின் பிதுர் வம்ச கருமமும் உண்டாகுமென் றறியவேண்டியது யென்.

பிதுராயுள் விஷயம்

குசன் ரவி இவர்களின்கூட சனி முதலிய பாம்புசேரினும் அபெலரா யிருந்தும் கடகம் துலாம் கன்னி மீனமிவைகளிலிருத்தினும் அல்லது மே ஷத்தில் இக்கிரகத்துடன் கூடிநிற்கின் பிதுர்வம்ச தோஷமும் பிதுருவுக்கு பாலியாவஸ்தையில் கற்க பீடையைக்கொடுக்கும்.

சூரியனுடன் சனி பாம்பும் மேஷம் தனுசுவிலாவது துலாத்திலாவது பாவறைக்கூடி சூரியனும் ஒன்பதாமிடம் பகை நீசமாயல்லது அந்த ஸ்தானாதி பன் இவ்வித பகைக்ஷேத்திரம் நீசம் முதலிய அபெலத்துடனிருந்த பாப பெலன் அதிகரித்திடில் பாலியத்தில் பிதுர் மாரகதிசையும் ஒற்றுவரில் பிதுர் கருமமென்றும் பிதுர்வகை கூஷீணதயுமுண்டாகும் யென்றும்.

சூரியன்பகை நீசமல்லது குசன்கடகம் மீனம் கன்னியிலிருக்கினும் குரு கேது ராகு இவ்வித பாவர்கூடின் பிதுர் மாரகதிசையாரம்பிக்கில் சாதகன் சனனமானவுடன் பிதுர்மரணத்தையும் அடைவனென்றும் சனி மேஷம் கடகம் மீனமிவையில் சூரியனல்லது குசனேக்கூடினும் சுபர்திருஷ்டியும் சுபக்ஷேத்திரவாசமும் இல்லாதிருக்கில் பாலியாவஸ்தையில் மரணம் பிதாவுக்கு ஏற்படுமென்றும் மேற்கூறிய கிரகத்துடன் சுக்கிரன் முதலியோர் சேரில் பிதுர்கருமபாத்தியனின்றியும் புதன் குரு இவரில் எவர்சேரினும் பிதாவாக வேறொருவனே யடைந்து பலகருமனுக வாழ்ந்து வருவனென்றுங் கண்டறிய வேண்டியது.

இவ்வித பலன்களாவன

மேற்கூறிய கிரகங்கள் கூடி சூரியனுக்கு (கூ) தனுசு குசனுக்கு (கூ-க்) குடையவனுக்கு (கூ, அ, கக) இவைகளினின்று பாவரைக்கூடி பகை நீசமான அபெலனேப்பெற்றலும் பிதா பாலியத்திலேயே விஞ்தெரியுமுன் காலமே மரண மாவானென்றும் இவை னின்ற ஸ்தானாதிபதி கெட்டு அபெலனுய் சூரியன் சனி பாம்பைக்கூடினும் நெற்பத்திலேயே தகப்பன் மறிப்பானென்றறிய வேண்டியது.

சூரியன் குசன் முதலியோர் மேஷம் விருச்சிகம் துலாம் விருஷபம் மிதுனம் இவையி னின்றும் சனி ரவி முதலிய பாம்பு முதலிய கோளுடனுவது சுக்கிரனேயாவது கூடி இருக்கினும் சுபர் நோக்கினும் மீனம் கும்பம் மேஷத்தினின்ற குசனல்லது ரவியை சுபர்முதலியோர் பார்க்கினும் (கூ) மிடத்தாதிபன் னின்ற வீட்டாதிபன் எந்த இடத்திலிருக்கிறனே அவரைப் பாவர் சேர்ந்து ஓர் சுபராவது பார்த்தாலும் யௌவனத்திலேயே தகப்பன் மரணமாவது அதாவது அவ்விதஸ்தானத்தி னின்ற பிதுராரிஷ்ட காலத்திற் கண்ட திசாபுக்தி காலமென்றும் குசன் ரவி இவர்களும் குசனுக்கு ஒன்பதாமதிப னின்ற அதிபனும் பெலத்துடன் சனி பாமபு புதனேக்கூடினும் அல்லது தனித்தாவது மிதுனம் கடகம கன்னி தனுவில் னின்றும் அந்த ஸ்தானாதிபர்கள் கூடிஞற்கினும் சுபர் நோக்கினும பிரந்த சாதகனுக்கு எவ்வனத்திலேயே அத்திசைசேரும் புத்திகாலத்தில் பிதுர்கருமமென்றும் குசன் ரவி முதலியவர் சிம்மம் விருச்சிகம் மகரம் இவைகளில் புதன் முதலிய சுபருடனல்லது சனியைக்கூடினும் சூரியனுக்கு ஒன்பதாமதிபன் ஸ்திர ராசியிலிருக்கில் பிதாகவுமாரத்தில் மரணமெனறும் சுபர் சேர்ந்து பார்த்து ஞற்கில் எவ்வனத்துள்ளயே மரணமாவனென்றுங் காணவேண்டும்.

கும்பம் தனுசு துலாம் மீன மிவைகளில் சுபர் பாவர் கலந்து சூரியன் சனி கூடினலும குசனுக்கு (கூ) மிடத்ததிபன் பெலமூற்று ஞற்கில் கவுமாரு வஸ்தை காலத்தில் பிதுர் மரணதிசை தெரியலாகும் மேடம் விருடபம் சிங்கம் இவைகளில் குசன் ரவி தனித்தினின்று அல்லது சேரினுங் குரு

புதன் முதலிய சுபர்கள் கூடினலும் அல்லது பார்த்தாலும் சுபக்ஷேத்திரத்தி னிற்கினும் குசனுக்கு (கு-ம்) இடத்தநிபனின்ற கிரகத்துக்குடையவன் கேந் திரகோண மித்திரக்ஷேத்திர சுபக்ஷேத்திரமாகி பெலத்துடனிருக்கின் சாத கன் பிதாவிருத்தாவஸ்தையில் மரணமென்றும் சூரியன் குசன் குசனுக்கு (கு-க்) குடையவ னின்ற ஸ்தானாதிபதி இவர்கள் சிங்கம் மிதுனம் கன்னி தனுசு கும்பம் இவையில் ஒன்று சேர்ந்திருந்தாலும் தனித்தனி இவ்விடங் களிலிருக்கினும் குரு முதலிய ரவி இவர்களோக் கூடினும் பார்க்கினும் பெலத் துட னிருக்கினும் சாதகனுக்கு விர்த்தாவஸ்தையில் பிதார்கருமமாகும் இவ்வித ராசிகளிலிருக்கும் கிரகத்தில் அபெலனெடு சுக்கிரன் அல்லது குரு முதலி யோரிருக்கினும் பிதாவின் கருமபாத்திய மடையான் யென்றும் சனி பெலத் துடன் கூடி இருக்கில் அன்ய பிதார்கரும பாத்தியத்தை யடைவனென்றும் இதில் ஷே கேந்திரஸ்திதனுகி பாபர்கள் பகைபெற்று வாழில் பிதா பரஸ் தலத்தில் மரணமாவனென்றும இதில் மறைவாகிய (கூ, சு, அ, கஉ) இவை களில் வாழில் புத்திரன் அருகிருக்க மாட்டானென்றரிய வேண்டியது.

மேஷம் தனுசு ரவியுடன் குசனுக்கு (கு) மிடத்ததிபன னின்ற ஸ்தா னாதிபதியுடன் சுபரும் சுபக்ஷேத்திரத்திலும் இருக்கில் பிறந்த சாதகன் மிகவும் விசேஷயுதனுகி பிரபல கீர்த்தியுடன் பிதார் தனத்துடனும் மேலோ னுகி வாழ்வன் பிதார் சந்ததியும் அதிக விருத்தியுடன் வாழப்படி மென்றும் பிதார்தனமாகிய மேற்கூறிய இடங்களும் கிரகங்களும் பகை நீச முதலிய வீரோத அபெலன்பெற்று வாழினும் ஸ்தானாதிபர்கள் கெடினும் பெலமில் லாத பிதார் சொத்தினால் விவாததன நஷ்டமும் பொருள் சேதமும் தன தானிய ருணஸ்தனுகியும் பிதார் குடும்ப க்ஷயமும் பலவாதங்களோடும் அடை வனென்று இவ்விதஸ்தானங்களில் பாபரும் சுபரும் கூடிவாழில் பலவித கஷ்ட நஷ்ட துன்பங் கடன் முதலாகிய பிதார் வம்சக்ஷயம் சிலநாளும் சில நாள் மேற்படிவகை விருத்திகளும் பலவகைப்பொருள் விருத்திகளும் மேன் பாடாகிய விருத்திகளும் மேன்பாடுகளும் இஷ்டகாரிய செயசித்திகளும் பிதார் சொத்துண்டாகியும் அன்யவம்ச சொத்து கருமபாத்தியதை யுண்டாகி உடனுக்குடன் சேதமுண்டாகு மென்றரிய வேண்டியது இவைகளோ முதற் குறித்த திசாபுக்திகாலங்களி லறிய வேண்டியது.

கருமபலன்களும் பூமிமுதலிய ராச்சியபலன்கள்

சுக்கிரன் குரு குசன் இவர்கள் பெலத்து சுபகிரக சம்மந்தராகி சுப க்ஷேத்திரத்தில் அபெலனுடன் இருக்கினும் சுக்கிரனுக்கு தசமாதிபதி னின்ற வீட்டதிபன் சுபக்ஷேத்திரமல்லது உச்சகேந்திர பெலனுடனிருக்கி னும் துலாம் மீனம் விருஷபம் இவைகளில் பூரணசந்திரனுடன் குசன் கூடி னும் சுபரைக் கூடினும் குரு முதலிய சுபக்ர வீக்ஷணத்துடனிருக்கினும பெலமுற்றோர் கூடி நோக்கினும் சூரியன் புதனிவர்கள் கன்னி சிங்கம் மேஷம் மிதுனம் இவைகளிலிருக்கினும் சாதகன் மண்டலாதிபனுகி பிரபல

பூமிபடைத்து அதியோகவானுக வாழ்வனென்றும் சத்கருமஞ் செய்வனென் றும் மிகவும் பரிசுத்தனுகி வாழ்வனென்றும் இவ்வித மேலான பதத்துடன் வாழ்வன் சந்திரனல்லது குசனேக்கூடி கடகம் துலாம் விருஷபத்திலிருக்கில் ராசாங்க முதலிய சீவனமேன்மையும் இராசானு பூசிதங்களையும் அடைந்து வருவனென்றும் மிகவும் பிறபல சன்மான பூசிதனுவான் மேற்கூறிய ராசி களிலும் மேலேகூறிய கிரகத்துடன் சனி பாம்பு முதலிய சுபர்கள் கூடினும் நோக்கினும் அவ்வித பிரபலராய் முன்னோர் வாழ்ந்து சாதகன் ராச்சியாதிப னுய் வாழ்வன் யென்றறியவேண்டும் அசுபர்க்களால் கெட்ட பலனையும் சுப சம்மந்தரால் விசேஷயோகபல பலன்களையுங் கூறப்படுமென்றவாறு.

சுக்கிரன் துலாம் விருச்சிகம் தனுசு கும்பமிவைகளில் சந்திரன் முதலிய விரோதமில்லாத குசனேக்கூடினும் நோக்கினும் கேந்திர கோணுதியுடன் சுபக்ஷேத்திர வாசனுகி குரு கேந்திர கோணமல்லது கடகத்திலிருக்கினும் சனி முதலியோர் கூடினுலும் சிவராச்சியாதிபனுவான் இவ்வித கிரகங்களு டன் சூரியனுக்கு பத்தாமதிபன் பெலத்த கேந்திரத்திலிருக்கினும் விசேஷ மான பூமிகிரர்மத்தை யடைந்து வாழ்வன் இவ்வித இடத்திலிருக்குங் கிரகங் களுடன் சனி ரவி முதலிய பாம்பு கூடில் சித அல்பபூமியும் பிதுரார்ச்சித நஷ்டமும் பலவகை துக்க சோகங்களையும் உண்டாகும்

பகைநீச கிரகமிருக்கினும் குசன் கடகம் விருச்சிகம் விருடபத்திலிருக் கினும் பெலமற்றவர்களாகிய பாவரைக் கூடினும் பூமிமுதலிய பொருளின் றிப் பலவகை நஷ்டனுகி வாழ்வன்.

கன்னி கடகம் மகரம் மீனம் மிதுனம் இவைகளில் சுக்கிரனல்லது குச னின்றூலு மிருவருங் கூடினுலும் பகைநீச முதலியவர்களாகி ரவி புதன் சனி பாம்பைக் கூடினும் சுபர் பார்வை யல்லது கூடினுலும் பிரந்த சாதகனுக்கு பூமிஸ்திதி முதலியது அற்பமாகியும் தனதானிய நஷ்டத்துடனும் பரவிஷய ஆஸ்திகள் கிடைத்தும் விசேஷ சுகபலன் பொராமலடைவனென்றும் கூறப் படும் யென்றியவேண்டியது இவைகளிலொரே ராசியில் குருசுக்கிரன் கூடி யாவது சமசப்சமத்தி லிருக்கினும் பூமிவிருத்தியடையான் சுக்கிரன் சூரியன் இவர்களுடன் கூடினும் மேற்கண்ட பலனே நடக்கும் மேற் கூறியவர்கள் தனித்து இருக்கிர விஷயத்தில் மேலேகண்ட ராசியிலிருக்குமாகில் மேன் மையான பூமிகளிருக்கினும் எப்பொழுதும் பல கவலைகளும் மனோவருத்தமும் விருத்தியில்லாத பூமியும் பலசொத்தும் பதவிதத் துக்கமும் அன்யகருமத் துக்கு பாத்தியமடைவனென்றும் அவ்விதமடைந்த சாதகன் பின் மேன்மை யுடன் வாழ்வன் சுபரல்லாத பாபிகள் கூடினும் நோக்குமாகினும் அபெலராகி வாழில் பரகன்மமும் சாதிப்புருஷ்ட நடவடிக்கைகளும் பலவகை துக்கதை யும் பலவித வருத்தங்களையும் கொடுக்கப் படுமென்றறிய வேண்டியது.

குசன் சுக்கிரன் இவர்கள் கடகம் கன்னி விருச்சிகமிவைகளிலாவதுசுக் கிரன் சிங்கத்திலாவது இருக்கினும் சனி பாம்பு முதலிய ரவியைக் கூடினுல்

பிறந்தவன் பலவிதப் பொருளையும் இழப்பன் மற்ற இடங்களில் குரு முதலிய சுக்கிர னிருக்கினும் பாவர் கூடினும் நோக்கினும் விசேஷமான யோகத் துடன் வாழ்வன் பூமி முதலிய ஸ்திதியுண்டாகும் மிகவு மேன்மையான யோகவானுவான் என்றறியவேண்டியது.

இவ்வித மிருக்கும் ரவியுடன் அல்லது சுக்கிரனுக்கு பத்தாதிபனிருக்கு மிடத்ததிபன் வாழுமிடத்தி நீசம் பகையல்லது சனி பாம்பு புதனிருக்கினும் விருஷபத்தி னின்றாலும் குரு முதலியோர் பார்த்திருக்கில் பலவகை சொத் துக்களையும் இழப்பன் வருத்தமடைவன் இவைகளில் சுபர்களும் கேந்திர திபதிகளானவர்களும் விசேஷ பெலத்துட னிருக்கினும் அல்ப்பபூஸ்திதி யுடையவன் பலகாமனுவன் பாபர்வாழில் அக்கிருத்தியமும் பலவித துக்கங் களையும் வருத்தங்களையும் அனுபவித்து கள் முதலிய மதுமாம்ச பக்ஷணனுவ னென்றும் யாவராலும் இகழப்படுவன் கட்டாயமான இராசதெண்டனை முதலியவைகளையும் அடைவன் குருமுதலிய சுபர்கள் விசேஷ பெலன் பெற் றுப் பார்க்கில் ராசா அவுமானம்போல தோன்றியும் ரொணக்களையு னிவர் தித்து வாழ்வானென்றறிய வேண்டியது அக்கருத்திய கருமங்களையுஞ் செய்வ னென்று கூறப்படுமென்றவாறு.

மேலேகூறிய குசன் சுக்கிரனும் சுக்கிரனுக்கு தசமாதிபதி னின்ற இடத் திலாவது அவ்வதிபனுவது னின்ற இடங்களிலாவதும் கடகம் கன்னி மகரம் மீன மிவைகளிலாவது மேலேகூறிய ஸ்தானங் கிரகங்களுக்கு உபயபாரிசத் தில் சனி பாம்பு ரவி முதலிய பாவரிருக்கினும் நோக்கினும் மேற்படி கிரகங் களுடன் கூடினாலும் பிறந்தசாதகனுக்கு பூர்வார்ச்சித யோகமின்றிப் பல கவலையடைந்து பிதுர் சாதகனிவ்வித காலங்களில் பொருள் சேர்க்குங் குண மும் பூஸ்திதியுள்ளவனுகியும் சத்குரும புருஷனுகியு மேலான விருத்தியுடன் வாழ்ந்து வரப்படுவனென்றும் இராசயோக பிரபலவானுவான் இவ்வித இடங் களில் குரு சுக்கிரன் பூரணச்சந்திரர்கள் தனக்கியல்புற்ற இடங்களிருக்கி னும் விசேஷ பூஸ்திதிகளையும் அதிக மேன்மையுடன் மிகக பிரபலவானுகி வாழ்வனென்றும் இவர்கள் சத்துரு இடமாய் நீசம முதலிய பாவர்களேக்கூடி இருக்கின் அக்கிருத்தியனுகி மிகவும் கஷ்ட நஷ்டத்துடனும் தன தானிய மின்றியும் பூஸ்திதி முதலானது மில்லாமலும் அவ்வித மிருக்கின் றெண மேலிட்டு கஷ்ட நஷ்டத்துடன் இழப்பனென்றுங் கூறல்வேண்டும்.

இனி சிம்மலக்கினத்தின் சீவனபாவங்களைக் கூறுவோமாக

சுக்கிரன் சனி சனி னின்ற ராசிக்கி பத்தாமிடத் திதிபதி னின்ற விராசி னுதனிவர்கள் புதனல்லது குருவின் சுபக்ஷேத்திர ஸ்தானங்களிலிருக்க சுப பெலத்துடன் சுபர்களேகூடி.

குரு லிற்கினும் நோக்கினும் சாதகனுக்கு வித்தியை முதலாகிய சாஸ்திரங்களாலும் சோதிஷ்வைத்திய மிவ்வகையானுஞ் சீவன்ஞ் செய்வன் இராச வதிகாரனுகியும் வாழ்வன் புசனுகிப் பெலத்திருக்கில் கணிதபண்டித தொழிலால் சீவனஞ்செய்வன் சுக்கிரன் முதலியோர்களாகிலும் புதன் சுக்கிரனல்லது குருவுடன் இரெண்டற்றத்து லிற்கினும் பூபால வரசத்துலியல சீவனமும் இராசவதிகார சீவனமுண்டாகும் ரவி சந்திரன் பகையின்றிப் பெலத்துடனிருக்கினும் மேற்கூறியவர்கள் இந்த ரவிமகி இவர்களேக்கூடி கடக சிம்மத்திலிருக்கினும் பிறந்தவன் விவாதலழக்கு இராசவதிகார சீவனம் பிரபலமாய்ச் செய்வன் ஞாயாதிபதியாகியும் உலகத்தில் கியாதிபெற்று வாழ்வன் சனி பாம்பு இவர்களுடன் அபெலாகிப் பெலமற்றுக்கூடி இருக்கில் அடிமையாவன் பெலத்துடன் சனிகூடில் திருட்டுமுதலிய பொய்சாக்ஷிகள் அக்கரும சீவனம் பாம்பாகில் பலவகைத்தொழில் செய்வன் புதன் சந்திரன் துலா முதலிய கேந்திரத்தில் ஷியோறைக்கூடி இருக்கின் வியாபாரஞ்செய்வன் குரு முதலியோர் நோக்கினுங் கூடினும் வியாபாரியாகினும் இதரத்தொழில் புரிவன் புதன் குருமுதலியோர் பெலவற்றுக்கூடி இருக்கின் தரித்திர கேவலத்தொழிலுடன் சத்விஷய பரசனுகி தேவாலயப்பெயர் முதலிய வகையைக் கூறி சீவனஞ் செய்வனென்றும் குசன் கேது பெலத்துடன்கூடில் மாந்திரீகம் முதலிய வித்தைகளும் ராகுகேது தனித்துக்கூடில் கூடத்திர மாந்திரீக அபிசாரம்பிரயோகனுய் உலகத்தில் சீவனஞ்செய்து வரப்படுவனென் றறியவேண்டியது.

மேஷ விருஷபம் துலாம் விருச்சிகமிவைகளில் சனி குசன் முதலிய சுக்கிரனிருக்கில் மேலான சீவனஸ்தனுகியும் பூமிமுதலிய பூர்வார்ச்சித சீவனயோகனுகி வாழ்வன் என்றும் ரவி முதலிய சந்திரனுடன் பகை நீசமின்றி சேரில்குரு முதலியோர் பார்த்தாலும் இராசாங்க சீவனமேன்மையுடன் வாழ்வனென்றும்.

சனிக்கி பத்தாமிடத்திலிருந்து கேந்திரத்திலும் சுபபெலத்துடன் குசனுகில் பூபாலனுகி பூமியால் சீவனஞ்செய்து பிரபலவதிகார இராசயோகவானுவன் என்றும் மேலே சொல்லிய துலாம் விருச்சிகமிடத்தில் பகை நீசம் பெற்ற ரவி சந்திரன்கூடி ஈனத்தொழிலும் தொழிலால் நஷ்டமும் புரிவனென்றும் குரு முதலிய சுக்கிரன் புதனுகில் ரொம்பவும் மேன்மையான பூமி முதலிய பிரபலத்துடனும் இராச வதிகாரத்துடனும் வாழ்வன் யென்றும் அடிமை முதலியவானுடன் வாழ்வனென்றும் தனித்த புதன் ஆகில் வித்தை முதலிய கணித வைத்தியம் புரிவன் யென்றும் குருவாகில் வேதாதி சாஸ்திரமும் சுக்கிரனுகில் சட்ட நிர்ணயாதி தாமசாஸ்திரம் பரதாதி நூன்முறையிவதினுல் சீவனமும் குசன் முதலியோருடன் விருச்சிக மேடத்திலிருக்கில் உயத்தாதி பெலனுள்ள சீவனமாம் கேது ராகுவாகிலும் இராசாங்கவாத சீவன மேன்மையுடனும் ரவி சந்திரனுக்கு இராசாங்க சீவனமும் பெற்றும்

புதன் சந்திரனிவர்கள் கும்பம் விருச்சிகம் இவையாகிலும் பெலத்துடன் மூன்கூறிய சனிவசாத்துள்ள கிரகம் புதனுடனல்லது துலாம் கன்னி இவை களில் வாழில் வாணியதொழில் புரிவனென்றும் தனுசு மகரமீனமாகில் அடி மையாகியும் யுத்தசத்துரு மூலியவாத விரோதிகளாலும் சீவனமடைவன் சுப ருடன் அசுபரிருக்கில் மிகவுமான மித்துருவத்துடன் இராசவனுகூல சீவன மும் பிறபுத்துவமும் பெற்றுவாழ்வன் யென்றறிய வேண்டியது.

சுக்கிரன் புதன் கூடியல்லது சந்திரன் முதலியோரைக்கூடி விருடபம் கன்னி இவையில் வாழில் பெண்வகை கணிதம் இவ்விரண்டு முயல்வுகளால் தனலாபமுதலிய பொருளே யடைவனென்றும்.

குரு சுக்கிரன் சம்மௌனத்துடன் இருக்கில் பூமி முதலிய தனபூர்வ விர்த்திகளாலும் புராண சாஸ்திராதிகளாலுஞ் சீவனமும் சுக்கிரன் சுபரே கூடி கேந்திரகோணத்தில் இருக்கில் இராசாங்கமூலியாதி சீவனமும் மேன் மையான யோகனுய் பிரபுத்துவத்துடன் வாழ்வனென்றறிய வேண்டியது

மேற்கூறிய இடங்களில் சுக்கிரனுடன் அசுபர்கள் கூடி பகைநீச முத லியதாகியதிலும் மகரம் மீனம் மிதுனம் துலாம் இவைகளி லிருக்கினும் பொய்த்தொழிலும் ஹிதரவிட்சாதிகளையும் அக்குத்திய சீவனத்துடன் வாழ்வ னென்றும் அவ்விதஞ் செய்த்தொழில்களிலும் லாபமின்றியும் அடைவன் அவ்வித இடங்களிற்கூடிய அசுபரும் சுக்ஷேத்திராதி பெலத்துடன் சுபர் சம் மந்தாதி திருஷ்டிபெற்று வாழில் இராசயோகவானுகி அதிகார சீவனஞ் செய்து அடிமையாளுடன் வாழ்வான் சுபர்களே கூடிடீற்கும் அபெலத்துடன் பாவறைப்போலொற்ற பெலத்துடன் க்ஷீணிதர்களாகி வாழ்வானுகில் அப்ப டிக்கொற்ற சாதகன் அதி கீழோரான தரித்திரவனுபவத்துடன் யாசகார்த்தி யைப்போல சீவனஞ்செய்து வருவனென்றுங் கூறப்படும்.

சீவனவிஷய கெணிதங்களாவன

மேற்கூறிய சீவனவகை இன்னவிதமென்று கண்டபின் மேலே கூறிய சனியும் சனிக்கி பத்தாமதிபனின்ற இடத்ததிபனுடனும் விருடபத்திலுஞ் சுக்கிரனுடனும் உறியகிரகபெலன் படிக்கி தகைகளை எடுத்துக்கொண்டு அவ்வவ் விராசியெண்ணிற்பெருக்கியும் குசன் பெலனுக்குறிய கிரகத்துடன் சேர்ந்தவர்களின் எண் மொத்ததகைசேர்த்து அத்தகையில்கொடுத்து கண்ட சேஷம் சீவனுகி லாபமும் சுக்கிரனுடன்கூடி பெலத்திற்கண்ட எண்ணிற் கண்டசேஷம் சீவனக்கடையில் லாபமான பொன்களென்றறிய வேண்டியது இதில் சுக்ஷேத்திரம் உச்சகேந்திர மிவைகளின் கணக்கிற்கிசையக் கூறிய பெலன் எத்தனையோ வத்தனைதடவை பெருக்கிக்கண்டவை சீவனலாபத்திற் கிடைக்கும் தனமாகிய பொன்னென்றும் அவ்விதப்பொன்னுனது அவ்வவ் தசாமாணயங்களில் பத்துப்பணங் கொண்டது ஒரு பொனனென்றறிய வேண்டியது இவைகளே யவ்வர்கள் பெலனுக்கிசைந்த புக்திகால அளவி னுற்றறிந்துக் கொள்ளவேண்டியது.

லாபவிரய பலன்களாவன

புதன் பெலவானுகி சிங்கம் கன்னி மிதுனம் விருஷபம் தனுசு இவை களிற்றனித்தாலும் ரவி குரு சுக்கிரனேக்கூடி இருக்கில் சந்திரன் விருச்சிகம் மகரமீனம் கடகமிவையில் சுபருடன் வாழில் விரயத்துக் கதிகலாபமும் புதன் பெலமற்றும் பாவருடன்கூடி கடகம் மகரம் மீனம் துலாமிவைகளி லிருக்கினும் சந்திரன் முதலிய சனி இவர்களேக்கூடி கன்னி தனுசு மேஷம் மிதுனம் விருடபத்திலிருக்கினுஞ் சாதகனுக்கு லாபமற்பம் விரயஞ்சாஸ்தியும் அன்னிய தேசவாசாதி உத்தியோக பிராப்திகளு மிருந்த கீர்த்தி மூர்த்தி களுடன் மிகவும் அதியோகவானுகி வாழ்வனென்றும் மிக்கப்ரதாப ஐசுவரிய மும் அசன சயனமேன்மையும் இவ்விதமுண்டாகும் சந்திரனுடனும் பனி ரெண்டாமிடத்திலு முறிய சுபபெலன் பெற்ற கிரகத்தின் அளவராகிய எண் களேயும் ராசி எண்களே (அ-ல்) பெருக்கி (ம-ல்) கழித்தவை விரயமும் புத னுடனும் மிதுனத்திலுமிருக்கும் சுபக்கிரக பெலனுக்குரிய எண்களேயும் ராசி எண்களேயுங்கூட்டி (க-ல்) பெருக்கி (கக-ல்) கழித்த சேஷம் லாபமென்றும் இவ்விரண்டு தசையில் எந்தத்தசையதிகமோ அத்தனே மடங்கு அதிகலாப விரயங்களேச் சொல்லவேண்டியது இதில் லாபத்துக்கு விரயஞ்சாஸ்தியான பங்காகில் கடனுளியென்றும் இவ்விதமரிந்து ஒவ்வொரு லக்கினங்களுக்கும் (கஉ) மிடம் அதிபதியையும் (கக)மிட மதிபதியையுங்கொண்டு இவ்விதமே கணிதஞ்செய்து அறிந்துக் கண்டவைகளே லாபவிரயம் கடன் இவைகளேயும் சுகாசுக விருத்திகளேயுஞ் சொல்லவேண்டியது.

இதில் விரயாதிபதி பெலனும் எண்ணும் அதிகமாகில்மித மேன்மை யுள்ள அசனத்தையும் பரஸ்தல பரதேசவாசங்களேயு மிருத்துக்கூறல் வேண் டுவ தவசியமென் றறியவேண்டியது.

கன்னியாலக்னத்தின் குணகுண பலன்களாவன

எப்பொழுதுஞ் சந்தோஷி தருமம் தியாகமுடையவன் மானியாசிக்கான் குற்றமற்ற ஆசாரன் பலவிதி நூல்களேயும் ஆராயுவன் பின்வயதில் அதிக மான பொருளேத்தேடுவன்.

(டு) வது காலம் அக்கினி அக்கினிசமான உபாதிநேரும் (ம-ல்) சுரம் (கஅ-ல்) மீமனேய் இவ்விலக்கணத்தை சுபர்கோக்கில் ஆயுள்தீர்க்கம் ஷு (எஎ) வைகாசிமீ அமரபக்ஷம் (கச) வது திதி சித்திரை நக்ஷத்திரநாளில் குன்மாதி வாயுவு சீதனேயால் மரணமாவன்.

மாரக யோகாவயோக திசாபுக்திகள் கூறப்படுகின்றனவாம்

சுக்கிரன் புதன் புதனுடன் சுக்ஷேத்திர உச்சம் பெற்ற இரவி கேந்திர கோணமதி சென்மகேந்திர சப்தமகேந்திரம் கடகமிவையிலுற்ற குரு சனி

இவ்வித திசைகளும் புக்திகளும் அதியோக சுபப்பிறதாபர்களாகியும் கிரக வாகனம் பூமி கன்று காலி முதலிய க்ஷேத்திரலாபங்களையும் சுபசோபனங் களையும் கொடுக்கவும், மேன்பாடு செய்யவும் புத்திரகளத்திர பெந்து மித் துருத்துவங்களையும் கொடுக்க வல்லபர்களாவார்கள் ஆகினும் குரு திசையில் சனி ராகு சுக்கிரன் ரவியும் குசதிசையில் சுக்கிரன் குரு ராகுவும் பாபபெல ரவி திசையில் குசன் ராகு சனியும் சுக்கிரன் திசையிலும் கேது ராகு இந்த திசையில் சனி ராகு ரவி குசனும் மாரக மாரக சமானதுன்பம் விரோ தங்கள் குடும்பமரண துக்கங்கள் இவ்வித பலவகை சத்துரு வரசர்களின் கொடியபகைகள் பலவாருண துன்பங்கள் இடப்பேற்றி இவைகளை எல்லாங் கொடுக்கக் கடவனென்றறிய வேண்டியதென்றுங் கண்டுரைத்தல் வேண்டும் தேகத்தில் சகலவிதபிணி முதலிய வரிஷ்டங்களையுங் கொடுக்குமென்றறிய வேண்டியது.

ஆனால் குசன் பெலனின்று (ரு, சு. அ, கூ-ல்) வாழில் மாரகங் கெடான் அம்மாரகத்தை யடித்த அரவாக்கிய பாம்பு கொடுக்குமென்றுரைத் தல் வேண்டும்.

குருவுஞ்சனி சந்திரனிவர்கள் நன்மையையுந் தீமையாயுங் கலர்ந்து கொடுக்கினும் மிவர்கள் தனக்குறிய க்ஷேத்திரத்திலும் கன்னி கடகம் துலா மிவைகளிலிருக்கில் அதி கீர்த்தியைக் கொடுக்கப்பட்டு மிக்க மேன்மையாவர் சிங்கம் மகரம் மேஷமிவைகளில் வாழில் தன் கௌரவக்குறைவும் சகலவித துன்பத்தையும் பலவித வருத்தங்களையும் மானபிமானக் குறைகளையும் அனேகவித பாதையையும் மரணத்தையுமல்லது மரணசமான துன்பத்தை யுங் கொடுப்பார்களென்றறிய வேண்டியது.

மாதுருவரிஷ்டம்

சந்திரன்றிசை சனி ராகு சுக்கிரனிலும்
ராகுதிசை தனது சனியும் மதியும்
குருதிசை மதிபுகர் ராகுவும்
புதன்றிசை ராகு சனியும்
கேதுதிசையில் சுக்கிரன் சந்திரன் சனியிலும்

சுக்கிரன்றிசை தனது சனியிலும் மாதுருகற்மம் துக்கம் வம்சக்ஷய்ய பல வாராகிய சோகமிவைகளை கொடுக்கப்படுமென்றறிய வேண்டியது அவரவர் களுக்கேற்ற சுபாசுப பெலத்துக்குறிய விதியால் கண்டிதமாரகஞ் செய்பவ ராம்.

பிதுராரிஷ்டம்

புதன்றிசை ரவி சனியும்
சுக்கிரதிசை சனி இராகுவும் கேதுவும்

ரவிதிசை சனி சுக்கிரன் பாம்பும்
மதிதிசை புகர் சனியும் இராகுவும்
குசன்றிசை இராகு சனியும்.

குருதிசை சனிதிசையில் புதன் பாம்பு இதற்கிசைவான காமமரிஷ்ட மாகும்.

சன்னிலக்கினத்தின் சகோதிரவரிஷ்டம்

ரவி புகரும் இவ்வித காலங்களில் பிதுர்மரண துக்கசோகாதி பிதுர் வம்ச கூடியம் பலவாருகிய கஷ்ட நஷ்ட தன்பங்களும் மனேகிலேசமும் பல வகை துக்கசோகங்களையும் பொருந்தி வாழ்வன்.

சகோதிரவரிஷ்டம்

கேதுதிசை குசன் இராகுவும்
சுக்கிரன்றிசையில் இராகு சனி புதன் சிகியும்
ரவிதிசையில் இராகு குசனும் சனி சுக்கிரனும்
குசன்றிசையில் புதன் சனி இராகுவும்
இராகுதிசையில் சுக்கிரன் குசனும்

குருதிசையில் சுக்கிரன் குசன் இராகு இவ்விதகாலம் சகோதிரவரிஷ் டம் சகோதிரவகை துக்கசோகங்கள் பலவாருகிய தன்பம் மனவியாகூலங் கள் பொருள்சேதம் சகோதிரர் பலவகை துக்கசோகங்களும் சகோதிரவகை குடும்ப துக்கசோகமும் சகோதிரவகை குடும்ப கூடியங்களையுங் கொடுக்க வேண்டியது.

களத்திர லாபவரிஷ்டம்

சந்திரனில் சுக்கிரன் புதனும் குருவும்
இராகுதிசை புதன் புகரும் மதியும்
குருதிசையில் மதி புதனும்
சனிதிசை புதன் குருவும் மதியும்
புதனில் சனி புகரும்
கேதுவில் புகர் குருவும் புதனும்
சுக்கிரதிசையில் சந்திரன் இராகு சனி குருவும்.

இவ்வித காலம் விவாக சுபசோபன களத்திரலாபத்தையும் ஸ்திரீபோக போக்கிய சுகத்தையுங் கொடுக்கும்.

மேற்கண்ட திசையில் பாம்பு குசன் சனி குரு இவ்வித புக்திகாலங் களில் மரணதுக்கமும் களத்திர சோகமும் பலவாருகிய வருத்தங்களும் களத்திர மரணங்களையுங் கொடுக்கப்படுமென் றறியவேண்டியது.

புத்திர லாபவரிஷ்டம்

கோணத்திலிருந்த குருதிசை சுக்கிரன் சந்திரன் இவ்வித புக்திகளிலும் சனிதிசை புதன் சுக்கிரன் சந்திரனிலும்

சுக்கிரதிசை தனது மதியிலும்
ரவிதிசை சந்திரன் குரு புகரிலும்
மதிதிசை குரு புதன் புகரிலும்
பாம்புதிசை புதன் புகர் மதி குருவும்.

இவ்வித திசாபுக்திகாலம் மேன்பாடாகிய புத்திலாபங் கொடுப்பர்கள் யென்றும் முன்சனிப்பவை அனேகமாய் பெண்பிரசையென்றும் கூறல் வேண்டும் இவ்விதமான திசைகளில் சனி சுக்கிரன் ரவி குசன் பாம்பு இவ்வித புக்திகாலங்களில் புத்திர வரிஷ்டத்தையும் பலவகை சோகங்களையும் மனபீதியும் பெண்களுக்கு அரிஷ்டமும் புத்திர நெற்பங்களும் அதைக் கொண்ட களத்திரங்களுக்கும் தேகாரிஷ்ட கெண்டங்களையுங் கூறுவோம்.

இனி கன்னியாலக்னத்தில் பிறந்தவர்களுக்கு கிரகசாரப்படிக்கும் கணிதமுறைப்படிக்கும் ஆயுர்பாவபலன்கள் கூறுகின்றது

கன்னியும் புதனையும் சுக்கிரனையும் விருஷபத்தையும் மேடமும் குசனையும் சனியையுங்கொண்டு ஆயுர்பாவங் கூறல்வேண்டும்.

புதன் சுகேஷ்த்திர உச்சமாகிக் குசன் சுகேஷ்த்திர வீட்டிலும் குரு சுக்கிரன் கேந்திரத்திலும் சனி திரிகோணம் முதலிய தனதிடத்தில் சுபபெலத்துடன் சந்திரன் கேந்திரத்தில் இருக்கினும் ஜெண்மலக்ஞதிபனும் சந்திரலக்ஞதிபனும் சர இராசியில் இருக்குமாகில் சாதகனுக்கு சென்மலக்கினத்திற்கும் சந்திரலக்கினத்திற்கும் இருபாரிசங்களில் ரவி முதலிய குசன் சனி இல்லாதிருக்கினும் சாதகனுக்கு ஆயுள் (ஹ-கஉ) யென்றும் மேற்கூறிய கிரகங்கள் ஸ்திரத்திலேயே யிருக்கில் (ஹ-கக) யென்றும் உபயத்திலேயே இருக்கில் (ஹ-ா) யென்றும் சரவுபயத்திலிருக்கில் (ஹ-சுங) யென்றும் ஸ்திரமுபயஞ் சாஸ்திரமாகில் (ஹ கூ) யென்றும் இவ்வித ராசிகளில் மாரிகிற்கில் (ஹ-சுசு) யென்றுங்கூறப்படு மென்றறிய வேண்டியது.

புதன் சுகேஷ்த்திர உச்சமானலும் கேந்திரத்தினின்ற சூரியனைக்கூடினும் அவையிலு மிதுனத்தில் அல்லது தனுசுவி னின்று சந்திரனைக்கூடிகிற்கினும் குரு முதலிய சுபா சந்திரனை யல்லது சென்மத்தைப் பார்க்கினும் குசன் சுபகேஷ்த்திரத்தி கிற்கினும் சனி சரத்தினின்றாலும் புதன் குசன் உபயசரத்தி கிற்கினும் ஜாதகனுக்கு (ஹ-ா) யென்றும் புதன் குரு ரவியுடன் கடகங் கன்னி மீனம் விருஷபத்திலிருக்கினுஞ் சனி சுக்கிரனிவர்கள் ஸ்திரத்தில் குசனிருக்கினும் (ஹ-அச) யென்றும் மாம்பு முதலிய பாவர்

சேரில் (ஞு-கூ) குறைக்கப்படு மென்றும் மேற்கூறிய சுக்கிரன் சுக்ஷேத்திர உச்சத்தில் குசன் ரவியையும் புதனைக்கூடினும் பலமுற்ற கிரகங்கள் நோக்கினும் குரு சனி சரத்திலேயேயிருக்கில் ஞு (அ) யென்றும் புதன் சுக்கிரன் இவர்கள் ரவியுடனிருந்து கன்னி துலாம் தனுசு மீனம் மிதுன மிவைகளிலும் சந்திர கேந்திரமாகி சனி குசன் சுக்ஷேத்திரமல்லது உச்ச பலத்துடனிருக்கில் சாதகனுக்கு ஆயுர்பாவ (ஞு எகி) யென்றும் இவ்வித புதன் சுக்கிரன் சந்திரனிவர்கள் (கூ, சு. அ, கூ-ல்) இருக்கினும் கேந்திர கோணத்தில் குரு முதலிய ரவியும் சனியுமிருக்கில் அல்லது சந்திர கேந்திர மாகினும் குசன் சுக்ஷேத்திர உச்சத்திலிருக்கில் ஸ்திரமுபயம் ஸ்திரம் ஸ்திர மாக இருக்கில் (ஞு சுசு) யென்றும் சென்மகேந்திராதிபனுட னல்லது சிங்கம் துலாம் மிவைகளிலாவது சந்திரனுக்கு (உ. கூ) லாவது சனி ரவி முதலிய பாவர்களிருக்கில் சாதகனுக்கு வயசு (கசு) வறை பாலாரிஷ்டநோய்க் கண்ட முண்டென்றும் குரு லக்கின கேந்திரத்தில் யிருக்கில் மேற்கண்ட பாலாரிஷ்டம் நீங்கி ஆயுள் விருத்தியை யடைவனென்றும்.

குசன் கேந்திர கோணத்திலின்றி மற்றய ஸ்தானமாகிய துலாம் கன்னி விருச்சிகம் கும்பம் மேஷம் கடகம் சிங்க மிவையிலும் புதன் ரவி இவ்வித ஸ்தானங்களிலிருந்து குரு சந்திரன் கேந்திரத்திரிகோணமாகிச் சுக்கிரன ரிஷப மிதுனங் கன்னி துலாம் தனுசு மீனத்திலிருக்கினும் யெவ்வித பாவ றைக்கூடினும் அவ்வித ஸ்தானங்கள் உபயம் அல்லது திரவுபயமானாலும் ஜாதகனுக்கு (ஞு-கூ) யென்றும் இவ்விதமாகிய சுபர்களும் பாபபெலத் துடன் மேற்கூறிய இடத்திலிருக்கில் (ஞு-ஙச) யென்றும் அசுபர்களே (உ, கூ) லும் புதன் முதலியோர் நீசம் பகையாகி அசுபக்ஷேத்திரத்திலிருக்கில் (ஞு-க) (மீ உ-க்)குள் ஆயுளென்றும் கன்னி துலாம் தனுசு மகர மிவை களில் புதன் ரவி இருக்கினும் சுக்கிரன் குரு கடக முதலாருக்குள்ளும் சனி மகரவிராசி முதல் (சு) ராசிக்குள்ளும் சரமுபயமான விராசிகளிலு மிருக்கு மாகில் சாதகனுக்கு (ஞு-ஙஉ) யென்றும் மேற்கூறிய சுக்ஷேத்திர உச்ச கேந்திர கோணமின்றி குரு புதன் இவ்வித கிரகமிருக்கினும் சிமம் மேஷம் துலாம் சந்திரனுக்கு (உ) பக்கங்களிலும் பாவர்களிருக்கில் சாதகனுக்கு வயசு (நு) லேயே முடிவாகுமென்றும் ஆயுள் தோஷமும் அடையுமென்றும் குசன் கேந்திரத்திலும புதன் முதலிய சுபர்கள் துலாம் சிங்கம் விருச்சிகம் கும்பம் மேஷமிவைகளில் மறைந்தும் ஸ்திரலஸ்திரமாகினும் சாதகனுக்கு (ஞு-சசு) யென்றும் இவ்வித சந்திரலக்ன வசாத்சுபர் கேந்திரமாகில் மேற்கண்ட வயது யென்றும்.

புதன் மிதுன மேஷம் சிங்கம் கும்பம் விருச்சிகந் துலா மிவைகளிலிருந் தும் ரவியைக்கூடினு மல்லது தனித்து நிற்கினும் சத்தரு கிரகங் கூடி னாலும் குரு முதலியோர் திரிகோண கேந்திரத்திலிருக்கில் சாதகனுக்கு சந்திரன் சனி இவர்கள் சரமுபயத்தினிற்கினும் (ஞு-கூஅ) யென்றும் குரு

சுக்கிரன் பூரணசந்திரர் கேந்திரகோணத்தில் ரவி புதனைப்பார்த்தாலும் கூடி னாலும் மேலே வருடம் பனிரெண்டென்றும் சுபர்களின்றி ரவி புதனுடன் சனி குசன் பாம்பு இவர்களிருபாபிகள் கூடினும் நோக்கினும் அமரபக்ஷ சந்திரனுகி யுரினும் வருஷம் (சு-க்)குள் இறப்பனென்றும்.

புதன் ரவி கன்னியிலல்லது மிதுனத்திலிருந்தும் சுக்கிரன் சுக்ஷேத்திர னுகி சந்திரகேந்திரத்தில் புதனிருக்கினும் சந்திர லக்னுதிபதி சந்திர கோணத்தில் சந்திரனுடன் சேராமல் இருக்கினும் பாவர் க்ஷேத்திரங் கடுங் கோள்கள் குருவைக்கூடினும் நோக்கினும் சனி பாவர் வீடல்லது சம்மந்த மாகினும் நீசம் பகைபெற்று வாழினும் கடகமுதலாரு ராசிக்குள் குருவும் மகரமுதல் ஆரு ராசிக்குள் சனியு மிருக்கின் ஷு (சுசு) யென்றும் இவர் களுடன் பாம்பு முதலிய பெரும்பாவி கூடின் ஷு (சுஉ) யெனறும் சரசர மாகில் ஷு (எஉ) யென்றும் சரஸ்திரமாகில் ஷு (சுசு-ம்) சரமுபயமாகில் ஷு (சுஉ-ம்) ஸ்திரதிரமாகில் ஷு (எ0-ம்) ஸ்திரசரமாகில் ஷு (சுடு-ம்) ஸ்திரமுபயமாகில் ஷு (சுக-ம்) உபயஉபயமாகில் ஷு (டுசு-ம்) உபயசரமாகில் ஷு (சு0-ம்) உபயதிரமாகில் ஷு (சுஉ) யென்றுங் கூறுவாம் இவ்விதம் மேலே கூறிய புதன் ரவி புகர் இவர்களும் குரு சனியும் மேஷம் கடகம் துலாம் மகரம் கும்பமிவையில் ஒன்று கூடினும் தனித்து நீற்கினும் சந்திரன் குரு மீனம் கடகம் கன்னி துலாம் கும்பத்தில் தநித்தலது ஒன்று கூடினும் மேற் கண்டபடி ஆயுர்பாவமென்றும்.

குசன் கடகம் சிங்கம் கும்பத்தில் இருந்தும் புதன் பாவரைக்கூடினும் சனி யல்லது குசன் சொக்ஷேத்திர இடத்தினின்றலும் சத்துருவைக்கூடி னும் சந்திரன் கன்னி இவைகளுக்கு (அ, உ, கஉ-ல்) பாவர்களிருக்கினும் ஷு (சுஉ-க்)குள் வயதென்றும் சுபர்களாகிய குரு சுக்கிரன் பூர்வபக்ஷ சந்தி ரன் மேற்கண்ட விராசியல்லது மகரம் விருச்சிகம் மேஷம் இவைகளிலிருக்கி னும் ஷு (உஅ-க்)குள் மாரகமென்றும்.

புதன் சிங்கம் விருச்சிகம் தனுசு கும்பம் மேஷ விருடப மிவைகளில் ரவியைக்கூடினும் மறறும் சனி முதலியர் அவரையடுத்து நீற்கினும் கூஷீண சந்திரனுகி வாழினும் குரு சனி மறைவுபெற்று வாழினும் ஜாதகனுக்கு ஷு (உக-க்கு) ளென்றும்.

கூஷீணசந்திரனுகி விருஷபம் கடகம் கன்னி மீனத்திலிருக்கினும் அல் லது ஸ்திரத்தினினறும் பகை பெற்றவரைக் கூடினும், புதன் ரவி முதலி யோர் ஸ்திரமல்லது சரவிராசியாகிய மேட கடகம் துலாத்தில் இருக்கினும் குரு முதலிய சுபர்கள் (எ, அ, கரு, கக, ரு) இவ்வித இராசிகளி னிற்கினும் ஷு (கஉ க்குள் யென்றும் விருச்சிகம் கும்பம் கடகங் சிங்கம் இவைகளில் சனி செவ்வாய் முதலிய பாவரிருந்து இரண்டுக்குக் குறையாத பாவிகள் கூடியும் குரு முதலியோர் பகை நீச இடத்திலும் மேலேகூடிய ராசிகளிற் பாவர் உடன்கூடினும் கூஷீணசந்திரன் விருச்சிகம் மேஷம் சிங்கம் இவை

களில் சனி பாம்பு முதலிய பாவரைக்கூடினுந் திங்கட்கிழமை சித்திரை நக்ஷத்திரமும் மங்களவாரம் உத்தராடமும் நாயிற்றுக்கிழமை பரணியும் குரு வாரம் கேட்டை நக்ஷத்திரத்திலும் புதன்கிழமை அவிட்டமாகினும் சனிவாரம் இரேவதியாகினும் வெள்ளிக்கிழமை பூராடமாயினும் பூராட முசற்காலாயி னும் பூச நக்ஷத்திரம் (உ-ம்) பாதமாயினும் சித்திரை இரண்டாம் பாதமாகு லும் உத்திரத்தில் முதற்பாதமாயினும் மூலத்தில் மூன்றுக்குள் பட்டபாத மாயினும் மகத்திற் முதற்பாதமாகுலும் ரேவதி கேட்டை ஆயிலியம் இவை யின் பின்பாதமாயினும் பாலாரிட்டத்துடன் (ச, எ) வருஷங்களுக்குள் மாதா பிதா சிசு இவைகளும் போமாம் யெவ்வித லக்கினசாதகனுக்கும் இந்த கட்சத் திரதோஷத்தை யனுசரித்துக்கொள்ளல்வேண்டும் (ச, எ) மாதம் (ச, எ) நாட்களுள்ளு மரணம் பாலாரிஷ்டம் கற்பமிலவைகளை கொடுக்கப்படுமென்றுங் கண்டறியவேண்டியது

ஆயுர்பால மிவ்விதமாரிந்துகொண்டபின் கணிதமுறையின் விதிகள் கூறு வாம் சனியுடனும் புதனுடனும் சுக்கிரன் குசன் இவர்களுடனும் மேஷம் கன்னி சந்திரனுடனுங்கூடிய ராசியெண்களையும் சனிக்கியெட்டாதபினின்ற இடத்ததிபனுடனும் குசனுக்கு யெட்டாமதிபனின்ற இடத்ததிபனுடனும் கூடிய ராசியெண்களை சுபாசுப பெலன்களும் மேஷம் சிங்கம் இந்த இலக் கினத்திற்கண்டபடி யெடுத்துக்கொண்டு இராசியெண்களால் பெருக்கிய துகையை வஷ்பல முதலாகிய கண்ட பெலன்களுக் கிரைந்தபடிக்குத் தள்ளி அல்லது கூட்டியதுகைகளை ஒன்றபடுத்தி (கூ-ல்) கழித்தசேஷந் திசையும் இதில்வந்தஈவை (நி-ல்) பெருக்கி (க-ல்) கழித்தசேடம் புக்திகள் மாரக திசாபுக்திகளாகும் மேலேவந்த துகையை (கஉ-ல்) கொடுத்த சேஷம் (ல) மாதங்கொண்ட ஆயுளென்றுங் கண்டறிதல்வேண்டும் இவைகளை மேஷலக்ன கண்டனையிற்கூறிய சவ்யாபசவ்ய விதிகளின்படி திசாபுத்திகளைப் பார்த்தரி ந்து பகரவேண்டியது.

2-வது தனகுடும்பாதி நேத்திராதிபலன்கள் கூறுவாம்

சுக்கிரன் சுக்ஷேத்திரமல்லது உச்சத்திலும் குருவுக்கு இரண்டாமதிபன் சுபக்ஷேத்திரத்திலும் சுபருடனே கூடியும் குரு கேந்திரகோணத்திலிருக் கினும் (உ, கஉ-ல்) பாவரின்றியும் குருவுக்கு (உ, கஉ-லும்) இவ்விதமே யிருக் கினும் சாதகன் பரம்பறையான தனவந்தனாகி கோடியாந்திர ஸ்திதியுடையவ னாகி வாழ்வன் இதில் சுக்கிரனுடனே பாவரின்றி சுக்ஷேத்திரத்தில் மாத்தி ரும் நின்றும் சிங்கத்திலாவது துலாவிலாவது குசனல்லது சனி நீங்கிய பாவர் இருக்கினும் குருவுடனும் பாவர்கூடி பகை க்ஷேத்திர முதலிய பாவர்வீட்டில் குருவிருக்கினும் குருநின்ற (க-ல்) குசன் முதலிய பாவரிருக்கினும் அவ்வதி பன் பெலமுற்றவருடன் கேந்திரத்திலிருக்கில் பிதுர் பிதுர்பூர்வார்ச்சித தன மின்றி தகப்பன்காலத்திலும் சாதகன் காலத்திலுங்கூடி லட்சாந்தரபர்வரைக் குள் தனந்தேடுவன் என்றும் ஸ்தானாதிபதியுங்கெடில் தகப்பனுடைய தனமு

மில்லாமல் சுயாற்சித தனம் தசசகஸ்திரக் கணக்குள்ளவை சம்பாதிப்பனென்றும் சுக்கிரன் குரு உச்சமல்ல கேந்திரகோணத்திலிருக்கினும் சூரியன் புதன் இவரைக்கூடி சர திர இராசியிலிருக்கில் சுயார்ச்சிதமே லட்சக்கணக்காய்ச் சேற்பனென்றும் இவ்வித சுக்கிரன் குரு (கூ. க, அ, கஉ) மிடமாகினும் சுபக்ஷேத்திரமாகி சுபர்நோக்கஞ் சேர்க்கையுடனும் குருவுக்கு பாக்கியாதிபன் சுக்கிரனுக்கு பாக்கியாதிபன்கூடி கேந்திரகோணமல்லது சுக்ஷேத்திர உச்ச இடத்தில் இருக்கினும் சுக்கிரன் கெட்டபலனல்லது பாவருடன் கூடினலும் (உ, கஉ) மிராசியில் பாவரிருக்கினும் பூர்வார்ச்சிதம் அதிக பிரபலமாக லட்சாந்திரமாக விருந்து சாதகன் காலத்தில் குறைந்து வரப்படுமென்றும் சுக்கிரன் குருகேந்திரகோணஞ் சுபபெலனுறிய க்ஷேத்திரத்தில் வசிக்கில் பிதுரார்ச்சிதம் எவ்வளவு வகைசேரினும் பின்விடாமல் காப்பாற்றிவருவன் அதிக சம்பாதனஞ் செய்யானென்றும்.

சுக்கிரன் குரு முதலியோர் நட்பு இடமாகிய கன்னி துலாம் தனுசு மிதுனம் விருஷபம் மீனம் கடகம் இவைகளில் யிருந்து புதன் அல்லது பூரணச்சந்திரனைக் கூடினும் சந்திர கேந்திரத்தினிற்கினும் ஓர் அசுபரும் கூடாமலிருக்கில் லட்சாந்தர தனவந்தனென்றும் இதில் ஓர் பாபிகள்கூடி இருக்கில் தசாந்திர சகஸ்திர தனவந்தனென்றும் இரண்டுபேரும் பாவராய்க் கூடில் சகஸ்திரக் கணக்குள்ள தனவந்தலாபனென்றும் (கூ-க்கு) மேற்பட்ட பாவர்கள்கூடில் சதாந்திரத்துக்குள்ளாகிய தனவந்தனென்றும் ஸ்தானாதிபதிகள் பெலத்துயிற்கில் சகஸ்திர கணக்குள்ள தனவந்தனென்றும் ஸ்தானாதிபதிகளும் பெலமற்றவர்களாகியும் பாவருடன் கூடினும் தரித்திரனுகியும் ரோணஸ்தனுகியும் வாழ்வனென்றும்.

குரு சுக்கிரன் மேஷம் விருஷபம் கடகம் சிங்கமிவையிலும் விருச்சிக மகரம் கும்பமிவைகளில் ரவி புதன் கூடினும் குருவுக்கு (க) அதிபதி கூடினும் பெலத்துடனிருக்கினும் தனமானது தசசகஸ்திர முடையவனென்றும் இவ்விடங்களிலிருக்கும் மேற்படி கிரகங்களுடனுவது அவர்கட்குயேழிலாவது சனி முதலிய பாவரிருக்கில் சகஸ்திராந்தர தனமுடையவனுகி வாழ்வனென்றும் இதுதுடன் குரு கன்னி தனுசு மீனம் விருஷபங் கடகத்திலும் சனி அவைகளுக்கு (உ, கஉ) லும் இருக்கினும் சுக்கிரன் சனி க்ஷேத்திரமடைந்து சனியைக்கூடினும் அல்லது நோக்கினும் புதனுடன் சுக்கிரன் ரவியைக்கூடி அல்லது விட்டிருக்குமாகில் தசசகஸ்திர தனமுதல் லக்ஷாந்திரதனஞ் சம்பாதனையாலலும் உடனுக்குடனே விரயமாகிவிடுவனென்றும் ரவியைக்கூடில் தசசகஸ்த்திரத்துக்குள்பட்ட பொருள் கூடினும் விருத்தியடைவனென்றும் அவையை சனியல்லது குசன் பார்க்கினுங் கூடினும் அவ்விதப்பொருளையு மூன் ஆர்ஜித தனத்தையும் இழப்பனென்றும் அவ்வித இடங்களிலுள்ள கிரகங்களுடன் குரு சனி ரவி மூவர்கூடினும் அல்லது குசன் சனி கூடினும் அல்லது நோக்கினும் பிறந்த சாதகன் தனமும் பூர்வார்ச்சிதம் அரசர்களுக்கும்

அக்ரமத்திற்கு கள் முதலிய மத்தியபானம் பரஸ்திரீகளுக்குங் கொடுத் தொழிப்பனென்றும் ரவியல்லது குசன் கூடினும் நோக்கினும் உறிய பொரு விவாதத்தினால் அழியுமென்றஞ் சுக்கிரன் குரு இவருடன் பெலமுற்ற ரவி புதன் கூடினும் கேந்திரகோணம் கடகத்திலிருக்கினும் பெலமுற்ற (உ, கூ) மிடங்களில் பாவர் சுபர் வாழாமலிருக்கில விவாதங்களாலும் அரசர்களாலும் பொருளை முன் சிலவழித்துப் பின் இருமடங்குடனும் பிரபலத்துடன் சம்பா திப்பனென்றும் மிகவுங் கீர்த்திபெறுவனென்றும் சிம்மம சனியிருக்கில் சில வழிக்க மனதின்றி இருந்தாலும் தெரியாவையாகப் பொருளையழித்து கீர்த்தி பெறுவனென்றும்.

சுக்கிரன் சந்திரகேந்திரபுதனுகி லக்னவசாத் (கூ, சு, அ கூ ல்) இருக் கினும் புதன் முதலியோருடன கூடினும் (உ, கூ-ல்) பாவரிருக்கினும சுவய சம்பாதனை பிரபலமாயினும் பிரியமாட்டான் யென்றும் குரு முதலியோர் கனனி தனுசு மிதனத்திலிருக்கில் முன் வயதில் தேடிய பொருளழிந்து பின வயதில் தனந்தேடுவனென்றும் அவை விருத்திக்கி வரப்படுமென்றும் சனி முதலிய குசன (உ-லும) குரு முதலிய சுக்கிரன் துலாம் விருச்சிகம் மகரம் மேஷமிவையிலும் சந்திரன் விருச்சிகம் சிங்கம் என்னுந் திரவிராசி யிலும் வாழில் எப்பொழுதுங் கடனுக்கே பொருளை அழித்துவிடுவனென்றும் சந்திரன் குரு சுக்கிரன் கேந்திரகோணத்திலும் சுபக்ஷேத்திர பெலத்துடன ஓர் பாவரைக்கூடினாலும் தனித்தாலும் ரவி குசன் சுக்ஷேத்திர இடமல்லது திரவிராசிகளினினாலும் கடன் கொடுக்கும முதலாளியென்றும் பிரபல தனுற்சிதத்துடனும் வாழ்வன் இவருடன் இரண்டு முதலிய பாவர்கள்வாழில் கடையில் பொருளை அனேக பாவமழித்து கஷ்டஞ்செய்வனென்றுங் கள்ளர் முதலிய வரசரால் பொருளழியுமென்றுங் கண்டறிதல்வேண்டும்.

குடும்பபலன்

(உ, கூ-ல்) சுபரிருக்கினும் குரு முதலியோர் கேந்திரகோணராய் சுபர் வீட்டில் நின்றாலும் பெலத்துடைய சந்திரகேந்திரமாகி வாழினும் இவர்களை புறவர்கள் கூடாமல் நோக்கமின்றி அசுபபெலனின்றியு மிருக்கில் குடும்பம் பிரபல விருத்தியுடன் சுகச்சேமனுய் சாதகனுள்ளவரை விருத்தியாகும் இவைகளில் பாவராகிய சனி குசன் ரவி பாம்பு முதலியோர் பலமீனர்களாகி இருக்கில் பிறந்தவன் குடும்பம் விருத்தியன்றி அடையும் தரித்திரத்துடனும் உண்டாகும்.

சுக்கிரன் சந்திரன் இவர்கள் சுபக்ஷேத்திரத்தில் சுபபெலத்துடன் பாவர் சேராமல் பார்க்காமலிருக்கில் குடும்பம் பிரபல விருத்தியுடையவனென்றும் இதைப் பாவராகிய குசன் சனி முதலிய பாம்புகூடினும் நோக்கினும் சாதகன் குடும்பம் சிலநாள் விருத்தியற்றம் அடையுமென் றறியவேண்டியது.

நேத்திரபலன்

சுக்கிரன் விருச்சிகம் சிங்கமாகிய திரத்திலும் மேஷம் இவைகளினின்றும் சூரியன் சனி குசனிவர்களில் எவரைக்கூடினும் சூரியன் துலாம் சிங்கம் கும்பம் இவைகளில் பலவகையான பகைவருடன்கூடி நீசம் பகை முதலிய வரைக்கூடினும் (உ, கூ-லும்) சூரியனுக்கும் சுக்கிரனுக்கும் இரண்டு பனி ரெண்டினிற்கினும் குசன் சனி ரவியுடன்கூடி எத்தலத்தினின்றாலும் மேலாகிய நேத்திரரோகத்தினால் நேத்திரம் கெடுமென்றும் இதில் சனி ஒரு பாவியுடன் புதன் ரவி சேரினும் ஏழுக்கேழாக நின்றாலும் பிறந்தவன் நேத்திர வீனனுவனென்றும் காணல் வேண்டும் இதில் (கூ-வது) இடத்தில் இவ்வித பாவர்கள் பகை நீசம்பெற்று ஸ்தானமாவது ஸ்தானாதிபதி யாவதிருக்கில் இடது நேத்திரங் கெடுமென்றும் (உ-ல்) இவ்வித பெலமற்றவரிருக்கினும் னோக்கினும் வலதுநேத்திரம் போகுமென்றும் இதில் ஓர் மதியல்லது குரு கூடினும் னோக்கினும் அல்பஹீன நேத்திரமாகிப் பிணியுள்ளவனுவனென்றும் ஓர் பாவரின்றி சுக்கிரன் சுக்ஷேத்திர உச்ச கேந்திரமாகி சனி முதலிய பகை பாவர்கூடாமலும் இரெண்டில் அசுபரில்லாமலும் பனிரெண்டில் பாவரின்றியும் இருக்கில் குருநோக்கமும் இருக்கினும் நேத்திர சுகமுடையவனுகிலும் அல்ப உஷ்ணமாகி இருந்துவருமென்றும் அறியவேண்டியது இரெண்டு பெரும்பாவரில் சனி குசனுகில் மேக ரெக்தநோய்த் துன்பநேத்திர பீடையும் மதி பாபபெலத்துடன்வாழில் நீற்கண்ணும் சுக்கிரன் பாபபெலத்துடன் வாழில் பூவிழுந்தநேத்திரம் வெண்மை நேத்திரமும் புதனுகில் மாலைக் கண்ணுள்ளவனுகியும் வாழ்வன்யென்று அறியவேண்டும்.

மேஷம் கடகம் கன்னி இந்த லக்கினமும கும்பம் விருச்சிகம் இந்த லெக்கினத்தில் பிறந்தவர்களுக்கும் நேத்திரரோயல்லது நேத்ர ஊனமாவது அல்லது அடையாளமாவதும் விருத்தாப்பியகாலத்திலாவது நேத்திர மேகநீர் இரணுதி அல்ப உபாதியாவது காண்பிக்குமென்பவை அறியவேண்டியது.

வாக்குபலன்கள்

சுக்கிரன் துலாவிலும் விருச்சிகத்தில் குருவும் சந்திரன் ரவி நேத்திரத்திலும் சுபசம்மந்தம் சுபர்நோக்கம்பார்க்கில் வாக்குவிசேஷமும் சத்தியவானுகியும் தாக்ஷணியனுகியும கண்டிப்புடையவனுகியும் அஞ்சாதவனுகியும் கவன சக்தியும் நிர்மானருபனுகி யாருமதிக்கச் சபையிற்பேசவுஞ் செலுத்தவும் வல்லபனுக வாழ்வன் யெவரையும் நிகர்பண்ணமாட்டான் நன்மையான வாக்குடையவனுகிவாழ்வன் இவர்களுடன் குசன் இருக்கில் கோபவாக்கு அபசப்தன் ஒரேவித பிடியன புதனுகில் சலமியனுகியும் கணிதமுதலிய வாக்குடையவன் குருவாகில் சாஸ்திரவேத நீதிவாக்கனுகினும் முடிவுபெருன் விரதஞ்செய்வன சனியாகில் மந்தத்தனமும் பொய்யும் சொல்வன் பாம்பாகிலும் அப்படியே பொய்யனுகியும் வாழ்வன் மேலுச்சுமாத்திரம் பிறருக்கு

சத்தியவசனம் உருதிசொல்ல வேண்டுமென்று உபதேசிட்பன் தான் செய்வது யெல்லாம் பிசகும் அசத்தியவாஞய் வாக்குபலிதமின்றி வாழ்வன் நோக்கினும் இவ்விதபலனேயாம்.

சுக்கிரன் புதன் (ரு, சு, அ, கூ) மிடமாகினும் பூர்வபட்ச சந்திரன் அல்லது குரு முதலிய சுபரைக்கூடினும் நோக்கினும் இவரிருக்குமிரண்டாமிடம் சுபர்வீடாய் குரு முதலியோர் நோக்கினும் இருக்கினும் வாக்கைவிற்று சீவிப்பன் அதிமேதாவியாகியும் வாக்கு சாலஞகியுங் கணிதமுதலிய சோதிடாதி வல்லபஞகி மிகவும் பிரபலவாஞவன.

புதன் சுக்கிரன் சுட்சேத்திர உச்ச கேந்திரகோணங் கடகமிவையிலும் சிங்கத்திலிருக்கினும் அவ்வீட்டதிபர்களோக்கூடி இருக்கினும் சில பாவர்கூட வல்லது நோக்கினும் சுக்கிரனுக்கு இரண்டாமிடமல்லது அதிபதியுடன் பாவர் சுபர் கலந்திருக்கினும் பாவராயிருக்கினும் சிலசோதிஷம் முதலிய அதிக பிரியமும் பலநூற்களேயும் பாற்பன்றோர இடமில்லான் கற்றறிந்தவரை பெலமுடையவன் வாக்குபலிதஞனவன் இவருடன் நீசம் பகை பெற்றவரிருக்கினும் பாவர்கூடினும் வாக்குபலிதமின்றி அவ் வாக்குடையவன் சிங்கம் கடகத்தில் சூரியன் புதன் சுக்கிரனிருக்கில் அரசவித்தை வாக்குடையவஞகினும் அதிகவிருத்தி இல்லான் கன்னி முதலிய சுபக்ஷேத்திரத்திலும் மிதுனம் துலாம் விருஷபம் தனுசு இவையில் வாழில் சுதேசபாஷையில்விவேக வாக்கு விசேஷமுடையவன் மகரகும்பமாஞலும் இப்படியே தமிழ் முதலிய வித்துவத்திறமையாகினும் சனி முதலிய பாவர் ஸ்திரராசியிலிருந்து நோக்கமாகில் அப்போதைக்கப்போ கொஞ்சமாதி சமயத்திலுண்டாகும் குரு கேந்திரத்திலிருக்கில் வாக்கினுல் சமயதத்தில் செயிப்பனென் றறியவேண்டியது.

பாவர் துலாவிலாவது சுக்கிரனுடனே சனி முதலிய பாவர் வாழில் வாய் நாற்றமுடையவன்யென்று அரியவேண்டியது. சூரியனுடன் சுக்கிரனுவது கன்னியிலாவது லின்ருலும் கணிதம் முதலிய சோதிடப்பிரியஞகியும் இராச வித்தை வல்லபஞகியும் திடீரென்ற சொற்பொருக்காத வாக்கு படபடப் புடையவஞவன் முன்கோபி பின் சாந்தஞகி தானே வருத்தமடைவனென் றறியவேண்டியது.

சகோதிரபாவபலன்கள்

குசன் சுக்ஷேத்திர உச்சஞகி கேந்திரகோணத்தில் சுபக்ஷேத்திரங்களில் இருக்கினும் அல்லது குசனுக்கு மூன்றுபதினென்றிலும் ரவிகுரு முதலியோரான சுபரிருக்கினும் அவ்விடத்ததிபன் சென்மலக்கின கேந்திரத்திலாவது சந்திர கேந்திரத்தில் சுபருடன்கூடினும் விருச்சிக மகரமிலைகளில் சூரியன் குசன் குரு இவ்வித புருஷகிரகமிருக்கினும் ஆண்சந்ததி அதிகமுடைய சகோதிரனென்றும் அவ்வித கணக்கிற்குறைந்த பெண்சந்ததி யென்றும் சுக்ஷேத்திர உச்ச கேந்திரகோணத்தில் இருக்கினும் சந்திர வசாதாவது

அவ்வித பெலன்பெற்றிலும் (சு-க்) குள் மேற்கூறிய புருஷசந்ததி விருத்தி யுடையவனென்றும் சுக்ஷேத்திர உச்சம் கேந்திரகோணமாகில் பின்சகோதிரர் கள் அதிக பிரபல யோகமுடையவர்களென்றும் பெண்சந்ததி ஒன்று முதலா கிய அற்பசந்ததி யுடையவனென்றும் சனி குசன் கடகம் முதலிய இடத்தில் குசனிருக்கில் பிறந்த சகோதிரர்களிலும் முன்னோர் சாதகனுக்குக் குறைவான யோகமுடையவர்களென்றும் கேந்திரகோணத்திலும் சந்திரன் பூர்வபக்ஷஞ்ச வலுத்து குரு கேந்திரமேரியிருக்கில் சாதகனைவிட அதிக யோகமுடையவர்க ளென்றும் மிகுதியான பிறபல ஈர்த்தியுடையவர்களென்றும் குசன் பெல ஹீனஞ்சி கடகஞ் சிங்கம் மேஷம் இவைகளினின்றிலும் சனி முதலிய பாம் பைக்கூடினும் சுபர் சம்பந்த திருஷ்டி இன்றியும் சந்திரவசாதுமரைந்து அபெலர்களால் பசை நீசகிரகத்திலும் ஸ்திரவிராசிகளிலிருக்கில் சகோதிர மில்லான்யென்றும் விருச்சிகம் கடகம்மகரம் குசனுக்கு மூன்று திபதினின்ற வீட்டதிபன் இவ்விதம் பகைநீசவிராசிகளில் அசுபகிரத்துடன் சனி முதலி யோர் கூடினிற்கினும் பிறந்தவனுக்கு சுபர் சேரவாவது நோக்கமில்லாமலாவ திருக்கில் சகோதிரமானது கிடையாதென்றும் இரு பாபமத்தியில் ஓர் சுபர் குரு நீங்கியவர்களிலிருக்கில் பிரந்த சாதகன் சகோதிரங்கள் மரித்துவிடும் யென்றும் அடுத்த சந்ததி நிலையாது யென்றும் குசன் பாவசேட்த்திரமாகிய சனி ரவி பாம்பு வீட்டில் ஓர் பாவகர்களைக் கூடினலும் தனித்தாலும் பிரந்த வன் அடுத்த சகோதிரம் போய்விடுமென்றும்.

குசன் புதன் ரவி முதலியோரைக்கூடாமல் தனித்து ரவி சனி க்ஷேத் திரத்திலிருக்கினும் சந்திரனுக்கு மறைவிடத்தில் வாழினும் பகையோரை நோக்காமலும் குரு முதலிய சுப திருஷ்டியுடனும் குரு முதலிய சுபர்மூன் றைந்திலிருந்து பாவர் ஒருவரைக் கூடினுமல்லது சுபர்நோக்கினும் குசனுக்கு மூன்றுமிடத்திதிபன் சுபக்ஷேத்திர உச்சமல்லது கேந்திரகோணத்திலிருக்கி னும் பாவக்ஷேத்திர மில்லாமலும் பாபர் பார்க்காமல் அல்லது சேராமலிருக்கி லும் பகினென்றக்திபன் பஞ்சமிக்குள்ளடங்கிய சந்திரன் பூர்வபட்சனுகி கேந்திரகோணஞ் சுபர் வீட்டிலும் சந்த்ரனுக்கும் கடகத்துக்கு மிரு பக்கங் களிலும் பாவரின்றி இருக்கில் (சு-க்கு) மேலாகிய சந்ததியுடன் சகோதிர விருத்தியுடையவனென்று பிதாவுக்கு மரு மனைவி வம்சஸ்தனென்றும் மேற் கூறிய சுபரிருக்கு மிடங்களில் சுபரின்றி குசன் சனி முதலியவரிருக்கினும் விருச்சிக கேதுவுடன் ஓர் சபரும் குசன் பார்க்கினும் தக்கையின் மருதார வம்சனிவடனுடன் சந்ததி (உ-ம்) சுக்ரன் குசனுக்கு (கூ, டு-ல்) பெலத் துடனிருக்கில் பெண்சந்ததி யல்பமானவை விருத்தியென்றும் சந்திர கோணமாய் விருச்சிகமும் சந்திரலக்னுதிபன் சுபனுகிய ஸ்தானத்திலும் குசனுக்கு வைந்தாமதிபனும் அவனுதிபெலத்துடன் நோக்கினும் பின்னும் பிரபல சகோதிரமானது பிதாவின் மருதாரவம்சர்களாகி (கூ-க்கு) மேற்பட்ட மொத்த சந்ததி (சு-க்கு) மேல் ஸ்திரீ புருஷர்கள் (கஉ-க்) குள்பட்டவை வறையில் பிறிதியுண்டென்றும் குசன் மூன்றிலிருக்கினும் நோக்கினும்

சகோதிர ஒற்றுமையடையான் குசனுக்கு மூன்றுதிபன் சுகேஷத்திர உச்சம் பகைவீடில்லாத சுபர் வீட்டிலிருக்கினும் வேறு பாவரைக் கூடாமலும் தனக் குறிய இஷ்டருடனிருக்கில் அத்தியந்த இஷ்டத்துடன் சகோதிரர்கள் வாழ் வார்களென்றும் புதனுகி ரவியுடன் சொகேஷத்திருடனுடன் கூடி (ரு கு. அ, கூ-ல்) மறைந்தாலும் குரு முதலிய சுபர் நோக்கில் (ரு) வகை சகோதிர விருத்தியில் (உ) பேர்கள்மாத்திரம் அன்யோன்ய அதிக இஷ்டத்துடன் சகோதிர பிரபலயோகமும் குசனுக்கு மூன்றும் விருச்சிகமிவைகளையும் குச னுக்குப் பதினொன்று கடகமிவைகளையும் சனிகுசன் முதலியவர்கள் அபெல ருகியும் பகை நீசர்களாகியும் நோக்கமல்லது சேரினும் (உ) பாவர் நோக்க மல்லது சேரினும் சுபரிருந்து பாய பெலஞ் சாஸ்தியாகினும் பிரந்த சகோ திரன் சிலகாள்வறை விருத்தியாக இருந்தும் அதிமேதாவி புத்திசாலியாகி னும் ரூபவந்தனுகிலும் குடும்ப விருத்தியினின்றும் பாலியத்திலேயே மரண மும் தப்பினுல் களத்திர புத்திரர்களையிழந்தும் தேககிருசத்துவமும் ரோகி யாகியும் இவ்வன வயதினுள் சாதகனிருக்கவே மரணமாகி அவ்வித துக்கங் களை சாதகன் அனுபவிப்பனென்றும்.

குசன் சுகேஷத்திர உச்ச கேந்திரமாகிய துலாம் கன்னி மிதுனம் மகரம் தனுசு விருஷபம் மீனமிவைகளில் நின்றுலும் கடகத்திலின்றுலும் குரு சுக்கிரர் முதலிய பூரண சந்திரன் இவர்களின திருஷ்டியல்லது கூடினும் கேந்திர கோணத்திலிருந்தாலும் சனி குசன் முதலியோர் பெலத்துடன் சேரி னும் ரவி புதன் கூடினும் (கசு-க்கு) மேற்பட்ட சகோதிர சந்ததிகளையும் தகப்பன் பல மனைவியையும் புணருவனென்றும்

இதில் இரண்டு வீரோதி சேரினும் சிங்கம் விருச்சிகம் மேஷம் மிவையி லும் மகரத்திலும் குசனிருக்கினும் குசகேந்திரமாகியும் லக்கினத்துக்கு மூன்றைந்து பதினொன்றிடங்களாகிய குருவீட்டில் சுபராகிய பூர்ணசந்திரன் சுக்கிரனிவர்களிருக்கினும் ஒரு பாவர் கூடினுமல்லது தனித்தாலும் (நி-க்கு) மேலாகிய (அ-க்குள்) பரஸ்திறீ புருஷசகோதிர சந்ததி பிதாவினுலுண்டாக கப்படுமென்றும் இவ்வித இராசிளில் அசுபரே நின்று (உ) முதலிய பாவரு டன் ஓர் சுபன் கூடில் அல்பமான (உ, கூ-ச்) குள்ளடங்கிய சகோதிர சந் ததியும் சம சுபரிருக்குமாகில் (சு-க்கு) மேலபன சகோதிர சந்ததியும் (ரு) முதலிய அதிக பாவருடன் ஒரிரண்டடங்கிய சுபர் கூடில் ஒரே சந்ததிமுதல் இரண்டுக்குள்பட்டவையென்றுஞ் சுப பெலனின்றி பாபபெலனதிகமாகில் சகோதிரமே கிடையாதென்றும் ரவி முதலிய பாவர்பகை கிரகத்தோடு சனி குசன் கூடி பாம்புஞேக்கத்துடன் (சுப விஷயமான சம்பந்தம் பாற்வையின்றி குசனீங்கியபாவர் விருச்சிக மகரம் இவைகளிலும் குசன்கூடியபாவர் கடகம் துலாம் கன்னி மேஷமிவையினிற்கினும் பாம்பைகூடினும் உடன்பிரப்பே கிடையாதென்றும் அசுப பெலத்துடன் துலாம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் மீனம் விருஷபம் மிதுனமிவைகளுக்குள் இருக்கில் (உ) முதலிய

அற்ப சகோதிர விற்கியுடையவனென்றும் குரு முதலிய சுபர் நோக்குமாகில் விருத்தியான அந்தியவறை அவ்வித அல்ப சகோதிரமாவது லீலைக்கு மென்றும் பாப ர்லத்துடனே சேர்ந்திருக்கிதும் நோக்கிதும் சகோதிரமிரு தென்றும் சுக்கிரன் சந்திரன் சேரினும் நோக்கினும் பெண்ணெழிய புருவ னிரு தென்றம் குரன் ரவி குரு முதலிய சுபர் நோக்கமாவதல்லது கூடில் ஆனேதீர்க்க மல்பமென்றும் இவர்கள் சுக்ஷேத்திர கேந்திரமாகில் பெலத் துடனிருக்கில் யேராளமான பிரபல சகோதிரமதிகமும் யோக பிரபல மல்பமாகவுஞ் செனிப்பார்களென்றுங் கூறப்படுமென்றறிந்து கூறல்வேண்டி யது.

சுக்கிரன் சுட்சேத்திர உச்சகேந்திரகோணத்திலுஞ் சுபர்வீடாகி குசன் மூன்று ஐந்து முதலிய இடத்தினிற்கினும் நோக்கினும் சங்கீத சாஸ்திர லீலாவினோதப் பிரியனுகியும் பிரசங்கியாகியும் பலமாதர் போகமு குசன் பெலத்துடன் சொட்சேத்திர உச்சத்தில் வாழில் விதவைமாதரைப் புணருவ னென்றும் கேதுவிருக்கினு மவ்விதியே வலுவிற் போகமும் மேற்படி கேது நோக்கினும் அவ்வித போகமும் கடகம் மிதுன தனுசு தலாம் மீன கன்னி இவையில் குசனும் சுக்கிரன் முன் கூறிய இடங்களிலேயே இருக்கில் பரஸ்திரீ போகனுகியும் மங்கலஸ்திரீ முதற்போகனும் சுட்சேத்திரம் கடகத் தில் தனுசு கன்னி மீனமிவையில் குசனுகினும் குசன் பக்கத்திலாவது லக் கினத்தின் பக்கத்திலாவது குசனேயாவது விருச்சிகத்தையாவது சுக்கிரனே யாவது சுக்கிரனுக்கு மூன்றுமிடத்தையாவது சனி முதலியோர் நோக்கினு மிருக்கினும் அவையவக் குறைவு அங்க அடையாளமுள்ள உயர்குலப் பெண்ணைப் புணருவன் என்றும் மற்றைய இராசிகளில் குரு முதலிய சுபரு டன் சுக்கிரனைக்கூடி இருக்கின் உயர்குலப்பெண்ணைப் புணருவன் என்றும் அவையில் சனி ரவி முதலிய பாம்பாகிய பாவறைக் கூடவாவது அல்லது நோக்கினும் தான் குலஹீனம் பெண்களரூபியைப் புணருவனென்றும் அதிக மோகாக்கிரந்தனுகி வாழுவான்யென்றும்.

பாபபெலத்துடன் குசன் இருக்கினும் னியல்லது சனிபோலொற்ற பாவர் மூன்றைந்தெட்டி சுக்கிரனுக்கு அவ்வித இராசியில் அல்லது கேந்திர மானதினின்றுலும் பாவராகிய சனி முதலியோர்கள் சுக்கிரனைப் பார்த்தா லும் குசனுக்கு அஷ்டமாதிபதி யிருந்த வீட்டானை பார்த்தாலும் பெண் களால் மிகவும் அவுமானத்தையும் துன்பத்தையும் போகத்தினு லவுமானத்தை யும் அடைந்து மிகவும் பலவித கஷ்ட பலன்களையடைவானென்றும் கூறப் படுமென்றும் அறியவேண்டியது.

குசன் சந்திரன் அவர்கள் நின்ற இடத்திற்பனுடன் விருச்சிக கடக மிவையில் சுபாசுப பெலக்கிரகயெண் கூட்டி குசன் சுபாசுப யெண்ணில் கொடுத்த சேஷம் சகோதிரம் நீற்கம் பெண்கிரகம் ஆண்கிரகங்கண்டு சொல்லவேண்டியது.

நான்காம்பாவம் வாகனம் பூமி வியாபாரம் வித்தை இவைகளும் மாதுரு முதலிய வாகன பாவங்கள் கூறுவோமாக

குரு சந்திரனையும் சந்திரனுக்கு நாலாமதிபனையுங்கொண்டும் தனுசு விராசியையுங்கண்டு மாதுரு பலனுறைக்கவேண்டியது.

குரு லின்ற விராசிக்கதிபனின்ற கோள்சனையுங்கொண்டு சொல்லும் விதியுமுண்டு.

கண்டககேந்திரமான (சு. எ, ம) ஆகிய இடங்கள் தவிர்ந்த வீட்டுகளில் சந்திரன் விருச்சிகமேஷம் நீங்கிய இடத்தினின்றும் குரு முதலிய சுபர்நோக்கம் இவ்வித இராசிகளாகிய கண்டககேந்திரங்களில் குருவும் இருந்து சந்திரன் சுக்கிரன் கனனி மீனத்தினின்றாலும் சந்திரனுக்கு இரு பக்கத்திலும் பாவருகிய சனி பாம்பு முதலியோரில்லாமலும் உச்ச சொட் சேத்திரமல்லது கன்னியில் குருலிற்கினும் நட்பினின்றாலும் சந்திரனுக்கு நாலாமதிபனின்ற இடத்ததிபனின்ற வதிபனோடு சுட்சேத்திரத்திலிருக்கினும் குரு முதலிய சுபர்னோக்கினும் விருத்தாவஸ்தையில் மாதுருமரணமும் சுக்கிர னீசமாகினும் மரைவிடங் குருவும் திரவிராசியில் இருக்கினும் யௌவனத் தில் தாய் கருமமும் சகடாகிய சந்திரன் கேந்திர கோணாதிபதியைக் கூடி னும் னோக்கினும் அவ்வீட்டதிபன் அவர்களின் கேந்திரமாயினும் (சு, எ ல்) பாம்பு அல்லது சனி இருக்கினுமாதாரோகியும் குருகேந்திரத்தில் வாழில் வயது தீர்க்கமும் கவுமாரவஸ்தையில் தாய் மரணம் கேந்திரகோணமில்லாத யிடத்தில் பாவர் வீட்டில் குரு பாம்பு முதலிய பாவறைக்கூடினும் சந்திர கோணனுவும் சந்திர லக்கினுதிபன் பாவர்வீட்டில் பாவருடன் கூடினும் உபயராசியில் சந்திரனிருக்கினும் முன் அல்லது பின்புரத்தில் பிரபலபாவர் நீசம் பெற்றவரிருக்கினும் பாலியாவஸ்தையில் தாய்போமென்றும் தகப்ப னுக்கு மருதாரனுகியும் குருவுடனும் சந்திரனுக்கு இரு பக்கமும் சனி பாம்பு முதலிய குசன் பகை நீசவீடாகியும் விருச்சிகம் மேஷம் சிங்கம் தனுசு இவை யில் சந்திரன் கூஷ்ணகெதியுடனும் இருக்கினும் சனி முதலிய பாவர் கூடி னும் சுபர்பெல திருஷ்டி இல்லாமல் குரு பகை நீசஸ்திர சரவிராசியில் சுடக னீங்கிய இடத்தில் இருக்கிறும் தாய் சனனத்துடன் பாலியத்திலேயே மரணமாகுமென்றும் அமாவாசையாய் பாவறைக்கூடி சிங்க விருச்சிகம் மேஷம் இவைகளில் சனியுடன் கூடி யல்ல[illegible]னி பாம்பு முதலியோர் அவ ரிருபக்கத்திலுமல்லது ஓர்புரத்திலாவது நோக்கியாவதிருந்தாலும் சுக்கிரன் பெலமற்று நீசம் பகைபெரிறும் குரு குசக்ஷேத்திரங்களிலும் பாம்பானவரை கூடிறும் தாய் பாலியத்திலேயே மரணமாகிவிடுமென்றும் சந்திரன் மறைவிட மல்லது பகை நீச இடத்தில் ரவி புதன் சனி முதலிய பாம்பையும் குசன் முதலி யோரைக் கூடிறுந் தாய் பாலியத்திலேயே மரணமாவாளென்றும் குரு சந்தி ரன் சுக்கிரன் குசன் சனி ரவி வீட்டில் பகை நீசக்கோளாகி இரு பக்கத்தி

லும் பாவரே இருந்தும் நான்கில் குசன் சனி யல்லது பாம்பு வாழினும் ஜனனத்துடன் தாய்போமென்றும் சந்திரனுக்கு நாலுக்குடையவனின்ற வீட்டதிபன் வகை நீசமுதலிய பாவர்வீட்டில் சனிபாம்பு குசன் ரவி முதலிய பேரும் பாவரைக்கூடி சந்திரனுக்கு (அ-ல்) பாவரிருக்கினும் நோக்கினும் சந்திரனுக்கு (உ, கூ-ல்) முதலிய பாவரும் விருச்சிகம் தனுசு மகரமிவையில் சனி பாம்பு முதலிய பாவரிருக்கினும் சாதகனுடையதாய் புத்திரன்முதம் பாருமல் மரணமாவனென்றும் தகப்பன் மருதாரனுகியும் உபயவிராசியில் அசுபரும் ஸ்திரவிராசியில் சந்திரனும் கேந்திரகோணக் கோளேக்கூடி குரு கன்னி மகரம் கடகம் விருஷப மிதுனமிவையிலும் சூரியன் திரிகோணத்தி லிருக்கில் தகப்பன் மருதாரத்தை யுடையவனென்றும் குரு கேந்திரதிரி கோணத்திலும் சந்திரன் கடகங் கன்னி விருஷபம் துலாம் இவைகளிலிருக் கில் அசுபரான பாவர்கள் பார்த்து சேராதிருக்கினும் தனுசு சந்திரனுக்கு நாலாதிபனின்ற வீட்டதிபன் பெலத்துடன் கேந்திரகோண சுபக்ஷேத்திரம் அல்லது தனக்கு மித்துரு கிரகவாசனுக வாழில் விருத்தாவஸ்தையில் தாய் மரணமும் இதில் சந்திரனுக்கு (ஐ. ஔ க்) குடையவன் சனி முதலிய பாவராகி னும் அவ்விராசிகளில் பாவர்தின்னும் பகை நீசக்கோளாய் சேர்ந்தாலும் மக னுடைய மரணத்தின்பின் தாய் மரணமடைவனென்றும் புத்திரரிருக்கினும் கருமபாத்தியதை யுடையர்களென்றும் குரு அல்லது சந்திரன் கேந்திர கோணத்திலும் இதிலொருவர் (ரு, சு, அ, கூ-லும்) பகைவருடன் பாபக்ஷேத் திரத்திலும் பாவர் தனுசு சந்திரனுக்கு நாலாம்வீட்டதிபன் னின்ற இடத்தி பதுடன்கூடி பெலமற்றிருக்கில் எவ்வனத்திலேயே தாய் மரணமாவனென் றும் மேற்கூறியவர் பகை நீசபாவருடன் கூடாமலும் பாவர்வீட்டிலின்றியும் தனித்திருந்தாலுஞ் சுபரைக் கூடினாலும் வயோதிகத்தில் தாய்மரணமும் உண்டாகு மென்றறியவேண்டியது.

சந்திரனுக்கு நாலு யேழுகளில் சனி பாம்பு குசனிருக்குமாயினும் அவ்வதி பன் பெலமற்று கெட்டுப்போனாலும் பாலியத்திலேயே தாய் மரணமும் சுபரே சுபர்நோக்கில் யெவ்வனத்திற்குள் தாய் மரணமும் சுபரேபெலத்து நிற்கில் வார்த்தீகதிசையில் தாய்மரணமும் கூறப்படும்.

தனுசுவிலும் சனியும் பாவர்வீட்டிலாவது பாவராவதிருந்து பகை நீச இடத்தில் கிரகமாரலாய்ப் பகைவர் இருக்கினுஞ் சிங்கம் மேஷம் விருச்சிகம் தனுசு மகரம் இவைகளிற் குசன் சனி முதலிய ரவி இருந்தாலும் சந்திரனுக்கு (டு) மிடத்ததிபன் புதன் சனியாகினும் பாம்பு பார்த்தாலும் அல்லது சந்திரன் ஷை ஸ்தானுதிபதிகளேப் பார்க்கினும் கடகத்தில் குசனுகினும் தனுவில் ராகு கேதுவாகினும் குருவுடனே பாவர்சேர்ந்தாலும் பகை பாவக்ஷேத்திரவாசனுகி சந்திரனிருந்து பகை முதலிய பாவரை சந்திரன் கும்பம் சிங்கம் மேஷங் கடகத்தில் விருச்சிகத்திலிருந்து கூடினும் தாய்வழி நாசமாகுமென்றும் பல வாராய் சிதருமென்றும் அரியவேண்டியது.

மாதுருபாவகெணிதம் அறியவும்

சந்திரனுடனும் குருவுடனும் சந்திரனுக்கு நாலாமதிபனின்ற வீட்டதிப னுடனும் குருவின்ற நாலாமதிபனின்ற வீட்டதிபனுடனும் சுதசுவிலும் உறிய கிரக சுபாசுபபெலன்படிக் குறிய எண்களை ஒன்றுசேர்த்து அவ்விராசியெண் ணிற் பெருக்கிய துகையை (கூ-ல்) கழித்தசேஷம் திசைபிலும் இவை (டூ-ல்) பெருக்கி (கூ ல்) கழித்துவந்த சேஷம் புக்தியிலும் தாய் மாரகமென்றும் கண்டு கூறல்வேண்டும்.

வித்தியாபலன்

குரு சூரியன் சந்திரன் சனி சுகேஷத்திரவீட்டில் இருந்தும் கேந்திர கோண நட்பு கேஷத்திரமாகிலும் புதன் ரவி கேந்திரகோணத்தில் குரு பிரபல பெலத்துடனிருக்கிலும் அசுபரைக்கூடாமலும் பகை நீசமின்றி இருக் கினும் ராசபாஷையுடன் இரெண்டுவித பாஷையில் வல்லபனுகியுந் தன் சுய வித்தையிலும் பிரபல்வானுவன் இவர்களுடன் பாவிகள் இருக்கினும் நோக்க லும் வித்தை அறைகுறையாகுமென்றும் பலவித வித்தையிலு முடிவுபெரு னென்றும் புதனவீடாகிய கனனி துலாம் மிதுனம் கடகந் தனுசு விருச்சிகம் இவைகளிலிருக்கிலும் அவ்வதிபர்களைக் கூடிலும் சுயபாஷை அலங்காரஞ் சோதிடம் முதலிய வயித்திய நூலாசரிப்பனென்றும் இவ்வித இராசியில் எதிலாவது சுக்கிரன் புதனிருக்கில் கணிதம் கதை புராணுதி நூலரிவனென் றும் சனி முதலிய பாம்பாகிய குரு ரவி கேந்திரமாகில் அரசஷ்தை தீச பாஷைகள் புரிவனென்றும் சனி புதன் ஸ்திரவிராசியிலும் குரு புதன் வீட்டிலும் சந்திரனுக்கும் புதனுக்கும் நாலாதிபன் புதனுடன்கூடினும் நோக்கி லும் கணிதநூன்முறையுள்ள சோதிடாதி ஞானவானென்றும் மிகுந்த கீர்த்தி மூர்த்திகளைபெறறு வாழ்வன் யென்றும்.

குரு (கூ, சு, அ, கஉ) இவ்வித இடங்களிலாவது பகை நீசம் முதலிய ஸ்தானங்களிலும் புதன் பெலமற்று பாபர் பகையோருடன் இருக்கில் வித்ஸ்த யல்லனென்றும் (உ, ச) புதனும் புதனுக்கு (உ, ச) லிலும் சனி பாம்பு முத லிய பாவரிருக்கில் வித்தையில்லானென்றுஞ் சுபர்நோக்கில் அல்பவித்தை யுடையவனென்றும் லக்கினத்துக்கு (உ, ச-க்கு) உடையவன் புதனுடைய வீட்டதிபன் புதனுக்கு (உ, ச-க்கு) அதிபன் அவ்வீட்டில் சுபராகிற் குரு ரவி மதி இவரிருக்கினும் நோக்கினும் கேந்திரகோண சுகேஷத்திர உச்ச நட்பு இடங்களி லின்றாலும் அல்லது குருவுக்கு (உ, ச) வீட்டதிபன் கேந்திர கோணபெலவானுகியும் சுபனுகியும் பெலத்து நட்பு முதலிய ஸ்தானங்களில் நின்றாலும் ராசவித்தை யுள்ளவனென்றும் அவ்விதவதிபர்கள் சென்மலக்கின வசாதாவது புதனுக்காவது (கூ, சு-ல்) இருக்கினும் பெலத்தவிராசியாகிதும் சனி குருவீட்டில் அல்லது மேஷம் மிதுனம் சிங்கம் துலாம் விருடபத்தில் நிற்கினும் இராசவித்தையுடன் சுயவித்தையுலும் மத்திமமேன்மை யடைவ

னென்று மிகவும் விருத்தியுடன் வாழ்வனென்றும் கூறப்படும் இதில் கொடு மையான பாபிகள் பகை நீசத்துடனிருக்கிறும் நோக்கிறும் வித்தை விருத்தி யடையாவென்றுங் கூறப்படும்.

வாகனபலன்

குருபெலனுகி கேந்திரகோணத்திலும் தநுசு சுக்கிரனுக்கு நாலு இவை களில் சுபராவதல்லது அவ்வீட்டதிபர் சுபக்ஷேத்திரத்தில் பெலவானுகியும் இருக்கில் யெப்பொழுதும் பிரபலவாகன முடையவனென்றும் சுக்கிரன் தலாம் மீனம் தநுசு விருடபம் மிதுனமிவைகளிலும் குரு தநுசு கன்னி மகரம் மீனம் கடகம் மிதுனம் விருடபம் சிங்கமாயிறும் குருவுக்கு நாலாமதி பநும் நின்றவிடத்ததிபதும் சுபக்ஷேத்திரத்திலும் பகை நீசமின்றி கேந்திர கோணத்திலிருக்கிறும் நோக்கிறும் ஆந்தோளி முதலிய சகல வாகனமும் ரத கச துரகமும் உடையவனுன யோகனுவன் இவருடன் சனியல்லது ரவி குசன் பாம்பு இவரிலெவர் கூடிறும் குதிரை முதலிய வாகனமுடையவன் மூன்று முதலிய பாவராகில் வாகனமில்லான் சுக்கிரனுக்கு நான்கில் சனி அல்லது பாம்பு குசனிருக்கிறும் குருவுக்கு நாலாமதிபனின்ற இடத்ததிப நுடன் இருபாவராகிய குசன் பாம்பு கூடிறும் மாடு எருமை முதலிய விகார வாகனமும மூதேவிவாழும் வாகனமுடையவன் சுக்ரன் குரு உச்ச சொக்ஷேத் திர கேந்திரகோண நட்பாகி சுபக்ஷேத்திரத்திலும் பலத்து ஒருபாவரைக் கூடிறும் அசுவாதி வாகனச சிறப்புள்ளவன் குருவுடனல்லது தநுசு சுக்கிர நுடனல்லது சுக்கிரனுக்கு நாலாதிபநுடன் பாம்பு முதலிய கடுங்கோள் கூடி நும் ஷ ஸ்தானங்களிலிருக்கினும் சுக்கிரன் அல்லது குரு வலுத்து ஓர் பாவ ருடனுவது தநுசு முதலிய இடத்தில் பாம்பு முதலிய ஓர் பாவர் நின்றாலும் பார்த்தாலும் சுக்கிரன் பகை நீசம்பெற்று கேந்திரத்திலிருக்கினும் குரு கும்பம் கன்னி மிதுனம் விருச்சிகம் விருடபம் சிங்கத்தினின்றாலும் எவ்வளவுத் தன வந்தனுகினும் சிலகாள் வாகனமின்றியும் அப்படி வாகனமுண்டானபோதிலும் நஷ்டமும் சுயஜ்ஞரமில்லாதவனுகியும் பரவாகன சஞ்சாரியாகிய பின் சுய மான வாகனஞ் செய்வனென்றும் பின் விருத்தியை அடையுமென்றுங் கண் டறியவேண்டியது.

குரு சுக்கிரன் பகை நீச அசுபக்ஷேத்திரத்தில் பாவருடன்கூடியும் தநுசு சுக்கிரனுக்கு (ச) மிடத்ததிபதி பலமற்றிருக்கினும் அவ்வித இராசிகளில் பாம்பு முதலிய சனி ரவியிருக்கினும் புதன்கூடினும் அல்லது தனித்தனி நின்றாலும் வாகனமின்றி பாதசாரியாகி சஞ்சரித்து வாழ்வனென்று அறிய வேண்டியது.

கிரக பூமிபலன்

சுக்கிரன் குரு பெலத்துங் கேந்திரகோணவிராசியில் பகை நீசமின்றியும் புதன் பூரணசந்திரனுங் கூடினும் நோக்கிறும் தநுசுவிலும் குசநும் சுபசம்

மந்த பெலத்துடனும் குசன் கேந்திரகோணத்திலுமிருக்கில் சாதகனுக்கு அநேக வித பூமிகள் கட்டடங்களுடனும் பிரபலமாக வாழப்படும் நெட்டியான அநேக வித விநோதகட்டடங்களும் உண்டாகும் பிரபல யோகவானுவனென்றும் சுக்கிரனுக்கு நாலாமதிபதும் அவன்நின்ற வீட்டதிபதும் குருவுக்கு நான்காம் வீட்டதிபனின்ற அதிபதும் இவ்வித பலன் பெற்றிருக்கிதும் கேந்திரகோணத்தில் வாழினும் சுபறையும் மித்துருவையுங் கூடியிருக்கினும் பிரபல கட்டடங்கள் அநேகத்துடன் மாடமாளிகை ப்ராசாதமுண்டாகும் இவருடனே சூரியன் கூடியாவது மேற்கண்ட ஸ்தானத்திலாவது பெலத்துடனிருக்கில் பூர்வார்ஜித கட்டிடங்கள் யென்றும் சந்திரன் புதன் சுக்கிரனுகி ஸ்திரீவகை மாதிருவகை மூலிய கட்டட பிரபலமும் சனி மூதலிய குரு குசனுகில் சுயமான கட்டடம் பூமி மிகுந்த பிரபலமும் இவருடன் பாபர் வாழினும் பகை நீசக்கோளாலும் ஸ்தானத்திற் பாம்பு முதலிய பாவரிருக்கினும் குருமறைவல்லது உபயத்தில் இருக்கினும் கட்டடமிருந்தும் சுயகிரகவாசஞ் செய்யானென்றுங் குரு முதலியோருடன் பாம்பு முதலிய பாவரிருக்கினும் ஸ்திரமுபயத்திலும் சனி குசன் புதன் வீட்டில் இருக்கினும் சுக்கிரன் பகைநீசனுகிக் கேந்திரத்தினின்றும் பழைய கட்டிடத்தை தள்ளி நூதன கட்டிடமுஞ் செய்வனென்றும் அவைகளால் மிகுந்த கீர்த்திமூர்த்திகளும் சுக்ரனுக்கு நாலாகிபனுடனும் சுக்ரன் குரு சனுசு இவைகளில் பாம்புமுதலிய கோளுங் (சு, அ, ஊ இவைகளிலும் பகைநீச விடங்களிலும் மேலே கண்ட கிரகங்களிருக்கில் பூர்வ கிரகாதிகள் முதற்கோண்டு நஷ்டமும் விருச்சிகம் மகரம் இவையிலும் குரு சுக்கிரனுக்கு (உ, ஊ-லும்) பாவர்கள் நெருங்கி அந்த ஸ்தானங்களிலும் பாப பெலனதிகமாகி ஸ்தானுகிபர்களும் வலுவின்றி இருக்கில் கிரகம் பூமி லீகேஷ்பம் கிடையாதென்றும் இதில் ஒர் சுபர்கூடவாவது ஸ்தானத்திலாவதிருக்கில் அல்ப கஷ்டங்களும் இரெண்டு முதலிய சுபர்கள் வாழினும் மேன்மையுடைய கட்டவிருத்திகளும் பாவர்களதிகமாகில் கட்டடமின்றி அயல் கிரகவாசலுஞ் செய்வனென்றும் சுபர் திருஷ்டி இருப்பு பெலமுண்டாகில் பூர்வமில்லாமல் பின் இவனுல் மிகவும் பிறபல கட்டட விருத்திகளுடன் வாழ்வனென்றிய வேண்டியது.

புத்திர பாவபலன்

சனி புசன் வீட்டிலாவது சுக்ஷேத்திரத்திலாவது மேஷம் சிங்கம் இவைகளிலிருந்து குரு முதலாகிய சுபர்களும் சுக்கிரனும் புதன் வீட்டிலாவது சனி வீட்டிலாவது மறைவுற்ற இராசியிலிருக்கினும் குரு சுக்கிரன் பகை நீசம் பெற்றும் பாம்புமுதலிய சனிபுசனைக் கூடினும் மிதுனதனுவில் பாவரிருக்கினும் புத்திரனே கிடையாதென்றும் சுபர் திருஷ்டியாவது சேர்கையாவது சுபபெலத்துடனே சந்திரகேந்திரமாகி இருக்கில் அல்பமான யேகபுத்திரனென்றும் குரு முதலிய சுக்கிரன் அஸ்தங்கத தோஷமடைந்திருக்கினும் பகை நீச பெலத்தால் துலாம்மகரம் விருஷபம் இவைகளிலும் சனிக்கி (ஞ, சு, உ) இந்த இடங்களுக்குடையவனின்ற ஸ்தானம் புதன்சனி வீடாகியல்லது பகை நீசம்

பெரினும் புத்தியின்றி தெத்தலுகிவாழ்வனென்றும் குருவுக்கும் இம்முறையே பார்த்தரிந்து சொல்லவும் இவ்விதகிரகங்களில் குருமாத்திரம்வலுத்து சுப கேந்திரனுகி பாவர்சம்மந்தமின்றி இருக்கில் அல்பமான யேகபுத்திரத் தண் மையகாலத்திலுண்டாகுமென்றும் புத்திரசோகமடைவன் குசன் இராகு முத லிய கோள்மகரம் விருஷபம் துலாம் இவைகளிற்றனித்தாலும் அவ்வஸ்தானுதி பதியல்லது குரு சுக்கிரன் சனியைக்கூடினும் பிறந்திறக்குமென்றும் மிருத வந்தியை யென்ற தோஷமடையுமென்றும் சனி முதலானேர் பகை நீசவிடத் திலும் யவர்கேழில் சுக்கிரனல்லது சுபரிருக்கினும் சுக்கிரன் சுகேந்திர உச் சம் தனக்குறிய மித்துருகேந்திரமாகி கேந்திரகோணத்தி லின்றாலும் சந்திர னிவ்விதசம்மந்தமாகி யிருக்கினும் பெண் முன்சந்ததியும் விருத்தியும் புருஷ பிரசையாகின் உடன் மரணத்தையும் அடைந்துவரப்படுமென்று களத்திரம் பின்னவையாலும் மருதாரத்தாலும் புத்திரவிருத்தியடைவனென்று சளிகேந் திரகோணத்திலும் குரு சனியல்லது புதகேந்திரத்திலும் சனியை குரு நோக்கினுமல்லது சுக்கிரவியை சுக்கிரன்முதலிய கோள்கோக்கினும் குருகேந் திரகோணமல்லது சுகேந்திரம் நட்பாகிக் கும்ப முதலிய இடத்திலிருந்தும் சந்திரகேந்திரத்தில் சுக்கிரனிருக்கினும் சனி இராகு முதலிய பாம்பு பாவக் கோள்கள் தலவிலிருக்கினும் ரவி இருக்கினும் சாதகனுக்கு காலாதீத விவாக மனைவிக்கு புத்ரவிருத்தியல்பமுண்டென்றும் முன்பெண்சந்ததியடைவனென் றும் இத்துடன் குசனல்லது புதன்கூடி நிற்கினும் நோக்கினும் மருதாரவகை புத்ரருண்டு அல்பபுத்திரனுகிய யோகவானுங் கடையரிஷ்டிக்கப் படுவனென் றும் சாதகனுக்கு சனிவிருஷபம் மேஷம் கடகம் மிதுனம் சிங்கம் இவைகளில் நின்று அபெலனுகியும் மகரம் விருஷபம் இவைகளில் பாவராகிய பாம்பு முதலிய அசுபர்களிருக்கினும் நோக்கினும் சனிக்கி பஞ்சமாதிபன்நின்ற இடத் ததிபன் சுகேந்திர உச்சமல்லது கேந்திர கோணமாய் புதன சனி வீட்டினிற் கிதும் அகாலபுத்திரலாபமென்றும் சனி (அ, கு, கு) இவ்வித இடங்களிலிருக் கினும் நீசமுதலிய பெலக்குறைவுடன் சுக்கிரன் அல்லது குருவுக்குயேழா யிருக்கின் மருதாரவகையால் புத்திர விருத்தியுடையவனென்றும் அகால புத்திரலாபமும் அடைவனென்றும் கூறப்படும் இதில் குருவுடனல்லது (கு, கு) மிடங்களிலும் சனிநின்ற கி-க்குடையவனின்ற ராசிக்கி (கி, க) மிடங் களில் பாவரிருக்கினும் நோக்கினும் சூரியன் பாம்பு குசள் முதலியோரிருக்கி னும் சுபர்நோக்கமின்றி வாழிலும் அவ்வதிபர்கள் பகை நீசமுதலிய பாகத்தை யடைந்தாலும் புதன் சனிவீட்டில் புதன் சனியைக் கூடி புதன் சனி கூடினு லும் பாம்பு கூடினும் புத்திரனின்றி யடைவனென்றும் அவர்களுடன் சுப கேந்திரவாசனுகி குரு சுக்கிரன் முதலிய சுபர்கள் நோக்கினும் இருக்கினும் அல்ப புத்திரலாபமுடையவள் யென்றுஞ் சனி விருஷபம் கன்னி சிங்கம் துலாம் மகரம் கும்பம் இவைகளிலுந் தனுசுவிலும் இருந்து குரு முதலிய சுபர்கள் கூடினுஞ் சந்திர கேந்திரத்திலிருக்கினும் சூரியன் சுக்கிரன் சுகேந்தி ர உச்ச ஸ்தானத்திலாவது கேந்திர கோணத்தில் தனக்குறிய சுப

க்ஷேத்திரமல்லது மித்ருவுடனே கூடினிற்கினும் புத்திரர் வெகுவாய் பிர பலஸ்தர்களாகியும் அதிகவிருத்தியோடு வாழ்வர்களென்றும் பிரபல சன்மான பூஜிதயோகவான்களாகியும் வாழ்வார்கள் என்றும்

சனி குரு விருச்சிகம் மீனம் கும்பம் மேஷ மிதுன கடக மிவைகளில் பாவராகிய இராகு கேது குசனிவர்களைக் கூடினும் ரவி புதனைக் கூடினும் தனித்து னின்றாலும் மகரம் விருஷபம் மீனம் இவைகளில் புதன் சனிகூடி னும் தனித்து நிற்கினும் பாம்பு முதலிய கோள்கூடினும் அதில் சுபர்முதலிய பார்வைள் இல்லாமலுஞ் சேராமலும் புதள் நீசம் பகைக்ஷேத்திரத்தில் இவ் விதமிருக்கின் புத்திரரடையாவென்றும் மேற்கூறியவர்களுடனே சுபகேந் திரத் திரிகோணமாகி குரு ரவி குசன் கூடிய இவரிலொருவர் சுபபலத்துட நோக்கிதும் புதனட்பாகி உச்சஸ்தானத்தில் கேந்திரகோண பெலன் பெற்றி ருக்கில் சாதகருக்கு புத்திரவிருத்தி அல்பமாகிலும் (உ) முதலாகிய புத்திர யோகவானென்றும் அவ்வகைபுத்திர முதலியசுக சௌக்கியங்களும் மேன் பாடுகளும் அடைவனென்றும் கூறப்படும். இரண்டு முதலியசுபர்கள் சுப பெலத்துடன் மேன்மைபெற்றுக் கூடினலும் பார்த்தாலும் வெகுரகிய புத்திர கருமம் அடைவனென்றும் பாவரே பெலத்து நிற்கில் புத்திர விருத்திகளையே அடையப்படமாட்டானென்றும் கூறப்படுமென் றறியவேண்டியது.

இவ்வித மறிந்தபின் குருவுடனும் சனிவுடனும் மகரத்திலும் சுக்கிரனுட னும் விருஷபம் துலாத்திலும் சனிக்கி ஐந்தாதிபனின்ற வீட்டதிபனின்றவ னுடன் கூடிய கிரகயெண்களை சுபாசுப பெலன்படிக்கி ஆராய்ந்தெடுத்து அந் தந்த இராசி பெண்ணுற் பெருக்கி சனிக்கும் சுக்கிரனுக்கும் கூடிய பெலா பெலப்பாகப் படிக்கிக் கண்டித்த யெண்ணிற் கொடுத்த சேஷம் புத்திரலாப மென்றும் அதில் சுபபெலனுக்கு உரியவகை தீற்கமும் பெண்ணுன் கிரக யெண்படிக்கி கண்டாரிந்தவை ஸ்திரீ புருஷ தீற்சமும் கண்டறிந்து கூற வேண்டியது.

சத்துருரோகம்
இராஜதண்டனைதிபலன்கள் கூறுவாம்

சனி சுக்ஷேத்திர உச்சகேந்திரமாகியும் இராகு முதலியோருடன் மேஷம் விருச்சிகம் கடகத்திலிருக்கினும் குரு முதலியவர்கள் கும்பம் சிக்கம் விருச்சி கத்தில் குசனைக்கூடி நிற்கினும் சூரியன் பகையிடமல்லது நீசத்திலாவது கும்பம் மேஷம் துலாம் விருச்சிகத்திலிற்கினும் இவ்வித இடம் ஸ்தானங்களை பூரணசந்திர கேந்திரமுதலிவை இல்லாது சுபர் திருஷ்டி இவ்லாமலு மிருக் கில் சாதகன சிறைமுதலாகிய ராஜதண்டனைகளையும் கடன முதலிய தொந் தறை யடைவனுகி பிறபு முதலிய மேலோர்விரோதமுண்டாகும்.

இதில் ரவி சந்திரன் பகை நீசத்துடன் கூடி இருக்கினும் பாவரைக் கூடினும் தேகரோகாதி தன்பம் உண்டாகும் குசன்கூடி இவ்விடத்திலிருக்கில்

கொலைக்குறிய தெண்டனைகளையும் ரோணங்களையும் தன நஷ்டங்களையும் அடைவனென்றும் விஷாதிபாதைகளாலும் தேகாரிஷ்டம் நேரும் சனி சூரியன் சந்திரருடன் கூடினலும் சந்திரனே நோக்கினும் பாலியசிசுவின் காலம் கால் நோவ முதலிய அங்கஹீனமுஞ் சனி மூன்றும் பார்வை சூரியனைப் பார்க்கினும் லக்கினுகிபனையுஞ் சேர்த்து நோக்கின் காது முதலிய கிரோநோயும் புலன்களில் குறைவானருரியிடங் கொடுக்கும் இதைச்சுபராகிய குரு முதலியோர் பார்த்தாலுஞ் சேர்ந்தாலும் அல்பமாகக் காண்பித்து நிவர்த்தியாகும் சுக்கிரனுகில் நேத்திர நோயும் புதன் குருவாகில் சிலேத்துமாதி நோயும் குசனுகில் ரெக்த விரணம் வைசூரி நோயும் பெலமாக வரிஷ்டித்து நிவர்த்தியாகும் பாம்பாகில் விஷநோய்க் கண்டமாகும் ரவி குசன் அல்லது இரெண்டு பாவர்களிருந்துகூடினும் நோக்கினும் சுக்கில் விஷநோயரிஷ்டிக்கும் சனியாகில் உதரக்கட்டி முதலியபித்தவாயு நோய்காட்டும் இவைகளுக்கு சுபர்சேரினும் நோக்கினும் ஷை நோய்களரிஷ்டித்துமாறும்.

குசன் சனி கூடி மேஷம் கும்பம் விருச்சிகமிவையிலாவது சிங்கத்திலாவ திருந்தும் பாம்புமுதலிய பாவறைக்கூடினும் சுபர் திருஷ்டி கூடாமலிருக்க ராசதெண்டனைக்கி ஆளாகுவன் சத்துரு சோராக்கினிபயம் நேரும்அவைகளால் மிகத்துனபமுண்டாகும் சுபர்நோக்கினும் சனி குசன் சுபக்ஷேத்திர வாசனுகினும் அல்லது கடகம்முதலிய சிங்கத்தினின்றலும் மறைவுற்றலும் ராசபயம் விரோதம் போலக் காண்பித்து அவ்வித அரசர்களேயே சாதகன் செயித்து வருவனென்றும் மேலானயோக முண்டாகு மென்றும் சனியொருவனிலைத்து குசன்வலுத்திருக்கினும் சுபசம்மந்த திருஷ்டி இன்றிஇருக்கினும் ரோணமும் சத்துருவிரோத முண்டாகும் இருவரும் மறைவிடத்தில் இருந்து பகை நீசக்ஷேத்திரவாசனுகியும் சனியைக் குரு முதலிய சுபர் திருஷ்டியிருக்கில் சிலனுள் தனமின்றி வருத்தமடைந்து பின் ரோணமின்றியும் சத்துரு செயத்தடனும் ராசதெண்டனையில்லாமலுமாகவாழ்ந்து வருவன் மற்றைய ஸ்தானங்களில் சனி குசன் இருக்கில் ராசதெண்டனை பீடிக்கப் பட்மாட்டாது, குரு முதலிய சுபர்கள் சுபக்ஷேத்திர வாசமிவைகளேக்கூடி இருக்கில் மிகப் பல பெயரை தண்டிக்கவும் அபரூதம் போடவும் சத்தியுள்ளவனுகி ரோணமின்றி வாழ்வன் சூரிய சந்திரர்களுக்கு (சு, அ-ல்) (க-ல்) குசன் அல்லது சனி பாயபுகூடினலும் நோக்கினும் அல்பரோக சரீரனுகவேவாழ்ந்து வரப்படுவனென்றும் சந்திரன் ரவி லக்கினத்தை சுபா திருஷ்டியல்லது குரு சுக்கிரன் பூரணசந்திர ரிருக்கில் தேசசுகமும் அரோகியாகி திடசரீரஸ்தனுகியும் வாழ்வன் சூரியனுடன் புதன்கூடி கன்னியல்லது சந்திரனுடன் கூடினுமசூரியன் சந்திரனே சனி முதலிய குசன்கூடினும் தேகமினேத்தும் எப்போதும் அதிக கெற்ப சுடுள்ளசரீரனுவான் சனி பார்க்கினும சந்திரனுக்கு யேழில் சனி நின்றலும் சுகவீடாகிய மகரம் விருஷபம் இதில் ரவி யல்லது குசனிருக்கினும் நோக்கினும் பித்தவாயு உஷ்ண நோய்ச் சரீரனுகி சாதி குறைவு வுடனும வாழ்வன் சந்திரன விருசிகம் கும்

பம் மேஷமிலையில் சனியைக்கூடினும் நோக்கினும் குசன் கூடியல்லது பாற்தாலும் கூயமுதலிய மூற்சைவாயு அண்டநோயுண்டாகும் பிரபல பீடை யடைவன் அவருடன் புதன் அல்லது சுக்கிரனிவ்வித சுபராகியு அமரபட்ச பஞ்சமிக்குள் சென்ள முடையவனுகில் இவ்வித மேலேகூறிய வுபாதிகள் அல்பமல்பம்மரிஷ்டித்து உடனுக்குடனே லிவர்த்தியைக் கொடுக்கும் இவ் விதம் சூரிய சந்திரவசாத் (சு, அ) மிடத்தில் பெலன்களையும் கண்டுசொல்ல வேண்டியது.

இவ்வித பலன்கள்யாவும் அவரவரகளின் திசாபுத்தி காலங்களிற்கொடு க்குமென்பதை யூகித்தரிந்து கூறல்வேண்டும்.

களத்திரம் விவாதம் இவ்விதபலன்களாவன

குரு பெலவானுகியும் கேந்திரகோண ராசியில் இருந்தும் புதன் சனி இவ்வித க்ஷேத்திரத்திலின்றி பெலமுடையவனுகியும் சுக்கிரனுக்கு யேழா மிராசிகளில் சுபரல்லது அதிபதி பெலத்து தனக்குறிய பகை நீச க்ஷேத்திர மின்றி மீனத்திலும் பூரணசந்திராதி சுபரும் பிரபலத்துடன இருக்கினும் குரு நோக்கினும் பாவர்கள் சேர்ந்தாவது நோக்கமாவது இன்றி இருக்கினும் குருவுக்கு சத்தமாதிபன் சுபனுய் சுட்சேத்திர மல்லது உச்சமுதலிய நட்பு இடம் தனக்குறிய மித்திரர் வீடாகினும் வேறுபாவர்களைக் கூடாமலும் இவனிருந்த வீட்டதிபன் பெலத்து முன்போலச் சுபபெலத்துடன் இருக் கினும் சாதகனுக்கு பிரபல ரூபத்திலுங் குணத்திலும் மேன்மையான இடத்தினின்றுங் களத்திரலாபமுண்டாகும் யென்றும் பாலிய விவாகனுய் வாழ்வன் யென்றும் இவர்களுடன் அல்லது குசன் முதலியோர் கூடினும் பாலியவிவாகனுவ னென்றும் சனி பாம்பு புதன் றனித்தவர்களாய்க் கூடி னுலும் இவர்களின் பெலனதிகரித்தாலும் காலாதீதத்தின்மேல் எவ்வகாந்திய கடமாரவயதுகளில் விவாகமென்றும்

சனி சுக்கிரனுக்கு யேழிலல்லது மீனத்திலாவது பாம்பு தனித்த புதனுகி னும் குருவுடன் குருவுக்கு யேழு அவ்வீட்டதிபனிருந்த வீட்டதிபன் சனி புதன் குசன் முதலிய பாம்புகளைக்கூடி அவர்களுக்குறிய பகைக்ஷேத்திரங் களிலாவது பாபர்வீட்டிலாவது சனி முதலிய பெலக்குறைவுட னிருக்கினும் நோக்கினும் அவ்வித குருமுதலிய சுக்கிரனும் குருவுக்கு யேழுக்குடையவ னின்ற அதிபனும் பெலமற்று சனி குசன்முதலிய பாபருடைய கிரகத்திற் பெலமல்லது அபலராகி வசித்தாலும் மேலேகூறிய சனி யல்லது புதன் பாம் புகள் பகை நீசத்தி னிற்கினும் திரவிருசிகளி னின்றலும் சுக்கிரன் பெலமற் றிருக்கினும் சுக்கிரசத்தமாதிபன் பகை நீச இடங்களிலாவது தனக்குறிய விரோதிகளுடனுவது (கு, சு, அ-ல்) இருக்கினும் குரு முதலிய சுபக்கோள் சேராமலும் பார்க்காம லிருக்கினும் சாதகனுக்கு தாரம் மூன்னுவதுபோய் பின்னடப்பதும் காலதாமதமாகும் இதில் பாவரிருவர்களுக்கு மேலுற்றராகில்

காலதாமத விவாகம், நேரும் அதியோகி காமியாயும் மனைவியைப் போலப் பல றையும் புணருவன் களத்திரமிரண்டு முதற் பலவிவாகஞ் செய்வன் யென்றும் இதில் சூரியன்முதலிய குசன் பௌமற்றுக்கூடினும் சுக்கிராஷ்டமம் குரு அஷ்டமங்களிலும் குரு சத்தமாதிபனுக்கு அஷ்டமாதிபன் அஷ்டமமிவைகளில் இரெண்டுபாபர் பகைநீசமாகினும் விவாகமின்றி யடைவன் குரு பாபஞ்சில் களத்திர மிரண்டென்றும் அவ்வகை களத்திரமும் மனக்குறையினும் காலாமத்தின் பேரிலும் முடியும் யென்றும் மேற்கூறிய இடத்ததிபனுடனுவது இடத்திலாவது சுபர் திருஷ்டியுடன் இருக்கினும் சுபபௌகோளாகிய வர்கனின்றாலும் களத்திர மொன்றென்றும் குரு மேஷவிருச்சிகம் மகறகுமபம் சிம்மம் இவையிலாவதும் பாம்பு முதலிய பாவரைக்கூடினாலும் சுக்கிரனுக்குங் குருவுக்கு யேழில் ஒரிடத்திலாவது சனிராகுசன் பாம்பாகியவரில் யெவர் நிற்கினும் சுக்கிர சத்தமாதிபனின்ற வீட்டதிபனுக்கு யேழில் சனிமுதலிய ஒரு பாவர் பகை நீசம்பெற்றிருக்கினும் மீனத்தினின்றாலும் களத்திர துவயமுதலாகிய பல விவாகஞ்செய்தாலும் முன்னேயே மரணமாவர் விவாகமாவதுங் காலதாமமாகி யெவ்வனத்தப்பி களத்திர சுகமடைவதில் மனதிருப்தியின்றி யாவனென்றும்.

இவைகளில் இரண்டுபாவருடன் கூடி சுபசம்மந்த நோக்கமின்றி இருக்கில் (உ) முதலிய பல விவாகனென்றும் கன்னி மிதுனங்கடகம் சிம்பமும் கும்பம் இவைகளிலிருக்கும் குருவல்லாது சுக்கிரனுடனே பாவர்கூடினும் குசன்முதலிய சனிஜிற்கினும் களத்திரமிரண்டென்றும் ஓர் சுபர்நோக்கின் மனையாள் ஒன்றே தீர்க்கம் வயோதிகத்தில் மரணமாவள் யென்றும் புதன் சந்திரன் அமரபட்சத்தோரை கூடிஜிற்கில் விருத்தாவஸ்தீதை கவுமாரக்கை டயில் விவாகமுண்டென்றும் இருவித தாரஸ்தனென்றும் மூன்ற முதலிய பாவர் பெலிஷ்டராகி குரூரத்துடனிருக்கில் விவாகமான தெல்லாம்போய் விடுமென்றும் சனிபுதன் கூடிஜிற்கினும் பரஸ்பரதிருஷ்டியுடன் மேற்கண்ட விடங்களிலிருக்கின் விவாக மில்லையென்ற சுக்கிரன்முதலியோர் கூடிநோக்கினாலும் இருந்தாலும் காலதாமதவிவாக மென்றும் சுபரே பலத்துடன் மேற்கண்ட இடத்தில் இருக்கில் மனைவி தீர்க்கவதியாயும் சனிமுதலிய ஒரு பாபிகள் கூடினும் நோக்கினும் மனைவி இருக்க மற்றோர்மனைவி முடியுபென்றும் சுபர் பாபர்கலர்ந்து தனக்குறிய கேந்திரகோணமாகினும் அல்லது சுபசேத்திரமானாலும் களத்திரம் ஒன்றென்றும் பாபட்சேத்திரமாக இருக்கில் பல விவாக மென்றும் இதில் மேன்மையுடன் க்ஷேமத்துடன் பெலத்துடன் வாழ்வார்கள் என்றும் சுகசௌக்கியங்களையும் அடைவானென்றும் மிக்கமேலான கலவியுள்ள மனையாளாகியும் பிறபல இடத்தினின்றும் களத்திரமடைந்துங் களத்திர வழி சொத்துமுதலிய பிரபலவானுவான் யென்றும் குரு சுக்கிரன் முதலியோரும் குருவுக்கு சத்தமாதிபனின்ற இடத்ததிபனும் சந்திரனல்லது சென்மலக்கினத்தில் சுபட்சேத்திரமாகில் பிறபல மனைவியாகியும் கல்வி முதலிய விவேகியாகியும் இவருடன் பலவித தனங் களத்திரவகையால் அனு

பலிப்ப னென்றும் மிகுந்தவனுகூலமுஞ் சுகசௌக்கியமும் நேருஞ்சுபருடன் பாவியாவது சனிமுதலியோர் கூடியல்லது பார்த்தாலும் சமசப்தமாஇருந்தய லும் களத்திரங் காலதாமதமும் களத்திரசமான மூன் மேலான ஸ்திரீயை யடைவன் காந்திருவவிவாகம் புகழுவனென்றும் சுபபெலத்துடன் நோக்கினும் வித்தியாவிவாக களத்திரமும் இரண்டு முதலிய பாவர் கள் ஆகில் களத்திரத்வயமும் கும்பம் சிங்கம்முதலிய சுபர்களுடைய கேந்த் திரமல்ல தவ்வதிபர் புதன்கேந்த்திரத்தில் குரு சுக்கிரன் முதலிய மூன்கூறிய வர்கள் இருக்கில் காலதீதவிவாகனுகியும் பகைவரே அதிகபெலமாகின் விவாக மில்லை யென்றும் சுபரும் பாவரும் சமதுல்யராகிக் கலர்ந்து இருக்கில் தார மிரண்டென்றும் பாவரதிக பெலமாகில் தாரநாசமும்.

விருஷபமிதுனம் மீனம் கடகம் கன்னி துலாம் தநுசு இவைகளில் குரு சுக்கிரனிருந்தாலும் ஒருவர் பாவர்வீடு ஒருவர் சுபர்கிரகவாசமாய் தனக்குரிய சுபபெலத்துடனும் குருசத்தசாதி பனின்ற வீட்டதிபன் மூன்கூறிய இடங் களினின்றாலும் சுபரைக்கூடினும் பெலமுற்ற கேந்திரகோனத்தில் சுபரதிக பெலத்துடன்கூடினாலுங் களத்திர மொன்றென்றும் பாவர் அதிகமான பெலத்துடன் இருக்கில் களத்திரத்வயாதி பலதாரமும் அவரவர்கள் தனித்து பெலாபெலத்துடன் சுபர்பாபரைக்கூடாமல் இருக்கில் தாரமொன்றென்றும் தனித்திருந்தும் சுபட்சேத்திரங்களில் பகைசேமல்லது (சு, சு, ச, ல) இவை களிலிருக்கினும் தாரமிரண்டென்று கூறப்படுமென் றறியவேண்டியது இவை களையெல்லாம் அவரவர்கள் திசாபுக்தி மாரகமூலமாகக் கண்டறியவேண்டி யது.

விவாதபலன்

குரு சனி கூடினும் (உ, கூ-ல்) இருக்கினும் மீனம் மேஷம் துலாம் சிங்கம இவைகளிலாவது பாபரான சனி குசன் முதலிய பாம்புகள் (கு, சு, அ, கூ-ல்) நீற்கினும் பல சொத்துக்களால் வாதத்தையே அடைந்து பொருள் களையெல்லாம் தோற்பனென்றும் பலவகைக் கஷ்டபலனை அடைவனென் றும் குசன் சுகேந்த்திர உச்சமும் கேந்திர கோணத்திலும் சுபகேந்த்திரமாகி சுபர்வீட்டில் பெலத்தும் சனி கேந்திரமல்லது கூடியல்லது பார்த்தாலும் குரு இவ்விதமிருந்து மரைவிடங்களிலிருக்கினும் பாம்பு முதலிய பகைக்கோளை சனி குரு கூடிவலுத்தாலும் சுக்கிரன் கூடினாலும் பலவித விவாதங்க ளாலேயே பொருள்களை இழந்து தேசாடனஞ் செய்வன் ககூி செயிக்க மாட்டானென்றும் இவ்வித மற்றைகிரகமும் குரு கேந்திர கோணத்திலும் சூரியனிருக்கினும் சனி குசன் மறைந்திருக்கினும் ஞாயாதிபதியாகி விவாத தீற்பையடைவனுகியும் யாவருக்கும் வசியனுய் விவாத விவகாரத்தால் பொருளையுந்தேடி செயகீர்திகளை யனுபவிப்ப னென்றறியவேண்டிது.

சுக்கிரனுடனும் மீனத்தில் சுக்கிரனுக்கு யேழுக்குடையவனின்ற இடச் கோள்களுடனும் கூடிய யெண்ணே குரு பெலயெண்ணிற் கொடுத்தசேஷம் களத்திரமாகும்.

பிதுர்பாக்ய பலன்கள்

சுக்கிரன் ரவியையும் விருஷபத்தையும் சுக்கிரனுக்கு பாக்கியமென்னும் (க)மிடத்திபனின்ற வீட்டதிபனையுங் கொண்டு பிதுர்பாக்கியபலன்கள் கூற வேண்டியது.

சுக்கிரன் கேந்திர கோணத்திலும் தனக்குறிய சுபக்ஷேத்திரம் ஆகூி உச்சம்மித்ரு க்ஷேத்திரனுகியும் ரவியும் சுக்ஷேத்திர உச்சம் முதலியகேந்திர கோணத்திலிருக்கினும் சுக்கிரனுக்கு (க) மிடத்திபனின்ற ராசிக்கதிபனும் பெலத்த மேற்கண்டபடி இருந்தும் அசுபபெலனின்றி குரு சந்திரர்கள் பூர்வ பக்ஷகதிபகியாய் வலுத்து னின்ருலும் பார்த்தாலும் மிகபிரபல பிதுராற்சிதம் அரசசமானத்துவத்துவுடன் ராசயோகமாக வாழப்படுவனென்றும் ஞானி தர்ம்மிவ்ட்டனுகியும் பாக்கியவந்தனுகியும் பிதாவின் யோகம் பிரபலவானுவ னென்றும் அனேக கிராமம் பூமியும் ராசவதிகாரமும் பிதாவுக்கும் பிதாவினுல் சாதகனுக்கும் கேருமென்றறியவும் ஓர்பாபர் வீட்டில்னின்ருலும் ஒருபாபகளோக் கூடினும் அல்பமான பூமியுடனும் பிதுர்வம்சாவளி விருத்தியுடனும் அடைவ னுவன் இதில் ரவி மேஷம் விருஷபம் தநுசு மகரம் கும்பம் துலாமிவையில் நிற்கினும் சூரியனுக்கு (அ, ல்) பாபிகளாகிய குசன் பாம்பு சனியாகிலும் இவர்கள் கூடினுலும் சுக்கிரனுக்கு (க) மிடத்திபனுக்கு யெட்டிலிவ்விதப் பகை நீசத்துடனிருக்கினும் சுக்கிரன் கன்னி மேஷம் சிங்கம் இவைகளில் சூரியன் முதலிய பலவகைப் பாபிகளோக்கூடினுலும் சாதகனுடைய பாலியத்தி லேயே தகப்பன் மரணத்துடனும் அவன் குடும்ப விருத்தியடையமாட்டா னென்றும் இதில் பாபர் திருஷ்டியாகிலும் ரவியுடன் சனி கூடினுலும் சுக் கிரனுடன் குசன் பாம்பு கூடினுலும் இவ்விதபாவர்கள் விருஷபம் மகரத்தி னின்ருலும் பகை நீசம்பெற்ருலும் பாலியத்திலேயே மரணம் பிதுர்சொத்து இருந்து அழியும் இவனுல் கஷ்டமாகும் சனி ரவி பெலக்கினும் பாம்பு முத லிய பாவரைக்கூடினுலும் ஞானமின்றியும் பிதா பாலியமரணமல்லது மரண சமானரோகம் சித்த சுவாதீனமில்லாதவனுகி அங்கயீனனுகி வாழ்வனென்றும் இப்படிக்கொற்ற மேன்மைகளற்றுப்போம் குடும்ப விருத்திகளையும் அடையா னென்றும் குரு முதலியோர் நீசனுகினும் மேஷம் சிங்கம் துலாமிதில் சுப ருடன் ரவி கூடினும் பிதாவின் ரொணபாத்திபனுகியும் பிதுர்பாலியமரணத் தையும் அடைவன் என்றும் ஞானமில்லாதவனுவான் யென்றும் தருமமில்லா தவனுகியும் பலவகை பிதுரார்ச்சிதமின்றியும் அவ்விதம் பிதா ஆர்ச்சிதம் பூர்வார் சிதமின்றியும் அவ்விதம் பூர்வார்சிதமிருந்தாலும் அதற்கு மேற்கொண்ட கடன் களையும் அடைந்து தின்பப்படுவனென்றும் அறியவேண்டும்.

சுக்கிரனுக்கு பாக்கியாதிபனின்ற வீட்டுக்கதிபன் சுபனுகியவருக்கு (ரு, சு, அ-ல்) இருந்தாலும் பாபனுகி கேந்திரகோணத்திலேயே சுபக்ஷேத்தி ரம் பாவக்ஷேத்திரமானுலும் பிதா வார்த்தீகமரணமும் பிதுர்சொத்திருந்தும்

இழந்து ருணஸ்தனுவனென்றும் சனி முதலியோராகின் யெவ்வன மரண மும் புதன் முதலிய சவுமியராகில் கௌமாரவயதில் மரணமும் குரு முதலிய பெலமுற்றவராகில் வார்த்தீகதிசைவரை பிதுர்தீர்க்கமும் பிதாபூர்வார்ச்சிதமும் முதலிய பொருள்கள் அபிவிருத்தியுடன் அடைந்துவரப்படுவனென்று ஊர்த்தி மூர்த்தியுண்டாகும்.

சனி சுபக்ஷேத்திரங்களில் கேந்திரகோணமாகியும் துஸ்தானமாகில் சொக்ஷேத்திரமாகவாழினும் சுக்கிரனுக்கு (அ, இ-க்) குடையவர்களிருக்கு மிடத்ததிபனுனவன் கேந்திரகோணத்தில் பாவனுப் பாவக்ஷேத்திர மேரினு லும் யௌவனத்தில் பிதா மரணமாவானென்றும்,

பாபிகளானவர் சுபக்ஷேத்திரமாகின் வார்த்தீகதிசையில் மரணமென்றும் சுபர் பாபர் கலர்ந்து தனக்குரிய சுபமித்திரு பாவக்ஷேத்திரமாகில் (கவுராவஸ் தையில்) பிதுர் மாரகமடைவனென்றும்.

பாபக்ஷேத்திரமும் பாபர்களே கூடினுலும் பிதுர் கருமஞ்செய்யமாட்டா னென்றும் புதன் சுக்கிரன் சந்திரனிவர்களிலெவராவது கூடினுலும் பார்த் தாலும் பிதாவின் தாரங்கள் (கூ) முதல் பலதாரவிவாக னென்றுங் கூறப்படும் யென்றும் பிதுர் பாக்கியவிருத்திகளும் அதிகமான மேன்மையுடன் வாழ்வ னென்றும் மிகக்கீர்த்தி மூர்த்தியுடன் சரசசல்லாபனுகி ராசவதிகாரம் பொருந் துவனென்றும் சுக்கிரனுகில் யௌவன மரணமும் ரவி புதன் சந்திரனுகில் ரவிக்கு பாலியமும் புதன் சந்திரன் பாம்புக்கு கவுமாரகாலத்திலும் மரணமாவ னென்றும்.

ரவி சுக்கிரன் புதனிவர்கள் தனித்தாவது சேர்ந்தாவது கன்னி மீனம் மேஷம் விருஷபம் மகரம் இவைகளி லின்ருலும் அவரவர்களின் உச்ச சொ க்ஷேத்திராகியாயும் கேந்திர கோணமாகி இரண்டாகிய ரவியுடன் புத னுடன் சுக்கிரன் கூடினும் ரவியை சுக்கிரன்கூடாமலும் சனி ரவி முதலிய பாபர்களின் சுபக்ஷேத்திரமான மேஷ விருச்சிகம் மகரகும்பம் சிங்கம் துலாம் இவைகளில் இல்லாமல் மற்றய இடத்தினின்றும் சுக்கிரனுக்கு (கூ-ச்) குடை யவன் லின்ற ஸ்தானுதிபன் பெலத்துடன் தனக்குரிய சுபக்ஷேத்திரனுகியும் பெலத்துடன் கேந்திரகோண ரீதியுடனிருக்குமாகில் பிதாவும் ஆயுள்விருத்தி யுடன் வார்த்தீக திசை மரணமும் கவுன்மி தனதானிய பாக்கிய பிறபலத் துடன் அரச துல்லியனுகி கிரகவாகனம் பூமிகன்று காலிகளுடன் இராசத் வேஷ அதிகாரமுறையுடனும் மிகுந்த பிரபலனுகிவாழ்வனென்றும்.

மேலேகூறிய இடங்களிலும் கிரகங்களுடன் பகைநீச சுபரல்லது பாவர் கள் கூடினுலும் பார்த்தாலும் அல்பயோகமும் பூர்வ வாழ்வுடையவனுகி மத்தியம் யாதொரு பிரயோசனமின்றியும் கவிமாரத்தில் பிதுர்மரணத்தையும் பலவகைக்குடும்பம் விருத்தியாக விருந்து பெலமற்று பலஷ்டத்துடன் பின் காலத்தில் வருந்தி இளைப்பனென்றும் மனுஜீதிகையுஞ் சத்துருரோகங்களை

யடைய பிதாவென்றும் இதில் சந்திரன் சுக்கிரனிவர்க ணீசம் பகைகளாலு லும் பாவர்களே இருந்து பாபபெலத்துடன் கூடி அல்ப சுபர்நோக்கஞ் சேர்ந்து இருந்தாலும் பிதாயெவ்வன மரணமும் சுபர் சேர்க்கை பார்வை இல்லாவிடில் பாலியமரணமும் பிதாவுக்கு பலதொந்திரவுங் கண்டனே ராச தெண்டனைகளும் இதில் குசன் சனிவலுத்துக் கூடிநோக்கினாலும் ராச தண்டனை சோரதண்டனையுங் கடனால் பொருளழிவும் யெவ்வனத்தில் பிதுர் மரணமும் உண்டாகும் துவிதியமுதலிய பலதாரபோகனை பிதாவென்றுங் கூறல்வேண்டும் பலவியாதிஸ்தனுகியும் ஸ்திரீ ப்ராந்தனுகியும் பிதாவாழ்வ னென்றுங் கண்டரியவேண்டியது

மேற்கூறிய ரவி சுக்கிரன் சுக்கிரனுக்கு (க) மிடத்ததிபனின்ற ராசி னுதன் இவர்கள் பகையில்லாதவருடன் சுப டன் பாபக்ஷேத்திரங்களினின்ரு லும் பகைநீசக் கோளுடன் கூடினாலும் பெலமற்ற இடங்களில் முதற்கூறி யோர் இருந்தாலுங் சாதகனுக்கு பூர்வார்ஜிதமின்றி சுயார்ஜிதயோக முடையவ னுகியும் பிதா பாலிய மரணமும் இதில் ஓர் சுபர்களில் புதன் கூடினாலும் நோக்கினாலும் இச்சாதகன் தனக்குரிய சுபஸ் தானமின்றி னின்ரூலும் பாலிய மரணம் பிதா வென்றும் பிதுர் சொத்தினால் பிரயோசன மடையானென்றும் இதில் குருமுதலியோர் சுபருடன் கூடிவந்தால் பிதுர் சொத்து யேராள விருத்தியுடனும் பல லாபத்துடனும் குடும்பவிர்த்தி இன்றிபிதா எவ்வனத்தில் மரணமும் பலவகை மரண துக்கங்களையும் முன் அனுபவிப்பனென்றும் இதில் குரு முதலிய சுக்கிரன் சுப பெலத்துடன் தனக்குரியவர்களுடன் கூடினே க்கினாலுஞ் சேர்ந்தாலும் பிதாகவுமாரமரணம் பிதுர்சொத்து பிரபலம் மிக்க வுண்டாமென்னும் பூரணசந்திரன் குரு முதலிய இருவகைச் சுப பாபர் வீடா கினும் மித்துரு இடமாகிக் கேந்திர கோணத்திலிருக்கில் பிதா பிறபலயோகப் பொருளைக் கடன்செய்து பின்னிரூன் மிகவும்அதைபிரபல மாக்குவனென்றும் பிதா எவ்வன மரணமாவனென்றும் ஓர் பாவர் கூடினால் சில பொருள்போகும் எவ்வனத்தில் பிதுர் மரணமும் இரண்டு பாபர்கள் கூடினாலும் அசுப பெலத் துட னிருந்தாலும் பிதாபாலிய மரணனுகி விடுவனென்றும் பிதுர்சொத்தே கிடையாதென்றும் அல்லது பிதுர் சொத்திருக்கினும் இழந்து விடுவனென்றும் பாபர்மூவர் முதலானவர்களாகில் பிதா உடன்மரணமும் சொத்து விருத்தியில் லானென்றுகூறப்படும் மென்றவாறு இவ்விதமிருக்கினும் சுக்கிரனுக்கு (க-க்) குடையவ னுடனாவது அவ்வீட்டதிபனுடனாவது சுக்கிரன் பெலமற்றுக் கூடி னும் சனி முதலியோர் பார்த்தாலும் பாபக்ஷேத்திரம் பாவருடனிருக்கினும புதன் சனி வீடாகினும் அதில் புதன் ரவியல்லது சனியையாவது அமரபக்ஷ சந்திரனையாவது கூடினாலும் தகப்பனுக்கு (உ) முதலிய தாரத்தையும் பல தாரங்களையு மணப்பனென்றும் அப்படிக்கொற்ற கிரகம் (சு,-சு, அ, கஉ-ல்) வாழில் பூர்வார்ஜிதம் பிதுரார்ச்சிதம் சேதமாகிக் கஷ்டகஷ்டத்துடன் ரோணங் களுக்கழித்து பல கவலையடைவன் பிதுர்சுவமாம் யெனவனம் இவ்விதவயதில் மரணம் பிதுர்குடும்ப அல்பவிருத்திகளுக் கேந்திரகோணமாகியும் சுக்ஷேத்திர

உச்சம் முதலிய இடத்திலிருக்கினும் புதன் ரவியாகினும் குசன் குரு அல்லது குரு சனியாலுலும் (கூ) முதலிய துதிய தாரத்துக்குமேற்கொண்ட தகப்பன் பிரபல யோகவானுகி அநேகபொருளீத்தேடி பிரபலஞ்செய்து விருத்திக்கிக் கொண்டு வருபவனென்றும் இவர்களுடன் யாவர்கள்கூடிலும் நோக்கிலும் பிதா தேகமுகி தேகபாதை அசத்தனுகியும் சுபராகில் சுக திடசரீரவானுகியும் மிகவுங் கீர்த்தி மூர்த்திகளோயடைந்து பிரபலத்துடன் வாழ்வனென்று மிகுதியான மேன்பாடுகளோயும் சுபரும் பாபருமாகக் கலந்திருக்கில் அல்பவிருத்தியையுடைய பிதாவென்றுங் கூறல்வேண்டுமென்லும் அதிக புகழ்ச்சிகளோயும் அகங்களோயும் சமமாக அடைவனென்றுங் கூறல்வேண்டும்.

சுக்கிரனுக்கு (கு-க்) குடையவனு மவன்நின்ற வீட்டதிபனும் பாபனல்லது புதனுகினும் அவர் பாவருடன் கூடினுலும் நீசம் பகையில் அல்லது பகை கிரகவாசனுகியும் கிரகப்பகைவரைக் கூடினுலும் (கூ, அ, கூ, சு) இந்த இராசிக்கதிபனுடன் அல்லது இராசிகளி னிற்கினும் பிதுரார்ச்சிதமின்றி பரதேசவாச சஞ்சாரனுகிப் பலவாருகிய கஷ்டநஷ்டருணஸ்தனுகியும் வாழ்வான் சுபர் பாபக்ஷேத்திரங்களில் அல்லது பாவருடனே கூடிபார்த்தாலும் அப்படியே பிரபலமின்றியுங் கேவலஸ்தனுகிப் பலவாருன கஷ்டநஷ்டமும் அடைவன் வம்சவிருத்திகளோயும் பிரபலமாக அடையமாட்டா னென்றுஞ்சுப க்ஷேத்திரத்திலாவது சுபபெலக்காரருடனுவது பெலத்து சுயநோக்கத்துடனிருந்தும் ரவிமுதலிய சுக்கிரன் சுபபெலத்துடனும் இருக்கில் பிதுர்பாக்கிய பிரபலமு மிகுந்த கீர்த்திமூர்த்திகளோயும் இராசவதிகார யோகமும் பூமி கிரகவாகன க்ஷேத்திரபிறபலனுகியும் மிகுந்த கீர்த்திகளோயும் அடைத்து பிதுர்பாக்கியத்தினு லதிகசிறப்பை பொருந்துவன் அரசயோகனுவன் தனக்கு இயல்பில்லாத சிலபாவரைக்கூடினுலும் பார்த்தாலும் கலந்து நின்றாலும் பிதா அல்பயோகவானுய் சில பூமி கிரகவாகனயோக மத்திபனுய் பூர்வ பிரபலனுப்பின்றரித்திரனுவன் இதில் பாபர்கள்கூடி நிற்கினு னோக்கினும் பலவகைகஷ்டநஷ்ட தரித்திரசிகாமணியாய் குடும்பவிருத்தியும பிதுர்தண்டனையுடையவனுகியும் அக்ருத்தியனுகியும் வாழ்வனென்றுங் கண்டு கூறல் வேண்டியது.

சுபபெலமே சாஸ்தியாகில் அதியோகவானுய் மிகவுங் கீர்த்தியுடன் சுக்கிர யோகனுவன் அரசனுய் நெருக்கம்பூமி கிரகவாகன பிறபலயோகவான் என்றறிய வேண்டியது.

ஒருவருக்கொருவர் பகைபெற்றும் ராசி கிரகத்துடன் கூடினுல் பிதாபல விவாத நெருணஸ்த அக்ருத்தியனுய்ச்சித்தபிரமாதி நோயாளி யல்லது விரோதவானுகி மிகவுங் கஷ்டநஷ்ட துன்பத்தை யுடையவனுகி வாழ்வன் என்றறிய வேண்டியது.

பிதுர்பாவ மாரக கணிதங்கள்

சுக்கிரனுடனும் ரவியுடனும் விருஷபத்திலும் சுக்கிரனுக்கு (கு) மிடத்ததிபனினற கோளுடனுங் கூடியதகைகளோ யபலாபெலப்படிக்கி கூட்டி

இராசியெண்ணிற் பெருக்கிய துகையை (கூ-ல்) கழித்த சேஷம் திசையாக வும் ஈவை (இ-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்தசேஷம் புத்தியாகியும் கணக்கு மேலேபெருக்கிய மொத்தத்துகையை (இ-ல்) கழித்தசேஷம் காலமான அவஸ்தையென்றுங் கண்டு கிரியாணம்கூறல்வேண்டும் என்றரியவேண்டியது இவைகளே யெல்லாம் சவ்யாபசவ்ய ரீதிப்படிக்கி மேஷலக்கினத்திற் சொல் லிய விதிப்படி முறையே பார்க்கவேண்டுவ தவசியமாக இருக்கின்றது.

கருமம் இராச்சியம் இவைகளைப்பற்றிய பலன்களாவன

புதன் சுக்ஷேத்திர உச்சமான கேந்திரகோணத்தில் தனக்குரிய சுப க்ஷேத்திரவாசனுகி ரவியை யல்லது சுபரைக்கூடினும் மித்துனத்தில் பாவர் களின்றி சுபசம்மந்த யுதத்துவமிருக்கினும் குருபெலவானுகி சொச்சோச்சங் களில் நின்றாலும் தனக்குரிய கேந்திரகோணத்திலும் புதனுக்கு தசமாதிப னின்ற இடத்தாதிபன் சுக்கிரன் பூரணசந்திரனிவரில் யெவரைக் கூடினும் கேந்திர சுபஸ்தானம் சேர்ந்து இருக்குமாயில் மண்டலாதிபனுகி பிரபலவானுப் தங்கள் தங்களுக்குரிய சத்கரும வனுஷ்டாதாவாகி மிகவும் பிறபலத்துடன் கீர்த்திபெற்று மிகமேன்மையுடன் வாழப்படுவனென்றும் பிரபல மேன்பாட் டுடன் கிரகம் வாகன பூமியாதி பத்தியங்களே யடைவனென்றும் கிருஷியல் லது வாணிபத்துவமும் இவருடன் புதன் சொச்சோச்ச மிரண்டையும் அடை ந்து பிரபலத்துடன் குருவுமிருக்குமாயில் மிகவும்மேன்மையான வாணிபத்து வம் பூபதி இவ்வித பிறபலவானுகி இராசயோகவானுவன்.

இவர்களில் ஒருவர் புதனல்லாதவர் கெட்டு பாபருடன் பாபக்ஷேத்திர யுதர்களாகி பகை நீசங்களே பொருந்தி இருக்கினும் பாபர்பார்க்கினும் சில அல்ப பூமிக்கதிபனுகி வாழ்வதிலும் நூதனவாழ் வடைவனென்றும் இகில் குரு முதலியோர் கெடின் அரசத்துவமின்றி சில பாகவனுகூலத்தைப் பொருந் துவனென்றும் சத்கருமனுகியும் புதன் குரு இவர்களிருவருங்கெட்டி (கூ சு, அ, கூ) இவைகளிலும் பாபயுதர்களாய் கூடில் அல்பபூமி யுடையவனுகியும் சிலபாக வயது வறை யாதொரு பூமி கிரக வாகனமினறி பலவருத்தத்தை யடைந்தும் பலவாறுக சஞ்சாரியாகி முன் இளைத்து வருத்தங்களேயுஞ் சோ கங்களேயடைந்து பின் க்ஷேமத்தைசமமான பூமிமுதலிய விருத்திகளே யடைவ னென்றும் கூறல்வேண்டுங் என்றும் அரசர்களுக்குத்தொண்டு செய்யும் போ கத்தையும் அடைவனென்றுங் கூறப்படும்.

புதன் பகை நீச இடங்களிலும் விருச்சிகம் கும்பம் மேஷம் சிங்கம் இவை களிலும் பகை நீசக்கோள்களுடன் சனி முதலிய பாவரைக்கூடினுலும் பார்த் தாலும் பாபக்ஷேத்திரகெதனுகினும் பூமிகிரகவாகன மின்றியும் பல கஷ்ட கஷ்ட துன்பமடைவன் தரித்திரவானுக ரவியைக்கூடி துலாத்திலும் சனிசுக ஜீவர்களைக்கூடி மேஷத்திலும் பாம்பு குசனைகூடி சிங்கம் கும்பத்திலு மிருக்கி

னும் பலவகைப்பூமி இல்லாஞகி இழந்தும் தன்பபாகங்களே யடைவனென்றும் மிதுனத்திலாவது புதனின்ற இடத்துக்கு பத்தாமிடத்தில் னின்ற இராசிஞ தன் மேற்காட்டிய விதமாய் பகை நீசமும் அல்லது அவ்வகை கிரகங்களோயுங் கூடி துஸ்தானகேதருகி (கு, சு, அ, கூ) லிருக்கினும் பூமிமுதலிய யெவ்வித முமின்றிப் பலகலேயடைந்தும் அதி தரித்திரஞகியும் பாவகர்மவாஞகியும் கருமஹீனஞகியும் தன் குலஹீனத்தொழிலேயும் புரிந்தும் தனக்குரிய கருமக் குறைவுடனும் ஆவான்யென்றும் இவ்விதமிருக்கும் பாபகேஷத்திர கெதக் கிரகங்களுடன் புதன்சேரிர் அல்பபூமிஸ்திதி காலாதீதத்தில் அடைவன் குருமுதலிய சுபக்கோள் சுக்கிரன் கூடினலும் பார்த்தாலும் சிலகால முன் ஞேருலிருந்து இழந்து பின் சுகசௌக்கிய வனுபவபூமி கிரகவாகனாதி கேஷத் திரமேன்மையும் அடைவன் பூரண சந்திரஞகிலும் அவ்விதியே சுகபலனும் பூமிபிறபலமும் பூர்வார்சித யோகவாஞய்க் கருமசிருத்தையும் மேன்மையுஞ் சிலகாலமிழந்து திரிந்த பின்னடைவனென்றும் சுபர்களும் பாவர்களுங் கலர் ந்து கூடினலும் அவ்விதமே பாபபலனே சாஸ்திரியாயின் இவர்களில் தள் ளுண்ட கருமஞகி சாதிபோதனகி இழிவான கருமத்தையும் அடைந்தும் பல வித துக்கங்களோயும் அனுபவிப்பனென்றும் ஸ்தானாதிபதி பெலத்துடனும் ஸ்தானத்தில் பாவரும் இருக்கில் அல்பபூமியடைவனென்றும் கருமசமதுல்ய மும் ஸ்தானாதிபதிகெட்டும் ஸ்தானத்தில் சுப பெலத்தோர்வாழில் மிகவும் கற்கருமமும் சில பூமிகளிருப்பினும் அதிகார மேன்மையுடன் சுகத்தை யடை வனென்று மிகுந்த கீர்த்தி மூர்த்தி பிறபலத்தையும் அடைந்து வாழ்வனென் றும் மேலேகூறிய பாவவிதிகளே யடைவன்

புதன் கன்னி மீனம் விருடபம் இவைகளிலும் கும்பத்திலும் சுக்கிரனே சனி முதலிய பூர்வபட்ச சந்திரனேயல்லது குருவைக்கூடினும் மிதுனத்திலும் சுபரிருந்தும் புதனுக்குத்தசாநாதபன் குசனல்லது மற்றயராய் கேந்திரகோண சுபபெல ராசியிலும் அவ்வீட்டநாதபன் பிரபல சொச்சோச்சங்களாலுலும் சந்திர கேந்திரமாகவரினும் குசன் பாம்பு பகையையுடையோர் கூடி யல்லது பார்க்காமலுமிருக்கில் இராச்சியாதிபனுகி இராசயோகவாஞய் அனேகர்களேக் காப்பாற்றியுங் கண்டனே தெண்டனாதிபனுகியும் அடிமை முதலிய வாகன இயல்பும் அடைவன் இவர்களுடன் பாவர்சேரில் சிலகாலமடிமையும் சிலகா லம் ஒன்றுமின்றி யடைவன்.

இருவிதக் குறிப்புள்ள பாவரைக்கூடில் சில கிருமாதிபனுகியும் சிலபூமி இராச்சியங்கள் முன்னிருப்பவையை யிழந்து பலவித துக்கமடைவன் பாப பலனே அதிகவலுப்பெரில் சுல்ப பூமியும் உபயோகமின்று அலேவன் கருமக் குறைவும் பிதர்விரோதவாஞகியும் பலிப்பன்.

துலாம் விருச்சிகம் தநு மிதுனம் இவைகளில் புதனின்று ரவிமுதலி யறைக் கூடினும் அவ்வதிபர்கள் பெலமற்று நிற்கினும் சனி முதலிய பாம்பு குசன் இவர்களோயும் அமரபட்ச சந்திரனேக் கூடினலும் சிலகிருமம் பூமி

யுண்டுயென்றும் குருமுதலிய சுபர்பார்க்கில் இவனுலதிகபிறபலமும் உண்டா
.கும் பகை நீசர்கள் கூடினுலும் பார்த்தாலும் யாவையு மிழப்பன் விவாத
விரோதத்தினுலேயே சலவகைப்பூமிகளையுங் கர்மானுஸ்டானங்களையுந்தவிர்
ந்து கருமியாகி வாழ்வனென்றுமவ்வவ் இடத்துக்குறிய சுபர்களே பிரபல உச்ச
சொக்ஷேத்திரத்துடன்கூடில் சில பூமியதிபனுகி பிரபல கிரகவாகன முதலிய
இடம்பொரு ளேவலேப்படைப்பன் இதினுடன் சனி முதலிய பகைப்பாவர்
கூடில் ஓர்வித பொருமின்றி யிலவன் கருமஹீனனுய்ப் பலிப்பனென்றும் சில
பூமி இருந்தவைகளையும் இழப்பனென்றுங் கூறல்வேண்டும்.

மகரம் மேஷம் கடகம் சிங்கம் இவைகளில் புதனிருந்தும் ரவியைகூடி
குரு பூர்வபக்ஷசந்திரகேந்திரமும் இவைபெரில் மிகவுமேன்மையான சில பூமி
திருமாதிபனுகி வாழ்வன் யென்றும் இதில் சுக்கிரன் தனக்குறிய சுபக்ஷேத்
திரமான தில் இருக்கில் மிகவுமேன்மையாம் பூமிசேர விவாதமூலியம்செய
மடைந்து பின்கஷ்டமும் சனி முதலிய குசன் பாம்பு இவர்களில் எவரை
கூடினும் பலவித பூமிக்ஷேத்திர நாசமும் தரித்திரதிகாமணியாகி கருமஹீன
னுகிவாழ்வன் யென்றும் இரண்டும் பாவரைக்கூடி பாவருக்கியல்புற்ற சொட்
சேத்திராதி சுபஸ்தானமிட குரு ஸ்தானத்தில்கலந்து கிற்கில் சிலதிருமபூமி
பிறபலமும் மேன்மைகளும் கிரகவாகனக்ஷேம பலனும் பகைநீசவிரோத இடங்
களில்கூடில் பலவகைப்பொருள் நாசமும் பகையும் குடும்பத்துக்கத்துடன்
கருமஹீனனுவ னென்றும் சுபபெல மதிகமாகியும் குசன் மகரத்திலும் ரவி
புதன் மேஷத்தில் குருகேந்திர மல்லது கூடினும் சந்திரன் சனி கடகம் விரு
ஷப மிவையிலும் ரவி புதன் சிம்பத்திலாவது சுபசம்மந்தனுகி குசன் சந்திரன்
மேஷத்தி னின்றலும் பிரபல வரசயோகத்துடன் திரகம் பூமி பிரபல
யோகத்துடன் வாழ்வனென்றும் மனதக்கு அசந்துஷ்டிகளையும் விவாதத்தை
யும் பின்னடைவனென்றுஞ் சொல்லப்படுமென் றறியவேண்டியது.

சீவனபலன்

புதன் கேந்திரகோணத்தில் சுபட்சேத்திர மல்லது கடகம்சிம்மமேஷம்
விருபம் இவைகளில் சூரியனே யல்லது சந்திரனேகூடி மித்துருத்துவத்
துடன் குருமுதலியசுபர் திருஷ்டியுடன் பெலத்தும் பாவசம்மந்தம் திருஷ்டி
களில்லாமல் புஷ்டியோடு இருக்கில் இராசாங்கம் பிறபு இவர்கள் முதலிய
சீவனமுடையவன்யென்றும் இதில்குருமுதலியோர் சுபட்சேத்திர பெலத்
துடனிருந்து பாற்தால் முக்கியவரசத்துவ யோகவானுய் அநேகர்களை யடக்கி
தரைத்தனஞ் செய்வனென்றும் சுக்கிரனுகில் ஆலோசனை உண்டாகும் சக்தி
இல்லிதி னன்மாற்க ராசாங்க சீவனஞ்செய்வனென்றும் பெண்வகைத்தனமுங்
கூடுமென்றும் பிறபலகீற்திவானுவன் சூரியன் சந்திரனுடன் கூடினுலும் பாற்
கினும் இராசாங்க சீவனமுடையவனுகி பிரபலவானுய் வாழ்வனென்றும் பெல
முகடைய சுபத்துவமுள்ள குசனேக்கூடினும் பயிற்தொழிலுடன் அரசாங்கத்
துவ கொடுங்கோல் செய்வனென்றும் பூர்வபட்ச சந்திரன் தனதிடமில்லாத

சுக்கிரனுகில் பயிர்முதலிய பூபதித்துவ முயற்சியுள்ள யோகசீவனமும் சனியாகில் அடிமைபூண்டு கேவல சீவனமும் கிருஷ்ணபட்ச பஞ்சமிக்குள்ளாகிய சந்திரன் அடிமைவேலையும் பாம்புமுதலியோர் கூடினும் நோக்கினும் இழிவுகுல சீவனமும் சுபர்கள்பகை நீசத்துடனிருந்து கூடினாலும் பார்த்தாலும் இழிவான அடிமை முதலிய அதமசீவனமும் பாபர்பகை நீசர்களாய் கூடினும் நோக்கினும் அசமத்திலுங் கடையான பிக்ஷாவிருத்திமுதலிய சீவனமுஞ் செய்துவருவனென்றும் குரு புதன் இவர்கள்கட்புபெற்ற கூறல் விவாதத் தொழில் ராசாங்கத்தால் பெற்று சீவனஞ் செய்துவருவனென்றும் கூறப்படும்.

இதில் புதன் மூன்று சுபருடன் பலத்து லக்கினகேந்திர மல்லது சத்திரகேந்திரத்திலும் கட்பு கேஷத்திரமாக வாழினும்வித்தை மூலமாகவும் பூமியும் யாருக்குள்ளுந் தொண்டுசெய்யாமல் சீவனமேலானவனுகி வாழ்வார்கள் இவைகளே பகைபெற்ற சனி முதலிய பாபர்கள் கூடினும நோக்கினும் சிலனுளடிமை சிலனுல் சுயமூலமாக சீவனம்பண்ணி வருவனென்றும் அவைகளால் மிகுந்த வனுகூலத்தையும் பெற்றுவாழ்ந்து வரப்படுவனென்றும் அதிகமான கீர்த்திவானுவன்.

மீனம் கன்னி மிதுனம் கும்பம் இவைகளில் புதனும் அவருடன்ரவி கூடினாலும் உரியபலச் சுபரைக்கூடி குரு அல்லது சந்திரனிவர்கள் நோக்கினும் பெலமுற்று கீர்த்தினும் பெண்மூலியமாய் சிலதனலாபத்தையு மிகவுங் கீர்த்திகளேயும் பெற்றும் கணிதமுதலியவித்தினால் தமிழ்முதலிய சுயபாஷையும் பூமியும் வியாபாரத்தையுஞ் செய்து சீவனஞ்செய்ய வல்லபனுய்க் கீர்த்திபெற்று வாழ்வனென்றும் உலகத்தில்திகழ்ந்த கீர்த்திகளே அடைந்து இராசயோகவானுயாவனென்றும் இவர்களுக்கு யேழுக்கேழாய் குசன்பாம்பு சனிகின்றாலும் அவர்களேப் பாவர்கள் நோக்கினும் அவ்வித சீவனமிருந்தும் மேன்மையின்றி சிலகாலஞ் சிலருக்கு அடிமையும் இல்லாதவைபோலுங் குறைவடைந்து பின்கேஷமகரத்துடன் சீவனமேன்மை யடையப்படுமென்றும் மிக்க கீர்த்தியும் கலந்து நடக்குமென்றும் பலவிதத் தொழில்களேயும் பூண்டு சீவனஞ் செய்வனென்றும்.

இவர்களுடன் ரவி கூடில் சொல்ப இராசாங்கசீவனம் உடையவன் பிராரி பெரிய குடும்பவேலே பாத்துவருவன் சந்திரனுகில் சில அல்பபூமியுடன் ஸ்திரீவகை தனமல்பத்துடனும் இராசமூலிய அல்பசீவனஞ் செய்வனென்றும் குசனுகில் சிலபூமியும் ரொணமாஜஸ்டிரேட்முதலிய கொடிய சீவனமல்ப முடையவனென்றும் புதனுடனுகிற்சந்திரன் சுக்கிரன் கூடில் கிருஷ்கணிதவிதிநூல் நடாதத்துவனென்றும் புதன் சுட்சேத்திர உச்சத்திலாவது தூலாமுதலிய இடத்திலாவ திருக்கில் வியாபாரத்தொழில் பயிர்தொழிலுங் கதிருடன் கூடினும் சந்திரனுக்கேழாகினும் சுக்கிரன் குரு வலுத்து சந்திரனேயாவது புதனேயாவது நோக்கினும் வியாபாரமென்றும் சனி பாம்பாகினும் துலாம் மகரம் இவையாலுற்ற மீனம் இதுகளினின்ற சுக்கிரனுடன் சனிகூடினும்

செலமேல்நடக்குமுயற்சி களாலும் தஸ்ணிறமுதலிய சம்மந்த சீவனங்களாலும் புதன் பெலத்துடன் கூடினும் சிங்கம் கும்பம்மேஷம் இவையிலிருக்கின் பண்டிதாதித் தொழிலும்பாம்பு கூடினுமிருக்கினும் இழிவான வடிமைத் தொழிலும் கூறப்படும்.

துலாம் விருச்சிகம் தனுசு இவ்வித இராசிகளாகில் சுபருடன் புதனிருக்கில் வித்தியா சீவனமும் மூலமுதலிய காடுசம்பந்த சீவனமுடையவனுவன் யென்றும் கூறப்படும் பாவர்கள்சேரில் மிகவும் குறைவும் வெட்கமுமுள்ள சீவனத்தையடுத்து லாபம்பெற்று வாழ்வன் வியாபாரத் தொழில்களோப்புரிந்து சீவனஞ் செய்வனென் றரியவேண்டியது

சீவன பலன்களின் தனகணிதங் கணிக்கின்ற வகை

சனியுடனும் புதனுடனும் புதனுக்கு பத்தாமதிபனின்ற இடத்ததிபனுடனும் மிதுனத்திலும் உரிய பெலாபெலப்படிக்கு கிரகயெண்களோ இராசியெண்ணுர் பெருக்கிய துகையை உச்ச ஆகூலி முதலியபாக முறைபடிக்கிமுன் விவரித்தபடி சமத்துகையுடன் பெருக்கியது மாதவரும்படி மொத்தமாம் இதில் ரவிக்கி பத்தாமிடத்ததிப னின்ற இடத்ததிபதியின் கணக்கெடுத்து புதன் பூரூவான பிரபல பெலமானுலும் (உ) யாகவைத்து அவருடன் சேர்ந்த கிரக சுபாசுபபெலப்படிக்கி ஆகிய னிறையில் மேல் ராசி குணிதத்துகையால் பெருக்கி பெலன்படிக்கித் தள்ளினின்ற யெண் மாதவரும்படியான அவ்வித தேசபேதங்களுக் கிசைந்தபடி பொன்லாபமானது இவன் சம்பாதனவாதி யென்றறியவேண்டியது இதில் முன் கூடிய பிதுரார்சிதத்தைத் தவிர்த்தவயே தவிர வேறுபார்க்கக் கூடாது.

லாபவிறய பலன்கள்

சந்திரன் குரு கேந்திரத்தில் இருந்து சுபக்ஷேத்திர கெதனுகி பெலத்துடன் சொச்சஸ்தானத்தி லிருக்கினும் சுபபெலத் துடனும் பாபருடன் கூடாமல் நோக்காமலிருக்கில் சாதகனுக்கு அதிகலாபமும் சூரியன் (கூ, சு, அ, கஉ) பகை நீசக்ஷேத்திரமாகி இருக்கினும் விரயம் அல்பலாப மதிகமாக நேரு மென்றும் பாபரிருக்கினும் நோக்கினும் அசனசயனக் குரைவையுடையவனுகி வாழ்வன் சிம்மத்தில் சனி பாம்பு முதலிய பகைக்கோளிருக்கினும் சாதகன் விரயமிட மனமில்லாதவனுகி பலவித கஷ்ட நஷ்டத்துடன் பொருள் அசன சயன குரைவுடன் சுகமில்லாதவனுவன் யென்றும் மேலேகூறிய மார்க்கங்களில் சூரியனுடன் அல்லது சூரியனுக்கு (கஉ) மிடத்ததிபனின்ற விராசி ஞதன் (கூ, சு, அ, கஉ) நீகிய விடத்தினிற்கில் விரய மதிகமும் மேண்மையும் பெலத்துடன் விருத்திகளும் அயல் திசை சஞ்சாறவாசனுகியும் வாழ்வன மற்றவிடங்களாகிய பகைநீச இடங்களில் பகைவருடன் இருக்கில் பலவித

விரயஞ் செய்யவெண்ணமில்லாதவனுய் ஈயாத் துரோகனுகிப் பின் மிகுந்த நஷ்டம் செய்வனென்றும் சுபக்ஷேத்திரம் சுபபெலனிருக்கில் சத்விஷய சரசல்லாப விரயமும் மிகவுமேன்மைகளும் பரஸ்தலவாசமும் சர்வகீர்த்திகளையும் பொருந்தி வாழ்வனென்றறிய வேண்டியது சிம்மத்திலாவது சூரியனுக்கு (கஉ) மிடத்ததிபன் னின்ற இடத்ததிபன் பகைகீசம் பெற்றாலும் சனி முதலிய பாவக்கோள்கூடினாலும் சாதகனுக்கு அக்ருத்யமும் போக ஸ்திரீகளால் அகேகதன நஷ்டமும் சாதிப்ருஷ்டமும் தீவுதேசாந்தரவாசஸ்த சஞ்சாரனுகி வாழ்வனென்றறியவேண்டியது சிலவதிகளுகிலும் போக விஷய பிந்துவிருத்தி இல்லான் மற்றயச்சுபர் நோக்கில் சிலகாலம் விருத்தியும் சில காலம் விருத்தியற்றும் வாழ்வன் குசன் முதலிய பாம்பு வாழில் குரிரோக மூடையவன் வீரியமதிகன் இராகு சுக்கிரன் சூரியனுகில் போகவதிகனிச்சையுடையன் மேன்மையான விருத்திகளும் பிரபலமான மேன்மையுடனும் குரு புதன் முதலியோராகில் யோகசமரசன் சூரியன்கூடி குரு நோக்கில் கடும் போகனென் றறியவேண்டியது,

சந்திரனுடனும் கடகத்திலும் சந்திரனுக்கு (கக) மிடத்தாதிப னின்ற ஸ்தானுதிபனுடன் கூடிய சுபாசுப பெலன்படிக்குரிய யெண்களே சேர்த்து இராசியெண்ணிற் பெருக்கி சந்திரனுக்கு கிடைத்த பெலனுக்குரிய யெண்ணிற் கொடுத்த சேஷம் லாபமானபங்கு யென்றும் சூரியனுடனும் சிங்கத்திலும் சூரியனுக்கு பனிரெண்டாமிடத்தாதிப னின்ற இராசிநாதனுடன் கூடிய கிரகசுபாசுப பெலன்படிக்கி யேற்பட்ட யெண்களே அவ்விராசி யெண்ணுற் பெருக்கி சூரியனுக்குரிய பெலனின் யெண்ணிற் கொடுத்துக் கண்டசேடம் விரயமென்று மரியவேண்டியது லாபத்துக்கு விரயப்பங்கு குறைவானுல் லாபவிருத்தியும் ரோக்கமுதலிய தனமுடையவனென்றும் லாபப்பங்குக்கு அதிகமானுல் கடன் என்றுங்கருதி உரைக்கவேண்டியது.

கன்னியா லக்னம் முற்றிற்று.

புஸ்தக முதற்பாகம் சம்பூர்ணம்.

திசாபுக்தி பாவங்களாவன

துலாலக்ன குணகுண பாவங்களாவன

துலாலக்கின சாதகனுக்கு களத்திர வயதுமுடையவ னென்றும் புத்திர ரிரண்டு குல அபிமானி சம்பத்துமுதலிய கனவிருத்தி யுடையவனென்றும் தனவான் ராசர்களுக்கு அதிகபிரியன் நல்லசுகமுடையவன் என்றும் பரிமள கந்த புஷ்பப் பிரியனென்றும் நெருங்கிய மேன்மையுள்ள பெந்துவையுடை யவனென்றும் தருமசிந்தனை யுடையவனுகியும் (எ-வது) காலம் நோய்தீ இவைகளாலும் (ஐஉ-வது) வருஷம் மாதகாலம் வைசூரிமுதலியவிரணரோகம் (ஐக) பகையாலும் சித்த பேதநோயாலும் (உஅ-ல்) ஆயுதம் செலமிவையாலும் (சஉ-ல்) இனிய இஷ்டமுலும் பிரபலநோயாலும் கெண்டவுபாதிகளுண்டாகு மென்றும் சுபதிருட்டி லக்கினத்தைப்பார்க்கில் வயசு ஷ (அடு) யென்றும் கார்த்திகைமீ அமரபக்ஷ ஷஷ்டி ஞாயிற்றுக்கிழமை விருத்தியோகமும் புனர் பூச நக்ஷத்திரம் காலையில் ஈசுவரபாதார விந்தத்துக்காளாகுவ னென்றறிய வேண்டியது.

இந்த துலாலக்கின சாதகனுக்கு யோகாவயோக திசைகளும் புக்தி களும் சுபாசுப மாரகங்களும் கூறப்படுமென்றவாறு.

துலாலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு

புதன் சந்திரன் சனி இவர்கள் யோகத்தைக் கொடுக்கும் பிரபலரென் றும் புதன்றிசை சுக்கிரன் சந்திரன் சனிபுக்தியும் சந்திரதிசை குசன் ராகு சனி புதன் புக்தியும் சனி திசை புதன் சுக்கிரன் சந்திரபுக்தியும் சுக்கிர திசை சில பாகமும் புததிசையில் சிலபாகமும் குசதிசையில் சிலபாகமும் இராகு திசையில் பிரபல யோகத்துடன் கிரகவாகனம் பூமிகன்று காலி வாகனுதி முதலாகிய பிறபல சுகசௌக்கியங்களையும் இராசன் மான வெகுமானங்களும் சீவனராசயோகம் களத்திர புத்திர லாபங்களையும் மிக மேலான சுகபலன்களைக்கொடுக்கப்படு மென்றும் பிரபல யோகபலனுக நடந்து வரப்படுவனென்றும்.

புததிசை சிலபாகமும் குருதிசையும் குசதிசை சிலபாகமும் சுக்கிரதிசை சிலபாகமும் ரவிதிசையிலும் கேதுதிசையிலும் இவைகளினுடைய புக்திகளும் பலவகைக் கஷ்ட நஷ்டற்றுக்க சோகாதிகருமம் தனதானிய நஷ்டம் ஸ்தானப் ருட்டம் பொருள் சேதசோரம் ரோகபயம் பலவித துன்பங்களும் அரிட்டங் களையும் களத்திர புத்திர வரிட்டம் அரசன் பிரபு இவ்விதத்தோர்களின் விரோத மாச்சரியங்களையும் பலவகை சோகங்களையும் காராக்கிரக துன்பமும் மரணசமான வியாதி சம்பவங்களையுங் கொடுக்கு மென்றறியவேண்டியது.

இதில் மாரகர்கள் ரவியும் கேதுவும் குருவும் நால்வரது சனி செவ்வாய் திசைவரினும் இவர்களில் இராகு புதன் குரு குசன் கேதுஇந்த புக்திகளு மாரகத்துவத்தைகொடுப்பார்களென் றரியவேண்டியது. தேகாரிட்டரோகதுன் பங்களையுங் கொடுக்கப்படு மென்றும் சந்திரகேந்திர உச்சகோளல்லது சந்திர உச்சகேந்திர சமசப்தமத்தினின்ற கிரகங்கள் மாரகராயினும் இதில் குரு வாகில் மாரகத்தைக் கொடார்கள் யோகமழிப்பவர்க ளென்றும் ஆகையால் சுபாசுப பெலன்படிக்கிக் கண்டரிந்து கூறல்வேண்டிய தவசியமாதலாம் இவைகளையரிந்து கூறல்வேண்டியது.

மாதுரு அரிஷ்டமான திசாபுக்திகாலமறியவும்

சந்திரன்ரிசை இராகு சுக்கிரன் சனியிலும்
குசதிசை இராகு குரு புதன் சுக்கிரனிலும்
இராகுதிசை தனது சனி சுக்கிரன் புக்தியிலும்
குருதிசை சனி சுக்கிரன் சந்திரனிலும்
கேதுதிசை சனி சந்திரன் இராகுவிலும்

சுக்கிரதிசை சந்திரன் இராகு சனியிலும் மாதுருமரணமும் துக்கங்களையும் மாதுருவம்ச கூயமும் பலவகை தன நஷ்டத்தையும் பொருள்சேதங்களையும் பலவருத்த பலன்களையுங் தேகாரிட்ட ரோகதுன்பத்தையுங் கொடுக்கு மென்றரிய வேண்டியது.

பிதுரு அரிஷ்டம்

சூரியதிசை இராகு சனியிலும
இராகு திசையில் குரு சுக்கிரன் சனி சந்திரன்
குருதிசையில் சனி தனது ரவியிலும்
சனிதிசை தனது இராகு ரவியிலும்
கேதுதிசை குசன்றிசை சுக்கிரன் இராகு சனி புக்திகளிலும்

புததிசை ரவி இராகு சனி புக்திகளிலும் பிதாவுக்கு தேகாரிட்டரோக துன்பங்களுடன் பலவகை மரண கரும்ம பிதாவுக்குண்டாகுமென்றும் பிதூர் வம்ச கட்டமும் பிதூர்வகை துக்கசோகமும் இவ்விதி பலன்கள் நடந்துவரு மென்றறிய வேண்டியது

சகோதர வரிஷ்டம்

ரவிதிசை குசன் குரு இராகு புக்திகளிலும்
குஜதிசை இராகு சனி கேது சுக்கிரனும்
இராகுதிசை சனி புதன் சுக்கிரன் குஜனும்
குரு தனது குசன் சுக்கிரன் இராகுவிலும்
கேதுதிலச தனது குசன்இராகு குருவிலும்

சுக்கிரதிசை சந்திரன் சனி குசனும் இவ்வித திசாபுக்திகாலங்களில் சோகாரிட்ட ரோக துன்பம் பலவகை வருத்தமும் மனோ கஷ்டங்களும் சகோதர துக்கம் குடும்ப களத்திர புத்திர சோகமிவைகளையுங் கொடுக்கு மென்றறியவேண்டியது.

களத்திர லாப வரிஷ்டம்

இராகுதிசை குரு சுக்கிரன் சந்திரனிலும் சனிதிசை தனது புதன் சுக்கிரன் குருவும் புததிசை சுக்கிரன் சந்திரன் குரு சனியும் சுக்கிர சந்திரதிசை தனது சந்திரன் குஜன் புதனும் சனியும் குசசந்திரதிசையில் குரு புதன் சுக்கிரன் இவைகளிலும் விவாகம் சுபசோபனம் சரசசல்லாபம் போகபோக்கிய மேன்மைகளும் தனதானிய பிரபலலாபமும் பெரியோர் நேசமும் அசனசயன சுகங்களும் உண்டாகும் சனி ராகு குசன் சுக்கிரன் குரு இந்த புக்திகாலங்களில் களத்திர மரணமென்றும் சொல்லப்படு மென்றறிய வேண்டியது.

புத்திரபாவ லாபமும் புத்திரவரிஷ்ட திசைகளையுங் கூறுவோமாக

புதன்திசை குசன் சுந்திரன் குருவும் சுக்கிரதிசை ராகு குரு சுக்கிரன் குரு இவ்வித புக்திகாலங்களில் மேலான புத்திரலாபமும் குரு திசையில் புத்திரபாவ மூண்டாகில் உடனுக்குடன் சேதமாகி விடுமென்றும் குடும்பதுக்கமும் குருதிசை தனது சுக்கிரன் இந்த புக்திகளிலும் குசதிசை ராகுதிசை தனது புதன் சுக்கிரன் கேதுவிலும்.

இவ்வித ரவிதிசை மேலேகண்ட புக்திகாலங்களில் சாதகனுக்கு பலவித ரோகதுன்பமும் பொருள்சேதமும் மனதுக்குக் கவலை சாதகநோய்த் துன்பம் புத்திர கெண்டங்களும் பலவகை நோய்களாலரிஷ்டத்தையும் மனோவிரோத துக்கசோகத்தையும் பலவகைவருத்தம் அலைச்சல் பிராணகெண்டங்களையும் பலவித வருத்த பலன்களையுங் கொடுக்குமென் றறியவேண்டியது.

துலாலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு முதலாவது ஆயுர்பாவ பலன்களின் விதி யுணர்த்தப்படும்

சனியையும் சுக்கிரனையும் சுக்கிரனுக்கு அஷ்டம லக்னாதிபதி னின்ற ஸ்தானாதிபதியும் புதன் சந்திரனையுங் கொண்டு ஆயுர்பாவங் கூறவேண்டியது.

சுக்கிரன் சுட்சேத்திர உச்சகேந்திர கோணத்தில் சுபட்சேத்திர சம்பந்த னுடன் தனக்குரிய மித்துரு சுபபெலக்காரருடன் கூடியும் குரு பெலத்தும் புதன் சந்திரன் சுட்சேத்திர உச்சம் நட்பு தனக்குரிய கேந்திரகோணத்திலிருக்கினும் சுபதிருஷ்டியுடனும் சுக்கிரன் இருக்குமிடம் சுபசரஞ்சரமாகில் குருசந்திர னவ்விதிபோல் சரஞ்சரத்திலும் பாவர் இசைவில்லாதவரைக்

கூடாமலும் (உ, கஉ-ல்) பாவரின்றி இருந்திடினும் சாதகனுக்கு ஆயுர்பாவம் ஹூ (கஉ) யென்றும் சரமுபயமாகில் ஒரு கோளாகிய் பாவரைக் கூடினும் நோக்கினும் நீசம் பகைப்பற்றிருக்கினும் யந்திரன்கூடி கேந்திரமாயுரில் சாதகனுக்கு ஆயுர்பாவ ஹூ (ஈ) யென்றும் இரெண்டு பாவருடன் சுக்கிரன் குரு கூடினலும் நோக்கினும்சரமுபயமாகில் ஹூ (அசு)வறைதீர்க்கமென்றும் ஸ்திரம் ஸ்திரமாகி சனி புதன் பெலத்து சுட்சேத்திர உச்சத்தில் இருக்கினும் மூன்போல சுக்கிரன் முதலியோரிருக்கில் ஹூ (அஉ-க்)குள் யென்றும் ஸ்திர முபயமாகினும் உபயம் உபயமாகிநிற்கின் ஹூ (எசு) யென்றும் ஸ்திரமுபயமாகினும் ஹூ (சுசு) யென்றும் உபயம் சரசமாகினும் ஹூ (ருச) யென்றுங் கூறப்படுமென்றும் அரியவேண்டியது புதன் சந்திரன் சுக்கிரன் இவர்களிலொருவராகிய புதன் பெலமற்ற பகைநீச மரைவிடத்தினின்றும் இருக்கினும் பாபசம்பந்த நோக்கமில்லாமலு மிருக்கில் சாதகனுக்கு ஹூ (அச) யென்றும் சந்திரன் புதன் பெலமற்று முன்கூறிய புசன் அற்பபெலமாயிருக்கினும் மற்றய குரு சுக்கிரன் பெலத்தடனிருக்கில் ஹூ (சுசு) யென்றும்.

மூன்றுபெயராகிய குருவும் பகைமுதலிய (உ, ச) இவைகளிலிருந்து பகையோரைக்கூடினும் சாதகனுக்கு ஆர்பாவம் ஹூ (ஈஈ) யென்றும் சந்திர கேந்திர குருவினிடத்தில் வருஷம் (சுஈ) யென்றும் சுக்கிரன் பெலமற்றும் மூன்றுபெயர் வலுத்திருக்கில் ஹூ (ருச) யென்றும் இருவர் பெலத்தடனிருக்கில் சாதகன் ஹூ (சஉ க்) குள்ளென்றும் சுக்கிரனுடன் இருவித கிரகம் பகை நீசமாய்பாவரைக்கூடி பெலமற்று இருக்குமாகில் ஹூ (ஈஉ-க்)குள் யென்றும் சுக்கிரனுடன் புதன் ரவிமுதலியோர் கூடி ஸ்திரவிராசியில் (உ) யெட்டு கடகம் இவைகள் இருக்கினும் கன்னி மீர்க்கினும் குருகூடினும் அல்லது சுக்கிரன் மாத்திரம் துலாத்திலிருக்கினும் குரு சந்திரகேந்திரத்தினிற்கினும் அல்லது லக்கினகேந்திரமாஞலும் குசன் சுகேஷ்த்திரமாயி புதன் முதலியோரைக்கூடி சுபர் பூர்ணசந்திரன் நோக்கினும் சனி நீசம் முதலிய வகையைப் பெற்றிருக்கினும் ஹூ (சுஈ) யென்றும் இதில் பகை நீசக்கோளல்லது இருவிதபாவர்கள்கூடி நிற்கினும் நோக்கினும் ஹூ (ருச) யென்றும் பிர பல பாவர்கூடி நிற்கினும் நோக்கினும்ஹூ(ஈசு-க்) குள்ளென்றும் சுக்கிரன் புதன் சந்திரன் இவர்கள் துலாம் கன்னி மீனம் விருஷபம் மிதினம் கடகம் இவைகளி அவரவர்களுக்குறிய பகை நீசமுதலிய இடம் நீங்கியும் அப்படிப்பகை நீசமிருக்கினும் சுக்கிரன் மீனத்திலிருக்கில் புசனுடனும் கன்னியில் சுக்கிரன் இருக்குமாகில் புதனுடனும் இவ்விதமாசவும் சந்திரகேந்திரமாயும் இருக்கினும் வேறு எவ்விதபாவரும் பாற்காமலும் சனி துலாம் கடகம் மகரம் கும்பம் இவைகளிலிருக்கினும் சாதகனுககு ஹூ (எஉ) யென்றும் இவ்விதராசிகளிலேயே சுக்கிரன் புதன் முதலியோர் நீசமாகியும் பாவரைக்கூடி இருக்கினும பகைக்கோள்கள் கூடினும் சாதகத்துக்கு வருஷம் (ருச-க்)குள்ளென்றும் குருநோக்கில் பூரணவயதென்று மிகமேன்மைகளும் மேற்கூறிய ராசிகளில் பாவர்களே இருந்தும் சுபபெலனின்றிப் பகைநீசமுதலிய பாப

சம்மந்த சுபர்களாகி இருக்கில் பாலியத்திலேயே மரணமென்றும் பாபருஞ் சுபருங் கலந்து நிற்கில் சாதகனுக்கு வயசு வருஷம் (ரூஉ-க்) குமேல் (சஉ-க்) குள்ளென்றும் பாபபெலன் சாஸ்தியாகில் பாலியத்திலேயே மரணமென்றும் கண்டறிய வேண்டியது.

மேஷம் சிங்கம் விருச்சிகம் தனுசு மகரம் கும்பம் இவ்விராசிகளில் சுக்கிரன் புதன் இருக்கினும் ரவிறைக்கூடி புதனும் குருமுதலியோரிருக்கினும் நோக்கினும் கேந்திரத்தினின்றாலும் சந்திரன்பெலத்து சந்திரகேந்திராகினும் சாதகத்துக்கு வயசு வருஷம் (சுசு-க்)குள் ளென்றும் சனி பெலத்து சுகேந்திர உச்சத்துடன் முன்கிரகங்களுமாக விருக்குமாகில் வயசு வருஷம் (எஉ) வறையென்றும் சனி பெலனற்று பகை நீசகேந்திரத்தி லிருக்கில் சாதகத்துக்கு வருஷம் (டூஉ க்)குள்ளென்றும் சமமாகவரில் வருஷம் (சுரூ) யென்றும் சனி லின்றஸ்தானாதிபதி பெலவானாகி இருக்கில் வருஷ முன் கூறியவகையென்றும் கூறிய இராசிகளில் இருக்குங் கிரகங்களுடன் சுப பெலன் அதிக பிரபலத்துட னிருக்கில் சாதகனுக்கு வயசு வருஷம் (அசு) யென்றும் பாபகிரகத்துட னிருக்கில் சாதகனுக்கு வயசு வருஷம் (டூசு-க்) குள் ளென்றும் சனி குசன் முதலிய நான்குபாவருடன் முன்கூறிய இடங்களில் சேர்ந்தாலும் தனித்து நின்றாலும் வருஷம் (உக-க்) குள்ளென்றும் குருநோக்குமாகி லல்லது கிருணபக்ஷம் பஞ்சமிக்குள்பட்ட சந்தரபார்வை இருந்தாலும் வருஷம் (சுசு-க்)குள்ளென்றும் மேற்கூறிய சந்திரன் சுக்கிரன் புதனில் ஒருவர் பாவருடனும் இருவர் பெலமற்றிருக்கில் வயசு வருஷம் பாலியத்திலேயே மரணமென்றும் (உ) பெலத்த ஓர்கிரகம்பெலமற்று இருக்கில் வருஷம் (உக-க்) குள் மரணமாவனென்றறி வேண்டியது.

பாலாரிஷ்டவிதிகள்

சந்திரன் கிருஷ்ணபக்ஷயுதனாகி விருச்சிகம் விருஷபம் மீனம் இவைகளிலும் பாவறைக்கூடியுங் சுக்கிரன் (சு, சு, அ, கஉ-ல்) பகை நீசத்துடன் ரவிகுசன் சனி பார்யுகூடினு மல்லது (உ, கஉ) மிடத்திலிற்கினும் ரவி சனி குசன் தனாத்தினிற்கினும் குருமுதலியோர் சேர்மலு பார்க்காமலுமிருக்கில் வயசு (கஉ) அல்லது மீ (கஉ-க்) குள் சாதக மரணமாவனென்றும் சூரியன் சனி குசன் இவர்கள்கூடி (சு, அ-ல்) பகைநீச கோளாகியும் சுக்கிரன் பெலமற்று பாபிகளுடனும் இருக்கினும் சந்திரன் முதலானவர்கள் பகை நீச மரைவிடத்திலிருக்கில் சாதகன் ஹ (அ) மீ (அ-க்குள்) மரணமாவனென்றும் இரெண்டு பக்கங்களிலும் சூரிய சந்திரர்களுக்கு (உ, கஉ-லும்) பாபர்கள் பகை நீசக்கோளாகி இருக்கினும் பல பகையோரைக்கூடினும் சாதகன் ஹ (ச) மீ (ச-க்) குள்ளாகவே தாய்தகப்பனுடன் சாதகத்துக்கு பாலாரிஷ்டமாகுமென்றும் சந்திரன் குருயசந்து (சு, சு, அ-ல்) இருக்கினும் அல்லது கேந்திரகோணத்தினின்றாலும் இருபுரமும் பாவர்களைக்கூடி பகை நீசங்கள் பெற்று பெலக்குறைவுடன் இருக்கினும் அதிபகையாய் வாழினும சூரியன்

லக்கினத்தையாவது பெலமற்ற இடத்திலாவது நிற்கினும் சாதகத்துக்கு ஹு (ரு) ஸ (ரு-க்குள்) பாலாரிஷ்டகண்ட முண்டென்றும் அரியவேண்டியது. அவைக்குரிய திசாபுக்திகளையுங் கண்டரிதல்வேண்டும் இவ்விதம் பாலாரிஷ்ட குணத்துள்ள கிரகங்களை சுபராகிய குருமுதலிய சுபர்கள் பெலத்துடனிருந்து நோக்கினும் சகலவிதநோய்களும் நீங்கி ஆயுள் விருத்தியுடன் வாழப்படுமென்றுங் கண்டு கூறல்வேண்டும்

ஆயுள்கணித திசாபுக்தி நிர்ணயங்களாவன

சனியுடனும் சுக்கிரனுடனும் குசனுடனும் சுக்கிரனுக்கு அஷ்டமாதிபநின்ற ஸ்தானாதிபதியுடனும் உரியதும் துலாம் விருஷபமிவைகளினுடையவும் இருக்கும் கிரக சுபாசுப பெலன்படிக்கு உள்ள யெண்களையெடுத்து அந்தந்த இராசிகளின் யெண்களால் பெருக்கிய துகையை ஒன்றுபடுத்தியும் (கஉ௦-ல்) கொடுத்த சேடம் ஆயுசு யென்றும் பெருக்கிய துகையை (ரு-ல்) கழித்த சேஷம் அவஸ்தை யென்றும் (கூ-ல்) கழித்த சேஷம் திசையாகவும் வந்த ஈவை (ரு-ல்) பெருக்கி (சு-ல்) கழித்த சேஷம் புக்தியென்றும் இவ்வித அவஸ்தைதிசாபுக்தி காலம் சவ்யாப சவ்யவிதியின்படிக்கிக் கண்டறிந்த காலமாதகமென்றும் ஆயுர்பாவ நிர்ணயங்கள் கூறப்பட்டனவாம்.

தனகுடும்பம்வாக்கு முதலிய பலன்களாவன

குசனையும் குருவையும் விருச்சிகத்தையும் குசனிருக்குமிடத்துக்கிரண்டாமதிபனின்ற வீட்டுக்குடையவர்களைக் கொண்டு தனபாவ பலன்கள் சொல்ல வேண்டிய தென்றறியவும்.

குசன் உச்ச சொக்ஷேத்திரங்களும் கேந்திரகோணத்தில் தனக்குறிய சுப பெலஸ்தானத்தில் பகை நீசமின்றி சுபர்களாகிய குரு நீங்கியவர்களைக்கூடி குரு கடகம் துலாம் விருஷப தனுசுமிதுனத்தினிற்கினும் குசனுக்கு (உ-ம்) இடத்ததிபதிநின்ற இடத்துக்குறியவன் முன்போலக் குசனைப்போல பெலத்துடனிருக்கினும் சுபக்ஷேத்திர வாசனாகி (சு, அ, கஉ-ல்) இருக்கினும் சாதகனுக்கு தனமானது கோடியாந்திரனாகி வாழ்வன் இதில் தனக்கு விரோதிகளிருக்கினும் நோக்கினும் பாபபெலத்துடன் பார்த்து அல்லது சேர்ந்தாலும் ஓர் பாபியாகின் லக்ஷாந்திரவரை ஸ்திதியுள்ளவனென்றும் இருவித பாபிகளானாலும் சுபர்கள் பாபிகளாக கூடியல்லது பார்த்தாலும் தச சகஸ்திருந்தர தனவந்த னென்றும் மூன்று பாபிகள் இரு சுபர்களானாலும் மேற்கண்ட தனவந்தனென்றும் மேலே கண்டவர்களில் பாபபெலன் சாஸ்தியாகி கூடியிருக்கிறான் அல்பமான சில சகஸ்திருந்தர தனமுடையவ னென்றும் குரு சுக்கிரன் கூடில் சதாந்தரத்துக்குள் அல்ப தனவந்தனென்றும் குரு சுக்கிரனே பெலத்து அல்லது குசனுடன் பாபிகள் சேரில் அல்ப தனமுமின்றி ரொணஸ்தனாக வாழ்வனென்றுங் கண்டறியவேண்டியது.

குசன் (ரு, சு, அ, கூ, க்க-ல்) இருந்தும் பகை மூதலிய நீசக்ஷேத்ரகெதி களாகினுமல்லது பாபிகளேக்கூடினும் பாபபெலனதிக மானலும் சாதகத்துக்கு ரோணமதிகமாகுமென்றும் (உ-ல்) ரவி புதன் அல்லது சந்ரன்முதலிய பாவர் கள் குருவிருக்கின் ரோணமதிகமும் (கூ-ல்) புதன் ரவி முதலியோருடன் (உ, கூ-ல்) குசன் முதலியோரிருக்கினும் நோக்கினும் ரோணஸ்தனென்றும் ஓர்சுபர்கள் கூடில் அல்பமான தனமும் ரொணமுமுடையவன் யென்றும் (உ) சுபர்கள் சுபபெலத்துட னிருக்கில் ரோணத்துக்கதிக தன முண்டென்றும் ஆனு லல்ப தனவந்தனென்றும் சுபபெலஞ் சாஸ்தியாகிவ் தனகுடும்ப முதலிய விரு த்தி யுடனுவனென்றும் ரவி சனி முதலியர்கள் கன்னி விருச்சிகத்தில் னின்று குசன் முதலிய பாவரைக் கூடினும் நோக்கினுஞ் குசனுக்கு இரண்டாமிடத் ததிபனின்ற வீட்டதிபன் பெலமற்று அல்லது சூரியன புதனுக்கு இரண்டா மிடத்ததிபனின்ற வீட்டுக்குடையவன் பகை நீசமுதலிய குசன் ரவி சனி பாம்பு சுக்கிரன்கூடினும் அவர்களுக்குபனிரெண்டாமதிபனவ்விதமிருக்கினும் இரெண்டு முதலிய பாவரைக்கூடினும் அல்லது சுபராகினும் பாவர் இருக்கி னும் நேத்திரஊன பீடையுடையவனென்றும் சுபர் திருவ்ஷ்டியுடனிருக்கில் நேத்திர பீடைகண்டு உடன் னிவர்த்தியாகுமென்றுங் கண்டறிந்தும் இவை களில் ருரு சந்திரன் புதனுடன் கூடிய ரவிகள் சுபக்ஷேத்திர பெலத்துட னிருக்குமாகில் நேத்திர விருத்தி சுகத்துடனும் குடும்ப விருத்தியுடனும் வாழ்வனென்றும் அதிக மேன்பாடாகியும் விருத்தியை யடையும் என்றும் கண்டு கூறவேண்டியது.

குசன் குரு இவர்கள் துலாம் தனுசு மகரம் கும்பம் மேஷம் மிதுனம் கடகசிம்மத்தில் சேர்ந்தாலும் அல்லது தனித்திருக்கில் அவரவர்களுக்குப் பகை நீசம் நீங்கிய இடத்திலும் பகை நீசமாகி லத்தலத்தோனும் முன் கூறிய இருவரும் இருந்தாலும் அவருக்கவர் சமசப்த கேந்திரமானலும் அசுபபகை நீசத்தோர்களில் சனி ரவி சுக்கிரன் பாம்புகள் சேரமலும் மிதுனத்தினின் ரூலும் சாதகனுக்கு லக்ஷாந்திர தனவந்தனுவனென்றும் இதில் ஓர் பாவரைக் கூடி அசுபபெலன் பெற்று இருக்கில் தசசஸ்திர தனவிருத்தியும் இருவரு மியம்பில்லாத பாவற்கூடி இருக்கினும் நோக்கிலும் தனமில்லான் சந்திர னுக்கு ரெண்டில் சனி யிருக்கினும் பூர்வார்ச்சித தனத்தையின்றி நூதனர் சிதமுடையவ னென்றும் இதில் குருமுதலியோ ரிருக்கினும் பூர்வார்ச்சிதத் தை சிலவுசெய்வானே அல்லது நூதனர்ஜிதமடையானென்றும் சூரியனுக்கு (உ., கூ-ல்) இருக்கினும் இவ்விதமே பித்ரார்ச்சிதம் தவிரவேறு ஆர்ச்சித விருத்தி இல்லானென்றும் மேலே கூறிய இராசிகளில் சுபர்கள் பாபராகி இருக்கினும் பாவரைக்கூடினும் சகஸ்திராம்ச தனவந்தனென்றும் இதில் பாபர்களாகிய சனி குசன் கூடினும் தசசகஸ்திராந்திர தனமுடையவனென் றும் மிக்கவாச் செயமும் குடும்பவிருத்திகளு மூண்டென்றும் இவ்வித இராசி யில் சுபரே பெலம்பெற்று பாபதிருவ்ஷ்டி யின்றி யல்லது சேராமலாவதிருக்கில் லக்ஷாந்திர தனவந்தனென்றும் அதிககீர்த்தி மூர்த்திகளுடனும் வாக்கு சாதுரி

யனுகி செல்வாக்குடன் சத்தியவந்தனுகி வாழ்வனென்று மிகவு மேலான சுக சௌக்கியகுடும்ப விருத்திகளையும் மிக்க மேன்பாடுகளையும் அடைந்துவருவ னென்றும் அதிகபிரபலமாகி வாழ்வனென்றும் பாபரும் சுபருமாக கூடியிருக் கில் மிகவும் தன விருத்தியில்லாவல் சம விருத்தியான தனத்தையும் குடும்ப சமவிருத்திகளையும் அடைந்து வாழ்வனென்றும் சமயோக வானுவனென்றறிய வேண்டியது.

விருஷபம் கன்னி மீனம் விருச்சிக மிவைகளில் குசனிருந்தும் ரவி முதலிய பகைவறை புதன் முதலியோரைக் கூடினுலும் குருசனி அதிற் சேரினும் குசனுக்கு இரண்டாமிடத்திபனின்ற வீட்டதிபன் பாவருடன் பகை நீசம்பெற்றாலும் சாதகன் அல்பமான தன மில்லாதவ னுகி மிகவருந்தியும் பூர்வார்ச்சிதங்களை இழந்தும் பலவகை குடும்பங் களும் கஷ்டமாகி சொல்ப ரூணஸ்தனுகி வாழ்வனென்றும் இதில் குசன் சோகங்களி லிருபாவரைக்கூடி பூரணசந்திரனல்லது சந்திர னல்லது சந்திரதிருஷ்டி சுக்கிரதிருஷ்டியானுலும் சிலகாலம் தனமின் றியும் பூர்வதனங்களை யிழந்து பின் வயதில் தச சகஸ்திரத்துக்குள் பட்ட தனவந்தனுவனென்றும் இதில் அதிகமான சுபபெலத்துடன் தனக் குறிய பாவரானுலும் சுபரானுலுங் கூடில் லட்சாந்திரத்துக் குள்ளடங்கிய தனவந்தனுவனென்றும் இவருடன் ஒரு பாபிகூடின் தச சகஸ்திரந்தரத்துக் குள்பட்ட தனவந்தனென்றும் (உ) முதலிய பாவர்கூடில் சகஸ்திராந்தர்கத் தனவந்தனுவனென்றும் பாபபெலமே அதிகமாகி சுபபெலன்குறையில் சில ரூணஸ்தனென்றும் அல்பதனமுடையவனென்றும் கண்டறியவேண்டியது. இதில் குசன் தனித்து சுபபெல க்ஷேத்திரமாகில் அல்ப தனவந்தனுவன் யென் றும் விருச்சிகத்தில் ஒருவருமின்றி யிருக்கினும் கோக்கமில்லாவிடினும் அல்ப தனவந்தனென்றும் குசன் விருச்சிகமிவையில் சுபர்பெலத்துடன்கூடி இருக் கில் அதிக தனம்படைத்து வாழ்வனென்றும் பாபரேவாழில் மிகவும் மேன்மை யற்று ரூணஸ்தனுகி பலவகை வருத்தமடைந்தும் குடும்பவிருத்தி இல்லா மலும் பலவகை வருத்தமடைவனென்றும் சுபரும் பாபருமாகக் கலந்து லிற்கில் ரொணந் தனமிவைகள் சரியொற்றும் குடும்பம் அதிக விருத்தியின்றியும் சம பெலத்துடன் வாழ்வன் வாக்கு சமவிருத்தி யாகுமென் றறியவும்.

துலாலக்னத்தில் பிறந்தவர்களுக்கு தனவிஷய கணிதங்கள் கணிக்கும் விதிகளாவன

குருவுடனும் குசனுடனும் குசனுக்கு இரண்டாமிடத் திதிபதிலின்ற ஸ்தானுதிபதியுடனும் விருச்சிகத்திலும் லின்ற கோள்களுடைய பெலாபெலப் படிக்கில் கண்டவெண்களை இராசியெண்களாற் பெருக்கிவைத்துக்கொண்டு அத்தகையை புதன்கூடிய பெலாபெலப்படிக்குள்ள தகையில் பெருக்கியும்

* ரூணம் எனக்கூறியவை யாவும் கடனெனக் காணவேண்டியது.

பின் உச்சகேந்திராதிபர் அவரவர் விதிப்படிக்குள்ள பெலன் சாஸ்தியாகில் (உ) தடவை சமத்துலகையில் பெருக்கியதும் ஆகுயாளுல் ஒரேதடவை பெருக்கியதும் நட்பாகில் அதேதுகையில் பகையாளுல் அவ்வளவு துகை கடனென்றும் நீசமாளுல் சமத்துகையும் பகையாளுல் அவ்வளவு கைகடனென்றும் நீசமாளுல் சமத்துகை பெருக்கியது கடனென்றுங் கண்டறிந்து சொல்லவேண்டியது.

சகோதிராதி பலன்கள்

குசன் குரு குருவுக்கு மூன்றும்ராசிக்கதிபதிகின்ற இராசிளுதன் தனுச இவைகளில் பெலாபெல மூலியமாக வரிந்து கூறல்வேண்டும்

குரு தனக்குறிய நட்பு சுட்சேத்திர உச்சகேந்திர ஸ்தானங்களில் சுபருடனேயும் இருந்து பெலத்துடனிருக்கினும் ஸ்திரமுபய விராசிகளில் இருக்கினும் குருவுக்கு மூன்றுமதிபனின்ற ஸ்தாளுதிபதியுடனுவது ஸ்தானத்திலாவது குசன் சனி யில்லாமலும் பாம்பு இவைகளில்லாமல் இருக்கினும் நோக்காமலிருக்கினும் சுபபெலமர்கிய ஸ்திரமுபய மிந்த இராசியில் இருக்குமாகில் சகோதிரபாவம் யோளவிருத்திகளுடன் பிரபல சகோதிரர்கள் உண்டென்றும் சகோதிரவனுகூலமும் உடன்பிறந்தோர்கள் அதிக பிரபலமாக வாழ்வார்களென்றும் கூடிய கிரகங்கள் நட்பாயிருக்கில் அதில் கூடிய கிரகயெண்களிற் பாதிக்கணக்குள்ள சகோதிரமும் ஆகுயாகவிருக்கில் (கூ) பங்கு கணக்குள்ள சகோதிரங்களும் உச்சம்பெரில் இரெட்டிப்புள்ள கணக்கு சகோதிரமென்றும் பகையாகில் (வ) பங்குக்குறிய கணக்குள்ள சகோதிரலாபமென்றும் நீசமுதலியவையாகில் சகோதிரவிருத்தி கிடையாதென்றும் மேற்கூறிய இடங்களில் சுபர்களே பெலமில்லாதவர்களாகி யிருக்கினும் பாபிகளாய்ப் பார்த்தாலும் சகோதிரதோஷம் பலவகைக் கஷ்டமுங் சகோதிரமுண்டாகியும் சிலகாள் இருந்தும் மாரகத்தை யடையுமென்றும் அப்படிக்கொற்ற சகோதிரங்களால் குடும்பதோஷமும் இவ்விதம் நடக்குமென்றும் மேலேகூறிய குருவுடனும் குருவின்ற இராசிக்கி மூன்றுமதிபனின்ற இராசிநாதனுடனும் குசன் சனி முதலிய பாம்பிருக்கினும் அல்லது தனுச முதலிய மூன்றுமிராசிகளு மிருக்கில் சகோதிரமிருதென்றும் இவர்கள் நட்பு முதலிய பெலன் சுகேஷ்திர உச்சம் இவைகளிருந்தாலும் புதன் ரவிகூடி தனுச மூன்கூறியவர்களுடன் இருக்கினும் சகோதிர மாறிபமாக உண்டென்றும் அப்படிக்கொற்றய சகோதிரங்களியாதி பெற்றிருந்து பின் சகோதிரநஷ்டமும குடும்பதோஷம் உண்டென்றும் அல்பமான சந்ததி (உ க்) குள்ளாகிய சகோதிரமென்றும் இதில் சந்திரன் ரெட்டையான பெண்ராசிகளினின்றுலும் பெண் சந்ததியே விருத்தியதிகமென்றும் அவ்வித சந்ததிவகையும் பலவாறுக நஷ்டமும் சுபர் திருஷ்டியல்லது சுபர்கூடிபிற்கிலதிகமான பெண் சந்ததி விருத்திகள் அதிகமென்றும் மிக்க மேன்பாகிகளும் இஷ்டசித்திகளும் பாபர்களே பகை நீசம் முதலிவகையிற்று இருக்கினும் சகோதிர விருத்தி யடையமாட்டாரெனன்றும்.

குசனுக்கு மூன்றுமதிபதின்ற இடத்ததிபனின்ற ராசிஞதன் குரு முத லிய சுபறைக் கூடியல்லது பார்வை பெற்றும் சுபக்ஷேத்திரமல்லது கேந்திர கோண ராசியிலிருக்கில் சகோதிரமான புருஷசந்ததி யதிகவிருத்தியென் றும் பாபர்களே இருக்கினும் சுபர்கள் பகை நீசபாவர்களாக இருந்தாலும் சகோதிரவிருத்தி கிடையாதென்றும் பலவகை துக்கசோகாதி வருத்தமும் உண்டாகுமென்றும் சகோதிர கஷ்டபலன் அடையுமென்றும் மேற்கூறிய ஸ்தானம் ஸ்தாஞதிபதிகளுடன் (ரு) முதலிய வதிக பாவர்களிருக்கில் சகோ தர தோஷமென்றும் (உ) பாவர்களிருக்கில் சகோதர மானவைகளுண்டாகி வெகுவாய் மரணமும் பிதாவின் அன்யதாராதிகளின் புத்திரரான சகோதர விருத்திகளென்றும் ஓர் பாவர்களாகில் சகோதர மிருவகைக்கதிக லாப விருத்திகளுங் குடும்ப சுகசௌக்கியங்களு மேன்பாடுகளும் தனதானிய பிரபல மேன்மைகள் உண்டாகும் ஓர் சுபர்கூடினிற்கினும் நோக்கினும் (ரு-க்கு) மே லாகிய இருவித சகோதிரலாபமும் (உ) சுபர்கள் கூடினிற்கினும் சுபபெலன் சாஸ்தியாகில் பலவகை சகோதர விருத்திகளும் (ரு) முதலிய சுபக்கிரகங் களுடன் இருக்கினும் நோக்கினும் பாவர்கள் கூடாமலும் சூரியனுடன் புதன் கூடினிற்கினும் (சு-க்கு) மேலாகிய சகோதிரவிருத்திகளும் இவர்களுடன் ஓர் பாவர் கூடினும் பாவருஞ்சுபருங் கூடி புதன் சனிக்கிரகங்கள் வீட்டினிற்கில் அல்பசகோதர முடையவனென்றும்

குரு குஜன் இவர்கள் (உ, ரு, சு, அ, கூ) னும் (கக) இவ்வித இடங் களில் சுபர்களுடன் கூடி பெலன் பெற்றிருக்கினும் சுபர்கள் பார்த்தாலும் சகோதிரம் அல்பமான விருத்திகளும் இவ்வித இடங்களிலே பகை நீசக்ஷேத் திரமாகி வசிக்கில் சகோதிரன் விருத்தியாகி வாரூதென்றும் குசன் குரு சுக்ஷேத்திர நட்பு ராசிகளில் பெலன் பெற்றிருக்கில் சகோதிரங்க ளானவை (உ) முதலிய விருத்திகளும் பாம்பு முதலிய பகைநீசத்தோர் ஷை சொன்ன ஸ்தானங்களி விருக்கில் சகோதிரம் யேகமான அல்பவிருத்திகளும் சுபர்களு டன் ஓர்பாபிகள் பெலத்துக்கூடின் சகோதிரம் (உ) முதலிய விருத்திகளும் அவை பிதாவின் பின களத்திரவகைக் குண்டான சகோதிரமும் மேன்பாடு களும் குடும்பசுக சௌக்கியங்களுப் உண்டாகுமென்றும் மேற்கண்ட சுபர் களுடன் (உ) பாபர்கள் கூடி இருக்கினும் அல்லது மேலேகண்ட ஸ்தானங் களேச்சேரினும் நோக்கினுலும் சகோதிரமானவை விருத்தி இன்றியும் மரு மணம் பிதார்வுக்குண்டாகு மூலிய சகோதிர விருத்திகளுண்டாகு மென்றும் பலபாவர்கள் கூடிய யெவ்விதச்சகோதிரவிருத்தி வாரூதென்றும் உடன் சந் ததியுண்டாகினு மரிக்குமென்றும் கண்டறியவேண்டியது சுபர்களாகிய சுக்கி ரன் சந்திரன் புதன்கூடியல்லது னிற்கினும் சகோதிரமானவை பெண்விருத்தி யும் இதில் பெண்ணிராசியாகில் அதிக பெண்சந்ததியும் பரதாரம் பிதாவின் பினரூர பின்ஞேதரதாரவகைக்கென்றும் அவ்வித தாரமூலமான சகோதிர லாபமும் பூர்வபட்ச சந்திரனுகில் ஆண்சந்ததியு முண்டென்றும் அவ்வித ஆண்சந்ததியு மூலமான மேன்பாடுகளும சுகசௌக்கிய மேன்மைபுண்டாகு

மென்றும் குருரவி மூதலியதும் ரவியுடன் கூடிய புதனுகிலும் புருஷசந்ததி விருத்தியென்றும் சனி ராகு கேது முதலியோராகில் சகோதிர கூடியங்களும் கற்பசேதமே கொடுக்குமென்றும் அப்படி சகோதிர தீர்க்கமாலுலுங் குடும்ப துன்பத்தையும் விரோதத்தையுங் கொடுக்குமென்றுங் கண்டறிதல் வேண்டும்.

தனுசு சிங்கம் இவைகளில் முருமுதலிய பூர்வபட்ச சந்திரன்ரவி புதன கூடி லீற்கினும் வேறுபாவர்கள் கூடியல்லது பாரூமலும் பகைகீச சுபருட னிருக்கினும் சகோதிரமானவை பலவை விருத்தியுட னிருந்துஞ் சொற்ப காலத்தின்பின் குடும்பவிருத்திக் குரைவை யடைவார்களென்றும் பலவித மான மனோவருத்தமும் உண்டாகும் அந்தியகாலத்துள் சகோதிரர்கள் நஷ்ட மடைவர்கள்.

இவ்வி ஸ்தானங்களில் பாபருடனே சுபர்கூடி லீற்கின் (உ) முதலிய சகோதிரலாபமும் அவையின் விருத்திகளோயுங் கொடுக்கப்படு மென்றும் அப் படிக்கொற்ற சகோதிரர்களால் மேன்பாட்டை யடைவனென்றும் பெண் சந்ததி விருத்தியடையப்பட மாட்டாதென்றும் இதில் சனி சுக்கிரன் கூடினும் நோக்கினும் சகோதிரமானவை தன்பிதாவிற்கின்றி பரபுருஷர்களும் பிதா வின் மருதாரமூலியமாக அடையப்படுமென்றும் அப்படிக்கொற்ற சகோதிரம் அந்தியவறை (ரு-க்) குமேல் லீலேக்கப்படமாட்டா தென்றும் காணப்படும் அத் துடன் பாபசம்மந்த மதிகமாகில் பெண்சந்ததி தவிர புருஷ சந்ததிகள் தீர்க் கப்பட மாட்டாதெனறும் சகோதிரவகை மூலங்களினு லாரிஷ்டத்தைக் கொடுக்கப்படுமென்றறிய வேண்டியது.

குசன் குரு இவர்களும் குருவுக்கு மூன்றுமிடத் ததிபதி லின்ற இராசி னுதனும் விருச்சிகம் தனுசு விருஷபம் இவைகளிலாவது பகை நீச இடங்களி லாவது சனி பாம்பு முதலிய பாவறைக்கூடி லீற்கினும் நோக்கினும் குசன் மகரம் கும்பம் சிங்கம் மேஷம் இவைகளிலிருந்தும் சனி முதலியபெலமற்ற பகை கோள்களைக்கூடி லீறகினும் குரு விருச்சிகம் மகரம் விருஷபம் மிதுனம் சிங்கம் கன்னி இவைகளில் பகை நீசபாவராகிய சனி புதன்பாம்பு இவை இவைகளைக்கூடி லீற்கினும் நோக்கினும் பலவகையான வருத்தங்களுடன் மனதுக்குப் பலவகலைகளும் சகோதிர தீற்கமிருதென்றும் சகோதிரமுற்பத்தி யாகி கஷ்டமும் தனித்தாவது சுபருடனுவது மேலேகண்ட இராசிகளி லிருக் கின சந்திரகேந்திரமாகவு மிருக்கில் சகோதிர விருத்திகளும் மிக்கவனு கூல மும் சகோதிரங்களால் யோகலாபத்தை யடைவனென்றும் பாவர்சுபர் கலந் திருந்தாலு மல்லது மேலேசொல்லிய குசன் விருச்சிகம் மகரம் மீனம் மேஷம் மிதுனம் கன்னி இவைகளில் சுபர்களைக்கூடி இருக்கினும் சுபபெலர்களாகி மித்திருவாகிய பாவர்கள் லின்றாலும் குருவுக்கு (ரு) மிடத்ததிபதி இவையான சுபபெலத்தைப் பெற்று லின்றாலும் சகோதிரவனு கூலத்துடன் சகோதி வம்சம் பலவிருத்திகளுடன் வாழ்ந்துவரப்படுமென்றும் பிறபலயோகஸ்தர் களாகியும் அதிககீர்த்தி மூற்றி புகழ்ச்சியும் மடைவர் சுபரும் பாவருமான படி யால் சாதகனுக்கு சபவிசகோதிரம் பின்காலம் சகோதிர குடும்பதோஷம் பலவருத்தமுண்டாகி உடனை சுகமடைவன்.

மேஷங் கடகம் துலாம் கும்பம் மீனம் இவை குரு குசன் சேர்ந்தாலு மல்லது தனித்து நிற்கினும் சுக்கிரன் ரவி சந்திரன் புதன் முதலியோரைக் கூடிய பாவர்களுக்கு இணையுள்ளவர்களோடு சுப க்ஷேத்திரபெலத்துட னிருக் கினும் பகை நீசமின்றியுஞ் சனி குசன் பாம்பு முதலியோரை கூடியல்லது பார்க்காமலு மிருக்கினும் சாதகனுக்கு பெண்ரூசிகளிற்கூடிய சுக்கிரன் புதன் சந்திரனுகினு சகோதர அதிகவிருத்திகளும் ரவிமுதலிய குரு இவர்கள் கூடினுலும் நோக்கினுலுஞ் சாதகனுக்கு புருஷசகோதர மதிகமாய் விருத்தி யென்றும் அவையில் புருஷ ராசியிலும் பெண்கிரகத்தோடு கூடினுலும் னின்ரூலும் குருவுக்கு மூன்றுக்குடையவனின்ற அதிபன் மேற்கண்டபடி யெப் படி வலுத்து நிற்கப்படுகிறதோ அவ்விதம் நேரப்படுமென்ற சகோதர விருத் தியுடன் புருஷசந்ததி முதலியவகைகள் விருத்திகளும் குசன் முதலியோர் மிதன மீனம் தனுசு துலாமிவைகளில் நிற்கினும் பெண்பிறசை சகோதர விருத்திகளுண்டென்றும் இதில் இருக்குங் குசன் குரு இவர்களுடன் பாபக் கோள்களாகிய சனி முதலியோரிருக்கினும் நோக்கினும் பகை நீசனுல் சுபசம் மந்த வீக்ஷணியமின்றி இருந்தாலும் சகோதர விருத்தி கிடையாதென்று இதில் புதன் சுக்கிர அல்லது ரவி சந்திரனிவர்கள் கூடில் பிதாவின் மருசார வசாத்புத்திரபாவமானவை சாதகன் சகோதரமென்றும் வேறு எவ்வித சகோ தரமும் விருத்திக்கு அடையப்படமாட்டாதென்றுங் கண்டறிய வேண்டியது இவ்வித ராசிகளில் சனியுடன் குரு கூடினுலும் குசனுடன் சுக்கிரன் புதன் ரவி கூடினுலும் குருவுடன் ராகுகூடி இருந்தாலுஞ் சந்திரன் பார்த்தல்லது குச குருவுடன் கூடினிற்கினும்ச கோதர மூன்றுக்கு மேற்பட்டவை விருத்தி யுண்டென் றறியவேண்டியது.

இவர்களைத் தவிர மாரியவேறு எந்த கிரகங்களுடன் சேர்ந்த குரு குச னுகில் சகோதர விருத்திகளே கிடையாதென்றும் பலவகை கஷ்ட நஷ்ட துன்பங்களையும் கூறல்வேண்டியது.

சகோதர பாவகுணித விபரம்

குசன் குருவுடனும் குருவுக்கு மூன்ரூமிடத் ததிபதி னின்ற ஸ்தானங் ஸ்தானுதிபதியுடனும் குசனுக்கு மூன்ரூ மதிபதி னின்ற ஸ்தானுதிபதியுடனும் கூடிய கிரக யெண்களையும் தனுவில் னின்ற கிரக யெண்களையும் அந்தந்த ராசி யெண்களால் பெருக்கியுஞ் சுபா சுபப்படிக்கிக் கண்டுள்ள தொகைகளை ஒன்று சேர்த்து குரு னின்ற ராசிக்கி மூன்ரூமிடத்ததிபனின்ற ராசினுதன் பெலன் யெவ்வளவோ அவைக்குள்ள அந்த கிரக யெண்ணில்கொடுத்த சேஷம் சகோ தர மென்றும் அந்த யெண்ணையே குசனுக்கு மூன்ரூமிடத் ததிபதினின்ற ராசினுதனின்ற ராசினுதனின்ற இடத்ததிபதி யெண்ணிற் கொடுத்த சேஷம் சகோதர விருத்தியென்றும் அதில் மூன்கூறிய கிரகபெலத்தின் மேலெடுத்த யெண்களையும் பாகப்படி கண்டரிந்தவை ஸ்திரீ புருஷனென்றுங் கண்டுரை க்கவேண்டி இவ்வித பதினேரு மிடமான சிங்கம் சூரியன் சூரியனுக்கு பதி

ஞேரா மிடத்ததிபதி நின்ற ராசிஞதனுடன் கூடிய கிரக யெண்களோ ராசி யெண்ணற் பெருக்கி குரு பெலனுக்குரிய யெண்ணிற் கொடுத்த சேஷம் மூன் சந்ததியான சகோதிரமென்றும் சுக்கிரனின்ற ராசிஞதனின்ற வீட்டதி பனேயுங் கூட்டும்படி கணக்கில் நேரிட்டால் சாதகனேக் கூட்டிய சகோதிர மென்றும் அந்த ஸ்தானதிபன் இந்த கணக்கிற சேருமையாலுஞ் சாதகனேச் சேர்க்காதசேஷக்கணக்கு சகோதிரமென்றும் அவ்வித சகோதிர மார்க்க மூலிய வனுகூலபலனேயும் பெற்று அந்தியகாலவகுற மேன்மையடைந்து வரப்படு மென்றுங் கண்டுகூறவேண்டும்

மாதுரு கிரகவாகனம் பூமி வியாபாரம் இவைகளேப்பற்றிய பலன்கள்

சந்திரன் சனி இவர்கள் கேந்திரகோண சுகேஷத்திரங்களில் தனக்குறிய நட்பு ஆகி உச்சகேஷத்திர வாசனுகி சனி நின்ற ராசிக்கு (சு) மிடத்ததிபதி நின்ற ராசிஞதன் பெலன் பெற்று சுப சம்பந்தனுகி ஸ்தானதிபன் பெலத் துடன் கேந்திர கோணமும் தனக்குறிய சுபகேஷத்திர பெலத்துடனிருக் கில் சாதகனுக்கு மாதுரு அதிக காலமான விருத்தாவஸ்தையான வருஷபரி யந்தம் ஆயுள் விருத்திகளேயடைவளென்றும் அதிக மேன்பாடுகளும் பூமி முதலிய கிரகவாகனங்களும் பலவித கட்டடங்களும் மிகவும் பிரபலமாகச் செய்யப்படுவன் என்றறியவேண்டியது இவ்வளவு பெலனுமிருந்து சனிக்கு நான்காமிடத்ததிபதி நின்ற விராசிநாள் பெலமற்றிருக்கில் மாதுருவர்க்க நஷ்டமு முண்டாகுமென்றம் அறியவும்.

சனியும் சனிக்கி நான்காமதிபதி நின்ற ராசிக்கதிபதி நின்ற ராசிநாதன் பெலத்து இவர் கூடி மித்துருவாகி நட்பாகி உச்சஸ்தானங்களில் தனக் குறிய சுப பெலத்துடனிருக்கினும் பெலத்த கேந்திரகோண விராசியில் தனக்குறிய சுபா சுபர்களுடன் கூடி பெலத்து நிற்கினும் சுக்கிரன் சுகேஷத் திர கேந்திரத்துடனிருக்கினும் சந்திரன் முதலியோர் பெலத்துநிற்கில் சாதக னுக்கு மாட மாளிகை கூட கோபுரமுள்ள கிரகவாகனம் பூமி பிறபலங்களும் மாதுரு வர்க்கதீர்க்க பிறபலமும் இதில் விருத்தாவஸ்தையில் மாதுரு மாரக மென்றும் மாரக மென்றும் இதில் சனி நின்றதற்கு நான்காமதிபதி நின்ற ஸ்தானதிபதி பகைநீச பெலமற்று இருக்கில் மத்தியவதில் மாதுரு மரணம் சனி சந்திரனுடனே பகைநீசமுதலிய இடத்திலும் பாவரான பகைவரைக்கூடி நிற்கினும் (அ, சு-ல்) இருக்கினும் பாலியத்திலேயே தாய்மரணமென்றும் சந்திரதுக்கு நாலாமதிப நின்ற ராசிநாதன் சுக்கிரன் இவர்கள் பெலமற்றும் பகைபாவருடன் கூடி நிற்கில் தாய் பாலியத்திலேயே மரண மென்றும் இதில் சனியுங்கெட்டு சந்திரநீசம் நான்கு (அ) இவைகளில் தனக்கிணக்க மில்லாத பகைவரைக் கூடிநிற்கினும் தாய் பிறந்தவுடன் மரணமும் ஓர் சுபர் நோக்கி னும் பாலியா வஸ்தையில் மரண மென்றியவேண்டியது யென்றும் அவ்வித வகையினுல் துக்கசோகங்களுண்டாகு மென்றியவேண்டியது.

மேற்கண்ட சனி சந்திரன் சனிக்கி நான்காமதிபதின்ற ராசிக்கதிபதியுடன் தனக்குறிய சுபபெலன்பெற்ற இருவிதச்சுபரோடிருக்கில் தாய் யெவ்வனவஸ்தையில் மரணமென்றும் பலவிதமான கட்டடபூமி பிறபலமும் வாகனங்கள் பலவற்றுடன் பெரும் மேன்மையாக உண்டாகிய யோகவனுவனென்றும் தாய் வழிமாத்திரங் கெடுமென்றும் அறியவேண்டியது ஷை பிதாவுக்கு இரண்டு தாரயோகவானென்றும் ஓர் பாவர் மேற்படியோருடன் கூடிஜீற்கில் பிதாபல தாரயோகவானென்றும் பாலியத்திலேயே தாயானவள் மரணமாவளென்றுங் அவ்விதமான தாய்வம்சமும் வரவரகூயிக்கு மென்றுமரியவேண்டியது இவ் விதமிருந்து சுக்கிரனுக்கு நான்காமதிபதி ஜின்ற ராசிநாதனும் மெலமற்று இருக்கினும் சுக்கிரன் (கு, சு, அ) களில் பகை சேமல்லது பாவருடன் கூடி னும் வாகனமில்லாமலும் பகஷிகளேப்போல் சஞ்சரித்துவாழ்வனென்று மரிய வேண்டியது சனி துலாந் தனுசு மகரம் கும்பம் மிதுனகடக மிலைகளில் தனக்குறிய சுபக்ஷேத்திர வாசனுகியும் சனிக்கி நாலாமதிபதிஜின்ற ராசி நாதன் பெலத்து மேற்கண்ட ராசியிலிருக்கினும் சந்திரன் பெலத்து (ச, அ) நீக்கிய விடத்தினும் சனியுடன் அல்லது பார்வையாகிக்குரு முதலிய சுபர்கள் ஜின்றலும் சந்திரனுக்கு நாலாமதிபதிஜின்ற ராசிநாதன் சுகேஷ்த்திராதி சுப சமமந்த பெலத்துடனிருக்கினும் சாதகனுடைய மாதுரு குடும்பவிர்த்தியுடன் மேலாகி பிரபல விருத்திகளும் வாகனம் பூமிகளுடனும் வாழ்ந்தும் மாதுரு விருத்தாவஸ்தையில் மரணமடைவளென்றும அதில் ரவிபுதன் தனக்குள்ள பகைவருடன் அல்லது சிக்கம் மகரம் இவைகளிலிருக்கினு மாதுரு பாலிய மரணமல்லது விரோதியாகியும் பிதாவானவனிறுவித தாரத்தை மணப்ப னென்றும் (உ) பாபிகள் கூடின் மாதுறு யெவ்வனத்தில் மரணமும் (கூ) பாபிகளாகின் ஜெனனகாலமே மாதுரு மரணமும் மாதுரு குடும்பக்ஷயமும் பலவகை துக்க சோகங்களு மநேகவித வறுத்தங்களேயும் அடைவனென்றும் கிரகவாகனமும் பூர்வவிருத்தியும் பின கூயமாகியும் நேருமென்றும் பலவகை விவாதபலன் நடக்கும் யென்றும் மாதுருவம்ச கூயமுண்டாகுமென் றரிய வேண்டியது.

சந்திரன் பகை சேமல்லது நாலுயெட்டினிற்கினும் சந்திரனுக்கு நான்கா மதிபதிஜின்ற ராசினுதன் கெட்டும் மற்றயசனி முதலியோர் பெலத்து வாழில் மாதுரு யெவ்வன மரணமும் சந்திரன ஒன்றே மேற்கூறிய பெலமில்லாத இடத்தினின்றும் மற்றவைகள் பெலத்து ஜீற்கில் தாய்வார்த்தீக மரணமும் சுக்கிரனும் நான்காமதிபதி ஜின்ற ஸ்தானுதிபதியு மற்ற மூவரும் பெலத்து ஜீற்கில் கௌமாராவஸ்தையில் மரணமென்றும் சனியுங் கெட்டும் சந்திரனும் பெலமற்று சனிக்கி நான்காமதிபதி ஜின்றஸ்தானுதிபதியும் மகரமும் பாவ க்ஷேத்திர கிரகசம்மந்தமாகி பகை முதலியோரைக் கூடினும் பெலமற்று ஜீற் சினும பாலியாவஸ்தையிலேயே தாய் போய்விடுவளென்றும் தாய்வகையும் அழியுமென்றும் அவ்வகையாற் றுக்கசோகமும் வாகனமுதலிய வகைகூயமும் மேலேகூறிய கிரகங்கள் ஸ்தானங்களில் பாவர் முதலிய சிலபகையோரைக்

கூடினுமல்லது செவ்வாய் பாம்பு சனியைக்கூடினலும் தாய்பாலியத்திலேயே மரணமாவனென்றும் இதில் சுக்கிரன் மகரம் இவையில் பகை நீசமானகிரகங் களாகி யல்லது குச நீங்கியபாவர் கூடினும் நோக்கினும் தாய் பாடிய மாரகத் துடனும் பூமிகிரகவாகன விருத்தியின்றியும் பலவகைப் பொருள் சேதத்துட னும் அலிவனென்றும் இதில் குரு அல்லது ஒரு சுபர் கூடினும் நோக்கினும் மாதுரு யெவ்வன மரணமாவனென்றும் இரண்டு சுபர்களாகிய விரோதமில் லாதவர்களோக்கூடினலல் கௌமாரவயதில் தாய் மரணமென்றும் (ரு) முதலிய சுபருடன் அல்லது அவர்களுக்கேற்ற பாபர் சுபராகியவர்களுடன் கூடினலும் தாய் விருத்தாவஸ்தையில் மரணமாவனென்றும் கண்டறியவும்.

இதிற் கூடியபாவருஞ் சுபராகிப் பகைபெற்ற கோளாகிய சனி பாம்பு சேர்ந்து கூடினலுமல்லது பார்த்தாலும் சனி (ரு, சு, அ) களில் லின்றலும் சூரியனல்லது சுக்கிரனோக்கூடி கடகம் மேஷம் சனிக்கி பத்தாமதிபதி லின்ற ராசிநாதனுடன் அல்லது சந்திரன் வசாத் பத்தாமதிபதினின்ற ராசிநாத னுடன் பகை முதலிய நீசமும் அல்லது தனக்குறிய விரோதிகளோக்கூடில் தாய் கருமஞ்செய்யப்பட மாட்டானென்று கண்டறிதல் வேண்டும்.

பாபருஞ் சுபரும் சமதுல்யராகிச் சேர்ந்திருக்கில் சாதகனுடைய கௌ மாரதிசையில் தாய்மரணமென்றும் சிலநாள் வாகனம் பூமிகிரகங்களையும் சில நாளவைகள் ஒன்றும் விருத்தியின்றி யடைவனென்றுங் கண்டறிதல் வேண்டும்.

அதாவது இதன்மேலே சொல்லிய சனியும்சனிக்கி நான்காமதிபதி லின்ற ராசிநாதனும் சுக்கிரனும் இவர்கள் லின்ற இடத்தில் சுவிய ராசியதிகமாலும் முன்வயதில் கிரகவாகனம் பூமி கன்றுகாலியதிகமாக இருந்து பின்வயதில் பலவித கஷ்டமும் அபசவ்ய இராசிகள் அதிகமாலும் முன்வயதிலொன்றுமில் லாமல் பின்வயதில் கிரகவாகனம் பூமி கன்று காலிகள் சேருமென்றுங் கண் டறியவேண்டியது.

விருச்சிகம் மீனம் மேடம் விருடபம் சிங்கம் கன்னி இவைகளில் சனி சந்திரன் சனிக்கி நான்காமிடத்தாதிபதிலின்ற இராசிநாதனும் பகை நீசமாகிடி லும் பகையுள்ள பாவர்களோக்கூடினலும் அலலது நோக்கமிருக்கினும் தாய் பாலியத்திலே மரணமாவனென்றும் தாய்வழி கஷ்டமும் பலவகை வருத்தங் களையும் கொடுக்கும் இதில் சுக்கிரனும் பாவனுகி இருக்கில் கிரகவாகன க்ஷேத்திராதிக் குரைவுகளும் பலவகை வருத்தங்களும் கஷ்டபலனையுஞ் சுகமின்றியும் அடைவன்யென்றும் இவ்விதம் மேலேகூறிய ஸ்தானங்களில் பாவருடனிருந்தாலும் ஓர் சுபர்களானவர்கள் கூடினிற்கினும் சந்திரன் சனி நட்பு முதலிய சுபக்ஷேத்திரங்களில் பாவர்களோக்கூடி ஓர் சுபரான குரு கூடி யல்லது பார்த்தாலும் தாய் பிணியுள்ளவளாகி பாலியாவஸ்தையிலேயே மரண மென்றும் மேலேகூறிய கிரகங்களுடன் பாவராகிய சனி பாம்பு குசன் இவ ர்கள் தனக்குரிய க்ஷேத்திரங்களைவிட்டு விரோதம் நீசம் முதலாகிய பெலக்குறை

வான இடங்களிற் பகையுடன் கூடினலும் அந்தந்த ஸ்தானுதிபதிகள் பெல மற்று லிற்கினும் சாதகனுக்கு மாதருபாலிபமரணமும் சுக்கிரன்வலுத்தும் சுக் கிரனுக்கு நான்காமதிபதிலின்ற இராசிநாதன் சுபபெலத்துடனிருக்கில் சாத கனுக்கு கிரகவாகனம் பூமிமுதலிய பலசெல்வங்களானது யேராளமாகிடினும் மாதருபாலியத்திலேயே மரணமாவனென்றும் அரியவேண்டியது மேற்கண்ட தில் புதனுக்கு (ரு) மிடத்ததிபனின்ற இராசிநாதன் சுபபெலத்துடனிருக்கில் மாதருவம்ச விருத்திகளும் உண்டாகும் ஷே ஸ்தானம் கிரகம் பெலன்கெட்டு பகைவருடன் ப்வருடன் கூடினுல் தாய்வழியும் விருத்தியில்லாமல் பலவாமுக சிதறி நசித்தவிடப்படுமென்றும் பிதருவுக்கு பலதாரயோகனென்று மிவை களா லரிந்துக்கொள்ளவேண்டியதென்றும் கூறல்வேண்டும்.

ஸ்திரவிராசியிற் சந்திரனும் மற்றப் பகைவருடன் சத்துரு அவ்ஷடமமிவை களில் பகை யசம்பெற்று பாவரைக்கூடி லிற்கினுந் தாய் பாலியமரணமாவள் இரெண்டுவித ஸ்தானுதிபனுகிய சனியும் சனிக்கு நாலாமதிபதினின்ற ராசி நாதனும் பகை முதலிய நீசம் பலபாரைக்கூடி இருக்கினும் மேற்கூறிய மகரம் இவைகளில் பாவரிருக்கினும் தாய் பாலியமரணமும் பிதாவுக்கு மருதாரயோக னென்றுங் கண்டுகூறவேண்டியது.

சரவிராசிகளில் சனி சந்திரன் முதலியோரும் சனிக்கி நான்காமதிப னின்ற இராசிநாதனும் சரத்திலிருக்கினும் சுபக்ஷேத்திர சுபபெலத்துடனிருக் கில் ஜாதகனுக்கு விருத்தாவஸ்தையிவ் மாதருகருமமும் பிதருவகை அரிஷ் டங்களும் பலவகை துக்கசோகமும் மாதரு சந்ததி க்ஷயமின்றி விருத்தியடைந் தும் அவ்விதவகை மூலமான தனமுதலிய கிரகவாகன க்ஷேத்திரபலன்கள் சாதகனுக்குக் கிடைக்குமென்றும் வாழவனென்றும் அறியவேண்டியது.

மேற்கண்ட சனி சந்திரன் முதலிய மூவரும் உபயவிராசிகளில் இருக் கினும் சுபரைக்கூடினும் சுபட்சேத்திர பெலத்துடனிருக்கில் மத்திமாயுள் காலத்திலேயே தாய்மரணமென்றும் இம்மூவரும் இருவர் ஸ்திரசஞ்சாரமாகில் அல்பத்தில் மத்திமவயதில் தாய்மரணமும் ஸ்திரம்ஸ்திரமாகில் அல்பத்தில் அல்பத்திலும் ஸ்திரமுபயமாகில் அல்பத்தில் தீர்க்கவயதுவரை தாய்க்கபெல மும் உபய உபயமாகில் மத்திமத்தில் மத்திமவயதிலும் உபயஞ் சரமாகில் மத்தி மத்தில் பூரணவயது உபயத்தில் ஸ்திரமாகில் மத்திமத்தில் அல்பமும் சரசர மாகில் தீர்க்கவயதிலும் சரமுபயமாகில் தீர்க்கத்தில் மத்திமவயதென்றும் சரத் தில் ஸ்திரமாகில் தீர்க்கத்தில் அல்பவயதில் தாய் மாரகமென் றறியவேண்டி யது ஆகையால் இந்தவயதுகளே அந்தந்த சாதகன் ஆயுள்பாகமுதற் கண்டறிய வேண்டியது.

இதில் மேலேகூறிய மூன்றுகிரகங்களாகிய சனி சந்திரன் சனிக்கி நான் காமதிபனின்ற இராசிநாதனும் ஸ்திரமல்லது உபயங்களில் தனக்குறிய பகை பெற்றி பாம்பு சனி முதலியோரைக்கூடி இருக்கில் தாய் முதலிய கருமங்களுக் கே சாதகன் பாத்தியமின்றி யடைவன் என்றும் இதில் புதன் முதலியோ

ராகினும் கும்பம் விருடபம் கன்னி விருச்சிகம் இவைகளில் சந்திரனிருக்கி கினும் பரசொத்தும் பரவிஷய குருமபாத்திலும் பரபுத்திரஸ்வன் சுபர்வீ டின்றி பாபர்வீடாய் வீட்டதிபனும் சனிக்கி நான்காமதிபனின்ற ஸ்தானாதி பன் பர கிரகசம்பந்தம் பகை நீசமல்லது சனி சந்திரன் பாம்பு புதனேக்கூடி னிற்கினும் விருச்சிகம் தனுசு கும்பம் மிதுனம் இவைகளில் இருக்கினும் பர னுக்கு பிறந்தவனென்றும் பிதா பிரபல தாரமுடையவனென்றும் அவ்வித மனியாள்கள் பரபுருனேக்கூடி அனுபவிப்பர்களென்றுங் கூறல்வேண்டு வனவாம்.

வித்தியா பாவம்

சனியும் சனி னின்றதற்கு நான்காமதிபனின்ற ராசிநாதனும் புதனும்புத னின்றதற்கு நான் காமிராசிநாத னின்ற ஸ்தானாதிபனும் உச்ச சொக்ஷேத்திர விராசிகளிலல்லது சர முபயமாகினும் சுபக்ஷேத்திர பெலத்துடன் இருக்கி னும் நோக்கினும் சுபபெல சம்மந்தமாகி யல்லது பார்த்தாலும் சாதகனுக்கு வித்தையினுல் சீவனம் உண்டு இவர் கடகம் சிங்கம் ரவிசந்திரன் குசன் சுக்ஷேத்திர இடங்களுடனிருக்கில் ராசபாஷை உண்டாகும் அதனுல் லாபமடைவன் புதன் வீட்டிலல்லது புதனேக்கூடினும் கணிதபாஷைதாதி நூலரிவன்சுயபாஷையுள்ளவன் குரு சுக்கிரனுகில் ராசவித்தையிலும் வேதாதி காவ்யநாடகாலங் காறவித்தை சாஸ்திரபரிசய முடையவன் சந்திரன் புதன் இவருடன் சனி கூடினிற்கினும் நோக்கினும் கணிதாதி சோதிஷமும் வியா பார இயல் புக்குறிய வித்தைகளையுஞ் செய்வன் முசன் இராகுபாம்பயகில் அன்யபாஷை பிறபல வித்துவானுகிச் செயஞ் செய்து வாழ்வனென்றும் மிகவு மேன்மைகளுஞ் சுகசந்தோஷனுவன் மேற்கூறிய கால்வரிலிருவர்பெலமற்றும் இருவர் வலுக்கில் சமவித்தை புரிவன் பெலமுடைய கிரகம் யெவருடன் கூடியதோ அதற்கு இசைந்த வித்தையும் மூவர் பெலக்கில் (கூ) பாகவிருத்தி யுள்ள வித்தையும் நால்வரும் பெலத்து னிற்கில் அநேக வித்தையும் இதில் சுக்கிர சம்மந்த பெலத்துடனிருக்கினும் நோக்கினும் சங்கீதாதிவித்தை மேன்மையும் ஷ சனி புதன் சுக்கிரன் ரவி இவர்களுடன் தனுசுவிருஷபம் சிம்மம் இவைகளிருக்கினும் சங்கீதவித்யாதி மேன்மையுடைய வல்லவ னென்றும்.

மேற்கூறிய நால்வரில் (உ) அல்லது மூன்றுபெயர் சனிக்கும் புதனுக்கும் நான்காமதிபதி னின்ற இராசிக்கி கேந்திரகோணத்தில் துலாத்துக்கு (ஈ, அ, கூ) இந்த இடங்களாய்வரில் விவாத வித்தைபுரிந்து இராசசங்கசீவன யோக வானுவனென்றுங் கண்டரிய வேண்டியது.

இதற்கு மாருபட்டுப் பகைநீசமல்லது பாப க்ஷேத்திரக்களி லிருக்கினும் சாதகனுக்கு வித்தியா பாகமானவை குறையுடன் யெவ்விதவித்தையின் விஷ யமும் பிறபலத்துவமின்றி யடைவன் யென்றும் ஸ்தானாதிபதியும் புதன் சனி இவர்கள் பெலமற்ற இடங்களில் பகைநீசமிவர் அல்லது கூடியோர் பார்த்

தோர் பகை நீசர்களாகினும் பாபர்களாகினும் யெவ்வித வித்தைகளும் விருத்திக்கி வாருதென்றுங் கண்டறிந்து கூறல்வேண்டும்.

இவ்விதசனி புதனுடன்கூடினும் மேடம் துலாம் மகரம் இவைகளிலிருக்கினும் அவயிற் புதனல்லது சனிகூடினலும் வியாபாரமுயர்ச்சி பெருவனென்றும் புதன் சுக்கிரன் இவர்கள் கடகம் மகரமிவையில் சந்திர சுக்கிர கேந்திரத்தில் ஒன்று நீங்கிய கேந்திரமாயும் குசனேக்கூடி லிற்கினும் நோக்கினும் வியாபார சீவனமுடையவ னென்றும் அவ்வித வியாபாரமூலிய புகழ்ச்சிகளே யடைவனென்றுங் கருதி யுரைக்கவேண்டியது.

மாதுரு பாவாதிகளுங் கிரகாதிகளின் கணிதங்களும் பாஷாத்திர கெணிதமும் கூறப்படும்

சனியுடனும் மகரத்திலும் புதனுடனும் சளிக்கும் புதனுக்கும் நான்காமதிபதி லின்ற இராசிநாதனுடனும் கூடிய யெண்களே பெலாபெலப்படிக்கு அவரவர்ராசி யெண்களிற் பெருக்கி சனிக்கி நான்காதிப லின்ற இராசிநாதனுடைய சுபத்திற்குறியயெண்ணிற்கொடுத்தசேஷம் பாஷைவித்தையென்றும் அதில் யெந்த கிரகத்தில் விசேஷபெலத்துடன் கொடுக்கும் யெண்ணிகமோ அவ்வித கிரகத்திற்குறிய வித்தை பிரபலவாளுவ னென்று மேலேகண்டு ஒன்றுசேர்த்த யெண்களேயும் சுக்கிரன் சுக்கிரனுக்கு நான்காமதிபதிலின்ற ராசிநாதர்களின் சுபாசுப பெலத்துக்கேற்ற யெண்ணேயுங்கூட்டி சுக்கிரனுக்கு நான்காதிபதி லின்ற வதிபன் யெண்ணிற்கொடுத்த சேஷம் எவ்வளவோ அத்தனே ஸ்தானமுள்ள கிரகாதி பூமியென்றும் இவர்களுடனுங் குசனுடனுங்கூடிய யெண்களேயுஞ் சேர்த்துபார்க்கில் பூமிபயிற்விருத்தி யென்றும் மேலேகண்ட தகைகளுடன் சந்திரன் சந்திரனுக்கு நான்காதிபனின்ற ராசிநாதனுடன் கூடியவர்களின் பெலாபெலயெண்ணே சூரியன் பெலாபெலதுக்குறிய யெண்ணிற்கொடுத்த சேஷம் மாதுரு வென்றும் அவ்வெண்களேயொன்றுசேர்த்து (டு-ல்) பெருக்கி ஒன்பதில் கழித்தசேடந் திசையிலும் இவை (டு-ல்) பெருக்கி (கு-ல்) கழித்த சேடம் புக்தியென்றும் சவ்யாபசவ்ய லக்ஷணமூலியமாக கண்டறிந்த திசாபுக்தி காலங்களில் மாதுருகருமமென்றுங் கூறப்படும்.

புத்திர பாவ பலன்கள்

புத்திரஸ்தானம் சனி புதக்ஷேத்திர மாயுரில் புத்ராரிட்டம் இந்த லெக்கினத்திற்குண்டென்றும் இதில் கிரகசார ஸஞ்சாரரீதியால் புத்திரபாவங்கள் கூறப்படும்

சனிபுதனிவர்களும் சனிக்கி ஐந்தாமிடத்திதிபலின்ற ராசிநாதன் குரு குருவுக்கு ஐந்தாமிடத்திதிபலின்ற ராசிநாதனிவர்க ளிவர்களின் பெலத்தின மேல் புத்திரபாவம கூறப்படுமென்றும் அவ்விதமாக சொல்லவேண்டியவைகளே கீழேசொல்வோமாக.

மேற்சொன்னஐவரும் தனித்தல்லது சேர்ந்துபகை நீசம் நீங்கியதும்ம மரகும்பம் மிதுனம் கன்னி இவ்விடங்கள் நீங்கிய இடத்திலும் ரவிசந்திர சுக்கிரன் குருசனிகுச ஜீவ்வித கிரகங்களின் வீட்டில் நின்றும் சுபசம்மந்தர் களல்லது சுபதிருஷ்டியுடன் தந்தமக்குரிய சேத்ரம் நட்பேரருடன் கூடி நீங்கிலும் நோக்கினும் ஜாதகன் புத்ரகுடும்ப விருத்தியுடையவனுய் பலிப்பவ னென்றும் புத்திரகரும முண்டென்றும் ஐவர் களுக்கு மியல்பில்லாத இடத் திலும் பகை நீச சேத்ர கெதியுடன் பெலமற்றும் பகைவருடன் அல்லது பகை நீசசேத்திரங்களில் நிற்கிலும் நோக்கினும் பாவரைச் சேர்ந்தாலும் புத்திரர்க ளானவர்கள் இன்றியும் கருமபுத்திரரின்றியும் பலவகை வருத்தமடைவ னென்று சொல்லப்படும் மேற்குரித்த ஐவர்களையும் பிரித்து தனித்தனியாக ஒவ்வொருகதிகளாய் விபரம் வருமாறு சொல்லுவோம்

சனி சுசேத்திர உச்சமான சுபசேத்திரங்களுள் பகைநீசமின்றியும் குரு கேந்திர கோணமல்லது விருச்சிகங் கன்னி இவைகளிலின்றலும் புதன் கேந் திர மல்லது பணபரவாசனுகி ரவியைக்கூடி நிற்கினும் சனி பெலமற்று குசன் வீடல்லது ரவிகிரகத்தில் வாசஞ்செய்தும் சனிக்குங் குருவுக்கும்நந்தா மிடத்தாதிபதி நின்ற ராசிநாதன் புதன் சனியின்றி மற்றயரவிகுரு குசனிவர் களானலும் சுபக்ஷேத்திர வாசகர்களாகி நிற்கினும் சாதகனுக்குப் பலவித புத் திர விருத்தியுடன் கரும புத்திரனுண்டென்றும்

இவர்கள் பாபக்ஷேத்திரங்களில் பாவருடன் கூடினலும் சனி புதனுகினும் பகை நீசத்துவமின்றி பெலத்துடனிருக்கினும் புத்திரர் கிடைக்க மாட்டாதென்றும் இதில் சனி பாம்பு வலுத்த சந்திர திருஷ்டியல்லது சந்திரனைக்கூடில் குருபுத்திரனின்றி அன்பர்களுக்கு உதித்த புத்திரனென்றும் அவ்வித புத்திரன் தனக் குண்டானவனுகி பாவிப்பன் யென்றும் சுக்கிரன் பெலத்து மேலேகண்ட பாவரைக்கூடியும் சனி யேழாதிபதி நின்ற ராசிநாதன் சுபட்க்ஷேத்திர கெதனுகி பெலத் துடன் கும்பம் மிதுனம் விருச்சிகம் கன்னி மேஷமிவைகளில் தனக்குரிய சுபரைக்கூடி நிற்கினும் நோக்கினும் மருதார புத்திர லாபங்களால் கரும பா வஞ் சாதகனுக்கு லபிக்குமென்றும் அதில் சனி முதலிய பகைவர்கூடி யல்லது பார்க்கில் அவ்வித புத்திரனும் குடும்ப விருத்தியின்றி மரித்து விடுவன் யென் றும் சனி யல்லது சனிநின்ற பஞ்சமாதிபநின்ற ஸ்தானுதிபதி ஸ்திரவிராசியி லிருக்கிலும் குருவசாத்பஞ்சமாதிபனினற ஸ்தானுதிபன் பெண்ராசியல்லது பெண்கிரகங்களுடன் கூடினிற்கினும் முதற்ப்பெண்ணே சனிக்கப்படு மென்று இதில் பெண்கிரகத்தோராகிய அமரபட்ச சந்திரன சுக்கிரனிவர்கள் அதிக பெலத்துடன் சனி குரு இவர்களுக்கு பஞ்சமாதிபனின்ற ஸ்தானுதி பதிகளாகிவரில் பெண்ணேசாஸ்தி அதிவிருத்தியடையுமென்றும் குரு குசன்

* கேந்திரம் தவிர பணபத்மானவை எனனவெனில் லக்கினமுதல் (உ, டி, அ, கக) ஆகும் ஆபோக்கிலியம் (ரு, சு, கூ, கஉ) ஆகும்.

ரவி முதலியோர் ஷ ஸ்தானாதிபதிகளாய் வலுத்தும் சுபக்ஷேத்திரகெதியுட னிருக்கில் புருஷ சந்ததிகள் அதிகவிருத்தி யடையுமென்றும் இருவகையான பாபருஞ் சுபருமாக விருக்கில் சிலகாலம் புத்திரவிருத்தி இன்றி யடையப் படும் பெண் ராசிகளிற் சிறிதும் புருஷ ராசிகளிற் சிறிதுஞ் சஞ்சரிக்கில் ஸ்திரீ புருஷ புத்திரலாபமும் உண்டென்றுங் காணல்வேண்டும்.

சனி சூம்பம் மேஷம் மிதுனம் சிங்கம் இவைகளில் பாம்பு முதலியபாவ ருடன் புதனைக்கூடினும் புதன் பகை நீர்ச்சக்துரு க்ஷேத்திரமல்லது சத்துரு வுடன் கூடினும் பெரும்பாவகிரக சம்மந்தமானாலும் குரு பெலமற்றும் பாப ருடன் கூடினும் சனி குரு இவர்களுக்கு பஞ்சமாதிபனின்ற ஸ்தானாதிபதி பகைநீசடக்ஷேத்திரம் சனி புசன்வீடு அல்லது இவருடன் கூடிநிற்கினும் கும்பம் மிதுனம் விருச்சிகம் கன்னி இவைகளில் சனி புதன் கூடி பாம்பு முதலியோர் சேர்ந்திருந்தாலும் பகை பெற்றோரைக் கூடினும் புத்திரன் கிடையாது இவைகளில் குரு சந்திரகேந்திரமாகி புதரவியுடன் விருச்சிகம் கன்னி கும்பம் மிதுனமிவைகளி லிருக்கினும் இரெண்டு சுபர்கள் பெலத் துடன் மேலேகண்ட ஸ்தானங்களி லிருக்கும் புதன் சனி இவர்களுடனின்ரு லும் அல்ப புத்திரரும் அகாலத்திலும் மூன்பெண்களுண்டாகி வருந்திகால தாமதத்தின்மேல் புத்திரலாபமுண்டென்றும்

மேற்சொல்லிய சனி புதனிவர்களுடன் மேலேகண்ட இராசிகளில் மூன்றுவகைச் சுபர்கூடில் ஒருவருக்கொருவர் சமதுல்லபமல்லது மைத்திரர்க ளாகி நிற்கினும் நோக்கினும் புத்திரவிருத்தி பிரபலத்துடன் உண்டென்றும் சுபர்கள் ஒருவருக்கொருவர் பகை நீசாதி அபெலராகி இருக்கினும் நோக்கினும் புத்திர பாவங்களுண்டாகி உடனுக்குடன் நஷ்டமும் அவைகளாற் பலவித துன்பங்களையும் அடைவனென்றும் இவர்களுடன் பாவரே கூடிநிற்கினும் நோக்கினும் புத்திரவிருத்தி கிடையாதென்றும் பாவரே சுபராகி வாழில் காலாந் தரத்தின்மேல் புத்திர விருத்திகளுண்டாகு மென்றும சுபரும் பாவரு மாகிக்கலர்ந்து நிற்கில் அல்பமானவேக புத்திரணிருந்தும் பிரயோசனமின்றி வாழ்வனென்றும் கூறப்படும் யென்றறியவேண்டியது பாப சுப சம்மந்த ஸ்தா னாஞ் சுப க்ஷேத்திரமானால் புத்திரபாவ மானவை பின்ரூர மூலியம் கால தாமத மிவ்வித புத்திரலாப முண்டாகு மென்றும் புத்திர விரோதங்களையும் அடைந்து வாழப்படுவனென்றும் அரியவேண்டியது.

சனி குரு துலாம் விருச்சிகம் தனுசு மேடம் மிதுனம் சிங்கமிவைகளில் சேர்த்தாலும் தனித்து அவர்களுக்கு பஞ்சமாதிப னின்றஸ்தானாதிபன் பெலத் துடன் கடகத்திலாவது துலாம் தனுசு மிதுனம் இவைகளில் அல்லது கேந் திரகோண கெதனுகினும் சுபவீட்சண்ய மல்ல சுபதுரைக்கூடினாலும் பெலா ட்யர்களாகி இருந்தும் மேற்கூறிய பூரணசந்திரன் சூரியன் குசன் குரு இவர் களுடனல்லது இவர்களின் வீட்டினின்ரூலும் பெலத்துடனிருக்கில் பாம்பு

புதன் சனியை கூடாமலிருந்தாலும் புத்திர விருத்தி யேராளபுத்திரர் உண்டென்றும் வைகுபுத்ர்யோகவானுகியும் வாழ்வானென்றும் அரியவேண்டியது

மேற்கூறிய சுபர்களில் ஒருவர் பெலமுற்றும் மேலே சொல்லிய இடங்களில் சனிக்கி ஐந்தாமிடத்ததிபதி லின்ற ராசிநாதன் குருவுக்கு ஐந்தாமிடத்ததிபதி லின்ற ராசிநாதனிவர் பெலத்துடன் சனி புதன் வீட்டிலிருந்தால் சுபர்களாகியும் மற்றவிடத்திலிருக்கில் சுபர்களானுலுமல்லது சுபரேர்பாபரானுலும் சேத்திர சுபவாசபெலத்துட அல்லது ரவி புகனேக் கூடினுலும் நட்பாகூியுச்ச க்ஷேத்திரத்தில் பெலத்துநிற்கினும் நோக்கினும் சாதகனுக்கு புத்திரவிருத்தி பலவகை இல்லாமல் (உ.`முதலிய புத்திர விருத்தி யோகமேன்மைகளுங் குடும்ப சுபசந்தோஷமும் இஷ்டகாரிய செயசித்திகளும் வஸ்திராபரண பூஜி தனுகி வாழ்வனென்றம் கண்டரியவேண்டியது.

சனி யல்லது குருவுடன் பாம்பு புதன் ரவியுடன கூடியல்லது அவர் வீட்டில் இருக்கில் சாதகனுக்கு புத்திர விருத்திகிடையா தென்றும் இந்த பாவர்களுடன் ஓர் சுபருடன் கூடிநிற்கினும் பல சுபர்கள் கூடினுலும் அந்த சுபர்களானவர்கள் பெலமற்ற பாபத்துவமுடையவராக யிருக்கில் புத்திர உற்பத்தி யுண்டாக்கி உடனுக்குடன் கஷ்டமும் பலவித மானவருத்தமும் குடும்ப துக்கமும் பலவித கஷ்டபலனையுங் கொடுக்கப்படுமென்றும் அரியவேண்டியது.

மேலே கண்ட ஸ்தானுதிபர்களுடனும் ஸ்தானத்திலும் பாவர்களுடனும் கூடினும் பலவகை வருத்தமும் ஞானுதி பீடைகளும் உண்டென்றும் பல வகை வருத்தங்களுமுண்டாகு மென்றும் மேற்கண்ட பாவர்களுடண் ஓர் சுப பெலத்தோராவது இரு சுப பெலத்தோற் மேற்கண்ட விராசிகளில் இருக்கினும் நோக்கினும் யேக புத்திரத்துவமான அல்ப புத்திரயோகப் பிரபல்லிய முண்டென்றும் மூன்று முதலிய சுபர்களுடன் கூடி லிற்கினும் நோக்கினும் சாதகனுக்கு புத்திர பலவித விருத்திகளுடன் இருக்கில் பெண் சந்ததி விருத்தியும் புருஷகிரக சம்மந்தமாகில் புருஷ சந்ததி விருத்திகளும் மேன்மைகளும் குடும்பசுக சௌக்கிய முண்டென்றுங் கூறப்படும்.

இதில் சனி குருவுடனும் இக்கிரகங்களுக்கு ஐந்தாமிடத்ததிபதி லின்ற இராசிநாதன் இவர்கள் தங்களுக்குரிய பகைநீச க்ஷேத்திர கெதிஇருவகையார் சுபட்சேத்திர பெலத்துடன் இருக்கினும் அவ்ப புத்திரயோக மென்றுமிகவுமேன்மையான தனதானிய கிரகவாகன விருத்திகளும் இஷ்டசன்மானவெகுமானமும் தேவதாபக்திகளும் புண்யஸ்தல தரிசனமும் உண்டாகும் இதில் மூன்றுவகைக் குறியோர் சுபபெலத்துடன் இருக்கினும் சாதகனுக்கு புத்திரவிருத்தி (கூ-க்கு) மேலான குடும்பங்களுடன் மிகவும் பிறபலராகி வாழப்படும் அதிக ஞானுதி மேன்பாடுகளுண்டென்றும் குடும்ப சுபசந்தோஷமும் இஷ்டகாமிய வெற்றிகளும் உண்டென்றும்.

நான்குவகையான கிரக சுபபெலன்களுடன் இருக்கில் சாதகனுக்கு பிரபலமான பலவித புத்திரபாவ மேன்பாடுகளும் குடும்ப சுபசந்தோஷ உத்தம பலனாக நடக்குமென்றும் தனதானிய விருத்திகளும் நூதன கிரகபலிதமும் அதிக மேன்மையும் உண்டாகும் இவ்வித கிரகசுபபெலத்துடன் குரு புதன் முதலிய சுபர்கள் கும்பம் கடகம் மிதுனம் துலாமிவையிலொன்றில் சனி கேந்திரமான துலாமாகவுஞ் சுக்கிரன்பெலத்தும் கேந்திரகோண சுபட்சேத்திர விடமாகி தனக்குரிய பகையுள்ள சுபசம்மந்த மித்துருவை யுடையோருடன் கூடிநிற்கில் சாதகன் விசேட அட்டமாசித்திவல்லபனாகி பிரபலத்துவ நித்தியத்துடன் உலகத்தில் யுகாந்திரக்கணக்குள்ள ஆயுளைப்பெற்றும் விதியை நிகர்த்தும் யோகியாகிப் பின் சித்தனாகி முனிவனாய்த்திரிவன் இதில் சனியல்லது வேறு எவ்வித புதன் பாவறொருவர் பார்க்கவல்லது சேரில் விசேஷ ஆயுர்தாயம் நூருவரையென்னும் சுபத்துவமில்லாமல் சனி முதலியோர் பார்த்தாலும் அல்லது சேர்ந்தாலும் பிரயோசனமற்ற ஞானியாவன் சனியில்லாமல் ரவிகூடினாலும் பார்த்தாலும் சிலவகையரிவன் யாக யெக்ஞாதி கருமானுஷ்டானியாவன் புதன் சந்திரனாகினும் குசனாகினும் சாதாரண யோகியாகி முற்றும்பெறாமல் வீணில் தேகத்தை ஒழிப்பனென்றும் சந்திரன் புதன் சுபராகிக்கூடினால் யோகியாகி விதியைமாற்றுவன் சிலகாலஞ் சஞ்சரிப்பனென்றும் பாவராகி யல்லது பாபசம்மந்தமல்லது பார்த்தாலும் ஞானவானில்லாமல் முரடனாகித் தன்னுடன் கூடியோர்களைப்பற்றி விசேட ஞானம்போல் பிறருக்கு உபதேசிப்பனென்றும் மேற்கூறிய வகைகளை இவ்வித நூற்பயிற்சி மூலமாக அறிந்து சொல்லவேண்டியது.

மேற்கூறிய புத்திரஸ்தானமல்லது மேலேகண்ட குரு சனி இவர்களுக்கு ஐந்தாமிடத்ததிபதி நின்ற இராசிநாதன் பாம்பு முதலிய பாவர்களைக்கூடி நிற்கினும் நோக்கினுமல்லது மேலேகண்ட கிரகங்களுக்கு ஐந்தாமிராசிக் கதிபதி நின்ற இராசியிற பாம்புமுதலிய பாவர்களிருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு புத்திராரிட்டங்களில் பாம்பு தோஷமுண்டென்றும் அதில் குரு முதலிய சுபக்கோள் பார்க்கினும் நோக்கினும் சாதகனுக்கு புத்திரவிருத்திகளும் குடும்பம் பின்னால்கிடைக்கப்படும் புத்திரபாவமே விருத்திக்கிவருமென்றும் குடும்ப மேன்மையும் சுகசௌக்கியாதி பிரபல சவுக்கியங்களை அடையப்படும்.

குரு முதலியர் சனி இவர்களுடனல்லது புதனுடன் புதன்வீட்டில் நிற்கினும் பாவறைக்கூடினும் (௫, ௬, ௭, ௮, ௧௨, ௯) இவைகளிலிருந்தும் பாவறைக்கூடினும் பகை நீசர்களாகி குசன பெலன்கெட்டாலும் பகை நீசவானும் தன் குடும்ப விருத்தியான புத்திரரின்றி சுவீகார சுதனாவன்யென்றும் குரு பெலத்து (௫, ௯, க-ல்) தனக்குறிய பெலத்துடன் பாவர்வீடாகினும் சுவீகாரமல்லது ஆத்மாபிமான புத்திரலாப விருத்தியுண்டென்றும் குடும்ப சுகசௌக்கியங்களும் மிக்க மேன்பாடுகளும் இஷ்டசித்திகள் பின்பாகதன் அடைவனென்றும்.

சனிபுதன்கூடி அவரவர்களின் சொட்சேத்திர ஸ்தானங்களிலாவது திரி கோணத்திலுமிருந்தும் குரு சுக்கிரன் பூரணசந்திரன் முதலியவர்கள் தனக் குரிய க்ஷேத்திரமில்லாமல் பாபக்ஷேத்திரத்தில் பெலமற்று இருக்கினும் புத் திரரின்றி அன்யபுத்திரன் அபிமானபுத்திரனிவர்களே யடைவனென்றும் அவ்விதவகை மூலியவிருத்திகளும் இதிலோர் சுபர் கூடினுலும் காலதீனத் தின்மேல் மருதார புத்திரயோகவானென்றும் மிக்க பிரபலவானுகி வாழ்வ னென்று மரியவேண்டியது.

புத்திரபாவ கெணிதங்களரியவேண்டியது

குரு சனி இவர்களுக்கு ஐந்தாமிடத்தாதிபதியின்ற ராசிநாதனிவர்களுட னும் மேற்கண்ட கும்ப மிதுனம் சனி குருவுக்கு ஐந்தாமிடத்தாதிபதி யின்ற ராசியிலுங் கூடிய கிரக சுபாசுப பெலனுக்குரிய யெண்களே ஒன்று படுத்தி அந்தந்த ராசி யெண்ணிற்பெருக்கி அவ்விராசி இடபெலத்துக்குரிய யெண் களேயும் கிரகபெல யெண்களேயுங்கூட்டி சனிக்கி ஐந்தாமதிபனின்ற ராசிநாத னுடைய பெலனுக்குரிய யெண்ணிற் கொடுத்த சேஷம் புத்திர பாகமென் றும் இதில் சுபாசுப பெலத்தின்மேல் தீர்க்க சந்ததிகளேக்கூறுவோம் இத்துகை களுடன் யேழாமதி குசன் மேஷம் குசனுக்கு ஐந்தாமிடத்தாதிபதியின்ற ராசி நாதனுடன் இவர்களின் சுபாசுப பெலத்துகுரிய யெண்களே அவ்வவ்விராசி யெண்ணுற் இடபெலத்துக்கிசைந்த துகையை யெடுத்து மேலேகூட்டிவைத்த துகையுடன் சேர்த்து (உ-ல்) அரணஞ்செய்த சேஷம் பின்தாரமுள்ள புத்தி ரர்களென்றும் சுபாசுப ஆண் பெண் கிரகங்கள் குடுத்ததுகை இவ்வளவென் றறிந்தவை ஸ்திரீ புருஷதீர்க்க மென்றுங் கண்டரியவேண்டியது குடும்பசுக சௌக்கிய இயல்பிற்குறிய பலன்களேயும் தெளிவுடனரிந்துக் கொள்ளவேண் டியது இவ்விதமரிந்த இரண்டுகணக்கான மொத்ததுகையை (டு ல்)பெருக்கி ஒன்பதிற்கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை (டு-ல்) பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் புத்திரலாபமென்றுங் கண்டரிய வேண்டியது.

மேற்கண்ட துகைகளே பனிரெண்டினுற் பெருக்கி (கூ-ல்) கழித்த சே ஷம் மிச்ச மில்லையானுல் பிதாவுக்கதிக யோகமுள்ள புத்திரர்களென்றும் (கூ-க்)குள் மிச்சமானுல் பிதாவுக்குச் சரியானுலும் கொஞ்சமதிகயோகவா னுவனென்றும் (கூ) மிச்சமானுல் தரித்திரனுகி புத்திரன் பூர்வார்ச்சிதத்தை யழித்தும் பலவித வருத்தங்களேயும் அடைவனென்றும் மனதுக்குத் துன்ப மடைவன் யென்றரியவேண்டியது.

சத்துருரோகம் ராஜதெண்டனுதிமுதலிய ஞாதி பகைகளேப்பற்றிய பலன்களாவன

குரு சனி இவர்களுக்கு ஆருமதிபதியின்ற ராசிநாதனும் (சு, அ, கூ) இவ்வித ஸ்தானங்களில் பகையுடைய பாம்பு முதலியோரைக்கூடினும் சந்தி

ரன் ரவி இவர்களுடனுங் அல்லது சுக்கிரன் கூடினுலும் சுக்கிரன் சந்திரன் முதலியோர் (ரு, சு, அ, கக) இவ்வித இடங்களினின்றுலும் மேலே சொன்ன நான்கு ஸ்தானுதிபர்களும் துலாம் அல்லது சுக்கிர சந்திரனுடன் கூடினுலும் (சு, அ-ல்) சுபர்களும் பாவர்கள் கேந்திரகோணத்தில் வலுத்து இருந்தாலும் சந்திரன் சுக்கிரன் மீனம் விருச்சிகம் அல்லது சனி கிரகத்தில் தனக்குரிய பகையோருடன் சனி பாம்பு கூடினுலும் பெரும்பிரபல நோய்களாலரிஷ்டப் படுவன் இவர்கள் ஸ்திர விராசியாகில் நீண்டகால முபாதிகளும் உபய விராசி களால் மாதக்கணக்கினும் சரவிராசிகளாகில் பீடையடைந்தும் பலவகைவருத் தங்களேயு மனுபவிப்பன் இதில் ரவி கூடினின்று பாபபெலத்துக்கதிகாரியாகி னிற்கினும் சவ்யராசிமுதற் பாகமாகினும் சிரசு நேத்திர ரோகத்தையும் அப சவியம் பிற்பாகமாகில் உடல்களில் அங்கரோக ஊஷ்ணசம்மந்த நோய்களும் சந்திரனுகில் கண்டம் கபாதி நோய்கள் சித்தபேத பாதைகளேயும் குசனுகில் அக்கினி ரெத்தநோய்கள் வெட்டுமுதலிய விரணநோயும புதனுகில் இடுப்பு முதலிய உதராதி நோய்களேயும் வாபுவு வாதநோயும் குருவாகில் மார்பு மூர்ச் சாதி சுவாசநோய்களேயும் சுக்கிரனுகில் கால்முதலிய செலரீத பகூவாதாதி நோய்களேயும் சனியாகில் கால்முதலிய பித்தவாத நோய்களேயும் ராகுகளாகி லும் ஷே நோயும விஷநோயும் கேதவாகில் விரணரெக்த விஷபாதைகளே யுங் கொடுக்கப் படுமென்றுங் கண்டரியவேண்டியது.

இதில் சனி பாம்புகளுக்கு வாரூமதிப னின்ற ஸ்தானுதிபதி ரவிமதி யைத் தவிர்த்தோரல்லது சுக்கிரனைத் தவிர்த்தோராகில் (ரு, சு, அ, கக) இவ் வித இடத்ததிபனுடனும் துலாம் தனுசு மேஷம் கும்பம் சிங்கம் கடகம் இவை களிலிருக்கினும் கோக்கத்துடன் வலுத்தும் சனி பாம்புக்கு அஷ்டமாதிபதி கன் பெலமுற்ற சுபர்கள் வீட்டிலும் அவ்விடத்துக்கதிபர்கள் பகை முதலிய பாபக்ஷேத்ர கெதனுகினும் பாவரைக்கூடினுலு மவனுக்கு இராச தெண்டனை யுண்டாகும் இரெண்டுபேரும் பாவர்களைக் கூடினுல் பெரும் அவுமானமும் ராச தெண்டனையும் பலவகை வருத்தத்தையும் மனே துக்கமும் சீவவறை யுள்ள ராசதெண்டனையால் பிராணபயமுண்டாகும் மூன்று முதலிய பாபர்கள் சுபத்துவர்களாய்கூடினுல் இராசதெண்டனையல்பமும் சத்துருவால்எப்பொழு தும் விகாதமுடையவனுகிப் பவிப்பனென்றும் பலவித சத்துருக்களாகிய பொருளழியவும் சாதிவிரோத முண்டாகுமென்று மனக்கவலையும் அடைவன்.

ஆறுயெட்டு இந்த இடங்களில் தனி சுக்கிரன் குரு இருக்கினும் குசனைக் கூடியல்லது குசன்பார்த்தாலும் பலவித சத்துருவும் றொண சத்துருக்களா லும் பலவகைத் துன்பத்தையடைந்து வருத்தமடைவனென்றும் இது நீங்கியும் குரு ரவி சனி பாம்பு இவர்கள் கேந்திரகோணத்திலும் சுக்கிரனைக்கூடினுலும் பகைவர்களான சத்துருக்களால் விவாதமும் பொருள்சேதத்தையும் அடைந்து பலவகையான வருத்தமடைவனென்றும் இதில் சனி குசன் வலுத்துக்கூடி

மீனம் விருஷபம் சிம்மம் தனுசு கன்னி இவைகளினின்றாலும் இராச விரோதமும் பலவகையான கஷ்டகஷ்டங்களே யடைவனென்றும் அவ்வித கஷ்ட நஷ்ட சத்துரு துன்பங்களால் பல பில்லிசூனியாதி பாதை அடையப்படுமென்றும் மனதுக்கு அநேகவிதகஷ்டமும் கூடுதராதிபாதையால் மனதேகாதி வருத்தமும் குடும்ப உபத்திரவம் உண்டென்றும் அரியவேண்டியது இதில் ஓர் சுபர்கள்கூடினும் நோக்கினும் அல்பமல்பமான விரோத சத்துருவுண்டாகி உடனுக்குடன் நிவர்த்தியாகுமென்றும் இருவகை முதலிய சுபராசிகின் சத்துரு மாத்துரு மிருந்துவந்தாலும் சாதகனே செயத்தடைவனென்றும் கூறப்படும் இதில் இருசுபரென்றது சுபஸ்தானஞ் சுபகிரகமென்று யூகித்து அரியவும்.

குருமுதலிய சனி கேந்திரகோண விராசிகளில் இருந்தும் பெலத்துடன் சொட்சேத்திர உச்சனுலும் பெலத்தசுபட்சேத்திர மல்லது (உ, ஐக) இவ்வித இடங்களிலிருக்கினும் குசன் ரவிமுதலியோர்கன்னி தவிர விருஷபம் மீன மிவைகளிலாவது அவர்களின்ப நீசசுட்சேத்திரத்தி னின்றாலும் சாதகனுக்கு அதிகக்கடனுள்ளவனுகியும் ரொணத்தினால் துன்பத்தையும் அடைவன் அவ்வித ரொணங்களினால் ராசதண்டனே செயில்முதலிய வகையும் யேற்படுமென்றும் ரொணதுன்பங்களினால் பலவிதவருத்தங்களேயு மடைவனென்றுங் கண்டறிய வேண்டியது.

மீனம் விருஷபம் இவைகளில் சுபர்முதலிய ரவி புதனிருந்தும் (உ, கஉ மிடங்களில் பாபரிருக்கினும் அல்லது குரு சுக்கிரன் முதலியோரிருக்கினும் ரொணஸ்தனுகியும் சிலகாலம் ரொணமில்லாதவனுவன் இதில் ஒருவர் (உ, கஉ) லும் மற்றொருவர் கேந்திரகோணத்திலிருந்தாலும் சிலநாள் ரொணமும் சிலநாள் ரொணமில்லாதவனுகியும் பலிப்பன் மேற்சொல்லிய ஸ்தானங்களில் பாவரும் (உ, கஉ-ல்) சுபருமிருந்தால் ரொணந்தீர்ந்தும் யோகமும் மேலான தனவானுவனென்றும் குரு சனிக்கி (உ, கஉ-ல்) வுடன்சுபரிருந்தால் ரொணமும் தனம் அல்பனுவன் இவ்விருவர் பக்கத்திலும் பாவரே இருந்தால் ரொண மதிகமில்லாமல் தனவானுவன் இவர்களுக்கு (சு. அ-ல்) சுபரிருக்கினு நோக்கினும் ரொணஸ்தனுவன் பாபரிருக்கில் ரொணஞ்சத்துரு வீற்கமாட்டாது இவர்களுக்கு விசேஷ கோணகேந்திரத்தில் சுபரும் மறைவுயிடத்தில் பாவருமிருக்கினும் தனவந்தனுவன் ரொணம்நிவர்த்தி செய்வன் பாவருஞ் சுபருமாக மேலேசொன்ன (உ, கஉ. சு. அ) இவைகளில் இருக்கில் சிலநாள் ரொணத்தடையவனுகியும் சிலநாள் ரொணமில்லாதவனுவன் யென்றும் சவ்யராசி யானுல் சனனமாரம் முதற்காலம் ரொணமும் பிற்காலஞ்சுகமும் ரொணமில்லாதவனுகியும் அபசவ்ய ராசிகளில் மேலே கண்டவர்கள் சஞ்சரித்தால் முதல்வயசுகாலம் தனமும் பின்வயசில் ரொணமும் சமராசி கெதியராகில் மத்தியவயதில் மரணத்தையும் அடைந்து பலவருத்த மடைவனென்றுங்கண்டு கொள்ள வேண்டியது.

ரொணங்களும் ரோகங்களையும் பற்றிய கணிதங்களாவன

சனி குருவுடனும் சனி குருவுக்கு (சு, அ) மதிபதி நின்ற ராசிநாதனுடனும் கூடிய கிரகங்களின் சுபாசுபபெல யெண்களையும் மீனம் விருஷபத்தில் கூடிய கிரகபெலாபெல யெண்களையும் கிரகமில்லாவிடில் ராசியெண்களையும் கூட்டி (அ-ல்) பெருக்கி (ய-ல்) கழித்த சேடம் ரொணமும் (கூ-ல்) பெருக்கி (கக-ல்) கழித்த சேடம் தனமும் அரியவும்.

மேலேகூடிய துகையை (ரு-ல்) கழித்த சேடம் அவஸ்தைகாலத்தில் ரோகபாதையும் பாசவிரோத தெண்டனைகளையும் மேலேகண்ட துகையை (ரு-ல்) பெருக்கி ஒன்பதில் கழித்த சேடம் திசையிலும் வந்த யீவை (ரு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேடம் புத்திகளிலுங் கண்டகாலம் ரோகங் கடன் ராச தெண்டனை இவைகளை கொடுக்கப்படுமென்றும் அரியவேண்டியது இவைகளை சவ்யம் அபசவ்யம் சவ்யாபசவ்யம் அபசவ்ய சவ்யரீத்திக்கி மேஷலக்கினத்திற் சொல்லியபடி கணக்கிட்டரியவேண்டியது என்றுங் கூறப்படும்.

களத்திர பாவ பலன்கள்

சுக்கிரனையும் குசனையும் குசனுக்கு யேழாமதிபதிநின்ற ராசிநாதனையும் மேஷத்வையு சுக்கிரனுக்கு சப்தமாதிபனின்ற ராசிநாதனையுங்கொண்டு இந்த பஞ்சபூதமூலமா யுரைக்கவேண்டும் என்று அரியவேண்டியது.

சுக்கிரன் சுபட்சேத்திர கெதனாகியும் சந்திரனுடன் கூடியல்லது சந்திரன் குரு கேந்திரசமேதனாகியும் பெலத்துவேறு தனித்திருந்தாலும் பாபசம் மந்த திருஷ்டி இன்றியும் மேஷத்தில் பாவரில்லாமலும் சுத்தமல்லது சுப சம் பந்தத்துவ மாகியும் குசன் குசனுங்கு சப்த்தமாதிப நின்ற ஸ்தானாதிபதி பெலத்து பகைநீசாதி துஸ்தானத்துவ மில்லாமல் கியகங்களைச் சேரநோக்கமில்லாம லிருக்கில் சாதகனுக்கு களத்திர மேகமென்றும் ஷை யோகமும் பிறபலசுகத்தையும் அடைவன் இவாகளிலிருவருக்கு மேல்பட்டோர் சந்திரன் புதன் க்ஷேத்திரம் அல்லது அவர்களுடன் சுபபெலத்துடன் கூடினாலும் சாதகன்களத்திர மூலதனம்மேன்மேலான லாபத்துடனும் பிறபல விருத்தியுடன் மிகுந்த யோகதானாகியும் செயத்தை யடைந்து ஓர்பாவரில்லாத ரவி முதலிய புதசுக்கிரன் உச்சமும் சந்திர குரு கேந்திர திரிகோணத்திலும் நட்பு க்ஷேத்திரமானாலும் சந்திர குடும்பம் சுபக்ஷேத்திரமாகி சுபபெலமானாலும் களத்திர மூலியதன முடையவல்பனாவன் யென்றும் இதில் ஓர்பாவர் கூடிலும நோக்கினும் களத்திரதனமழிந்தும் அக்கிருத்திய னாவனென்றும் னத்தரனியக் குறைவு பின்னஷ்ட மடைவனென்றும் சனிமுதலிய சரவிராசி சோக்ஷேத்திர உச்ச கேந்திரமாகிப் பகைநீசர் உச்சராகிய சுக்கிரனைப்பார்த்தாலும் தனமானது பலத்த கைநஷ்டமும் மருதாரமுண்டென்று இருவித பாபபெலத்துடைய வர்க

களாகினும் சுபர்கள் இருவர் கூடினலும் தனித்து ஒருவனுய் பாபபெலத் துடன் பகை நீசமல்லது பாவனுயிருந்தாலும் தாரமிரண்டென்றும் அவ்வித தாரவகை நஷ்டமும் ஓர் சுபர்பாவியாகில் மனைவியின் ரோஷமும் பலவாரா கின் தாரமிரண்டுக்கு மேலுண்டென்றும் பலசுபர்கள் பாவராகினும் இரண் டுக்கு மேற்பட்ட தாரமென்றும் அவ்வித தாரயோகத்தால் பலவகை வருத் தங்களுண்டாகு மென்றும் மனக்கவலைகளும் குடும்பமூலிய வருத்தமும் உண் டென்றும்

மேற்கூறிய ஐவர்களாவது ஐவரில் மூன்றுபெயர்களாவது தன் சுட்சேத் திரமானத்திலும் தனக்குரிய சுபபெலத்துட னிருக்கில்லெவ்வளவு பெயறைக் கூடினலும் தாரமொன்றென்றும் பகை நீசபாபசம்மந்தத்தோருகின் தாரத்வ யாதியென்றும் பாவர்களுடன் கூடி கேந்திரகோணமில்லாமல் இருக்கினும் அவர் பாவக்ஷேத்திர கெதர்களாகி தனக்குரிய அசுப பெலத்துடன் ஒருவறைக் கூடினலும் தாரத்வயமென்றும் அவர்களுடன் சுபர்கள் கூடினலும் தாரதுவய மென்றும் மேற்கூறிய இடங்களில் சுபசம்மந்தராகினும் ஸ்தானுதிபதியும் பெலத்துடனிருக்கிற் தாரம் பலவகையில் மனைவியொன்றேவழி விருத்தியடை வனென்றும் மேலேசொல்லிய ஸ்தானங்களில் தாரமூலிய வத்தினல் குடும்ப விரோதமும் பாபர்களானவர்கள் தனக்குப் பெலனதிகமான இடத்தில் இருந்து சுபரைக்கூடினல் இறெண்டு முதலிய தாரமும் பாவரைக் கூடினல் தாரமொன்றும் பாபர்களுடன் பாபக்ஷேத்திர பெலமற்று மறைவு முதலிய (கக, கூ, உ, கஉ, அ, சு) இவைகளி லிருக்கில் தார நாசனலுகியும் இவ ருடன் சுபர்கூடிப்பெலத்துடனும் சுப நோக்கினலும் தாரமொன்றென்றும் அரியவேண்டிய சுக்கிரன முதலிய ஐவராவது மூவராவது தனக்குரிய சுபட் சேத்திரபெலத்துடன் துலாம் தனுசு கும்பம் இவைகளிலிருக்கினும் பெல மூற்று சுபரைக் கூடினலும் தாரமொன்று இதில் பாவர்கூடியல்லது நோக்கி முன்னவர்களுக்கு டெலமற்ற பகைநீசட்க்ஷேத்திரமாகில் கூடிய கிரகபெல சங்கைப்படி தாரமிரண்டுக்கு மேற்சொல்லவேண்டு மென்றும்.

மூவருக்குக் குரைந்தவர்களிந்த ராசியிலும் மற்றய மூவரோ நால்வரோ பகை நீசபாபபெலத்துடன் பாவறைக்கூடி யல்லது பார்க்கினும் தார மிரண்டு முதலியவகையென்றும் இவர்கள் அப்பெல சுபட்சேத்திரமானல் தாரமொன்றென்றும்.

மேற்கூறிய ஐவர் மூவர் மீனம் விருஷபம் மிதுனம் கடகம் இவைகளி லிருந்து தனக்குரிய சுபபெலட்சேத்திர பெலத்துடன் அதிகதிரக மிருக்கினும் ஒருவர்க்கொருவர் பெலசமமென்றுகில் தாரம ஒன்றென்றும் பாடபெலசம மேன்றுகிப்பகை நீசாதிபலபாவறைக் கூடினலும் பார்த்தாலும் தாரமிரண் டுக்குமேல் என்றும் ஸ்தானுதி பதியோர் பகை க்ஷேத்திர கெதி பெலமற்று சுபர் திருஷ்டி இல்லாமல் சனி மேஷம் விருச்சிகம் கடகம் இவைகளிலிருக்கி னுந் தாரமிரண் விவாகமே இல்லையென்றும் இதில் ஓர் சுபர்சேரவாவது பார்த்

தாலும் தனக்கிணை பாவர் பெலத்துடனிருக்கில் தார மிரெண்டுமுதலிய வகை யென்றும் தார தேகவரிஷ்டமும் புத்திரவரிஷ்டமும் கொடுக்கப்படுமென்றும்.

சிங்கம் கன்னி விருச்சிகம் மகரம் மேஷமிவைகளில் மேற்கூறிய ஐவர் அல்லது மூவர் பெலத்துடன் தனக்குரிய சுபக்ஷேத்திர கெதியாகியும் பெலத்துடனிருக்கினும் பாவரை கூடினாலும் தாரமொன்றும் சுபபெலனதிகமானால் மனோயானதிக ரூபலாவண்ய முடையவளாகி தனவிருத்தி சுகியாகியும் பாப பெலமதிகமாகினும் இவர்கள் பாவராய்வலுத்தலின்றாலும் மிகவும் பிரபலமும் குடும்பசுக சௌக்கியங்களும் மிகவனுகூல பெலமுஞ் சுகத்தையும் அடையப் படும் யென்றும் ஆனால் மத்தியகாலந் தனவிருத்தி இல்லாமல் பலவகை கஷ்ட நஷ்டமும் மனதுக்கு வருத்தமுமுண்டாகு மென்றும் யென்றும் இதில் சுப பெலனின்றி மேற்சொல்லிய ஐவரில் மூவராவது பெலமற்று பகைநீசமானா லும் பகைநீச க்ஷேத்திரவாசனாலும் பாவருடனிருக்கினும் தாரமிரெண்டும் பகு தாரனென்றும் அவ்வகை ஓர் தாரவகையால் விரோதவருத்தக்குறைவுகளும் அடையப்படுமென்றும் மேன்பாடுகளும் அற்பமாகுமென்றும் பலவகை வருத்தங் களோடுங் கொடுக்கப்படுமென்றும் மனக்கவலைகளும் சத்துருவிவாதமும் குடும்ப விருத்தி குறைவுகளடையப்படுமென்றும் சுபக்ஷேத்திர சுபத்துவமும் பாவ ருடனுங் கூடினாலும் முன்தாரகரணமும் பின் மனைவி கிடைக்கப்படமாட்டா தென்றும் மேற்கூறிய ஐவரல்லது மூவருடன் சனி பாம்பு கூடினாலும் குசன் பெலத்துடன் கூடினாலும் தார மிரண்டென்றும் முன்சொல்லியவர்கள் பாப னும் கூடியவர்களும் பாவரானாலும் தார மிரண்டுக்கு மேற்பட்ட தாரமென் றும் அதற்கு இயல்பாக ஸ்தானமும் குசன் ரவி வீடாகியு மல்லது சுபராகில் சுபருக்கு பகைநீசவீடாகவும் சேர்ந்தால்தாரமிரண்டென்றும் பெலனுக்கிசைந்த படி (உ-க்கு) மேலுந் தாரயோகமென்றும்.

ரவி சனி இவர்கள் மேல்கண்ட ஐவரல்லது (ரு) பெயரைக் கூடினாலும் அல்லது சுபர்களாய்கூடினாலும் தனக்கு விரோதிகளாகக் கூடினாலும் பார்த் தாலும் கூடியகிரகபெலனுக்குரிய (உ) முதலிய தாரனென்றும் பாபமானாலும் சுபரானாலுந் தனக்குரிய சவுமியராகி பெலத்துடனிருக்கினும் நோக்கினும் மேல்கண்டமூவர் அல்லது ஐவர் தனித்ததனக்குரிய சுபக்ஷேத்திர சுபபெலத் துடனிருக்கில் தாரமொன்றே குணரூபவதியாய் உயர்குலமாகுவள் யென்றும் இதில் சனி பாவனால் நேரில் விபசார ஸ்திரீயாவளென்றும் பாம்பு கூடினாலும் பாவராசியானாலும் விபசாரஸ்திரீயென்றும் சுபதிருஷ்டி பார்க்கிலாசாரஹீனமு மல்ப ஒழுக்கமானவளென்றும் கண்டரியவேண்டியது குசன் முதலியபெலன் அஷ்டமகருக கதிவசாதானால் நெறப்பு முதலிய விரணநோயால் மனைவி இறப்பள் ரவியாகில் ஆயுதம் தற்கொலையாவள் ராகு கேதுவானால் சூல மரணம் விஷமரணமாவள் சந்திரன்முதலிய புதனானால் மிருகத்தினாலிரப்பள் சுக்கிரனாகில் செலத்தாலிரப்பளென்றும் குரு முதலிய சவுமியக்கிரகமானால் வியாதியால் மரணமாவளென்றும் அறியவும்.

களத்திர கெணித பாவங்கள்

சுக்கிரனுடனும் மேஷத்திலும் குசனுடனும் குசனுக்கு சப்தமாதிபனின்ற ராசிநாதனுடனும் சுக்கிர சப்தமாதிபனின்ற ராசிநாதனுடனும் கூடிய சபாசுப யெண்களின்படி தனித்தனி ராசியெண்ணுற் பெருக்கி கூட்டிக்கொண்டு சுக்கிர சப்தமாதிபனின்ற ராசிநாதன் பெவனுக்குரிய யெண்ணில் கொடுத்த சேஷம் தாரவிவாகமுடையவன் சுப பாபல்யத்துக்குரிய யெண்களே விவாகம் காந்திருவம் பைசாசம்முதலிய எழுவகை விவாகங்களேயும் கண்டு கூறவேண்டியது.

மேற்பெருக்கி கொண்ட மொத்தத்துகையை (கு-ல்) கழித்த சேஷமும் ஈவை (நு-ல்) பெருக்கி (கு-ல்) கழித்த சேஷமும் திசாபுக்தியில் விவாமம் பின்சாரம் பார்க்கவேண்டுமானல் குசனுக்கு பதினேராமிடத்தாதிபதினின்ற ராசிநாதனுடன் கூடியயெண்ணே அந்த ராசியெண்ணுற் பெருக்கியும் முன் பெருக்கிக்கூட்டிய மொத்தத்துகையுடன் சேர்த்து (கு-ல்) முனபோலவே கொடுத்துக் கண்டசேடம் பின்தாரவிவாகமும் சுக்கிரன் குசனுக்கு அஷ்டமாதிபனின்ற தானுதிபதி இருந்த ராசிநாதனுடன் கூடிய கிரகபெலாபெல யெண்களின்படிக்கி கொடுத்து மேலேபெருக்கிய துகையுடன்கூட்டி முன் போலவே (கு-ல்) கழித்த சேடம் திசாபுக்தியில் களத்திரமாரகமென்றுங் கண்டறியவேண்டியது.

பிதுர்பாக்கியாதியும் உபதேசாதி பலன்களாியவும்

ரவியையும் புதனேயும் புதனுக்கு (கு) மிடத்ததிபதி னின்ற ராசிநாத னின்ற தானுதிபதியையும் சனி ரவிக்கு (கு) மிடத்ததிபதினின்ற ராசிநாதனின்ற தானுதிபதியையும் மிதுனத்தையும் பார்த்து பிதுர்பாக்கிய முதலிய பலன்கள் கூறப்படுமென்று மரியவேண்டியது.

மேற்கண்ட ஐவர்களும் பெலனற்றும் சிங்கத்தில் பாவரிருந்தும் சந்திரன் சனி வலுவுடனிருக்கினும் மாதரு ஹீனனாகி மாதர்மரண காலத்தில் இல்லா தவனாகி யடைவனென்றுங்கண்டு சொல்லவேண்டியது மேற்கண்ட சீவசரீ ராதிபர்கள் ஒன்றாகினும் பெலவானாகிச் சுபக்ஷேத்திரத்தி னிற்கினும் அவ்வதி பன் பெலவானாகி கேந்திரகோண நட்புமுதலிய மூவித உயர்பெலனைப் பெற்றிருந்த போதிலும் தாய் கவுமாராவஸ்தை வரையில் ஆயுள் தீர்க்க மடைவனென்றும் ஆகையாலவ்வித கிரகங்களுடனே அந்த ஸ்தானுதிபதி பெலவானாகி னிற்கினும் நோக்கினும் யெவ்வனத்திலேயே தால் மரணமாவ னென்றும் அவ்வித மடையாவிடில் தாய் பாலிய மரணமுண்டாப் பாபக்ஷேத் திரம் இருபுரம் பாபமத்தியில் பெலனற்றும் ஸ்தானுதிபதிகள் பெலனின்றியும்

இருக்கில் தாய் உடனே மரணமாவளென்றும் அதாவது சாதகன் செனித்த வுடனென்றம் சுப கிரகவாசத்தினும் குரு சனி பெலத்தும் சந்திரன் சுப கேஷத்திரவலுவில் லிற்கில் வயோதிககாலம் தாய் மரணமென்றுங் கூறப்படும்

இடவிசேஷ ஸ்தானமும் கிரகங்களேயுங்கூட்டி மாதர்பெலனரியவும் சீவ சரீராதிபர்கள் ஒன்றுயல்லது சுபமித்துருவாகி தனக்குரியபல நன்மையிலும் சனி சந்திரனிவர்கள் தனுசு மகரம் மீனம் விருஷபம் கடகம் சிங்கம் இவை களில் அவரவர்களுக்கு இணையுள்ள சுபகேஷத்தி ரத்திலும் பெலவானுகி தனக் குரிய சுபர் பகையாலும் பாவரானுலும் கூடவல்லது திருஷ்டி இல்லாதிருக் கில் தாய் விருத்தாவஸ்தை வரையில் தாய் தீர்க்கசீவியாவள் யென்றும் சுப பெல மதிகமானுல் தாய்வழி வம்ச விரித்தியுடனும் பிரபல யோகத்துடனும் வாழ்ந்துவரக் கடவர்கள் மிக்க மேன்பாடுகளேயும் அடைவர் இவைகளுடனே அதிக கிரகம் பாவகிரக சம்மந்தத்துடன் சுபகேஷத்திரத்தி லிருக்கில் அல்லது பார்த்தும் இருபக்கம் பர்வகூடினுலும் மேற்சொல்லிய சந்திரன் முதலியோர் பகை நீசாதி அபெலபாப சுபட்சேத்திரங்களில் பகை நீசாதி அபெலராகியும் சமசுப அசுபருடன் அல்லது பாவராகித் தனித்து நின்றுலும் பாப பகை சேத் திர வாசமானுலும் யெவ்வனத்தில் மரணம் உபயவிராகளிலும் அதிகத்தோர் பெலத்தும் பாபிகள் பெலத்தும் சுபபார்வை யல்லது கூடி இருக்கில் கவுமார காலத்தில் மரணமும் சரஸ்திர விராசிகளில் பெலத்து லிற்கில் கௌமாரத் தில் மரணமாவள்.

மேஷம் மிதுனம் கன்னி துலாம் விருச்சிகம் கும்பம் இவைகளில் சந்தி ரன் சனி நின்றும் பாவரைக்கூடினுலும் பகை நீசத்துவரானுலும் சீவசரீராதி பர்கள் விரோதம் பகை நீசட்சேத்திர ஸ்தானம் அமர்ந்து இருந்தாலும் தாய் பாலியத்திலேயே மரணமாவளென்றும் அசுபபெலனில்லாமலும் சுபர்பெலத் தும் யிருக்கின் தாய்விருத்தியும் மாதா வார்த்தகதிசையில் மரணமாவளென் றும் சுபட்சேத்திரமாகி பாபருடன் கூடியும் அல்லது இரண்டுபேக்கமும் பாப கேஷத்திர சம்மந்தத்துடன் இருக்கில் மற்றய இராசிகளி லெவ்விதமிருக்கி னும் தாய் பாலியம்விட்டு யெவ்வனத்தில் மரணமாவளென்றும் சுபகிரகத் துடன் பாபகேஷத்திரத்திலும் அந்த அதிபன் பெலத்தால் கவுமாரத்தில் தாய் மரணமும் அதிபதி பெலக்காலத்தில் எவ்வனத்திலேயே மரணமாவளென்றும் அறிக

இவைகளேயெல்லாந் தனித்தனி கிரகபெலனுக்குரிய யெண்களே அந் தந்த இராசியெண்ணுற் பெருக்கி (கு-ல்) கழித்து தனித்தனிவந்த சேஷமான திசாபுக்திகளால் தாய் மரணகெண்ட காலமென்றும் இந்த துகை யாவையும் ஒன்றுபடுத்தி (று-ல்) பெருக்கி (கு-ல்) கழித்த சேடதிசையும் வந்த ஈவை (று-ல்) பெருக்கி (கு-ல்) கழித்தசேடம் புக்திகாலத்தினும் தாய் மரணமாவ ளென்றுங் கண்டறியவேண்டியது.

கிரகவாகன பலன்

சுக்கிரன் சனி இவர்கள் பெலத்தும் இவர்களுக்கு நான்காமிடத்ததிபதிகள் பெலத்தும் கேந்திரகோண சுபட்சேத்திரத்தில் வசிக்கினும் சுபரைக் கூடினும் பலவகை பிறபலவாகனம் யெப்பொழுதும் உள்ளவன் இவர்கள் பெலமுற்றும் பாவருடன் கூடினும் நோக்கினும் ஸ்தானம் பகை நீசக்கோளிருந்தாலும் கிரகவாகனமின்றி யிலவன் சுபபாவ சம்மெளனமாகி கலர்ந்து பின்வாகனங் கிரகம் இழந்துபோகும் சுபட்சேத்திரத்தி லிருந்து சில இணையுள்ள பாவரைக்கூடினலும் நட்புள்ள பாபிகளாகி மேற்கண்ட ஸ்தானத்திலிருக்கினும் வாகனமானது சிலனுள் பூர்வமில்லாமல் நூதன வாகன முடையவனுகி வாழ்வன் பின்காலத்தில் நூதனமாகியும் கிரகமுதலியவகைகள் சேர்ப்பனென்றும் குசனுடன் ஸ்தானுதிபதியும் குசனுக்கு தசமாதிபதியும் பெலத்துடனிருந்தும் சந்திரன் சுக்கிரன் சனி இவரைக்கூடினலும் பூமி முதலிய பலவித வியாபாரமும் தனதனியாற்லாபமும் அதிகயோகமுள்ளவனுகிவாழ்வன் பூமிகிரகவாகன முண்டு இவர்களிருக்கும் சேத்திரமும் சீவசரீராதிபர்கள் வாழுமிட மதிகமாக வீபசரமாலும் பாவஸ்திர ராசியாலும் பல இடங்களில் பூமி கிரகவாகனஞ் சம்பத்து அதிகாரமுள்ளவனுகி வாழ்வன் இதில் ரவி குசன் பாம்பு பகைவருடன் கூடினிற்கினும் நோக்கினும் பூர்வார்ஜித பூமி கிரகவாகனங்கள் பலவாருக விவாதசத்துரு ரொண முதலிய பலவித துக்கசோகத்தினுல் நஷ்டமடைந்து இழந்து விடுவன் இரெண்டு பாபி இல்லாமல் ஒரேபாபரானினும் இரெண்டு முதலியு சுபர்கூடினலும் ஸ்தானுகிபதி சீவசரீராதிபர்கள் அதிகமாக உபயசரமிவைகளில் நிற்கில் தனமானதும் பூமி கிரகவாகனங்கள் முன்னின்ற நஷ்டம்போல வடைந்து பின் செயலாபத்துடனும் மாடமாளிகையுடனும் அதிகபிறபலத்துடன் ராசயோக வல்லபனுகி வாழ்வனென்று மிகவு மேன்பாடுகளுந் தனதானிய யோகவானுவன் சீவசரீராதிபர்களும் சுக்கிரன் சனி கும்ப மிவைகளில் பாவரும் பாவட்சேத்திர மாகியும் சுபரானுல் பகைவராகியும் அபெலத்துடனிருக்கினும் (சு, அ, கூ) இவைகளினும் நீசம் பகைகளிலும் இருபுரம் பாவட்சேத்திரமல்லது பாவரிருந்தாலும் வாகனமின்றியும் பூமி கிரகவாகனசம்பத்து இல்லாமலும் பலவாருன கஷ்டநஷ்ட துன்பமும் அடைவன்.

புத சந்திரவசாத் நான்காமதிபதிகள் ஒருவருக்கொருவர் அனுகூல சன்ராகி (சு, எ, ல) இவைகளானதில் அல்லது துலாம் கன்னி விருஷபம் கும்பம் இவைகளிருந்தாலும் அசுபராஷ்டாதிபர்கள் கூடவல்லது நோக்காமலிருக்கில் பிரபல வியாபார வல்லபனுகி கீர்த்திபெற வாழ்வன் இதில் அசுபர்களாலும் சீவசரீராதிபர்கள பெலனற்றலும் சகலவிதமான வியாபாரமும் கைகூடாமல் கஷ்டநஷ்ட னென்றும் பொருள்சேதம் பலவகை கஷ்டநஷ்ட துன்பமுண்டாகுமென்றும் அரியவேண்டியது சுப பாவசம்மந்தத்துடன் சமபெலன் பெற்றலும் வியாபாரம் லேசான விருத்திகளே யடைவனென்றுங் கூறப்படும்.

புதன் குரு இவர்களுக்கு சீவசரீராதிபர்களும் குடும்பம் இவைகளுடனும் பலனுற்ற குருகூடினும் மேற்கூறிய கிரகங்கள் ஸ்திரவிராசிகளிலும் அல்லது சரமானுல் ஆரோகணமான ஆறுயிராசி சரத்திலும் சுபபலத்துடன்கூடி இருக்கில் சாஸ்திராதியும ராசவித்தையிலும் தர்ம சாஸ்திராதிகளிலும் வல்லபனுகி பிரபலயோகமுடையவன் இதில் பகையுடனும் பாவராகிக் கூடினுலும் பாவட்சேத்திரமானதினுலும் பகையுடன் தனக்குரிய பாவரும் குசன்வீட்டில் குரு சூரியனிவரிருக்கினும் சுக்கிரன் இந்த இடத்தி லனேகரைக் கூடினுலும் பார்த்தாலும அவ்வளவுசாஸ்தியான வித்தையில்லாமல் சுயபாஷை நாடகாலங் காதி பாஷை இராசபாஷை யல்ப்பம்புரிவன் இதில் பாவர்களும் பெலத்து உச்சசுட்சேத்திர நட்பானுலும சுபர் நட்பு அல்லது பகையிருந்தாலும் மேற் கண்ட வித்தையுண்டு ரவி பெலவானுகி உச்சத்துடன் தனக்குரிய இடத்தி னின்றுலும் பரமபரையான பிதா அதிகவல்லபனுகி வித்தையிற் சிறந்தவனுவன் பாவக்கிரகங்கூடில் பிதுர்வம்சமென யூகிக்கவேண்டும்.

இவர்களுடன் பாபிகளும் பெலமற்று பகை நீசாதிகாரிகளாகியும் சுபரும் பெலமற்றும் சீவசரீரம் பெலமற்றிருக்கினும் (கி, அ, கூ) இவ்வித இடங்களானுலும் வித்தை யெவையும் தேராது.

முதற்பாராவிற் கூறியபடி நால்வர் பெலத்து கேந்திரகோண சுபட்சேத்திரத்திலாவது அல்லது பாபட்சேத்திரமானுலும் தனக்கு இணைமித்துரு இவ்வித இடத்திலிருந்தும் பெலமுற்றிருக்கில் சுக்கிரனுனுல் பலவித இராஜவித்தையும் சுயபாஷையுங்கற்று வல்லபனுய் வழக்குரைப்பன் பாபட்சேத்திரம் பாவகிரகம் பார்த்து அல்லது பகைவீடானுலுஞ் சேர்ந்தாலும் அவைகளில் தேராதவனுகி யாவற்றிலும் அல்பமல்பந்தெரிய அரிவன்.

புதனுகில் கணிதபண்டிதாதி வித்தையறிவன் பாபபெலன்பேரில் முடிவில்லாதவனுகக் கணிதமல்பஞ் செய்வன்.

சந்திரன் ரவியானுல் தர்க்காதிவாதவித்தை புரிவன் ரசாயனசாஸ்திரங்கள் உரியவித்தையை புரிவன் பாம்பு குசனுகில் சனியானுலும் மந்திரம் முதலியபில்லி சூனியங் கருத்தொழில் புரிவன் சுபரானுல் ஞானுதிசத்தரும வித்தையும் குரு சுக்கிரனுகில் உபதேச விதியான வித்தைகளிலும் பாடஞ்சொல்லும் கல்விகளேயும் உடைத்தானவனுவனென்றறிய வேண்டியது.

மாதுரு பாவாதிகணிதபலன்கள்

சந்திரனுடனும் சனி கும்பமிவையுடனும் இவைகளுக்கு நான்காமதிபதியின்ற இராசிநாதனுடனும் பெலத்துக்குரிய கிரகயெண்களே தனித்தனி அந்தந்த ராசிஎண்களார் பெருக்கியும் (கூ-ல்) கழித்தசேஷமும் வந்தாவை ஐந்தில்

பெருக்கி (கூல்) கழித்த சேஷமான புக்திகளினும் மாதருகெண்டங்கள் கூறப்பட்டன இதில் மொத்ததுகைகளே யொன்றுபடுத்தி (கூ-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் திசாபுக்திகாலம் மாதரு கருமமென்றுங் கண்டரிய வேண்டியது

குரு புதன் சனி கும்பம் இவைகளுடனும் இவர்களுள் குரு புதனுக்கு நான்காமதிபதியின்ற இராசிநாதனுடனும் கூடிய கிரகங்களின் பெலாபெலப் படிக்கிக் கண்டறிந்த யெண்களே ஒன்றுபடுத்தி குருவுக்கு நான்காமதிபதி யின்ற இராசிநாதன் பெலனுக்கு இசைந்த யெண்ணிற் கொடுத்தசேடம் எத்தனையோ அத்தனை பாஷையில் வல்லவனென்றும் அறியவேண்டியது

புத்திரபாவ பலன்கள்

குருவையும் மீனத்தையும் கடகத்தையும் சந்திரனையும்கொண்டும் இவை களுக்கு ஐந்தாமிடத்ததிபதி யெந்த இராசியிலிருக்கிறானே அந்த ஸ்தானாதி பதியையுங்கொண்டு புத்திரபலன் சொல்லவேண்டியது.

குரு மீனம் மகரம் துலாம் மிதுனம் மேஷம் இவைகளைத்தவிர்த்த இராசி களில் சுபகிரக க்ஷேத்திரத்தில் மித்துருக்ஷேத்திர கிரகசம்மந்தமல்லது தனித் தும் தனுசுமீனம் கடகமிவைகளில் சனி பாம்பு புதனில்லாமலும் பெலவானுகி யும் இருக்கினும் பூர்வபக்ஷ சந்திரனுகி குரு கேந்திரகோண கெதனுகியும் தனுசு மீனம் கடகம் விருஷபம் இவைகளிலும் கன்னி இவ்விடத்தில் சூரியன் புதன் குசன் பெலத்தும் சந்திரன் சுக்கிரன் முதலிய சுபரும் குரு மீனம் இவைவசாத் ஜீவசரீராதிபதி பெலவானுகி பாபக்ஷேத்திர சம்மந்த மில்லாமல் இருக்கினும் சுபரைக்கூடினும் குரு சந்திரன் சுபருடன் கன்னி இராசி இம்ம ராசி இவைகளில் நிற்கினும் பெலத்தோறைக் கூடினாலும் புத்திரர் பிறபல விருத்தியுடையவர்களாயும் மேலானுகியும் வாழ்வர் அவர்களுடன் கூடிய புருஷகிரகம் எவ்வளவு யென்றறியப்படுகிறதோ அவ்வளவு யிலக்கமுள்ள புத்திரவிருத்தியென்றும் பெண்புத்திர விஷயங்களையும் மூன் சொன்ன படிக்கே கண்டறிந்து சொல்லவேண்டியது,

மேலேகுறித்த (கு) இராசிகளில் குரு விருந்தும் மீனம் கடகம் இவை களில் சனி சூரியனேவிட்ட புதன் பாம்பு இவைகளிலிருக்கினும் நோக்கினும் அவ்வீட்டதிபர்களும் ஜீவ சரீராதிபர்களும் பெலமற்றும் பகை நீசாதிபாவர்க ளுடன் கூடினாலும் பாபபெலனே அடைந்திருந்தாலும் புத்திரதோஷமும் சுவீகாரபுத்திர பாவாதிகளே அடைவனென்றும் இவ்வித பாவர்களுடன் சந்திரன் குரு பெலமற்றும் பகை நீசசுபரல்லது சனி பாம்பு முதலியவரைக் கூடினாலும் நோக்கினும் புத்திரகருமஞ் சாதகனுக்கு கிடையாதென்றும் குரு சந்திரன் ஜீவசரீராதிபர்களில் அதிகமானோர் மகர கும்பம் மிதுனங்

கன்னி இவைகளிலும் அவரவர்களின் பகை நீசாதியிடங் கிரகமிவைகளுடன் கூடி நிற்கினும் நோக்கினும் பாவரே வந்த ஸ்தானத்தில் அல்லது இடத்தில் பாவருமில்லாமல் இவர்களில் சுபர் நோக்குமில்லாதிருக்கில் புத்திரபாவமே கிடையாதென்றும் இவர்களில் சிலர் பகை நீசம் கேந்திர இடங்களாகி குரு அல்லது சந்திரனிருக்கினும் (நி. க) இவைகளைச் சுபர் திருஷ்டியும் பெலத்தும் மேன்மையுடனும் சரீராதிபன் உச்சத்தில் அந்தவசபருடன்கூடி பெலத்தும் அவ்வீட்டதிபன் கேந்திரங்களில் நின்றாலும் சாதகனுக்கு சுக்கிரனல்லது சந்திரன் சேவனல்லது சரீராதிபத்தியம் அவர் சம்மந்தம்பெற்று பகையுடைய கிரகத்தோடு மறைவிடமான (ம. சு. அ. கூ) இந்த இடங்களினின்றாலும் சந்திரன் புதனிவர்களில் எவர்கள்கூடினாலும் அவை சாஸ்திர விராசிகளானாலும் முதல்தார வம்சத்துக்கு புத்திராதி விருத்தியடையாமல் துர்தியமானவி வகையால் புத்திரலாப குடும்பசுப மடைவனென்றும் அவ்விதம் முதல்தாரங்களுக்கு புத்திரபாவமுண்டானாலும் தாயுடன் மரணத்தில் முதல் சிசுமரணம் பின் தாயும் மரணதிபாதை யடையப்படுமென்றும் குடும்பத்தில் பலவித துக்க சோகமுண்டாகும் பின்தாரசுதனும் கருமமும் உண்டாகும் இதில் குருவுடன் பாவர்ளாய் பாவக்ஷேத்திர கெதியுடனிருக்கினும் சீவசரீர காரகர்கள் ஸ்திர மூபயவிராசிகளில் பகை நீசத்துவாதி சுபரும் பெலமுற்ற அசுபரைக்கூடினும் புத்திரவிருத்தி பின்தாரம் வந்தும் விருத்தியடையானென்றும் சீவசரீரர்கள் தனிதது சுபக்ஷேத்திர வாசமானாலும் பாபர்கள் சுபர்கள்கூடி நின்றாலும் பார்த்தாலும் குருவுடன் பாவ சுபசம்மந்த வீக்ஷணமானாலும் அகால புத்திரருடன் மருவம்சகளத்திரமூலமாக புத்திரரை விருத்தியடைவனென்றும் அவ்வித குடும்பமூலிய சுகசௌக்கியங்களு மிகுந்த வனுகூலம் உண்டாகும்.

தனுசு மீனம் கடகம் துலாம் இவைகளில் பாவரிருக்கினும் ஸ்தானாதிபதிகளான சுக்ரன் சந்திரன் குரு இவர்களும் சீவசரீராதிபர்களும் பெலமற்று பாவக்ஷேத்திரமான கன்னி மிதுனம் மகரம் கும்பம் விருச்சிகமாகி நிற்கினும் நோக்கினும் பகைவரைக் கூடினும் குரு சந்திரனிவர்கள் பகை நீசத்துவத்துடன் இருக்கினும் சாதகனுக்கு புத்திரபாவ லாபமுமின்றி தண்ப கருமபாத்திபனுமிப் பலவகை வருத்தங்களே யடைவனென்றும் மனதுக்கு துக்க சோகக் குடும்பசோகமும் மேற்கூறிய அருவகையார்களில் மூன்றுக்குமேல் சுபபெலனும் மற்றவைகள் அசுபபெலத்தைப் பெற்றிருந்த போதிலும் பாபக்ஷேத்திர கெதியுடனிருக்கினும் நோக்கினும் புத்திர விருத்திகளுக்கும் மருதாரமூலமான குடும்பவிருத்தி யுடையவனென்றும் இரண்டு சுபர்களிருந்து கூடினும் பார்த்தாலும் சாதகனுக்கு முன் களத்திரவகைளாலேயே குடும்ப புத்திரயோக மேன்பாடாகிய சுக சௌக்கியங்களும் இஷ்டகாரிய செயசித்திகளும் அதிக மேன்பாடுகளும் உண்டாகுமென்றும் சொல்லப்படும்.

குரு சீவசரீராதிபர்கள் விருச்சிகம் தனுசு மீனம் மேஷம் மிதுனம் கடகம் இவைகளில் பெலத்துடன் தனக்குரிய சுபக்ஷேத்திர கெதியுடனிருக்

கினும் நோக்கினும் பெலத்துடன் பார்த்தாலும் புத்திரபாவமானது அதிக விருத்தியுடனுங் குடும்பட்சேமத்துடன் முதல் களத்திரமூலமான புத்திரபாவ லாபமும் செயமுமுண்டாகும் இவர்கள் பாபட்சேத்திரம் பாவர்களுடன் கூடி னலும் பகை நீசத்துவர்களாலுலும் இருக்கில் புத்திரவிருத்தி கிடையாதென் றும் இவைகளில் சில சுபமத்தியத்துடன் சுபர்கள் கூடினலும் பார்த்தாலும் சுக்கிரன் சந்திரன் பெலமற்றுக்கூடினலும் தாரம் இரண்டாவது வகையினல் புத்திரலாப முண்டென்றும் குடும்ப சுகசௌக்கிய மேன்பாடுகளு முண்டாகு மென்றும் குரு சரீரசீவாதிபர்கள் மகர கும்பம் கன்னி இவைகளில் இருந்து பாவருடன் சனி பாம்பு ரவியைக்கூடாக புசனைக்கூடி னின்றலும் ஸ்தானாதி பர்கள் பெலமற்று பகைவீடாலுலும் சாதகனுக்கு புத்திரவிருத்தி கிடையா தென்றும் சில சுபசம்மந்த மல்லது சுக்கிரன் கூடினல் மருதாரவகையால் பின் காலத்தில் புத்திரலாபமுண்டு அல்பபுத்திர யோகவானென்றுங் கண்டறிய வேண்டியது.

விருஷபம் சிங்கம் துலாமிவைகளில் சுபரான குரு சுக்கிரன் சந்திரன் ரவி குசனிவரிருக்கினும் நோக்கினும் பெலமுடைய ஒருவருக்கொருவர் பகை நீசாதி சத்துரு வில்லாமலும் அசுபரானலுலும் சுப பெலத்துடனிருக்கினும் புத்திர விருத்தி யேராமானதால் முதல் தாரவம்சத்திற்கே பிரபலமும் குச றின்றி பாவக்ஷேத்திரத்தில் சனி புதன் பாம்பு இவரைக்கூடினலும் பார்த் தாலும் புத்திரரிருந்து சரியான வயதுகாலங்களில் விருத்திபோல் காண்பித்து கடைக்காலத்தில் புத்திரசுகமு மடையமாட்டாரென்றும் பாவருஞ் சுபரும் புதனல்லது சுக்கிரன் ரவி கலர்ந்தாலும் அல்லது இவர்கள் பார்த்தாலும் பெலத்துடனிருந்தாலும் சாதகனுக்குப் பின்மனையாள் மூலமானபுத்திரலாப செயத்தை யடைந்துவரப்படுவனென் றறியவேண்டியது

புத்திர பாவகெணிதம்

குருவுடனும் மீனத்திலும் இவைகளுக்கு ஐந்தாமிடத் ததிபதி யெந்த வீட்டிலிருக்கின்றனே அவ்வித அதிபனுடனுங் கூடிய கிரகயெண்களோதனித் தனி பெலனுக்குள்ளபடி யெண்களோ இராசியெண்களிற் பெருக்கி அந்தந்த கிரக பெலாபெலனுக்குரிய யெண்ணிற் கழித்தசேஷம் புத்திரபாவமென்றும் அதில் ஸ்திரீ புருஷ கிரகமிருந்து பாகித்துக் கண்டவை பெண் ஆண்யென் றும் பின் மொத்தமான எல்லாத்தகைகளையும் ஒன்றுபடுத்தி வைத்ததை அந்தந்த கிரகமிருந்த இராசிகளேக்கூட்டி (கூ-ல்) வகுத்த சேஷம் உபயம் முதலாக யெண்ணிக்கொண்டு உபயமீந்தால் (கடி-லும்) ஸ்திரமானல் (ம) சரமானல் (டி-லும்) கழித்துக் கண்டவை புத்திரபாவவிருத்தியென்றும் மேற் கண்ட நால்வகைத் தகைகளைப் பெருக்கிகண்ட மொத்தத்தை (கூ-ல்) கழித்தசேஷம் திசையிலும் வந்தாலை (டி-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த

சேஷம் பக்தியிலும் புத்திர லாபமென்றும் இதில் குருவும் மீனத்து மஷ்ட மாதிபதியின்ற ஸ்தானாதிபதி யெந்தவீட்டிலிருக்கிறாரோ அவ்வதிபனுடன் கூடிய யெண்களே பெலப்படி இராசி யெண்ணுற் பெருக்கி மேற்கண்டதுகை யுடன் சேர்த்து (கூ-ல்) கழித்தசேஷம் திசையிலும் வந்தாவை (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் புக்திகாலங் களினும் தனித்தனி இராசி கிரசு மிவைகளைக் கண்டரிந்த திசாபுக்தி காலங்களில் புத்திர மரண துக்கத்தைக் குரிக்கப்படு மென்றும் புத்திர வரிஷ்டமும் யோக பங்கங் கொடுக்குமென் றறியவேண்டியது.

சத்துருரோக ராஜதெண்டனைகளைப் பற்றிய பலன்களாவன

குசன் மேஷம் இவைகளையும் இவைகளுக்கு ஆருமிடத்தாதிபதி னின்ற இராசி நாதனுடனுங் கூடிய பெலாபெலன்களே யாராய்ந்து சத்துருரோக ரொணதி ராசதெண்டனைகளைக் கூறப்படும்.

குசன் சனிக்கி ஆருஎட்டாமிடத் ததிபதிகள் னின்ற இராசி நாதனைக் கொண்டு இராசதெண்டனை ரொணத்தையும் சந்திர சூரியலக்ஷ்டாதிபதி னின்ற இராசிநாதனைக்கொண்டு தேகரோகாதி பாதைகளையும் குரு குசன் சலக்ஷ்டாஷ்டமாதிபதி னின்ற இராசிதனைக் கொண்டு இராஜதெண்டனையிலுங் கூறவேண்டியது.

இதில் முதலாவது ரோகத்தைப்பற்றிக் கூறப்படும் ரோகபாதைக்கி ஆரு மிடம் குசன் இவர்களுடனும் ரவி சந்திரன் கூடினும் (சு, அ) இந்த இராசி யிலும் (கக-லும்) இருக்கினும் கேந்திர வலுவில் னின்ரூலும் சேவசரீராதிபர்கள பெலத்து ரவிகுசன் சந்திரனிவரைக்கூடி (சு, அ, டு, கக) இந்தவீட்டினும் சுப திருஷ்டி சம்மந்த மின்றி பகை நீசராகினும் பாவராகிய சூரிய னைக் கூடினிற்கில் கிரகபாதை நேத்திரான மும்மறமான பித்தச்சூடான ரோக சரீராதிபதியாகி சந்திரனுடன் கூடினுல் கபாதி சிலேஷ்பண சம்மந்த நோய்களென்றும் குசனுகின் இறெக்தவிரணாதி ஆயுத சம்மந்த மான கட்டி பிளவை முதலிய ரோகமும் புதனுகில் உதராதி தேகரோகமும் சித்தக்குறைவையும் கொடுக்கப்படும் குருவாகில் மேகவாயு உதரவாயுவு மயக்க ரோகமும சுக்கிரன் ஜெல சம்மந்தகோய் நேத்திரநோய் ஸ்திரீமூலிய மாணி ரோகமும் சனியாகில் பித்தவாயு சுரசன்னி முதலியதும் இராகுவாகில் பித்த மயக்க மூர்ச்சை விஷரோகமும் கேது விஷரோகம் சித்தபிரமை முதலிய ரோ கங்களையுங் கொடுக்கப்படுமென்றும் அரியவேண்டியது சேர்க்கை யில்லாவிடி னும் மேலே சேவசரீராதிபர்கள் (சு, அ, க, டு) இவைகளிலும் குசன் இவர் களைக்கூடி னிற்கினும் அவர்களுக்கே இவ்விதகோய்த் துன்ப முண்டாகும்

சுபராசி யல்லது சுபதிருஷ்டியுட னிருக்கினும் சேரினும் இவைக ளவரவர் களுக்கேற்ற திசாபுக்திகளில் கொடுத்து ஜீவிருத்தியாகும் சுபர்களே பாவ ராகிக் கூடினலும் பாவரிருக்கினும் பாவட்சேத்திர கெதியடைந்தாலும் தீரா வியாதிவந்தன யதனலேயே மரணமடைவனென்றுங் கண்டு கொள்ள வேண் டியது.

* இருணம் ராசதெண்டனை பலன்

குசன் சனியும் அவர்வசாத் ஷடாஷ்டமாகிபதி னின்ற ராசிநாதர்கள் பெலத்துடன் சுபட்சேத்திர கெதனுகியும் பாவராகியும் தனுசு கும்பம் கடகம் சிங்கம் இவைகளிலும் மேஷ மிதுனம் இவைகளில் குசன் சனி இவர்களுடன் பாவர்கள் மிருக்கினும் சந்திரன் முதலிய சுப வீக்ஷணிய மில்லாதிருக்கில் சாதகனுக்கு இராசதெண்டனையும் இருணசம்மந்தமும் பலவாருண தனமிருந்த போதிலும் உண்டாகும் இதில் சீவசரீராதிபர்கள் பெலத்து மல்லது சுபர் வீட்டில் சுபதிருஷ்டியுட னிருக்கின் அப்படிக்கொற்ற இராசதெண்டனை நீங்கி இருணமுஞ் சிலவு மதிகமாக நடக்குமென்றும் மேற்கூறிய கிரகம் கால் வரும் ஒன்றுகவாவது தனித்தாவது னின்று விருச்சிகம் தனுசு மீனம் விருஷ பம் மிதுனம் சிங்கம் இவைகளில் தனக்குரிய பகைவருடன் கூடினலு மல்லது வீக்ஷணியம் பெற்றலும் வீக்ஷணிக்கப்பட்ட கிரகம் அதிகபெலவானுகில் இராசதெண்டனையும் பலவகை விரோதபலனையுங் கொடுக்கப்படும் குருவும் பெலன்கெடில் இருணமுடையவனுகியும் பலவகை வருத்தங்களையும் அடை யப்படும் என்றும் அரியவேண்டியது மேலேகூறிய கிரகங்கள் பெலத்துடன் சுபகிரகஷ்தான சம்மந்தத்திலும் பெலவானுகியும் கேந்திரகோண கெதனுகியும் அதிக பெலவானுகி சீவசரீராதிபர்கள் சுபட்சேத்திர கெதியுடனும் குசன் முதலியோர் பெலத்திருக்கில் சத்துரு ரோகபெலவானுகி ரொணசம்மந்தத்தை யுடையவனுகியும் பலவித வருத்தங்களையடையப் படுவனென்றும் அநேக கிரக வாகனுதி யோகங்களும் பூர்வார்ச்சித சம்மந்தமானவைகளும் நஷ்டமும் இராச மூலமான விரோதவிவாத நஷ்டமும் இராசதெண்டனைக் குரியவகை நடக்கும் ஆனலவர்களுக்கு இருபக்கங்களிலும் பாவரானலும் பாவட்சேத்திரகெதி யடைந்திருந்தாலும் சத்துரு இராசதெண்டனைகளானது பயங்காட்டி யவரவர் களுக்குரிய திசாபுக்திகளிலுண்டாகி ஜீவர்த்தியாகுமென்றும் குடும்ப வருத்தங் களே யடைவனென் றறியவேண்டியது.

குரு குச னிவர்களுக்கு ஷடாஷ்டமாதிபன் கேந்திரகோணமான சுப பெல கெதியுடன் பாபட்சேத்திரத்திலாவது அதாவது சனி வீடு மேஷம் மிதுனம் முதலிய இடங்களில் பகைமுதலியோருடனுவது இருக்கினும் சத்து ருக்களால் பலவிதவிவாதமும் பொருள் நஷ்டம் இருணம் இராசவிரோதத் தால் நஷ்டம் சத்துரு தன்பமும் ரோகபயம் மனதுக்கு வருத்தம் உண்டாகும்

* இருணம் என்பது - கடனுகும்.

இதில் சனி சுக்கிரன்முதலிய பகையோருடன் கூடினலும் சனி சுக்கிரன் சந்திரன் இவர்கள் வீட்டினின்றலும் பெண்கள் மூலியமான குறைவு ராச தண்டனை பயம் முதலிய தான்பங்களே யடைவன் அந்தக்கிரகங்களுடன் கூடியும் பார்த்தும இருக்கும் ஸ்தானாதிபதி இவ்வித திசாபுக்தி காலங்களில் கொடுக்கப்படுமென்றும் அரியவேண்டியது அவ்வித திசாபுக்திநாதன் சுவயமாய் பெலமுடைய சுபனாலும் சுபட்சேத்திர கெதியடைந்தாலும் அல்பமாக அவுமான பயம்போலக் காண்பித்து உடன் ஜீவிருத்தியானது பொருட்செலவினால் உண்டாகும்.

* இருணவிஷய கணிதம்

குரு குசன் மேஷ மிவைகளுடனும் இவைகளுக்கு ஷஷ்டாஷ்டமாதிபன் யெந்தஸ்தானத்தி லிருக்கிறானே அவ்விடத்தாதிபனுடன் கூடிய கிரகயெண்களே ஒன்று ஒன்றாக அவ்வித ராசி யெண்களாற் பெருக்கிய துகையை அவரவர்களின் றனியொற்ற பெலாபெலன்களாகிய கதிரென்னுங் கிரகயெண்ணிற் கொடுத்த சேஷம் யெதுவோ அதைப் பார்த்தபின் குருவுடனும் தனுசுவிலும் குருவுக்கு (உ, கக) மிடத்தாதிபதி யின்ற ராசிநாதனுடன் கூடிய கிரக பெலாபெலன்களுக் கிணையுற்றபடி யெண்களே யெடுத்துக்கொண்டு அந்தந்த ராசியெண்ணாற் பெருக்கி ஒன்றாசேர்த்து அத்துகையை அந்தந்த கிரகயெண்களில் கொடுத்த சேஷமும் அரிந்தவை தனலாப மென்றும் முன்சொல்லியவை இருணமென்றும் பெயருகும் ஆகையால் இருணசங்கைக்கும் தனலாப சங்கைக்கும் சரிபார்த்தவையில் தனத்துக்கு இருணம் சாஸ்தியானால் இருணஸ்தனென்றும் தனஞ்சாஸ்தியானால் தனவந்தனென்றும் அரியவேண்டியது.

களத்திர பாவபலன்கள்

சுக்கிரனையும் விருஷபமும் இவைகளுக்கு சப்தமாதிபனின்ற ஸ்தானாதிபதி யெந்த இராசியில் இருக்குமோ அந்த இடத்தாதிபதியையும் சுக்கிரனின்ற ஸ்தானாதிபதி யெந்த இராசியிலிருக்குமோ அவனுக்கு ஜீவனென்றும் அவ்விடத்தாதிபன் யெந்த ராசியிலிருக்குமோ அவை சரீரமென்று பெயருகும் ஆகையால் அவைகளேயரிந்து களத்திர பாவபலன்களே யரிந்து கூறல் வேண்டியது களத்திர காரகனான சுக்கிரனுக்கும் விருஷபத்துக்கும் யேழாமிடத்தாதிபதி யின்ற இராசிநாதன் இவர்களாகிய நான்குபெயர்களுந் தனக்குரிய சுபட்சேத்திரமான தனக்குரிய கேந்திர முதலிய இராசிகளாகியும் தனக்குரிய சுபட்சேத்திர சுபபெலத்துடன் (க, உ) ஆனகிரகங்கள் மித்துருவாகியும் சுட்சேத்திர உச்ச நட்பு ஸ்தானத்தில் பெலத்தும் சுக்கிரனுடன் மூவிரண்டுவகை பெலனும் பாபட்சேத்திரம் அல்லது சம்மந்த வீக்ஷணமில்லாதிருக்

* இருணமென்பது - கடன்

கில் அதில் குரு பெலவானுலுல் சத்களத்திரம் யேகமென்றும் பிறபல குடும்ப யேன்மையுந் தருமதேவ பிரும்மண பக்தியுள்ள களத்திறதீற்க மேகமென்றும் உபய மல்லது சரத்தினிற்கினும் மூன்போலாம் ஸ்திரமாகில் உபயமனேவி யென்றும் மேற்கண்ட சுபர்கள் ஓர் பாவட்சேத்திரமல்லது அவர்களிலிருவர் பகை நீச அபெலனேப்பெற்றிருந்தாலும் ஓர் பாபசம்மந்தமல்லது வீக்ஷணமானு லும் சுபபாவத்துவமாரி இருக்கிலும் சீவசரீராதிபர்கள் பெலனற்று (கூ, சு, அ, கக) இவைகளுக்குரிய பலனேக்கொடுக்கும் ஸ்தானம் சுபரானுலும் மற்ற கேந்திரகோணம் (உ) இந்த ஸ்தானங்களில் பாபர்களுடனே கூடினுலும் ஷை யேர்கள் பாவராயிருந்தாலும் சாதகனுக்கு சுக்கிரன் விருஷபத்தில் பாம்புடன் அல்லது ரவி குசன் சனி இவர்களிலெவறைக்கூடினுலும் அல்லது இவ்விரண்டுபேச்சுகளிலும் இவ்விதபாபர்கள் இருக்கினும் பகையோறைக் கூடினுலும் சாதகனுக்கு களத்திரம் (உ) யென்றும் பல பாவபெலத்தோர் கூடில் பலவித களத்திரமாகிய பகுகளத்திர லாபமும் இவர்களுக்கு தசமாதி பதிகின்ற ஸ்தானுதிபதி கின்றவதிபன் பெலத்துடன் இருக்கில் சாதகன் களத்திரமூலமான தனலாபமேன்மைகளும் மனேவாச்சயமும் கிரகவாகன கேஷமமும் மேன்மையான உத்தமபலன் நடக்கும் மேற்சொல்லிய ஸ்தானம் அதிபதி பாபட்சேத்திரம் பகை நீசஸ்தானத்தில் இருக்கில் சாதகனுக்கு களத்திர வம்சத்தால் சாதகன் பொருன்நஷ்டமும் ஸ்திர ஸ்தானமானதாவது கிரகமாக வாவதிருக்கில் சாதகனுக்கு களத்திரவகை மூலமாகவும் பிரயோசன மடையான் சாதகனுக்கும் களத்திரவகைக்கும் நஷ்டமின்றியும் நடக்கும் யென்றும் இருவர் வகையாலும் அவரவர்களுக்கு மாறுபாட்டிற்குரிய பல னடையப்படமாட்டாதென்றும் அரியவேண்டியது.

இனி தனித்தனி கிரகஇராசி முதலியதாகிய பாவங்கள் கூறப்படும்

இந்த பாவத்தக்கு சீவ சரீராதிபர்கள் தனக்குரிய பெலமுற்ற சுபத்தோடு இருக்க பாபரைக்கூடவல்லது நோக்கமின்றியு மிருந்தும் சுக்கிரன் விரிச்சிகம் தனுசு கும்பம் மேஷம் கடகம் இவைகளில் தனக்குரிய பாவர்களானுலும் அல்லது சுபரானுலுங் கூடியிருக்கினும் நோக்கினும் அவ்வித கிரகங்களுக்கு ஒருவருக்கொருவர் மித்துரு சத்துருவில்லாமல் சமனுகியிருக்கில் சாதகனுக்கு ஒறேதாரமென்றும் ஸ்திரவிராசிகளி லிருக்கினும் தாரமிரண்டு அல்லது முதற்புரம் மரணமாகிவிடுமென்றுங் கண்டரியவேண்டியது பின் விவாக மூயல்வுங் காலதாமத்தைக் குரிக்குமென்றும் அரியவும் மேற்கூறிய கிரகங்க ளுடன் பாவரல்லது ரவி குரு கூடியல்லது பார்த்தாலும் யேழாமிடத்தில் பாவர்களிருக்கினும் சுக்கிரன் மேற்கண்ட யிராசிகளில் பகைவர் அதிகபெலத் தோருடன் சுக்கிரன்கூடி சரவிராசியிலும் புதனல்லது சனி விருஷபத்தில் இருக்கினுங் குசன் முதலியபாவர்கள் கூடியல்லது பார்த்தாலும் ஸ்தானுதிபதி

நீசம்பெற்றாலும் பகை முதலிய பாவரைக்கூடினும் தத் ஸ்தானாதிபதிகள் ஸ்திர விராசியிலும் பாவட்சேத்திர கெதர்களாகி னின்றாலும் ஜாதகனுக்கு கிரகங் கூறிய பலனுக்குரிய (உ) முதலிய பெருதாரவகை கூறப்படுமென்றும் பாப சுபசம்மந்தங்கலந்தும் குரு வீட்டினின்று பெலத்திருக்கினும் ஒரு வருக்கொருவர் தனக்குறிய சம சுபத்துவ முடையவர்களானாலும் ஜாதகனுக்கு சீவகளத்திரமென்றும் மேற்கூறிய சீவகளத்திரமூலிய குடும்ப மேன்பாடுகளும் தனதான்ய பிறபலயோகமும் குடும்ப சுக சௌக்கியமும் அசன சயன போக போக்கிய சுகமும் உண்டாகும் விருஷபத்திலாவது சுக்கிரன் சுக்கிரனுக்கு (எ) மிடம் சீவ சரீராதிபர்கள் இவர்களுடன் சனி பாம்பு குசன் ரவி தனக்குரிய அசுப பெலக்காரருடன் கூடினும் சுபராகி பாபபலன்களைப் பெற்றிருக்கினும் சப்தமம் சுத்தமாகி அதிபதி பெலமற்றிருக்கில் சாதகனுக்கு களத்திரம் (உ) முதலிய வெருதாரமும் புதன் சனிகூடி அவர்களைச் சேர்ந்தாலும் அல்லது பார்த்தாலும் களத்திரம் தேகரோகமும் தேவதாதி பாதை முதலிய அபல சரீரமென்றும் அரியவேண்டியது.

சீவ சரீராதிபர்களும் சுக்கிரனும் விருஷபம் மிதுனம் சிங்கம் கன்னி இந்த இராசிகளில் குரு சந்திரன் புதனிவர்களைக்கூடி யல்லது முழு வீக்ஷணியமாகி பகை நீசமல்லது பாவறைக்கூடி யல்லது பாபர் மத்தியிலும் வீக்ஷணியத்தடனிருக்கினும் சாதகனுக்கு தாரம் வெகுவென்னும் இரெண்டு முதலிய தாரஸ்தனென்றும் ஷை தாரவகையால் பலவித மனோவருத்தங்களும் சத்துருமூலிய வருத்த மிவைகளைக் கொடுக்கப் படுமென்றறிய வேண்டியது.

மேல்படி இராசியிலிருக்குஞ் சீவசரீராதிபர்களுடன் பகைநீசத்தோரான பாவரிருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு தாரதோஷமும் சனிபுதன்வீட்டில் பகைநீசவிடத்தில் ஷை சீவசரீராதிபர்கள் இருக்க சப்தம விராசியானது பகை நீசக் கோளல்லது சுத்தமாயிருக்கினும் சுக்கிரன் சனி புதன் முதலியவர்கள் கிரகத்தில் பகைநீசக்கோள் என்னும் பாபபெலத்தைப் பெற்றும் சுப சம்மந்தவீக்ஷணியங்களில்லாதிருக்கில் சாதகனுக்கு விவாக மடையப்படமாட்டாதென்றும் சுப சம்மந்த திருஷ்டி இவை இருக்கில் காலதாமத விவாகமும் பாபிகள் தனக்கு மேலோர் பாற்கில் சீக்கிர விவாகமாகினுடன் களத்திர சோகம் மிதுனத்தி லிவ்வித சுக்கிரனுடனிருக்கினும் தாரம் பல விதமான (உ) முதலிய தாரங்களென்றும் (ச)க்குமேற்பட்ட கிரகத்துடன் மேலேகூறிய கிரகங்கள் பகைநீசாதி பர்களானாலும் சமம்பெற்றிறுக்கினும் சீவசரீராதிபர் கூடினாலும் பெலத்துநிற்கினும் தாரமொன்றென்றும் அவைமூலிய அனுகூலமும் சுகசௌக்கிய பலனடையப் படுமென்றறிய வேண்டியது.

சீவ சரீராதிபர்களும் சுக்கிரனிவர்கள் துலா மகரம் மீனம் இவைகளினின்று தனித்தால் தாரமிரண்டென்றும் இரு பாவர் சமத்தோருடன் அல்

லது மித்துருவுடன் கூடினுல் தாரமென்றும் ஓர் பகைவர் சுபருடன் பாப ரிருபக்கங்களிலு மிருந்து பகை நீசத்தோறைக் கூடினுலும் சுக்கிரன் பலசுப ருடன் ஓர்பாவர் கூடினுலும் மற்றய சீவ சரீராதிபர்களின் சப்தமத்தில் சுக்ரன் பாப சம்மந்தமாகியும் அதி பாவரைக் கூடினும் அசுப கிரகத்துட னின்றுலும் பாபர் மத்தி பாப க்ஷேத்திரத்தில் சீவ சரீராதிபர் நிற்கினும் ஜாதகனுக்கு பொகு தாரஸ்தனென்றுங் கண்டரியவேண்டியது.

தாரவிஷய கணிதம்

ஜாதகனுக்கு மேற்கூறிய சீவசரீராதிபன் யெந்தவீட்டிலிருகிறுனே அவர்களுடனும் சுக்கிரன் மேஷமிவைகளுடனும் கூடிய கிரக சுபாசுபத்துக் கிசைந்த தனித்தனி யெண்களே இராசியெண்களாற் பெருக்கிய துகையை தனித்தனிவைத்து அவரவர்களின் கிரணயெண்ணிற்குரிய வகையைமாத்திர மெடுத்து அவரவர் கிரகபூரா வெண்பேருக்கு கொடுத்துவந்த பெயறை தனித் தனி யெழுதி சுபத்தில் யெத்தனையெண் பெலவத்தானது வரும்பெயரே அதைக்கூட்டிக் கண்டவை தாரமென்றும் பின் அவரவர்கள் யெண்ணிற் கிசைந்தபடி கண்டரிந்தவை குணரூபமான சத்குடும்பாதியும் தன லாபமுள்ள களத்திரமென்றும் ஆருய்ந்து கூறவேண்டும் இத்துடன் (கக) மிடத் ததிபதி னின்ற இராசிநாதன் யெந்த இடத்திலிருக்கிறுனே அவருடன்கூடிய பெலா பெலனுக்கு இசைந்தபடி யெண்களே ராசியெண்ணிற்பெருக்கி பெலத்துக்கு இசைந்ததை யெடுத்து அவரவர்கள் பூராவான கிரண யெண்பேருக்கு கொடுத்துக்கண்டவை பின் தாராதி வம்சபலன்களேயுங் கூறப்படுமென்றும் மேலே கண்டதுகைகளே தனித்தனி (கூ-ல்) கழித்த சேஷம் திசையிலும வந்த ஈவை (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்தசேஷம புத்தியென்றுங் கண்டறிந்த காலத்தில் விவாகங்களென்றும் சீவசரீராதிபருக்கு பகையானவர் அஷ்டமாதி பர்களாய் வந்தவருடன்கூடிய கிரகயெண்களே யெடுத்துக்கொண்டு பெலன்படி இராசியெண்ணுற் பெருக்கிய துகையை (கூ-ல்) கழித்தசேஷம் திசையிலும் (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் புக்தியிலும் களத்திர தோஷங்க ளென்றும் மேலேகண்ட துகைகளே யெல்லாம் ஒன்றுசேர்த்து (டு-ல்) கழித்த சேஷம் இன்ன பூதகாரண மரணமென்றும் இப்படிக்கி சவ்யாதியரிந்து கூற வேண்டுவது அவசிகமாயிருக்கிறது.

பிதுர்பாக்கிய பலன்கள்

பிதுர்பாக பலனுக்கு சந்திரன் ரவி கடகம் இவைகள் சரீரமென்றும் இவை (க) மிடத்ததிபதி யெந்தஇடத்தி லிருக்கிறுனே அவ்விடத்ததிபன் நிற்குமிடஞ் சீவனென்றும் சீவக்கோளென்றும் பெயராகும் சீவசரீரமிவைக ளுடைய பிரபல பெலனரிந்து கூறவேண்டியது. சீவனுக்கும் உடலுக்கும் யெப்பொழுது குறைவுண்டாகுமோ அப்பொழுதே அந்த பாவங்களும் பிர

யோசனமற்று இழந்துவிடும் ஆகையால் இம் மூலமாகவே பலன்கள் கூறப்படும் சிவ சரீரத்துவங்களைப்பற்றி பலவித அருவகை வாயுக்களைக் கூறப்பட்டது இதில் பிரதான சீவனுடைய சந்திரனுக்கு (க) மிடத்தாதிபதி யெந்தயிடத்திலிருக்கிறானே அவ்வீட்டதிபன் சீவன் குரு யெந்தயிடத்திலிருக்கிறானே அந்த ஸ்தானாதிபன் சரீரம் என்றும் பெயரும் இந்த இரெண்டுபெயர்களும் ஒரு வருக்கொருவர் பேதமில்லாமலும் சத்துருவில்லாமலு மிருக்கில் தான் பிதுர் விருத்தி கூறப்படும் பகையானால் பிதுர் நாசம் வர்க்க நாசம் பரஸ்பரவிரோத மானால் பொருளுங் கிடையாது பிதராயுளும் விருத்தியை யடையான் ஓர் பகைப்பாவரானால் பிதுர்மாரகம் பாலியம் தனலாபமுண்டு சமனும் பகையு மானால் பிதுர்பொருளில்லான் பிதுரு விருத்தியுண்டு இருவருஞ் சமபெலக் காரரானால் பிதுர்பொருளல்பமுண்டு பாபபெல மதிகமானால் பிதாவுமுடனே மரணமாவன் பொருளுமில்லை சுபபெலமொன்றும் பாபபெலனொன்றுமானால் ஆஸ்திபுண்டானால் பிதுர் கிடையாது பிதுரிருக்கில் பொருள்கிடையாது இரு வருஞ் சுபபெலமானால் விருத்தகாலவறை பிதுர்தீற்கம் தனபிறபலம் சமம் ஒன்று நட்பு ஒன்று சுகேஷத்திரமானால் பிதுர்பாக்கிய விசேஷமும் பிதா சில காலமிருப்பனென்றும் இவ்விதமாக பிதுர்பலன் சொல்லவேண்டியது.

சந்திரன் சரீரசீவாதிபர்களிவர்களும் கடகத்தினிற்கினும் சுபரல்லது பாவரானாலும் மேன்மையுள்ள சுபபெலத்தை யுடையவரானினும் பிறபலம் பெற்றிருக்கினும் குருமுதலிய சுபகோள்கள் பார்த்தாலும சாதகனுக்கு பிதுர் பாக்கிய விருத்தியும் பிதுரு குடும்ப பிரலமும் பிதுர்வம்ச விருத்தியாகுமென் றறிய வேண்டியது சத்பிதுரானி மேன்மைபொருந்தி தேவதாபக்திமுதலிய நல் விஷயவானென்றும் சந்திரன் சரீரசீவாதிபர்களிவர்கள் தனக்குரிய ஸ்தான மில்லாமலும் பாபமத்தியம் பாபசம்மந்தர்களாகியும் அல்லது அவர்கள் தனித்து பாபகிரக ஸ்தலத்திலும் பகை நீசாதிமுதலிய அபலங்களுடனே இருந்தும் கட கம் மீனம் இவைகளிலும் இவைகளுக்கு இருபக்கங் களிலாவதும் பாம்பு குசன் ரவிமுதலிய பாவரிருக்கினும் சந்திரன்குரு முதலியோர் பெலமற்றவர் களாகி பகை நீசபாபசம்மந்த மடைந்தாலும் சாதகனுக்கு பிதுரார்ச்சிதமில்லாம லும் பிதுருவம்ச நஷ்டமும் தருமதானமில்லாதவனிவனென்றும் இவை வசாத் ரவிபெலமற்றும் பகை நீசாதிகெதியிலுமிருந்தும் சத்துரு கிரகத்தைக்கூடி இருக்கினும் ஜீவசரீராதிபர்கள் பாபர்களான ரவி யல்லது சனியாகிப் பகை முதலியோருடன் கூடியிற்கினும் சாதகனுக்கு பாலியத்திலேயே பிதுர்மரண மென்றும் பிதுர்வம்ச விருத்தி வரவர க்ஷயிருக்குமென்றும் பலவகை வருத்தங் களுந் தனதானியக் குறைவுகளும் இவ்வித பலனடையுமென்றும் இதில் ஓர் சுபர் வீடானாலும் சுக்கிரன் முதலிய சுபக்கோள் பார்க்கவல்லது கூடினாலும் கடக மீனம் இவைகளில் சுபர்கள் சுபவீக்ஷணமானாலும் சாதகனுக்கு யெள வனாவஸ்தையில் பிதுர்மாரகமென்றும் இருவகைச் சுபருடன் சீவசரீராதிபர் களும் வலுத்து சுபட்சேத்திர சுபகெதியும் ஸ்திரவிரோசிகளிலிருக்கில் கவுமார

வயதில் பிதுர்கருமமும் பிதுர்வம்ச முதலிய பாக்கிய விருத்திகளுண்டென்றும் சுபபலனதிகமாகி உபயஞ்சரமிவ்வித இராசியில் இந்த நான்கு பெயர்களும் பலத்துடனிருக்கிற் சாதகனுக்கு வயோதிககாலத்தில் பிதுர்கருமமென்றும் சீவசரீராதிபர்களில் ஒருவர் பலத்தும் ஒருவர் பலமற்றிருக்கில் பாலிய மரணமாவான் பிதாவென்றும் பிதுர்வம்ச பிறபல விருத்தியுடனிருந்து வரப்படுமென்றுந் தனதானிய மேன்மைகளும் இஷ்டசித்திகளும் அசனசயனயோகபோக்கிய பாக்கிய விருத்தியை யுடையவனுவனென் றறியவேண்டியது.

சந்திரன் ரவி முதலியோரும் சரீராதிபர்களும் விருச்சிகம் தனுசு மீனம் மிதுனம் கடகம் இவைகளில் தங்களுக்கு இயல்பான சுபட்சேத்திரங்களில் சுபசம்மந்த திருஷ்டியுடன் பலத்தும் சீவசரீராதிபர்களின் கேந்திரகோணத்தில் பலத்து நிற்கினும் பிதா விருத்தாவஸ்தையில் மாரகமாவன் இவர்கள் (சு, அ, கக) இடங்களில் தனக்கு பகை நீசட்சேத்திரமல்லது பாவக்கிரகங்களுடன் கூடிநிற்கினும் பாலியத்திலேயே பிதுர்மரணம் பாப சுப சமபலத்துடன் அசுப க்ஷேத்திரத்திலிருக்கில் எவ்வனத்திலேயே பிதுர்மரணமென்றும் சுபட்சேத்திரவாசனுகில் கௌமாரவயதில் பிதுர்மரணமென்றும் பல வகைக் குடும்பபாக்கிய பிறபலமுடையவனென்றும் பிதுர் மேன்மையான வம்சஸ்தனுவனென்றும் அரியவேண்டியது. இதில் சீவ சரீராதிபர்களும் பகை முதலிய அபலத்துடன தனக்கு இயல்பில்லாத ஸ்தலத்திலும் ரவி கெட்டு (சு, அ) களில அல்லது (டி, கூ-ல்) இருக்கினும் பாம்பு சனி முதலியோர்கூடி அல்லது பாபமத்தியில் சீவசரீர முதலியோ நிருந்தாலும் பிதா கெற்பகாலமே மரணமாவனென்றும்.

மகரம் கும்பம் மேஷம் விருஷபம் இவைகளில் சீவசரீராதிபர்கள் நின்றும் பகை நீசமில்லாத பலமுடைய பாவரானுலும் சுபர் பாபராய்க் கூடினுலும் வார்த்தீக திசையில் பிதுர்மரணம் பிதுர்வம்ச தனமல்பமுடையவனென்றும் சுபர்கள்கூடி நின்றுலும் ரவி சனி முதலிய பாபமத்தியமாகிப் பலக்குறைவானுலும் பிதா பாலியமரணமும் ஓர் பாபர்கூடினுலுந் தனக்கு சுபரானுலும் உபயம் ஸ்திரமிவ்வித இராசிகளில் பலத்தாலும் பாலிய மரணம் பிதாவிற்குண்டாகும் பாபசுபர் கலப்புடன் பலமுடையோர்கூட அல்லது பார்த்தாலும் எவ்வனத்தில் பிதுர்கருமமும் பூமி முதலிய ஸ்திரி யல்பமென்றும் குடும்ப பலவித வருத்தங்களும் உண்டாகுமென் றறியவும். மேற்கூறிய இராசிகளில் தங்கள் தங்களுக்குறிய வகையோடும்கூடிய பலமற்ற இடங்களில் சுப பலத்தையுடைய கிரகங்களேக் கூடி நிற்கில் சாதகனுக்கு முன் பாகம் பூர்வார்ஜித சொத்துக்களிருந்தும் வரவர நஷ்டமடைந்து ரோணமுதலிய பல வகைத் துன்பங்களே அடையக்கடவன் யென்று இதில் பூர்வபக்ஷ சந்திரன் குரு கேந்திரத்திலும் சுட்சேத்திராதி கட்பு உச்சஸ்தானத்தி லிருக்கினும் பிதுர் பூர்வார்ஜிதங்கெட்டு மறுபடி விருத்தியுண்டாக்குவான் பாபகிரகங்க

ளாகியும் சீவ சரீராதிபர்கள் பெலமற்றும் பாபட்சேத்திரத்தில் தனக்குரிய பெலனே இழந்தமிருக்கில் பூர்வார்சிதமில்லாமலும் பலவாறுன கஷ்டதஷ்டத் தடைவன் சீவ சரீராதிபர்கள் பெலத்துடன் அசுபட்சேத்திர மின்றி சுபட் சேத்திரத்தில் பாவர்களைக் கூடினுலும் ரவிகேந்திர மல்லது ரவிவீட்டில் இருக்கினும் குருநோக்க மல்லது குரு வீட்டிலிருந்தாலும் ஜாதகனுக்கு பின்வயதுகாலமிழந்த பொருளுஞ் சுயார்ச்சித பிரபலஞ் செய்வன்.

பிதுர்பாவ பலன்களின் கணிதங்களும் பிதுர்மாரக திசாபுக்தி காலநிர்ணய கணிதங்களும் கூறுவாம்

ரவியுடனும் கடகத்திலும் சந்திரனுடனும் இவர்களுக்கு ஒன்பதாமிடத்ததி பதி னின்றஇராசிநாதனுடனுங் கூடியகிரகமெண்களே சுபாசுப விதிப்படி ஆராய்ந்தெடுத்தும் அத்தொகையை தனித்தனி இருக்கும் இராசிகிரண எண் களாற் பெருக்கி அத்தொகையை பலனுக்குறிய வகையைமாத்திரம் எடுது மற்றவையை தள்ளுபடிசெய்தும் அந்த தொகையை அவரவர்களின் கிரண வெண் பேருக்கு கொடுத்துவந்த பெயருள்ள சுபபலத்தொகையை ஒன்றுகூட் டில் பிதுர்வம்ச விருத்தியுள்ள சகோதரமென்றும் அதில் பெண் ஆண் கிரகங் கள் பார்த்தும் அறியவும் இதில் ஸ்திரவிராசிகிரக வெண்ணுலல் இதற்கு முன்னுள்ள பிதுர்வம்ச விருத்திஎன்றும் உபயமானுல் தற்காலத்தில் விளங்கும் பிதுர்வம்சமென்றும் சரமானுல் இனிமேலுண்டாவதுடன் கூடியபிதுர் சந் ததியென்ற சங்கையை சொல்லவேண்டிது மேலேகூறிய (சு) வகை கிரக பெலாபெல எண்களே யொன்றுபடுத்தி குருவின்பெலனுக்கு இசைந்த கிரண வெண்ணிற்கொடுத்த சேஷமும் குசனுடனும் குசனிருந்த வீட்டாதி எந்தஸ் தானத்தி லிருக்கிறுலே அவ்வதிபனுடனும் விருச்சிகத்திலும் குருவுடனுங் கூடிய கிரகவெண்களே பெலன்படிக்கி இராசி யெண்ணுற் பெருக்கிய தொகையைச் சந்திரனுடைய பல எண்ணிற்கொடுத்த சேஷமும் அறிந்து கண்டவையில் முன்ஈவுபிதுர் பூர்வார்சிதமும் பின்ஈவு சுயார்ச்சிதமும் இவ் விரண்டிற்குமுள்ள தாரதம்மிய பாகத்தை யறிந்துகொள்ளவேண்டியது

முதற்கூறிய (சு) வகை கிரகபெலனுக்குறிய யெண்களே தனித்தனி இராசியெண்ணிற் பெருக்கியதை (கூ-ல்)கழித்தசேஷம் திசையும் வந்தஈவை (டு-ல்)பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் (புத்தியிலும் தனித்தனி கண்டறிந்த திசாபுக்திகாலம் சவ்யாதி யறிந்து பார்த்தவை பிதுர்மாரகதிசை யென்றும் அத்தொகைகளே யொன்றுபடுத்தி (ழஉ-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம தனித்தனி யறிந்ததையும் வந்த ஈவை (டு-ல்)பெருக்கி (சு-ல்) கழித்த சேஷம் புக்திகளிலும் பிரபல ராசயோகங்களின் ஆரம்பங்களே கூறப்படும் இவைகளே யெல்லாம் சவ்யாதி வகையாய் அறிந்து பார்த்துக்கொள்ள வேண்டியது.

மேற்கண்ட அறுவகைத் தொகையை (ஐ-ல்) பெருக்கி (சு-ல்) கழித்த சிஷம் (சு-க்) கூள் வந்தால் பிதுரார்ச்சித விருத்தி கிடையாது (சு-க்) கூள் ளாலுல் சமம் அல்பம் பிதுரார்சிதம் (கு-க்) கூள்ளாகில் பிதுரார்சித மேராள மாகவுண்டென்றும் இவ்விதியாக அறிந்து கூறவேண்டியது எத்திசைபுக்தி களின் மூலமாக கடைப்பாகமாக வரப்படுகிறதோஅவையே பிதுர்கருமாதிகார மெனக்கண்டுகொள்ளவேண்டியது இதில் அறுவகைக்கணக்கில் (கு-க்கு)மேல் பட்ட கணக்கு ஒற்றுமையாகி ஒரேதிசை புத்தியாய்வரில் அதிலேயே பிதுர் மாரகக்களைக் கொள்ளவேண்டியது. தனித்தனிவந்தால் பிதாவுக்கு தேக நோயால் அடையுங் கண்டமென்றும் தனித்தனி வருங்கணக்கில் கண்ட திசாபுக்தியெதுவோ இது பிதுர்மாரகமென்றுங் கண்டறிந்து கொள்ளவேண் டியது.

கர்ம இராஜ்ஜிய மிவைகளைப்பற்றிய பாவபலன்கள்

இரவியையுங் குருவையும் சிம்மத்தையும் இவைகளுக்குத் தசமாதிபதி னின்ற ஸ்தானாதிபதியையும் பெலாபெலன்களை யறிந்து பலன்கள் கூறவேண் டியது.

இரவி னின்ற இராசிக்கு தசமாதிபதி னின்ற ஸ்தானாதிபதி சவனென் றும் சுக்கிரனின்ற ஸ்தானாதிபதி சரீரமென்றும் பெயராகும் சவசரீராதிபர்கள் இருவரும் சுபராகி ஒரே கிரகாதிபனாகியும் சுகேஷ்த்திர உச்ச கேந்திர சுப நட்புக்களிலும் குரு பெலவானாகியும் வலிமைபெற்றும் பூரணபெலத்துடன் குசனும் தனக்குரிய சுபபெலத்துடன் (க, கு, கக) இவ்வித இராசிகளிலும் பகைநீசமானாலும் சுபகேந்திர சம்மந்தத்துடனிருக்கினும் நோக்கினும் பெல முற்றவர்களின் சம்பந்தமடையினும் சவசரீராதிபர்கள் ஒருவர் அல்லது சம மைத்திரத்துடனிருக்கினும் நூதனமான அதிகபூமிக்காதிபனவன் அரசத்துவ முண்டாகும் இதில் குசன் (சு. அ-ல்) இருக்கினும் ரவிபெலத்தும் சவசரீராதி பர்கள் பெலனேப்பொருந்தி னின்றாலும் பிதுரார்ச்சித பூமி ராசத்துவ சமான னவான் ரவியும் பெலபுற்றிருக்கில் அவ்விதம் நாசத்துவ பூர்வார்ஜ்ஜிதமும் வர வர இரணமும் அகார்யதுரந்தரத்தையிலும் அபயசஸ்பெற்று யாவையும் இழ ந்து விடுவன் கர்ம ஹீனனுவன் என மிகவுங் கீர்த்தி மூர்த்திகளும் பிரபுத் துவ சன்மானக்குறைவுகளையும் அடைந்து வரப்படுவனெனறும் கூறவேண் டும்

சவசரீராதி ஆறுவகையுடையவர்கள் எல்லோரும் பெலத்து தங்கள் தங் களுக்குரிய கேந்திர சுபபெலன்க ளடைந்திருக்கினும் இராதிபனுகியும் பூர்வபரம்பராதி ஸ்திதிவந்தனுகி வாழ்வனென்றும் இஷ்டசித்திகளும் மிகவு மேலான கருமசிரத்தைகளைப் பொருந்தி வாழ்வன் பூபதியாவன்.

சவசரீராதிபர்களுடன் நால்வர் பெலமுற்று கேந்திரகோணத்திலும் தங் கள் தங்களுக்கு பெலனுள்ள சுபட்சேத்திரங்களிலும் வலுத்துங் குசன் அவர்

களுடன் பகைமுதலிய அபெலனின்றியுங் கூடி இருக்கில் சாதகனுக்கு இராச யோகமும் சிலபூமிவிர்த்தி கிரமாதிபனாவன் இவைகளை சனி அல்லது பாவர் கூடினாலும் பார்த்தாலும் யோகபங்கமாகி சில அல்ப பூமியைப்படைத்து வாழ்வன் பாபர்மத்தியில் மேலேகூறிய கிரகங்களிலிருக்கினும் தசமத்தில் பகைநீச சுபர் அல்லது பாபரிருக்கினும் நோக்கிடினும் ரவி முதலிய குரு மேஷம் மிதுனம் மகரம் சத்துரு ஸ்தானம் நீசம் பகை பாம்பு பாபமத்தியனானாலும் பூமி இராகு இருக்கினும் இழந்துவிடுவன் விவாத நஷ்டம் சத்துரு இருண மரசர் பந்துக்களிவர்களால் பாகஞ்செய்யப்பட்டு பொருளை இழந்து விடுவனென்றும் பலவகை வருத்தங்களையும் அடைந்து வரப்படுவனென்றரிய வேண்டியது பாபபெலமே அதிகமானால் பெலனானது குறைந்து பிதுரார்ச்சிதமிழந்து ஸ்தானங்கெட்டுவிடும் ரவி குரு இவர்களும் குசனும் தனுசு, மகர, மீனம், விருஷப மிவைகளில் தங்களுக்குக் குறித்துள்ள சுபட்சேத்திரங்களிலும் குசன் உச்சசுக்ஷேத்திர வாசனானாலும் தசமமான சிம்மத்திற் பாபரின்றி இருக்கில் அனேகங் கிராமம் பூமி இவைகளுக்கு அதிபனாவன் சரீர சீவாதிபர்களும் பெலமுற்று விசேஷ பெலவானாகியும் கேந்திர கோணத்திலிருக்கினும் நோக்கினும் அகண்ட மண்டலாதிபனாவன் இவரிருவர்களும் பலமற்றும் மேற்சொல்லியபடி மற்ற கிரகங்கள் பெலத்துடனிருக்கில் ஜாதகனுக்கு ஏராளமில்லாமல் சில பொருளுடன் தர்ம கர்ம ஞானஸ்தனாவன் தசமத்தில் (கஉல்) பாவரானவரிருக்கில் கர்மஹீனனாய் பொருளுடைய ஸ்திதிவந்தனாவன்.

மேற்கூறிய ரவி குரு குசன் உபயம் ஸ்திரமிவ்வித இராசிகளில் பகை முதலியவகை இல்லாமலும் அவை (க. ச, கக, அ, ய) இவ்வித இராசிகளானாலும் சுபபலவதிகாரஸ்தர்களாகியும் அதிக பெலமுடையவராகியும் அவர்கள் மித்துருக்களாகி இருக்கில் சாதகனுக்கு பல பூமி கிராமாதி ஆதிபத்தியச் சிறப்புடனாவன் இதில் ரவி குசனிவரில் ஒருவர் அபலராகி சனியுடன் குரு முதலிய சீவசரீராதிபர்கள் கூடினும் நோக்கினும் அவ்வகையான பூமிகளுடைய பிரபுவினிடத்தில் சீவனஞ் செய்யும் பிரபுவாவனென்றும்.

மேற்கூறிய ரவி குசன் குரு இவர்கள் தங்களுக்குரிய சபக்ஷேத்திர கெதியுடன் பெலத்தும் சீவசரீராதிபர்கள் பலமற்று பாபக்ஷேத்திர மல்லது பாபிகள் கிரகத்தில் வாசஞ்செய்யப்பட்டாலும் பூர்வார்ச்சித நஷ்டமுடையவனாவனென்றும் மேற்கூறிய மூவர்கள் மகரம் மேஷம் கடகம் கன்னி துலாம் இவைகளில் தனக்குரிய சுபபெலத் துடனிருந்தும் சுப பலமில்லாமலும் பாபர் மத்தி பாபிகளைக் கூடாமலும் ஆதிபத்தியாதி கெடாமலிருந்தும் சீவசரீராதிபர்கள் ஸ்திர முபயவலுவில் ஆரோகணத்தில் அவரோகணத்தில் சரஸ்திரங்களில் நின்றானும் மிகவும் மேன்மைப்பெற்ற பூமி கிராமாதிபதியாவான் ஒருவன் பெலனற்று ஒருவர் வலுத்திருக்கில் பூமி கிராமாதிபதி பெயருண்டாகி மாதிபத்தியமடையான் இருவருங்கெடில் இராசத்துவங்கிடையாது அல்ப பூமியிருந்தும் பிரயோசனமில்லாதவன் இருவரும் நட்பு சமபெலத்துடனிருக்கில் சிறிதுபூமி

யுள்ளவனுகி வாழப்படுவனென்றும் மிகமேன்மைகளுந் தனதானிய பிரபல முடையவனுவனென்றும் சொல்லப்படும்.

மேற்கூறிய மூவர்களும் சரவிராசி ஆரோகணத்திலும் ஸ்திர விராசிகளான அவரோகணத்திலும் உள்ள (ரு, சு, அ, கக) இவைகளில் தங்களுக்குரிய சுபபெலத்துடன் ரவி பெலவானுகி இருக்கில் பூர்வார்ச்சிதாதி கிராமாதி பூபதித்துவம் சிலநாள் கிருஷ்ணீத்து பின் மேன்மைக்குவருவும். பாபக்ஷேத்திர பகைவருடன் கூடினுல் இருப்பது மழிந்துவிடும் குரு சுக்ராதி சுபக்ஷேத்திரத்திலுந் தனக்குரிய சுப பெலக்காரருடனிருக்கினும் ஜாதகனுக்கு பூர்வார்ச்சித விருத்தியுமுண்டு சுயார்சித விருத்தியும் ஏராளமாக உண்டாகும் இதில் பாபக்ஷேத்திரத்தில் இருந்து சுபமத்தியமல்லது சேர்க்கையுடன் வலிதுபெற்றுமிருக்கினும் குசன் சீவசரீராதிபர்களாகினும் வேறுகிரகமானுல் கேந்திரகோண சுபபெலத்தைப் பெற்றிருந்தாலும் சாதகனுக்கு ஏராளமான பூமியாதி முதலிய வகைகள் பூர்வார்ச்சிதம் இல்லாதழிந்து பின் சுயத்தாற் சோக்கவல்லபனுவன் என்றும் சீவசரீராதிபர்கள் சனி ரவி புதனிவர்களாகி அபெலத்துவ பகைபாவ க்ஷேத்திரத்திலும் ரவி (ரு, அ, கஉ) இவைகளிலும் பகை நீசாதி க்ஷேத்திரத்திலும் இருந்துவரினும் பெரும்பாபபத்திய கெதியுடனிருக்கினும் குரு முதலியோர் சுபமாகி மறைந்தாலும் ஜாதகனுக்கு கரும சிரத்தையாகிய வெண்ணமிருந்தாலும் விருத்தியடையான் பலவாறு துக்கமடைவன் பூமிமுதலியதையு மிழந்து நீற்பனென்றறிய வேண்டியது.

சீவன பாவபலன் கருமம்

இரவி குருவசாதும் சுக்கிரனின்ற ஸ்தானுதிபதியும் இருக்கிற இடத்தில் சனி பாம்பு முதலிய சுப நீசபகையோரானுலும் சிம்மத்தில் கும்பத்தில் பாம்பு முதலிய பாவரிருக்கினும் சத்கருமஞ் செய்யான் ஈனனுனவன் அயோக்கியதை அதிருத்தியன் தனக்குக் கீழ்ச் சாதியினது அசனன் மயக்காதி பொசிப்பன் சாதிபேதமாவன் சண்டாளக்கிரியை யுடையவன் குரு முதலிய சுபட்சேத்திரங்களில் மேற் கூறிய கிரகங்கள் பெலவானுகிலும் சுபலேக்க மிருக்கினும் அவ்வித ஹீனுதிக்கிரியை யிழந்து சத்கருமியாகி வாழ்வான்.

ஜீவன பலன்

இரவி சிங்கம் குரு இவைகளும் இவைகளுக்கு பத்தாமிடத் ததிபதிகின்ற இராசிநாதனையுங்கொண்டு சீவனபலன் சொல்ல வேண்டியது சீவசரீராதிபர்களும் குரு ரவி இவர்கள் கடகம் சிங்கம் மேஷம் மீனம் தனுசு இவைகளில் பெலத்துடனிருந்தும் ஸ்தானுதிபர்கள் வலுத்தும் கேந்திர கோணகெதியுடன் இருந்தும் சுபபெலத்துடனிருக்கினும் நோக்கினும் சீவசரீராதிபர்

களும் மேற்கண்ட ஸ்தானங்களிலேயே பலமுரியவர்களா யிருந்த ஜாதகனுக்கு இராச சீவனவதிகார பிரபலத்துடன் உலகெலா மேய்க்கும்படி இராசயோகஞ் செலுத்துவனென்றும் இதில் சுபராய் மாறியபெலத்துடன் ஆரோகணமவரோகணமாறி இருக்கில் சிலநாள் சீவனதிகார பிறபலமிருந்து பின் பங்கப்படுமென்றும் அறியவேண்டியது.

கடக சிம்ம இராசிகளிலேனும் அல்லது சரத்துக்கு (சு, அ, கக) லேனும் திரத்திற்கு (கி, கூ, ல) லேனும் மேற்சொல்லியவர்கள் பலமற்று பாபமத்தியம் சேர்க்கையுடனிருக்கில் சில சொல்ப ஜீவனமான அடிமையாவன் இந்த இடங்கள் சுபர்வீடாய் சுபபெலசம்பந்தத்துடன் இருக்கில் அல்ப பாபராஞலும் சிலவகையான இராசசீவனமின்றி பிரபு மூலியத்தால் கௌரவமுள்ள சீவனமாகும் (ச, எ, உ) களிலிருக்கினும் புதன் சுக்கிரன் வீடாகிற் பிறபல பெலத்துடனிருக்கில் சீவசரீராதிபர் வலுத்திருக்கினும் சாதகன் சுயாதிகார புருஷனுகி வித்தைகளால் அரசர்மெய்க்க ஜீவனஞ்செய்வன் (க, ங, கஉ) ஆக விருக்கில் அவை குசன் குரு சந்திர க்ஷேத்திரமாஞலும் இவர்களுடன் மேற்கூறிய இராசிகளில் சீவசரீராதிபர்கள் பிரவேசித்து பெலக்கினும் பூமி ஸ்வயமான சீவனயோக பிரபலத்தையடைந்து மிகவும் மேன்மை யுடையவனுவன் இவைகள் புதன் சுக்கிரன் சனி க்ஷேத்திரமாஞல் வியாபார முதலிய வாணிபத்தொழிலால் யோகவானுவன் கும்பம் விருச்சிகம் விருஷபமாஞல் ஹீனத்தொழில்செய்து சீவனஞ்செய்வானென்றும் மேற்கூறிய சீவசரீராதிபர்கள் பெலத்து இரவி மதிவீடல்லது ரவி மதியுடன் பெலத்துவிருக்கில் சாதகனுக்கு இராச பிரபு இவர்களால் பிறபல சீவனமுண்டாகும் இதில் பெல மற்று பகை நீசத்துடன் கூடினும் பாபர் கூடினும் இராசத்துவ யிடங்களில் தாழ்மையுடன் மானக்குறைவான சீவனஞ்செய்வன் விருத்தியடையான் விரோதமாவன் குசனுடன் அவன் க்ஷேத்திரத்தில் பெலத்துக்கூடினாலும் பார்த்தாலும் பூமி முதலிய அதிகாரமுண்டு மேஷத்திலிருக்கில் தனமுதலியதின்றி பர மனுஷருக்கு அரசனுகி பலபெயரை யேவல்கொண்டு சீவனஞ் செய்வன் புதனுடன்கூடில் புதன் வீடாகினும் வாணிபம் முதலியதுடன் சீவனஞ்செய்வன் துலாம் கன்னியாஞலும் தனுசு மீனம் விருஷபம் ஆஞலும் வாணிபனுவன் மிதுனம் விருச்சிகம் மகரமாஞலும் மற்ற வெவையாஞலும் பரதபண்டிதாதி கணிதத்தால் சீவனஞ்செய்வன் சுபக்ஷேத்திரசுபபெலனுஞல் உலகெலாமெச்ச கணித வைத்தியாதி பிறபல சீவனஞ்செய்வன் குருவாஞல் சாத்திர பரிசயம் தருமசாத்திர விவகாரியாய் அரசையுமெதிர்த்து வாதித்து பிறபல யோகனுவன் இவர் மகரம் மீனம் மேஷம் மிதுனம் துலாம் இவற்றில் சீவசரீரர்களே சுபமாக்கூடினாலும் பகையுடன் கூடினாலும் இவ்வித சாஸ்திர பரிசயக்கள் அல்பமாகி கேவலவிஷய பிரவேசனுகி சாந்தசீவனமும் சூத்திராதி தாழ்மையான பௌரோகிதனுவன் பாபக்ஷேத்திரமாஞல் சுயம்பாகாதிகளில் ஸ்திரீவசிய சீவனமுடையவனுகி வாழ்வன்.

சுக்கிரனுடன் கடகம் மீனம் மிதுனம் மகரம் கும்பம் இவைகளாலுல் நடநாடகாதி பிரபந்தமும் வசிய மேன்மையும் மிகவும் வல்லபனுகி சீவனஞ் செய்துவருவன் விருஷபம் விருச்சிகம் துலாம் சிங்கம் கன்னியாலுல் ஜல வஸ்து வியாபாரமுள்ளவன் இதில் பகை நீசமல்லது சனி முதலிய பாவரைக் கூடினுல் கூட்டிவிட்டும் பெண்வகையிலும் மானக்குறைவான தொழிலாலுஞ் ஜீவனஞ்செய்வன்.

சனியுடன் கூடினுலும் அவை சுக்ஷேத்திர உச்ச சுபக்ஷேத்திரமாலுல் கானத்தொழிலாலுலும் அதிகார முடையவனுகியும் கிலம்பாதி குஸ்தித் தொழிலால் வல்லவனுகி செயம்பெற்று வாழ்வன் பெலமற்ற பகை நீசக்ஷேத் திர கெதியுடனும் பாபமத்தியத்தனுகில் இதிலும் ஹீனனுகியும் அல்பமான தொழில்களேப்புரிந்தும் மயக்காதி புலால்நாற்றவகையில் ஜீவனஞ்செய்வன் பாம்பாலுல் கீழ்க்குலத்தொழிலும் பலவகையான பொருள் களவுதொழிலும் குறைவுள்ளவனுகியும் மந்திரமுதலிய பல்வி சூனியத்தொழிலாலுஞ் சீவன மும் உண்டாகும் விருச்சிகம் மேஷம் விருஷபம் இவையிலாத வற்றய இட மாலுல் பலவகைத்தொழிலும் இழிவனுகி அடிமைபூண்டு ஜீவனஞ்செய்து வாழ்வனென்றறிய வேண்டியது.

இலாபவிரய பலன்கள்

புதன் சுக்ஷேத்திர உச்சஸ்தானத்திலும் சுபர் முதலிய க்ஷேத்திர வாசனுகி யும் பாபமத்தியமில்லாமலும் சுபசம்மந்தத்துடன் பெலத்தும் தனுசு கன்னிகும் பம் விருஷபம் கடகமிவைகளிலும் பெலவானுகியும் அல்லது சிம்மத்திலிருக்கி னும் பெலத்துடன் கேந்திரகோண பெலத்துடன் இருந்தும் பகை நீசாதிபர் சம்மந்தமின்றியும் சந்திரனின்ற ஸ்தானுதிபதியும் சுக்கிரனின்ற ஸ்தானுதி பதியும் சுபபெல கேந்திரகோணத்தில் பெலத்துடனிருக்கினும் புதனின்ற ஸ்தானுதிபன் சுக்கிரன் சுக்கிரனுக்கு (கூ) மிடத்ததி யிவர்கள் பெலமற்றும் பாபட்சேத்திர பாவ சம்மந்தத்துடனிருக்கினும் நோக்கினும் லாபமே மேலான விருத்தியுடன் அவரவர்களின் திசாபுக்திகாலத்தில் விசேஷ தனலாபயோகத் தை யடையும்படி கொடுப்பார்களென்றும் மிக்க ராசயோக வல்லபர்களாகியும் வாழ்வர் துலாத்தில் சுபரிருக்கினும் நோக்கினும் அன்னிதேசமூலமான பிரப லாபயோகத்தையும் மனே விசேஷபாகங்களேயும் மிகவுஞ் சிரேஷ்டமாக கொடுக்கப்படுவர்கள் என்றும் பாவரிருக்கினும் பகை நீசரிருக்கினும் சுய ஸ்தா னத்திலேயே லாபமுண்டாகும் சுத்தமாகில் ஸ்புானுதிபதி சுக்கிரனுக்கு மேற் கண்டபடி பலன்சொல்லவேண்டியது.

புதன் சந்திரனின்ற ஸ்தானுதிபதிகள் பெலமற்ற பகை நீசமல்லதுபகை பாவருடன் கூடினுலும் பாபமத்தியில் இருக்கினும் சுக்கிரனுக்கு விரயாதிபதி

நின்ற இடத்ததிபன் கேந்திரகோண சுபக்ஷேத்திர பெலமற்றும் அல்லது (உ, கக-ல்) இருக்கினும் வீசேட லாபமுமின்றி செலவதிகமுற்று இருண முதலிய தொந்தரவை யடைவன் பரதேச வாச சஞ்சாரனுவன் புதன் சுக்கிர னிவர்களும் இவர் வசாத் கூடியவர்களும் சமராசிகளானதில் பாப சுபர் கலப்பானுனும் தனித்தாலும் அவை சுபக்ஷேத்திரமானுல் மிகவுந் தனவரும் படியுமுண்டு செலவு மதிகம் அந்திய காலத்துக்கு தனம் மிஞ்சாது இருவரும் பலக்ஷேத்திரத்திலிருக்கினும் பாபசுபரை யல்லது பாவரைக்கூடினுலும் லாபமில்லான் விரயமுமின்றி பூர்வார்ச்சித ஜீவனலாபனுகி வாழ்வர் பகை நீசாதி முதலிய வகையைப்பற்றி பாபக்ஷேத்திரம் பாவகிரக மிவைகளோக் கூடின் பரதேச தெதனுகியும் எவ்வித விருத்தியுமின்றி காலந்தள்ளுவன்.

இலாபவிரய கணிதங்களாவன

புதன் கன்னி இவையுடனும் சந்திரனின்ற ஸ்தானுதிபதியுடனும் புதனுக்கு பதினேராமிடத் ததிபதினின்ற இராசிநாதனுடனும் கூடிய எண் களோ தனித்தனி சுபாசுபபலன்படிக்கு எடுத்து அந்த இராசியெண்ணுல் பெருக்கிய தொகையை (அ-ல்) பெருக்கி (ஐ-ல்) கழித்த சேஷம் ஆதாயம் சுக் கிரன்விருஷபம் இவைகளுடனும் இவைகளுக்கு பனிரெண்டாமிடத்ததிபதி நின்ற இராசிநாதனுடனுங்கூடிய வெண்களோ சுவாசுபப்படி யெடுத்து இராசி யெண்ணிற் பெருக்கியதை மறுபடியும் (க-ல்) பெருக்கி (கக-ல்) கழித்தசேஷம் விரயமென்றும் பெயராகும் லாபத்திற்கும் விரயத்திற்கு முரியபங்கை ஈடு சொல்லுபார்த்தால் ஆதாயம்விரயம் ரொக்கஸ்திதி விருத்திகடன் இவ்வித பலன்களோ யறிந்து கொள்ளவேண்டியது புதவசாத் உரைத்தஎண்களோ தனித் தனி (கூ-ல்) கழித்த சேஷம் புத்தியிலும் பிரபல லாபமுண்டாகுமென்றும் சுக்கிரவசாத் சொல்லியதையும் இவ்விதமே பார்த்தறிந்தால் திசாபுக்தி காலம் விரயமதிகமாகஇடக்கும் தேசாடனமதிகமாகுமென்ற விபரமறிந்து கொள்ள வும்.

தனுசுலக்ன குணகுணபாவம்

இந்தலக்கினத்தில் செனித்தவன் மூத்தவர்கள்மேற் பிரியன் இளையவர் களுக்கு பயப்படுங்குணத்தன் கீர்த்தியுடையவன் தேகசுகி நல்லபோகசித்தி யுடையவன் சத்துருக்களோ செயஞ்செய்வன் பாலியாரம்பத்திலேயே அனேக விதமான தனபாலியத்திற்கு இசைவில்லாத வித்தையையுங் காரியங்களையும் செய்வன் தேசசஞ்சாரப்பிரியன் (கஉ, கடு, கூஉ, சஅ) இந்தவயசுமாதகாலங் களில் தேத்திராதி பலவகை வியாதி அரிஷ்டிக்கும் மேற்கண்ட வயதுகளில் தேகரோக கண்டங்களுண்டாக்கப் படுமென்றறிய வேண்டியது சரியான

மத்தியகால வயதில் பலவகை யிலேச்சல்களையும் பொருட்சேத தொந்தரை களையும் பெண்களால் பலவித வாதங்களான கணக்குறைவுகளையும் அடைவன் என்றும் கொள்ளவேண்டியது.

தனுர்லக்ன சாதகனுக்கு காரகமாரக யோகாவ யோக திசாபுக்திகளைக் கூறப்படுகின்றனவாம்

இரவி புதன் குசன் சிலபாகம் அதியோகபலனையும் இவர்கள் இவைக் கேற்றபடி தனுசு கன்னி மேஷம் சிங்கம் இவைகளிலிருக்கில் இவர் திசையில் சுக்கிரன் குரு ரவி இராகுபுக்தியில் அதிக இராசயோக பிரபலராவார்கள் என்றும் மிகவுமேன்மையுடன் பிரபலயோக மழிக்கப்படுவர்கள்.

கேது திசையிலும் (உ-ல்) ஓர்பாகத்திலும் ஷ பலனே நடக்கும் குரு திசையிலும் (கூ-ல்) ஒருபாகத்திலும் மேற்படி விசேஷ பலன் நடக்குமென்றும் அதியோக வல்லபர்களாவார்களென்றும் இந்தத்திசை புக்திகாலங்களில் கிரக வாகனம் பூமி கன்று காலி விசேஷபலன்களே யவர்களுக்கேற்ற தனுசு கடகம் முதலிய மீனம் சிங்கம் கன்னி இவைகளில் குரு முதலிய யோகக்கோளிருக் கில் இராசயோகமும் மிகுந்தமேன்மையும் ரவியைக்கூடாத புதனுகில்இருவர் திசையும் அவயோகமும் யோகபங்கத்தையுங் கொடுக்கப்படுவர்கள் என்றும் குரு ரவி புதன் குசன் கேது இவர்கள் தனக்கு விரோத சத்துருவுடன் பலக் குறைவுடன் மாறுதலான பெண்களைப் பெற்றிருக்கில் யோகபங்கமுடையவர் களாவார்கள்.

சனி சுக்கிரன்இராகு மாரகர்களாவார்கள் புதனும் ஓர் பாகத்தில் மாரகங் கொடுக்கக்கடவன் இவர்கள் மகரம் விருஷபம் கடகம் துலாம் விருச்சிகம் இவைகளிலிருக்கினும் சுபபெலரில்லாத இடத்து பகை நீசமல்லது பாபக்கோ ளுடன்கூடி நிற்கில் அவர் திசைகளில் இராகு குசன் சந்திரன் சனி சுக்கிரன் இவ்வித புத்திகளில் மாரகங்களைக் கொடுக்கப்படுவார்கள்.

சுக்கிரன் சந்திரன் கேது ஓர்பாகம் அவயோகங்களையும் பலக்குறைவு தேகாரிஷ்ட வுபாதிகளையுங் கொடுப்பார்கள் ஆதலால் இந்ததிசைகளில் பொரு ள்சேதமும் தனதானியக் குறைவும் மனதுக்கு கஷ்ட நஷ்ட துன்பங்கள் குடும்பகளத்திர புத்திராதி மரணதுக்கசோகம் இவைகளே இராகுதிசையிலும் இராகு பாவருடன் கூடிய குரு சனி இவ்வித திசைகளிலும் களத்திர புத்திர மரண கிலேசத்தையும் பலவிதமாரகவருத்தம் மாதுரு பிதுரு மரண சோகங்களையும் கலகவிவாதமான பொருள் சேதம் பந்துபகை இவை களே மேற்கூறிய ஒவ்வொரு திசைகளிலும் இராகு சனி சுக்கிரன

சந்திரன் சுயபுக்திகளில் கொடுத்து வருவார்களாகையால் இந்ததிசாபுக்திகளே கெடுதற் பலன்களாகக் கூறவேண்டியதுந் தவிர தேகாரிஷ்டரோக கண்ட துனபங்களுடன் பலவகைக் கவலைகளுமென்றும் அரியவும்.

மாதுரு அரிஷ்டம்

சந்திரதிசை சனி புதன் சுக்கிரனிலும்.
இராகுதிசை இராகு சனி சுக்கிரனிலும்.
குருதிசை சனி சுக்கிரன் சந்திரன் பாம்புகளிலும்
புத சுக்கிரதிசைகளில் சந்திரன் சனி இராகு குருவிலும்.

மாதுரு விரியாணம் மாதுரு வம்ச கூடியம் பொருள்சேதம் மனதுக்குப் பலவகை வருத்தங்கள் அலைச்சல்கள் இஷ்டமூலிய விரோதம் மனதுக்குப் பலவிஷய கஷ்டபலன் நடக்கும்,

பிதுரு அரிஷ்டம்

இரவிதிசை சனி சுக்கிரனிலும்.
இராகு குசன்திசைகளில் சுக்கிரன் குரு சனியிலும்.
சனி குருதிசைகளில் சனி குரு சுக்கிரன் இராகு ரவியிலும்.

கேது சுக்கிரதிசைகளில் சனி இராகு புதன் கேது சுக்கிரன் புத்தி காலத்திலும் பிதுரு மரணம் பிதுர்வம்ச துக்கம் பலவகை வருத்தம் அலைச்சல் மனதுக்குத் துன்பம் குடும்ப கவலைகள் விரோதம் இவ்விதமான பலவிதத்துக்க சோகபலன்கள் நடக்குமென்றறிய வேண்டும்.

சகோதர வரிஷ்டம்

சனி இராகுதிசைகளில் குசன் பாம்புகள் புதன் சுக்கிரன் இந்தபுக்தியிலும் கேது குசதிசைகளில் பாம்புகள் சுக்கிரன் சனி புக்தியிலும் சுக்ரதிசை சுக்ரன் குசன் பாம்புகள் சனி புக்தியிலும் இந்தக்காலங்களில் சகோதரவகை மரணதுக்க சோகமும் சகோதரமாரகமும் பலவித கஷ்டநஷ்ட துன்பமும் அலைச்சல்களும் மனோவருத்தங்களும் மிக்கசோக சகோதர வகையால் இலே சாதி விவாதவிரோத மனோவருத்தம் சகோதரங்களுக்கு இராசதெண்டனை பலவித வருத்தம் தேசபிரஷ்டாதி பிரஷ்டத்துவங்களைக் கொடுக்கும் சுப பல விராசிகளிலிருக்கினும் சுபர்நோக்கினும் அல்பந்தோன்றி உடனுக்குடன் நிவர்த்தியாகி விடுமென்க.

களத்திர வரிஷ்ட காலங்கள்

சனி பாம்புகளின் திசைகளில் சுக்கிரன் பாம்புகள் சனி புத்தியினும் குருதிசையினும் பாம்புகளுடன் கூடியவர்கள் திசையினும் சந்திரன் குரு சுக்கிரன் பாம்புகளிலும் சுக்கிர திசையில் குசன் பாம்புசனி புத்தியிலுங் களத்திர மகரகங்கள் களத்திர பிரஷ்டசமான துக்கம் பலவகை வருத்தங்கள் மேற்படி வகையால் பலவித துன்பயோக வருத்தம் இவ்வித கொடிய விஷசமான கெண்டங்களுமுண்டாகும்.

புத்திர வரிஷ்டம்

குசன் பாம்புகள் திசைகளிலும் குருதிசையிலும் சனி சுக்கிரன் சந்திரன் பாம்புகளிலும் சனி திசை பாம்புகள் சனி சுக்கிரனிலும் சுக்கிரன்திசை சனி குரு பாம்புகளிலும் ரவி திசை பாம்புகள் சனி சுக்கிரனிலும் களத்திராதி புத்திரஷ்டம் பலவகை துக்கசோகவருத்தங்கள் அநேகவித மரண சோகம் தேகாரிஷ்டகண்டம் புத்திரதாசபலன்களைக் கொடுக்கப்படும் புத்திரரிருக்கில் புத்திரனுக்குஞ் சாதகனுக்கும் கலகங்களை யுண்டாக்குமென் றறிய வேண்டும்.

களத்திரபாவம் புத்திரபாவங்களுக்குப் பீடைசொல்லிய திசைகளிலேயே குரு புதன் சந்திரன் சுக்கிரன் இந்த புத்திகாலங்களில் களத்திர புத்திர லாபங்களைக் கொடுக்கும் இவைகளுக்கேற்ற சுபபலக் காரர்களையுங் கண்டறிந்து பலாபலன்களை நிச்சயித்துரைக்கவேண்டும்.

முதல் ஆயுர்பாவ பலன்கள்

இந்த ஆயுர்பாவத்திற்கு சனி நின்ற ஸ்தானாதிபன் சரீரமென்றும் சந்திரனுக்கு அஷ்டமாதிபதி நின்ற ஸ்தானாதிபதி சீவனென்றும் குரு தனுசு இவைகளையும் பார்த்து ஆயுர்பாவஞ் சொல்லவேண்டியது.

குரு சந்திரன் இவர்கள் தனுசு மீனம் விருஷபம் கடகம் சிங்கம் கன்னி இவைகளிலிருந்தஞ் சுபட்சேத்திர சுபபலத்துடன் பிரபல பெலவானுகியும் ஆறு இராசிக்குள் உபயத்திலும் (சு) இராசிக்குமேல் உபயம் ஸ்திர மிவைகளிலும் பெலவானுகியும் சீவசரீராதிபர்கள் மிக பிரபல சுபட்சேத்திரஞ் சரஞ் சரமென்னும் இராசிகளாகியும் கேந்திரகோண யிடங்களாகியும் அவர்களுடன் இரவி புதன் கூடி வலுத்தும் சுக்ஷேத்திராதி பலமுடைய

வர்களாகியும் சந்திரன் கேந்திரத்தில் குருவும் யிவ்வித சுவ்யாதிபலன் பெற்றிருக்கினும் ரவி புதன் யிவர்கள் தனுசு கன்னி சிங்கம் மேஷம் மிதுனம் யிவைகளில் நிற்கினும் சனி முதலியபாவர்கள் சேரவல்லது பாராமலுமிருக்கில் சாதகனுக்கு ஆயுர்பாவ வருஷம் (கஉ.) யென்றும் இவர்கள் சாஸ்திர யிராசிகளில் பாபராகியும் விருச்சிகம் மகரம் கும்பம் இவ்விடத்தில் தங்களுக்கு பகை நீசட்சேத்திரத்தில் இருபக்கமும் பாவர்கூடி நிற்கினும் நோக்கினும் வயசு வருஷம் (ஈ) என்றும் (உ) பாபர்களுடன் கேந்திர கோண இராசிகளிலும் பாவட்சேத்திரமாகியும் பகைவருடன்கூடி சரசரமானலும் சரமு பயமாகினும் குரு ரவி புதன் (உ, ஙச) முதலியதைவிட்டு மற்றய இராசிகளிலெவ்விடமானலும் சீவசரீராதிபர் பலப்பிரபலத்துடன் கேந்திராதி (உ, கூ, ஙஉ) இவைகளில் தனக்குரிய நட்பாட்சி முதலிய சேத்திரமாகியும் இருக்கில் ஜாதகனுக்கு வருஷம் (அசு) என்றும் இவர்களுக்கு இருபுறம் பாபராகியுமல்லது பாபட்சேத்திர கெதியில் பெலக்குறைவுடனிருக்கினும் அவை ஸ்திர ஸ்திரம் அல்லது ஸ்திரமுபாயமானலும் வருஷம் (எடி) என்றும் பாபர் சுப ரிவர்களுடன் கலந்து கேந்திரகோணமல்லது (உ, ஙஉ) மிடம் இவைகளிலும் சீவசரீராதிபரிருந்தும் குரு புதன் ரவி முதலியோர் கும்பம் சிங்கம் மேஷம் இவையிலிருக்கினும் அல்லது சுயட்சேத்திர வாசத்துடன் பலவானுகிலும் (கூ) முதலிய இடங்களில் சனி குசன் பாம்புகள் இவர்கள் சேர்ந்தாலும் பாவர் பார்க்கினும் ஜாதகனுக்கு வருஷம் (சுகூ-க்) குள்ளென்றுஞ் சீவசரீராதிபர்கள் பெலமற்று மற்ற மூவர்மாத்திரம் வலுக்கில் வருஷம் (சஉ-க்) குள்ளாகவே மரணமென்றும் சீவசரீராதிபர்களில் ஒருவர் பெலத்தும் ரவி புதன் குரு தனித்து கேந்திரகோண இராசியில் அல்லது சுபவீட்சண்ணியஞ் சந்திர கேந்திரகோண இராசியில் அல்லது சுபவீட்சண்ணியஞ் சந்திரகேந்திர பலத்துடனிருக்கில் வருஷம் (சுசு) என்றும் ரவி பகை நீசமாகி மற்ற குரு முதலியோர் (ஙக, ஙி, எ, ஙி-ல்) இருக்கில் சாதகனுக்கு வருஷம் (சுஙி) என்றும்.

குருமுதலிய சந்திரன் (க, உ., கூ, சு, அ) இவைகளிலாவது சந்திரன் பிறந்து உபயம் ஸ்திரமிவைகளில் சீவசரீராதிபர்கள் பெலவான்களாகி வலுப்பெற்றிருக்கில் சாதகனுக்கு வருஷம் (ஙிக-க்) குள்ளென்றும் குரு சந்திரன் இவர்கள் பெலமுற்ற (ச, சு, ஙஉ) இந்த இராசிகளில் சுபட்சேத்திர கெதியுடனும் மற்றய சனி முதலியோர்கள் பலத்துடன் இருந்து சீவசரீராதிபர்களைக் கூடினலும் அவர்களே சீவசரீராதிபர்களானலும் சாதகனுக்கு வருஷம் (சஅ) என்றும் குரு பகை நீச இடங்களிலும் பூரண சந்திர கேந்திரத்தில் பெலத்துடனும் இருந்து சுப பலத்தோர் லக்கினுதி கேந்திரத்திலுற்று பாவரைக் கூடினலும் வருஷம் (சஙி க்) குள்ளென்றும் அவர்களுடன் பாம்பு முதலிய அசுபர்களிருந்தும் பகை நீசக்கோளைக் கூடினலும் சந்திரன் பெலமற்றும் குரு கேந்திரத்தி லில்லாமல் குரு (கூ, சு, அ, ஙஉ) இவைகளிலிருக்

கினும் சாதகனுக்கு வயது (கூஉ-க்) குள்ளென்றும் சீவசரீராதிபர்கள் ஆரோகண வக்கிர விராசிகளிலும் அல்லது அவரோகண சர்வீராசிகளிலாவது இருந்து சுபர்களாகியும் பாபமத்தியமாகி குரு சீவசரீராதிபர்கள் னின்ருலும் சாதகனுக்கு வருஷம் (உசு-க்) குள்ளென்றும் சீவசரீராதிபர்கள் பகை நீசராகியும் குரு சுபட்சேத்திரத்திலும் சுக்கிர கேந்திரமாகி ரவி புதன் பாபரைக்கூடி பாப பலனடைந்திருக்கினும் சாதகனுக்கு வருஷம் (உக-க்) குள் கண்டமென்றும் குரு பகை நீச இடத்திலும் மறைவாகி அபல சுபர் பலமான பாபரில் எவரைக்கூடினலும் சீவசரீராதிபர்கள் பலமற்றிருக்கில் சாதகனுக்கு வருஷம் (ஙஅ-க்) குள் மரணமென்றும் சந்திரன் அமரபட்சனுகி கேந்திரகோணத்தில் வலுத்தும் சீவசரீராதிபர் பெலமற்றும் அல்லது சந்திரனுகிலும் வருஷம் (ஙஉ-க்) குள்ளாகவே மரணமடைவனென்றும் விருச்சிகம் மகரம் இவைகளில் சனி பாம்பு முதலிய ரவி குசனுடன் இரண்டு பாவர்கூடி (சு, அ) இலக்னமிவைகளில் இருந்து குரு முதலியோர் பகை நீச இடங்களிலும் பலமற்றிருக்கினும் உடன் மரணமானது வருஷம் (உ) மாதம் (உ-க்) குள் ஆகுமென்றும் சூரியவசாது மேற்கூறியமடி யிருக்கில் தகப்பன் மரணமும் சந்திரவசாதிருக்கில் தாய் மரணமென்றுஞ் சொல்லப்படும் இவைகளில் குரு பலவனுகி கேந்திரகோணத்தி லிருக்கினும் இரவி சனி முதலிய பாவர் தனுவிலாவது மிதுனத்திலாவது இருக்கில் (டு) வருஷம் (டு) மாதத்துக்குள் பாலாரிஷ்டமென்றும் அவையில் குருவுக்கு மறைவிடத்தில் பூரண சந்திரனும் இரவி சனி கேந்திரத்தில் பாவரைக்கூடியும் குரு சுட்சேத்திர உச்ச இடங்களில் பெலத்துடன் கூடி இருக்கில் மாதா பிதாக்கள் பரலியத்திலேயே மரணமாவர் தாய் பால் உண்ணுன் தோகாரிஷ்ட நோய்களால் வருந்திப்பின் சாதகன் ஆயுள்விருத்தியடைவனென்றும் அறியவேண்டும்.

குருவுடனும் குரு னின்ற ஸ்தானுதிபதி எந்த இடத்திலிருக்கிருனே அவனுடனும் தனுவிலும் சனி சந்திரன் எவ்விடத்திலிருக்கிருனே அவைக்கு அஷ்டமாதிபதி னின்ற ஸ்தானுதிபதியுடனும் கடகத்திலும் இரவி புதனுடனும் கூடிய கிரக சுபாசுப பலத்துக்கொத்த எண்களே ராசி யெண்களாற் பெருக்கி அவரவர்களின் பலனையெடுத்தும் (கூ-ல்) கொடுத்த சேஷம் திசையிலும் வந்தாலை (டு ல்) பெருக்கி (கூ-ல்) கழித்தசேஷம் புக்திகளிலும் தோகாரிஷ்டரோக கண்டமுண்டென்றும் சவ்யாப சவ்யாதி நான்கில் எந்தத் திசைபுக்தி கடையாக வருகிறதோ அக்காலம் மாரகமென்றும் மேற்கூறிய கோட்களின் எண்களே ஒன்று சேர்த்து (டு-ல்) கழித்த சேஷம், சவ்யாதி வகையாலறிந்த காலம் அவஸ்தையில் தேக வியோகமும் மேலேகண்ட மொத்தத் தொகையை (ஈ-ல்) கழித்த சேஷம் சவ்யவகையாலறிந்த ஆயுளென்றுங் கண்டு நிச்சயிக்கவேண்டியது.

தனகுடும்ப பலன்கள்

சனி குரு இவர்களும் இவர்களுக்கு யிரண்டா மதிபன் எந்தயிடத்தி லிருக்கிறானே அந்த இடத்தாதிபனையுங்கொண்டு தனபாவஞ் சொல்லவேண் டியது மேற்சொல்லிய நால்வர்களும் மகரத்திலேனும் அல்லது சுக்ஷேத்திராதி சுபபெலனைப் பெற்றேனும் இந்த ஐவரும் வலுத்த சுப சம்பந்தத்தோடு கேந்திர கோண சுபட்சேத்திர கெதியுடன் பெலத்தும் அவர்களுள பாபரானலுஞ் சுப ரானலுமே பகைமுதலிய அதிக குரூர பெலக்காரருடன் சேராமலும் உபய பாரிசம் பாவர்களில்லாமலும் இருக்கில் சாதகனுக்கு அனேக தனமென்னுங் கோடியாந்திர ஸ்திதிகளுடன் பிரபலம் பொருந்தி வாழ்வன் இதில் உபய ராசிகளில் மேற்சொல்லியதில் அதிக கிரகங்களிருக்கில் சிலகாலம் பிரபல தனத்துடன் இருந்து சிலகாலந் தாழ்மையாகிவிடும் இதில் அவரோகண ஸ்திரராசிகளில் இருக்கில் எப்பொழுதுமே பிரபல தனவந்தனவன் சுப ராகில் சிலநாள் தனவந்தனுகியும் சிலநாள் இருணவந்தனவன் பாபிகளே யானல் ஒரேவித தனவிருத்தி அற்பமுடையனவன் ஆரோகண ஸ்திரத்தில் சுபரிருக்கில் தனபிரபல்யம் முன்னேர்களாலில்லாமல் வெகு காலத்தின்பின் இவனல் பிரபலத்துடன் தனார்ச்சிதஞ்செய்வன் இதில் சரத்தில் இருக்கில் அன்னியனிடம் அபகரித்த தனமானது உடனேபோய் பழைய ஸ்திதிக்கும் ஹானியுண்டாகிவிடு மென்றரியவும்,

மேற்கூறிய குரு சனி இவர்கள் கூடியும் சுட்சேத்திர உச்சமான தனுசு மீனம் கும்பம் துலாம் கடக மிவைகளிற் சேர்ந்து சந்திர கேந்திர பலத்துடன் (உ-ல்) குசன் அல்லது புதன் இரவி இவர்கள் பகையோரைக் கூடாமலு மிருக்கில் சாதகனுக்கு தனமானது பூர்வார்ச்சிதத்துடனே பலமுற்றுப் பிர பலிக்கும் லட்சாந்திரமான பொருள்களென்றும் இதில் சசி யேனும் அல்லது இரவியேனும் பலமற்று பகை நீசட்சேத்திரத்தேனும் அல்லது அந்த க்ஷேத்தி ரத்தை யடைந்த கிரகத்தோடேனு மிருக்கினும் ஓர் பாபரைக்கூடினும் தச சகஸ்திராந்தர்க்கத தனமுடையவனென்றும் இரண்டு பாவர்களாகினும் குரு சசி இவர்கள் தனித்து மகரம் மேஷம் மிதுனம் சிங்கம் கன்னி விருச்சிகம் இவைகளில் ஒன்றிலிருந்தும் புதன் சுக்கிரன் முதலியோரைக் கூடினலும் அல்லது பார்த்தாலும் குரு சேவ சரீராதிபர்கள் சுட்சேத்திராதி கேந்திரகோண உச்சகெதியில் சுபட்சேத்திர பலத்துடனிருக்கினும் சாதகனுக்கு தசசகஸ்திரத் துக்கு மேற்கொண்ட லட்சாந்திரவரை தனார்ச்சிதஞ் செய்வனென்றும் இவை களுள் பாவருடன்கூடினலும் இருபக்கங்களிலும் பாவரிருந்தாலும் சகஸ்திர தனமுடைய பிரபலவா னவானென்றும் மேற்கூறிய சனியும் சேவ சரீராதிபர் களும் பெலத்துடன் (உ, ஙக, ஙஉ-ல்) இருக்கினும் அவ்விடமானது அவர்

களுக்கு உய்ர்வுள்ள ஸ்தானமாகி பெலத்தும் சுபகேந்திர கெதியுள்ளோர் திருஷ்டி இருக்கினும் சேர்ந்திருக்கினும் அவர்கள் சுபராலுலும் பெலமுற்றுக் கூடி இருக்கில் சாதகனுக்கு லட்சாதி தனயோகவாலுலும் முடிவில் பொருளே யழித்தும் தசசகஸ்திர தனவிருத்தியாகினும் சிறுதலாகி வாழப்படு வனென்றும்.

குரு சனி பகை நீசட்சேத்திர இடத்தில் கேந்திரகோணமாலுலும் சுப ரல்லது சரீர சீவாதிபர்கள் கூடிலுலும் பார்த்தாலும் தனமானது சகஸ்திராந்த மானதை விருத்தி யடையுமென்றும் குடும்ப சுகசௌக்கிய குறைவை யுடைய வலுகி வாழ்வனென்றும் குரு சனி (கு, சு, அ, ஊ) லாயினும் அல்லது லாப கேந்திரகோண ராசியாகினும் பகைமுதலிய பாவட்சேத்திரத்திலிருக்கினும் இருபக்கக்களில் அல்லது (உ-ல்) சனி ரவி குசன் பாம்புகள் கூடிலுலும் தனம் பிரபலமாக இருந்தபோகினும் பின்னழித்துவிடும் பூர்வதனமும் கிடையா தென்றும் சுபரிருந்து பாபர் கூடிலுல் பூர்வதனம் விருத்தியும் சுயதனம் அழிந் துவிடுமென்றும் பலவகைக் குடும்ப நஷ்டமாகுமென்றும சீவசரீராதிபர்கள் சுபட்சேத்திர மில்லாதிருக்கினும் குரு சனி பெலத்தாலும் சுயதனம் கிடை யான் அன்னியதனத்தை யாள்வன் குரு சனியும் பலன் கெடில் அன்னிய தனமுங் கிடையாது இருணவந்லுய் வாழ்வனென்றும் குரு உபயராசியில் சீவசரீராதிபர்களேக்கூடி பெலத்துடன் கேந்திரஸ்திதியாய் சுபட்சேத்திரத்தி லிருக்கினும் பலமுடைய கிரகங்கள் பார்த்தால் அல்லது கூடினும் சாதகனுக்கு லட்சத்துக்குள்ளடங்கிய தனமானது விருத்தியுண்டாகும் குசன் சனி ரவி வீடாகிய சிங்கம் மேஷம் விருச்சிகம் மகரம் கும்பமிவற்றில் சீவ சரீராதிபர்கள் பலத்துடன் மேன்மைபெற்றுஞ் சுபகேந்திர சம்பந்தத்தோராகி இருக்கினும் கோக்கினும் சாதகனுக்கு (ஐக-ம்) பொன்னுக்குள்ளடங்கிய தனமானது பிரபலவிருத்தியை யடையப்படுவர்களென்றும் அதிக மேன்பாடுகளும் இதில் குசன் இரவி இவராது சீவ சரீராதிபர்களுக்கு விரோதிகளானவர்கள் சேர்ந் திருந்தாலும் பார்த்தாலும் தனுர்ச்சிதம்செய்து பின் யாதொரு பிரபலமில்லாதே இழந்துவிடுவனென்றும் பொருள்சேதமும் குரு சனி இவர்கள் சுக்கிரனைக் கூடிலுலும் பார்த்தாலும் பாம்பு முதலிய பாவர்கள்கூடி அல்லது பார்க்கினுந் தனமான பூர்வ விர்த்தியும் நஷ்டமாகிவிடுமென்றும் பலவாருன கஷ்ட நஷ்டம் தனமூலமாக எற்படுமென்றும் இவ்வித கிரகத்தில் குரு அல்லது சனி கேந்திரகோணம் அல்லது ரவி மதிவீட்டிலிருக்கில் அநேகவித நஷ்டத்தினுல் பூர்வார்ச்சித தனம் கிடைக்கப்படுமென்றும் குசன் பாபபுகளாவது அல்லது சீவசரீராதிபர்களாவது சனி குரு இவருடலுவது இவர்களுக்கு இருபாரிசத்தி லுங்கூடி யிருக்கினும் பொருளானது பலவித கஷ்டநஷ்ட துன்பத்துடன் கஷ்டமடைந்தும் பின் தரித்திரனுகவும் வாழப்படுவனென்று அறியவேண்டும்.

மகரத்தில் சந்திரன் முதலிய சுபருடனும் குரு முதலியோர் பார்வையுட னும் கேந்திரமானதும் சனி முதலியோர் பெளத்த சுப க்ஷேத்திரத்திலிருக்கி னும் பிரபலதனமானது பூர்வார்ச்சித விருத்தியுண்டென்றும் சனி குரு கும் பம் விருஷபம் மிதுனம் சிங்கம் கன்னி விருச்சிகம் இவைகளிலிருக்கில் பூர் வார்சித தனத்தால் பலவிவாத விரோதம் முதலிய நஷ்டத்தை யடைந்தும் பின் சவுக்கியத்தை யடைவனென்றும் மேற்சொல்லிய கிரகங்கள் பாபக்ஷேத் திரத்திலும் பாவருடனே கூடினலும் பகைமுதலி யோரானலும் அவ்வித மான பொருளும் விருத்திக்குவாராலே அழிந்துவிடுமென்றும் கஷ்ட நஷ்ட துன்பம் தேகாரிஷ்டாதிவிரோத முண்டாகு மென்று அரியவேண்டும்.

குடும்பம் வாக்கு இவைகளைப்பற்றிய பலன்களாவன

சனி ரவிகூடி யல்லது சுக்கிரனுடனே பாம்புமுதலியோர் இருந்தாலும் சுக்ரனில்லாத பாவர்களெவராவது (உ-ல்)இருக்கினும் குடும்ப விருத்தியில் லான் பிசகுரைப்பான் வாக்குமுதலிய குறைவும் பலவாருகிய கஷ்ட நஷ்ட துன்பங்களும் மனதுக்கமும் பலவாருகிய வாக்குதிக்குதல் முதலிய வருத்த மடைவன். இந்த ஸ்தானத்தில் சுபரிருக்கினும் நோக்கினும் சத்தியவசனன் குடும்ப பிரபலமுடையவன் அதிகமான மேன்மையுடன் வாக்கு சித்தியுடன் யாவரும் வசியமாய் வாழ்வன். (உ-ல்) இரவியிருக்கினும் நோக்கினும் யுக்தி யுடையவன் தீர்க்கவாக்குடையவன் விரோதமும் குடும்ப துக்க மடைவன் சந்திரனுகில் மிருதுவாக்கு வசியன் ஆவன் குசனுகில் திக்குதலடைவன் தயிரிய வாக்கன் கடுஞ்சொல்லானலும் யாவரும் பயமுடையவர்களாவார்கள் புதனுகில் சவுமியவாக்கும் நிச்சயமில்லான் சம்சய முடைவன் கும்பம் சம விருத்தியடையும். குருவாகில் வாக்குஸ்புடமும் தீர்காவானுய் குடும்பக்ஷய முண்டாகும் சுக்கிரனாகில் யாவரையும் வசியஞ்செய்வார்கன் அதிமேன்மை குடும்பவிருத்தியுண்டாக்கும் சனியாகில் தாமதஞ் செய்வாக்+னவன் குடும்ப மும் தாமத விருத்தி யுண்டாகும்.

பாம்புகளாகில் விஷவாக்கும் பகையும் உளறுதல் முதலியவகை யுண்டா கும் சீவசரீராதிபர்கள் சனி புதன் பாம்பாகி இரண்டிலிருக்கினும் நோக்கினு மல்லது கடகத்தில் பெலமற்றிருக்கினும் ஊமையாகுவன் வாக்குகெடும் இரவி அமரபக்ஷமத்தியாகி யல்லது சுக்கிரனுகி (உ, ஊ-ல்) இருக்கினும் இவகளை நோக்கினும் விரோதபகைவருடன் கூடினலும் அவர் இடுக்கமுள்ள கிரகங் களில் வாசஞ் செய்தாலும் அவர்களுக்கு யிருபுறமும் பாம்புகள் சனி குசன் கெருக்குண்டு கூடினும் நேத்திரம் கெடும் இதைக் குருமுதலிய சுபக்கோள் பார்க்கினும் கூடினும் அல்பன் கண்டு உடனுக்குடன் நிவர்த்தியாகி விடுமென் றும் யிதிலிருவகைப் பக்கத்தில் ஓர் புறமாக பாவரிருக்கினும் நோக்கினும் அப்

பக்கத்துடைய நேத்திரங் கெடும் இதில் பாவர்கள்சுபராய் பெலத்திருக்கினும் சுபராகினும் நேத்திராதிபாதை இல்லாமல் சுகமாயிருப்பன் சுபர் பாபராகினும் பாவரே கூடினாலும்நேத்திரம் வீர்த்தியில்லாமல் மறையு மென்றரிய வேண்டும்.

தனபாவகணிதங் கணிக்கும் விபரமாவன

குருவுடனும் சனியுடனும் மகரத்திலும் யிலைகளுக்கு யிரண்டாமிடத் ததிபதி யெந்தவீட்டி லிருக்கின்றானே அவர்களுடனுங்கூடிய கிரகஎண்களே சுபாசுபப்படி இராசி யெண்களால் பெருக்கி (கூ ல்) கழித்த சேஷம் திசையி லும் வந்தஈவை (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் புக்திகளிலும் தனித் தனி கண்டறிந்த ஒவ்வொரு திசாபுக்திகளிலும் தனமானது அதிக பிரபலத் துடன் வாழ்ந்து வரப்பவென் என்றும் அதிகயோக பிரபலமும் பல வித தன லாப வெற்றிகளும் உண்டாகும் யிப்படி முன்பெருக்கிய தொகைகளே யொன்றுபடித்தி வைத்துக்கொண்டு (கூ) பலனுக்குமேல் ஓர் கிரகங்கள் வலுவாகில் சமத்தொகை (உ) முறை பெருக்கியும் (கூ) பலனுல் ஒரேமுறை சமத்தொகையால் பெருக்கியதும் (உ-க்கு) மேலான பலனுகில் மேலே முழுத் தொகையும் கீழ்தால் பாகத்தொகை வைத்துப்பெருக்கியும் (உ-க்) குள்ளா னுல் (அ-ல்) ஒருபக்குத் தொகையால் பெருக்கியும் கண்டறிந்து ஒன்றுக் குட்பட்ட தொகையானுல் வந்த தொகையையே வைத்துக்கொண்டும் சுவ்யாப சுவ்யக் கணக்குப்படி அறிந்தவை இவ்வளவு சொர்ணரூபனென்றும் இதில் குரு னின்ற பனிரெண்டாமிடத்ததிபதி னின்ற இராசிநாதனேப்பற்றி கணக்கு சேர்த்துபார்க்கில் வருஷலாபமென்றும் சூரியனின்ற ஸ்தானுதிபதியின் கணக் குகளேக் கூட்டிப்பார்க்கில் மாதலாபமென்றும் சந்திரனுடனே கூடிய கிரக வெண்கணிதத்தை முன்கூறிய தொகையிற் கூட்டிக் கழித்தசேஷம் தினலாப மென்றும் பெயராகும் இவ்விதந் தனலாப கணிதமறிந்து கொள்ளவேண்டும்.

மேலேகூறிய தனவிஷயத்தில் சீவசரீராதிபர்களுடனுவது சீவசரீராதி பர்களாவது யிரவியானுலும் சனியானுலும் இவர்களுடைய வீட்டில் னின்றாலும் பூர்வார்ச்சித தனமென்றும் சந்திரன் புதனுகில் தாய்வழி தனமென்றும் குரு வாகில் இராசமூலிய சுயார்ச்சிதமென்றும் குசனுகில் சகோதரார்ச்சிதமென்றும் சுக்கிரனுகில் ஸ்திரீ மூலியார்ச்சிதமென்றும் பாம்பு முதலியோராகில் அன் யார்ச்சிதம் சுயராச்சிதப்பொருள் தனலாபமென்றுங் கண்டுகூறவேண்டியது. இவர்களின கிரகத்திலிலிக்கினும் இவ்விதமே நடக்குமென் றறியவேண்டும்.

சகோதர பாவ பலன்கள்

சனி குசன் கும்பம் இவைகளையும் இவைகளுக்கு மூன்றுமிடத்திபதி னின்ற யிராசி நாதர்களையுங்கொண்டு சகோதரபாவ பலன்கள் சொல்ல வேண்டும்.

சனிக்கு மூன்றுமிடத்திபதி னின்ற யிராசிநாதன் சீவனென்னும் குச னின்ற இராசிநாதன் சரீரமென்றும் பெயராகும். இவர் புதக்ஷேத்திரம் அல்லது சனி க்ஷேத்திரங்களில் பாவருடனேகூடினும் பகையோர்க ளுடன் கூடினும் பாம்பு முதலிய கோட்கள் இருக்கினுங் கூடினும் சீவசரீராதிபர்கள் சனி யல்லது புதனுங் பலமற்ற (கூ, சு, அ, கஉ) பகை நீசவிடங்களில் பாபரைக்கூடினுஞ் சனி மூன்று ஐந்துமுதலிய பகை பாவரைக்கூடினும குசன் பாம்புடன்கூடி கன்னி மிதுனம் கும்பம் மேஷம் துலாம் இவைகளில் இரவியைக்கூடினும் அல்லது புதனைக்கூடினும் பகையோருடன் சம்பந்தப்பட்டாலும் சனியுடன் குசன்கூடி சுபபல திருஷ்டி இல்லாமல் (கூ, டு, எ, அ, ஐ, கக) இவைகளி லிருக்கினும் அவர்களின் இருபக்கங்களே யடுத்தும் பாம்புமுதலிய பகையோரிருந்தாலும் சகோதரமே கிடையாது இப்படிக்கிருக்கும் கிரகங்களில் சீவராதிபர் பெலத் தும் பகை நீசமுதலிய பெலக்குறை வில்லாமல் கேந்திர கோணத்தில் குரு முதலிய சுபக்கோட்கள் சேரினும் அல்லது பார்க்கினும் அல்பமான ஏக சந்ததி விருத்திபுடையவனுவன் என்றும் சந்திரன் பலமுற்றிருக்கினும் நோக்கினும் பெண்சந்ததி அல்பமான ஏகசந்ததி புடையவனென்றும் சுக்கிரனிருக்கினும் அவ்விதமே பெண்சந்ததியென்றும் குரு குசன் இரவியாகில் புருஷசந்ததி யென்றும் அவைகளின் குடும்பம் விருத்தியடையுமென்றும் சீவசரீராதிபர்கள் பகை நீசட்சேத்திரம் பகைபாவருடன் கூடினும் நோக்கினும் அப்படிக்கொத்த சந்ததிகள் பலவாறுகி விருத்தியின்றிப் போய்விடுமென்றும் அறியவேண்டும்.

மேற்கூறிய கோட்கள் சுபமித்துரு க்ஷேத்திரங்களில் பெலத்தும் கேந்திர கோணத்தில் இருக்கினும் பாவர் சுபர் கலந்திருக்கினும் அல்பமான (உ) முத லிய புருஷசந்ததி ஸ்திரீசந்ததி யிவைகளுடன் விருத்தியையடைந்து வருவன் குருமுதலிய சுபரே கும்பம் மேஷம் துலாம் இவைகளிலாவது கேந்திரகோண சுட்சேத்திராதிய விடங்களிலிருக்கும் சனியுடனாவது குசனுடனாவது சுபர்கள் கூடியும் அவ்வகைச் சத்துருத்துவ இராசிக் கிரகங்களில் சேராமலும் ஒருவாக் கொருவர் மைத்திரராய் தனுசு மகரம் மீனம் சிங்கம் கன்னி இவைகளிலிருக் கினும் பிரபலமான புருஷ ஸ்திரீ இவைகளுள்ள பகு சகோதர யோகவா னென்றும் இதைப் பாவர் பார்த்தாலும் கூடினாலும் அபகீர்த்தி முதலிய குறை

வுள்ள சகோதரங்களென்றும் பலவகை வருத்தமும் மனதுக்குத் தக்கசோ காதிகளும் அந்திய காலத்தில் சகோதரமே வீர்த்தியில்லாமலும் உரோகாதி சித்தப் பிரமையடைந்து சகோதர்களாவார்களென்றும் சொல்லவேண்டும்.

இவைகளேத்தவிர கும்பம் மேஷம் விருஷபம் மிதுனம் கடகம் துலாம் விருச்சிகம் இவைகளில் சுபருடனே சனியேனுங் குசனேனுங் கூடினும் அல்லது நோக்கினும் சீவசரீராதிபர்கள் சுபட்சேத்திர பலவானுகி (உ) முதலிய சகோதர விருத்தியுடன் முன்னுக்கு வராமலும் களத்திர புத்திர குடும்ப க்ஷேமக்குறைவென்றும் மற்றய சகோதர வகைகள் வீர்த்திக்குவருமென்றும் பாபருஞ்சுபருமாகில் அல்பமான சகோதர வீர்த்திகளுடனும் பெண்வகையுண் டென்றும் அறியவேண்டும் இவ்விதமான இராசிகளில் பாம்பு சனி புதன் குசன் முதலிய பாபர்களே பலத்துடனிருக்கினும் அவைகளுக்குரிய சுபட் சேத்திரமின்றியும் சீவசரீராதிபர் பாம்புகள் புதன் சனி இவர்களுடன் கூடி னாலும் சகோதரங்கிடையாது பெண் சந்ததி யிருந்தாலும் அதுவும் அழிந்து விடும் கும்பசந்ததி யில்லாமற் போய்விடும் சீவசரீராதிபர் பெலத்தும் சுபசம் மந்தமானாலும் திருஷ்டியானாலும் ஸ்தானாதிபதி பலமானால் சகோதர வம்ச வீர்த்தியுண்டாகும் ஸ்தானாதிபதிபெலன் கெட்டும் சீவசரீராதிபர் வலுத்தால் அல்பமான சந்ததி எகவானும் அந்திய வீர்த்தியுண்டாக்கும் இதில் பாபட் சேத்திரமானபகை நீசத்தில் சுபரும் பாபரும் வலுபெற்றால் சகோதரங் கிடை யாது எவ்வளவு உண்டானபோதும் அழிந்துவிடுமென்றும் சுபர் சுபபெல கேந்திரகோண யிராசியிலாவது மூன்று பதினேராமிடத்திலாவது பெலத்தும் பகை நீசமல்லாம லிருக்கினும் பிரபலமான பகுசகோதரலாபவான் குடும்ப விருத்தியுடன் யோகமான சகோதரரைப் பெற்றுசுகமாகவாழ்வன் என்றும பாபட்சேத்திரம் பாவருடனுகில் கர்மியாகும் குடும்ப வீர்த்தியில்லாமலும் பல பொருளே மாத்திரம் படைத்து பூதம்போல் வாழ்வனென்றும் அவ்வித குடும் பம் க்ஷயமுண்டாகுமென்றும் பாபருஞ் சுபருமாகில் சிலகாள் சகோதர குடும்ப வீர்த்தி இன்றியும் பின் க்ஷேமத்தையும் அடைவனென்றுங் கூறவேண்டும்.

சனி குசன் முதலியோர் மூன்றிலிருக்கினும் பாம்புகள் நீற்கினும் சனி (ஙி, எ, ஐ, கஉ) இவைகளி லிருக்கினும் புதனுடன் சுக்கிரன் கூடினும் (க. கக) மிடங்களில் சந்திரன் அல்லது குசன் சனி பாம்புகள் இருக்கினும் இவர் (ரு, ஙி, எ, ஐ) இந்த ஸ்தானங்களே சனிகுசன் பார்த்தாலும் பாம்பு முதலியோர் பார்த்தாலும் மிருந்தாலும் அனுசாரமடைந்தை விதவை முதலியோரைப் போகித்துச்சந்ததி விருத்திசெய்து அவைகளால் மனுதுக்கங்களேயு மனுபவிப் பன் சுபரிருக்கில் சுபஸ்திரீ யோகவானுவன்

சனி குரு முதலியோரும் சீவசரீராதிபலுகிய குரு புதனுக்கு சீவசரீராதி பர்கள் கேந்திரகோண சுட்சேத்திர பெலத்துடனிருக்கினும் நோக்கினும் அடிமையாளும் மிகுந்த ஸ்திரீசம்போகமும் பிரபலயோகவானு மாவனென்றும் பாபட்சேத்திரம் பாவராகிப்பகை நீசமுதலிய அபலனைப் பெற்றிருக்கினும் நோக்கினும் இவனே சிலருக்கு அடிமைசெய்வனென்றும் அறியவேண்டு மென்க.

சகோதர பாவஸ்தாளுதிபர்களாகிய சனி சுக்ரன் இவர்களுக்கு சீவசரீராதி பர்களும் விருஷபம் துலாம் கன்னி மிதுனம் கும்பம் மீனம் விருச்சிகம் இவை களில் அமரபக்ஷச் சந்திரன் சுக்கிரன் புதன் சனி இவராலுலும் அல்லது இவ ரைக்கூடினுலும் இவர் இடங்களில் சீவசரீராதிபர்கள் இருந்தாலும் யிவர்களின் கேந்திரகோண திருஷ்டியினும் சேர்க்கையினும் சனி சுக்கிரன் குசன் இவர் கள் தின்றாலும் சாதகனுடைய பிதாவுக்கு மறுதாரமும் பரதாரயோகியுமாகி அவ்வித வம்சபுத்திரராகிய சகோதரங்களையு மடைவனென்றும் அவர்க்கு மூன்று பதினெஞ்சில் பாம்புகள் சனி பாவரைவிட்ட புதனிருக்கில் அந்த வகையினுஞ் சகோதர மில்லானென்றும் பரகர்ம பாத்தியஸ்தனுகி வாழ்வனென்றும் இவர்களில் யாரேனுஞ் சுபட்சேத்திர பலத்துடன் சீவசரீ ராதிபர்களைக் கூடினும் அல்லது பார்கினும் அப்படிக்கொத்த வம்சசகோதரங் களானவை யுற்பவிப்பதில் மேன்மையுடன் பிதாவின் துதியதாரத்தால் சுக மடைவனென்றும் அவ்வித வம்ச மேன்மையை யடைவனென்றுங் கண்டறிய வேண்டும்,

மற்ற விடங்களில் பாவட்சேத்திரம் பாவருடனிருக்கில் பிதாவுக்கு வெகு தாரமுண்டு சுபட்சேத்திரஞ் சுபபெலனுகில் ஒரேதாரஸ்தன் பிதா வென்றும் அறியவேண்டும்.

சகோதரபாவ கணிதவிதிகளைக் கீழேகூறப்படும்

குசன் சனி கும்பம் இவையுடனும் சுக்கிரனுடனும் சுக்கிரனுக்கு (கக) மிடத்ததிபதி நின்றஇராசிநாதனுடனும் சுக்கிரனும் குசன் சனி கும்ப மிவை களுக்கு மூன்றுமிடத்ததிபதி நின்ற ராசி நாதனுடனும் துலாத்திலும் கூடிய கிரகவெண்களைச் சுபாசுபபெலன்படிக்கு எடுத்துக்கொண்டு அந்த இராசியெண் களால் தனித்தனி பெருக்கி சுபாசுப பெலன்களுக்குத் தள்ளவேண்டியவை களைத் தள்ளி நின்றசேஷத்தை அவரவர்களின் கிரணவெண்களின் தொகைக் குக் கொடுத்துக் கண்ட ஈவை சகோதரமென்றும் (ஒ, வ, மூக்கால்) வரில் தள்ளுபடி செய்தும் ஸ்திரீபுருஷ கிரகங்கள் கொடுத்து வந்தவைகளை யறிந்து சொல்லல் வேண்டும்.

மூற்றுப் பெற்ற குடும்ப வீர்த்தியுள்ள சகோதரமென்றும் (உ, வ, மூக் கால்) ஆனல் மத்தியகாலத்தில் அழிந்துபோய் விடபட்ட சகோதர மென்றுங் கண்டுக்கொள்ள வேண்டும் அவ்வித சகோதர ஸ்தானங்களுக்கு எட்டாமிடத் தநிபதி லின்ற இராசி நாதனின் எண்களைப் பெலன்படிக்கு யிராசி யெண்ணுற் பெருக்கியதை மேலே கூறிய ஒவ்வொரு கிரகவெண்களிலுஞ் சேர்த்து (கூ-ல்) கழித்தசேஷமும் வந்த ஈவை (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷமான திசாபுக்திகளில் சகோதர வரிஷ்டமென்னுங் கண்டறியவேண்டும்

மாதுரு கிரகம் வாகனம் பூமி வியாபாரவித்தை இவைகளைப்பற்றிய பலன்களாவன

குருவையும் மீனக்தையும் சுக்கிரனையும் சுக்கிரனுக்கு நான்காமதிபதி லின்றஇராசி நாதனையும் கொண்டு கிரகவாகன பலன்கள் சொல்லவேண் டியது

குரு சுட்சேத்திர உச்சஸ்தானங்களில் பெலவானுகிலுங் கேந்திர கோணத்திலும் சுக்கிரன் மீனம் மிதுனம் தனுசு இவைகளிலும் சேசரீராதி பர்கள் தனக்குரிய சுபட்சேத்திராதி கேந்திரகோண பெலத்துடனிருக்கினும் நோக்கினும் மேற்கூறிய நான்காமிடத்திலும் சந்திரன் முதலிய சுபக்கோட்கள் தனக்குரிய சுபபெலத்துட னிருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு மாடமாளி கை முதலாகிய கிரகவாகன யோகபிரபலமும் மேன்பாடாகிய இராசசன்மான வெகுமான மேன்மைகளும் இஷ்டஸித்திகளுஞ் சத்துரு செயமுமாம் இதன்றியும் குசனும் குசனுக்கு நான்காமிடத்ததிபதினின்ற இராசி நாதனும் பெலவானுகியும் குசனும் ஒரைக்கு நான்காமாதிபனும் பெலத் துடன் சுபட்சேத்திராதி தனக்குரிய பிரபலஸ்தானங்களில் பெலத்தும் சுபட்சேத்திரத்திலும் சுக்கிரன் வலுபெற்றும் குசனுடன் மகரம் மீனம் விருஷபம் கடகம் இவற்றினும் விருச்சிகத்தினுஞ் சந்திரகேந்திர சுப திருஷ்டியுடன் பெலத்து மிருக்கினும் நோக்கினுஞ் சாதகனுக்கு ஏராளமான பூமி ஜலாதார இடம் கூபதடாகாதிதோப்பு லீதி லிக்ஷேப பிரபலத்துடன் ராசயோக வல்லபவானுவனென்று மிருந்த சீர்த்தி மூர்த்தி புகழ்ச்சிகளும் பாத் பசு கன்றுகாலி பூமி கிரகவான பிரபல லாபமும் மிகவு மேன்பாடுகளும் அசன சயன போகபோக்கியாதி சுகசௌக்கியங்களுடன் மிகவும் மேன்மையை யடைந்து வாழ்வனென்றறியவேண்டும்.

சுக்கிரன் குரு கூடாமல் கேந்திர கோணத்திலாவது (உ, கூ) இவ்விதச் சேத்திரங்களில் பெலவானுகியும் அதிக சுபட்சேத்திர வாசத்துடன் யிருக்கினும் சத்துரு பகையிராசி யில்லாமல் அலவ களுக்கு இரண்டு

பக்கங்களிலும் பாவர்களில்லாமலிருக்கில் சாதகனுக்குப் பலவகைப் பூமி கிரக வாகனந் தோப்புத் துரவுகளும் அதிகமான பிரபல வாழ்க்கையும் உண்டாகும். இதில் சீவசரீராதிபர் பெலமற்று பாபட்சேத்திரப் அல்லது பாவருடன் கூடினலும் பகை நீசக்கோளுடன் சேர்ந்தாலும் பூர்வார்ச்சிதமின்றியும் சுயார்ச்சிதம் அந்தியகாலத்தில் சில பொருள்களும் இழப்பனென்றும் சனி இரவி முதலியோர் மேற்கண்டவர்களுடன் கூடினும் பகை நீசராகிச் சேரினும் பாபர்மத்தியில் வசிக்கினும் சாதகனுக்கு முன்னருச்சிதமும் கிடையாமல் அந்தியகாலத்திலும் பொருளின்றி மிகவும் வருந்துவனென்றும் மேலேகூறிய கேந்திரகோணத்தி லிருக்கினும் யிரண்டு முதலிய பாவரைக்கூடினும் சாதகனுக்குப் பலவகையான மேன்மையுள்ள லாபமும் கிரகவாகன சம்பத்தும் அயலாரால் செயமடைந்து வாழ்வனென்று அறியவேண்டும்.

மேற்காட்டிய சீவசரீராதிபர்களிருவரும் சுபராகினும் அல்லது பாவராகினும் சுபத்துவப் பெலனேப்பொருந்தினும் கேந்திரகோண பெலவானுகினும் அவரவர்களுக்கு நட்பாகி உச்சகேஷ்திரங்களிலும் சுபட்சேத்திர மித்துரு வுடனும் பெலவானுகில் சாதகனுக்கு கெட்டிக் கட்டிடம் பூங்காவனம் தோப்புத் துரவு முதலானவை நூதனமாக இவனுற் சேர்ப்பன் சனி இரவி யிவரிலெவராயினும் சந்திரன் புதன் சுக்கிரன் யிவரிலெவராயினும் சீவசரீராதிபர்களாகிப் பெலவானுயினும் சுபட்சேத்திர கெதியடைந்தும் வலுப்பெற்றிருக்கில் சாதகனுக்குப் பலவகை மேன்பாடாகிய தோட்டமுதலிய பிரபல கட்டடம் பூமி முதலிய பலவகைப் பொருள்களும் இராசர் புகழும்படி கீர்த்தியுடன் லீட்சேப பிரபலமும் இவ்விதமான பலவகைவிருத்திகள் பூர்வார்ச்சிதம் அன்யார்ச்சிதம் ஸ்திரீயார்ச்சிதம் இவ்வழியாகக் கூடுமென்றும் அவ்வகையுள்ள அருச்சிதச் செல்வப் பெரும்புகழும் உண்டாகும் இவர்களுக்கு யிருபுறமாவது கூடவாவது சனி முதலிய பாம்புகளிருக்கினும் நோக்கினும் பகை முதலிய கிரகங்கள் கூடினலும் சீவசரீராதிபர்கள் பகையல்லது பாபக்ஷேத்திரமடைந்தாலும் பூர்வார்ச்சிதம் அன்யார்ச்சித முதலியவகை கிடைத்தும் முன்னுக்குவராமல் அழிந்துபோகுமெனவும் இதன்றியும் பலவித துக்கசோகமும் பின்காலத்தில் ஷை வகையுளள பூமி முதலியதும் இல்லாமல் பலவாறுக வருந்தி யிறப்பனெனவும் அறியவேண்டும்.

சுக்கிரவசாதும் குசன் வசாதும் உரிய சீவசரீராதிபர்களும் குசன் சுக்கிரனிவர்களும் பெலவானுகியும் தனுசு மகரம் கும்பம் மீனம் சிங்கம் துலாம் இவைகளிலும் சீவசரீராதிபர்கள் தங்களுக்குரிய சுபட்சேத்திர கெதியுடன் கூடியுங் குரு சந்திரன் முதலிய பிரபலத்தோர் வீட்சண சம்பந்தமிருக்கில் சாதகனுக்கு பூமி கிரகவாகனம் பலவகைக் கட்டிடம் தோப்பு துரவு முதலிய

பிரபல யோகவானுவன் தூரனுர்ச்சித பிரபலஞ் செய்வன் இவர்கள் பகை சத்துரு பாவர்வீட்டினும் சனீ பாம்புகள் முதலிய பாவரைக் கூடினும் இவர்கள் உபயபாரிசமானுலும் சுபரே பாவரானுலும் பழய பொருளேயும் இழப்பன் பலவித வருத்தமடைவன் சீவசரீராதிபர் பெலத்த சுபக்ஷேத்திரஞ் சுபருடன் தனக்குறிய மித்துருவைக் கூடினுல் பழயபொருளான கிரகவாகனம் பூமி முதலியதை இழந்தபின் தன் சுயத்தால் அல்பவிர்த்தி யடைவனென்றும் மேற்கூறிய குசனுவது சுக்கிரனுவது ஒருவர் பெலமற்ற பாவருடன் இருந்தும் அல்லது பகை பாபக்ஷேத்திரத்திருந்தும் மற்றய மூவர் ஸ்தானமும் பெலத்திருக்கில் சிலநாள் கிரகவாகனமும் பூமி முதலிய இயல்பின்றி வருத்திப்பின் விர்த்தியடைவனென்று அறியவும் குசன் சுக்கிரன் மேஷம் விருஷபம் விருச்சிகம் மிதுனம் கடகம் கன்னி இவைகளில் மேற்கூறிய விவர்களுக்குப் பகை நீசமில்லாதவிடத்தில் பெலத்தும் சுபட்சேத்திர திருயுடன் சீவசரீராதிபர்கள் இருக்கினும் பெலக்கினும் சிலநாள் வருத்திப் பின் கிரகவாகனம் பூமி யிவைகளே யடைவன் இவைகளில் பாபக்ஷேத்திரம் பகை நீசமானுலும் பாவரான சனி பாம்புகள் முதலிய தீக்கோள்களேக் கூடினும் உபயபாரிசம் பாவரிருந்தாலும் சாதகனுக்குப் பலவகை பூமி கிரகவாகன முதலியதும் இன்றி வருந்தி மனவருத்தமும் அடைவன் அன்னிய கிரகவாசஞ் செய்வன் சுபரும் பாபருமாகினும் இரண்டுபெயர் பலமற்றிருக்கினும் சிலகாலம் அன்னிய கிரகவாசஞ்செய்தும் சிலகாலம் சுயகிரகவாசஞ் செய்வனென்றும் அல்பவாகன முடையவனென்றும் மேலேகூறிய குசன் சுக்கிரன் முதலிய சரீர சீவாதிபர்களில் ஒருவர் பெலமற்றிருக்கினும் பாவரைக்கூடினும் ஆதியந்தமாகிய காலங்களில் கிரக முதலிய வாகனங்களின்றி மத்தியில் அன்னரால் வாழ்ந்திழப்பனென்றும் மேற்கூறியவரையில் எவரானுலும் இருவர்கள் பகை நீசம் அல்லது பாவக்ஷேத்திரம் பாவர் மத்தியமாகியும் இருக்கில் பலகான் சுயகிரகாதி வாகனம் பூமியின்றி அன்னியபிரபுமூலமாக சிலகாலஞ் சுகத்தையடைந்து வாழ்வான் என்றும் மூவர்கள் பாவட்சேத்திரம் அல்லது பாவர் வீட்டினும் பகை நீசமிவைகளேப்பெற்று வாழில் சாதகனுக்குப் பலவிதமான வருத்தத்துடன் உள்ள கிரகவாகனம் பூமி முதலிய யாவுமிழந்து வருத்தமடைவனென்றும் மனதிக்கு சுகமின்றி தரித்திரவானுகப் பலிப்பனென்றும் பழம்பொருளிருக்கினும் அவ்விதமான கிரகவாகனம் பூமி முதலியதையும் இழந்து தவிப்பனென்று மறியவேண்டுமென்பதாம்.

மாதுரு பாவபலன்களாவன

சந்திரனேயும் குருவையும் மீனத்தையும் இவைகளுக்கு நான்காமிடத்ததிபதி ஸின்ற இராசிநாதனுடையனவும் கூடிய கிரக சுபாசுப பலன்படிக்கு

உரியவகையை ஆராய்ந்து கூறுவது மாதுருபலமாகும் குருவுக்கு நான்காமிடத் ததிபதி நின்ற இராசிநாதன் சீவனென்றும் புதனின்ற ஸ்தானாதிபதி சரீர மென்றும் பெயராகும் இவையின் பெலன்களை யாராய்ந்து கூறல்வேண்டும்.

மேற்கூறிய சந்திரன் குரு மீனம் இவைகளின் வசாத் சீவசரீராதிபர் களும் மேற்கூறிய கிரகங்கள் பலவானாகியும் சந்திரன் (ச, அ, கஉ) நீங்கிய வீட்டிலும் தனுசு மீனம் மகரம் சிங்மம் மிதுனம் கன்னி துலாம் இவைகளில் ஆரோகணத்தில் சரமுபய யிராசியும் அவரோகணத்தில் ஸ்திரமுபய விராசி யும் இவற்றில் அவரவர்களுக்குரிய சுபக்ஷேத்திரத்திலும் பெலத்தும் குரு புதன் முதலிய சுபர்களோடுகூடியும் இருபக்கங்களிலுஞ் சந்திரன் குரு மீனம் இவைகளுடனே பாவர்களாவது சுப விரோதிகளாவது இவர்கள் வீட்டிலாவது சேராமல் தனித்தாலும் அல்லது அவருடன் கூடாமலும் சர சர மான யிடமாகில் மாதா அநேகநாள் விருத்தாவஸ்தைவரையில் தாய்வகை விருத்தியும் இதில் சுக்கிரன் கூடினும் பார்க்கினும் பிதாவின்தாரம் இருவகை யுள்ள மாதுரு பாகத்தையடைவனென்றும் அவ்வகைகளால் விரோதவிவாத மனோவருத்தமும் சுபக்ஷேத்திர கெதியுடனிருக்கினும் விசேஷமுள்ள சுகத் துடன மேன்மைகளைப் பொருந்திய அன்னிய மாதுருவகையால் சுகத்தையும் மேன்மைகளையும் அடைவனென்றும் குடும்ப ஒற்றுமையான மேன்மையும் இவ்வித யிராசிகள் சரமானாலும் அல்லது சரமுபயமாகினும் ஜீவசரீராதிபர்கள் தனக்குரிய சரமுபயமானால் விருத்தாவஸ்தையில் தாய் மரணமும் சர ஸ்திர மானால் கௌமாராவஸ்தையில் தாய் மரணமும் ஸ்திர ஸ்திரமானால் பாலி யத்திலேயும் ஸ்திர முபயமானால் பாலியக்கடையிலும் ஸ்திரசரமானால் எவ் வனத்திலும் மாதா மரணத்தை யடைவளென்றும். சந்திரன் குரு இவைகள் வசாத் ஜீவசரீராதிபர்கள் பகை நீச பாபக்ஷேத்திர கெதியுடன் (ங, ச, அ, சு, கஉ) இந்த ஸ்தானங்களில் சந்திரனிருக்கவும் குரு பாம்பு முதலிய பகைக் கிரகம் அல்லது பாபக்ஷேத்திர சம்பந்தமாயிருக்கினும் சந்திரன் பகை நீசத்துவ மல்லது அக்கோளுடனும் குரு முதலியோர் பெலமற்று மகரம் விருஷபம் சிங்கம் துலாம் விருச்சிக மிவைகளில் பகை நீச க்ஷேத்திரங்களில் இருக்க சந்திரன் ஜீவசரீராதிபர் பகை நீச க்ஷேத்திரம் மீனம் அல்லது (அ, சு, கஉ) இவைகளில் பலமற்றும் மேற்படி இடங்களுக்கு இருபக்கங்களிலும் பாவ ரான சனி பாம்பு முதலியோர்கள் இருக்கினும் அல்லது நோக்கினும் ஜெனனத்துடன் தாய் மரணமாவாள் மேற்கூறிய கிரகங்கள் மேற்கூறிய இராசியிலும் ஜீவசரீராதிபர்கள் பாபக்ஷேத்திர கெதியில் மறைந்தும் பகை நீசாதி முதலாகிய அபாவங்களைப் பெற்றிருக்கினும் நோக்கினும் பாலியத்தி லேயே மாதா போய்விடுவள் சந்திரன் மீனம் இவைகளுடனே குசன் இரவி பாம்பு சனி இவர்களிருக்கினும் நோக்கினும் உடனே தாய்

மரணமாகி விடுவளென்றும் சந்திரன் பாபருடனும் அல்லது சுபருடனுங் கூடாமல் தனக்குரிய சுபக்ஷேத்திர பலத்துடன் பகை நீசநீங்கிய இடத்திலும் இருக்கில் தாயமனவள் விருத்தாவஸ்தை வாரவிருத்தியாவளென்றும் சீவசரீ ராதிபர்கள் பாவ க்ஷேத்திரத்திலாவது பாவருடன் கூடினும் பாலியத்திலேயே தாய்மரணமாகி விடுவன் இவர்கள் சுபர் பாபிகளுடன் கூடியும் உபயமானு யௌவனத்தில் தாய்மரணமும் ஸ்திரமானுலும் கௌமாரகாலத்தினும் சரமா னுல்விருத்த காலத்திலும் மாதாவுக்கு மரணமென்றும் சுக்கிரன் அல் லது சந்திரன் புதன் சீவசரீராதிபரானுலும் சீவசரீராதிபர் புதன் சந்திரன் சுக்கிரன் சுக்ஷேத்திர வீட்டிலிருக்கினும் பாம்புமுதலிய பாவரைக்கூடினும் சாதகன் பிதாவுக்கு (உ) முதலிய பலதாரபோக யோகருடும்ப விர்த்தியுடைய வன் சனி பாம்பு கூடினும் நோக்கினும் மேற்படிவண்ணய மழிந்துவிடும் சீவசரீ ராதிபர்களுக்கு ரோகாதிபதி அஷ்டமாதிபதி யிவருடன்கூடில் ரோக பாதையையுடையவர்களாவார்க ளென்றும் அவ்வவ் கிரகங்களுக்குரிய அக்கங் களிலும்ரோகங்களைக்கொடுக்கு மென்று மறியவேண்டு மென்பதாம்.

வித்தியாபலன்

புதன் புதனுக்கு நான்காமதிபதியின்ற இராசிநாதன் குருகுருவுக்கு (உ, ச) மாதிபதி யின்ற இராசிநாதன் இவர்களுடைய பலாபலன்களையறிந்து வித்தியாபலனுரைக்க வேண்டும் புதன் வசாத் சீவனும் குருவசாத் சரீரம் பார்த்து அறிந்துகொள்ள வேண்டியது மேற்காட்டிய புதன் குரு இவர்கள் (ச, டு, எ, க) இந்த யிடங்களிலும் யிரவியை விடாத புதனுக்குப் பெலத்தும் கேந்திரகோண முடையவர்களாகியும் தனக்குரிய சுபக்ஷேத்திர பெலனுடன் சூரியன் அல்லது சனி யிவரைக்கூடி ஜீவசரீராதிபர்கள் பல வான்களாகிய இடத்திலும் அவ்வித ஸ்தானம் சிங்கம் கடகம் மிதனம் மகரங் கும்பம் தனுசு இவைகளானுலும் இராசவித்தையில் அதிகமான கீர்த்திவந்த னுகியும் பிரபலனுகியும் சுயபாஷா சிரேஷ்டனுகியும் யாவரும் புகழ வாழ்வன் இவ்விடங்களில் இருந்த ஸ்தானுதிபர்கள் பாவர் அல்லது விரோதியாய் கூடினுலும் பார்த்தாலும் இவர்களின் மத்தியில் ஜீவசரீராதிபர் அல்லது குரு புதனிருக்கினும் சாதகனுக்கு எவ்வித வித்தையும் பிறபலமின்றி யுழலுவன் குரு முதலியோராகி தனக்குரிய சத்துரு பாபக்ஷேத்திரமானுல் சண்டாள வித்தைபடிப்பன் சுக்ஷேத்திர சுபட்சேத்திர மிவைகளில் தனித் தாலும் தனக்குரியவர்களுடன் கூடினுலும் உயர்ந்த வித்தை சாஸ்திராதி வெகுபல வாத தர்க்கனுகியும் ஞானுதிபலநூலறிவன் சுக்கிரனுகில் உச்சம் முதலிய சுபட்சேத்திரம் அல்லது தனக்குரியயிடத்தில் பாபசம்பந்த வீக்ஷணிய மில்லாதிருக்கில் காவ்யநாடகாதி கீதத்தொழில்களும் மோகன சாஸ்திர

பரிசயமும் இராஜ மூலியமான வித்தையில் பிரபலமும் அடைவன் புதனுகில் கணிதம் பண்டிதம் சோதிட முதலிய மூலகைக் கலைகளே யறிவன் சனியாகில் நீசவித்தை முதலியதைக் கற்பன் இராகு கேதுவாகில் எந்திரவித்தை கருவி சாஸ்திரம் பரிசயிக்க வல்லவனுவன் குசனுகில் பூசாஸ்திராதி அனனிய வித்தையிலும் இரணசாஸ்திராதிகளேயும் அடைவனென்றறிய வேண்டும்.

கன்னி துலாம் விருச்சிகம் இதில் மேற்கூறிய கிரகங்களான புதன் குரு சீவசரீராதிபர்களாதித் தனித்தால் தனக்குரிய வித்தைகளிற் சிற்சில அல்பங் கொடித்து அவைகளால் சீவனஞ் செய்து வருவன் சம்பந்தமான கிரகங்கள் அந்தந்த இடத்துக்கு சுபத்துவ முடையவராகிக் கூடில் கிரகங்களுக்கு ஏற் பட்ட வித்தையில் சில வற்றில்லாமல் அதிலுள் கீர்த்தியையுந்தன் வீர்த்திகளே யும் பரதேசங்களால் கொடுக்கப்படும் பகை நீச பாவராகியும் பாபமத்திய கதியி லிருக்கில் வித்தை யபிவிர்த்தி யடைய மாட்டாவாம் மீனம் மேஷம் விருஷபம் இவைகளில் புதன் குரு தனித்தாலும் ஜீவசரீராதிபர் தனித்தாலும் சுய வித்தை யுடையவன் பிரபல மடையான் பாவர் சேரினும் சத்துருஸ்தானுதிபர் கூடினும் கணக்கு முதலிய சுயத்தொழி லுண்டாகும் ஹிதரபாஷை வீர்த்தி யடையா னென்க சுட்சேத்திராதிபதி சுபபெலத்துடனிருக்கில் மேன்மை யுள்ள கிரகத்தால் அவர்களுக்கு மேலே சொல்லிய வித்தை பிரகாரஞ்சொல்ல வேண்டு மென்பதாம்.

மாதுரு பாவாதிகளின் மாரக திசாபுக்தி கர்மகணிதம்

சந்திரன் குரு மீனம் இவைகளுடனும் இவைகளுக்கு நான்காமதிபதி எந்த இராசியிலிருக்கிறுனே அவருடனுங்கூடிய கிரகவெண்களேப் பலா பலன் படிக்கு யிராசி யெண்ணுற் பெருக்கிய தனித்தனித் தொகைகளே (கூ-ல்) கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் புத்திகளிலும் மாதுரு கருமமென்றும் இதில் சீவசரீராதிபருக்கு அஷ்ட மாதிபதி லின்ற ஸ்தானுதிபதியின் பலன்களுக்கிசைய இராசி பெண்களாற் பெருக்கிய தொகையை (கூ-ல்) கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை (டு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் புக்தியிலும் மாதுரு கருமநிச்சயமும் மூன்சொன்ன காலங்களுக்குரிய கிரகபலன்களுக் கிசைய பார்த்துப் பலன் சொல்ல வேண்டும்

புத்திரபாவ பலன்கள்

குருவையும் மேஷத்தையுங் குசனையும் இவைகளுக்கு (டு) மிடத்தாதிபதி லின்ற இராசிநாதனையுங் கொண்டு புத்திரபலன் சொல்லவேண்டும் இரவி லின்ற ஸ்தானுபதிபதி சரீரமென்றும் குசனுக்கு ஐந்தாமிடத்தாதிபதி லின்ற

ஸ்தானாதிபதி சீவனென்றும் பெயராகும் சீவசரீராதிபர்கள் ஒருவராகியதில் புதன் சனி பாவராகில் புத்திரரில்லை யென்றும் சுபருடன் சுபட்சேத்திர கெதியுட னிருக்கினும் பிறந்து இறப்பார்களென்றும் குசன் குரு இவருடனாவது இவராவது மேஷம் சிங்கம் (உ, கஉ) இவ்விதயிடம் சப்தம மிவைகளில் பாம்புகள் சநி குசன் புதன் முதலிய பாவர்களிருக்கினும் நோக்கினும் பாவமத்திய கெதமானாலும் பலவித புத்திரசோக முண்டு இதில் சுக்கிரன் கூடினும் விருஷபம் துலாம் கடகங் கன்னி மிதுனம் மீனம் இவைகளில் சீசரீராதிபர்கள் குரு குசன் முதலியோர்கள் பாவரைக் கூடினும் பகைபாபர் மத்தியனானாலும் புத்திரரே கிடையாது கிடைக்கினும் உடனுக்குடன் மரித்தும் பலவித கஷ்ட நஷ்ட துன்பசோகத்தை யடைந்து வாழ்வன் என்றும் மேற்கூறிய குரு சுக்கிரன் புதன் சீவசரீராதிபர் இவர்களில் எவரேனும் பலவானாகி சீவ சரீராதிபர்கள் கெடாமல் ஒருவர்க்கொருவர் வித்தியாச விரோதமில்லாமல் இருந்தும் பெலவானாகியும் பாவரைக் கூடினாலும் அல்லது தனித்து நிற்குமிடம் பாவட்சேத்திரமானாலும் அயல்மனை அல்லது பின்றாரத்துக்கென்றும் முன்களத்திரத்துக்கு முன் பிறப்பதெல்லாம் மரணமாகி அனேகநாள் புத்திர விஷயத்தால் வருந்தி இளைத்துப் பல துயரமடைவன் மேற்படி கிரகங்கள் சுட்சேத்திர சுபட்சேத்திர பலத்தால் புத்திரலாபம் அல்பவிருத்தி யாகுமென்றும் கொள்க. அதாவது மிகுந்த புத்திரோற்பத்தியில் மரண மதிகமெனவும் உயிர்வாழ்தல் அல்பமெனவும் பொருள் கொள்க. இவற்றோடு பலவகை வருத்தங்களையுங் கொடுக்கு மென்றும் அறிந்து சொல்க சீவசரீராதிபர்கள் குரு இரவி சுக்கிரன் சந்திரன் குசனாகியும் குசன் இரவி இவர்கள் தனக்குரிய சுபட்சேத்திர பெலத்திலும் பாம்புகள் முதலியோரைக் கூடாமல் மகரம் மேஷம் விருச்சிகந் தனுசு சிங்கம் இவைகளில் நிற்கினும் குரு குசன் முதலியோர் சநி புதன் வீடாகிய கன்னி மகரங் கும்பம் மிதுனம் இவைகளல்லா விடங்களில் இருக்கில் புத்திரர் மிகவும் பிரபலத்துடனும் அதிகமான புத்திர லாபமுமாம் கேந்திரகோண கெதியுடன் வலுத்திருக்கு மாகினும் அவ்விதியே கொண்டு புத்திரபாவங்கள் அதிக விருத்தியையும் குரு குசன் முதலியோர் தனுசு மேஷம் மிதுனம் கடகம் விருஷபம் இவைகளி லிருக்கினும் விசேஷ புத்திரலாப செயமும் மிகவு மேன்மையு முண்டாம் சீவசரீராதிபர்களும் வலுத்திருக்கில் அந்தியம் வரை செனித்த புத்திரர்கள் பிரபல விர்த்தியை யடைவர்க ளென்றும்மிகுந்த கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சிகளுந் தனதானிய கிரகவாகன புத்திர பௌத்திர சம்பத்துடன் வாழ்வார்கள். இதில் சந்திரன் சுக்கிரன் புதன் மீனம் இவ்வித கிரகங்களின் யிடத்திலும் இவர்களுடன் சீவசரீராதிபரும் குரு குசன் இவர்கள் கூடி வேறுபாவரில்லாதிருக்கின் மிக மேன்மையான பின்றார முதலிய பகுதரா மிவைகளுக்கு ஏராளமான புத்திரலாப முண்டே யொழிய முதல் தாரத்துக்கு புத்திரபாவங் கெடும் மேற்கூறிய ஸ்தானத்திலிருக்குங் கிரகங்களுடனல்லது இடங்களில் பகை நீசர்கள் சநி பாம்புகள் முதலிய யாவர்களும் புதனுமிருக்

கில் பிறந்து மரணமடையும் கன்னி மிதுனம் மகரம் கும்பம் இவைகளிலிருக்கினும் பாவட்சேத்திரம் பகை நீச இடத்திலிருக்கினும் புத்திரனே கிடையாது இவற்றைச் சுபபலத்துடன் சீவசரீராதிபர்கள் இருக்கினும் நோக்கினும் தலாம் விருச்சிகந் தனுசு மகரம் கும்பம் விருஷபம் மிவைகளில் ஜீவசரீராதிபர் பாரைக்கூடில் அங்ஙனமாகிய ஸ்தானங்கள் தங்கள் தங்களுக்குப் பெல முடைய இடங்களாகில் சாதகனுக்குப் பின்மனே முதலிய அடுத்த தாரங்களுக்கும் காலாதீதத்தின்மேற் புத்திர விர்த்தியும் இராஜரோக பிரபலத்துடனும் மேன்மையை பொருந்தி வாழப்படுவர்களென்றும் ஜீவசரீராதிபர்களும் பகை நீச சத்துரு க்ஷேத்திர கிரக * சம்மேளனமாகியும் அதிபாவரைக்கூடியும் பெல மற்றிருக்கினும் குரு குசன் சனி புதன் சந்திரன் ரவி இத்தட்சேத்திரங்களில் பகை நீசம் அல்லது பாபத்துவங்களைப் பொருந்தி யிருக்கினும் சாதகன் பல வித கஷ்டநஷ்ட தின்பமும் பொருட்சேதமும் அன்ய புத்ர சுவீகாராதியைப் பொருந்தினும் பகையல்லது மரணமும் அதனால் துக்கத்தையும் அனுபவிப்பனென்றும் பலவகைக் குடும்ப தோஷமுமாம் அவற்றினும் அந்த இடத்திபர்களைக் கூடினும் அல்லது பார்க்கினும் மகரம் கும்பம் மிதுனம் கன்னி இவற்றிலிருந்து பாம்புகள் புதன் சனி முதலியவர்கள் கூடினாலும் சுவீகார புத்திரனுவனென்பதாம்

மேற்கூறிய ஜீவசரீராதிபர் தூர்ப்பலராகியும் பகை நீசட்சேத்திரம் பாப சம்பந்தனுகியும் இருந்தும் அதில் பாவர் கூடியிருக்கினும் சீவசரீராதிபர்களுக்கு அஷ்டமாதிபன் இரவி குசன் சனி புதன் இவர்களிலெவரேனுங்கூடினும் அல்லது இவர்களினிடங்களிலிருக்கினும் எவ்வித தாரங்களுக்கும் புத்திரனே கிடையாமல் வருந்தி இளைப்பனென்றும் இதிலும் தசமாதிபன் பெல மற்று ஜீவசரீராதிபதி சனி பாம்புகள் புதனிவராகில் புத்திரனிருக்குமாயினும் ஆபத்துக்குதவானென்றும் சுபட்சேத்திர சுபவீட்சண்ணிய சம்பந்த பெலனுகிலும் மற்றய யிடங்களில் பெல முற்றிருக்கினும் புத்திர கருமனுவனென்றும் ஜீவசரீராதிபர்களுக்கு (ரு) மிடத்ததிபதிக்கும், இவர்களுக்கும் பகையான சுபராகில் சமத்துவ தாய் தந்தை விரோதியாகி பலர் பழிக்க வாழ்வனென்றும் அசுபராகிய சனி பாம்பு முதலிய பகைவர் நீசட்சேத்திர கெதியாய் ஒர்வித சுற்றும் பாராமல் கூட்டுறவு முதலானவை யில்லாமல் பகை முதலியவகை பெற்றிருக்கில் பிறந்தவன் தகப்பனுக்குப் பிள்ளையாகமாட்டான் பரனுக்குப் பிள்ளையாகியும் சாதி பிரஷ்டனுகியும் அருத்திய விபசாரித்துவ ஜெனனனென்றும் உலகமிசமும் புத்திரனே யடைவனென்றறிய வேண்டும்.

---

* சம்மேளனம் - சேர்க்கை

பாம்பு சனி புதன் முதலியோர் மாத்திரங்கூடி தனித்திருந்து மேஷம் மகரம் மிதுனம் சிங்கம் துலாம் கன்னி இவ்விடங்களில் யிருக்கினும் நோக்கினும். வேறு சுபர்களைக் கூடாமலும் பகை நீசமுதலியவர்களைக் கூடினும் பார்க்கினும் குரு சுசன் முதலிய ஜீவசரீராதிபர் பகை நீசம் பாபர் மத்தியம் பாபருடன் பாபட்சேத்திரகெதி அல்லது மகரம் கும்பம் மிதுனம் கன்னி விருச்சிகம் இவைகளில் தனித்தாலுங் கூடினாலும் புத்திரர் கிடையாது அன்னிய புத்திரர் கருமத்துக்குட்படுவர் மேற்கண்ட பாவருடன் சுபர் கூடினும் கேந்திர கோணத்திலிருக்குங் குரு சுசன் சுக்கிரன் இவருடன் அல்லது சந்திரன் இரவி இவருடன் இவருடைய கேந்திரங்களி லிருக்கினும் புத்திரர் பலவாறுக சனித்து மரணமடைந்தும் மறுதார வம்சபுத்திர கருமம் அகாலத்தில் பலிக்கு மென்றும் புத்திரதோஷ மூண்டென்றும் புத்திரவகைக் கிலேசமுண்டாகும் இவ்வித மிருந்து ஜீவசரீராதிபர்கள் வலுப்பெற்று சுபட்சேத்திர கெதியுடனிருக்கில் சுகமான புத்திர வீர்த்தியும் பின் மனையாளுக்கு வீர்த்தியான புத்திரரால் அகாலத்தில் சுகமடைவ னென்றும் ஜீவசரீராதிபர்களுக்கு (சு, அ) மிடத்தாதிபர் சனி சந்திரன் சுக்கிர னிவராகினும் பாம்புகளாகினும் பகை நீச முதலிய வகையடைந்து கூடினும் பெலத்தாலும் புத்தி ஸ்தானங்களிலிருக்கினும் குடும்பத்திலிருக்கினும் குருவசாத் ஜீவசரீராதிபர் வசாதுயிருக்குமிடம் (உ, டு, கூ, கக, எ-ல்) ஆயினும் புத்திரர் பரமனுஷனால் கோளகன் குண்டகன் என்ற புத்திரனுவான் குசன் கேது இரவி இவர்கள் பெலத்துடன் குரு சுக்கிரன் பூரணச்சந்திரன் வீட்சணிய சேர்க்கையின்றி மேற்கண்ட இடங்களிலிருக்கில் கோளகனுன புத்திரனென்றும் பாவராகினும் பாவரைக்கூடி பாவட்சேத்திர வாசனுகில் மனைவி தன் சுயபுருஷனைவிட்டு பிறனிடத்தில் பிரவேசித்து புத்திரனைப் பெறுவனென்றும் தன் சுய புருஷனிடம் எவ்வளவு நான் பிரவேசித்தாலும புத்திரர் கிடையாதென்றும் அறிக இவருடன் ஓர் சுபர்கூட வல்லது நோக்கினும் சந்திரன் சுக்கிரன் இவர்வீடாகினும் மறமனையாள் வகை புத்திரவிருத்தி யுண்டென்றும் அறிந்து கொள்க.

புத்திர பாவ கணிதங்களாவன

குருவுடனும் மேஷத்திலும் சுசனுடனும் இவைகளுக்கு ஐந்தாமிடத்ததிபதி ஜின்ற இராசிநாதனுடனுங்கூடிய கிரக சுபாசுப பெலன்களுக்குரியபடியெண்களே இராசி பெண்களாற் பெருக்கிய தனித்தனி தொகைகளே மறுபடி தொகைகளே பெலத்துக்கிசைய தள்ளிய மிச்சத்தை அவரவர் எண்கள் பேருக்குக் கொடுத்த ஈவுகளே சுபாசுபர் வீதப்படி கண்டறிந்தவையில் ஸ்திரீ புருஷக் கிரகங்களின் எண்தெரிந்து புத்திரலாபம் அறியவேண்டும் மேற்கண்ட தனித்

கலைப்பற்றி பலன்

தனித் தொகைகளை (கூ-ல்) கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை (கூ-ல்) பெருக்கி (கூ ல்) கழித்த சேஷம் புக்தியிலும் புத்திரலாபமுண்டு.

மேலே பெருக்கிவைத்த தொகையுடன் சீவசரீராதிபர் முதலாகியவர் களுக்கு அஷ்டமாதிபதி ஜின்ற ஸ்தானாதிபதிகளின் எண்களைக் கூட்டி (கூ-ல்) கழித்த சேஷமும் கண்டரிந்தவைகளில் திசாபுக்திகாலங்களில் புத்திர துக்கம் மரணம்முதலிய பலவகைக் கட்டபலன்கள் கொடுக்கப்படுமென் றறியவேண் டும்.

தனுர்லக்ன சாதகனுக்கு சத்துருரோக முதலியதும் இராசதெண்டனை முதலிய சோரபயங்களைக் கூறப்படும்

ஆருமிடம் சுக்கிரன் இவைகளுக்கு ஆருமிடம் ஆருமிடத்ததிபதி இவர் கள் ஜின்ற இராசியதிபனைபுங்கொண்டு மேற்படி பலன்கள் கூறவேண்டும் சத்துருபாவத்துக்கும் சோரபாவத்துக்கும் சுக்கிரன்ஜின்ற இராசிக்கதிபதியும் அவன் ஜின்ற வீடும் சத்துருபாவத்துக்குச் 'சரீரமென்றும் சுக்கிரன் ஜின்ற ஸ்தானத்துக்கு ஆருமிடத்ததிபதி எந்த வீட்டிலிருக்கிருனை அவன் சீவனென் றும் பெயராகும் உரோக இராசதெண்டனைகளுக்குச் சுக்கிரனின்ற ஸ்தானாதி பதி சரீரமென்றும் சனிக்கு ஆருமிடத்ததிபதி எந்த இராசியிலிருக்கிருனை அவ்வதிபனு மவனுறைவிடமும் சீவனென்றும் பெயராகும்.

உரோகம் இராஜதெண்டனைகளுக்குச் சுக்கிரன்ஜின்ற ஸ்தானாதிபதி சரீரமென்றும் சனிக்கு ஆருமிடத்ததிபதியிருக்கு மதிபன் ஜீவனென்றும் பெயராம்.

இவைகளை யறிந்தபின் (சு. அ, கக, உ) இவ்வித இடங்களில் கட்டமாதி பதியாகியும் அவர்கள் சுபபலத்தைப்பெற்று மேற்கண்டஇடந்தவிர மற்றய இடங்களில் பெலவானுகியும் பாவத்துவம் பெற்றவர்களாகி சனி குசன் பாம்பு கள் இவர்களுடன் சீவசரீராதிபர்கள் இருக்கினும் அசுபக்ஷேத்திர மானுலும் அவ்வித யிடமானது கடகம் சிங்கம் விருஷபம் தனுசு விருச்சிகமிவைகளாகி யும் (அ, கக, சு, ச) மிடமானுலும் சுபக்கோட்களுடைய வீட்சண மில்லா திருக்கில் சாதகனுக்கு இராசதெண்டனையும் சந்துருக்களால் பலவித பாதை யைப்பெறுவனென்றும் ஷட்டாஷ்டமாதிபன்ஜின்ற ஸ்தானாதிபதி சரீரம்ஷட்ட மாதிபதிக்கு ஆருமிடத் தகிபஜின்ற இராசிநாதனிருக்கும் சீவன் இவ்விதமறி ந்து கொள்ளவேண்டும் சீவசரீராதிபர்கள் குரு சனியானுலும் இரவியானுலும்

சத்துரு பாவத்தில்

பகை நீசாதி சுபட்சேத்திர வாசர்களாலும் அந்த இடம் சிங்கம் தனுசு இவைகளாலுஞ்ராசதெண்டனை சத்துருபயம் பலவகைக் கஷ்ட தன்பம் பொருட்சேதமாகும் சுபவீட்சண்ணியம் பெருக்கில் அவைகள் யாவும் அல்பமாக ஆவர்க்குரிய திசாபுத்திகால தியமங்களில் காண்பித்து ஜீவர்த்தியாகும் பின்னல் இராசாக்களாலேயே வனுகூலம் பெருவனென்றும் மேற்கூறிய (சு, அ, கக, ச) இந்த இடங்களில் சுக்கிரன் குசன் இரவி இவ்வகைக் கோட்களுடன் பாம்பு சனி இவர்கள் கூடியவர்க் கேற்றஇடம் பெலவானுகியும் சீவசரீராதிபர் சனி பாம்பு குசன் இவர்களாலுஞ்ஞம் எக்காலத்தும் இராசவிரோதம் நட்டம் பகை சத்துரு தேகராக வுபாதிகளையும் இவர்கள் சுபராலுஞ்ஞம் கேந்திர கோண கெதியுள்ளதும் தனக்குரிய சுபட்சேத்திரமாலுஞ்ஞம் சுகபலனுடன் கூடினுஞ்ஞம் சத்துருரோகங் கிடையாதென்றும் இவருடன் லக்ஞாதிபதி கூடினுஞ்ஞம் லக்ஞாதிபதி சீவசரீராதிபனுஞ்ஞம் பகை ரோகமுதலியவை இவனைப் பீடைசெய்தேவரும் சீவசரீராதிபர்கள் இரவி சந்திரன் ஜின்ற ஸ்தானாதிபதி அல்லது (ச, க, ஙி) இவ்வித ஸ்தானாதிபர்களாலுஞ்ஞம் இவைகளிலிருக்குமாயினும் இவ்வித ஸ்தானாதிபர்களைக் கூடினுஞ்ஞம் அவைகளவர்களுக்குப் பகை முதலிய க்ஷேத்திரமாலுஞ்ஞம் சாதகனுக்குப் பலவித கஷ்டநஷ்ட ரோகஞ் சத்துருபயம் பொருட்சேதம் இராசவிட்வரம் சோராக்கினி பயங்களைக் கொடுக்கும் இதில் சனிவசாத் சீவசரீராதிபர்கள் பெலவான்களாகிக் கேந்திர கோணம் இரவி சந்திரலக்கின ஸ்திதியாலுஞ்ஞம் அவைகளுக்கு அல்லது லக்கினவசாத் இவைகளுக்கு (க, ச, ஙி, க, ம) இந்த இடங்களில் பாபபல முடையவரும் (சு, அ, கக, கூ, உ, கஉ) இவற்றில் சுபரிருக்கில் எப்பொழுதும் நோயும் பலவித கஷ்டநஷ்ட துக்கமும் பொருட்சேதமும் சோராக்கினி பயமுண்டாகும்.

மேற்கூறிய ஜீவசரீராதிபர்கள் இரவியின் வீடும் இரவியுமாகி பாபபெலத்திலும் பாவராகி (க, ச, எ, ம, ஙி, க) இந்த இடங்களிலாவது (உ, கஉ) லாவதிருக்கின் அவனுக்கு பிதுருமூலிய சத்துருவும் இராசவிரோதமும் சொருள் நஷ்டமும் சிரோநேத்திராதி ரோகபாதைகளையும் அதற்குரிய பிதுர் வம்சங்களினும் மேற்கூறிய பலனையே கொடுக்குமென் றறியவும்.

சூரியனுகி சமபலன்பெற்று மேற்கூறிய இடங்களில் இருக்கில் மேற்கண்ட உபாதிகள் அல்பமாகிக் காட்டி ஜீவர்த்தியாகிவிடும் லக்ஞாதிபதிக்கு ஜீவசரீராதிபர்கள் பெலமுற்றிருக்கில் சத்துரு இராசாக்களே செயிக்கவல்லவனுய் வாழ்வனென்றும் இவருடன் சந்திரன் கூடினுஞ்ஞம் சந்திரன் ஜீவசரீராதிபராகினும் இவர் கூடினும் பாவராலுஞ்ஞம் மேலேகூறிய இடங்களிலிருக்கில்

பலவித விவாத விரோத மான துன்பம் தேகாரிஷ்ட சுபநேத்திராதி நோய் களும் காணும் அவர்களின தசாகால காலங்களில் தேகபாதை இராசபிரபு விரோ தன் கொடுக்கும் குசன் கூடினும் பாம்பு முதலியவர்கள் கூடினும் இரண்டு பாபருக்கு மேலானவர்கள் மேலேகூடிய யிடத்திலிருக்கில் சாதகனுக்குப் பல விதநோயும் இராசபயம் சத்துருகிலேசம் இருணபாதைபு மடைவன் மேற் கூறியவர்கள் ஜீவசரீராதிபர்களாலுல் யிருணமின்றி ரோகம் அரிஷ்டித்து பலவித வாதங்களேயும் குடும்ப சத்துருக்களேயுங் கொடுக்கப்படும்

குருவாகினும் அல்லது ரவியாகினும் பிரபல ரோகத்தோடு யிருணதந்த னுகித் துன்பமடைவன் இவர்கள் பாபட்சேத்திரமென்னும் (சு, அ, கூ) இந்த விடங்களிலிருக்கில் இராசதெண்டனைகளே கொடுக்கும் குசன் கேது வாகி தனக்குரிய சுபட்சேத்திர கெதியாகி னிற்கினும் நோக்கினும் இரக்தம் அக்கினி இவ்விதபாதை கொடுக்கப்படும் இராசதெண்டனையுண்டாகும் சுபட் சேத்திரமாலுல் மேற்படி பலனேயாம் அசுபட்சேத்திரமாலுல் சுபபலன்களே யும் இராசவனுகூலமுஞ் சத்துருசெயமுமுண்டாகும் தனியான பாம்புகள் ஜீவசரீராதிபராகிக் கடகம் சிங்கம் அல்லது இரவி சந்திரன் லக்னுதிபதியுடன் கூடி அந்தயிடம் (சு, அ, உ, க) இவ்வித யிடமாலுல் சாதகனுக்கு அவர்களின் அதிகாரங்களில் இராசதெண்டனையாதி பலவகை துக்கசோகமும் ரோகாதி பாதைகளேயுங் கொடுக்கப்படுவர்கள்.

பாபக்ஷேத்திரத்தில் பெலமற்ற பாவரும் சுபட்சேத்திரத்தில் சுபாதிகாரம் பெற்ற சுபரிருந்தும் மேற்கண்டவர்களேப்பார்க்க அல்லது கூடினுலும் அவ்வித இராசதெண்டனை சத்துருவினுல் அபஜயம மனேதுக்கம் ரோகசாட்டிய பீடைகளின்றி அல்பத்துடன் ஜீவர்த்தியாகிவிடும் சுபர்கள் பாபாதிபர்களாகி மேற்காட்டிய ஸ்தானத்தில் யிருக்கினும் பாவரிருக்கினும் சோரசத்துரு துன்ப மும் ரோகபயமும் உண்டாகும்.

சுபர்கள் சுபட்சேத்திரத்திலும் பாவர் பாபக்ஷேத்திரமாகி ஜீவசரீராதி பர்கள் பெலனற்றுமிருக்கில் சத்துருவில்லை அனுகூலமும் யிருணமுமிலாம லும் எவ்வித ரோகபாதைகளுமின்றி சுகமடைவன் மேற்காட்டிய ஸ்தானங் களில் எவரிருக்கினும் நோக்கினும் ஜீவசரீராதிபர்கள் பெலமற்று னின்றக்கால் சோர சத்துரு முதலிய துன்பமில்லாமலும் ரோகாதி பாதைகளில்லாமலும சுகமடைவர் யிதில் ரோக ஜீவ சரீராதிபதி யிரவியாலுல் பித்தகாங்கை சிரசு நேத்திரம் யிவைகளில் நோயுண்டாகும்.

சந்திரனுல் முகம் * சரம் யிவைகளிலும் ஜலசம்பந்த கப சிலேஷ்பனு தி நோயும் குசனுகில் மார்பு கோள் யிவைகளில் வலிமுதலிய எரிவு யிரணதி பின்பாரிசங்களிலும் கொடுக்குமென்றும்.

---

* சரம் – தொண்டை.

புதனுகில் சைத்தியம் சித்தப்பிரமை ரோகமும் இடுப்புநோய்களைக் கொடுக்கப்படுவளென்றுங் கொள்க.

குருவாகில் சிலேத்தமாதி சித்தப்பிரமை உதரநோயும் சுக்கிரனுகில் குறியிடம்அடிவையிறுகளிலும் சோதி சலரோகமும் சனியாகில் கால்நோயும் பித்த வாதம் முதலிய அண்டநோயும் இராகு வாகில் *சூத்திர முதலிய சைத்திய புத்தமூலாதி நோயும் கேதுவாகில் பலவகை சத்துருநோய்களும் விரண இரக்த நோய்களையுங் கொடுக்கப்படுமென்பதரம்.

இரவியானுல் பிதுர்வம்ச பந்து விரோதமும் இராசாக்களும் சந்திரனுகில் மாதுருவகையாற் சத்துருத்வம் வைசியர்களாலும் குசனுகில் க்ஷத்திரியர் ஆந்திரர் முதலிய சத்துருவும் புதனுகில் வைசிய சத்துருவும் ராசசத்துருவும் சுக்கிரனுகில் பெண்சத்துருவும் மேலான சபதியினும் சனியானுல் கீழ்குலம் அன்யசத்துருவும் இராகு கேதுவாகில் நீச சத்துருவையும் உரைக்க வேண்டும்.

இராசிகளுக்கு யிசைந்தபடி சத்துருக்களையும் (கி, கூ) குரு சுக்கிர க்ஷேத்திரமாகி மேற்கூறிய சத்துரு ரோகாதி ஜீவசரீராதிபர்களிருக்கில் யிராசப் பிரபு புத்திரசத்துருவும் பிராமண விரோதமும் புதன் சந்திரன் வீடானுல் அவை யிராச சத்துருவும் அந்த யிராசி அதிபதிகளுக்குரிய சாதியான சத்துருக்களையும் ரோகங்களையும் கூறல்வேண்டும்.

இவைகளுக்கு கணிதமாவன

சத்துரு ரோகாதிகளுக்கு முன்கூறிய ஜீவவரீராதிபருடனும் அவ்வித ஸ்தானங்களிலும் (கூ) மிடத்ததிபதி இவர்களுடனுங் கூடிய கிரகவெண்களை பெலனுக்கிசைந்தபடி அந்தந்த இராசி யெண்களாற் பெருக்கியதை (கி-ல்) கழித்த சேஷத்திசைந்த சாதி சத்துருவென்றும் (கூ-ல்) கழித்த சேஷம் வாதம் பித்தம் சிலேட்பணமென்றும் ரோகமும் சதை தோல் எலும்பு இவ்வித சம்மந்த வியாதிகளென்றுங் கூறல்வேண்டும் அந்தந்த தொகைகளை தனித்தனி (கூ-ல்) கழித்த சேஷம் புத்தியிலும் யித்த திசாபுக்தி காலங்களில் அவரவர்களுக்கு யிசைந்த நோய்களைக் கொடுப்படுமென்றுங் கண்டறிந்து சொல்ல வேண்டியது.

---

* சூத்திரம் - பில்லி, சூனியம்

களத்திர பாவ பலன்கள்

இலக்கினாதி சப்தமத்தையும் அவ்வதிபனையும் சுக்கிரனையும் இவை களுக்கு சப்தமாதிபதி நின்ற ஸ்தானாதிபதி யினையுங்கொண்டு களத்திரபாவங் கூறல் வேண்டும்.

இந்த களத்திர பாவத்திற்கே சுக்கிரனுக்கு ஏழாமிடத்ததிபதி இருக்கு மிடஞ் சீவனென்றும் இலக்கினாதி சப்தமாதிபதி நின்ற ஸ்தானாதிபதி சரீர மென்றும் பெயராகும் லக்கினத்துக்கு ஏழாமிடத்ததிபதி குரு முதலிய சுபக் கோளாகியும் சவ்யசக்கர பலத்துடன் சுக்கிரன் முதலியோருடன் இவருக்கு இரண்டு பக்கங்களிலும் பாம்பு குசன் சனி முதலிய பாவரின்றியும் வலுத்தும் சுப சம்பந்தம் கேந்திர கோணந் தனக்குரிய சுபட்சேத்திர பலத்துடனிருக் கினும் நோக்கினும் சந்திரன் புதன் சுக்கிரன் பாவரில்லாமல் சீவசரீர ஏகாதி பத்திய பலனுகி சுட்சேத்திராதி மித்துரு க்ஷேத்திர கெதியிலிருக்கில் ஜாத கனுக்கு தாரமொன்றும் மேலான குலமும் பிரபல சுகசௌக்கிய யோகமுந் தனதானிய கிரகவாகன பலிதமும் பெற்ற களத்திரவகையால் யோகமுண் டென்றும் இதில் சுக்கிரனும் பூர்வபட்ச சந்திரனுமாகில் மிகவும் மேன்பாடா கிய பிரபலத்துடன் வாழ்வனென்றும் மேன்மையான ரூபகளத்திரம் வருமென் றும் சீவசரீராதிபர்கள் பாவரானலும் பகை முதலிய க்ஷேத்திரம் பாவர் மத் தியிலிருக்கினும் நோக்கினும் அல்லது சுக்கிரன் களத்திர ஸ்தானாதிபனெரு வனுகினும் அவருடன் பாவர்களிருக்கினும் அங்ஙனமாகிய பாவர் பகை க்ஷேத் திரம் பாபட்சேத்திர மானலும் தாரமிரண்டலாது வெகுதாரமென்றும் இதில் சீவசரீராதிபர்கள் இரவியாகினும் பலவகைப் பாவருடன் கூடினும் இரவிபகை சத்துருட் சேத்திரமல தவருடனுங் கூடினிற்கினும் அங்ஙனமாகிய இடங்கள் (சு, எ, கக, உ, அ) ஆகினும் துலாம் மகரம் கும்பங் கடகங் கன்னி இவை களில் புதன் கூடி நிற்கினும் பிதுர் வம்சத்திலும் (உ) முதலிய பகுதாரமுடை யவன் சாதகனுக்கும் இரண்டு தாராதி பகுதார விவாகனென்றும் பாலிய வய திலேலே கிழக்கு வடகிழக்கு இந்த திசையினின்றுந் தாரம் வரும் அந்த தாரத் துக்கு தேகாரிஷ்ட ரோக துன்பமுடைமை யென்றும் அறிக இரவி சாஸ்திர விராசியிலும் சீவசரீரானலும் பகை முதலிய கிரகமின்றி தனித்தாலும் தனக் குரிய சுபர்கூடிப் பகை முதலியது மில்லாதிருக்கில் சாதகனுக்குத் தாரமொன் றென்றும் தார மனுகூலியுமாவள் சமமானபகை நீசக்கோட்கள் கூடினலும் அல்லது பார்த்தாலும் சாதகன் களத்திரம் கோபிரோயியாய் அக்குத்திய விஷய பிரவேசித முடையவளாய் வாழ்வளென்றும் ஜாதகனுக்கு முன்னமே தாரநாச முஞ் சொல்லவும் வேண்டும் இதில் இரவியானவன் (க, ங, டு, சு, ஙு) இந்த ஸ்தானத்திலும் மேஷம் மிதுனந் தனுசு விருச்சிகம் யிவைகளில் நின்றுஞ் சீவசரீராதிபர்களேக் கூடினும் அவர்கள்தனக்குரிய சுபரானலும் பாவரானலும்

இணையுள்ள கிரகமாகில் சாதகனுக்கு தீர்க்க தாரமொன்றென்றும் மற்றும் அன்னியவகை சம்பந்த முடையவ னென்றும் பலவித மேன்பாடுகளுஞ் சுகசௌக்கிய மில்லாத தாரமாகி வாழ்வனென்றும் பற்பல இடசஞ்சாரமும் உண்டாகும் இருவகை சுபருடன் கூடினும் தாரமிருக்க தாரமுள்ளவன் அவசரமானால் விரைவில் விவாகமும் சீக்கிரத்திலேயே களத்திர நாசமென்றும் பலவித மேன்மைக்குரிய வகையினால் கஷ்ட நஷ்டமு முண்டாகு மென்க அவை ஸ்திர விராசியாய் சுபட்சேத்திர பெலத்துடன் இருக்கில் சாதகன் பிரபலமான ஒரே தார முளனுவன் பாபட்சேத்திரமானால் காலதாமத விவாகம் விவாகபங்கம் இவ்வித பலவகை வருத்தமு முண்டாகும் உபய விராசியாகினும் பலவகை தார போகன் ஸ்தான பேதமான தாரனென்றும் தெற்கு தென் மேற்கு இவ்வித திசை சமீபங்களிலில்லாமல் மிகுதூரத்தில் அன்னிய வகையாய் தாரம் வரும் அதுவும் அயல்வகை யாறேயாகும் ஸ்திரமானால் வடக்கு மேற்கு தூரத்தில் தாரமின்றி சமீபமான இடத்தில் தாரம் வரும தூரத்துக்கு அடங்குவன் சரமாகில் தெற்கு தென்மேற்குத் திசை தாரமானது தேகாரிஷ்ட முடைய தாகி வருமென்றும் இரவி சிங்கம் மீனம் விருஷப மிந்த இராசிகளிலும் (ஐ, கூ) இவ்வித யிராசிகளான யிடங்களி லிருக்கினும் சனி புதன் முச்லியோரைக் கூடினும் அவை ஸ்திரவிராசிகளல்லது நீச வீடானாலும் தாரம் பலவகைக் காலத்திலு முடிவின்றி யடைவ னென்றும் பலவகை வருத்தமாகிய பலனைக் கொடுக்கப்படும் சரமானால் தாரமிரண்டென்தும் உபயமாகில் பலதாரமென்றும் சுபர் கூடினும் நோக்கினும் ஷ தாரமூலிய பலவகை வருத்தங்களையும் அடைவனென்றும் மனக்கவலைகளையுஞ் சத்துத்துவ தாரமாகி இவளை இழந்து விடுவ னென்றும் அறிய வேண்டும்.

சந்திரன் சுக்கிரன் புதன் சிவசரீராதிபராகி புதன் சனி பாம்பு இவ்வித க்ஷேத்திர வாசமானால் பலவகை வருத்தமுங் களத்திர மூலிய துக்கசோகமும் அவற்றி லிருப்பவர்களுக்குப் பகை நீசட்சேத்திர வாசமானாலும் அவையே களத்திர ஸ்தானமாக வந்து மேற்கூறியவர்கள் அந்த ஸ்தானங்களி லிருந்தாலும் அவ்வீட் டதிபரைக் கூடினாலும் தாரமிரண்டு முதலிய பலவகைத் தாரலாபமுடையவன் சனி குசன் முதலியவர்கள் பாவராகிக் கூடினும் அவர் சரவிராசியாயிருக்கில் ஸ்வய ஸ்தானத்திலும் 'வடகிழக்குத் திக்குகளிலும் தென் மேற்கிலும் இரண்டுவித தாரத்தை விவாகஞ் செய்வனென்றும் அந்த தாரமூலியமாக சில வகைப் பொருளுந் தனலாபமும் மேன்மையான தாரமாகினும் சாதகனிடம் போக இச்சை யடையான்; பற்பல இடத்திலும் அடையவெண்ணுவள் புத்திரரின்றியும் வருந்துவள் அதிகாமி மோகியாகி வாழ்வன் என்றறியவேண்டும். அவ்வித இடங் குரு சந்திரன் ரவி இவர்களின் வீடாகினும் தனக்குரிய பகை நீசமின்றி இருக்கினும் பாவரைக் கூடாமலிருக்கினும் ஏகதாரமே யுண்ட

யவன் சுகுனி தேவதாகி மேன்மையான பக்தியாகினும் தரித்திர மல்பமுடை யவ ளாலுலும் பின் பிரபல மேன்பாடுகளு முடையவர்களாகியும் வடமேற்கு தென் கிழக்கு இவ்வித திசைகளிலிருந்து தாரம் வரும் இவருடன் (உ) முத லிய சுபர்கள் பகை க்ஷேத்திரமின்றி சுபட்சேத்திர பெலத்துடன் இருக்கில் ஜாதகனுக்கு தாரமானது ஏகவிர்த்தியுடன் பிரபல குடும்பவதியாவள் அவை தெற்கு திசையிலும் உண்டாகும் மேற்கிலும் வரும் அவர்கள் பாபராகிக் கூடி னலும் பாபபகை க்ஷேத்திரங்களில் பாவரைக்கூடினும் தார மிரண்டுக்கு மேற் பட்ட தாரமென்றும் அவை மேற்கும் தெற்கும் இவ்வித திசையென்றும் அவர் களுஞ் சீவசரீராதிபருடன் பாவர் கூடினும் நோக்கினும் பகை பாபக்ஷேத்தி ரத்தி லிருக்கினும் பலவகை தாரமானது கருமை முதலிய அவரூபியாகியும் ரோகாதிபாதை யுள்ளவளாகியும் குடும்ப விரோதமுடையவளாகி வாழ்வ ளென்றறிய வேண்டும். தனித்து களத்திர ஸ்தானஞ் சுபட்சேத்திர பெலத் துடன் ஸ்திரவிராசி யாகில் தார மிரண்டு முதலிய பகுதாரமும் பரஸ்திரீ சம் மோகன் சுபபெலத்துடன் சரமுபயத்தில் சுபராகில் தாரமொன்றுடையவன் மிகவு மேன்மையுடன் வாழப்படுவ னென்க.

குசன் சனி குரு முதலியவர் வீட்டிலாவது பாம்புகளின் வீட்டிலாவது சீவ சரீராதிபர்கள் பலனற்று சுபராகினும் பலத்துடைய சனி குசன் பாம்பு இரவி யிவர்கள் கூடினும் நோக்கினும் பகை நீசட்சேத்திர கெதியுடன் (உ, கூ, எ, கக) இந்த இடங்களிலும் குடும்பம் சனியாகிலும் புதன் மிதுனமாகினும் குசன் மேஷ மாகினும் பாம்புகள் சீவசரீராதிபராகி மேலே கூறிய இடங்களி லிருக் கில் சாதகனுக்கு விவாகங் கிடையாது பலவாறுன வருத்தமும் குடும்ப விர்த்தி யில்லாமலும் வாழ்வன் இவ்வீட்டதிபருடனாவது குரு சுக்கிரன் யிரவி சந்தி ரன் க்ஷேத்திரவாசமாகி அவை (கூ, உ, அ) நீங்கிய யிடமாகினும் விவாகம் சீக்கிரமும் சுகமும் பலவானுகியும் அதிக மேன்மை யுள்ளவனுகியுங் கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சியுடன் ஒரே தார யுக்தனுகி கிழக்கு வடக்கு திக்குகளிலிருந்து தாரம் குடும்பம் சொந்த பாத்தியத்தையுடன் சமீபஸ்தானம் ரூப மேன்மை யான தாரமுண்டாகும். இவை பாபட்சேத்திரமானாலும் பாவரைக்கூடி னிற்கி னும் பலவகைப் பொருள் கஷ்ட நஷ்டமும் களத்திர விரோதத்தினால் பல வகை (உ) முதலிய தாரவம்சமாவன் ஓர் வகை தாரம் பரபுருஷ கெமனத்தை யுடையவளாவள் மற்றய புதன் சனி வீடாகி இவர்களைக் கூடினும் சீவசரீரா திபராகிக்கூடி யல்லது மேற்கண்ட ஸ்தானத்தி லிருக்கினும் இருனியாகியும் அவரூபியாகியும் புத்திர விஷயத்திற்காக (உ) முதலிய தாரக்களே யடைவ னென்றும் அவ்வித வகையாலும் தேகாரிஷ்ட ரோகக்கண்ட தின்பமுடையவ னுகியும் பலவகை வருத்தமும் அடைந்து தரித்திரவதியான தாரயோகனுகி பின்புத்திர விருத்தியில்லாமலும் துக்கம் அடைவன் சுபட்சேத்திர சுப சம்

பந்த திருஷ்டியுட னிருக்கினும் நோக்கினும் இவர்களின் மத்தியில் கூடினும் சாதகனுக்கு புத்திர விஷய மாகவும் பகை விஷயமாகியும் ரோக விஷயமாகியுஞ் செய்த தாரமூலமாக பின்னனுகூலத்தையுஞ் சுகத்தையும் பிரபலத்தையும் அடைந்து வரப்படுவனென்றும அறியவேண்டு மென்பதாம்.

களத்திரபாவ கணிதங்களாவன

சுக்கிரன் சுக்கிரனுக்கு ஏழாமிடத்ததிபதி யெந்த யிடத்திலிருக்கிறாரோ அந்த இடத்ததிபனுடனும் யிலக்கினத்திற்கு ஏழாமிடத்ததிபதி யெந்த வீட்டிலிருக்கிறாரோ அவ்வதிபனதில் நின்றவன் யிவர்களுடனும் லக்கினத்துக்கு ஏழாமிடத்தில் நின்ற கோள்களுடனுங் கூடிய கிரக எண்களைத் தனித்தனி சுபாசுப பெலன்களின் படிக்கு இராசி யெண்களையுங் கிரக வெண்களையும் பெருக்கிய தொகையை பலன்படி வைத்துக் கொண்டவைபோக மற்றய சேஷங்களை யவரவரின் பூரணமாகிய எண்களில கொடுத்த ஈவு சுக்கிரன் சந்திரன் குருவாகில் தாரம் மேன்மை யென்றும் புதன் சனி திருஷ்ணபக்ஷ சந்திரன் பாம்பு இரவி இவர்களின் ஈவில் (சு-ல்) (க) தாரவிவாகமும் மற்றவை பலதார போகமும் சனி பாம்பு தனித்தனி ஒருவருடனுங் கூடாமல் பாபராகி கொடுத்து வந்த ஈவாகில் விவாகமே கிடையாதென்றும் அறியவேண்டிய தென்க மேலே கண்ட தொகைகளில் சுபர்களின் எண்களாற் பெருக்கியதை (கு-ல்) கழித்த சேஷம்திசையிலும் வந்த ஈவை (நி-ல்) பெருக்கி (கு-ல்) கழித்த சேஷம் புத்தி காலத்திலும் களத்திர விவாக காலமென்றும் மேலே கண்ட தொகையுடன் அந்தந்த கிரகங்களுக்கு எட்டாமிடத்ததிபதி பாவரானவர்களின எண்களையும் மேற்கண்ட விதிப்படிக்கு (கு ல்) கழித்த சேஷந்திசையிலும் இதில் வந்த ஈவை (நி-ல்) பெருக்கி (கு-ல்) கழித்த சேஷம் புத்தியிலும் களத்திரமாக கருமங்களைக் கொடுக்கப் படுமென்றறிய வேண்டியது.

பிதுர் பாக்கியாதி பலன்களாவன

சூரியனையும் (க) மிடத்தையும் இவைகளுக்கு ஒன்பதாமிடத் ததிபதி நின்ற இராசிநாதன் எந்த வீட்டிலிருக்குமோ அவ்விராசியையும் அவ்விராசி நாதனையுங் கொண்டு பிதுர் பாக்கியாதி பலன்களைக் கூறல் வேண்டும்.

ஒன்பதா மிடத்ததிபதி நின்ற இராசிக்கு ஒன்பதா மதிபதி யெவனோ அந்த கிரகம் சேனென்றும் இரண்டாமிராசி சேவராசி யென்றும் ஐந்தாமிடத்ததிபதி நின்ற யிராசி நாதனிருக்கு மிடம் சரீர கிரகம் சரீரவிராசி யென்றும் பெயராகும்.

இவ்விதஞ் சேஷசீராதிபர்கள் கேந்திரகோண சுபபலத்துடன் சரமுபய மிந்த இராசி பெலவான்களாகியும் பிரபல பெலத்துடனு முடையவர்களாகியும் இரவி சனி நீங்கியவர்களாகி யிருக்குமாயின் ஒன்பதாமிடம் யிவைகளான ஸ்தானங்களில் அதற்குரிய சுபட்சேத்திர கெதிகளுடன் பலமுற்று ஜிற்கினும் நோக்கினும் பாப வீட்சண்ய மத்தியில் இல்லாதிருக்கினும் சாதகனுக்கு அதிகமேன்மையான தனலாப யோகம் பூர்வார்ச்சித வித்திகளும் அதிக பிரபல வாழ்க்கைகளும் மனோவாக்கு செய சித்திகளும் பிதா செல்வாக்கும் விருத்தா வஸ்தை வரையுள்ள ஆயுளுடைய பிசாவாகி பிரபல விருத்தியுடன் வாழப்படுவ னென்றுங் கொள்க

அவைகள் அசுபகேஷத்திரமாகி அசுபபெலத்துடன் பாபரைக்கூடி மத்தியகெதியில் பாபவீக்ஷணிய மாகினும் பகை நீசக்கோளாகியும் சேஷசீராதிபர்கள் பகை நீசாகி பாபகேஷத்திர கெதியுடன் பாப பெலன் பெற்றும் சனி இரவியாக வரினும் பிதாவானவன் பாலிய காலத்தில் மரணம் குடும்பக்ஷயம் பல வகை வருத்த மடைவ னென்றும் மனக்கவலைகளும் யோகபாவக்குறைவுகளும் தனதானிய நஷ்டமும் இவ்விதங் கெடுதலான பலன்களை யடைவனென்றறிய வேண்டும். சேஷசீராதிபர் பெலமற்றும் பாபகேஷத்திர பாபராகின் பிதுர்பாலிய மரணமாகினும் பிதுர் பாக்கியாதி தனமேன்பாடு உள்ளவள் சேஷசீராதிபர்கள் தங்களுக்குரிய பெலன்களுடனும் ஸ்தானாதிபதி முதலானோர் பெலனற்றும் பகை நீசாதி முதலிய பாவங்களை அடையில் அவ்வித பிதுர்பாக்கிய முதலான வைகளை இழந்தும் பிதுர்மாத்திரஞ் சந்ததி விருத்திகளையும் தரித்திரரா யனுபவிக்கப் படுபவர்கள் இருவர்களும் பெலவானுகில் பிதாவும் ஆயுள்விர்த்திகளும் வம்சபிரபலமும் யோக மேம்பாடுகளும் அதிகமான சுகசௌக்கிய மேன்மைகளுடன் ஓர் வகைகளுக்குங் குறைவின்றி யனுபவித்து மிகமேன்மையாய் வாழ்வன் என்றும் இருவகையார்களும் பெலமற்றுப் பகை நீசாதிகளுக்குரிய விரோத பலனைப் பெற்று வாழில் பிதாருவினாலுஞ் சுகமில்லை யோகமுமின்றி வம்ச நஷ்டத்தையும் அனுபவித்துப் பலவகை நஷ்டமு முண்டாகு மென்றும் அறியவேண்டு மென்பதாம்.

சேஷசீராதிபர்களும் ஸ்தானம் ஸ்தானாதிபதிகள் ஸ்தானத்துள்ளோ இவ்வைந்து பெயருடன் குரு முதலிய சுபக்கோட்கள் இருக்கினும் அவ்வித ஸ்தானங்கள் சரமுபய விராசியாகி யவர்களுக்குரிய சுபபெலத்துடன் சேஷசீராதிபதி காரகாதி பத்தியம் பெற்றவர் ஸ்தானாதிபதி இந்நால்வரும் சுபராய் ($\frac{1}{4}$) பெலன்களுக்குக் குறையாது. பிரபல பெலவான்களாயிருந்து அவ்வித கேஷத்திரமான (உ, டு, எ, கூ) ஒன்று இவ்விடங்களாகியும் அவ்வித ஸ்தானங்கள்

மிதுனம் தனுசு சிங்கம் கும்பம் இவ்வித இடங்களாகினும் அவ்வதிபர்கள் சர கெதியிலும் பாபமத்திய சம்பந்த திருஷ்டி இல்லாமலிருக்கில் சாதகன் பிதா பிரபல ஐசுவரியவந்தனாகியும் பிரபல யோகவானாகியும் வெகுகாலமாயுள் விர்த்தியுடன் மிகவும் பிரபலவானாகியும் பிதுர்பாக்கிய விர்த்தியும் விருத்தாவஸ்தை வரை பிதுராயுள் விர்த்தியும் அதிக சுகத்துடன் யாவருக்கும் மேலாகி வாழ்வனென் றறியவேண்டு மென்பதாம்.

இதில் சனி புதனாகியல்லது சனி புதக்ஷேத்திரங்களாகி பெலனற்றாலும் பிதுர்பாலியத்து மரணமாவன் இத்துடன் முன்னான பிதுர்வம்ச சந்ததிக்கு தத்து மூலியவகையைப் பெறுவனென்றும் அறியப்படும் சுக்கிரன் சந்திரம் சீவ ராதிபர்களாகினும் பாபர் மத்தியனானாலும் அவை விருச்சிகம் மீனம் கன்னி துலாமிவைகளில் (ரு, உ, சு, அ, கூ) இந்த ஸ்தானமானாலும் பிதாவின் மற்றய தாரமானவை துதீயமுதலிய வெகு தாரவம்ச குடும்ப விர்த்தியுடையவன் பிதா கௌமாரவஸ்தையில் மரணமாவன் ரவி குசனாகிவரினும் யவ்வனத்தில் பிதா மரணமடைவன் பிதுர் வம்சம் சமவிர்த்தி யுண்டென்றும் பாம்பு முதலியோர் கூடிநிற்கினும் பெலமானாலும் பிதா பாலியத்திலேயே மரணமாகி விடுவனென் றறிய வேண்டும் பிதுர் வம்ச க்ஷயமுமாம் இரவியுடன் மேற்கூறிய அதிபதிக ளிருக்கினும் பிதாசிசு வுற்பவ காலத்தேயே மரணமாவன் பிதுர் பொருளதிக மில்லான் அல்பமுடையவன் என்றும் குரு முதலிய சுபராகின் பிதா விருத்தா வஸ்தை வரை பிரபல சுகசீவியாகிய பிதுரார்ச்சித விர்த்தியையடைந்து வாழப் படுவனென்றறிய வேண்டும் பாவர்கள் சுபர்களாகிப் பெலன பெற்றும சீவசரீ ராதி ஐக்கிய ஏகரானாலும்பிதா ஆயுள்விர்த்தியாகினும் தனவிருத்தியை அடை யப்பட மாட்டா னென்றும் சுபர்கள் பாபபெலத்துடையவராகினும் பெலமற்று இருக்கினும் தனம்பிதுாபாக்கிய பிரபலமானாலும் பிதா பாலியத்திலேயே மரிப் பனென்றும் அறியவேண்டும்.

(௪, ௰, கக, கஉ) இந்த ஸ்தானங்களிலாவது அல்லது மேஷம் விருஷம் கடகம் மகரம் இந்த இராசிகளிலும் சுபர் பெலத்து நிற்கினும் ஜீவசரீராதிபரா கினும் அவ்விடத்ததிபர்கள் ஜீவசரீராதி சுப பெலத்துடனிருக்கினும் சுபக்ஷே த்திர சுபபெல கெதியானாலும் பிதா அல்ப தனவந்தனாகினும் விருத்தகாலம் வரை ஆயுள் விருத்திகளுங் குடும்ப சுப சௌக்கியவானாகி மேன்மையோடு வாழ்வனென் றறிய வேண்டு மென்பதாம் இவ்வித ஸ்தானங்களில் சுபபெலத் துட னிருக்கினும் தரித்திர பிதாவே ஒழிய வேறு பிரபலமில்லான் ஆயுள்விர் த்தி யுண்டு சுபராகியும் அல்லது சுக்ஷேத்திர ஜீவசரீராதிபர்கள் ரவி குரு குரு க்ஷேத்திர வாசம் பெற்றிருக்கினும் நோக்கினும் பெலமான பூஸ்

திதியும் இராசமூலிய யோக சேனமும் வெகுதிரவாஞகி வாழப்படினும் பிதாவினுல் விரோதபாவம சாதகனுக்கு நேருமென்றும் அவற்றிற் குசன் சனி பார்க்கில் விருத்தாவஸ்தையில் பிதுர் மரணம் அதியோகமின்றி வாழ்வன் பிதுர் பாக்கிய விர்த்தி கிடையாதென் றரியவேண்டியது.

குரு சந்திரனுகில் பாலியமரணம் பிதா தனவந்த யோகவானுவ னென்றும் சுக்கிரன் புதனுகில் யவ்வன காலவயதில் பிதுர் மரணமாவன் சமவிஷய தனம் பிதுர்பாக்கிய முடையவன் என்றும் இரவி குசனுகில் கௌமாரவயதில் பிதுர் மரணமாகினும் தனப்பிராப்தி பூமிப்பிராப்தி முதலிய யோகவானுவ னென்றுங் கண்டறியவேண்டு மென்பதாம்.

பிதுர்பாவ குணிதமாவன

இரவியும் இரவிக்கு ஒன்பதாமிடத்ததிபதி னின்ற இராசிநாதனுடனும் இலக்கினுதிபதி ஒன்பதாமிடத்ததிபதினின்ற இராசிக்கதிபதியுடனும் மேற் கூறிய (கூ)மிடத்திலும் கூடிய கிரக எண்களே தனித்தனி பெலனுக்குறிய கிரக எண்களால் இராசி யெண்களேப் பெருக்கியும அவரவர்கள் பஞ்சபெல னுக் குரியவை போக பாக்கி யெடுத்துக்கொண்ட தொகையை (கூ-ல்) கழித்த சேஷம் திசையினும்வந்தாவை (நு-ல்) பெருக்கி ஒன்பதில்கழித்த சேஷம் புத்தியிலும் பிதுர் கண்டமும் கிரமப்படி இதில் கடையான திசைபுக்தி யெது வோ அதில்பிதுர் கருமமுமுண்டாகும் மேற்கண்ட இராசிக்கிரகங்களுக்கு (நு, ச) மிடத்ததிபதி யுடனுற்ற கிரகவெண்களே முன்போலவே கண்டுகூட்டி மேற்கண்ட ஒவ்வொருவாகளுக்கும் வந்திருக்கிற தொகைகளேயும ஒன்றுசேர் த்து தனித்தனி (கூ ல்) கழித்தசேஷம் திசையிலும்வந்தாவை முன்போலவே பெருக்கிக் கண்டறிந்த சேஷமும் திசா புக்தி காலம் பிதாவுக்கு யோகாவ யோகம் அதாவது பாபபெலத்தோர் எண்களாகில் யோகபங்கம் சுபபலத்தோ ரெண்களாகில் பிரபலஉத்க்ருஷ்டயோகவானுகி வாழ்வனென் றறியவேண்டிய தென்பதாம்.

ரவி பலவானுகி சுக்ரர்சுபட்க்ஷேத்திர ஸ்தானங்களில் பெலத்திருக்கினும் நோக்கினும் குருவசாத் (கூ) மிடத்ததிபதி குரு ரவியாகிய விவர்கட்கே சிவசரீ ராதி பனுனுலும் அவர்களுடன் கூடிய கிரகவெண்களுக்குரிய இராசியெண்க ளாற் பொருந்திய தெகைகையை (கூ-ல்) கழித்த சேஷமும் வந்தாவை முன் போலவே பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷமும் கண்டதிசாபுக்தி காலங்களி லெல்லாம் அப்தூர்ய சோமபவுண்டிரகாதி யாக எக்ஞங்களால் கீர்த்திபெறு வன் பாவராஞல் பரகூத்திராதியான கேவலமந்திர ஹோமங்களேப் புரி ந்து லிஷ்பல மடைவன் அதில் சனி பாம்பு குசனுகில் அக்கினியில் பிராணத்

தியா காதிக்குரிய கொல்லன் தட்டான் முதலிய கம்மியனுகி யெப்பொழுதும் அக்கினிமுன் தபசிகளைப்போல வாழ்வன் பொய்வேஷம் பூண்பன் புதன் முதலியோர் ஆகில் திருதிவைசுவ தேவாதி யெஞ்ஞம் செய்த பரிசுத்தவா னுவன் என்றறியவேண்டும் யிதில்ஜீவசரீராதிபர்பேதம் விரோத முதலிய வகையைப் மெறில் ஒருவகையானதையும் அடையாமல் கிராதக அதர்மியாகி வாழ்வன் பிறர்க்குப தேசிப்பவன் என்றறியவேண்டிய தென்பதாம்

கர்மராச்சிய பலன்கள்

குருவையும் குருவுக்கு தசமாதிபதினின்ற ஸ்தானுதிபதியையும் யிலக் கினத்துக்குத் தசமாதிபதினின்ற ஸ்தானுதிபதியையும் கருமாத் கருமஸ்தானுதி பதினின்ற வதிபதி ஸ்தான மிவைகளைக்கொண்டு கருமவிராச்சிய பாவ பலா பலன்களைச் சொல்லவேண்டும். கர்மத்திற்கு குருவுக்கு தசமாதிபதினின்ற இராசிநாதன் சரீரமென்றும் சென்ம வசாத் கருமாதிபதினின்ற ஸ்தானுதிபதி னின்ற இடத்ததிபன் கருமத்திற்குச் ஜீவனென்னுஞ் சென்மத் தசமாதிபதி னின்ற ஸ்தானுதிபதி இராஜிய பாவ ஜீவனென்றும் குருவசாத் தசமாதிபதி இராஜீயமாவ சரீரவென்றும் பெயராகும். மேற்கண்ட ஸ்தானுதிபதிகள் தூர்த் தானம் சனி சத்துரு நீச க்ஷேத்திரம் பாப சம்பந்த முடையவர்களாகி குரு முதலியவர்கள் பெலமற்றும் தசமத்தில் பாம்பு சனி முதலிய விவர்கள் சமான பாவர்களிருக்கினும் நோக்கினும் ஸ்தானுதிபதி ஜீவசரீராதி கரும ஜீவசரீராதி பர்கள் இருக்கினும் நோக்கினும் பாவர் மத்திய சம்பந்த திருஷ்டியுட னிருக் கினும் நோக்கினும் சாதகனுக்கு கருமசித்தையின்றி பாபகருமங்களும் மகத் தானதொழிலும புரிவனென்றும் பலவித வருத்த தக்கனுகி ஹீனகருமங்களைச் செய்யப்படுவனென்றும் பலவகையில் தன் சுயகருமங்களை யிழந்துவிடுவன் என்றும் மனதுக்கங்களும் பலவிதவகை அலைச்சல்களும் பொருட்சேதமு முண் டாகுமென்றும் அவ்வகை மூலமாய் குடும்ப அபிருத்தியங்களை யடையப்படு மென்றறியவேண்டும் யிதில் சுபர்கள் யிருக்கினும் நோக்கினும் அவ்விதமான சிலகர்மம் சித்தையோடு சிலநாள் செய்தும் சிலநாள் கருமசித்தை யினறியும் அடைவனென்றும் சிலநாள் அவைகளுக்கு விரோதமான கருமங்களையும அடைந்துவருன என்றும்கூறப்படும் மேலே கூறிய கர்மஜீல சரீராதிபர்கள் பலவான்களாகியும் பிரபலவானுகியும் சுபக்ஷேத்திர சுபக்கிரக கதியுட னிருக்கினும் நோக்கினும் பிரபல சுபராலுலும் மென்மையான கர்மசித்தை முதளான மேன்பாடுகளும் அதிக வனுகூலமும் சத்கருமச் செய்கைகளை யடைந்து வருவனென்றும மேலான வனுகூலபாகத்தையும் பிரபலசுகங்களை யும் அடையப்படுவ னென்றறிய வேண்டும் பாப சுபசம்மந்தக்களுடனிருக்

கினும் நோக்கினும் சாதகன் சிலகாள் சத்கருமியாகியும் சிலகாள் அசத்கருமியாகியும் வாழப்படுவனென்றும் கண்டறிய வேண்டும். இவைகளில் சுபபலனதிகமாகில் அதற்குரிய சுபபலத்தின் கரும சிரத்தைகளையும் பாபகிரகபலனதிகமானால் பாபத்தொழிலே புரிவனென்றும் கண்டறியவேண்டும். மேற்கண்ட சீவ சரீராதிபர்கள் பெலனற்றிருப்பது அல்லது ஸ்தானாதிபதிகள் பெலமற்றிருக்கில் கள்ளக்வஷமான கருமங்களைச் செய்து வரப்படுவனென்றும் பலவித மனோவருத்தங்களையும் அடையப்படுவனென்றும் அறியவேண்டுமென்பதாம்.

இதில் தசமாதிபதி குரு ஜீவ சரீராதிபர்களிலிவர்கள் பெலவானாகியுஞ் சுபராகியும் கேந்திரகோண மானதிலும் ஜீவசரீராதிபரேகராகியும் பெலமுற்றும் மேன்மையானோராகியும் அவ்வித க்ஷேத்திரம் தனுசு விருஷபம் சிங்கம் இவைகளாகியும் பெலத்தும் பாபகிரக சம்பந்த திருஷ்டி இல்லாமலுற்று அவை (உ, ரு, நி. ம, க) இவ்வித இடங்களானாலும் அவற்றிற் ஜீவசரீர ஜக்கிய பத்தியமுடையவர்கள் இரவியானால் கல்ல கருமங்களையுஞ்செய்வதுடன் சிங்கம் மேஷம் தனுசு இவைகளில் இரவி பெலத்துடனுமிருக்கில் இராசசீவன் பிரபலவாழ்க்கையும் பலருக்கு வதிகாரியாகி வாழ்வனென்றும் அறியவேண்டும் அவை சீவ சரீர யிடங்களுக்கு துர்த்தானமானால் சிலகாள் இராஜ சீவனமிருந்து பின்னஷ்டத்தையடைவ னென்றும் அவைகேந்திர கண்டகஸ்தானமாகில் சீவனத்திலுற்றே மரணமாவ னென்றும் (சு, அ) இடமானால் ஜீவனத்திலேயே தெண்டனையும் கொடுங்கோல் துன்பமுமடைவ னென்றும் அவையினால் மரண சமான பாதைகளு மூண்டாகும் (க, நி. கூ) இவ்வித யிடத்திலாவது ஸ்தானாதிபதிகளாவது சுபர்களாகியிருக்கில் பலவிதமான வருத்தங்களின்றி மிகவும் மேன்மையான இராஜஜீவனத்தாலதிகமான இராஜயோகத்துடன் பிரபலமான மேன்மையுடையனும் பிரபுத்துவங்களையடையக்கடவன் அவை உச்சகேந்திரயிடமானால் அநேகருக்குத் தலைவனாகியும் சுபக்ஷேத்திரமானால் சிலருக்குத் தான் தலைவனதலன்றியும் ஒருவரின் கீழ்ப்படிந்து வாழப்படுவனென்றும் அறியவேண்டியது. மேலும் (ச, கூ, எ, அ) இந்த ஸ்தானயிடமும் விருஷபம் கன்னி துலாம் மீனம் மிதுனம் கடகம் இவையாகியும் இதில் புத சந்திரக்ஷேத்திர மல்லது விவருடன் கூடில் வியாபார மூலமானதிலும் குசன் சுக்கிரனாகில் பயிர்த்தொழிலொன்றும் மேற்படி கிரகங்கள் குரு இரவியுடனாவது அவர்களின்றனது வீட்டிலாவதிருக்கில் இராஜமூலியமான ஜீவனமும் துலாத்தில் கேதுயிருக்கில் வியாபாரத்தினாலும் சனி இராகிருக்கில் கீழ்க்குலத்தொழிலாலும் புதன் குரு விருப்பது மீன கன்னியாகில் வித்தை முதலானவைகளாலும் சீவனமுடையவனென்றும் சந்திரன் தனித்து மேற்கூறிய ஸ்தானகெதியிலிருக்கில் வியாபார

* கிரக மூலமல்லது மூலமென்றால் எந்தபாவ சீவசரீரங்கள் காண எக்கிரகம் வருகிறதோ வந்தக்கிரகமும் இருக்குமிடமும் மூலமாகும்.

மும் இராஜாங்க ஜீவனமும் உண்டாகும் மேற்கூறியவர் குரு இரவியின்வீட்டி லிருக்கில் இராஜாங்கமூல ஜீவனமென்றும் குசன் புத க்ஷேத்திர மல்லது இவ ருடன் கூடினலும பலவிதமான தொழிலும் சிலவித்தை முதலானவைகளும் பலவித தந்திர மந்திராதி வித்தைகளால் மேன்மையடைவன் அவர்கள் துர்த் தான கெதியுடன் இருக்கில் வித்தையின்றியும் பலவித வாத முறையறிந்து பொய்த் தொழிலுடன் ஜீவனம் புகுவனென்றும் சுபக்ஷேத்திர பெலனுகில் மேன்மையான கல்விகளும் சயனாதி சுகசௌக்கியங்களும் பிரபுத்துவங்களும் இவ்வித மேன்மைக ளுண்டென்றும் தனாபமும் குசனுகில் பூமி மூலிய ஜீவ னம் மிக்க மேன்பாடுகளும் சுபக்ஷேத்திர பெலத்துடனிருக்கில் அதிகவிர்த்தி களும் இவர் குரு இரவி சனி சேத்திரமாகில் ஓர் பிரபுவினுக்குட்பட்டு ஜீவ னஞ்செய்வன் இவர் வீட்டிலவர் மாறியிருக்கில் சாதகன் பிரபுத்துவத்துடன் வருமை இன்றி பிரபல யோகமும் அடைவனென்றும் அதிக சுகசௌக்கியங் களும் மேலை பிரபலமும் புதன் கேந்திர திரிகோண பெலத்துட னிருக்கில் பலருக்கு மதிகார புருஷனுகியும் ஸ்திரீமூலிய தனலாப யோகவானுவான் குருவாகில் சாஸ்திராதி வேத மூலிய ஜீவனமும் அதிக மேன்மைகளையும் அடைந்து வரப்படுவ னென்றும் பிரபல சுக சௌக்கியங்களையுங் கூறுக பாவ ராகினும் பாவசேத்திர கெதியிலிருக்கில் பலவித கஷ்ட நஷ்டமும் அல்பவித் தையு முடைத்தாய் இலேசான சஞ்சாரஜீவனஞ் செய்வனென்றும் சுக்கிரனு கில் பலவகை வித்தையினுல் மிகவு மேன்மைகளும் வசியனுகி ஜீவனமும் சில காலம் வியாபார மேன்மைகளும் தனதானிய லாபமும் சுபபலன்க ளடக்கு மென்றும் பாப சுக்கிரனுனுல் ஸ்திரீவம்சமாகச் சில வியாபார மேன்மைகளும் இஷ்டசித்திகளும் சில அடிமையான ஜீவனமும் சனியாகில் மிகவுமேன்மை யின்றி அடிமைத் தொழில் தாழ்குல முயற்சிகளும் சிலவகையினுல் மேன்மை களும் இவை மூலமான ஜீவனமேன்மையின்றியு மறிக பாம்பு முதலியோராகி இவ்வித விராசிகளிலும் மேன்மையுள்ள கிரகத்துடனிருக்கில் ஜீவன மேன் மைகளும் உரித்தாய் வாழப்படுவனென்றும் பாபராகி யவர்களானுல் சிலவகை அல்பமான ஜீவனவடிமை மூலமாக ஜீவனஞ் செய்வன் சுபக்கிரகங்களானுல் அவ்வித வடிமை புகுந்து இருக்கினும் சாதகனுக்கு மேன்மையான தனபிரபல யோகமும் தனலாபமும் அவ்விதவகை மூலிய அடிமைக்குள் அதிகாரியாகிய வாழப்படுவ னென்றும் மிக்க மேன்மைகளுந் தனதானிய விர்த்திகளும் குடும் பத்தால் பலவகை வருத்தமும் குடும்ப மத்திமமேன்மைகளாகவும் அடைந்து வரப் படுவனென்று மறிய.

மேலே கூறிய கர்மாதிபதி முதலியவர் பிரபல சுபர்களாகியுங் கேந்திர கோண பலத்துடன் இராஜ்ஜிய ஜீவசரீராதிபதி பெலத்திருக்கினும் நோக்கி ஜம சாதகனுக்குப் பிரபலமான இராசத்துவ பூபதியாகி மேன்மைகளும் பிர

பல சுக சௌக்கியங்களு மறிக அவைகள் தனக்குரிய குருமுதலிய மித்திரு சுப சுக்ஷேத்திர உச்சாதி பிரபலமான விடமாகின் தானிய தனமேன்மைகளும் பிரபலபூமி தேசாதிபனுகி வாழ்வனென்றிய வேண்டும். இவ்வித இராசிகளிற் பெலமுற்றும் பிரபல விருத்தியுட னிருக்கினும் நோக்கினும் இவ்விதமான காலங்களில் பிரபல இராசயோகத்துடன் தனதானிய பிரபல விருத்திகளும் சில ராச்சியாதி பத்தியம் உண்டாகு மென்றும் இவ்விதமான கருமாதிபதி (ச) பெலனுக்கு மேலாகிற் பிரபல விருத்தியுடனும் பெலவானுகி குரூர விக்ஷேத் திரங்களிலும் இருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு சில கிராமாதி பத்திய மான இராஜாங்க மேன்மைகளும் தனதானிய விருத்திகளும் இராஜவல்லபனு வன் பாபராலுலும் ப்பக்ஷேத்திரந் திருஷ்டிகளுட னிருக்கினும் நோக்கினும் சாதகனுக்குப் பிரபல மில்லாத பூமி முதலிய கிராமம் உண்டென்றும் பாபத்து வமானுல் சாதகன் சில கிராமாதிகனுக்கு சொந்தமில்லாதவனுகி வாழப்படுவ னென்றும் சுக்கிரன் பூரணச்சந்திரன் பெலத்துடன் இருக்கினும் நோக்கினும் ஜீவசரீராதிபர்களாகியு மேற்கண்ட இராசிகளில் பெலத்திருக்கினும் நோக்கி னுஞ் சாதகன் சொந்தமான கிரகங்களுடனும் சொந்த கிராமமேன்மையுடனும் வாழ்வன் மேற்கூறிய கிரகங்கள் பலமற்று இருக்கில் சாதகன் பூமி முதலிய யாவையும் இழந்து விடுவனென்றும் பலவகை வருத்தமும் பலவித கஷ்ட நஷ்டங்களு மடைவன். குசன் புதனுகில் பூர்வார்ச்சித வீர்த்தியான பூமிகிரா மமானுலும் பலவித இருணம் பூர்வார்ச்சிதத்துடன் உண்டாகு மென்றும் சனி பாம்பு முதலியோர் இருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு பூமி முதலிய பூர் வார்ச்சித குறைவும் பலவகை நஷ்ட துன்பமும் பொருள் சேதமும் பலதனப் பொருளுண்டாகாமல் தரித்திரத்தை யடைவனென்றும் நஷ்டமும் பலவகை வருத்தமும் மனக்கவலைகளும் மத்திம பலனடக்கும் சாதகனுக்கு பலவிதப்பொ ருட்க ளிருணத்துக்குள் மூழ்கி விடுமென்றும் ஜீவசரீராதிபர்கள சனி முதலிய பாபராகி சுப பெலன் பெற்றிருக்கினும் நோக்கினும் சாதகன் முன்காலம் இரு ணசம்பந்த இராச்சியக் குறைவும் முன்னுண்டாகிப் பின் பிரபல யோகவா னுவ னென்றறிக முன்கூறிய ஜீவசரீராதிபதி சுபராகி பாபத்துவ க்ஷேத்திர மல்லது பாப வீட்சணிய தெதியாகினும் முன்பூர்வார்ச்சிதாதி ராச்சிய மூலமா னது முன் பிரகலத்துடன இருந்து பின் வயது காலம் இருணமுதலியதினு லும் சத்திரு இராஜாக்கள் முதலிய அதிருத்தியவகைகளாலும் பலவித விவா தங்களாலும் பொருளழிந்தும் திரிந்து பலவகை வருத்த மடைவனென்று கூற வும் இவர்களானேர் பாபரல்லது சுபராகினும் பிரபலத்துவமான பெலத்து டைய சரீர ஜீவாதிபதிகள் பாபராகி தெதியானுல் பிதிர் பூர்வார்ச்சித பூமி இவைகளாற் பலவித பிதுரார்ச்சிதம் பூர்வார்ச்சிதம் முதலிய வார்ச்சிதங்களுர்

தனதானியமும் நஷ்டமும் இரணமும் பலவித மேன்மைகளுங் குறைந்த பின் யோகவானுகி மிகவும் பிரபல சுகசௌக்கியங்களும் போனபொருள் பூமி முதலாகிய மேன்மைகளும் கிடைக்கும் இஷ்டசித்திகளும் அப்பொருட்களேத்தானே திருத்தி வாழ்வனென்றும் மிக்கமேன்மைகளோயுஞ் சுயார்ச்சித முண்டாகு மென்றும் சொல்லப்படும் என்பதாம்.

இலாப விரய பலன்

சுக்கிரனேயும் லாபாதிபதியான பதினேராமிடத்ததிபதி (கக) மிட மிலைகளேயும் இலைகளுக்கு பதினேரா மிடத்ததிபதி யெந்த இராசியி லிருக்கிறனே அவ்வீட்டதிப னின்றதைக் கொண்டு லாபமுரைக்க வேண்டும் சனியும் லக்கினுகி பனிரெண்டாமிடம் அந்த இடத்ததிபதி இலைகளுக்குப் பனிரெண்டாமிடத் ததிபதி னின்ற இராசிநாதனேக் கொண்டு விரயபலன்களேயுங்கண்டறிய வேண்டியது.

பதினேராமிடத் ததிபதி னின்ற இராசிநாதன் லாபத்திற்குச் சீவனென்றும் லாபாத் லாபத்துக் கதிபதி னின்ற இராசிநாதன் சரீரமென்றும் பெயராகும் இவ்வித பெலாபெல மூலமாக லாபபாவத்தையும் பன்னிரண்டா மிடத் ததிபதி னின்ற இராசிநாதன் எந்த விடத்திலிருக்கிறனே விரய ஜீவனென்றும் பன்னிரண்டுக்குப் பன்னிரண்டா மிடத்ததிபதினின்ற இராசிநாதனேக் கொண்டு விரய சரீரமென்றும் பெயராகும் குரு வசாத் பனிரெண்டாமிடத் ததிபதி னின்ற இராசி நாதனேக்கொண்டுள்ள ஸ்தானாதிபதி ஜீவனுதி வுத்தி யோகங்களுக்குச் சீவனென்றும் குருவசாத் லாபாதிபதி னின்ற ஸ்தானாதிபதி ஜீவன விஷயாதிகளுக்கு சரீரமென்றுங் காணவேண்டியது.

இவ்விதம் முன்கூறிய லாபஸ்தானமதிபதி ஜீவ சரீராதிபரிவர்கள் பெலத்துடன் கேந்திரகோணந் தனக்குரிய சுபபெல சேத்திரங்களில் யிருக்கினும் சுபஸ்தலவாசராகியும் பெலத்தும் ஜீவசரீர ஐக்கிய பத்திய பலன்களுடனிருக்கினும் நோக்கினும் இதற்கு விரயாதிபதி பெலமற்று மிருக்கில் சாதகனுக்கு தனவிருத்தியும் பிரபல சுகங்களுடன் ரொக்கதன முடையவனுகி பிரபல கீர்த்தியடைவ னென்றும் அபகிருத்திய செலவில்லாம லிருக்கப்படுவ னென்றும் மேன்பாடுகளு முண்டாகும் அவர்கள் சுபராகினும் பாபபெலத்துட னிருக்கினும் நோக்கினும் ஜீவசரீராதிபதியாகிய லாபாதிபதிகள் பெலமற்று யிருக்கினும் நோக்கினும பலவகையான ஜீவனத்தாழ்மையும் பொருள் சேதமும் பல வகை வருத்தங்களும் இருணசம்மந்தமான வருத்தமும் தரித்திரனுகி பரதேச வாசியாகி விடுவன் விரயாதிபதி சுபனுகினும் லாபாதிபதி சனி முதலிய பாப சமான மூடைவர்களாகினும் பெலமற்று இருக்கினும் பூர்வார்ச்சித இருணத்தி

டனுந் தனலாபமில்லாமல் விரயமே அதிகப்படும் பல இடஞ்சஞ்சரிப்புகள் உண்டாகுமென்றும் மனக்கவலை யடைவன் லாபவிரயாதிபதி ஒருவனாகியும் பாவரானால் பொருளுமில்லான் செலவுமில்லா மற்றய கிரகங்களாகிச் சுபராகினும் நோக்கினும் மிருககினும் சத்விஷய விரயமும் உண்டாகும் பிரபலமான வியாபாராதி பலவகைச்செல்வ யோகவானாகினும் மனக்கவலையுடனுறைவன் என்பதாம்.

லாபவிரய கணிதங்களாவன

லாபஸ்தானத்தையுடைய கிரகபெலனும் சீவசரீராதிபர்களுடனும் உரிய பெலாபெலக்கிரங்களுக்குரிய வெண்களையும் இராசியெண்களையும் அவரவர்களுக்கு உச்சவிராசியாகில் பெருக்கியும் ஆக்ஷி இராசியாகில் (௩-ல்) (௨) பங்கு எடுத்தும் நட்பாகில் அதர்க்குரியபெலனில் அரைப்பங்கெடுத்து கிரக பெலவெண்ணிற்கூட்டியும் பகையாகில் நாலில் ஒரு பங்கும் நீசமானால் கிரக வெண்ணிலயே முழுவதையுந் தள்ளுபடி செய்து கூட்டியும் கொண்டகிரக வெண்களை (௯-ல்) பெருக்கி (௰-ல்) கழித்த சேஷம் புக்த்திகளினும் லாபமதிகமென்றும் விரயாதிபதி முன்கூறிய மூலமாக சீவசரீராதி பெலன்களையுங் கூட்டி (௯-ல்) கழித்த சேஷம் திசாபுக்தியில் விரயமதிகமென்றும் இதில் விரயஸ்தான மதிபதி ஜீவசரீராதிபதி யவர்களின் பெலனெடுத்தும் சம்பந்த பல முதலியதை ஒன்றுசேர்த்து (௰-ல்) பெருக்கி (௰, ௧-ல்) கழித்த சேஷம் மேலே திசாபுக்திகாலங்களில் இவளவு மிச்சமான பங்கு கம்மியானால் ரொக்கதன முடையவனென் றறியவேண்டும் மேற் கண்ட விரய சீவ சரீரமூலமான திசாபுக்தி காலங்களில் தேசாடன முயற்சி வெற்றிகளும் பலவித சுகபலன்களுங் கொடுக்குமென்றறிய வேண்டுவ தென்பதாம்.

மகரலக்கின குணாகுண பலன்கள் சொல்லுவ தர்க்குமுன் திசாபுக்தி யோகாவயோக பலன்களாவன

மகரலக்கினத்தில் ஜெனித்த ஜாதகனுக்கு சுக்கிரன் புதன் இருவர்களும் யோக காரகர்களென்றும அவ்விதம் யோககாரர்களானாலும் அவர்கள் திசையி லொருபாகத்தில் அல்பக் கெடுதியான பலன்களைக் கொடுக்கப்படுவர்களென்றும் புதன் சுக்கிரன் இருவரில் புதன் விருஷபங் கன்னிகும்பம் யிவைகளிலும் சுக்கிரன் விருஷபம் மீனங் கடகம் மகரம் யிதிலிருக்கில் இயல்பான ப்ராபலிய யோககாரகர்களென்றும் அளவிடக் கூடாத பிரபலயோகங்களையும் செயத்தையுங் சிரகவாகறி பூமிகன்று காலி நிதி நிக்ஷேபம் புத்ர களத்திர இராஜயோக வதிகாரங்களை யளவிடாமற் கொடுப்பார்கள் புதன்மாத்திர

மாகில் அரைவரிசை பலன்தான் கொடுக்கப்படுவ னென்றும் மிகுதியான பிர பலமடையான் இவருக்கூறி லுண்டாகுமென்னினும் இதிலும் மகரம் விருஷ பம் கடகம் துலாங் கும்பம் இவைகளில் மேற்கூறியவரிருக்கினுமல்லது அவ்விராசிகளில் தனித்தாலும் அவ்வித யிடங்களானது அவர்களுக்கு உச்ச கேந்திரகோண சுபக்ஷேத்திரமாகில் அதிகயோகத்தையும் குஜன் சந்திரன் சனி இராகு குரு இவ்வித புக்திகளிலுங் கொடுக்கப்படுவர்கள் யின்னமும் குசன் சந்திரன் கேது சனி இவர்களின்திசைகளிலும் இவர்கள் மகரங் கும்பம் மேஷம் துலாங் கடகங் கன்னி முதலிய சுபக்ஷேத்திர கெதியாகி பகை நீச மின்றி சுபபெலத்துடனிருக்கினும் அவர்களின் திசையில் சனி இராகு திசை பின்பாகமும் குசன் கேதுவும் பின்பாகமு முன்பாகமும் சந்திரன் முழுமையும் அதியோகமான இராசயோக பலனைக்கொடுக்கப் படுவர்களென்றும் பலவித தனதானிய சம்பத்துங் கிரகவாகனம் பூமி இராஜயோக முதலிய மேன்மை களையும் சனி யிராகு சுக்கிரன் புதன் குரு சந்திரன் சுயபுக்திகள் நீங்கிய இவ்வித புக்திகளில் பிரபல இராசயோகங் கொடுக்கப்படுவர்களெனன்பதாம் மற் றைய புக்திகளிலும் பாபங்களிலும் பலவித விவாதம் இராசவிரோதம் பொருள் சேதம் தேகநோய் கண்டம் பலவகை துக்கசோகவரிஷ்டம் களத்திரபுத்தி ராஜி குடும்பசூதகம் முதலிய கஷ்டபலன்களையே கொடுக்கப்படுவார்களென் றறிக. இவ்வித காலங்களை நிதானித்து உரைக்கவேண்டும்.

அவயோகதிசைகளாவன

சூரியனுடன் அல்லது சிங்கங் கும்பம் மிதுனம் துலாம் (கூ. கூ, அ, கூ கக) இவ்வித இடங்களிலாவது பகைபாபபெலத்தோர்களானவர் திசைபுக்தி களிலும் சனி திசைபுக்திகளிலும் சனி திசை பின்பாகமும் புதன்றிசையில் மற்றியபாக முதன்பாகமிவைகளிலும் பலவிதமான பொருள் சேதம் கலகம் துக்கசோகம் பொருள்நஷ்டம் ஸ்தானசஞ்சாரமும் பலவித கஷ்ட மனோதை ரோகபாதை இருணமிவைகளைக் கொடுக்கும் குருதிசையிலும் விசேஷித்து கொடுக்கப்படுமென்றும் அவயோகத்தன்மை முதனிருக்கும் நன்மையான வை யும் ஜீவனுதிபொருளுங் கைவிட்டிழக்கப்படுமென்றும் இவர்களே சுபராகில் விசேஷ யோக பலன்களாக நடந்துவரப்படுமென்றும் இதில் சுக்கிரன் ரவி இராகு கேது சனி இவர்களின புக்திகளிற் குறைவான நஷ்டபலன்கள் அடையப்படுமென்றுங் கண்டறிந்துக் கொள்க.

சாதகவரிஷ்டம்

குரு பாம்பு குசன் ரவி சனி இவ்விததிசையிலும் பாம்பு இரவி சுக்கிரன் சந்திரன் குசன் சனி இவ்வித புக்திகளிலும் பலவகை துக்கமும் ஸ்தான

பிருஷ்டம் பொருள் சேதம் தேக ரோகாதி கண்டதுன்பம் இருணதுக்க கிலேசம் இராச தண்டனைகள் சீவனுதிக் குறைவு பலகஷ்டபலன்கள் அந்தந்த திசாநாதனுடைய காலங்களி லுண்டாகும் (கூ, சூ, அ, கக, கஉ)பகை நீசாதி சத்துரு பாபட்சேத்திரங்களி லுற்றோர்களுமவற்றின் அதிபதி இவர் களின் றிசாபுக்திகளிலு மிதேபலனைக் கொடுக்கப் படுமென்றும் பலவகை வருத்தபலன் நடக்கும் மற்றய ஸ்தானாதிபதி காலங்களில் விசேஷ உத்தம சுகபலனடக்கு மென்றும் அறியவேண்டு மென்பதாம்.

மாதுரு வரிஷ்டம்

இரவிதிசை சுக்கிரன் இராகு சனி புக்தியிலும்
சந்திரன் குசன்றிசை பாம்பு குரு சனியிலும்.
குருதிசை பாம்பு சுக்கிரன் சனியனும்.
சனிதிசை சுக்கிரன் மதி பாம்பிலும்.

சுக்கிரன் பாம்பு திசைகளில் சந்திரன் பாம்பு சனி குரு புக்திகளிலு மாதுரு வரிஷ்ட துக்க கருமமும் வம்சகரும் சூதகம் பீடை பலவிதய கஷ்ட பலன்கள் கொடுக்கப் படுமென்று மறிய வேண்டு மென்க.

பிதுரு வரிஷ்டம்

இரவி குருதிசை பாம்பு சனியிலும்.
சனி இராகுதிசைகளில் சுக்கிரன் ரவி குருவிலும்.
சுக்கிரன்றிசை குசன் பாம்பு சனி புக்திகளிலும்.

பிருது கருமம் வம்சதுக்க கூயம் பொருள் சேதம் இவ்வித கஷ்ட பலன் நடக்கும்.

சகோதர வரிஷ்டம்

இராகுதிசை குசன் கேது குரு புக்திகளிலும்.
குருதிசை புதன் ரவி குசபுக்திகளிலும்.
கேது குசன்திசைகளில் சுக்கிரன் ரவி சுயபுக்திகளிலுங்.
சுக்கிரதிசையில் குசன் பாம்பு சனி குருவிலும்.

சகோதர துக்க வரிஷ்டம் பலவகை வருத்தங்கள் மனக்கவலை மேற்கண்ட சகோதரி சகோதர வழிகளில் கஷ்டம் பொருள் சேதாதி பலவகை வருத் தமும் சத்துருக்களால் துன்பமும் பரஸ்தல சஞ்சாரம் தனக்குறைவுகளும் இவ்வித வருத்தபலன் நடக்குமென்றுங் கண்டறிய வேண்டும்.

களத்திர வரிஷ்டமும் லாபமும்

சுக்கிரன் றிசையில் சனி புதன் சந்திர னிவ்வித புக்திகாலங் களத்திர லாபமுண்டாகும் ரவி குசன் குரு புக்தி களத்திரவரிஷ்டம் சந்திரன் றிசை சுக்கிரன் புதன் குரு களத்திர லாபம் சனி பாம்புகளில் களத்திர தோஷம் பாம்புகள் திசை பாம்புகள் சுக்கிரன் சனி களத்திர பீடையும் குரு சந்திரன் புதன் களத்திர லாபம் சனி திசை புதன் சுக்கிரன் சந்திரனில் களத்திரலாபம் சுக்கிரன் ரவி பாம்புகள் களத்திர தோஷமும் புதன் றிசைசுக்கிரன் சந்திரன் குரு விவர்களில் களத்திரலாபம் பாம்பு சனிகளில் களத்திர பீடையான காலங்களென்றும் அறியப்படவேண்டும்.

புத்திரலாப வரிஷ்டகால திசாபுக்திகளாவன

சுக்கிரன் றிசையில் சந்திரன் இரவி குருபாம்பு புத்திகளில் புத்திரலாப முண்டாகும் புதன் குசன் கேது இவ்வித புக்திபுத்திர வரிஷ்டமுண்டாகும் இரவி திசை பாம்பு சனி குரு இந்த புக்தி புத்திர தோஷமுண்டாகும் பாம் பின்றிசை குசன் சனி புதன் இந்த புக்தி புத்திரவரிஷ்டமுஞ் சுக்கிரன் சந்திரன் இவர்களின் புக்திகாலம் புத்திரலாபம் கேரும் சனிதிசை குருதிசை பாம்பு மதி குரு புதன் இவைகளில் புத்திரலாபயோகமும் இரவி குசன் புதன் பாம்பு களில் புத்திரவரிஷ்டங் கொடுக்கு மென்றறியவும்

மகரலக்கின குணகுண பலன்களாவன

மகரலக்கினத்தில் பிறந்தவன் தனக்குத் தெரியாத தாகவும் காணவிடத் திலும் மச்சமறுவுடையுவ னென்றும் நேத்திரம் நீள முடையவன் ஸ்திரமான புத்தியுடையவன் அபிமான முள்ளவன் சுக சரீரமுடையவன் சிவப்பு சரீரன் ஸ்திரீகள் மேற்பிரியன் பக்ஷி சேவ வஸ்துக்களே சங்கரிக்க யெண்ணமுள்ளவன்.

(ம-ல்) சுரம் முதலிய பாதையுண்டாம் (ச, அ, கு, உ) அன்ய தேசவாசம் (கூள-ல்) சர்பாதி விஷபாதை யுண்டாகும் ஆகையாலிந்த மகரலக்கினத்தைச் சுபர்கள் நோக்கில் ஆயுள் (சுள) வரை யுள்ளவனென்றும் கண்டறியவேண்டும் தைமாதம் கிருஷ்ணபக்ஷம் பஞ்சமி உத்திரட்டாதி ஞாயிற்றுக்கிழமை காலையில் பரமசிவஞுகிய கடவுளடியினைச் சேருவ னென்றுங் கண்டறிய வேண்டுவன வாம்.

மகரலக்கினத்தில் பிறத்தவர்களுக்கு முதலாவது ஆயுர்பாவ பலன்களாவன

சனி இரவி புதன் சுக்கிரன் குரு இவர்களையும் மகரம் சிங்கம் தனுசு இவ்வித இராசி கிரக பெலன்கள் மூலமாக பலன் சொல்ல வேண்டுவதாம்.

---

* மற்றோர் விதமாவன.

லக்கினாதிபதி லக்னம் அஷ்டமாதிபதி பாக்கியாதிபதி (கு) மிடம் (ம) மிடத்தாதிபதி (ம) மிடம் இவைகளைக் கொண்டு ஆயுர்ப்பாவ பலன்கள் கூற வேண்டிய தென்பதாம்.

சனி இலக்கினாதிபதி யிவரிருக்கிற ஸ்தானாதிபதி ஜீவனென்றும் எட்டுக்கு எட்டாமிடமான மூன்றாமிடத்தாதிபதி ஜன்மஸ்தானாதிபதி சரீரமென்றும் பெயராகும் சீவசரீராதிபரும் சனி லக்கினாதிபதி இவர்கள் (க, கூ, ம) இவை களிலும் மகரம் துலாம் விருஷபம் இந்த ராசிகளிலும் பெலவானாகியும் ஜீவசரீ ராதிபதி பிரபலமாகியும் கேந்திரகோண சுபட்சேத்திர பெலத்துடன் ஜீவசரீ ராதிபதி சனி குரு இவர்கள் சரஞ்சர மிவைகளாக மிகவு மேன்மையுட னிருக் கினும் நோக்கினும் சாதகனுக்கு மேன்மையான ஆயுளானது வருஷம் நூறு வரை யுடையவ னென்றும் பிரபலமான இந்த நான்கு கிரகங்களுஞ் சுபபெல த்துட னிருக்கிற்றான். மேற்கண்ட வருஷம் (ா-க்கு) மேற்பட்ட ஆயுளென் றும பெயராகும்.

அல்வீதமான கிரக மூலமாக மிகவு மேன்பாடுகளும் இராச சன்மான வெகுமான முடையவனாகி வாழப்படுவ னென்றுங் கண்டறிய வேண்டியது. இங்ஙால்வர் துர்த்தானபதை நீசாதி பாபரல்லது விரோதிகளாகி சனி கூடியல் லது சமசப்தம ஸ்தானங்களிலும் குருவுடன் சுக்கிரனும் கேந்திரகோண பாப ரும் (கூ. சு. அ-ல்) சுபரும் அவை பாபட்சேத்திரம் பதை நீசர் வீடானாலும் பல வகை வருத்தமும் பொருள் சேதம் தனதானிய நஷ்டம் பாலியத்திலேயே மாதம் (ம) வருஷம் பத்துக்குள் சாதகன் மாரகமாவ னென்றுங் கண்டறிய வேண்டியது.

மேற்கூறிவ ஜீவசரீராதி பதிகளும் லக்கினாதிபதி சந்திரன் மூதலியோர் கள் கேந்திரகோண ஸ்தானமாகிய (சு, எ, டி) இவைகளானது மேஷம் தனுசு கடக மிவைகளாகியும் சரராசி கதியிலேயே யிருக்கினும் சுபட்சேத்திர சுப பெலத்துட னிருக்கினும் நோக்கினும் பெலவான்களானாலும் சாதகனுக்கு மேன்மையான ஆயுள் வருஷம் (அசு) வரை யென்றும் அவ்விடம் ஸ்திரவிரா சியாகியும் பதை நீசபாபட்சேத்திர மானாலும் அசுப பாபசம்மந்த மாகினும் அவை மேஷம் சிங்கம் விருச்சிகம் முதலிய பாபட்சேத்திர மானாலும் ஜீவசரீ ராதிபர்களி லொருவர் பெலமற்று இருக்கினும் சாதகனுக்குப் பலவகை பாலா ரிஷ்டாதி பாதைகளும் வருஷம் (ரூஉ-க்)குள்ளாகவே மாரகமாகி விடுவனென் றுங் கண்டறிக.

அவை பெலனற்ற விடம் உபயமாகில் வருஷம் (சஉ-க்) குள் ஆயுள் தீர்க் கமென்றும் அவை ஸ்திரமாகி ஜீவசரீராதிபரை யல்லது லக்கினாதிபதியை குரு கூடி யல்லது குருவேயானாலும் இரண்டு சுபர் பெலத்து கேந்திரகோண

மாஞலும் சாதகனுக்கு வருஷம் (எஉ) வரை ஆயுளென்றும் அவ்விதஞ் சுக்கிர ஞுகில் வருஷம் (சுசு) வரை ஆயுளென்றும் புதஞுகில் வருஷம் (நிச) வரை யென்றும் பூர்ணசந்திர பெலஞுகில் வருஷம் (ஈ) என்றும் கூஷ்ண சந்திரஞுகில் பாலியம் வருஷம் (உநி-க்) குள்ளாகவே ஆயுளென்றுங் கண்டறிய வேண்டி யது. இவ்வித சுபபெலக்காரர்கள் பாபியாகி பகைநீச பாபட்சேத்திர கெதி யுடன் (கூ, சு, அ, ஙக, உ) இவ்வித க்ஷேத்திரத்திலும் விருச்சிகம் மிதுனம் சிங் கம் தனுசு மகரம் இவ்வித இராசிகளாகி பகை நீசாதி பாபபெலத்துடன் கூடி னிற்கினும் நோக்கினும் பாம்பு குசஞுகியு மல்லது அவர் சமான பாபிகளாகிப் பகைவருடனுற்றும் சீவசரீராதி பதியும் அவருற்ற ஸ்தானம் ஸ்தாஞுகிபதி இவ ர்கள் பெலமற்று இருக்கினும் பாபகெதியுடன் தனக்கு இணையில்லாத பாவ ரைக் கூடினுலும் சாதகனுக்கு பாலியவயதிலும் பாலாரிஷ்டம் உள்ளவயது (எ) மாதம் (எ-க்) குள்ளானதிலும் ஸ்திரவிராசியில் பெலமற்று இருக்கில் மேற்கண்ட வயசு மாதகாலுக் குள்ளாகவே மரணமும் ரவிவசாத் சீவசரீராதி பர் பாபபெலத்துடன் (அ, ஙக, எ-ல்) அல்லது (சு-ல்) இருக்கின் மேற்கூறிய பாபக்கோளாகின் சாதகன் பிதுரு முதலியவர்கள் அவருமவர் வய்சமுந் தனம் இழந்து விடுவனென்றும் சந்திரன் மாதுரு சீவசரீராதிபதி வசாத் மேற்கூறிய ஸ்தானங்களில் பகைபாவர் முதலியோரிருக்கினும் நோக்கினும் மாதுரு வம் சாதி தாய் முதலியோர்களுக்கே மரணாதி துக்கமும் பலவித வருத்தமும் சோக த்தையும் அனுபவிப்ப னென்றுங் கண்டறிய வேண்டியது. இவைகளும் மேற் கூறிய ராசிகளும் சரமாகி சீவசரீர வாயுளாதிபர்களுங் குருவும் பெலத்துடன் யிருக்கினும் மேற்கூறுதொழிந்த யிராசிகளாலுலும் சுபபெலத்துடனிருக்கி னும் நோக்கினும் வருஷம் (சுசு) வரை வாயுளும் மேற்படி கிரகங்கள் பாப பெலத்துடன் தாத்தான அதிகராய் சுபரொருவராகியிருக்கில் வருஷம் (சுஉ) வரை யென்றம் இருவகை சுபராகில் வருஷம் (சுக) யென்றும் சுபர் மூவரா கின் வருஷம் (நிஅ) யென்றும் நான்கு பெயர்களாகின் வருஷம் (சுசு) வரை யென்றும் பாபசம்பந்தஞ் சேர்ந்தாலும் அல்லது பார்த்தாலும் பாலியமான வரு ஷம் மாதம் (கூ-க்) குள்ளாகவே மரணமாவ னென்றும் பலவகை கஷ்டநஷ்ட பல னடக்கு மென்றுங் கண்டறிய வேண்டியது. அவை உபய விராசிகளாகில் பெருஞ் சுபபலன் ஒன்றுக்கு வருஷம் (நிச) யென்றும் மூக்கால் ஆகில் வரு ஷம் (சஅ) யென்றும் அரை பெலஞுகில் வருஷம் (உக-க்) குள்ளென்றும் கால் பெலஞுகில் வருஷம் (கஉ-க்) குள்ளென்றும் கண்டறிய வேண்டியது. முழுப்பாவராகில் வருஷம் (ககூ) மாதம் (ககூ-க்) குள்ளென்றும் மூக்கால் பார மாகில் தினம் (உஉ) அல்லது (உஉ) மாதத்துக்குளாகவே மரணமென்றும் அரை பாபராகின் மாதம் (உ) வருஷம் (ஐ-க்) குள்ளாகவே வாயுட்கண்டமும் இருவித பாபர்கூடின் சொன்னகாலத்தில் பாதி குறைத்துக் கண்ட நாள் மாதம் வருஷங்களுக்குள் சாதகன் மரணமாகி விடுவனென்றும் அறிய வேண்டும்.

ஆயுர்பாவ கெணிதங்களாவன

ஆயுர் சீவசரீராதிபதியுடனும் சலி அட்டமம் அவ்வதிபதி குரு லக்னம் அவ்வதிபதி யிவர்களுடனும் (கூ, ல-க்) குடையவர்க ளுடனுங்கூடிய கிரக பல சுபாசுபத்துக்குரிய வெண்களே இராசி யெண்களால் முன்போலவே பெருக் கிக் கண்டவைகளே ஒன்று படுத்தி (ரா-ல்) கழித்த சேஷம் ஆயுளென்றும் மேற்கண்ட யெண்களே தனித்தனி (கூ-ல்) கழித்த சேஷமும் வந்த ஈவை (நு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷமும் உள்ள திசாபுக்தி காலங்களில் தேகரோக கெண்டவுபாதிகள் நேரிடுமென்றும் கடையுள்ள திசாபுக்தி காலம் மாரகம் கொடுக்கப் படுமென்றும் மனதுக்கு வருத்தமும் மனக்கவலைகளும் உண்டாகு மென்றறிக

உ-வது தனகுடும்ப வாக்கு நேத்திராதி பலன்களாவன

சலி இரவி குரு இவர்களையும் இவர்களுக்கு இரண்டாமிடத்ததிபதியின்ற இராசி நாதனையும் இரண்டாமிடத்தையுங் கொண்டு தனபல னுரைக்க வேண் டியது.

குருவுக்கு இரண்டா மிடத்ததிபதி யின்ற இராசிநாதன் தனவகைக்கு சீவ னென்றும் இரண்டாமிடத் ததிபதி இரண்டுக் குடையவன் எந்த வீட்டிலிருக் கிறானே அந்த யிடத்ததிபன் சரீரமென்றும் இரவிவசாத் இரண்டாமிடத் ததி பதி யின்ற இராசிநாதன் நேத்திர பாவத்துக்கு சீவனும் சுக்கிரன் வசாத் யிர ண்டாமிடத்ததிபதியின்ற ராசிநாதன் வாக்கு பாவத்திற்கு சரீரமென்றும் குரு யின்ற ஸ்தானதிபதி சீவனென்றும் சொல்லப்படும்.

இவ்வித மறிந்தபின் அந்தந்த பாவங்களுக்குரிய சீவசரீராதிபர்கள் பல வான்களாகியும் கேந்திரகோண கெதியுடனும் சீவசரீர ஸ்தானங்களுக்கு கேந் திரகோண சுபட்சேத்திரத்திலும் (உ, கூ) இவ்விரண்டு ஸ்தானங்களிலும் குரு சந்திரன் முதலியோரிருக்கினும் சுப பெலத்துடன் வேறு யெவ்வித கிரக மிருக்கினும் பெலவான்களாகி னிற்கினும் நோக்கினும் ஸ்தானதிபதி சுபராய் தனக்குரிய மித்துரு சுபட்சேத்திர வாசஞ்செய்யினும் உடனுற்று வலது நோ க்க முடையவர் குரு முதலிய சுபராகின் விசேஷவாக்கு பலிதம் செயம் குடும் பவிர்த்திகளும் பலவிதமான தனலாப யோக சாதகனாகியும் மிகவு மேன்மை யுடன் வாழ்ந்துவரப் படுவனென் றறியவும்.

பாபபகை கேஷத்திர கெதியிலும் பெலமற்றிருக்கினும் நோக்கினும் சீவ சரீராதிபர்கள் தனக்குரிய சுபட்சேத்திர மில்லாமல் பகைகளும் பாபமத்திய

பாபட்சேத்திரமாகினும் சேவசரீராதிபர்களே வெவ்வேறுகி வீரோத முடையவ ராலுலும் மனதுக்குப் பலவகை தக்கமும் தனதாளிய விருத்தியின்றியும் மனக்கவலையுடனுங் குடும்ப கூடியத்துடனும் பலவகையான வருத்த முதலிய வகைகளே யனுபவிக்கப் படுவனென்றும் அந்தந்த பாவங்களுக்கும் அபாவமுண் டாகு மென்றறிக.

இனி ஒவ்வொரு விஷயங்களையுந் தனித்து ஆராய்ந்து ஸ்தான கிரகமூலமாகக் கூறப்படும்

மேற்கூறிய தன ஜீவ சரீராதிபதிகள் பெலவான்களாகி (க, எ, கூ) இவ் வித யிடங்களிலுங் கும்பம் கடகம் தனுசு மீனவைகளி லிருக்கினும் இவ்விடங் களி லிருக்குங் கிரகங்களுக்கு இரண்டாமிடத்ததிபதியின்ற ராசிகாதர்கள் கேந் திரகோண சுபட்சேத்திர கெதியுட னிருக்கினும் தன ஸ்தானுதிபதி பெலத்து மிருக்கினும் மேற்கண்ட சுப பலன்களோடு பெருஞ்சுபர்களாகினும் உச்ச சொட்சேத்திராதி வீடுகளில் பெலன் பெரினும் சாதகனுக்கு மேன்மையான கோடியாந்திர தனவந்த யோகனுவனென்றும் இவையில் ஐந்து கிரகங்களும் பிலக்காமல் அபெலராக இருவரும் மற்ற மூவரிலிருவர் சுபராகி ஜீவ சரீராதி பதி பெலக்கினும் சாதகனுக்கு அனேக தனமும் வாக்கு நாணயமும் குடும்ப விர்த்தியுடன் வாழ்வன் சகலபாக்கியமுங் கைகூடி வருமென்றும் மேற்கூறிய கிரகங்கள் சுபபெலனை சந்திரன் இரவி சுக்கிரனிவர்களாகி பெலத்து மேஷம் விருஷபம் கடகம் சிங்கம் தனுசு மீனம் இவைகளில் பெலவானுகி இவர்களே சேவசரீராதிபர்களாகி கேந்திரகோண இராசிகளிலிருக்கினும் சுப ரைக் கூடினுலும் பெலவான்களாகி வாழினும் சாதகனுடைய குடும்பவிர்த்தி இன்றி லட்சாந்திரத்துக்கு மேற்பட்ட தனமுள்ளவனுவன் அதிக இராசயோக வல்லப முடையவனுகி வாழ்வன் யென்றும் கீர்த்தி மூர்த்தி புகழ்ச்சிகளும் மிக வும் மேலாலுனுகி வாழ்வன் சனி சூசன் முதலிய பாவர்கள் இவ்விதசுபபெல த்துடையவர்களாகி இருக்கில் மத்திய காலத்தில் தன விர்த்தியுடனும் குடும் பம் பலவாரான விருத்தியுடனும் லட்சாந்திர தனவந்தனுவனென்றும் அவர் கள் பெலத்துடையவர்களாகியுங் கேந்திரகோண பெலத்துடன் (உ, ஊ, சு, கூ, ஙக, கஉ) இந்த இடங்களி லிருக்கில் சகஸ்திரம் யென்ற சங்கையிலுள்ள தன வந்தனென்றும் அவர்கள் பெலவான்களாகியுங் கேந்திரகோண கெதியுடனிரு க்கினும் நோக்கினும் சர்தகன் சகஸ்திராதி தனமுடையனுவனென்றும் அவை பாபட்சேத்திர மானுலுஞ் ஜீவசரீராதிபர்கள் புதன் குரு சனியானுலும் (கூ, கு, டு) இவைகளி லிருக்கினும் சகஸ்திராந்தர தனமுடையவனுவன் இவர்களே பாபர்களாகியும் ஜீவசரீராதிபர்கள் பெலமற்றுங் கேந்திரகோண கெதியில்லாத விடத்தில் (சு, அ, ஙக, கஉ) இவ்விதஇடங்களி லிருக்கில்பலவித இருணமும் பூர்வார்ச்சித தனமு மழியுமென்றும் இரவி சந்திரன் பாபுகள் சேவசரீராதிபர

இயல்லது அவருடன்கூடி (உ, ரு, ஙக) குருவீடு அல்லது குருவுடன் கூடினு லும் பாபர் மத்தியானலும் பலவகைப் பூர்வார்ச்சித தனமுமிருந்தா லழிந்துவிடு மெருக்கில் தன்னலும் உடன் பிறப்பு ஞாதியோராலும் பொருளழிந்து விடு மென்றுஞ் சுபர் திருஷ்டியல்லது சுபர் வீட்டிலிருக்கில் அவ்வித தனம் கிடைக் கிறது பலவகை வாதத்தின் பேரிலும் விரயத்தின் பேரிலும் கிடைக்கும் குடும் பமான இரண்டாமிடத்ததிபதி வசாத் சீவசரீராதிபர்களும் பெலத்துடன் குரு சுக்கிரன் சந்திரன் சுக்ஷேத்திர வீராசி நிரகங்களுடன் கேந்திரகோண பெல முள்ள சுபஸ்தானங்களாகி இருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு குடும்ப விருத்திகளும் பிரபல சுகசௌக்கியங்களும் வாக்பலிதமு முண்டாகும் இதில் சீவசரீராதிபர்கள் பெலமற்ற (உ, ரு, சு, அ, ஙக, ஙஉ) இவ்வித இடங்களுள் தனக்கு இணையில்லாத பகை இடமாகியும் பாபக்ஷேத்திரங்களில் பெலமற்றி ருக்கில் குடும்ப மியாதொரு விர்த்தியின்றி வர வர க்ஷயமும் பலவகை வருத்த பலன்களேயுங் கஷ்டங்களேயும் அனுபவிக்கப் படுவனென்றும் வாக்குஞ் செல் வமு மழிவதாவன் ஓர் சுபருடன் கூடில் சிலகாலங் குடும்ப விர்த்தியுடன் வாழ் வன் பலவகை துக்க மனுபவிப்பன் பின் வரவர குடும்ப க்ஷயமுண்டாகு மென் றுங் குடும்ப மேன்மை யின்றிப் பலவகை வருத்தங்களே யனுபவிக்கப் படுவ னென்றும் அறிக.

இரண்டு முதலிய சுபர்கள் கூடினும் இரண்டு முதலிய சுபபெலத்துட னிருக்கினும் சாதகனுள்ளவரை குடும்ப விர்த்தியானலும் சில காலத்திலழியு மென்றும் அறியவேண்டும்.

மகரலக்ன நேத்திர பலன்களாவன

நேத்திர சீவசரீராதிபதிகள் இரவி சந்திரனுகி கேந்திர கோணம் நீங்கிய (உ, ரு, ஙஉ, ஙக, அ, சு) இவ்வித இடங்களிலிருக்கினும் அவ்விதயிடம் துலாம் விருச்சிகம் மேஷம் சிங்கம் மகரம் மீனம் யிவைகளாகி பெலக்குறைவுடன் பாவரைக்கூடினும் பகை நீசாதி பாபக்கோட்கள் அல்லது இவ்விதஸ்தான சம் மந்தம் பெற்று யிருக்கினும் பிரபல பகைநீசக்கோளானலும் சாதகனுக்கு நேத் திரவீனம் நேத்திரரோகத்தை யுடையவனுவ னென்றும் அவைகளால் பலவித ரோகமெண்ட வுபாதிகளும் வருத்தங்களும் உண்டாகு மென்றும் குடும்பபீடை யும் வாக்குப் பிரழ்வும் பலவகை வருத்த பலன்களேக் கொடுக்கப்படு மென்றும் மனோபாதாதிகளும் பலவித துக்கசோகாதி பாதைகளேக்கொடுக்குமென் றறிக.

சுக்கிரன் சனி பாம்பு குசன் இவர்களாகில் சில சிலகாலங்களில் நேத்தி ரங்களுக்கு உபத்திரவம் முதலிய பலவகை வருத்தங்களே கொடுத்து நீங்கும்

கண் புகைச்சல் நீர் முதலிய ரெக்த உறைவு வக்கிரப்பார்வை அரை திருஷ்டி முதலானவைகள் நேத்திரத்தில் அல்பகாலங்களில் தோன்றி வயோதிகம் கவுமாரமென்ற வயதிலுண்டாகி நீங்கிவிடும் புதன் சுக்கிரன் பாவராகி நேத்திர ஜீவ சரீரங்களானலும் அல்லது ஸ்தானாதிபதிகளானலும் நேத்திர ஜீவ சரீரஸ்தானங்களிலிருக்கினும் அது அவர்களுக்குப் பகை முதலிய க்ஷேத்திரம் பாப இடங்களாகியும் பகை நீசத்துவ பாவரைக் கூடினும் பெலமற்று யிருக்கினும் ஜீவ சரீராதிபராகி மேற்கூறிய ஸ்தானங்களில் நின்றாலும் சாதகனுக்கு வெண்படர் நேத்திரமும் நேத்திர ஊணமுதலிய பலவகை நேத்திரவகளும் மாலைக் கண்ணனாகி வாழ்வன் அவை சரமுபய இராசியாகின் சில்காலுண்டு சிலகாள் சுகம் நேரும் பாபக்ஷேத்திர ஸ்திர விராகிகளாகில் அவை யெப்பொழுதுமே இருந்துவரு மென்றறிய வேண்டியது. மற்றவர்களாகி யிவர்களே சுப பெலத்துடையவர்களாகில் பெலவானான சுகநேத்திர வனுகூல முடையவனுவான்.

தனபாவ கெணிதமும் காலமுதலியதுந் திசாபுக்தி மூலமாகக் கண்டு கூறப்படும்

குருவும் சனியுடனும் (உ) மிடம் (உ) மிடத்ததிபதி நின்ற தற்கு (உ) மதிபதியுடனும் அவ்விதஸ்தானங்களிலும் உரிய சுப பாபகிரக பெல யெண்களே யெடுத்துக்கொண்டு அவைகளே தனித்தனி யிராசி பெல வெண்களால் பெருந்திக் கண்டவைகளே (கூ-ல்) கழித்த சேஷந்திசையிலும் வந்த ஈவை (நு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் புக்தியிலும் தனங்கிடைக்குதல் குடும்பபிரபலம் உண்டாகும் வாக்கு ஜெயமாகும் அவரவர்களுக்கும் ஸ்தானங்களுக்கு வெட்டாமதிபதி நின்ற இராசிநாதனுடனு முரிய விராசி யெண்களைப் பெருக்கி (கூ-ல்) தனித்தனி கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை (நு-ல்) பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் புக்த்தியிலும் இருணங்குடும்ப நஷ்டம் பொருன் சேதம் பலவித கஷ்டநஷ்ட துக்கமும் பொருளால் பகை சோரசத்துருவும் அனேகவித மரண சமான பாதையுண்டாகு மென்றறியப்படும்.

சகோதர பாவபலன்

சகோதா பாவத்துக்கு மூன்று பதினோராமிடத்ததிபதி நின்ற இராசி நாதன் ஜீவனென்றும் ஸ்தானாதிபதி யிருக்குமிடத்ததிபன் சரீரமென்றும் பெயராகும் காரகனுகிய குசன் வசாதும் யிவ்விதமே கண்டு ஜீவசரீர நிர்ணயஞ்செய்துக் கொள்ள வேண்டியது ஸ்தானாதிபதி பெலன்களும் குசன் பெலன்களையும் (கூ, கக) மிடங்களிலிருக்கும் கிரகபெலன்களையுங்கித்து சகோதர பலன்கள் உரைக்க வேண்டி வனவாம்.

மேற்கூறிய சீவசரீராதிபர்கள் சனி பாம்பு குசனுகினும் (கூ, கக)மிடங் கள் பகை நீசகேஷத்திரம் பகையாகியும் சீவ சரீராதிபர்களே ஒருவர்க்கொருவ ராவது பாபத்துவம் பகைமுதலிய இடங்களாகியும் பெலமற்று இருக்கினும் பாபமத்தியகெதியுடன் அவ்வித ஸ்தானங்கள் விருச்சிகம் மேஷம் கும்பங் கன்னிமிதனம் இவைகளாகி பாபபலன்களே யுடையதாகினும் அசுபபெலத் தூடன் சீவசரீராதிபர்கள் மேற்கூறிய ஸ்தானங்களில் பகை நீசபலனுடன் கூடியிருக்கினும் அல்லது பார்த்தாலும் சாதகனுக்கு சகோதரன் கிடையாது சுபர்களாகி இவ்வித பலமற்ற பகை பாபகேஷத்ர கெதியிலிருக்கில் பிறந்திறந்து அந்தியகாலஞ் சகோதரமில்லாமல் வாழ்வனென்றும் அவைகள் சுபர் அல்லது பாபர்களுக்குரிய சுபபெல கேஷத்திரமல்லது நட்பு ஆட்சி இடங்களாகி பெலத்துடனிருக்கினும் கேந்திர கோண பெலவான்களாகியும் பாவர்நீங்கி சுபர்களாலுலும் சீவசரீராதிபர்கள் ஐக்கியபுத்திரர்களாய் பெலத்தும் சம பெலகிரகமாகிச் சேறினுமல்லது நோக்கினும் அவர்கள் புதன் சனியல்லாத கிரகங்களாலுலும் சகோதரவிருத்தி பிரபலமுள்ளவன் புதனுகில் இருவகை சுபபெலன்பெற்றால் சிலனுள் இராஜயோக வல்லபர்களான சகோதரரிருந்து மரிப்பர்கள் அபலமாகில் பெலமற்று சகோதரமின்றி ஒண்டியாவனென் றறிய வேண்டும். அவர்கள் விருஷபம் கடகம் விருச்சிகங் கும்பங் கன்னி இவைக ளாகில் பெண்சந்ததி இருக்கினும் மத்தியகாலத்திலேயே குடும்பட் சயத் துடன் அடையுமென்றுரைக்க வேண்டும்

மேற்கூறிய சீவசரீராதிபதிகள் பெலவான்களாகியும் தனுசு மகரம் மீனம் சிங்கம் இவைகளில் கேத்திரகோண பெலத்துடனிருக்கிலும் நோக்கி னும் அல்லது சகோதரகாரகவசாத் பெலத்துடனிருக்கினும் சாதகனுக்கு சகோதரபலமுமடைவன் மேற்கூறிய கிரகங்கள் மேன்மையுடன் இருக்கின் சகோரவசாத் ஜீவசரீராதிபதி யுடனுள்ளோர் குரு ரவி பூரணசந்திரன் குசன் முதலியோராகி இருக்கினும் நோக்கினும் அவை சுகேஷத்திர உச்சகேந்திர கோண பெலத்துடன் யிருக்கினும் சாதகனுக்கு புருஷசந்ததியுள்ள சகோத ரங்கள் அதிக விருத்தியும் மிகுந்த வனுகூலமும் பிரபல சுகசௌக்கியங்களும் மனோவாக்குஜெயம் உள்ள பலவகை சகோதரங்களால் மிகுந்தமேன்மைகளும் பிரபல சகோதரங்களே யுடையவனுவன்,

சந்திரன் சுக்கிரன் சனி கேது முதலியோராகில் பெண் சகோதரமே ஜாஸ்தியான விர்த்திகளும் பிரபல சுகசௌக்கியங்களுடனும் மிகுதியான மேன்மையுடன் வாழ்வர் பாம்புபுதனுகில் சகோதரவிர்த்தியின்றி யடைவன் இதில் மீனம் மிதுனங் கன்னி மகரம் கடகம் தனுசு இவைகளிலும் (கக, எ, கூ, க) இந்த ஸ்தானங்களிலும் ஷை சுபரும் பாபரும் இருக்கினும் சாதகன்

* ருணம் இருணமென்றவை கடனுகும்.

சகோதரம் பிதாவின் பலதாரமாகிய (உ) முதலியதாரங்களுக்கு உண்டாகு மென்றும் மிக்கமேன்பாடுகளும் அவ்விதயிராசிகளில் மேற்கூறிய கிரகங்க ளிருக்கினும் புதன் சந்திரன் சுக்கிரன் ரவி முதலியோர் சகோதரஜீவசரீராதி பதிகளாகின் சாதகசகோதரர் பிதாவின் பராரியல்லது திதியம் முதலான தாரங்களுக் குண்டானவர்களென்றும் அவைசுபக்ஷேத்திர பெலமாகினும் அவ்வித இடங்களில் ரவி குரு முதலிய ஜீவசரீராதிபதிகள் பெலவான்க ளாகில் சகோதரசந்ததி பிரபலமானது அதிகமுடையவன் அவர்கள் ஒருவருக் கொருவர் விரோதிகளாலுலும் யிணையில்லாத பாவர்களாலுலும் சகோதரங் களால் அனுகூலமின்றி விரோதிதாதி பலவகை வாதங்களையடைந்து வாழப் படுவனென்றும் பலவகை வருத்தமடைவன் அவைகளுக்குரிய ஜீவசரீராதி பதிகள் (சு, அ, கு, ம, உ) இவ்வித யிடங்களாகிலும் அவை ரவி புதன் சுக்கிரன் குசக்ஷேத்திரமாலுலும் சகோதர விருத்தியாகினும் குடும்பவிர்த்தி யின்றி பலர்போகியும் பலவகை கஷ்ட நஷ்ட பலன்களையும் அடைவனென் றும் சொல்லப்படும். அவைகள் சுபக்ஷேத்திர திரிகோண பெலத்துடன் இருக் கினும் நோக்கினும் சுக்ஷேத்திராதி தனக்குரிய சுபபெல சேத்திரமாலுலும் சகோதரங்களால் பிரபல கீர்த்தியும் அதிகமான சன்மான வெகுமானத்துட னிருந்து வரப்படுவனென்றுங் கண்டறிக.

பாபசம்மந்தக் கலப்புடன் ஜீவசரீராதிபர்களிருக்கினும் ஜீவசரீராதிபர்கள் சுபராகி பாபசேத்திரமாலுலும் சுபட் சேத்திரத்தில் ஜீவசரீராதிபர்கள் பாப ராலுலும் சகோதரமுண்டு அனுகூலமின்றியும் சகோதரமிருக்குமிடத்தில் சாதகன்வசிக்காமலும் அதிகவனுகூலத்தைப் பெருமலும் வாழப்படுவர்கள் காரகவசாத் ஜீவசரீராதிபதியும் ஸ்தானமூலிய ஜீவசரீராதிபதிகள் பெலவான்க ளாகி (சு-க்கு) மேற்பட்ட பெலத்துடன் யிருக்கில் ஜாதகன் சகோதரர்கள் பிரபல இராஜயோக முடையவர்களாகி வாழ்வார்களென்றும் பிரபல சுக சேளக்கியனுவன் மூன்றுக்கு கீழும் (உ-க்கு) மேலுள்ள பெலவானுகில் சகோதர சமத்துவயோக முடையவர்களாகும் சகோதரமூலிய தனுதிலாபம் உடையவன் சகோதரார்ச்சித சொந்தனுவன் (உ-க்குள்) பட்ட பெலனுலுங் குறைந்த பாபபெல முடையவர்களாலுலும் சகோதரர் தரித்திரராகி பலவகை வருத்தமடைந்தும் பொருள் வித்தியின்றியும் மனக்கவலையுடனும் அனேகவித நஷ்டங் கீழ்குல சம்மந்தஹீனர்களாகுவார்கள் பெண்ணுகில் இவ்விதசாதி தள்ளுண்டவராகியும் அல்லது தரித்திரியாகி யல்லது விபசாரி யாகி வாழ்வள் என்றுங் கொள்க.

சகோதிரபாவ கெணிதங்களாவன

மீனத்திலும் குருவின்ற மூன்றுமிடத்ததிபதினின்ற இராசிநாத னுடனும் பதினேராமிடத்ததிபதி னின்ற இராசிநாதனுடனும் ஸ்தா

னும் சூசனுக்கு மூன்றுமிடத் திதிபதி நின்ற இராசி நாதனுடனுங்கூடிய கிரக சுபாசுப வெண்களைக் கண்டு அந்தந்த கிரகமுள்ள யிராசியுச்சமானுல் பெருக்கியும் ஆகியானுல் அந்தத் தூகையில் முக்கால் பாகம் கூட்டியும் நட்பானுல் பாதி யிராசி பலனுக் குரியதைக் கூட்டியும் பகையானுல் கால்பங்கு கூட்டியும் உள்ள தூகைகளை யவரவர் பூராவான வெண்பேருக்கு கொடுத்துக்கண்ட ஈவில் பாபராகில் சகோதர மில்லையென்றும் சுபர்களால் கொடுத்த ஈவு யெத்தனையோ அவ்வளவு சகோதரமென்றும் அவைகளையும் பெண் ஆண் கிரக இராசி பலன்களை யறிந்து கூறவேண்டியது. அப்படி யில்லாவிடில் அவைகள் பிரழ்ந்து போய்விடும் மேற்கண்ட வெண்களை தனித்தனி (கூ ல்) கழித்த மிச்சம் திசையிலும் வந்த ஈவை (நு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் புக்தியிலும் சகோதரலாபம் அவரவர்களுக்கு அஷ்டமாதிபதி பெலாபெல வெண்களை முன்போலக் கூட்டிக் கழித்துக்கண்ட சேஷந் திசாபுக்திகளில் சகோதர நஷ்டம் பலகஷ்டம் திக்க பலன் எனக்காண்க.

மகர லக்னத்தின் சு-வது
மாதுரு கிரகவாகன வித்தியா பலன்

சந்திரன் சூசன் மேடம் நான்காமதிபதி விவர்கள் எந்த வீட்டிலிருக்கிறூரோ அந்த ஸ்தானுதிபதிகளுடைய பெலாபெலனறிந்து கூறுக மாதுரு பாவத்துக்கு நாலாமிடத் திதிபதி நின்ற இராசிநாதன் சீவனென்றும நான்கிர்க்கு நான்காமதிபதி எந்தவீட்டில் இருக்கிறூனே அந்த ராசிநாதன் சரீரமென்றும் பெயராகும்.

கிரகவாகனங் கன்றுகளுக்கு சுக்கிரனுக்கு நான்காமதிபதி நின்ற இராசி நாதன் சீவனென்றும் லக்கினுதியாக நான்காமதிபதி நின்ற இராசிநாதன் சரீரமாகும் புதன் வசாத் நான்காமதிபதி நின்ற இராசி நாதன் வித்தைக்கு சீவனென்றும் இரெண்டாமதிபதி நின்ற இராசிக்கு நான்காமதிபன் சரீரமென்றும் பெயராகும் இவ்விதமாக பாவம் எடுப்ப முன்சீவசரீர பெலன்களைக் கண்டறிந்து பலன் கூறவேண்டுவே தாவசிக மாதலால் இங்கனம் முதலில் சீவசரீர நிரூபணங் கூறப்பட்டனவாம்.

அந்தந்த பாவங்களுக்கும் சீவசரீராதிபதிகள் ஐக்கிய பத்திய சுபராகிப் பெலனுள்ளவராகியும் ஐக்கியமின்றி வெவ்வேறு கிரகங்களானுலும் அவரவர்களுக்கு அனுகூல மித்துருவாகி சுபபெலக்ஷேத்திர தெதியாகியும் பாபசம்மந்த திருஷ்டிகளில்லாமலும் பெலத்தும் மேன்மையுட னிருக்கினும் சுப கேந்திராதி ஸ்தான பெலனுட னிருக்கினும் மாதுருவம்சாதி பாவத்துக்கு பிரபல

வர்த்திகளும் மிகமேன்மையும் அனேக விதமான வர்த்திகளையும் அடைந்து வரப்படுமென்றும் இவ்வட சித்திகளையும் மிகவும் பிரபல சுகசௌக்கிய பலன்களாகவே நடந்து வரப்படுமென்றுங் கண்டு கூறவேண்டுவனவாம் அவை பாபட்சேத்திரமாகி பாபபெலத்துடன் சம்மந்த மல்லது திருஷ்டிகளாகில் அவரவர்களுக்குரிய சுபவிர்த்திக்கிசைந்த பல விர்த்திகளையும் மேற்கூறிய பாவப்பிரபல யோகத்தையும் கூறப்படு மென்றறிய வேண்டுவனவாம் மாதுரு ஜீவசரீராதிபதி பெலத்துடன் கேந்திர கோணமான யிடத்திலும் ஸ்தானாதிபதி சந்திரனிவர்கள் பெலத்துடனும் பகை நீச பாபட்சேத்திரமின்றி சுப திருட்டியுடனிருக்கினும் அவ்வித இடங்களானது விருஷபம் மகரம் மீனம் சிங்கம் முதலிய யிடங்களாகி (ரி, கு, க, எ, ம) ஆகினும் அவை சரமல்லது உபயமாகில் மாதாவகை பெரும் பாலும் விர்த்தியுள்ளவர்களாகியும் விருத்தாப்பியகாலவரை மாதுரு விருத்தியடைவன் சுபபாபட்சேத்திரமாகி மித்துருவின் வீடாகவு மிருக்கவேண்டும் அவ்வித மாதுருகாரகனுகிய சந்திரன் வசாத் ஜீவசரீராதிபர்களின் பெலன்களை யுத்தேசித்தும் இவ்விதமே ஜீவசரீராதி பதிகளும் பெலவானுகில் பூரணவயதையுடைய மாதாவென்றும் இவையே பாபட் சேத்திரமாகியும் ஜீவசரீராதிபர் ஒருவர்க்கொருவர் பகை பாபிகளாகியும் பாபட்சேத்திரம் துர்த்தானங்களிலும் பகைவரைக்கூடி நிற்கினும் நோக்கினும் ஸ்தானாதிபதி சந்திரனுகி பெலமற்றிருக்கினும் அவை ஸ்தான வசாதும் லக்னவசாதுங் (அ, கக, சு, ம) ஆன இடமாகி யல்லது தானகானுலும் மேற்படி ஸ்தானாதிபதி பெலன் கெட்டுஞ் ஜீவசரீராதிபர்க ளிவ்வித இடங்களிலிருக்கிலும்மாதா உடன் மரணமாவள் அவையாவது பாலியத்திலேயே மாதுரு மரணமாவளென்றும் அவை ஸ்திரவிராசியாகில் பாலியத்தில் பாலியமென்றும் உபய விராசியாகில் பாலியத்தில் மத்திய காலவயதிலும் சரமானுல் பாலியத்தில் பூரணகால வயதிலும் தாய் மரணமாவ ளென்றும் மேற்கூறிய ஜீவசரீராதிபர்கள் பெலமற்ற இடங்களிலும் பகை நீசாதி இன்றி சம பெலக்காரராகி (கூ, ஙி, உ, சு, கக) இந்த வீடுகள் விருஷபம் மிதுனம் கன்னி துலாம் விருச்சிகம் தனுசு இவ்வித இராசிகளானுலும் இவைகளில் சுபசம்மந்த பெலத்துன் குரு சுக்கிரரிருக்கினும் அல்லது சந்திரன் சனியானுலும் அவை யிருப்பிடம் ஸ்திரவிராசியாகில் எவ்வனத்தில் முதலிலும் உபயவிராசியாகில் எவ்வனத்தில் மத்திமம் சரவிராசியாகில் எவ்வனத்தில் பூரணவயதிலும் இவர்களே மற்றய யிடத்தில் பகை நீச அசுபராகியும் ஜீவசரீராதிபதிகள் பெலமற்று பாபபலனே யடைந்தவராகின் ஜாதகன் பாலியம் சிசு இவைகளிலேயே தாய் மரணமென்றும் சுபராகில் கௌமார வயதில் தாய் மரணமென்றும் அதாவது அவன்வயதில் நான்கில் (கூ) வது பாகமென்றும் அசுபராகில் (ஞ-ல்) முதற்பாகத்திலேயே ஜாதகமாதுரு

மரணமும் பாம்பு முதலிய புதன் அபெலராய்க்கூடில் கற்பத்திலுலேயே தாய் மரணமாவ லென்றும் (கூ. கு) இவ்வித யிடங்களில் ஜீவசரீராதிபர்கள் தனக் குரிய சுபபெலத்துடன் ஸ்திரவிராசியி விருக்கில் விருத்தாப்பிய வயதில் தாய் மரண சரவிராசியில் விருத்தாப்பிய முதலிலேயே தாய் மரணம் உபயமாகில் விருத்தாப்பிய மத்தியில் தாய் மரணமென்றுங் கண்டறிந்து கூறவேண்டியது. அவ்வித சீவசரீராதிபர்களும் அவர்கள் வசாத் தான்காமதிபதிகளும் சுக்கிரன் புதன் கிருஷ்ணபட்ச சந்திரன் சனி முதலிய இவர்களாகினும் இவர்கள் ஜீவ சரீராதிபர்களாயும் மிதுனம் தனுசுகன்னி மீனம் இவைகளால்அல்லது சென் மம் ஜீவசரீராதிபதி யிவர்கள் வசாத் மாதுரு ஸ்தானாதிபதியாயாவது அல்லது அவ்வித ஸ்தானத்திலிருக்கில் பிதுருவுக்கு இரண்டு முதலிய பெருதார மென் றும் சாதகனுக்கு சபத்நீ மாதுருவகை யுண்டென்றுஞ் சொல்லப்படும் சுபபெ லன் திருஷ்டி சம்மந்தம் பெலனதிகமானால் ஏகதாரம் பிதாவிர்க் கென்றுங் காண்க.

கிரகவாகன பலன்

கிரகவாகன ஜீவசரீராதிபர்கள் சுப பெலத்துடன் மகரம் மீனம் விருஷ பம் கடகம் கன்னி தனுசுவானு லெப்பொழுதும் வாகன பிரபல யோகவானென் றும் சுபட்சேத்திரமாகி உபயம் அல்லது சரமாகினும் அவை (உ, ச, எ, ஏ, கூ) இவ்விடங்களாகி சுபபெல ஸ்தானமாகினும் அவர்கள் குரு சுக்கிரன் பூர ணச்சந்திரன் முதலியோரதிபதி யல்லது ஜீவசரீராதிபர்களாகி பெலத்துடன் சபவர்க பெலமேறி னீர்க்கில் அனேகமான வாகனங் கிரகங்கள் சம்பாதனை யுடன் பூரணஞ்செய்வன் அவை சரவிராசியாகி மேஷம் மகரம் கடகம் துலாம் இவையிலாவதும (கூ, டு, அ, கக, உ கூ) இவ்வித யிடங்களாகில் பழயவாக னம் பூமி கிரக விருத்தியுண்டு இவர்கள் பாபராய் தூர்தானுதி பத்தியம் பெற் றிருக்கில் பூர்வார்ச்சிதம் வாகனம் வீட்டிருந்து மவைகளே நஷ்டஞ்செய்து விடு வன் சிலகாளனுபவித்துப் பின் இந்த சாதகன் அனுபவிக்க மாட்டான் ஸ்திர விராசியும் (எ. கூ, ஏ, க, ச, சு) இவ்வித இடமாகில் பின்காலத்தில் கிரகவாகன பிரபல விருத்தியும் அனேகவித தனலாபயோகவானென்றும் அறிக அவையே குசன் இரவி சனி க்ஷேத்திரம் பாபபெலனுகியும் ஜீவசரீராதிபதி கெடினும் விரோதத்தினுலும் குணதிகளானும் பலவிதப் பொருளும் நஷ்டமாகும் முன் இருக்கிற கிரகவாகனமும் நஷ்டமாகிவிடும் பின் அவை மூலமாக அதிகயோக பிரபலிய முண்டாம்.

வித்தியா பலன்கள்

வித்தியா ஜீவசரீராதிபர்கள் பெலத்துங் கேந்திரகோண சுக்கிரன் குரு இரவி முதலிய புதட்சேத்திரங்களிலும் பெலவானுகியும் சுட்சேத்திர சுபபல

கேந்திரக்களிலும் வலுப்பெற்று மிருக்கினும் ஜீவசரீராதிபதிகள் புதன் சுக்கிரன் குரு முதலிய சுபராகி பெலமுற்று இருக்கில் கீழேகூறிய வித்தையில் வல்லவனென்றும் குசன் சனி பாம்பு முதலிய பாவர்களாகி மகரம் கும்பம் துலாம் மேஷம் மீனம் விருச்சிக ஸ்திதியராய் ஜீவசரீராதிபராகி பெலமற்று பாபட்சேத்திர கெதியுடனிருக்கினும் அவை (உ, கூ, அ, சு, கஉ, கக) முதலிய துர்த்தானமாகி பாவராகிப் பெலக்குறைவுடன் பாபமத்தியில் பகை முதலிய அபெலன்களைப் பெற்றிருந்தாலும் வித்தை கிடையாது வெளிக்கி வித்தியாவந்த வேஷதாரியாகி வாழ்வன் இவர்கள் சுபராகில் வித்தை பிரபலமான தண்மையாலும் குடத்திலேற்றிய விளக்கைப்போலாவன் சுபட்சேத்திர சுபகெதியாகில் அதிகமேதாவியாகி சகல வித்தியாபுத்தி யுகலுகி மேலானபிரபலம் பெறுவன் சுபஸ்தானத்தில் பாபரே பெலமாகி நிற்கினும் நோக்கினும் அல்லது பாபன் தானத்தில் சுபரே பெலமாகி நிற்கினும் நோக்கினும் அதிவல்லபலுகியும் வித்தியாகிரியை பெலனில்லா விடினும் மிகுந்த கீர்த்திகளையும் பிரபலத்தையும் ஓர் விஷய வித்தைகளில் வல்லபலுகக் கியாதி பெறுவன்.

அவ்விதம் பெல முற்றவர்களில் இரவியாகில் இராசவித்தை முதலியதும் கருவியெந்திர வித்தையுங் கற்று பிரபலனுவன் சந்திரனுகில் கணிதாதி வித்தையும் வைத்தியாதியும் காவிய சாஸ்திர மறிவன் புதனுகில் பூவிஷய சாஸ்திரமும் அன்யபாஷை பல வித்தையும் அறிவன் புதனுகில் கணித பண்டித சாஸ்திர மறிவன் குருவாகில் வேதசாஸ்திராதி உபதேச வந்தனுகி யல்லது இராஜ வித்தையின் பிரபல முடையவனுவன் புராணுகி சொல்வன் சுக்கிரனுகில் காவியாதி லட்சணமும் பூராணமும் சங்கீதாதி நடநாடகப் பிரிய வித்தையுடையவன் சனியாகில் ஹீனகுலவித்தைகளும் அன்ய பாஷாதிகளறிவன் ராகு கேதுவாகில் பலவித பாஷைகளிலும் இராசபாஷாதிகளையும் எவ்வித பாஷைகளையும் யுத்த சாஸ்திராதி அறிவனென்றுங் கூறுக.

மேற்கூறிய பாவங்களின் கெணிதமுங் கூறப்படும்

அந்தந்த பாவ ஜீவசரீராதிபர்களுடன் கூடிய வெண்களை சுபபாப பலன் படிக்கி ஆராய்ந்தெடுத்து ஸ்தானத்திலும் அதிபதியுடனும் உரிய கிரக வெண்களையும் இராசி பலனுக்கு இசைய வெண்களையும் உச்சமானுல் பெருக்கியும் ஆட்சியானுல் கூட்டியும் நட்பானுல் பாதிகூட்டியும் பகையானுல் கால்பாகங் கூட்டியும் நீசமாகில் ஒன்றுங் கூட்டாமல் கிரகத் துகையை மாத்திரந் தனித்தனி (கூ ல்) கழித்த மிச்சம் வருதிசையிலும் வந்த ஈவை (டு-ல்) பெருக்கி (கூ ல்) கழித்த மிச்சம் புக்திகாலத்திலும் அந்தந்த பாவம் வீர்த்தியாகிப் பிரபலமுண்டாகு மென்று அவரவர்களும் அஷ்டமாதிபதி லீன்ற வதிபனுடன்கூடிய

வெண்களையும் பெலன்படி முன்போலவேகூட்டி யல்லது பெருக்கி (கூ-ல்) கழித்து முன்போலவே கண்டறிந்த சேஷ திசாபுக்தி காலங்களில் விசேஷ தனலாப யோகமும் கெட்டு அவைகளால் கஷ்ட நஷ்ட துன்பமுண்டாகி அந்தந்த பாவங்களுக்கு அபாவமுண்டாகு மென்றறிய வேண்டியது.

புத்திரபாவ பலன்கள்

குரு சுக்கிரன் ஐந்தா மதிபதியையும் அவ்வீட்டினின்ற கோளையுங் கொண்டு புத்திர பாவபலன் சொல்லுக

புத்திரபாவத்துக்கு ஐந்தாமதிபதிக்கு ஐந்தாமதிபன் எவ்விடத்தி லிருக்கி ருளோ அவ்வதிபன் ஜீவனென்றும் குருவுக்கு ஐந்தாமிடத் ததிபனின்ற இரா சிநாதன் சரீரமென்றும் பெயராகும் இவ்விதமான புத்திரசீவசரீராதிபதிகளும் மேற்கூறிய குரு சுக்கிரன் ஐந்தாமிடத் ததிபர்களும் (உ, க, ச, டு, கூ, ல) இவ் விதஇடங்களில் புதன் சனி முதலியோர் ஸ்தானாதிபதியல்லது ஜீவசரீராதி பர்களாகாமலும் மகரங் கும்பங் கன்னி மிதுனம் நீங்கிய இடங்களிலும் பிர பல பெலத்துட னிருக்கினும் நோக்கினும் அதில் குரு சுக்கிர பூரணச் சந்தி ரன் குசன் முதலிய இரவியாகின் புத்திரவிருத்தி யடைவனென்றும் மற்றை யவிடங்களானுல் புத்திரதோஷ மென்றும் சுக்கிரன் புதன் சந்திரன் (உ, டு, எ, கஉ) இவ்விதஇடத்தாதிபராகி ஜீவசரீராதிபராகினும் அவைகளிலிருந்தி னும் அவர்களின் திருஷ்டியாகிலும் ஸ்தானாதிபதிகள் மேற்கூறிய இடங்க ளான மீனங் கன்னி மிதுனம் தனுசு முதலிய இரட்டை ராசிகளிருக்கினும் ஜாதகனுக்கு மறுதாரத்தால் புத்திரருண்டென்றும் பாவராசிக்கூடின் பெண் சந்ததி தவிர புருஷசந்ததி கிடையாதென்றும் அவர்கள் சனிபாம்பு புதன் இவ ருடனுவது இவர்களின் சுக்ஷேத்திர யிடங்களிலாவது பாவர் முதலியரான சீவ சரீராதிபர்கள் கூடினும் நோக்கினும் புத்திரரே கிடையாது சிவீகாராதி தெத் தையுடையவனுவன் சுபர் திருஷ்டி சம்மந்தம் இலையிருக்கினும் அந்தயிடம் சர முபய ராசியானுல் காலதாமதத்தின் பேரிலும் பொருதாரத்தின் பேரிலும் புத்திரபாக்கியம் அல்பமானவாணையும் பெண்பிரஜை விருத்திகளையும் அடை வன் சந்திரன் சுக்கிரன் சீவராசியாதி பத்தியமல்லது அவருடன் கோணத்தில் பெண்ராசி கிரகத்துடனல்லது திருஷ்டியுட னிருக்கினும் கேது சனி புதன் கூடி யல்லது நோக்கினும மேற்படியாருக்கு இருபுரத்தி லிருந்தாலும் பெண் ணே பிரபலமுடைய புத்திரபாவ மாவன் பாபபெலனுகில் அதுவுமுண்டாகி மரணமாகும் ரவி குரு குசன் யிவர்கள் புத்திரஸ்தானுதி பத்தியமல்லது சீவ சரீராதிபதிகளாயும் பிரபல பெலத்துட னிருக்கினும் நோக்கினும் சுபபெலத்

துடன் சிங்கம் தனுசு கும்பம் மேஷம் துலாம் விருச்சிகமாகில் சனி புத சேத் திரம் நீங்கிய விடத்தில் ஜீவசரீராதி பதிகள் பெலத்தும் பூரணச்சந்திர ஞகி னும் பல புருஷ பிரசைகள் அதிக கீர்த்திவந்தராகி பிரபலமான யோகவான் களாகி வாழ்ந்து சுகசௌக்கியவான்க ளாவார்கள். இவர்கள் தூர்த்தானத்தில் சுபபெலத்துட னிருக்கினும் அவை (ரு, அ, கக, எ) பாப்ட்சேத்திரமாகி சுப க்ஷேத்ராதி பெலன்களைப் பெற்றாலும் சிலநாள்வரை புத்திரரிருந்து தோட மாவார்கள் புத்திரி விதவை தோடமடைவர் பலவகை புத்திரசோகமடைவன் புத்திரரிருக்கில் பலவகை ரோகமுங் குடும்ப துக்கமுதலிய வருத்தம் மனை கஷ்டங்களையும் ராஜதண்டனைகளையு மடைவர்க ளென்றுங் கண்டு கூறவேண் டியது. அவர்களைச் சுபவீக்ஷணியாதி பெலன்பெரில் ஏகமான கருமசந்ததி வெகுநாளைக்குப் பின்னுண்டாகும் ஜீவன் வலுத்தும் சரீரம் பாவராகில் சில நாள் புத்திரரை வைத்துக்காப்பாற்றி புத்திரருக்கு சாதகன் கருமஞ் செய் வானே ஒழிய சாதகனுக்கு புத்திரரால் கருமங்கிடையா தென்றுங் கண்டறிய வேண்டியது.

ஜீவசரீராதிபதிகள் குசன் குரு அல்லது ரவி பூர்ணச் சந்திரனுகிலும் ஸ்தானாதிபதியாகி பெலமுற்ற (க, ச, ஙி, எ) இவ்வித ஸ்தானங்களில் பெலத் துங் கேந்திரகோண கெதியுடன் கடகம் சிங்கம் தனுசு மீனம் மேஷம் இவை களிருக்கினும் பெலத்த சுபர்கள் திருஷ்டியல்லது சேர்க்கையானலும் புத்திர ரனேகருடன் புருஷவருக்கஞ் சாஸ்தியாயும் புத்திரரால் பிரபல செல்வயோ கத்தையுஞ் சுகத்தையு மிகவு மேன்பாடுகளையும் அடைவனென்றும் பிரபல சுக சௌக்கிய மேன்பாடுகளை யனுபவிப்ப னென்றுங் கூறவேண்டியது.

(உ, ரு, க, ல) இவ்வித யிடங்களிலும் மிதுனம் விருஷபம் விருச்சிகம் கும்பமாகில் அதில் சீவசரீராதிபதிகளாவது மேற்கூறிய புத்திரஸ்தானாதிபதிக ளாவது பெலத்துட னிருக்கினும் நோக்கினும் முன் ஜனன கஷ்டமும் காலதா மதத்தின்பேரில் புத்திர விருத்தியடைவ னென்றும் அவையிற் சந்திரன்புதன் சுக்கிர னிவராகில் மருதார வம்ச புத்ரரென்றும் அவையால் மேம்பாடுகளையும் சுகசௌக்கியங்களை அனுபவிப்ப னென்றும் (சு, அ, கக, கஉ) இந்த இடங்க ளில் ஜீவசரீராதிபதிகள் பெலத்துடனிருக்கினுங் கன்னி மிதுனம் மகரக் கும் பம் மேஷம் விருச்சிகம் இவ்விதராசியாகி அவ்வதிபர்களுடன் பெலத்தும் கேந் திரகோண கெதியுடன் பிரபல சுபபெலனைப் பெற்று யிருக்கில் காலதாமத பெருதாரவகை புத்திரரும் சுய புத்திரராகினு மத்தியகால மரணமும் புத்திர விரோதமும் புத்திர துரோகியல்லது புத்தியில்லாதவர்களாகியும் பலவகை புத்திர கவலையடைவ னென்றும் இவர்களே பகை நீசாதிபாப பெலத்துட னிருக்கினும் நோக்கினும் பரபுத்திர கருமம் சுயபுத்திரரில்லான் சகோதரம் முதலியவகையரால் ஜாதகனுக்கு கருமமென்றுங் கண்டுசொல்ல வேண்டியது.

சுப வீட்சணிய அற்ப சம்மந்தமானலும் சிவீகாராதி புத்திரரால் கருமமுடையவ னென்றுங் காண்க.

புத்திர கெணிதங்கள்

புத்திர ஜீவசரீராதிபர்களுடனும் புத்திரஸ்தானம் அவ்வதிபதி இவருடன் கூடிய சுபா சுபப் படிக்குள்ள கிரக வெண்களே அவரவர் கிரண வெண்பேருக் குக் கொடுத்த ஈவை குரு இரவி குசன் சுக்கிரன் பூரணச்சந்திரன் இவர்கட் குச்சரியான கிரகங்களே யெடுத்து அவரால் வந்த ஈவுபுத்திர சங்கை யென் றும் இதில் ஸ்ரீ புருஷ கிரக யெண்களேக் கண்டறிந்து சொல்ல வேண்டியது. மூன் கிரக சங்கையும் இராசி பெல சங்கைகளேயும் பெருக்கி அவரவர்களுக்கு யேற்பட்ட கிரகவெண்ணிற் கொடுத்த சேஷமும் ஓர்வகை புத்திரரென்றும் அவையால் மேற்கூறிய பிந்து மிச்சங் கொடுத்தவர்கள் சுபபாபத்துக்கு இசைந் தபடி புத்திர வீர்த்தியும் வந்த மிச்சத்தை யவரவர்களின் கிரண வெண் பேரு க்குக் கொடுத்து வந்த ஈவு சுபருக்கிசைந்து வந்ததை ஒன்றுய்க் கூட்டியவை புத்திர தீர்க்க யோகமும் புத்திரி தீர்க்கமும் சுக்கிரன் அமரபக்ஷம் சந்திரன் கேது இவர்களி னீவாகில் புத்திரிக ளென்றும் கண்டு கூறுக.

மேற்கூறிய கிரக வெண்களே யெல்லாம் தனித்தனி பெலத்துக்கிசைந்த யிராசி யெண்களாற் பெருக்கி (கு-ல்) கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை (டு-ல்) பெருக்கி (கு-ல்) கழித்த சேஷம் புத்தியிலும் புத்திர லாபமும் ஜெய மும் அதிக யோகமும் உண்டாகும் அந்தந்த கிரக வசாத் எட்டுக் குடையவ னின்ற இராசிநாதர் பெலங்களுக்குரிய வெண்களே கூட்டி முன் போலவே கழித்துக் கண்ட மிச்சம் உள்ள திசா புக்தி காலங்களில் புத்திராதியோக நஷ் டமும் பலவித வருத்தமும் புத்திர தோஷமான துக்கங்களான கால மென்று மறிக.

சத்துரு உரோகம் இராசாங்கதெண்டனை பலன்கள் கூறப்படும்

சந்திரவசாத் ஆராமிடத்ததிபதி னின்ற இராசிநாதன் சீவனென்றும் லக் னவசாத் ஆராமதிபதி னின்ற வதிபன் சரீரமென்றும் உரோகவிஷய சீவசரீ ராதிபர்க ளென்றும் சனி வசாதும் லக்னவசாதும் ஆராமிடத்ததிபதி னின்ற இராசிநாதர்கள் சீவசரீரம் சத்துரு இராஜதெண்டனுதிகளுக் கென்றுங் கண்டு கூறவேண்டியது. மேற்கூறிய பாவங்களுக்கு சீவசரீராதிபதிகள் பெலன்களு டைய சுபர்களாகி சூரிய சந்திரரல்லது (டு) லக்னுதிபதிகளாகினும் இவ் வித கிரகங்களதிபதிகளுடன் கூடி மேற்கண்ட ஸ்தானங்களில் பெலத்தும்

சத்துரு உரோக பலன்கள்

சுபட்சேத்திர பெலத்துட னிருக்கினும் நோக்கினும் சாதகனுக்குபலவித பிரபு இராச விரோதமும் சடன் முதலிய தொந்தரவும் இராஜதெண்டனாதி பாதைகளையும் அடையப் படுவனென்றும் மனக்கவலையும் பிணி முதலிய பலவகை கஷ்ட நஷ்டங்களை யனுபவிப்ப னென்றும் அறிக.

மேற்கண்ட பாவத்தக்கு சீவசரீராதிபதிகள் குரு சுக்கிராதி சுபர்களாகியும் கேந்திரகோணத்திலிருக்கினும் நோக்கினும் விரோதமிருக்கினும் அவைகள் உடனுக்குடன் னிவர்த்தியாகி விடும் யெப்போதும் ரோகசரீரனாகி வாழ்வன் இந்நணமுடையவனுவன் குசன்பாம்பு முதலியோராகில் இராசாங்கத்தால் விரோதமும் பலவகை தேகாரிஷ்ட கண்டமும் பொருள் சேதமும் கொடூரதெண்டனைகளை யடைவனென்றும் விஷாதி பாதையுள்ள சரீரஸ்தனென்றும் அறியப்படும் புதன் முதலியோராகின் பலவித சத்துரு விருத்தியு முரோகாதி வர்த்திகளும் நிவர்த்தியாகி விடும் மேற்கூறிய சீவசரீராதிபதிகள் பெலவான்களாகியும் (க, ச, ஞ, எ, க, ம) இவ்வித இடங்கள் அவரவர்களுக்குரிய சுபட்சேத்திர பெலத்துட னிருக்கினும் ஸ்தானாதிபதிகள் பெலத்தும் மேற்கண்ட ஸ்தானாதிபர்களுடன் கூடினும் நோக்கினும் ஜாதகனுக்கு பலவித நோய்த்தன்பமும் சத்துரு மேலானவதிகாரி பிரபு இவர்களால் விரோத முண்டானபோதிலும் ஜாதகன் யாதொன்றுக்கும் அஞ்சாமல் பலவித வருத்தங்களை யனுபவிப்ப னென்றும் அவ்வித ஸ்தானங்களிலுங் கன்னி மகரம் கும்பம் மீனம் விருடபம் மிதுனம் இவ்வித இராசிகளாகி அவ்விடங்களில் மேற்கண்ட கிரகங்கள் சுபராகி இருக்கின் சத்துருவனுகூல முண்டாகும் பகை முதலிய அபெலன்களுடன் சுபரிருக்கில் சத்துரு இருணம் முதலியவைகளும் இராஜ தெண்டனைகளும் நிவர்த்தியாகி சுகமடைவன் பாபராகி கொடிய கோள்களாய் கேந்திர கோண இராசியாகிய முன் கூறிய இடங்களாகியு முரில் சாதகனுக்கு பலவித வற்பர்களின் விரோதமானதும் பெண் விஷயம் பரகெமனம் திருட்டு பொய் வார்த்தை இவ்வித விஷய கெடுதல்களால் பெரும்பாலுங் கஷ்ட நஷ்டங்களை யனுபவிப்ப னென்றும் இருணங்களை யுடையவனை போதிலும் பிரபல கீர்த்தியை யடைந்து சுக மனுபவிப்பன் சுபர்களாலுல் இவ்விதமும் பாபராலுல் அந்திய காலவரை கடன்முதலிய விரோத முடையவனுகி வாழ்வனென்றறிய வேண்டும்.

மேற்கூறிய ஸ்தானந்தவிர (சு, சு, அ, கக, கஉ, உ) இவ்வித இடங்களிலும மேசம் கடகம் துலாம விருச்சிகம் தனுசு இவ்வித இராசிகளில் மேற்படி கிரகங்கள் பெலவான்களாகியுங் கேந்திரகோண பெலத்துட னிருக்கினும நோக்கினும் இவ்வித ராசிகள் பெலத்த சுபக்ஷேத்திரமாகினும் பெலமுள்ள

சுபர்கள் ஜீவசரீராதிபர்களானால் விரோத மிராஜதெண்டனை நிவர்த்தி கடன் முதலிய துடன் வாழ்வன் இவைகள் மேற்கண்ட பாவஸ்தானாதிபதி யல்லது ஜீவசரீராதிபதிக ளெந்த பாவாதி காரியாதி இருக்கிறார்களோ அவர்கள் மேற் கண்ட இராசி ஸ்தான மிவைகளிலிருக்கில் பலவித வருத்தங்களையு மனக்கவ லைகளையும் கொடுத்து நிவர்த்தியுண்டாகப் படுமென்று மேற்கண்டவர்கள் பகை முதலிய அபல கேந்திரங்களாகில் சத்துரு முதலியோ ரிலேசானவர்களாகி யும் அவர்களே வனுகூலியாகவும் வாழப்படுவர்க ளென்றும் பாபர்கள் மேற் கண்ட இராசி ஸ்தானமிவைகளில் ஸ்வகேந்திராதி உத்தம பெலன்களையுடை யவர்களாகிக் கேந்திரகோண பெலவான்களாகினும் சத்துரு கொரோமானவர் களாகியும் பிரபலத்துவ முடையவர்களாகி யிருப்பர்கள் அவர்களால் விரோ தம் தாழ் சாதி சத்துருவும் பலவகை மனவருத்தமும் இருணம்முதலியவைகளை யடைந்தும் அவைகளால் தாழ்மைகளை யடையப்படுவன் இருணத்தாலும்விரோ தத்தாலும் தேசம் விட்டுச் செல்லுவ னென்றும் பலவகை வருத்தங்களை யனு பவிக்கப் படுவனென்றும் அறியவேண்டியது. அவையே பகை நீசாதி கேந்தி ராதி இடமாகினும் பகைத்துவ பாபிகள் கூடினும் கடினமான சிரைகளையும் கடினமா யதிகரித்தும் பீடிப்பு முள்ள இருணத்தை யடையப் படுவனென்றும் அவையினால் பெரும்பாலு மூழ்கிவிடுவ னென்றும் அறிக இதில் சுபர்கள் கூடி னும் அல்லது நோக்கினும் பலவித விவாத விரோதம் இருணம் முதலிய பீடி ப்புக ணீங்கி சுக முண்டாகும்.

ரோகபாவம்

உரோக ஜீவசரீராதிபதிகள் சூரியனுடனும் வந்த ஸ்தானாதிபதி கூடியும் அல்லது ஸ்தானத்திலிருக்கினும் அவ்விதம் சூரியன் சந்திர லக்கினாதிபதி மேற் கண்டவர்கள் நின்ற ஸ்தானாதிபதி இவர்களுடன் ஜீவசரீராதிபதி ஸ்தானாதி இவர்கள் யிரவியுடன் கூடினாலும் அல்லது இரவியானாலும் சாதகத்துக்கு பல விதமான சிரம்நேத்திரங் கபாலநோயும் சுரமுதலியவையும் சந்திரனுடில் கபா சிதநோய் செலகண்டம் இழுப்பு முதலிய ரோகமும் குசனுடில் இரெக்த வி ரணகாயம் மிருகாதி ஆயுதம் நெருப்பு முதலிய ரோகமும் புதனுடில் மூலாதிகூ யம் இழைப்பு பீனிசாதி வாதநோய் நேத்திரநோயும் குருவாடில் பீனமுதலிய பெரும் ரோகம் உதரவலி வலிப்பு முதலிய நோயும் சுக்கிரனுடியும் நேத்திரம் செலரோகம் மூத்திரகிருச்சாதி குரிநோயும் சனியாடில் கூ-த்திராதி பித்த வாதசூலை சித்த அசுவாதீனாதி நோயும் இராகுவாகில் பகை விஷாதி மேகவா யுவு விரணநோய்களும் கேதுவாகின் நெக்தகாசாதி மூலம் முதலிய உஷ்ண ரோகங்களையு முண்டாக்குவார்க ளென்றுங் கண்டறிக.

இவ்வித லியாதிக்குரிய ஜீவசரீராதிபதிகள் தனக்குரிய சுபருடன்கூடி யல்லது பார்வை யிடப்பட்டாலு மிருக்குமிடம் உபயமானதல்லது ஸ்திரலிரா சியாலுலும் இலையில் மேற்கண்ட ரோகங்கள் மத்தியகாலத்தில் மிகதோயா லழிந்து ஜீவர்த்தியாகும் சரலிராசியாகினும் அல்லது சுபபெல லிராசியாலு லும் அவ்வித ரோகமெக்காலத்திலும் விடாமல் தொந்த யிருந்துக்கொண் டிரு க்கு மென்றும் அறிக. பாபவீட்சணிய பெலத்துடன் இருக்கினும் பாவரிருக்கி னும் இவ்வித ரோகங்களானது பலவாரான காலங்களிலும் இருந்து வரப்படு மென்று மனக்கவலைகளும் பிணிசரீரனுகியும் வாழ்ந்துவரப் படுவனென்றறிக.

களத்திரபாவ பலன்களாவன

களத்திர பாவத்துக்கு சப்தமாதிபதியையும் சுக்கிரன் சுக்கிரனுக்கு ஏழா மிடத்ததிபதி ஜின்ற கோள்களையுங்கொண்டு களத்திரபலன் சொல்லவேண் டியது ஏழாமிடத்தாதிபதி ஜின்ற ஸ்தானாதிபதி சீவனென்றும் * பாவத்பாவாதி பதி ஜின்ற ஸ்தானாதிபதி சரீரமென்றும் இவ்விதமே காரக வசாதும் பார்த்த றிக. இந்த பாவத்துக்கு வசரீராதிபதி ஒரேவித கிரகமாகியும் அல்லது இருவர் களும் சுபமித்துருக்களாகியும் ஸ்தானாதிபதி ஸ்தானத்தி லிருப்பவர்கள் பெல வான்களாகியும் கேந்திரகோண சுபட்சேத்திர வாசமானவையுடனும் அந்த ஜீவசரீரஸ்தனவசாத் பிரபல பெலத்துட னிருக்கினும் நோக்கினும் அவ்வித்கிர கங்கள் குருவினுக்கு ஜேயுள்ள சுபகிரகங்களாகி யிருக்கினும் நோக்கினும் சாதகத்துக்கு விவாக மேன்மையானது உத்தமகாலத்திலும் உன் தமகளத்திர சுகத்துடனும் மேன்மைகளைப் பொருந்தி வாழப்படுமென்றும் இஷ்டகாரியம் மனைவாக் ஜெயசித்திகளும் களத்திர மூலமாகப் பலவித சுகாதிபோக போக் கியங்களை யனுபவிப்ப னென்றுங் கூறுக. சுபர்கள் பாவராலுலும் பகை முத லிய அசுபகேஷத்திர கெதியுட னிருக்கினும் பாபமத்திய ஸ்தானங்களினும் ஸ்தானம் அதிபதிகாரகர்கள் பெலமற்றும் சீவசரீராதிபதிகள் அசுபகேஷத்திரக் களி லிருக்கினும் நோக்கினும் களத்திர நஷ்டமும் பலவாரான களத்திர சங்க மங்களும் பெருகளத்திர சாதகனுகியும் வாழ்வன் பாபரே பாவராலுல் களத்தி ரவகை தரிததிராதி பலவித மனைவருத்தமும் தனதானியக் குரைவும் களத் திரமின்றிப் போகுதல்லது காலதாமத விவாகம் களத்திர மரணம் பலகளத்தி ரமென்னும் பெருதாழ் விவாகம அகிருத்திய களத்திரமாகும்.

ஸ்தானாதிபதியும் ஜீவசரீராதிபதியும் குரு இரவி குசனுகினும் (உ, டு, எ, கூ, க) இந்தயிடங்களில் சுபட்சேத்திரக் தனக்குரிய பெலமுடைய சுபட்சேத்தி ரங்களாகியுங் கேந்திரகோண பெலத்துடன் வலுத்தும் அவை தனுசு மேஷம் சிங்கம் மீனம் இவ்வித இடங்களாகியும் அவரவர்களின் மித்துரு கேஷத்திரங்

* ஏழுக்கு ஏழாம் வீடு எனக,

களிலும் இருந்தும் களத்திரஸ்தானாதிபதி ஸ்தான வசாத்வே சரீராதிபர்கள் சுப பெலத்தை யுடையவராகி இவ்விதக்ஷேத்திர பெலங்களிலிருக்கினும் ஜாதகனுக்கு உத்தமகளத்திரம் ஒன்றென்றும் அவைகளால்! மிகவுஞ் சுகசௌக்கியமுண்டாகும் மேற்படி கிரகங்கள் பகை நீசத்துவ பாபட்சேத்திரமாகியும் அபெலர்களாகி பாப சம்மந்தத்துடனும் ஜீவசரீராதிபதிகளவ்வித மிருக்கினும் மேற்கூறிய சுபர்கள் பாபரான பெலத்தோராலுலும் ஜாதகனுக்கு பெருதார மென்னும் (உ) முதலிய தாரமுடையவ னென்றும் அவைகளால் மனவருத்தம் ஜாதகனுக்கு களத்திர தோஷமும் சுபர்பாபராகின் களத்திரமூலம் அபகீர்த்திகளும் மனவருத்தமும் இவ்விதமான களத்திரமென்றும் பாபர்சுபராகி மேற்கூறியயிடங்களில் பகை பாவராகின் பலவித விவாகமுடையவ னென்றும் பெருதாரவானென்றும் குடும்பசயங்களும் மனவருத்த முடையவன் பாவர்கள் சுபராகியும் பெலவான்களாலுலும் களத்திரங்களுக்குள் சாதகன் அடங்கியும் களத்திரதோஷமும் பலவகை வருத்தங்களுமடைவன் மேற்கூறிய ராசியிலும் ஸ்தானத்திலும் பாபருஞ் சுபரும் கலந்திருக்கினும் நோக்கினும் சிலகாலங்களத்திர முண்டென்றும் சில காலங்களத்திர மில்லாதவ ஞவனென்றறிய வேண்டியது அனேகாலஞ் சென்றபின் விவாகமுண்டாகு மென்று மவ்வித களத்திரமூலமாக வனுகூலமடைய மாட்டான் ஜாதகன் களத்திரமீது அதிப்பிரீதியுடைய ஞவனென்றறிக.

மேற்கூறிய களத்திர வேசரீராதிபதிகளும் ஸ்தானாதிபதியும் காரகனிவர்கள் பலமுடைய சுபட்சேத்திர கேந்திரகோண கெதியுடனும் (உ, ச, எ, கூ) இந்தஸ்தானம் தனுசு கும்பம் கடகம் கன்னி இவைகளில் அவரவர்களுக்கு கேந்திரகோண ராசிகளாயும் சுபட்சேத்திரமாகியும் பாபசம்மந்த திருஷ்டிகளின்றியும் மேற்கூறிய கிரகங்கள் தங்கள் தங்களுக்குரிய சுபட்சேத்திரங்களாயுமிருக்குமாயின் ஜாதகனுக்குப் பலவிதமான பொருட்சேதமும் களத்திர விருத்தி ஏகமென்றும் குரு புதன் இவர்கள் களத்திரமூலமான விசேஷ தனலாபமும் களத்திரவிர்த்தி என்றும் அவை மூலியவனுகூலங்களையும் களத்திரமூலகீர்த்தி மூர்த்தித் துவாதி பிரபலமும் இவ்வித சுகமான களத்திரமென்று மறிக. சுக்கிரன் ரவி முதலிய சந்திரனுகில் (உ) முதலிய பெருதாரனுயும் முன்களத்திரத்தைவிட பின்களத்திரமானது மிகவு மேன்மையுடன் வாழ்ந்து வருவன் அவ்விதகளத்ரம் மிகவும் பிரபலஸ்தானமும் பாலியாதிவிவாக மாகுதலும் இவ்விதசுகபல னடக்குமென்று இதரமான சனி பாம்பு குசன் முதலியோராகில் காலதாமத விவாகமும் பாலியமுண்டாகில் உடன்மரிக்கும் மனதுக்கிணையில்லாததாயும் பிரியமில்லாததான களத்திரங்களென்றுஞ் சொல்லுக.

மேற்கூறிய ஸ்தானந்தவிர (உ, டு, ஙி, கக) இவ்வித க்ஷேத்திரமாயும் அவை மீனம் மேஷம் மிதுனம் துலாம் கன்னி விருச்சிகம் இவைகளாயும்இவ் விடங்களில் சுபராகிய குரு ரவி குஜன் முதலியோர்கள் சுபபலத்துடன் சீவசரீ ராதிபதி களாகியுங் கேந்திர கோணத்திலும் பாப பலாதி சம்மந்த வீக்ஷணியம் பகை நீசாதி அபெலமின்றியு மிருக்கினும் மேற்கூறிய கிரகங்களாலுல் களத் திர மிரண்டும் பெருதராசயோக னென்றும் சுக்கிரன் சந்திரனுகில் (உ-க்கு) மேல் பட்ட தாரமென்றும் சனியாகில் காலதாமத விவாகமும் புதனுகினும் அவ்விதமே தாமதமும் பாம்பானுல் விவாகமே கிடையாதென்றும் சனி புதன் பாபியானவர்களாகிக்கூடினுல் விவாகமில்லாதவ னென்றும் சுபர்களே பாவரா கின் உண்டான களத்திரம் பலவும் மரணங்களும் பகையுடையவர்க ளாவார் கள் என்றும் களத்திர மூலிய அசுகமேதவிர சுகமடைய மாட்டானென்றும் மனக்கவலைகளும் களத்திரங்களால் தக்கசோகாதிகளையடைந்து வரப்படுவ னென்றறிக.

பாபரேசுபராகில் முன்களத்திரமும் பின்களத்திரமும் தீர்க்கவிர்த்திகளை யடைந்து வரப்படும் களத்திரவகையினுல் பலவகை வருத்தமும் தன்பமும் நடந்துவரு மென்றறிக. நீசமுதலிய பகை பாபட்சேத்திரங்களாகியும் அவர்கள் பாபராகியிருக்கினும் களத்திரமொன்றே விருத்தியாயினும் குடும்பவிருத்தி யின்றியாவன் சுபராகில் பெருகளத்திர மூள்ளவனுவன் சுபரேபாபரானுலும் பாபர் சுபரானுலும் இவ்விதமான தாரமே பெருதாரமென்றும் அவைகளால் சுகசௌக்கிய தனுகி முதலிய லாபமுடையவனுவன் பாம்பு முதலிய கூஷ்ண சந் திரன் சனி இவர்கள் சீவசரீரமூலமாகி யிருக்கினும் நோக்கினும் பரசம்யோக மனையாளாகி வாழப்படுவள் அவ்வித மனைவியாலே பிரபலயோக மடைந்து சுகத்துடன் வாழ்வனென்றுங் கண்டுகொள்ள களத்திர மூலமாக சுகசௌக் கிய பலனடக்கும் (சு, அ, கஉ) இவ்விடங்கள் விருச்சிகம் மீனம் மிதுனம் தனுசு கன்னி மகரம் இந்த ராசிகள் களத்திர ஜீவசரீரமல்ல தவ்வதிபர்களாகி னின்றாலும் ஸ்தானாதிபதிகள் கூடியல்லது அவ்விடங்களிலிருக்கினும் நோக்கி னும் அவ்வதிபர்கள் சீவசரீரமல்லது களத்திர ஸ்தானாதிபர்களாகி அவர்களுக் குரிய சுபட்சேத்திரங்களிலும் சுட்சேத்ராதி பெலனாகளைப் பெற்றிருக்கினும் ஜாதகனுக்கு மிகவும் கொடுமையான களத்திரமாகினும் களத்திரஞ் சீவ வீர்த் தியுடன் களத்திர சுக மூண்டாகு மென்றும் அதிக கீர்த்தி மூர்த்தியடையாள் களத்திர மூலிய அபகீர்த்தி யுடையனுவன் அந்தத்தானமல்லது அதிபதிகள் புதன் குசன் சனி பாம்பாகில் இவர்கள்பெலத்தால் மேற்கூறிய ஜாதகன் களத்

* அந்தந்த பாவங்களுக்கும் சீவசரீர மூல மென்னவெனில் பாவாதிபதி யும் அவன் னின்ற விடமுமேயாம்.

திரவகையான குடும்ப விருத்திகளையும் புத்திர விருத்திகளையும் அடையப்பட மாட்டானென்றும் அவ்வித களத்திரங்களினலும் சுகமடையான் விசாராதி அக்ருத்திய தாரமுடைவனுவன் அவர்களே சுபர்களாகியும் சுபக்ஷேத்திர வாச சம்மந்த திருஷ்டியுடனிருக்கில் சாதகன் களத்திரமானது விசேஷ குடும்பமில் லாவிடினு மேகதாரனுகி சத்களத்திர வந்தனுகி வாழ்வன் சுபர்கள்சுபராகியிரு க்கினும் மேற்கூறியபடி தாரம் ஒன்று பிரபலவம்ச மனேயாளென்றும் அவ்வித தாரத்தினுலனேகவித தனிலாபாதி சுகசௌக்கியங்களே யனுபவிப்ப னென்று மறிக

சனி முதலிய பாபகிரகமானுலும் அவர்களிருக்குமிடம் பாபஸ்திர விராசி களாகியும் ஜீவசரீராதிபதிகளும் பெலமற்று பகை பாபர் புதன் சனி கேந்திர ங்களிலிருக்கினும் பெலமற்று அசுபர் வீட்டில் அபெலனுகியும் இருக்கின் விவாகம் இடையாதென்றும் அறிக அவைகளே சுபட்சேத்திர மல்லது ஸ்தானு திபதி காரர்கள் ஜீவசரீராதிபர்களாகி சுபபெலத்தைப்பெற்று மேற்கூறிய பாப ட்சேத்திரம் புதன் சனி இவர்களின் சுட்சேத்திர இராசிகளில் தனக்குரிய மித்துரு வீடாயிருக்கினும் நோக்கினும் ரூபதாரனுகியும் காலதாமத விவாகத் தையும் அந்தியகாலத்தில் விவாக களத்திர மின்றியும் அடைவ னென்றுங் கூறப்படும்.

களத்திர வம்சங்களால் அல்பலாபத்தையுங் களத்திர வம்சக்ஷயத்தையும் அடையப்படுவன் என்ற மேற்கூறிய ஜீவசரீராதிபதிகளுக்கு ஷஷ்டாதிபதி யல்லது அஷ்டமாதிபதிகள் தீன்ற ஸ்தானுதிபதிகளானவர்கள் களத்திரஸ்தா னமான (எ, கக, உ) இவ்விடங்களிலும் மல்லது சுக்கிரனுடன் சுக்கிரனுக்கு (எ, கக, உ) இவ்விடங்களிலு மல்லது ஜீவசரீராதிபதிகளுடன் கூடியல்லது நோக்கினும் களத்திரத்துக்கு பிணி முதலிய பாதையுண்டு சனி பாம்பு கூடி யல்லது நோக்கின் தேவதைப்ரதி பெந்தாதி உபத்திரவ முண்டென்றும் குரு புதனுகில் புத்திர தோஷமுடைய தாரமென்றும் சந்திரன் சுக்கிரனுகில் அதி யோக களத்திரமென்றும் இரவி சனியாகினும் உரோக தாரமென்றும் கூறப் படும் இவ்விதமே சுபபாபத்துவங்களறிந்து களத்திர பெலா பெலன்களைக் காண்க.

களத்திர பாவ கணிதம்

மேற்கூறிய ஸ்தானுதிபதி ஸதானம் சுக்கிரன் இவர்களுடனும் ஜீவசரீரா திபதிகளுடனுங் கூடிய கிரக சுபா சுப பலனுக்குரிய வெண்களே தனித்தனி யெடுத்து உச்சமானுல் இராசி பலனுக்குரிய வெண்களால் பெருக்கியும் ஆகி யாகில் கிரகங்களுக்குரிய வெண்களாலேயே வைத்துக்கொண்டதை யவரவர் களின் வெண்பேருக்குக் கொடுத்து வந்த ஈவில் அவ்வித களத்திர ஜீவசரீரங் களுக்கு (க, எ, கக·க்) குடைய கிரகஞ் சுபருள்ளவர்களின் ஈவைத்தார மென்

றும் மற்ற ஈவுவந்தால் பரதார போகனென்றுங் கூறுக ஆகையால் மேற்கண்ட வெண்களே தனித்தனி ஒன்பதில் கழித்த சேஷம் திசையிலும் வந்த ஈவை (ரு-ல்) பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் புக்தியிலும் வந்த திசாபுக்தி காலங்களில் களத்திர லாபாதி சுக சௌக்கியங்களும் களத்திர மூலமான மேன்பாடுகளும் அதிக வனுகூலங்களும் இஷ்டவசிய ஸ்ரீ போகங்கள் விசேஷமுண்டாகுமென்றும் அவரவர்களுக்கும் அஷ்டமாதிபதி னின்ற வதிபன்பல வெண்களேக் கூடச்சேர்த்து (கூ-ல்) கழித்த சேஷமும் வந்த ஈவை (ரு-ல்) பெருக்கி முன் போலவே கழித்துக்கண்ட சேஷம் திசை புக்திகளிலும் களத்திர தோஷமென்றும் களத்திரங்களால் பலவித வாதமும் களத்திர வகை கூயமும் களத்திர விரோதங்கள் இவ்வித பலனடக்கு மென்றறிய வேண்டியது.

பிதுர்பாக்கியம் உபதேசாதி பலன்கள்

இரவியையும் புதனையும் ஒன்பதாமிடம் அதிபதி இவைகளையும் இவர்களுக்கு ஒன்பதாமிடத்ததிபதினின்ற இராசிநாதனுடனும்கூடிய கிரகபெலரீதியாய் பிதுர்பாக்கியம் உபதேசாதி பலன்களே யறிக பிதுருவுக்கு இரவிக்கி ஒன்பதாமதிபதி னின்ற யிராசிநாதன் சீவனென்றும் இலக்கினத்தக்கு ஒன்பதாமிடத்ததிபதி னின்ற இராசிநாதன் சரீரமென்றுங் காண்க ஜீவசரீர மூலகிரங்களுக்கு ஐந்தாமதிபதி உபதேசாதிகளுக்கு ஜீவனென்றும் ஐந்தாமதிபதியே சரீரமென்றும் பெயராகும் அவர்களுக்கு ஒன்பதாமதிபதி பாக்கியத்திற்கு சரீரமென்றும் அவர் னிற்குமிடத்ததிபன் ஜீவனென்றும் பெயராகும் ஆகையால் இவ்விதம் ஒவ்வொரு பாவங்களுக்கு ஜீவசரீரகல்பிதஞ் செய்தபின் ஒவ்வொரு பாவ ஜீவசரீராதிபதிகள் ஏகராஞல் அவர்களின் நலம் தீங்கினுக்கிசைந்தபடி பலன்களேக் கொடுப்பர்களென்றும் தனித்தனி கிரகமாகினும் ஓரிராசியில் மித்துருவான சுபர்களாகினும் ஒருவராகி சுபபெலத்துடையவர்களாஞலும்வெகுவாண மேன்மையுடன் வல்லபத்துவமான அதர்க்கிசைந்த பாவபலனே விருத்தியுடன் அதிகமான மேன்பாடுகளேயும் பிரபலத்தையும் அடைவன் அக்கிரகங்கள் கணிதத்திற்கிசைந்து வருங்காலமான திசாபுக்திகளில் மேன்மையான அதர்க்குரிய பாவத்தை விருத்திசெய்வர்களென்றும் மற்றயக்காலத்தில் விருத்திசெய்யப்படமாட்டார்களென்றும் அவர்களின் பலாபலனுக்கிசைந்தபடி அவ்வித பாவங்களே அல்ப மத்திம பூரணமென்ற கணக்கின்படி அளவிட்டுக் கூறல்வேண்டும். அந்த பாவங்களுக்கு இணையான சீவசரீராதிபதிகள் பெலமற்றாலும் பகை நீசாதிபாவராஞலும் அசுபராகினும் அவ்விதபாவத்திற்கு இசையுள்ள பலனேயடையான் அவைகள் பூர்வகாலமாக யிருக்கினும் ஜாதகன் காலத்தில் அவைகள் வலுவற்றுக் குறைந்த தாயும் கஷ்டத்துடனும் போய்விடும் ஆகையால் இவைகளே னிதானித்தறிதல் வேண்டும்.

மேற்கண்ட சீவசரீராதிபத்திய மூள்ளவையான கிரகசம்யோக மொன்ரூன பூர்ணபெலக்கோள்களின் பெலாபெலன்க ளறிந்துரைக்கவும் மேற்கூறிய சீவசரீராதி பத்தியம் பெற்ற கோட்களும் ஸ்தானம் அதிபதிகாரர்கள் இவ்வைந்து கோட்களும் பூரணமான அவரவர்களுக்குரிய பெலன்களோடு கூடியும் சுபமித்துருட் சேத்திர வாசராகி யிருக்கினும் சுபதிருஷ்டியல்லது சம்மந்தம் பெரினும் சாதகனுக்கு அதற்குரிய பலமானது பூர்வபிரபலமும் மென்மேலும் அதிகமான ப்ராபலியத்தை யடைந்து வரப்படுமென்றும் அதிக மேன்பாகெளும் மிக்கவுங்கோத்தி மூர்த்தியுடன் வாழ்வர் குருவாகி (கூ)க்கு மேல்பட்ட பலன்களுடனும் இருக்கின் பிதுரார்ச்சித ப்ராபலிய பிரபல ராச யோகமும் தேவர்களுக்கு இணையுள்ள அற்புதனுகியும் மேன்மையான யோகங்களே யடைவன் இவ்விதமே ஒவ்வொரு கிரகங்களுக்கு முரிய பெலன் களே யாருய்ந்தறிக.

மேற்கூறிய ஸ்தான காரக சரீராதிபர்கள் பெலவான்களாகியுங் கேந்திர கோண கெதியிலும் சுபபெலத்துட னிருந்தும் பாபட்சேத்திர பாபகெதியில் லாமதுமம் சம்மந்ததிருஷ்டியில்லாமலும் குருவாகி சீவசரீராதிபதிகளே சமான ராகியும் சுபர்களாகியும் வெவ்வேருனல் சுபமித்துருவாகி (க, உ, ங, கூ) இந்த இராசிகள் தனக்குரிய சுபபலக்ஷேத்திரங்களாகி இருக்கினும் பிதுர் ஜீவசரீர திடவானுகி வாழ்வன் சரவிராசிகளிலேயே மேலே கூறிய ஐவகை கிரகபெலன்களுடன் யிருக்கினும் சாதகன் பிதா விருத்த காலவரை ஆயுள் விருத்தியுள்ளவனுவான் அவ்வித கிரகங்களே பாக்கிய சீவசரீரர்களாலும் மிகவுமேராளமான தனவிருத்தியையுடைய பிதா வாகியும் பிரபல கீர்த்தியுடனும் மிக்கமேன்மையான இராசத்துவமுடைய யோகவானுய் பிதாவாழ்வனென்றும் புகழுடையதாகியும் பெரும் பிரபலயோக வானுகிய பிதாவாகவும் கூறுக சரசரமே இராசிகளாகி சுபருடையதாகில் வார் தீக பூரணத்தில் பிதா மரணமடைவனென்றும் சாஸ்திரமாகில் வார்த்தீக முத லிலேயேமரணமென்றும் சரமுபயமாகில் வார்த்தீக மத்தியில் மரணமென்றும் ஸ்திரஸ்திரமாகின் பாலியத்திலேயே மரணமென்றும் ஸ்திர முபயமாகில் பாலிய மத்தியில் மரணமென்றும் ஸ்திரஞ்சரமாகில் பாலிய பூரணத்தின் வய தில் மரணமென்றும் உபயாதுபயமாகின் மத்திம மத்திமத்திலேயே மரணமென் றும் உபயம் ஸ்திரமாகில் மத்திம வல்லபத்திலேயே மரணமென்றும் உபயமுஞ் சரமுமாகில் மத்திம தீர்க்கவயதிலேயே பிதாவுக்கு கருமமுண்டாகு மென் றறிய வேண்டியது.

(கூ-எ-கக-கஉ) இவ்வித இடங்கள் சுபட்சேத்திரமான பெலத்துடன் இருக்கின் அவை சரசரமானுல் மத்திம வயதின் பூரணத்திலேயே மரணமும் சரஸ்திரமானுல் மத்திம மத்திம வயதில் மரண மென்றும் சரமுபயமானுல்

மத்திமஅல்பத்தில்மரணம் எண்றும்ஸ்திரஸ்திரமாகில் பூரணகடையில் பிதுர்மரணமும் ஸ்திரசரமாகில் பூரண மத்திமவயதிலும் ஸ்திரமுபயமாகில்பூரணவல்லபத்திலும் உபயாதுபயமாகில் முன்கூறிய விதிப்படிக்கு கண்டறியவேண்டுவனவாம்(சு-சு-அ) இவ்விதஸ்தானங்களில் பிதுர்முதலிய பாவசரீராதிபர் பெலமுற்றுஞ் சுபட்சேத்திரத்திலும் இருக்கினும் அவ்வித பாவஸ்தானாதிபதிகள் தனக்குரிய சுபட்சேத்திர பெலன்பெற்றிருக்கினும் சாதகனுக்கு மேற் கூறிய சீவ சரீராதிபர்களல்லது பாவஸ்தானாதிபர்கள் பெலமுற்றும் தனக்குரிய இடங்களிலிருக்கில் அவை சரசரமாகில் பிதுர்வம்சக்ஷயமும் பிதாவுக்குப் பலவித நோய்கள் இருணங்கள் இவைகளால் வருந்திப்பின் வயதில் விருத்தியாகினும் சுவமாரவயதில் பிதுர்சுமமும் ஸ்திரமாகில் யவ்வனவயதில் சுமமும் பிதுர்வம்சதனமுள்ளவ னென்றும் உபயமாகில் பாலியத்திலேயே மரணமென்றும் அவர் பாபரானலும் பாபசம்மந்தம் அல்லது பிதுர்ஸ்தானமான ஒன்பதாமதிபதி இரவி சனி முதலிய பாவராகினும் பாலியத்திலேயே தகப்பன் மரணம் தகப்பன் வழி சொத்துக்களில்லாதவனுகி வாழப்படுவனென்றும் பாவர் சுபராகினும் அவைகள் தனக்குரிய சுபட்சேத்திரபலன்களுடனும் சுபபலமைத்திர சம்மந்த திருஷ்டிகளையடைந்து பெலவான்களாகில் பிதா லிருத்தவயதுவரை ஆயுளுடையவனுகினும் குடும்பம் பிதருள்ளவரைக்ஷயமும் பலவகை வருத்தங்களையும் துன்பத்தையும் மனதுக்கங்களையும் பலவகை கஷ்டநஷ்டம் சொத்து இல்லாதவனுகியும் லோக இருணத்தையும் அடைந்து வரப்படுவனென்றறிக.

மேற்கூறிய சீவசரீராதிபர்கள் அபெலராகி சனி இரவி பாம்புக ளாகியும் (கு-டு-அ) இவ்வித இடங்கள் அசுபபாபட்சேத்திரமாகியும் பகை நீசாதி பாப பெலன்களுடனும் பாபமத்தியமாகி இருக்கினும் கற்பமானது முதற்கொண்டு அதிவாலிபம் என்ற குழவிப்பருவத்திலேயே தகப்பன் மரணமாகி விடுவனென்றும் அவைகளை சுபர் திருஷ்டி சுபட்சேத்திர பெலனுடனும் சுப பாப சம்மந்தமாய் இருக்கினும் நோக்கினும் சுபர்கள் பாபத்துவம் பெற்றும் மேற் குறித்த இடங்களிலிருக்கில் இந்த சாதகன் பிதா பாலியவயதில் மரணமாவன் தன்மமுதலானவைகளை விசேஷ பிரபலமாக இருந்து வரப்படுமென்றறியவேண்டும்.

உபதேச சீவசரீராதிபர்கள் விசேஷ சுபமானதையும் (டு-கு-ஙு-கு) இவ்விதஇடங்கள் குருவீடாகி இருக்கின் பிரமவித்தியாதி யோகமார்க்க தீக்ஷாமசித்தியான உபதேசமும் புதனுடன் அல்லது புதன் வீட்டிலிருக்கினும் ஞானவானுகி விவேகமான உபதேசாதிகிரகமும் சுக்கிரனுடனல்லது சுக்கிரன் வீடாகில் பெண்தேசாதி உபதேசத்தையும் மேன்மையும் அடைவன் சனி

பாம்பு முதலியோராகினும் அவர் வீடானலும் பல சில்லரை தேவதை நீசத் தொழில் உபதேசம் இவ்வித பாபோபதேசனுகி வாழ்வென் யென்றும் அறிக.

பிதுர்பாவாதி கணிதங்கள்

ஜீவசரீராதிபதியுடனும் ஸ்தானம் அதிபதி இவர்களுடனுங்கூடிய கிரக சுபாசுப வெண்களுக்கு இசைந்தபடி உச்சமான கிரகத்துக்கு இராசியெண்ணுற் பெருக்கியும் மற்ற ஆட்சிக்கு (சு-ல்) (க) பங்கு சேர்த்தும் கட்புக்கு (ஒ) பங்கு சேர்த்தும் பகைக்கி கால்பங்கு சேர்த்தும் கூட்டிக்கண்ட தனித்தனி எண்களே யும் அவரவர்களின் பூராவான வெண்களின் பேருக்குக் கொடுத்துக் கண்ட ஈவு சுபத்துவம் தெரிந்த கிரக வெண்களின் ஈவு எவ்வளவோ அத்தனை பிதுர் வம்ச உடன் பிறப்போ ரென்றும் சுக்கிரன் சந்திரன் புதன் கன்னி மிதுனம் மீனம் தனுசு விருஷபம் துலாம் இந்த ராசியில் கிரகமிருக்கிறதாயினும் மேற் கூறிய கிரகங்களாலுங் கொடுத்துவந்த ஈவாகி லவ்வெண்களே பாட்டன் பின் னதாரங்களுக்கு உதித்த பிதுர் சகோதரங்க ளென்றும் அல்லது பாட்டன் மருதார முடையவனென்ற விதிகளையறிந்து கூறல்வேண்டும் மேற்கண்ட வெண்களே தனித்தனி (கூ-ல்) கழித்த சேஷமும் வந்த ஈவை (டு-ல்) பெருக்கி ஒன்பதில் கழித்த சேஷம் திசாபுக்தி காலங்களில் பிதுர் பிரபலம் யோக மேன் மைகளையுஞ் சுக சவுக்கியங்களையும் அடையக்கடவன்

அந்தந்த கிரகங்களுக்கு அஷ்டமாதிபனின்ற வதிபனுடன் கூடிய வெண் பெலத்தைக்கூட்டி (கூ-ல்) கழித்த சேஷந்திசையிலும் வந்த ஈவை (டு-ல்) பெருக்கி (கூ ல்) கழித்த சேஷம் புக்தியிலும் பிதுர்வம்ச கஷ்ட துக்க மரண கரும சூதகமும் பலவித இடுக்கமும் பொருள் சேதம் பலவகை வருத்தமும் பிதுரு வம்சத்தால் உண்டாகு மெனறும் கண்டறிய வேண்டியது கடைத்திசை புக்தியிலு மெவை விசேஷ பாபபெல திசாபுக்தியோ அந்தக்காலம் பிதுரு கரு மமென்றும் அதிக பூரத்துடன் கண்டறிந்து கொள்க.

கருமவிராஜ்ஜிய பலன்

குரு வசாத் கருமாதிபதியான பத்தாமிடத்ததிபதி லின்ருதி இராச்சியத் திர்க்கு சரீரமென்றும் ஜென்மவசாத் பத்தாமிடத்ததிபதி லின்ற யிராசிநாதன் இராஜ்ஜிய பாவத்துக்கு சீவனென்றும் பத்தாமிடத்ததிபதி லின்ற கோன் கரு மத்திர்க்கு சீவனென்றும் ஏழாமிடத்ததிபதி லின்ற இராசிநாதன் கருமபாவத திர்க்கு சரீரமென்றும் சுக்கிரனேயும் பத்தாமிடத்தையும் அதிபதியையும் இவை களைக் கண்டு கருமம் இராச்சிய பலன்களையும் கூறப்படும்.

மகரவிலக்ன சீவனாதி உத்தியோக இராஜ்ஜிய பலன்கள்

ஜீவன பாவம்

சனிவசாத் (கூ) மிடத்ததிபதிஜின்ற இராசிநாதன் உத்தியோகாதி ஜீவனத்துக்கு சரீர காரணர்களென்றும் பத்தாமிடத் ததிபதிக்கி (கூ) மிடத்ததி பதிஜின்ற இராசிநாதன் உத்தியோகாதி ஜீவனங்களுக்கு ஜீவகாரணஸ்தர்கள் என்றுங் கூறுவாம் மேற்கூறிய பாவங்கள் மூன்றிர்க்கு சீவசரீராதிபர்கள் பெல மூற்ற சுபராகியுங் கேந்திரகோண உச்சாதியான தனக்குரிய சுப பெல க்ஷேத் திரங்களிலும் ஸ்தானாதிபதி காரகர் பத்தாமிடம் இவைகளின் கூட சுப சம்பந்த திருஷ்டி முதலிய பெலன்களுடன் உத்தம கிரகங்களாகி வேறு எவ்வித அசுப சம்மந்தமுமின்றி பெலத்தும் மேன்மையுட னிருக்கினும் பாபக்ஷேத்திரம் பாப மத்திய இடங்களின்றி இருக்கினும் சுபர்களாயலது சுபட்சேத்திர மாஞலும் அவரவர்களுக்குரிய மித்துரு க்ஷேத்திரமாகியும் பெலத்தும் யிருக்கில் ஜாதகன் பிரபலமான சீவன உத்தியோகமும் இராச்சிய சீவசரீராதிபதி ஸ்தானாதிபதி குரு ரவியல்லது குஜனுகில் முன்கூறிய பிரபல பெலங்களுடனிருக்கினும் சுப வீக்ஷணியமானனும் விசேஷ பிரபலத்தையுடைய மேன்மையுடன் அநேக இராச்சியாதிபனுகியும் பிரபலவானுகியும் கீர்த்தி மூர்த்தியுடன் வாழ்வன் இத் தடன் கருமவசாத் கூறிய சீவசரீராதிபதிகளும் ஸ்தானாதிபதிகளும் மேற்கூறி யசவுமிய சுபராசி சுப க்ஷேத்திரங்களில் வாசஞ்செய்யில் விசேஷ சத்கருமமு டைய மேன்மையும் பிரபல கீர்த்தி வந்தனுகியும் அதிகமேன்பாடுடன் அரச னுகி வாழ்வன் மேற்கூறிய சீவன உத்தியோக மூலமான சீவசரீராதிபதிகள் பெலவான்களாகியுங் கேந்திர கோணாதி உத்தம பெலத்துடனிருக்கின் பிரபல சீவனயோகனுகி எவ்வித பிரஜைகளுக்கும் மேலானவதிகாரஞ் செய்து புகழு டன் சீவனஞ்செய்வன் மேற்கூறிய காரண வேதுவில் யார்வகை மூலத்தால் சீவசரீர சித்தாந்த மேற்படப் பட்டதோ அவர்களின பாப சுபத்துவம் முதலிய தும் சத்துரு மித்துருவாதி சமபெலங்களின் விஷயங்களையுங் கண்டு இவை களின் பாவங்களைக் கூறுக. மேற்கூறிய கிரகங்களின் பாப சுபத்துவங்கள் அறி வதில் பாவராயும் மிகவும் அவ பெலன்களுடனும் இருக்கின் அந்த பாவங்க ளால் குறைவு கெடுதலையும் அவ்வித பாவமே அபாவமென்றுங் கூறப்பட்ட னவாம்.

இராச்சிய சீவசரீராதிபதிகளும் ஸ்தானாதிபதிகளும் பெலவான்களாகியும் அதில் சுபபெல குரு சனி அவர்களாகினும் பெலமூற்ற தனக்குரிய (உ-க்கு) மேற்கொண்டஸ்தான பெலன்களுடன் (எ, க) இவ்விடங்களில் பூரணச் சந்தி ரனுகி இருக்கினும் நோக்கினும் சாதகனுக்கு விசேஷமான பிரபலத்தையுடைய

இராச்சியவதிபனுகியும் இயாவரையு ஸீகர்க்காமல் வல்பனுகி யனேக இராச்சிய ங்களேயும் நூதன நூதனமாகச்சேர்ப்பான் அவையாவது (க, ங, கூ, ம) இவ்வி டங்களாகியும் மேற்கூறிய பலன்களுடனும் இருக்கில் விசேஷகிருமாதி இரா ச்சியங்களேயும் அனேகவிதமான பிரபல அங்கங்கள் குதிரை யானே பல்லக்கு முதலிய விசேஷ அகண்ட இராச்சாதிபனுகிவாழ்வன் சுக்கிரனல்லது சந்திர னுகிலும் மேற்கூறிய ஸ்தான பெலன்களுடனும் முன்கூறிய பெலப்படிக்கும் இ நக்கின் அனேகவித இராச்சியாதிபனுகினும் ஒரரசனுக்குள்ளடங்கி பூசக்கி ரக் குடைபிடித்து வாழ்வன்

புதனல்லது ரவியாகிலும் அல்பமான கிரூமமுடைய சிற்றரசனுக்குங்கீ ழுற்ற வதிபனுவன் கூஷீணசந்திரனுகில் சாதாரண விவசாய பிரபலயோகவனுகி வாழ்வன் பாம்பு குசன் முதலியோராகில் ஒன்று மின்றி பூமி முதலிய வகை இன்றியும் அலேவன் சுபரேபாவராகி இவ்வித பெலனுகில் பூர்வார்ஜித விசேஷ அரசத்துவ யோகராயிருந்தும் மத்தியில் கெட்டு விடுவார்கன் (கக, ங, எ, சு, அ) இவ்வித வீட்டில் சுபகிரகங்கள் பெலமுற்றவராலுலும் சிலகாள் வரைதான் இராசியாதிபனுகினுங் கிடையாமல் திண்டாடிப்பின் அடைவன் (கஉ, க. உ) இவ்வித இடங்களில் சுபர் பெலத்து இருப்பாராகினும் ஜீவசரீராதிபர்களும் வலுவுடனிருக்கில் ஜாதகன் முன்னுர்ஜித இராசத்துவாதி பொத்தபூமி அதி பத்தியமில்லாமல் இவன் நாளில் புதிதாக சிவீகாராதி அபிமானம் பெண் வழி இவைகன் மூலமாய் பூமி கிராமம் இராச்சிய பத்தியம் கிடைக்கும் (ம, எ) மிடமாகினும் இவையில் பாதி லாபம் அபிமானுதி சிவீகாரம் பெண்வழி இவை களால் பூமி முதலிய வீகேள் கிடைக்கும்.

ஜீவ சரீராதிபதி சுபராகியும் ஸ்தானுதிபதி ஸ்தானத்திலிருப்பவர்கள் அசு பராகியுங் கேந்திரகோண யிடங்களில் பிரபல பெலத்துடனிருக்கினும் நோக் கினும் பெண்வழியினுலும் சிவீகாராதிகளாலும் பிரபல தனம் முதலிய வதி காரம் அதிபத்தியங் கிடைக்கும்.

பாவர்களே பாவராகியும் சீவசரீராதிபதிகளும் பாவராகி இருக்கில் பிரா பூமி பிரர் இராசாங்கத்துக்கு ஆசைப்பட்டு தன்கைப்பொருளேயுந் தோற்றுப் பலவித கஷ்ட நஷ்ட மடைவன் சுபரும் பாவருமாகக் கலர்ந்திருக்கின் பலநாள் பரபொருளில் விரயஞ்செய்தபின் இவனுக்கு சில சுவல்பலாபங் கிடைக்கும் சுப பெல பிரபல முடையவர்கள் குரு சுக்கிரன் சனி ரவி இவர்களாகி தனுசு மகரம் மேஷம் கன்னி கும்பம் துலாம் இவைகள் அவரவர்களுக்குரிய சுபகேந்திர பெலத்துடன் (உ-க்கு) மேலான பெலன்களே சீவசரீராதி ஸ்தானம்

மகரவிலக்ன சீவனுதி உத்தியோக இராஜ்ஜிய பலன்கள்

அதிபதி யிவர்களுக் கிருக்கில் இதனுக்கு இனுமாகவும் பிரிய வசியத்தின் பேரி லும் அயல் மன்னர்கள் இனுமாக அனேக தனங்களேயும் பூமி கிருமங்களேயும் அனுபவிக்கும்படி தியாகமாகக் கொடுத்து அவைகளால் லாபத்தை மடைவ னென்றுங் காண்க.

மேற்கூறிய ஜீவ சரீராதிபதியும் ஸ்தானுதி முதலியோர்கள் தன தானுச்சம் பெலமித்துரு சேத்திராதிகளாகியுங் குருமுதலிய சுக்கிரனுகியும் இருக்கி லே ராளமான பூமி விருத்தியுடன் வாழ்வன் அவர்களே அபெலமுடையவராகியும் பெலமற்றும் இருக்கினும் ஸ்தானம் அதிபதி ஜீவாதிபர்கள் பாபகேந்திரமாகி யும் பெலமற்ற (க, அ, கூ) இவைகளல்லது இவைகளுக்கு இணேயான பாப கேந்திரமாகினும் பூர்வார்ச்சிதமிருந்து அழிந்துப்போய் விடும் இரவி சந்திர குருவல்லாத கிரகங்கள் எவராலுலும் சுப பெல சீவ சரீராதி ஸ்தானம் அதிபர் இவர்களாகியும் பெலத்துடனிருக்கினும் பூர்வார்ச்சித மின்றி சுயார்ச்சிதமாக வே விசேஷ பூமி கிரகவாகனுதிகளேயும் இராஜவனுகூல வதிகாரத்துவங்களே யும் அடைவன் இரவி சந்திரன் குரு இவர்களுடன் அல்லது இவர்களே மூல மூடையவர்களாய் இவர்களே ஜீவசரீராதி பெலத்துடன் இருக்கில் விசேஷ பிரபல வாசத்துவம் பெற்று வாழ்வனென்றும் புதன் சந்திரன் சுக்கிரனுகிகேந் திர கோணமான (க, ச, எ, ஐ. டு, கூ, உ) இவ்விடம் தனக்குரிய சுபகேந்திர பெலமாகி ஜீவசரீராதிபர்களாவது மூலகாரணஸ்தராவது புதன் சந்திரன் சுக் கிரன் கேது இவர்களிலெவராகினும் பெலக்கினும் பெண்வகைப் பொருள்கள் பூமி கிரகவாகனுதி தன பிரபலமடைவன் சீவன விஷய வசாத் சீவசரீராதிபதி கள் பெலத்துடன் கேந்திர கோணவனுய் இரவி சந்திர குரு மூலமாகவும் யிவ ர்களே சீவ சரீராதிபத்தியம் ஸ்தானம் அதிபதித்துவத்துடன் அவர்களின் சுகேந்திர இடங்களில் பகை நீசாதி இன்றி சீவசரீர ஐக்கியத்துட னிருக்கி னுங் நோக்கினும் பெலத்து (டு, சு, ஐ, கூ, உ) இவ்விடம் இரவி குரு மதி இவர்களின் வீடாகி இருக்கின் இராசாங்கங்களில் விசேஷ பிரபல கீர்த்திப் பெற்ற ஜீவன உத்தியோகமுடையவனுகியும் யாவரும் மெய்க்கவாழ்வன் அதில் பாபர்வீடு பகை பாவரான சனி பாம்பு இவர்கள் கூடினுமல்லது நோக்கினும் மத்தியஸ்தானத்தி லிருக்கினும் சுபர்கள் பாவராகிக்கூடியல்லது பார்த்தாலும இரசாங்க வடிமை கீழ்த்தொழில் புரிவன் அல்ப சீவனமுடையவனுவன் சீவன சரீராதிபாகளும் பெலமற்ற பகைபாபராகி பாபகேந்திரமாகில் கடுமையான வல்பத்தொழிலுங் கருமஹீனமும் குறைவான சீவனஞ்செய்வன்.

மேற்கூறியவர்கள் (சு, அ, கூ, கு) இவ்விடங்கள் சுபராகி இருந்தும் பகை பாபத்துவம் பெற்றுல் ஜீவனம் பிரபலமாக இராஜாங்கத்திலிருந்து மத்தி யில் குற்ற முடையவனுகி இராஜாபராதியாகி ஜீவனத்திலிருந்து விலக்கப்பட்

மகரவிலக்ன சீவனாதி உத்தியோக இராஜ்ஜிய பலன்கள்

டும் தெண்டனைகளையும் அடைவன். அதில் ஜீவசரீராதிபதிகள் சுபபெலவதிப ராய் மாத்திரும் வலுக்கில் ஜீவனம்போய் மருபடி கிடைக்கும் அனுகூலம் பெரு வன் குற்றம் முதலிய தாழ்மை சீவர்த்தியாகும்

மற்றய (உ, கி, ச, எ, கக) இவ்விடமாகியும் ஜீவசரீராதிபதிகளும் மூலகா ரணஸ்தரும் சுபபெல முடையராகின் அதிலும் புதன் சந்திரன் முதலியவர்க ளாகி பெலத்திருக்கில் மிகவும் பிரபல வாணிபத்துவம் மொத்தமான கன்டிரா க்ட்டு ஒப்பந்த சம்மந்த மிவ்வித வியாபாரம் புகுந்து வேலைசெய்து அனேக அடி மை முதலிய பிரபலத்துடன் சுவயமுயற்சியுடனும் வல்லப கீர்த்தியாவான் அபெலராகினும் பகைபாபக்கோளாகினும் மேற்கூறிய யிடங்களில் மேற்கூறிய கிரகமிருக்கில் வியாபாரிக்குள் கூட்டு முதலிய அல்பவியாபாரமும் பின் மேன் படாகிய பிரபல மடைவன்.

மேற்கூறிய யிடங்களில் அசுபர்களே சுபராகி ஜீவசரீராதிபர்கள் மூலகா ரணத்தரும் அல்பாதி பெலன்களைப் பெற்றிருக்கினும் முதல் விருத்திபோல் வியாபாராதி ஜீவனங்களில் காண்பித்து நஷ்டகமாகிப் பின் பிரபலவானுவன் அமரபக்ஷ சந்திரனுகின் அடிமைசெய்து ஜீவிப்பன் (சு, கூ, கஉ, கக) இவ்விட ங்களில் சுபர்களே சுபபெலனுகியும் * ஜீவசரீராதி மூலகருத்தாக்களும் பெலக் கில் சுவய ஜீவனவல்லபனுவன் குருவாகி யிருக்கின் சாஸ்திராதி உபதேச ஜீவ னம் இரவி சந்திரனுகில் இராஜாங்க சீவனம் புதனுகில் வியாபாராதி ஜீவனம் சுக்கிரனுகில் புரோஜாதி வித்தியா சீவனம் சனி யாகில் வைத்திய மாந்திரீகாதி ஜீவனம் பாம்பாகில் விவாதம் பேசல் முதலிய க்ஷுத்திர முயற்சிகளால் ஜீவ னஞ்செய்து வருவனென்றும் பகை பாபத்துவ அபெல கிரகமானுல் அடிமை முதலிய அதம ஹீன சீவனஞ்செய்தும் (சு, அ, கக-ல்) பகை சத்துரு க்ஷேத் திர சீவ சரீராதிபர்கள் சனி பாம்பு முதலியவர்களாகில் திருட்டு மானஹீனம் கீழ்க்குலத்தொழில் புரிந்து ஜீவனஞ்செய்வ னென்றறியவும்

இராச்சிய சீவனாதி பாவ பலகணிதமும் கால விதிகளுங் கூறுகின்றனவாம்

அந்தந்த பாவசீவ-சரீராதிபதிகளுடனும் ஸ்தானம் அதிபதி இவர்களுட னுங்கூடிய சுபாசுப பெல கிரகங்களுக்குரிய வெண்களே உச்சமானுல் அந்த கிரக மிருக்கும் இராசி எண்ணுற்பெருக்கியும் ஆட்சியானுல் அவ்விராசி யெண்

---

* அந்த சீவன பாவாதியே யாம்.

ணில் (மூக்கால்) பங்கு சேர்த்தும் நட்புக்கு (உ) பங்குசேர்த்தும் பகை (வ) பங்கு சேர்த்தும் உள்ள ஒவ்வொரு தனித்தனி கிரகவெண்களைச்சேர்த்த தொகையை அவரவர்களின் பூராவான வெண்பேருக்கு கொடுத்த ஈவு சுப ஈவையெடுத்து கூட்டி முன்போல் கழித்து மீன்ற சேஷ நிசாபுக்திகாலம் அந்த பாவத்தின் பலன் அந்த ஜாதகனுக்கு அடைய வேண்டுவதில் பிரபல நிசாபுக்தியென்றும் இராசாங்கமோ அல்லது பூமியோ உத்தியோகாதி சீவனமோ அவை பிரபல உன்னதமாகு மென்றும் கிரகங்களின் தனித்தனி மூன்போய் வந்த தொகையை (கூ-ல்) கழித்துக்கண்ட சேஷம் நிசையிலும வந்த ஈவை (டு-ல்) பெருக்கி ஒன்பதில் கழித்துக்கொண்ட சேஷம் புத்திகாலங்களிலும் இராசாங்கம் பூமி உத்தியோகாதி பிரபலங்களுண்டாகு மென்றறிக.

அந்தந்த பாவசீவ சரீராதிஸ்தானம் மூலகாரண மிந்த கிரகம் ஸ்தானங்களுக்கு யெட்டா மிடத்ததிபதி மீன்ற இராசிநாதனுடன் கூடியோர் முதலிய கிரக சுபாசுப வெண்களை முன்சொல்லிய இராச்சியான ஜீவன கிரகவெண்களுடன் தனித்தனி சேர்த்து முன்போலவே கழித்துக்கண்ட சேஷம் நிசாபுக்திகாலங்களில் இராசாங்க உத்தியோகாதி ஜீவனங்களுக்கு பங்கம் குறைவு நஷ்டாதி துன்பங்க ளென்றுங் காண்க.

இலாபவிரைய பலன்கள்

சென்மாதி லாபாதிபதி மீன்ற இராசிநாதனிருக்குமிடத்திபன் லாபத்திற்கு சீவனென்றும் குருவுக்கு பதினேராமிடத்ததிபதி மீன்ற இராசிநாதன் லாபத்திற்கு சரீரமென்றும் சென்மாத் பனிரெண்டாமதிபதி மீன்ற இராசிநாதன் விரயத்துக்கு சீவனென்றும் குருவுக்கு பனிரெண்டாமிடத்திபதிமீன்ற இராசிநாதன் விரயத்துக்கு சரீரமென்றும் பெயராகும்.

லாபத்துக்கு பதினேராமிடத்தையும் அவ்வதிபதியின் பெலத்தை யுணர்ந்து லாபபலனும் பனிரெண்டாமிடம் அதிபதி இவைகளின் பெலா பெலமோர்ந்து விரயத்தையுங் கூறப்படு மென்றறிக லாபத்திற்கு சீவசரீராதி ஸ்தானம் அதிபதி இவர்கள் சுப பெல கேந்திரகோண சுபட்சேத்திரங்களிற் பெலவானாகியும் சுபமத்திய கேந்திரங்களிலும் இருக்கின் சாதகத்துக்கு லாபபிரபலமானதுடன் மிகவும் மேலான பதவியும் ஸ்திரப் பொருள்களின பிரபலமும் இவ்விதமான உத்தம யோக சாதகனுவ னென்றறிக. மேற்கூறிய லாபத்திற்கு சீவசரீராதி ஸ்தானாதி பெலத்துடைய கிரகங்கள் சுபராகியும் தனக்கு இணங்காத பகைவர்களின் சுகேந்திர இடங்களிலும் பாப பலனைப் பெற்றிருபாரிசங்களிலும் அல்லது கூடவல்லது நோக்குங்கிரகங்கள் பகைப்பவராகியிருக்கினும் விரயமதிக முள்ளவன் லாபமற்ப முடையவன் யென்றும் லாபவிருத்தியை யடையானென்றறிய வேண்டும்.

லாப சீவசரீராதிபதியும் ஸ்தானம் ஸ்தானாதிபதி முதலியவர்கள் ஐக்கிய பத்தியர்களாகி பெலத்துடனும் மேற்கண்டவர்கள் தனக்குரிய சுபக்ஷேத்திரமான (க, ஈ, ரு, கூ, எ, ய) இவ்வித இடங்களிலும் பெலவான்களாகி இருக்கினும் மேலாகிய சுபர்களாயல்லது பாவர் சுபராகிவாழினும் பனிரெண்டாமிடத்ததிபதி ஸ்தானம் சீவசரீராதி இவ்வித கிரகங்களானோர்க ளிருக்கினும் நோக்கினும் ஜாதகனுக்கு விரயவிவாத மதிகமுள்ள (சு, அ, கஉ, ங) இவ்வித யிராசியில் மேற்கூறிய கிரகங்கள் இருக்கின் சாதகனுக்குப்பலவித லாபமதிகமென்றும் விரயமற்பமென்றும் பனிரெண்டாமிடத்ததிபதி முதலிய சீவசரீராதிபகள் லாபாதிபதிக்கதிகமான பலத்துடயவனாகியு மற்றயலாபாதி (ங, கூ, அ, க உ) இவ்விடங்களிருக்கினும் பெலமற்று பாவர்களானாலும் அவ்வித கிரகங்கள் பகை நீசமுடையவர்களானாலும் பஞ்ச பெலன்களில் குறைவாகி இருக்கினும் சாதகனுக்கு லாபமற்பமாகியும் சிலவுசாஸ்தியாகவும் இருணஸ்தனாகிப் பலவித ஸ்தானப்ருஷ்டமும் பரதேச யாத்திராவந்தனாகித் திரிவனென்றும் அவர்கள் சுபபெலமுடைய சுபர்களாகியிருக்கின் சத்விஷயமான நற்கரும விஷயத்திலும் தானாதி தனவினியோகனாகியும் கீர்த்திமூர்த்தி புகழ்ச்சி தேவதாலய தரும மிவைகளால் தனச்சிலவும் அனேகவித ப்ராபல்யவந்தனாகி வாழ்வன் அவ்வித விரய ஆஸ்பதமுடைய கோள்கள் சனிபாம்பு குசன் முதலாகிய பாவர்களாகி பெலத்தாலும் அல்லது இவர்போலொற்ற பாவர்களாகிச் சுபர் இருக்கினும் துஷ்கருமங்களிலும் பலவித அவ்யாகிருதம் முதலியவகையாலும் பர இருணங்களுக்கு ஒற்றுக்கொள்ளல் பெண்விஷயம் சத்துரு மதுபானாதி நீசத்தொழில் முதலிய அசப்பிய கருமங்களில் இவன் பொருள்யாவு மழியப்படுமென்றும் அவ்வித காரங்களால் இருணம் முதலிய துன்பங்களிலாழ்ந்து வருந்துவனென்றும் மனக்கவகலைளையும் அடைந்து வாழ்வனென்றறிக.

லாபவிரயங்களின் குணிதங்களாவன

லாப பாவஸ்தானம் அதிபதி சீவசரீராதிபர்கள் உடன் கூடிய கிரக சுபாசுப பெலன்களுக்குரிய வெண்களை முன்கூடிய உச்சாதி முதலிய வகைகளுக்குரிய கூறியபடியுள்ள இராசியெண்களால் தனித்தனி பெருக்கியல்லது சேர்த்ததுகைகளை (அ-ல்) பெருக்கி (ய-ல்)கழித்தசேஷம் லாபப் பங்கென்றும் அறிந்தும் அவரவாகளின் தனித்தனியுளள வெண்களை முன்போலவே பாவாதிபதி இருக்குமிராசி உச்சமானால் பெருக்கியும் அல்லது அதனதின் பங்குள்ள இராசியெண்களைக் கிரகவெண்களுடன் கூட்டியதுகைகளை (கூ ல்) கழித்த தனித்தனி கிரகசேஷத்திசையிலும் அதில் வந்த ஈவை (ரு-ல்) பெருக்கி (கூ ல்) கழித்தசேஷம் புக்திகளிலும் அதிகமான லாபங்களைக்

கொடுக்க வதிபர்களென்றும் பனிரெண்டாமிடம் அதிபதி சீவசரீராதிபதி இவர்களின்கூட சஞ்சரிக்கும் கிரகசுபாசுப பெலவான்களோ முன்போல்சேர்த்து (கூ-ல்) பெருக்கி (கக-ல்)கழித்த சேஷம் விரயமான இலவுப்பங் கென்றும் மேற் கிரகவெண்களோ தனித்தனி முன்போலவே கண்டறிந்து (கூ-ல்) கழித்த சேஷந்திசையிலும் வந்த ஈவை (நி-ல்)பெருக்கி (கூ-ல்) கழித்த சேஷம் புக்தி காலங்களிலும் விரயஞ்சாஸ்தி யென்றும் பரதேசயாத்திரை பலவித வருத்த முதலிய துக்காதிவாதைகளோயுங் கொடுக்கப்படுமென்றும் இதில் பாவருடைய யெண்ணூல்கிடைத்த திசாபுக்தி பாபத்துவமான மேற்கூறிய திசாபுக்தியில் கஷ்டதுக்காதி தேசாடனம் இருணம் முதலிய பலவருத்தமும் சுபர்மூலமா கில் விசேஷலாபம் பிரபல சுகமேன்பாடாகிய உத்தம பலன்களென்றுங் காண்க மேற்கண்ட லாபத்திற்கும் விரயத்துக்கும் முன்சொல்லியபடி கண்டறிந்த வெண்களின் பாகங்களோயறிந்து விரயப்பங்குக்கு லாபப்பங்கு அதிகமானால் சொக்க முதலிய தனவிருத்திபொழிள் விருத்தியுடையவ னென்றும் லாபங் குரைந்து விரயத்திற்குஞ் சரியாகிகைப்பொருளொன்று மின்றி அடைவ னென்றுங் காண்க.

கும்பலக்னத்தில் குணகுணதிபாவ வாரம்பமாவன

கும்ப லக்கினத்தில் பிறந்தவன் மனத்திடமுடையவன் எவ்விதமான வருத் தங்களுக்கும் அஞ்சமாட்டான் சரீரங்கனமும் கருமைகலர்ந்த சிரமுடையவன் ஸ்தூல சரீரி தெரிந்தளவில் உள்ளவித்தையால் மானியாகி கியாதிபெருவன் பித்தரோகமுடையவன் செய்நன்றி மறவாதவன் பெண்மோகியாவான் (எ,கக) இந்த வயசு மாதகாலங்களில் வாகனம் சவருதல் முதலிய கெண்டமும் திடீ ரென்ற உபாதிகளாற் றுன்பமுடையவனுவான் (ஙக) வது வயதில் சத்துரு முதலிய பலவகை வருத்தங்களால் கெண்டம் இந்த இலக்கினத்தை சுபர் திருஷ்டி இருக்கினும் சுபரிருக்கின் ஆயுள் ஹூ (அ0)வரை யுள்ளவன்.

சித்திரைமாதம் பஞ்சமி குருவாரம் இரவில் ஈசுவரன் பதவியை அடை வன் யென்றுங் கூறப்படும்.

ஸ்தூல சரீரமில்லாவிடில் நாவு நேத்திரம் முதலிய ஓர் அவையவங்களில் குறையல்லது அதிகமான அடையாளமுடையன் யென்றறியவேண்டுவனாம்.

கும்ப லக்ன ஜாதகர்களுக்கு திசாபுக்தியும் யோகாவ யோகாதி பலன்களுங் கூறப்படும்

ரவிதிசையில் குரு சனி புதன் இவர்களாகிய புத்திகாலங்களிலும் யிந்த திசாநாதன் கேந்திரகோண கெதனுகி உச்சசொகேஷ்த்திர விராசிகளிலும் தன க்குரிய சுபட்சேத்திர பெலத்துடனும் புக்திநாதனும் இவ்விதமான திசாநாத னுக்கு கேந்திரகோண உச்சசொகேஷ்த்திர பெலத்துடனிருக்கினும் நோக்கி னும் ஜாதகனுக்கு பிரபல விராஜயோகமாம் இவைகளேயே யெல்லா திசாபுக்தி களிலும் உபயோகித்துப் பார்க்க வேண்டுவனவாம்.

சந்திரதிசையில் ஸ்தானபெலத்தக் கிசைந்தபடி யொரு பாகத்திலும் சுக் கிரன் அல்லது குரு இந்த புக்திகளிலும் திசாநாதன் மதி மேகஷம் விருஷபம் கடகம் கன்னி கும்பம் மீனம் இந்த இராசிகளிலும் யிவைகளுக்கு கேந்திர கோணாதி பத்தியம் அல்லது இருக்குமிடம் யிவைகளில் உற்றபுக்திகளில் மிக வும் மேன்மைகள் உண்டாகு மென்றும் அறிய வேண்டியது.

